உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

REFERENCE

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS



В. Ульянов (Ленин)

# வி. இ. லெனின்

# நூல் திரட்டு

## இரண்டாம் பாகம்

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

## பதிப்பாளர் குறிப்பு

நான்கு பாகங்களில் வெளியிடப்படும் இந்தத் தமிழ்ப் பதிப்பு, வி.இ. லெனின், முழு நூல் திரட்டு, ஐந்தா வது ருஷ்ய மொழிப் பதிப்பிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

**В. И. Ленин**

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ

Часть вторая

*На тамильском языке*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1977

Л $\frac{10102-437}{014(01)-77}$ 715—77

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

## பொருளடக்கம்

ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் . . . . . . . . . . . . 9

முகவுரை . . . . . . . . . . . . . . . . 9

பிரெஞ்சு, ஜெர்மன் பதிப்புகளின் முகவுரை . . . . . 12

1. . . . . . . . . . . . . . . . . . . 12
2. . . . . . . . . . . . . . . . . . . 13
3. . . . . . . . . . . . . . . . . . . 15
4. . . . . . . . . . . . . . . . . . . 17
5. . . . . . . . . . . . . . . . . . . 18

1. உற்பத்தியின் ஒன்றுகுவிப்பும் ஏகபோகங்களும் . 22
2. வங்கிகளும் அவை ஆற்றும் புதிய பங்கும் . . 46
3. நிதி மூலதனமும் நிதியாதிக்கக் கும்பலும் . . 73
4. மூலதன ஏற்றுமதி . . . . . . . . . . 97
5. முதலாளித்துவக் கூட்டுகளிடையே உலகம் பங்கிடப்படுதல் . . . . . . . . . 106
6. வல்லரசுகளிடையே உலகம் பங்கிடப்படுதல் . 121
7. முதலாளித்துவத்தின் தனியொரு கட்டமாகிய ஏகாதிபத்தியம் . . . . . . . . . 140
8. முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனமும் அழுகலும் . . . . . . . . . . . . 158
9. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம் . . 174
10. வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடம் . . 197

அரசும் புரட்சியும் . . . . . . . . . . . . 207

முதற் பதிப்பின் முன்னுரை . . . . . . . . . 207

இரண்டாம் பதிப்பின் முன்னுரை . . . . . . . . 209

அத்தியாயம் 1

வர்க்கச் சமுதாயமும் அரசும் . . . . . . . 210

1. வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவாய்த் தோன்றியதே அரசு . . . . . . . . . . . . . 210
2. ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகளும், சிறைக்கூடங்களும், இன்ன பிறவும் . . . . . . . . . . . . . 215
3. அரசு—ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சுரண்டுவதற்கான கருவி . . . . . . . . . 220
4. அரசு ''உலர்ந்து உதிர்வதும்'' பலாத்காரப் புரட்சியும் . . . . . . . . . . . 226

அத்தியாயம் 2

அரசும் புரட்சியும். 1848-51ஆம் ஆண்டுகளின் அனுபவம் . . . . . . . . . . . . . 236

1. புரட்சி தொடங்கும் தறுவாயில் . . . . . . 236
2. புரட்சியிலிருந்து பெறப்பட்ட முடிவுகளின் தொகுப்புரை . . . . . . . . . . 243
3. 1852ல் இப்பிரச்சினையை மார்க்ஸ் எழுத்துரைத்தது . . . . . . . . . . . . . . 252

அத்தியாயம் 3

அரசும் புரட்சியும். 1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனது அனுபவம். மார்க்சின் பகுத்தாய்வு . . . . . 256

1. கம்யூனர்டுகளைத் தீர முயற்சியில் இறங்கச் செய்தது எது? . . . . . . . . . 256
2. தகர்க்கப்படும் அரசுப் பொறியமைவுக்குப் பதிலாய் அமையப் போவது எது? . . . . 262
3. நாடாளுமன்ற முறையை ஒழித்தல் . . . . 269
4. தேசிய ஒற்றுமையின் நிறுவன ஒழுங்கமைப்பு . 278
5. புல்லுருவி-அரசை ஒழித்தல் . . . . . . . 284

அத்தியாயம் 4

தொடர்ச்சி. கூடுதலாய் எங்கெல்ஸ் அளித்த விளக்கங்கள் . . . . . . . . . . . . . . . 287

1. ''குடியிருப்புப் பிரச்சினை'' . . . . . . . . 287
2. அராஜகவாதிகளுடன் வாக்குவாதம் . . . 291
3. பெபெலுக்கு எழுதிய கடிதம் . . . . . . . 298
4. எர்ஃபுர்ட் நகல் வேலைத்திட்டத்தின் விமர்சனம் . . . . . . . . . . . . 302
5. ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' என்னும் மார்க்ஸ் நூலுக்கு 1891ல் எழுதப்பெற்ற முன்னுரை . . . . . . . . . . . . 314
6. ஜனநாயகத்தை விஞ்சுவது குறித்து எங்கெல்ஸ் . . . . . . . . . . . . 323

அத்தியாயம் 5

அரசு உலர்ந்து உதிர்வதற்குரிய பொருளாதார அடிப்படை . . . . . . . . . . . . . 327

1. பிரச்சினையை மார்க்ஸ் எடுத்துரைத்தல் . . 327
2. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லுதல் . . . . . . . . 331
3. கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டம் . . 339
4. கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டம் . . . 345

அத்தியாயம் 6

சந்தர்ப்பவாதிகள் மார்க்சியத்தைக் கொச்சையாக்குதல் . . . . . . . . . . . . . 357

1. அராஜகவாதிகளுடன் பிளெஹானவின் வாக்குவாதம் . . . . . . . . . . . . 357
2. சந்தர்ப்பவாதிகளுடன் காவுத்ஸ்கியின் வாக்குவாதம் . . . . . . . . . . . . 359
3. பனெகக்குடன் காவுத்ஸ்கியின் வாக்குவாதம் . . . . . . . . . . . . 370

முதற் பதிப்புக்குப் பின்னுரை . . . . . . . 385
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . 386
பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . 410
பொருட் குறிப்பகராதி . . . . . . . . . 431

MARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

# ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்[1]

(பலரும் படிப்பதற்குரிய விளக்கவுரை)

## முகவுரை

இங்கு வாசகர்களுக்கு அளிக்கப்படுகிற இந்தப் பிரசுரம் 1916ஆம் ஆண்டின் வசந்தத்தில் ஜுரிச்சில் நான் எழுதியதாகும். அங்கே நான் வேலை செய்ய வேண்டியிருந்த நிலைமைகளில், பிரெஞ்சு, ஆங்கில வெளியீடுகளின் பற்றுக்குறையினுலும், ருஷ்ய வெளியீடுகளின் கடுந் தட்டுப்பாட்டினுலும் இயல்பாகவே ஓரளவு அல்லலுற்றேன். ஆயினும், ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தலையாய ஆங்கில நூலாகிய ஜா.ஆ. ஹாப்ஸனின் புத்தகத்துக்கு என் கருத்தில் அளிக்கப்பட வேண்டிய முழு கவனத்தையும் அளித்து நான் அந்நூலைப் பயன்படுத்திக் கொண்டேன்.

ஜாராட்சியின் தணிக்கை முறையைக் கருத்தில் கொண்டே இந்தப் பிரசுரத்தை எழுதினேன். ஆகவே, உண்மைகளைப் பற்றிய முழுக்க முழுக்கத் தத்துவார்த்தப் பகுத்தாய்வுக்கு, குறிப்பாகப் பொருளாதாரப் பகுத்தாய்வுக்கு அப்பால் செல்லாமல் என்னைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது மட்டுமின்றி, அரசியல் குறித்து அவசியம் கூறியாக வேண்டிய ஒருசிலவற்றையுங்கூட மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன், ஜாடைமாடையாக, மறைபொருளான மொழியில்—கேடுகெட்ட ஈசாப் மொழியில்—''சட்டபூர்வமான'' நூலை எழுதுவதற்காகப் பேனுவைப் பிடிக்கும் புரட்சியாளர்கள் எல்லோரையும் கைக்கொள்ளும்படி ஜார் ஆட்சி நிர்ப்பந்தம் செய்த அம் மொழியில், நான் வகுத்தளிக்க வேண்டியிருந்தது.

ஜார் ஆட்சியின் தணிக்கை முறை காரணமாக இப்பிரசுரத்தில் திரித்துக் குறுக்கப்பட்டு, இரும்பு இடுக்கியில் வைத்து நெரிக்கப்பட்ட வாசகங்களைச் சுதந்திரமான இந்த நாட்களில் திரும்பவும் படித்துப் பார்க்கையில் வேதனையாக இருக்கிறது. ஏகாதிபத்தியக் காலகட்டம் சோஷலிசப் புரட்சியின் தறுவாயாகும்; சமூக-தேசியவெறியானது (சொல்லில் சோஷலிசமும் செயலில் தேசியவெறியும்) சோஷலிசத்துக்கு அறவே துரோகமிழைத்து முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்புக்கு முழுமையாகத் துறந்தோடிவிடுவதாகும்; தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்ட இந்தப் பிளவு ஏகாதிபத்தியத்தின் எதார்த்தப் புறநிலைமைகளுடன் இணைந்தது ஆகும் என்பன போன்ற உண்மைகளை நான் ''அடிமை'' மொழியில் எடுத்துரைக்க வேண்டியிருந்தது. ஆகவே, இவற்றில் அக்கறை கொண்டுள்ள வாசகரை, *1914-1917*ல் வெளிநாடுகளில் நான் எழுதிய கட்டுரைகளைப் படிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன், இவற்றின் புதிய பதிப்பு ஒன்று சீக்கிரம் வெளிவரப் போகிறது. பக்கங்கள் *119-20*ல்* உள்ள ஒரு வாசகம் தனிக் கவனத்துக்கு உரியதாகும். பிரதேசக் கைப்பற்றல்கள் பற்றிய பிரச்சினையில் முதலாளிகளும் அவர்களது தரப்புக்கு ஓடிவிட்ட சமூக-தேசியவெறியர்களும் (இவர்களைத்தான் காவுத்ஸ்கி இத்தனை நிலைதடுமாற்றத்துடன் எதிர்க்கிறார்) எப்படி வெட்கமின்றிப் புளுகுகிறார்கள் என்பதை, தங்களது முதலாளிகள் பிரதேசங்களைக் கைப்பற்றுவதை இவர்கள் எப்படி வெட்கமில்லாமல் திரையிட்டு மறைக்கிறார்கள் என்பதைத் தணிக்கையாளருக்கு ஏற்புடைய மறைமுகமான பாணியில் வாசகர்களுக்குக் காட்டும் பொருட்டு, நான் நிர்ப்பந்திக்கப்பட்டு ஓர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டேன்—ஜப்பானை! கவனமான வாசகர் ஜப்பானுக்குப் பதிலாக ருஷ்யா என்றும், கொரியாவுக்குப் பதிலாக பின்லாந்து, போலந்து, கூர்லந்து, உக்ரேன், ஹீவா, பொக்காரா, எஸ்த்தோனியா அல்லது மாருஷ்யர்களல்லாத பிற இனத்தோர் வசிக்கும் ஏனைய பிராந்தியங்கள் என்றும் எளிதில் மாற்றிக் கொள்வார்.

---

* இப்புத்தகத்தில் 196ஆம் பக்கத்தைப் பார்க்கவும்.—ப-ர்.

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையை, அதாவது ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாராம்சத்தைப் பற்றிய பிரச்சினையை வாசகர்கள் புரிந்து கொள்ள இந்தப் பிரசுரம் உதவும் என்று நம்புகிறேன்; இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல், தற்கால யுத்தத்தையும் தற்கால அரசியலையும் புரிந்து கொள்ளவும் முடியாது, மதிப்பீடு செய்யவும் முடியாது.

ஆசிரியர்

பெத்ரொகிராது, *1917*, ஏப்ரல் *26*

# பிரெஞ்சு, ஜெர்மன் பதிப்புகளின் முகவுரை

## 1

ருஷ்யப் பதிப்பின் முகவுரையில் கூறப்பட்டது போல, இந்தப் பிரசுரம் ஜாராட்சியின் தணிக்கை முறையைக் கருத்தில் கொண்டு 1916ல் எழுதப்பட்டது. தற்போது என்னால் முழு வாசகத்தையும் திருத்த முடியவில்லை; திருத்துவது உசிதமும் அல்ல எனலாம். ஏனென்றால் மறுக்க முடியாத முதலாளித்துவ புள்ளிவிவரச் சுருக்கத் தொகுப்புகளையும், எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளித்துவ அறிஞர்களாலும் ஒப்புக்கொள்ளப்படும் உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், அதாவது முதல் உலக ஏகாதிபத்திய யுத்தத்தின் தறுவாயில், உலக முதலாளித்துவ அமைப்பை அதன் சர்வதேச உறவு முறைகளில் காட்டும் ஒரு தொகுப்புச் சித்திரத்தை அளிப்பதே இப்புத்தகத்தின் பிரதான நோக்கமாக இருந்தது, இன்றும் இருக்கிறது.

அனேகமாய் முழுமொத்த அளவில் கம்யூனிஸ்டுகள் அண்மையில் கைது செய்யப்பட்டுவிட்ட பிறகும், உதாரணமாக இன்றைய அமெரிக்கா அல்லது பிரான்சில், கம்யூனிஸ்டுகளிடம் இன்னமும் எஞ்சியிருக்கும் அற்பசொற்ப சட்டபூர்வ வாய்ப்புகளையும் கூட, சமூக-அமைதிவாதிகளது கருத்தோட்டங்களும் ''உலக ஜனநாயகம்'' பற்றியதான நம்பிக்கைகளும் முழுக்க முழுக்க பொய்யாகுமென்று விளக்கும் பொருட்டு உபயோகித்துக் கொள்வது சாத்தியமே என்பதுடன் இன்றியமையாததுமாகும் என்பதை, ஜாராட்சியின் தணிக்கையாளரது கருத்துப்படிச் சட்டபூர்வமான வெளியீடாகிய இந்தப்

பிரசுரத்தை உதாரணமாகக் கொண்டு, ஐயமற உணர்ந்து கொள்வது முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகள் பலருக்கும் ஓரளவு பயனுள்ளதாகவே இருக்கும். தணிக்கை செய்யப்பட்ட இந்தப் பிரசுரத்தில் சேர்க்கப்பட வேண்டியவற்றில் அத்தியாவசியமானவற்றை இந்த முகவுரையில் எடுத்துரைக்க முயற்சி செய்கிறேன்.

## 2

1914-18ஆம் ஆண்டுகளது யுத்தமானது இரு தரப்பினர் சம்பந்தமாகவும் ஓர் ஏகாதிபத்திய (அதாவது, பிரதேசக் கைப்பற்றலுக்கும் சூறையாடலுக்குமான கொள்ளைக்கார) யுத்தமாகும், உலகைப் பாகப் பிரிவினை செய்து கொள்வதற்கும், காலனிகள், நிதி மூலதனத்தின் ''செல்வாக்கு மண்டலங்கள்'' முதலியவற்றைப் பங்கீடும் மறுபங்கீடும் செய்து கொள்வதற்குமான யுத்தமாகும் என்பது இப்பிரசுரத்தில் நிரூபித்துக் காட்டப்படுகிறது.

யுத்தத்தின் உண்மையான சமூக, அல்லது துல்லியமாகச் சொல்வதெனில், மெய்யான வர்க்க இயல்பின் நிரூபணமானது, யுத்தத்தின் ராஜதந்திர வரலாற்றில் அல்ல, போரிட்ட எல்லா நாடுகளிலும் ஆளும் வர்க்கங்களது எதார்த்த நிலையின் பகுத்தாய்வில்தான் இயற்கையாகவே காணக் கிடக்கிறது. இந்த எதார்த்த நிலையைச் சித்திரிப்பதற்கு உதாரணங்களையோ, தனிப்பட்ட புள்ளிவிவரங்களையோ எடுத்துக் கொள்ளக் கூடாது (சமூக வாழ்வின் நிகழ்வுகள் மிதமிஞ்சி சிக்கல் வாய்ந்தனவாய் இருப்பதன் காரணமாக, உதாரணங்களையோ, தனிப்பட்ட புள்ளிவிவரங்களையோ எத்தனை வேண்டுமானாலும் தேர்வு செய்து எந்த வரையுறுப்பையும் நிரூபிப்பது எப்பொழுதும் சாத்தியமே); போரிட்ட எல்லா நாடுகளின், அனைத்து உலகின் பொருளாதார வாழ்வினது அடிப்படைகள் சம்பந்தப்பட்ட எல்லாப் புள்ளிவிவரங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மறுக்க முடியாத இத்தகைய தொகுப்புப் புள்ளிவிவரங்களைத்தான், 1876லும் 1914லும் உலகம் பங்கிடப்பட்டதையும் (அத்தியாயம் 6), 1890லும் 1913லும் உலகின் ரயில்பாதைகள் பாகப் பிரிவினை செய்யப்பட்டதையும் (அத்தியாயம் 7) விவரிக்கையில் நான் எடுத்தாண்டேன். ரயில்பாதைகள்தான் நிலக்கரி, இரும்பு, எஃகு ஆகிய மிக முக்கிய முதலாளித்துவத் தொழில்களின் ஒட்டுமொத்தமாகும்; உலக வாணிபத்தின், முதலாளித்துவ-ஜனநாயக நாகரிகத்தின் வளர்ச்சியினது ஒட்டுமொத்தமும் மிகவும் எடுப்பான குறியீடு மாகும். ரயில்பாதைகள் பெருந்தொழில்களுடனும் ஏகபோகங்களுடனும் சிண்டிக்கேட்டுகளுடனும் கார்ட்டல்களுடனும் டிரஸ்டுகளுடனும் வங்கிகளுடனும் நிதியாதிக்கக் கும்பலுடனும் எவ்வாறு இணைப்பு கொண்டுள்ளன என்பது புத்தகத்தின் முந்திய அத்தியாயங்களில் காண்பிக்கப்படுகிறது. ரயில்பாதைகளின் ஏற்றத்தாழ்வான வினியோகம், அவற்றின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி—இது உலகு தழுவிய அளவில் தற்கால ஏகபோக முதலாளித்துவத்தின் தொகுப்புரையாக அமைகிறது எனலாம். இத்தகைய பொருளாதார அமைப்பில், உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை நீடிக்கும்வரை ஏகாதிபத்திய யுத்தங்கள் கண்டிப்பாகத் தவிர்க்க முடியாதவை என்பதை இந்தத் தொகுப்புரை நிரூபிக்கிறது.

ரயில்பாதைகள் போடுவது ஒரு சாதாரணமான, இயற்கையான, ஜனநாயக, கலாசார, நாகரிக வளர்ச்சிக்குரிய முயற்சியாகவே தோன்றுகிறது: முதலாளித்துவ அடிமை வாழ்வைக் கவர்ச்சியான வண்ணங்களில் தீட்டிக் காட்டுவதற்காகக் காசு கொடுத்து அமர்த்தப்பட்டிருக்கும் முதலாளித்துவப் பேராசிரியர்களின் கருத்துப்படியும், குட்டிமுதலாளித்துவ அற்பர்களின் கருத்துப்படியும் அது இவ்வாறேதான் இருக்கிறது. ஆனால் உண்மையில், ஆயிரக்கணக்கான வெவ்வேறு குறுக்குப் பின்னல்களைக் கொண்டு உற்பத்திச் சாதனங்களிலான தனியார் உடைமையுடன் இந்த முயற்சிகளைப் பிணைத்துக் கட்டுகின்ற முதலாளித்துவ இழைகள், ஆயிரங்கோடி மக்களை (காலனிகளிலும், அரைக் காலனிகளிலும்), அதாவது சார்பு நாடுகளில் வாழும் பாதிக்கும் மேற்பட்ட

உலக மக்கள் தொகையினரையும் ''நாகரீக'' நாடுகளில் மூலதனத்தின் கூலி அடிமைகளாக இருப்போரையும் நசுக்கு வதற்கான கருவியாக ரயில்பாதை நிர்மானத்தை மாற்றி விட்டன.

சிறு உடைமையாளர்களது உழைப்பை அடிப்படை யாகக்கொண்ட தனியார் உடைமை, தடையில்லாப் போட்டி, ஜனநாயகம் — தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஏமாற்றுவதற்காக முதலாளிகளும் அவர்களது பத்திரிகை களும் கையாளுகின்ற இந்தக் கவர்ச்சித் தொடர்கள் எல்லாம் மிகப் பழங் காலத்துக்குரியவை ஆகிவிட்டன. உலகின் மிகப் பெரும் பகுதி மக்களை ஒரு சில ''முன்னேறிய'' நாடுகள் கால னியாதிக்க ஒடுக்குமுறைக்கும் நிதித்துறை நசுக்கலுக்கும் உள் ளாக்கும் உலக அமைப்பாக முதலாளித்துவம் வளர்ந்து விட்டது. இந்தக் ''கொள்ளையை'' அங்கம் அனைத்தும் ஆயு தம் தரித்த வலுமிக்க இரண்டு அல்லது மூன்று உலகக் கொள்ளைக்காரர்கள் (அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், ஜப் பான்) தமக்கிடையே பங்கிட்டுக் கொள்கிறார்கள்; இவர்கள் தமது கொள்ளையைப் பாகப் பிரிவினை செய்து கொள்வதற் காக நடத்தும் தமது யுத்தத்தினுள் அனைத்து உலகையும் இழுத்து விடுகிறார்கள்.

## 3

முடியாட்சி ஜெர்மனி திணித்த பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையும்[2], பிறகு ''ஜனநாயகக்'' குடி யரசுகளாகிய அமெரிக்காவும் பிரான்சும், ''சுதந்திர'' இங் கிலாந்தும் திணித்த இதனிலும் அதிக மிருகத்தனமான, வெறுக்கத்தக்கதான வெர்சேய் உடன்படிக்கையும்[3] மனித குலத்துக்கு மிகவும் பயனுள்ள ஒரு சேவையைச் செய்திருக் கின்றன. அதாவது, அமைதிவாதிகள் என்றும் சோஷலிஸ்டு கள் என்றும் சொல்லிக் கொண்டு, ''வில்சனியத்தை''[4] மெச்சிப் புகழ்ந்து, சமாதானமும் சீர்திருத்தங்களும் ஏகாதி பத்தியத்தின்கீழ் சாத்தியமே என்று வலியுறுத்திய ஏகாதி

பத்தியக் கூலி எழுத்தாளர்களையும், மற்றும் குட்டிமுத லாளித்துவ பிற்போக்கர்களையும் இவை அம்பலப்படுத்தின.

மிகப் பெரும் பகுதி கொள்ளையைப் பெறப் போவது பிரிட்டிஷ் நிதிக் கொள்ளையர் குழுவா அல்லது ஜெர்மானிய நிதிக் கொள்ளையர் குழுவா என்பதை முடிவு செய்வதற்காக நடைபெற்ற இந்த யுத்தத்தில் கோடிக்கணக்கானோர் மடியவும் முடமாகவும் நேர்ந்ததும், மேற்கூறிய இரண்டு ''சமாதான உடன்படிக்கைகளும்'', முதலாளித்துவ வர்க்கத்தால் மிதிக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் ஏமாற்றப்பட்டும் மடையர்களாக விடப்பட்டும் வரும் லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்களின் கண்களை என்றும் காணாத வேகத்தில் திறந்து விடுகின்றன. இவ்விதம், யுத்தத்தால் எங்கும் ஏற்பட்ட நாசத்திலிருந்து உலகு தழுவிய அளவில் புரட்சிகர நெருக்கடி எழுந்து வருகிறது, இதன் கட்டங்கள் எவ்வளவு தான் நீண்டவையாகவும் கடினமானவையாகவும் இருப்பினும் இந்நெருக்கடி ஒரு பாட்டாளிப் புரட்சியிலும் அதன் வெற்றியிலும் தவிர வேறு எவ்விதத்திலும் முடிவுற முடியாது.

1912ல் இரண்டாவது அகிலம் பாஸெல் அறிக்கையை[5] வெளியிட்டது. பொதுப்பட யுத்தத்தைப் பற்றிய மதிப்பீட்டை அல்ல (யுத்தங்கள் பலவகைப்பட்டவை, புரட்சி யுத்தங்களும் உள்ளன), 1914ல் தொடங்கியதே அதே யுத்தத்தைப் பற்றிய மதிப்பீட்டை அது அளித்தது; இப்பொழுது அந்த அறிக்கை, இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் அவமானகரமாய்க் கையாலாகாதவர்களாகியதையும், அவர்கள் புரிந்த துரோகத்தையும் முழு அளவுக்கு அம்பலப்படுத்தும் வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.[6]

ஆகவேதான், அந்த அறிக்கையை இப்பதிப்பின் அனுபந்தமாக நான் மீண்டும் வெளியிடுகிறேன்; நெருங்கி வந்த அந்த யுத்தத்திற்கும் பாட்டாளிப் புரட்சிக்குமிடையிலான தொடர்பைத் துல்லியமாகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூறுகிற அறிக்கையின் வாசகங்களை இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் மிகவும் ஜாக்கிரதையாகத் தவிர்த்துக்

கொண்டு, திருடன் தான் திருட்டு நடத்திய இடத்திலிருந்து ஓடுவதைப் போல, விலகி ஓடுகிறார்கள் என்பதைக் கவனிக்குமாறு வாசகர்களிடம் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறேன்.

## 4

''காவுத்ஸ்கிவாதத்தைப்'' பற்றிய விமர்சனத்துக்கு இந்தப் பிரசுரத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. காவுத்ஸ்கிவாதம் உலகின் எல்லா நாடுகளிலும் ''மிகவும் பிரபலமான தத்துவவாதிகளாலும்'' இரண்டாவது அகிலத்தின் தலைவர்களாலும் (ஆஸ்திரியாவில் ஒட்டோ பௌவர் கோஷ்டியினர், இங்கிலாந்தில் ராம்சே மாக்டொனல்டும் மற்றவர்களும், பிரான்சில்ஆல்பேர் தாமா, இன்ன பலர்) மற்றும் மிகப் பல சோஷலிஸ்டுகள், சீர்திருத்தவாதிகள், அமைதிவாதிகள், முதலாளித்துவ ஜனநாயகவாதிகள், மத குருமார்கள் ஆகியோராலும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் சர்வதேச சித்தாந்தப் போக்காகும்.

இந்தச் சித்தாந்தப் போக்கானது, ஒரு புறம் இரண்டாவது அகிலத்தின் சிதைவின், சீரழிவின் விளைவும், மறு புறம் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரது சித்தாந்தத்தின் தவிர்க்க முடியாத பலனும் ஆகும். குட்டிமுதலாளித்துவப் பகுதியோரது வாழ்க்கை முறை அனைத்துமே அவர்களை முதலாளித்துவ, ஜனநாயகத் தப்பெண்ணங்களால் கட்டுண்டு கிடக்கச் செய்கிறது.

காவுத்ஸ்கியும் அவரைப் போன்றோரும் கொண்டிருக்கும் கருத்துக்கள், அந்த எழுத்தாளர் பல பத்தாண்டுகளாகப் போற்றிப் பாதுகாத்து வந்த, முக்கியமாக (பெர்ன்ஷ்டைன், மில்லிரான், ஹைண்ட்மன், கோம்பர்ஸ், முதலானவர்களது) சோஷலிஸ்டுச் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து அவர் நடத்திய போராட்டத்தில் பாதுகாத்து வந்த, மார்க்சியத்தின் அதே புரட்சிகர கோட்பாடுகளை அறவே துறந்தோடுவதைக் குறிப்பனவாகும். ஆகவே, உலக முழுவதிலும், ''காவுத்ஸ்கிவாதிகள்'' நடைமுறை அரசியலில் (இரண்டாவது அல்லது மஞ்சள் அகிலத்தின்[7] மூலம்) தீவிர சந்தர்ப்பவாதிகளுடனும்,

(சோஷலிஸ்டுகள் பங்கு கொள்ளும் முதலாளித்துவக் கூட்டு அரசாங்கங்களின் மூலம்) முதலாளித்துவ அரசாங்கங்களுடனும் இணைந்து கொண்டுவிட்டது தற்செயலான சம்பவமல்ல.

பொதுவாக உலக முழுவதிலும் வளர்ந்துவரும் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கமும், குறிப்பாகக் கம்யூனிஸ்டு இயக்கமும், ''காவுத்ஸ்கிவாதத்தின்'' தத்துவார்த்தத் தவறுகளைப் பகுத்தாய்ந்து அம்பலப்படுத்தும் பணியினைக் கைவிட முடியாது. எவ்வகையிலும் மார்க்சியத்துடன் உறவு கொண்டாடவில்லை என்றாலும், காவுத்ஸ்கி கோஷ்டியினரைப் போலவே, ஏகாதிபத்தியத்தினுடைய முரண்பாடுகளின் ஆழத்தையும், தவிர்க்க முடியாதவாறு அதனால் எழும் புரட்சிகர நெருக்கடியையும் மறைத்து மழுப்புகின்ற அமைதிவாதமும், பொதுவாக ''ஜனநாயகமும்'' இன்னும் உலகெங்கும் மிகவும் விரிந்து பரந்திருக்கின்ற காரணத்தினால் இப்பணியைக் கைவிடுவது மேலும் அசாத்தியமாகிறது. இப்போக்குகளை எதிர்த்துப் போராடுவது பாட்டாளி வர்க்கக் கட்சியின் அத்தியாவசியக் கடமையாகும். முதலாளித்துவ வர்க்கத்தால் ஏய்க்கப்படும் சிறு உடைமையாளர்களையும், அதிகமாகவோ குறைவாகவோ குட்டிமுதலாளித்துவ வாழ்க்கை நிலைமைகளைப் பெற்றிருக்கும் கோடிக் கணக்கான உழைப்பாளி மக்களையும் பாட்டாளி வர்க்கக் கட்சி முதலாளித்துவ வர்க்கத்தாரிடமிருந்து விலகி வரும்படிக் கவர்ந்திழுத்தாக வேண்டும்.

## 5

''முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனமும் அழுகலும்'' என்ற தலைப்புடைய அத்தியாயம் VIII ஐப் பற்றிச் சில வார்த்தைகள் கூறியாக வேண்டும். வாசகத்தில் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல், மாஜி ''மார்க்சியவாதியும்'' தற்போது காவுத்ஸ்கியின் கூட்டாளியும், ''ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியில்[8] முதலாளித்துவ, சீர்திருத்தவாதக் கொள்கையின் பிரதான விரிவுரையாளர்களில் ஒருவருமான ஹில்பர்டிங், வெளிப்படையான அமைதிவாதியும் சீர்திருத்தவாதியுமான ஆங்கிலேயர் ஹாப்ஸனுடன் ஒப்பிடு

கையில் இப்பிரச்சினையில் ஓரடி பின்னால் சென்றிருக்கிறார். தொழிலாளர் இயக்கம் அனைத்துமே சர்வதேச அளவில் பிளவுண்டிருப்பது (இரண்டாவது, மூன்றாவது அகிலங்கள்[9]) இன்று கண்கூடாகவே தெரிகிறது. இவ்விரு போக்குகளுக் கிடையிலும் தற்போது ஆயுதமேந்திய போராட்டமும் உள் நாட்டுப் போரும் நடைபெறுவதும் கண்கூடாகவே தெரி கிறது—ருஷ்யாவில் போல்ஷிவிக்குகளுக்கு எதிராகக் கல்ச் சாக்குக்கும் தெனீகினுக்கும் மென்ஷிவிக்குகளும்[10] "சோஷ லிஸ்டு-புரட்சியாளர்களும்"[11] தருகின்ற உதவி; ஜெர்மனி யில் ஸ்பார்ட்டக்கிஸ்டுகளுக்கு[12] எதிராக ஷெய்டெமன் களும், நோஸ்கேகளும் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் இணைந்து நடத்திய போர்; பின்லாந்திலும் போலந்திலும் ஹங்கேரியிலும் பிற இடங்களிலும் இதே நிகழ்ச்சிகள். இந்த உலக வரலாற்று நிகழ்வின் பொருளாதார அடிப்படை என்ன?

முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனமும் சீரழிவுமே தான், முதலாளித்துவ வளர்ச்சியின் மிக உயர்ந்த வர லாற்றுக் கட்டமாகிய ஏகாதிபத்தியத்தின் தனி இயல்பே தான் இந்த அடிப்படை. இந்தப் பிரசுரம் தெளிவுபடுத்துவது போல், "சீட்டுக் கத்தரித்தே" உலகமனைத்தையும் சூறை யாடும் அளவுகடந்த செல்வமும் வலிமையும் வாய்ந்த விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய (புவிப் பரப்பில் வாழ்வோரில் பத்தில் ஒன்றுக்கும் குறைந்தவர்கள்; மிகவும் "தயாள" மனப்பாங்குள்ள, மிதமான கணக்கீட்டின்படி ஐந்தில் ஒன்றுக் கும் குறைந்தவர்கள்) ஒரு சில அரசுகளை முதலாளித்துவம் இப்போது தனியாகப் பிரித்துக் காட்டுகிறது. யுத்தமுற்கால விலைகளின்படி, யுத்தமுற்கால முதலாளித்துவப் புள்ளி விவரங்களின்படி மூலதன ஏற்றுமதியானது ஆண்டுதோறும் 800—1000 கோடி பிராங்கு வருவாய் அளித்தது. இப் பொழுது, நிச்சயமாக, அது மேலும் மிக அதிக வருவாய் அளிக்கிறது.

தெளிவாக, இத்தகைய பிரம்மாண்ட மிகை இலாபங்களை (முதலாளிகள் தமது "சொந்த" நாட்டுத் தொழிலா ளர்களைக் கசக்கிப் பிழிந்து பெறும் இலாபங்களைவிட மிகை யானவை) உபயோகித்து, தொழிலாளர் தலைவர்களுக்கும், தொழிலாளர் பிரபுக்குலத்தோரின் மேல்மட்டத்தினருக்கும்

லஞ்சம் கொடுக்க முடிகிறது. ''முன்னேறிய'' நாடுகளின் முதலாளிகள் இதையேதான் செய்கிறார்கள்: இந்த மேல்மட்டத்தினருக்கு வெவ்வேறான ஆயிரம் வழிகளில், நேர்முகமாகவும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் திருட்டுத்தனமாகவும், லஞ்சம் கொடுக்கிறார்கள்.

முதலாளிகளாக மாறிய இந்தத் தொழிலாளர்கள் அல்லது ''தொழிலாளிப் பிரபுக்குலத்தோர்'' தங்களது வாழ்க்கை முறையிலும், ஊதியத்தின் அளவிலும், தங்கள் கண்ணோட்டம் முழுவதிலும் குட்டிமுதலாளித்துவ மனப்பான்மை கொண்ட இவர்கள், இரண்டாவது அகிலத்தின் பிரதானத் தூண்கள் ஆவர்; தற்காலத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதான சமூகத் தூண்கள் (இராணுவத் தூண்கள் அல்ல) ஆவர். ஏனெனில், அவர்கள்தாம் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் மெய்யான கையாட்களாக, முதலாளித்துவ வர்க்கத்தின் தொழிலாளர் சேவகர்களாக (labour lieutenants of the capitalist class), சீர்திருத்தவாதத்துக்கும் தேசியவெறிக்குமான மெய்யான வாகனங்களாக இருக்கின்றனர். பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையில் நடைபெறும் உள்நாட்டுப் போரில், அவர்கள் தவிர்க்க இயலாதபடி, பெரிய எண்ணிக்கையில் முதலாளித்துவ வர்க்கத்தின் தரப்பை ஏற்கின்றனர், ''கம்யூனார்டுகளுக்கு'' எதிராய் ''வெர்சேய்லர்கள்''[13] தரப்பிலே நிற்கிறார்கள்.

இந்த நிகழ்வின் பொருளாதார வேர்களைப் புரிந்து கொண்டாலொழிய, இதன் அரசியல், சமுதாய முக்கியத்துவத்தை உணர்ந்தாலொழிய, கம்யூனிஸ்டு இயக்கத்தின், நெருங்கி வரும் சமூகப் புரட்சியின் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதை நோக்கி ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது.

பாட்டாளி வர்க்கத்தினுடைய சமூகப் புரட்சியின் தறுவாயே ஏகாதிபத்தியம். 1917க்குப் பிற்பாடு உலகு தழுவிய அளவில் இது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

நி.லெனின்

*1920, ஜூலை 6*

கடந்த பதினைந்து, இருபது ஆண்டுகளாக, குறிப்பாக ஸ்பானிஷ்-அமெரிக்க யுத்தத்துக்கும் (1898) ஆங்கில-போயர் யுத்தத்துக்கும் (1899-1902)[14] பிற்பாடு, புவியின் இரு அரைக் கோளங்களிலும் பொருளாதார வெளியீடுகளிலும் மற்றும் அரசியல் வெளியீடுகளிலுங்கூட இன்றைய கால கட்டத்தை விவரிப்பதற்கு ''ஏகாதிபத்தியம்'' என்னும் சொல் மேலும் மேலும் எடுத்தாளப்பட்டு வந்திருக்கிறது. ஆங்கிலேயப் பொருளியலாளர் ஜா.ஆ. ஹாப்ஸன் எழுதிய புத்தகமான ஏகாதிபத்தியம் 1902ல் லண்டனிலும் நியூயார்க்கிலும் வெளியிடப்பட்டது. மாஜி மார்க்சியவாதியாகிய கா. காவுத்ஸ்கியின் தற்போதைய கண்ணோட்டத்தைச் சாராம்சத்தில் முற்றும் ஒத்ததான, முதலாளித்துவச் சமூக-சீர்திருத்த வாதம், அமைதிவாதம் ஆகியவற்றின் கண்ணோட்டத்தைக் கொண்டவர் இந்நூலாசிரியர். ஏகாதிபத்தியத்தின் முதன்மையான பிரத்தியேகப் பொருளாதார, அரசியல் இயல்புகளை இவ்வாசிரியர் சிறப்பாகவும் விரிவுபடவும் விவரிக்கிறார். ஆஸ்திரிய மார்க்சியவாதி ரூடோல்ப் ஹில்பர்டிங் என்பவரின் நிதி மூலதனம் (ருஷ்யப் பதிப்பு, மாஸ்கோ, 1912) 1910ல் வியன்னாவில் வெளிவந்தது. பணத்தைப் பற்றிய தத்துவத்தில் இந்நூலாசிரியர் தவறு செய்திருப்பினும், சந்தர்ப்பவாதத்துடன் மார்க்சியத்தைச் இணக்கம் கொள்ளச் செய்வதில் அவர் ஓரளவுக்கு நாட்டமுடைவராக இருப்பினும், அவரது நூல் அதன் துணைத் தலைப்பாகிய ''முதலாளித்துவ

வளர்ச்சியின் நவீன கட்டம்'' என்பது குறித்து மதிப்பு மிக்க தத்துவார்த்த பகுப்பாய்வினைத் தருகிறது. கடந்த சில ஆண்டுகளில் ஏகாதிபத்தியம் குறித்துக் கூறப்பட்டிருப்பவை எல்லாம், முக்கியமாய்ச் சஞ்சிகைகளிலும் செய்தியேடுகளிலும் வெளிவந்திருக்கும் ஏராளமான கட்டுரைகளிலும், மற்றும் மாநாட்டுத் தீர்மானங்களிலும்—உதாரணமாக, 1912ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நடைபெற்ற ஹெம்னிட்ஸ்,[15] பாஸெல் காங்கிரஸ்களின் தீர்மானங்களிலும்—கூறப்பட்டிருப்பவை எல்லாம் மேற்கூறிய இவ்விரு ஆசிரியர்களாலும் விளக்கிக் கூறப்பட்ட, அல்லது இன்னும் சுருராகச் சொல்வ தெனில் தொகுத்துரைக்கப்பட்ட கருத்துக்களுக்கு அப்பால் அதிகம் சென்றுவிடவில்லை....

ஏகாதிபத்தியத்தின் முதன்மையான பொருளாதார இயல்பு களுக்கிடையில் உள்ள உறவுகளையும் தொடர்பையும் சுருக்க மாகவும் கூடுமான அளவுக்கு எளிய முறையிலும் எடுத் துரைக்க பிற்பாடு நான் முயற்சி செய்வேன். இப்பிரச்சினை யின் பொருளாதார இயல்பல்லாத பிற இயல்புகள் எவ்வளவு தான் கவனத்திற்கு உரியவையாக இருப்பினும், அவற்றை நான் பரிசீலிப்பதற்கில்லை. வெளியீடுகள், பிற குறிப்புகள் பற்றிய சுட்டுரைகளை—எல்லா வாசகர்களுக்கும் இவை அக்கறைக்குரியனவாய் இருக்குமெனக் கொள்வதற்கில்லை —இப்பிரசுரத்தின் இறுதியில் காணலாம்.

## 1. உற்பத்தியின் ஒன்றுகுவிப்பும் ஏகபோகங்களும்

தொழில் துறையின் பிரம்மாண்ட வளர்ச்சியும், மேலும் மேலும் பெரிதாகிச் செல்லும் தொழில் நிலையங்களில் உற் பத்தியானது குறிப்பிடத்தக்க துரித கதியில் ஒன்றுகுவியும் போக்கும் முதலாளித்துவத்தின் மிக முக்கிய தனியியல்பு களில் ஒன்றாகும். தற்கால உற்பத்திக் கணக்கெடுப்புகள் இந்த நிகழ்ச்சிப்போக்கைப் பற்றிய மிகவும் முழுமையான, மிகவும் துல்லியமான புள்ளிவிவரங்களைத் தருகின்றன.

உதாரணமாக, ஜெர்மனியில் ஒவ்வொரு 1,000 தொழில் நிலையங்களிலும் பெரிய நிலையங்கள், அதாவது 50க்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டவை, 1882ல் மூன்றாக வும், 1895ல் ஆறாகவும், 1907ல் ஒன்பதாகவும் இருந்தன. வேலை செய்த ஒவ்வொரு 100 தொழிலாளர்களிலும் இந்தப் பெரிய நிலையங்களில் வேலை செய்தவர்கள் முறையே 22 ஆகவும், 30 ஆகவும், 37 ஆகவும் இருந்தனர். ஆனால் பெரிய தொழில் நிலையங்களில் உழைப்பின் உற்பத்தித் திறன் மிக உயர்வாக இருப்பதனால், உற்பத்தியின் ஒன்றுகுவிப்பு தொழிலாளர்களின் ஒன்றுகுவிப்பை விட மிகமிக அதிகமாக இருக்கிறது. நீராவி எஞ்சின்களையும் மின்சார மோட்டார்களையும் பற்றிய புள்ளிவிவரங்கள் இதைக் காண்பிக்கின்றன. ஜெர்மனியில் தொழில் துறை எனப்படுவதை அச்சொல்லின் விரிந்த பொருளில் எடுத்துக்கொண்டால், அதாவது வாணிபம், போக்குவரத்து முதலானவையும் உள்ளடங்கியதாக எடுத்துக் கொண்டால், கீழ்க் காணப்படும் ஒரு சித்திரம் நமக்குக் கிடைக்கிறது. மொத்தம் 32,65,623 தொழில் நிலையங்களில் பெரிய நிலையங்கள் 30,588, அதாவது 0.9 சதவிகிதம் ஆகும். மொத்தம் 144 லட்சம் தொழிலாளர்களில் இந்தப் பெரிய நிலையங்களில் 57 லட்சம் பேர், அதாவது 39.4 சதவிகிதத்தினர் வேலை செய்கிறார்கள்; மொத்தம் 88 லட்சம் நீராவிக் குதிரைத் திறனில் இவை 66 லட்சம் குதிரைத் திறனை, அதாவது 75.3 சதவிகிதத்தை உபயோகிக்கின்றன; மொத்தம் 15 லட்சம் கிலோவாட் மின்விசையில் இவை 12 லட்சம் கிலோவாட்களை, அதாவது 77.2 சதவிகிதத்தைப் பயன் படுத்துகின்றன.

தொழில் நிலையங்களின் மொத்த எண்ணிக்கையில் நூறில் ஒரு பங்குக்கும் குறைந்தவை, நீராவி, மின்விசைத் திறனின் மொத்த அளவில் முக்காலுக்கும் மேற்பட்டதை உபயோகித்துக் கொள்கின்றன! மொத்தத்தில் 91 சதவிகிதமாகிய இருபத்தொன்பது லட்சத்து எழுபதாயிரம் சிறு தொழில் நிலையங்கள் (ஒவ்வொன்றும் ஐந்து தொழிலாளர்கள் வரை கொண்டவை) மொத்த நீராவி, மின்விசைத் திறனில் 7 சதவிகிதத்தை மட்டுமே உபயோகித்துக் கொள்கின்றன! சில பத்தாயிரக்

கணக்கான மிகப் பெரிய நிலையங்களே சர்வ முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன; பத்துலட்சக் கணக்கான சிறு நிலையங்கள் எந்த முக்கியத்துவமும் இல்லாமற் போய்விட்டன.

1907ல் ஜெர்மனியில் ஒவ்வொன்றிலும் ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர் வேலை செய்த 586 தொழில் நிலையங்கள் இருந்தன. தொழில் துறையில் வேலை செய்த தொழிலாளரின் மொத்த எண்ணிக்கையில் கிட்டத் தட்டப் பத்தில் ஒரு பங்கினரையும் (13,80,000), மொத்த நீராவி, மின்விசைத் திறனில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கையும் (32 சதவிகிதம்) அவை உபயோகித்துக் கொண் டன*. நாம் பிறகு பார்க்கப் போவதைப் போன்று, விரல் விட்டு எண்ணிவிட கூடிய மிகப் பெரிய தொழில் நிலையங் களின் இந்த மேல்நிலையை நிதி மூலதனமும் வங்கிகளும் இச் சொல்லின் உண்மைப் பொருளில் ஆதிக்க வலிமை வாய்ந்த தாக்குகின்றன; அதாவது லட்சக்கணக்கான சிறிய, நடுத் தர ''உடைமையாளர்களும்'' சில பெரிய ''உடைமையாளர் களுங்''கூட சில நூறு நிதியாதிக்கக் கோடீஸ்வரர்களுக்கு உண்மையில் முற்றும் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தற்கால முதலாளித்துவத்துக்குரிய மற்றொரு முன்னேறிய நாடாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டில், உற்பத்தியின் ஒன்றுகுவிப்பு இன்னுங்கூட அதிகமாக வளர்ந்திருக்கிறது. இங்கு புள்ளிவிவரங்கள் தொழில் துறையை அதன் குறுகிய பொருளில் பிரித்துக் காட்டி, தொழில் நிலையங்களை அவற் றின் ஆண்டு உற்பத்தியினது மதிப்புப்படி வகை பிரித்துக் காட்டுகின்றன. 1904ல், பத்துலட்சம் டாலரும் அதற்குக் கூடுதலான மதிப்புமுள்ள உற்பத்தியைக் கொண்ட பெரிய தொழில் நிலையங்கள் 1,900 இருந்தன (மொத்தம் 2,16,180ல் இது 0.9 சதவிகிதமாகும்); இவற்றில் 14 லட்சம் தொழி லாளர்கள் வேலை செய்தனர்(மொத்தம் இருந்த 55 லட்சம் தொழிலாளர்களில் இவர்கள் 25.6 சதவிகிதமாவர்); இவற்

* இந்தப் புள்ளிவிவரங்கள் கீழ்க்கண்டதிலிருந்து எடுக் கப்பட்டவை: *Annalen des deutschen Reichs*, 1911, Zahn (''ஜெர்மன் அரசின் வரலாற்றுக் குறிப்புகள்'', 1911, த்ஸான்.—ப-ர்.).

றின் உற்பத்தியினது மதிப்பு 560 கோடி டாலராக இருந்தது (மொத்த உற்பத்தி மதிப்பாகிய 1,480 கோடி டாலரில் இது 38 சதவிகிதமாகும்). ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1909ல், இந்தப் புள்ளிவிவரங்கள் முறையே கீழ்க்கண்டவாறு இருந்தன: 3,060 நிலையங்கள் (மொத்தம் இருந்த 2,68,491ல் இது 1.1 சதவிகிதம்); வேலை செய்த தொழிலாளர்கள் 20 லட்சம் (மொத்தம் இருந்த 66 லட்சம் தொழிலாளர்களில் இவர்கள் 30.5 சதவிகிதம்); உற்பத்தியின் மதிப்பு 900 கோடி டாலர் (மொத்த உற்பத்தி மதிப்பாகிய 2,070 கோடி டாலரில் இது 43.8 சதவிகிதம்).*

அந்நாட்டிலுள்ள எல்லாத் தொழில் நிலையங்களின் மொத்த உற்பத்தியில் ஏறக்குறைய சரிபாதியை, இந்நிலையங்களில் நூறில் ஒரு பங்கு ஆனவை உற்பத்தி செய்தன! இந்த 3,000 ராக்ஷஸ நிலையங்கள், 258 தொழிற் கிளைகளை உள்ளடக்கியிருந்தன. ஒன்றுகுவிப்பே அதன் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நேராக ஏகபோகத்துக்கு இட்டுச் செல்வதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஏனெனில், இருபது, இருபத்தைந்து ராக்ஷஸ நிலையங்கள் சுலபமாகத் தங்களுக்குள் உடன்பாட்டுக்கு வந்துவிட முடியும்; மறு புறத்தில் போட்டிக்கான முட்டுக்கட்டை, ஏகபோகத்திற்குக் கொண்டு செல்லும் போக்கு, நிலையங்களின் பெரிய பரிமாணத்திலிருந்தே எழுகிறது. போட்டியானது இப்படி ஏகபோகமாக மாறுவது, நவீன முதலாளித்துவப் பொருளாதாரத்தின் மிகவும் முக்கியமானது இல்லையேல், எப்படியும் மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றே ஆகும். இதைப் பற்றி இன்னும் விரிவாக நாம் கவனிக்க வேண்டும். ஆனால் இங்கு சாத்தியமான ஒரு தவறான எண்ணத்தை முதலில் அகற்றியாக வேண்டும்.

250 தொழிற் கிளைகளில் 3,000 ராக்ஷஸத் தொழில் நிலையங்கள் உள்ளன என்று அமெரிக்கப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து, ஒவ்வொரு தொழிற் கிளையிலும்

* *Statistical Abstract of the United States*, 1912, p. 202 (''அமெரிக்க ஐக்கிய நாட்டின் புள்ளிவிவரச் சுருக்கம்'', 1912, பக்கம் 202.—ப-ர்.).

ஏதோ ஒரு டஜன் மிகப் பெரிய நிலையங்களே இருப்பதாகத் தோன்றும்.

ஆனால் இது உண்மையல்ல. பெரிய நிலையங்கள் ஒவ்வொரு தொழிற் கிளையிலும் இருக்கவில்லை; மேலும், முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச கட்டத்தில், உற்பத்தியின் **இணைவு** என்பதானது முதலாளித்துவத்தின் மிகவும் முக்கியமான ஓர் இயல்பாகும். இணைவு என்பது மூல பொருள்களைப் பதனம் செய்வதில் அடுத்தடுத்த கட்டங்களைக் குறிக்கும் வெவ்வேறு தொழிற் கிளைகள் (உதாரணமாக, இரும்புக் கனியை உருக்கி வார்ப்பு இரும்பாக்குதல், வார்ப்பு இரும்பை எஃகாக மாற்றுதல், பிறகு எஃகுப் பொருட்களின் தயாரிப்பையும் சொல்லலாம்), அல்லது ஒன்றுக்கொன்று துணையாக அமைந்த வெவ்வேறு தொழிற் கிளைகள் (உதாரணமாக, கழிபொருள்களை அல்லது உப-பொருள்களைப் பயன்படுத்துதல், சிப்பம் கட்டுதற்கான பொருட்களின் உற்பத்தி முதலானவை) ஒரே தொழில் நிலையத்தில் இணைவு பெறுவதாகும்.

''இணைவானது வர்த்தகத்தின் ஏற்றயிறக்கங்களைச் சமனப்படுத்தி, இணைவு பெற்ற தொழில் நிலையங்களுக்கு இவ்விதம் மேலும் நிலையான லாப விகிதத்தை உத்தரவாதம் செய்கிறது. இரண்டாவதாக, இணைவானது வர்த்தகத்தை அகற்றி விடும்படியான விளைவை உண்டாக்குகிறது. மூன்றாவதாக, தொழில் நுட்ப மேம்பாடுகள் செய்யப்படுவதையும், இதன் விளைவாக, 'தூய' (அதாவது இணைவு பெறாத) தொழில் நிலையங்களுக்குக் கிடைப்பதைவிட கூடுதலான உபரி லாபங்கள், கிடைக்கப் பெறுவதையும் அது சாத்தியமாக்குகிறது. நான்காவதாக, 'தூய' நிலையங்களுடைய நிலையுடன் ஒப்பிடுகையில் இணைவு பெற்ற தொழில் நிலையங்களின் நிலையை அது வலுவடையச் செய்கிறது; மூலப் பொருள்களின் விலைச் சரிவு செய்பொருள்களின் விலைச் சரிவுடன் ஒத்ததாக இராமல் பின் தங்கிவிடும் கடுமையான பொருளாதார மந்தத்துக்குரிய காலங்களில் போட்டிப் போராட்டத்தில், அது இணைவு பெற்ற நிலையங்களை வலிமை மிக்கனவாக்குகிறது''* என்று <u>ஹில்பர்டிங்</u> எழுதுகிறார்.

* நிதி மூலதனம், ருஷ்யப் பதிப்பு, பக்கங்கள் 286-287.

குறிப்பாக, ஜெர்மானிய இரும்பு, எஃகுத் தொழிலில் உள்ள ''கலந்த'', அதாவது இணைவு பெற்ற தொழில் நிலையங்களைப் பற்றி புத்தகம் எழுதியிருக்கும் முதலாளித்துவப் பொருளியலாளர் ஹெய்மன் கூறுகிறார்: ''தூய தொழில் நிலையங்கள் அழிந்து போகின்றன; மூலப் பொருள்களின் உயர்ந்த விலைக்கும், தயாரித்து முடிந்த பொருள்களின் குறைந்த விலைக்கும் இடையில் அவை நசுக்கப்படுகின்றன.'' ஆகவே, நமக்குக் கீழ்க்கண்ட சித்திரம் கிடைக்கிறது: ''ஆண்டு தோறும் பத்து லட்சக் கணக்கான டன்கள் உற்பத்தி செய்கிறவையும், தங்களது நிலக்கரி சிண்டிக்கேட்டில் வலுமிக்கவாறு ஒழுங்கமைந்தவையுமாகிய பெரிய நிலக்கரிக் கம்பெனிகள் ஒரு பக்கமும் இந்த நிலக்கரிக் கம்பெனிகளுடன் நெருங்கிய கூட்டு கொண்டு தமது சொந்த எஃகு சிண்டிக் கேட்டைப் பெற்றிருக்கும் பெரிய எஃகுத் தொழிற்சாலைகள் மறு பக்கமும் இருக்கக் காண்கிறோம். ஆண்டு தோறும் 4 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்கிற, பிரம்மாண்டமான அளவு இரும்புக் கனியும் நிலக்கரியும் வெட்டி எடுக்கிற, இறுதி எஃகுப் பொருள்களைத் தயாரிக்கிற, கம்பெனிகளது வீடுகளில் வசிக்கும் 10,000 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள, சில சமயம் சொந்த ரயில்வேக்களையும் துறைமுகங்களையும் பெற்றிருக்கிற இந்த ராக்ஷஸ தொழில் நிலையங்கள் ஜெர்மன் இரும்பு, எஃகுத் தொழிலின் இன மாதிரியான பிரதிநிதிகளாகும். உற்பத்தியின் ஒன்றுகுவிப்பு மேலும் மேலும் அதிகமாகிச் செல்கிறது. தனி நிலையம் ஒவ்வொன்றும் மேலும் மேலும் பெரிதாகிச் செல்கிறது. மேலும் மேலும் கூடுதலான நிலையங்கள் ஒரே தொழிற் கிளையிலோ, வெவ்வேறான பல தொழிற் கிளைகளிலோ ராக்ஷஸ நிலையங்களாக ஒன்றிணைகின்றன, அரை டஜன் பெரிய பெர்லின் வங்கிகள் இவற்றுக்கு ஆதாரமாக நின்று இவற்றை நெறியாண்மை புரிகின்றன. உற்பத்தியின் ஒன்று குவிப்பு பற்றிய கார்ல் மார்க்சின் போதனைகள் மெய்தான் என்பது ஜெர்மன் சுரங்கத் தொழில் சம்பந்தமாகத் திட்ட வட்டமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது; காப்பு வரிகளாலும் சரக்குக்குக் கட்டணங்களாலும் தொழில் துறை பாதுகாக்

கப்படுகிற ஒரு நாட்டிற்கே இது பொருந்துவதாகும் என்பது உண்மையே. ஜெர்மன் சுரங்கத் தொழில் பறிமுதல் செய்யப் படுவதற்குப் பக்குவ நிலையில் உள்ளது''*

விதிவிலக்காக மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட ஒரு முதலாளித்துவப் பொருளியலாளர் இத்தகைய முடிவுக்கு வர நேர்ந்திருக்கிறது. ஜெர்மனியில் தொழில்கள் உயர்ந்த காப்பு வரிகளால் பாதுகாக்கப்படுவதால் ஜெர்மனியை ஒரு தனி வகைக்கு உரியதாக அவர் கருதுவதாய்த் தெரிவதைக் குறிப்பிடவேண்டும். ஆனால் இச்சூழ்நிலை ஒன்றுகுவிப்பையும் தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டுகள், கார்ட்டல்கள், சிண்டிக் கேட்டுகள் முதலியவை அமைக்கப்படுவதையும் துரிதப் படுத்தவே முடியும். தடையில்லா வாணிபத்துக்குரிய இங்கிலாந்திலும்கூட ஒன்றுகுவிப்பு—ஓரளவு பிற்பாடும், ஒருகால் வேறொரு வடிவிலும்தான் என்றாலும்—ஏகபோகத்துக்கே இட்டுச் செல்கிறது என்பதைக் குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும். பேராசிரியர் ஹெர்மான் லெவி, பிரிட்டிஷ் பொருளாதார வளர்ச்சி பற்றிய புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய **ஏகபோகங்களும் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும்** என்ற அவரது தனி ஆராய்ச்சி நூலில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

''கிரேட் பிரிட்டனில், தொழில் நிலையத்தின் பெரிய பரிமாணமும் அதன் உயர்ந்த தொழில்நுட்பத் தரமுமே ஏகபோகப் போக்கினை ஆக்கம் பெறச் செய்கின்றன. இதற்கு ஒரு காரணம் என்னவெனில், தொழில் நிலையம் ஒவ்வொன்றுக்குமான முதலீட்டுத் தொகை பெரிதாய் இருப்பதால், புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்கு வேண்டிய புதிய மூலதனத்துக்காக மேன்மேலும் கூடுதலான தேவைகள் எழுகின்றன, இதனால் புதிய நிலையங்களைத் துவக்குவது அதிகக் கடினமாகிறது. மேலும் (இது இன்னும் முக்கியமான விஷயமாக

---

* Hans Gideon Heymann, *Die gemischten Werke im deutschen Grosseisengewerbe*, Stuttgart, 1904, SS. 256, 278-279 (ஹன்ஸ் கிடியோன் ஹெய்மன், ''ஜெர்மன் பெரிய இரும்புத் தொழிலில் இணைவுத் தொழிற்சாலைகள்'', ஷ்டுட்கார்ட், 1904, பக்கங்கள் 256, 278-279.—ப-ர்.).

நமக்குத் தோன்றுகிறது), உற்பத்தி ஒன்றுகுவிப்பு மூலம் அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான நிலையங்களுடன் சமமாக நடைபோட விரும்புகிற ஒவ்வொரு புதிய நிலையமும் இங்கு ஏராளமான அளவில் உபரிப் பண்டங்களை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது, பண்டத் தேவையில் பெரிய அளவில் அதிகரிப்பு ஏற்படுவதன் விளைவாய் அவற்றை அது லாபகரமாக விற்க முடிவதன் மூலம் மட்டுமே இவ்வளவு பண்டத்தையும் அது தீர்த்துக் கட்ட முடியும்; இல்லையேல், இந்த உபரியானது புதிய நிலையத்துக்கும் ஏகபோக இணைவுகளுக்கும் லாபமில்லாமற் போகும் அளவுக்கு விலையை விழச் செய்து விடும்.'' கார்ட்டல்கள் அமைக்கப்படுவதை எளிதாக்கும் காப்பு வரிகள் உள்ள இதர நாடுகளைப் போலல்லாமல், இங்கிலாந்தில் முக்கியமான போட்டி நிலையங்களின் எண்ணிக்கை ''ஓரிரண்டு டஜன்களாகக்'' குறைந்து விடும் பொழுதுதான், தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டுகளும் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும் பெரும்பாலும் தோன்றுகின்றன. ''இங்கு உற்பத்தியின் ஒன்றுகுவிப்பினது விளைவாய், தொழில் துறையின் ஒரு முழு அரங்கில் பெரிய தொழில் துறை ஏகபோகங்கள் உருவாவதானது பளிங்கு போன்ற தெளிவுடன் தெரிகிறது.''*

அரை நூற்றாண்டுக்கு முன்னர், மார்க்ஸ் ''மூலதனத்தை'' எழுதிக் கொண்டிருந்தபொழுது, தடையற்ற போட்டி ''இயற்கை விதியாக'' மிகப் பெரும்பாலான பொருளியலாளர்களுக்குத் தோன்றியது. தடையற்ற போட்டி உற்பத்தியின் ஒன்றுகுவிப்பைத் தோற்றுவிக்கிறது என்றும், இந்த ஒன்றுகுவிப்பு அதன் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஏகபோகத்திற்கு இட்டுச் செல்கிறது என்றும், முதலாளித்துவத்தைப் பற்றிய தத்துவார்த்த, வரலாற்றுப் பகுத்தாய்வின் வாயிலாக நிரூபித்த மார்க்சின் நூலை, அதிகார பூர்வமான விஞ்ஞானமானது கவனியாது மௌனம் சாதிக்

* Herman Levy, *Monopole, Kartelle und Trusts*, Jena, 1909, SS. 286, 290, 298 (ஹெர்மான் லெவி, ''ஏகபோகங்களும் கார்ட்டல்களும் டிரஸ்டுகளும்'', யேனா, 1909, பக்கங்கள் 286, 290, 298.—ப-ர்.).

கும் சதியின் மூலம் அழித்துவிட முயற்சி செய்தது. இன்று ஏகபோகம் நடைமுறை உண்மை ஆகிவிட்டது. பொருளியலாளர்கள் மலைமலையாக எழுதிக் குவிக்கும் புத்தகங்களில் ஏகபோகத்தின் பல்வேறு விதமான வெளிப்பாடுகளையும் விவரித்துவிட்டு, ''மார்க்சியம் பொய்ப்பிக்கப்பட்டுவிட்டது'' என்பதாக எல்லாருமாய்ச் சேர்ந்து ஒரே குரலில் தொடர்ந்து பிரகடனம் செய்கிறார்கள். ஆனால் உண்மைகள் முரட்டுப் பிடிவாதம் கொண்டவை என்பது ஆங்கிலப் பழமொழி, பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டே ஆக வேண்டும். தனிப்பட்ட முதலாளித்துவ நாடுகளுக்கிடையில் உள்ள வித்தியாசங்கள், உதாரணமாகக் காப்பு வரிகள் அல்லது தடையில்லா வாணிபம் என்பதிலான வித்தியாசங்கள் ஏகபோகங்களின் வடிவத்திலோ, அவை உருவாகும் காலத்திலோ அற்பசொற்ப மாறுபாடுகளையே உண்டாக்குகின்றன என்றும் உற்பத்தி ஒன்றுகுவிப்பின் விளைவாக ஏகபோகங்கள் உதிப்பதானது முதலாளித்துவ வளர்ச்சியின் இன்றைய கட்டத்தின் பொதுவான அடிப்படை விதியாகும் என்றும் நடைமுறை உண்மைகள் காட்டுகின்றன.

ஐரோப்பாவில் புதிய முதலாளித்துவம் பழைய முதலாளித்துவத்தை திட்டவட்டமாக அகற்றிவிட்ட காலத்தைப் போதிய அளவு துல்லியமாக நிர்ணயிக்க முடியும்: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமாகும் அது. ''ஏகபோகங்கள் உருவாகிய'' வரலாற்றைப் பற்றிய மிக அண்மைக் காலத்திய தொகுப்புரை ஒன்றில் கீழ்க்கண்டவாறு நாம் படிக்கிறோம்:

''முதலாளித்துவ ஏகபோகத்தின் தனிப்பட்ட உதாரணங்களை 1860க்கு முந்திய காலத்திலேயே குறிப்பிட முடியும்; இவைகளில் இன்று சகஜமாகிவிட்ட வடிவங்களின் கருவினைக் காண முடியும்; ஆனால் இவை யெல்லாம், கார்ட்டல்களின் வரலாற்றுக்கு முந்திய காலத்தையே குறிப்பவை என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. தற்கால ஏகபோகத்தின் உண்மையான ஆரம்பம் அதிகம் போனால் 1860ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்டதல்ல. ஏகபோகத்தின் வளர்ச்சியில் முதலாவது முக்கிய காலகட்டம் 1870ஆம்

ஆண்டுகளில் ஏற்பட்ட சர்வதேசத் தொழில் மந்தத்துடன் ஆரம்பித்து, சுமார் 1890ஆம் ஆண்டுகளின் தொடக்கம் வரை நீடித்தது''. ''இந்தப் பிரச்சினையை ஐரோப்பிய அளவில் பரிசீலனை செய்து பார்த்தோமாயின், தடையற்ற போட்டியின் வளர்ச்சி 1860ஆம் ஆண்டுகளிலும் 1870ஆம் ஆண்டுகளிலும் அதன் உச்ச நிலையை அடையக் காண்போம். தனது பழைய பாணி முதலாளித்துவ ஒழுங்கமைப்பை இங்கிலாந்து கட்டிமுடித்தது அப்பொழுதுதான். ஜெர்மனியில் இந்த ஒழுங்கமைப்பு கைத்தொழிலுடனும் குடிசைத் தொழிலுடனும் கடுமையான போரில் இறங்கி, தனக்கே உரிய வாழ்வு வடிவங்களைத் தோற்றுவித்துக் கொள்ளத் தொடங்கியிருந்தது.''

''1873ல் ஏற்பட்ட முறிவுடன், அல்லது இன்னும் சுருராய்க் கூறினல் அந்த முறிவைத் தொடர்ந்து ஆரம்பித்த பொருளாதார மந்தத்துடன் அந்தப் பெரும் புரட்சி தொடங்கியது; அந்தப் பொருளாதார மந்தம் 1880ஆம் ஆண்டுகளின் ஆரம்பப் பகுதியில் சிரமத்துடனேயே கண்டுணரக் கூடிய இடையீடுகளுடனும், 1889ஆம் ஆண்டின் வாக்கில் அசாதாரண வன்மையுடன் எழுந்து குறுகிய காலத்துக்கே நீடித்த பொருளாதார உயர்வேற்றத்துடனும், ஐரோப்பியப் பொருளாதார வரலாற்றின் இருபத்திரண்டு ஆண்டுகளைக் குறிக்கின்றது.'' ''1889-90ல் உண்டான குறுகிய கால உயர்வேற்றத்தின்போது அனுகூலமாக இருந்த வியாபார நிலைமைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கார்ட்டல் முறை விரிவாகக் கைக்கொள்ளப்பட்டது. சரிவர ஆலோசியாது மேற்கொள்ளப்பட்ட கொள்கையானது, கார்ட்டல்கள் இல்லாமலிருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடியதைக் காட்டிலும் அதிகத் துரிதமாகவும் உயரமாகவும் விலைகளை ஏறச் செய்தது. இதன் பிறகு ஏற்பட்ட 'முறிவில்' அனேகமாய் எல்லாக் கார்ட்டல்களும் அவகேடான முறையில் அழிந்து போயின. இன்னேர் ஐந்தாண்டுக் காலத்துக்கு மந்தமான வியாபாரமும் குறைந்த விலைகளும் நீடித்தன. ஆயினும், தொழில் துறையில் ஒரு புதிய மனப்பாங்கு ஆட்சி புரிந்தது; பொருளாதார மந்தமானது இயல்பாக நடைபெறும் ஒன்ருக இப்

போது கருதப்படவில்லை; அது இன்னொரு உயர்வேற்றத்துக்கு முன்னால் வரும் இடைநேரமே தவிர வேறில்லை என்பதாகக் கருதப்பட்டது.

''கார்ட்டல் இயக்கம் அதன் இரண்டாவது காலகட்டத்துள் அடிவைத்தது: ஓர் இடைக்கால நிகழ்வாய் இல்லாமல், பொருளாதார வாழ்வின் அடிப்படைகளில் ஒன்றாகக் கார்ட்டல்கள் ஆகிவிட்டன. தொழில் துறையில் ஒவ்வோர் அரங்கமாய், முக்கியமாக மூலப் பொருள் தொழிலை, கார்ட்டல்கள் வென்று கொண்டன. 1890ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் கார்ட்டல்கள் சுட்டகரி சிண்டிக்கேட்டை ஒழுங்கமைத்துக் கொண்டன, இதை முன்மாதிரியாகக் கொண்டு பிற்பாடு நிலக்கரி சிண்டிக்கேட்டு நிறுவப்பட்டது—இவ்விதம் உருவாக்கப்பட்ட கார்ட்டல் செயல்நுட்பத்துக்கு மேற்கொண்டு அதிக மேம்பாடு தேவைப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பெரிய உயர்வேற்றமும் 1900-1903ல் ஏற்பட்ட நெருக்கடியும்—எப்படியும் சுரங்க, இரும்புத் தொழில்களிலேனும் — முதல் தடவையாக முற்றும் கார்ட்டல்களின் பரிபாலனத்தில் நடந்தேறின. அப்பொழுது இவை ஏதோ அதிசயத்துக்குரியனவாய் இருந்தன, ஆனால் இப்பொழுது பொருளாதார வாழ்வின் பெரும் பகுதிகள் தடையற்ற போட்டியின் துறையிலிருந்து விலக்கப்பட்டிருக்கும் இந்தப் பொது விதியைப் பொது மக்கள் சர்வ சாதாரணமான ஒன்றாய்க் கருதுகிறார்கள்.''*

---

* Th. Vogelstein, Die finanzielle Organisation der kapitalistischen Industrie und die Monopolbildungen. *Grundriss der Sozialökonomik*, VI Abt., Tübingen, 1914 (தி. ஃபோகல்ஷ்டைன், ''முதலாளித்துவத் தொழில் துறையின் நிதி ஒழுங்கமைப்பும் ஏகபோகங்களின் உதயமும்'', **சமுதாயப் பொருளாதாரத்தின் அடிப்படைகள்**, பாகம் 6, ட்யூபிங்கன், 1914.—ப-ர்.) என்பதிலிருந்து. இதே ஆசிரியரின் கீழ்க்கண்ட நூலையும் பார்க்கவும்: *Organisationsformen der Eisenindustrie und Textilindustrie in England und Amerika*, Bd. I, Lpz., 1910. (''இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இரும்பு, நூற்பு-நெசவுத் தொழில்களின் ஒழுங்கமைப்பு வடிவங்கள்'', தொகுதி 1, லைப்ஸிக், 1910.—ப-ர்.).

இவ்வாருக, ஏகபோகங்களது வரலாற்றின் முக்கிய கட்டங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன: *1) 1860-70,* தடையில்லாப் போட்டியினது வளர்ச்சியின் உச்ச கட்டம், உச்சி முகடு; ஏகபோகங்கள் காண்பதற்கு அரிய கருநிலையிலே உள்ளன. *2) 1873* ஆம் ஆண்டின் பொருளாதாரநெருக்கடிக்குப் பிறகு, கார்ட்டல்கள் வளர்ச்சியுறும் நீண்டதொரு காலப் பகுதி; ஆனால் இன்னும் அவை விதிவிலக்காகவே இருக்கின்றன. அவை இன்னும் நிலை பெறவில்லை. அவை மாறுகின்ற இடைக்காலத்துக்குரிய நிகழ்வாகவே இன்னமும் இருக்கின்றன. *3)* பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியில் ஏற்பட்ட உயர்வேற்றமும், *1900-1903* ஆம் ஆண்டுகளின் நெருக்கடியும். பொருளாதார வாழ்வு அனைத்தின் அடிப்படைகளில் ஒன்ருகக் கார்ட்டல்கள் ஆகிவிடுகின்றன. முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாற்றமடைந்து விடுகிறது.

விற்பனையின் நிபந்தனைகள், பணம் செலுத்துவதற்கான கெடுக்கள் முதலியவைகள் பற்றி கார்ட்டல்கள் ஒப்பந்தத்திற்கு வருகின்றன. மார்க்கெட்டுகளைத் தங்களுக்கிடையில் பகிர்ந்து கொள்கின்றன. உற்பத்தி செய்யப்பட வேண்டிய பண்டங்களின் அளவை நிர்ணயிக்கின்றன. விலைகளை நிர்ணயிக்கின்றன. பற்பல தொழில் நிலையங்களுக்கிடையில் லாபங்களைப் பிரித்துக் கொள்கின்றன. இன்னும் இப்படிப் பலவற்றைச் செய்கின்றன.

ஜெர்மனியில் கார்ட்டல்களின் எண்ணிக்கை *1896*ல் சுமார் *250* என்றும், *1905*ல் *385* என்றும் மதிப்பிடப்பட்டது; சுமார் *12,000* நிறுவனங்கள் அவற்றில் பங்கெடுத்துக் கொண்டன.* ஆனால், இந்த எண்ணிக்கைகள் குறைவான

* Dr. Riesser, *Die deutschen Grossbanken und ihre Konzentration im Zusammenhange mit der Entwicklung der Gesamtwirtschaft in Deutschland*, 4 Aufl., 1912, S. 149 (டாக்டர் ரீசர், ''பெரிய ஜெர்மன் வங்கிகளும் ஜெர்மனியில் பொதுப் பொருளாதாரத்தின் வளர்ச்சி சம்பந்தமாக அவற்றின் ஒன்றுகுவிப்பும்'', *4*வது பதிப்பு, *1912,* பக்கம் *149.*—ப-ர்.); R. Liefmann, *Kartelle und Trusts und die Weiterbildung der volkswirtschaftlichen Organisation*, 2 Aufl., 1910, S. 25 (ரா. லீப்மன், ''கார்ட்டல்களும், டிரஸ்டுகளும், பொருளாதார ஒழுங்கமைப்பின் மேற்கொண்ட வளர்ச்சியும்'', *2*வது பதிப்பு, *1910,* பக்கம் *25.*—ப-ர்.).

மதிப்பீடுகளாகுமெனப் பொதுவாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. நாம் மேலே எடுத்துரைத்த ஜெர்மன் தொழில் துறையின் 1907ஆம் வருடத்திய புள்ளிவிவரங் களிலிருந்து, அந்நாட்டில் உபயோகிக்கப்படுகின்ற நீராவி, மின்விசைத் திறனில் நிச்சயமாகப் பாதிக்கு மேற்பட்டதை மிகப் பெரும் நிலையங்களான இந்த 12,000 நிலையங்களே கூட செலவு செய்து கொண்டு விடலாம் என்பது புலனுகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் டிரஸ்டுகளின் எண்ணிக்கை 1900ல் 185 என்றும், 1907ல் 250 என்றும் மதிப்பிடப் பட்டிருந்தது. எல்லாத் தொழில் நிலையங்களையும், தனியாட் களுக்கு உரியவை, தனி நிறுவனங்கள் அல்லது கார்ப்பொரே ஷன்களுக்கு உரியவை என்று அமெரிக்கப் புள்ளிவிவரங்கள் பிரிக்கின்றன. பிந்திய பிரிவில் 1904ல் 23.6 சதவிகிதமான வையும், 1909ல் 25.9 சதவிகிதமானவையும், அதாவது அந் நாட்டின் மொத்தத் தொழில் நிலையங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்டவை அடங்கியிருந்தன. மொத்த கூலித் தொழிலாளர்களில் இவற்றில் 1904ல் 70.6 சதவிகிதத்தின ரும், 1909ல் 75.6 சதவிகிதத்தினரும், அதாவது நான்கில் மூன்று பங்குக்கும் அதிகமானேரும் வேலை செய்தார்கள். இவற்றின் உற்பத்தியினது மதிப்பு இவ்விரு ஆண்டுகளிலும் முறையே 1,090 கோடி டாலராகவும் 1,630 கோடி டால ராகவும், அதாவது மொத்தத்தில் 73.7 சதவிகிதமாகவும், 79.0 சதவிகிதமாகவும் இருந்தது.

ஒரு குறிப்பிடப்பட்ட தொழிற் கிளையின் மொத்த உற் பத்தியில் சில சமயம் பத்தில் ஏழு அல்லது எட்டு பங்குங்கூட கார்ட்டல்கள், டிரஸ்டுகளின் கையில் ஒன்றுகுவிந்துவிடுகிறது. ரைன்-வெஸ்ட்ஃபாலிய நிலக்கரி சிண்டிகேட்டு 1893ல் நிறு வப்பட்டபொழுது, அதன் கையில் அப்பிரதேசத்தின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் 86.7 சதவிகிதம் ஒன்று குவிந்திருந் தது; 1910க்குள் 95.4 சதவிகிதம் அதன் கையில் ஒன்று குவிந்து விட்டது.* இவ்வாறு தோற்றுவிக்கப்படும் ஏகபோ

* Dr. Fritz Kestner, *Der Organisationszwang. Eine Untersuchung über die Kämpfe zwischen Kartellen und Aussenseitern*, Berlin, 1912, பக்கம் 11 (டாக்டர் ப்ரிட்ஸ் கேஸ்ட்

கம், ஏராளமான லாபத்தை உத்தரவாதம் செய்கிறது; பிரம்மாண்ட பரிமாணங் கொண்ட தொழில்நுட்ப உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கு வகை செய்கிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிரசித்திபெற்ற எண்ணெய் டிரஸ்டு (Standard Oil Company) *1900ல் நிறுவப்பட்டது. ''அதன் அனுமதித்த முதல் 15 கோடி டாலர். அது 10 கோடி டாலர் சாதாரணப் பங்குகளும், 10 கோடி 60 லட்சம் டாலர் சலுகைப் பங்குகளும் வெளியிட்டது. 1900லிருந்து 1907 வரையிலான ஆண்டுகளில் பிந்திய பங்குகளுக்கு முறையே கீழ்க்கண்ட லாப ஈவுகள் வழங்கப்பட்டன: 48, 48, 45, 44, 36, 40, 40, 40 சதவிகிதம், அதாவது மொத்தம் 36 கோடி 70 லட்சம் டாலர்கள் வழங்கப்பட்டன. 1882லிருந்து 1907 வரை மொத்த நிகர லாபத் தொகையாகிய 88 கோடி 90 லட்சம் டாலரில், 60 கோடி 60 லட்சம் டாலர் லாப ஈவுகளாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது, எஞ்சிய தொகை காப்பு முதலுடன் சேர்க்கப்பட்டது.''* ''1907ல் எஃகு டிரஸ்டின்* (United States Steel Corporation) *எல்லாத் தொழில் நிலையங்களிலும் 2,10,180 பேருக்குக் குறையாமல் வேலை செய்தனர். ஜெர்மன் சுரங்கத் தொழிலில் மிகப் பெரிய நிலையமாகிய கெல்செங்கிர்ஹென் சுரங்கக் கம்பெனியில்* (Gelsenkirchener Bergwerksgesellschaft) *1908ல் 46,048 தொழிலாளர்களும் அலுவலக ஊழியர்களும் வேலை செய்தார்கள்.''** 1902ல் எஃகு டிரஸ்டு ஏற்கனவே 90 லட்சம் டன் எஃகை உற்பத்தி*

---

னர், ''கட்டாய இணைவு. கார்ட்டல்களுக்கும் வெளியார்களுக்குமிடையிலான போராட்டத்தைப் பற்றிய ஆராய்ச்சி'', பெர்லின்.—ப-ர்.).

* R. Liefmann, *Beteiligungs-und Finanzierungsgesellschaften. Eine Studie über den modernen Kapitalismus und das Effektenwesen*, 1. Aufl., Jena, 1909, பக்கம் 212 (ரா. லீஃப்மன், ''ஹோல்டிங் கம்பெனிகளும், நிதிக் கம்பெனிகளும். தற்காலத்திய முதலாளித்துவத்தையும் பங்குகளையும் பற்றிய ஓர் ஆராய்ச்சி'', முதற் பதிப்பு, யேனா.—ப-ர்.).

** அதே புத்தகம், பக்கம் 218.

செய்தது.* அதனுடைய உற்பத்தி, அமெரிக்க ஐக்கிய நாட்டின் மொத்த எஃகு உற்பத்தியில், 1901ல் 66.3 சதவிகிதமாகவும், 1908ல் 56.1 சதவிகிதமாகவும் இருந்தது,** அதன் இரும்புக் கனி உற்பத்தி முறையே 43.9 சதவிகிதமாகவும், 46.3 சதவிகிதமாகவும் இருந்தது.

டிரஸ்டுகளைப் பற்றிய அமெரிக்க அரசங்கக் கமிஷனின் அறிக்கை கூறுகிறது: ''போட்டியாளர்களைவிட அவை மேல் நிலை பெற முடிந்ததற்குக் காரணம், அவற்றின் நிலையங்களது பெரிய பரிமாணமும் இந்நிலையங்களது சிறந்த தொழில் நுட்பச் சாதனங்களுமேதான். உடல் உழைப்புக்குப் பதில் இயந்திர உழைப்பை எங்கும் புகுத்துவதில் புகையிலை டிரஸ்டு அதன் உதயம் முதலாய் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வந்திருக்கிறது. இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, புகையிலை தயாரிப்புடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்ட எல்லா உரிமைக் காப்புகளையும் [patents] விலை கொடுத்து வாங்கியுள்ளது, இதன் பொருட்டு ஏராளமான தொகைகள் செலவிட்டுள்ளது. இந்த உரிமைக் காப்புகளில் பலவும் முதலில் ஒன்றுக்கும் உதவாதனவாகவே இருந்தன, டிரஸ்டினுடைய வேலைக்கு அமர்த்தப்பட்ட பொறியாளர்களால் அவை திருத்தப்பட வேண்டியிருந்தது. 1906ன் இறுதியில், உரிமைக் காப்புகளை வாங்குவதற்கென தனியே இரண்டு துணைக் கம்பெனிகள் அமைக்கப்பட்டன. இதே நோக்கத்துடன் இந்த டிரஸ்டு சொந்தத்தில் பட்டறைகள், இயந்திரத் தொழிற்கூடங்கள், ரிப்பேர் தொழிற்கூடங்கள் ஆகியவற்றைக் கட்டியது. புரூக்ளினில் இருக்கின்ற இத்தகைய தொழிற்கூடங்களில் ஒன்றில் சராசரி 300 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்; இங்கு சிகரெட்டு, பீடி, மூக்குப்பொடி, கட்டுவதற்கான ஈயத் தாள், பெட்டிகள் முதலானவற்றின் தயாரிப்பு சம்பந்தமான கண்டுபிடிப்புகள் குறித்துப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. மற்றும் இங்கு கண்டுபிடிப்புக்களும் செப்பம் செய்

* Dr. S. Tschierschky, *Kartell und Trust*, Gött., 1903, பக்கம் 13, (டாக்டர் ஸி. சீர்ஷ்கி, ''கார்ட்டலும் டிரஸ்டும்,'' கட்டிங்கன்.—ப-ர்).

** Th. Vogelstein, *Organisationsformen*, பக்கம் 275.

யப்படுகின்றன.''* ''அபிவிருத்திப் பொறியாளர்கள் எனப் படுவோரை இதர டிரஸ்டுகளும் அமர்த்தியுள்ளன; புதிய உற்பத்தி முறைகளைக் கண்டுபிடிப்பதும், தொழில்நுட்ப மேம்பாடுகளைச் சோதனை செய்வதும் இவர்களது வேலை யாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டு எஃகுக் கார்ப்பொரேஷன், தொழில்நுட்ப வினைத்திறனை உயர்த்தும், அல்லது உற்பத்திச் செலவைக் குறைக்கும் எல்லாக் கண்டுபிடிப்புக்களுக் காகவும் தனது தொழிலாளர்களுக்கும் பொறியாளர்களுக் கும் பெரிய போனசுகள் அளிக்கிறது.''**

ஜெர்மன் பெருந் தொழில்களில், உதாரணமாகக் கடந்த சில பத்தாண்டுகளில் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி யடைந்துள்ள இரசாயனத் தொழிலில், தொழில்நுட்ப அபி விருத்தி இதே முறையில்தான் ஊக்குவிக்கப்படுகிறது. 1908 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தி ஒன்றுகுவிப்பின் விளைவாய் இந்தத் தொழிலில் ஏற்கனவே இரு பிரதான''தொகுதிகள்'' தோன்றி விட்டன, இரண்டும் தங்கள் வழியில் ஏகபோகங்களின் தன்மை வாய்ந்தனவாகவே இருந்தன. ஒவ்வொன்றும் இரண்டு கோடியிலிருந்து இரண்டு கோடியே பத்து லட்சம் மார்க்கு வரை முதலுடைய இரண்டு ஜோடி பெரிய தொழிற்சாலை களைக் கொண்ட ''இரட்டையர் கூட்டுகளாக'' ஆரம்பத்தில் இவ்விரு தொகுதிகளும் அமைந்திருந்தன—ஹோஹ்ஸ்ட்டி லுள்ள முன்னாள் மைஸ்டர் தொழிற்சாலையும் பிராங்பர்ட் ஆம் மைனிலுள்ள காசெல்லா தொழிற்சாலையும் ஒரு தொகுதியாகவும், லுட்விக்ஸ்ஹாபனிலுள்ள அனிலேன், சோடா தொழிற்சாலையும் எல்பர்பெல்டிலிருக்கும் முன்னாள் பாயர்

* *Report of the Commissioner of Corporations on the Tobacco Industry*. Washington, 1909, பக்கம் 266(''புகையிலைத் தொழில் குறித்து கார்ப்பொரேஷன்களின் கமிஷனரது அறிக்கை'', வாஷிங்டன்.—ப-ர்.) — கீழ்க்கண்ட நூலில் மேற்கோள் காட் டப்பட்டபடி: Dr. Paul Tafel, *Die nordamerikanischen Trusts und ihre Wirkungen auf den Fortschritt der Technik*, Stuttgart, 1913, பக்கம் 48 (டாக்டர் பாவுல் டாபல், ''வட அமெரிக்க டிரஸ்டுகளும், தொழில்நுட்ப வளர்ச்சி மீது அவை செலுத்திய செல்வாக்கும்'', ஷ்டுட்கார்ட்.—ப-ர்.).

** அதே புத்தகம், பக்கங்கள் 48-49.

தொழிற்சாலையும் மற்றொரு தொகுதியாகவும் இருந்தன. பிறகு 1905ல் இவற்றின் ஒரு தொகுதியும், 1908ல் மற்றொரு தொகுதியும் மேலும் ஒரு பெரிய தொழிற்சாலையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டன. இதன் விளைவாய், ஒவ்வொன்றும் நான்கிலிருந்து ஐந்து கோடி மார்க்குகள் வரை முதலுடைய இரண்டு ''மூவர் கூட்டுகள்'' அமைக்கப்படலாயின. இந்தக் ''கூட்டுகள்'' ஏற்கனவே ஒன்றையொன்று ''நெருங்கி'' வரவும், விலை முதலியவை குறித்து ''உடன்பாடு'' செய்து கொள்ளவும் ஆரம்பித்திருக்கின்றன.*

போட்டியானது ஏகபோகமாக மாற்றமடைந்து வருகிறது. உற்பத்தியின் சமூகமயமாக்கம் இதன் விளைவாகப் பிரமாதமாக முன்னேறியுள்ளது. குறிப்பாக, தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் மேம்பாடுமாகிய வளர்ச்சிப்போக்கு சமூகமயமாக்கப்படுகிறது.

சிதறுண்டு, ஒருவருக்கொருவர் தொடர்பின்றி, தெரியாத ஒரு சந்தைக்காக உற்பத்தி செய்து கொண்டிருந்த தொழிலதிபர்களுக்கிடையிலான பழைய தடையில்லாப் போட்டியிலிருந்து இது முற்றிலும் வேறான ஒன்றாகும். ஒரு நாட்டிலுள்ள, நாம் காணப் போகிறது போல் பல நாடுகளிலுங்கூட உள்ள, அல்லது அனைத்து உலகிலுமுள்ள மூலப் பொருள் ஆதாரங்கள் யாவற்றையும்(உதாரணமாக,இரும்புக் கனிப் படிவங்களை) ஏறத்தாழ மதிப்பீடு செய்வது சாத்தியமாகிவிடும் அளவுக்கு ஒன்றுகுவிப்பு வளர்ந்திருக்கிறது. இப்படிப்பட்ட மதிப்பீடுகள் செய்யப்படுவது மட்டுமின்றி, இந்த ஆதாரங்கள் ராக்ஷஸ ஏகபோகக் கூட்டுகளால் கைப்பற்றிக் கொள்ளப்படுகின்றன. சந்தைகளின் கொள்ளளவும் உத்தேச அளவில் மதிப்பீடு செய்யப்படுகின்றது; ஏகபோகக் கூட்டுகள் உடன்பாட்டின் பேரில் இந்தச் சந்தைகளைத் தம்மிடையே ''பங்கிட்டுக்கொள்கின்றன.'' தேர்ச்சியுள்ள

* Riesser, மேற்குறிப்பிட்ட நூல், மூன்றும் பதிப்பு, பக்கங்கள் 547உம் அடுத்தவையும். ஜெர்மனியின் இரசாயனத் தொழிலை ஒன்றிணைக்கும் பிரம்மாண்டமான ஒரு புதிய டிரஸ்டு அமைக்கப்பட்டிருப்பதைச் செய்தியேடுகள் (ஜூன் 1916) அறிவிக்கின்றன.

உழைப்பு ஏகபோகமாக்கிக் கொள்ளப்படுகிறது, சிறந்த பொறியாளர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். போக்குவரத்துச் சாதனங்கள்—அமெரிக்காவில் ரயில்வேக்கள், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கப்பல் கம்பெனிகள்—கைப்பற்றிக் கொள்ளப்படுகின்றன. முதலாளித்துவம் அதன் ஏகபோகக் கட்டத்தில் உற்பத்தியானது மிக விரிவான அளவில் சமூகமயமாக்கப்படுவதற்கு இட்டுச் செல்கிறது; முதலாளிகளை, அவர்களது விருப்பத்துக்கும் உணர்வுக்கும் மாறாக, ஒரு வகைப் புதிய சமுதாய முறையினுள், அறவே தடையில்லாப் போட்டியிலிருந்து முற்றும் சமூகமயமாக்கப்படுதலுக்கு மாறிச்செல்வதற்கான இடைநிலையாகிய ஒன்றினுள் இழுத்துச் செல்கிறது எனலாம்.

உற்பத்தியானது சமூகமயமாகிறது, ஆனால் சுவீகரிப்பு தொடர்ந்து தனியார் வசமே உள்ளது. சமுதாய உற்பத்திச் சாதனங்கள் தொடர்ந்து ஒருசிலரது தனிச் சொத்தாகவே இருக்கின்றன. சம்பிரதாய முறையில் அங்கீகரிக்கப்படும் தடையில்லாப் போட்டியின் பொதுவான கட்டமைப்பு நீடிக்கிறது; அதே போது ஏகபோகக்காரர்கள் ஒருசிலர் ஏனைய மக்கள் தொகையோரின் மீது செலுத்தும் ஒடுக்குமுறை ஆதிக்கம் நூறு மடங்கு மேலும் கடுமையானதாய், அழுத்துவதாய், சகிக்க முடியாததாய் ஆகிறது.

கேஸ்ட்னர் என்ற ஜெர்மன் பொருளியலாளர் ''கார்ட்டல்களுக்கும் வெளியார்களுக்குமிடையில் நடைபெறும் போராட்டம்'' குறித்துப் பிரத்தியேகமாக ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். வெளியார்கள் என்பார் கார்ட்டல்களில் சேராமலிருக்கும் முதலாளிகள். அவர் தமது நூலுக்குக் **கட்டாய ஒழுங்கமைப்பு** என்று தலைப்பிட்டிருக்கிறார்; ஆனால் முதலாளித்துவத்தின் உண்மை சொரூபத்தை வெளிப்படுத்த வேண்டுமாயின், ஏகபோகக் கூட்டுகளுக்குக் கட்டாய முறையில் கீழ்ப்படிதல் என்பதாகவே அவர் எழுதியிருக்க வேண்டும். ''ஒழுங்கமைப்புக்காக'' நடைபெறும் இன்றைய, மிகவும் அண்மையதான, நாகரிக நயம் வாய்ந்த போராட்டத்தில் ஏகபோகக் கூட்டுகள் கையாளுகிற முறைகளின் பட்டியலை மட்டுமாவது பார்வையிடுவது பயனுடையதாக இருக்கும்:

1) மூலப்பொருள்களின் சப்ளைகளை நிறுத்துதல் (...''கார்ட்டல்களுடன் ஒத்துப் போகும்படி பலவந்தம் செய்வதற்கான மிக முக்கிய முறைகளில் ஒன்று''); 2) தொழிலாளர்கள் கிடைக்காதபடி ''கூட்டுகள்'' மூலம் நிறுத்துதல் (அதாவது, முதலாளிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களைக் கொண்டு, கார்ட்டலில் இணைந்த நிலையங்களில் மட்டுமே வேலை செய்யத் தொழிற்சங்கங்கள் தங்களுடைய உறுப்பினர்களை அனுமதிக்கச் செய்தல்); 3) வழங்குதலை நிறுத்துதல்; 4) வாணிப வழிகளை அடைத்து மூடுதல்; 5) வாங்குவோருடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு, கார்ட்டல்களுடன் மட்டுமே வியாபாரம் செய்யும்படி வாங்குவோரைக் கட்டுப்படுத்தல்; 6) திட்டமிட்டு விலைகளைக் குறைத்தல் (''வெளியார்'' நிறுவனங்களை, அதாவது, ஏகபோகக்காரர்களுக்குப் பணிய மறுப்பவைகளை இவ்வழியில் நிர்மூலமாக்குதல். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பண்டங்களை அவற்றின் அடக்க விலைக்கும் குறைவான விலைக்கு விற்பதற்கென்று பத்துலட்சக் கணக்கிலான தொகைகள் செலவிடப்படுகின்றன; இவ்விதம் சில சந்தர்ப்பங்களில் பெட்ரோலின் விலை 40 லிருந்து 22 மார்க்குகளாய், அதாவது ஏறத்தாழ ஒன்றுக்குப் பாதியாகக் குறைக்கப்பட்டது!); 7) வங்கிக் கடன் வசதிகளை நிறுத்துதல்; 8) பகிஷ்காரம்.

இங்கு நாம் காண்பது, சிறிய நிலையங்களுக்கும் பெரியவற்றுக்கும், தொழில்நுட்ப வளர்ச்சி பெற்ற நிலையங்களுக்கும் பின்தங்கியவற்றுக்கும் இடையிலான போட்டி அல்ல. ஏகபோகக்காரர்கள் தங்களுக்கும், தங்களது ஆதிக்கத்துக்கும், தங்களது நாட்டாண்மைக்கும் பணியாதவர்களை மென்னியைப் பிடித்து நெரிப்பதையே இங்கு காண்கிறோம். இந்தச் செயல் முறை ஒரு முதலாளித்துவப் பொருளியலாளரின் மனதில் பின்வருமாறு பிரதிபலிக்கப்படுகிறது:

''முழுக்க முழுக்கப் பொருளாதாரத் துறையிலுங்கூடப் பழைய அர்த்தத்திலான வாணிபச் செயற்பாட்டிலிருந்து ஒழுங்கமைப்பு-ஊகவாணிகச் செயற்பாட்டை நோக்கித் ஒரு வகை மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இப்பொழுதெல்லாம் தனது தொழில்நுட்ப, வாணிப அனுபவத்தின் உதவியி

ளுல் ஏனையோரைக் காட்டிலும் வாங்குபவரின் தேவைகளைச் சிறந்த முறையில் மதிப்பிடுகின்ற, மறைந்து கிடக்கும் தேவையைக் கண்டுபிடிக்கவும், இன்னும் சொல்வதெனில் அதை 'வெளிக் கொணரவும்' கூடிய வணிகருக்குப் பெரும் வெற்றி கிடைப்பதில்லை; ஒழுங்கமைப்பின் வளர்ச்சியையும், தனி நிலையங்களுக்கும் வங்கிகளுக்குமிடையிலுள்ள சில தொடர்புகளின் சாத்தியப்பாடுகளையும் மதிப்பிடுவதற்குத் தெரிந்த, அல்லது அதை முன்கூட்டியே உணர்வதற்கு மட்டுமேகூட தெரிந்த ஊக வணிக மேதைக்கு (?!) இவ்வெற்றி உரியதாகி விடுகிறது...'' என்று எழுதுகிருர் கேஸ்ட்னர்.

இதைச் சாதாரணமாக எல்லோருக்கும் புரியக் கூடிய முறையில் மொழிபெயர்த்தால், பண்ட உற்பத்தி இன்னும் ''ஆட்சி புரிந்தாலும்'', பொருளாதார வாழ்வின் அடிப்படையெனத் தொடர்ந்து கருதப்பட்டாலும், அதன் அஸ்திவாரம் உண்மையில் பறிக்கப்பட்டு, லாபங்களில் பெரும் பகுதி நிதித் தில்லுமுல்லுக்கார ''மேதை''களுக்குச் சென்று விடும் ஒரு கட்டத்தை முதலாளித்துவ வளர்ச்சியானது வந்தடைந்துள்ளது என்பதே இதன் அர்த்தம். இந்தத் தில்லுமுல்லுகளுக்கும் மோசடிகளுக்கும் அடிப்படையில் உற்பத்தி, சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தியே அமைந்திருக்கிறது, ஆனுல், இந்தச் சமூகமயமாதலைச் சாதித்த மனித சமூகத்தின் மாபெரும் முன்னேற்றத்தால் ஆதாயமடைவோர்... ஊக வணிகர்களே. ''இந்தக் காரணங்களின் அடிப்படையில்'' எப்படி முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் பிற்போக்குக் குட்டிமுதலாளித்துவ விமர்சகர்கள் ''தடையில்லாத'', ''அமைதியான'', ''நாணயமான'' போட்டிக்குத் திரும்புவது குறித்துக் கனவு காண்கிருர்கள் என்பதைப் பிற்பாடு நாம் காண்போம்.

கேஸ்ட்னர் கூறுகிருர்: ''கார்ட்டல்கள் அமைக்கப்படுவதால் ஏற்படும் நீடித்த விலையேற்றம், மிக முக்கிய உற்பத்திச் சாதனங்கள் சம்பந்தமாகவே, குறிப்பாக நிலக்கரி, இரும்பு, பொட்டாஷியம் ஆகியவை சம்பந்தமாகவே இதுவரை காணப்பட்டுள்ளது, செய்பொருள்கள் சம்பந்தமாகக் காணப்படவே இல்லை. இதே போல, இந்த விலையேற்றத்திலிருந்து

வரப் பெறும் அதிகப்படியான லாபங்கள் உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்கிற தொழில்களுக்கு மட்டுமே உரியனவாக நின்றுவிடுகின்றன. இந்தக் கருத்துடன் கீழ்க் கண்டதையும் நாம் சேர்க்க வேண்டும்: மூலப் பொருள்களை (அரைகுறைச் செய்பொருள்களையல்ல) பதனிடும் தொழில்களில் கார்ட்டல்கள் அமைக்கப்படுவதனுல், இறுதிச் செய்பொருள் உற்பத்தித் தொழில்களுக்குப் பாதகமாக, உயர்ந்த லாபங்களின் வடிவில் அனுகூலங்கள் பெறுவது மட்டுமின்றி, இறுதிச் செய்பொருள் உற்பத்தித் தொழில்களின் மேல் **ஆதிக்க நிலையையும்** பெற்றுக் கொண்டுவிடுகின்றன. இது தடையில் லாப் போட்டியின்கீழ் இருந்திராத ஒன்ருகும்.''*

நாம் அழுத்தமளித்துக் காட்டியுள்ள சொற்கள் இந்த விவகாரத்தின் சாரப் பொருளை வெளிப்படுத்துகின்றன. இந்தச் சாரப் பொருளை முதலாளித்துவப் பொருளியலாளர்கள் மிகுந்த தயக்கத்துடனும் மிக அரிதாகவுமே ஏற்றுக்கொள்கிருர்கள், காவுத்ஸ்கியின் தலைமையில் சந்தர்ப்பவாதத்தின் இன்றைய காவலர்களாக இருப்போர் இதைத் தட்டிக் கழிக்கவும் ஒதுக்கித் தள்ளவும் அத்தனை ஆவலுடன் முயல்கிருர்கள். ஆதிக்கமும் அதனுடன் இணைந்த வன்முறையும்தான் ''முதலாளித்துவ வளர்ச்சியின் நவீன கட்டத்தின்'' இனமாதிரியான உறவுகளாகத் திகழ்கின்றன. சர்வ சக்தி படைத்த பொருளாதார ஏகபோகங்கள் உருவானதால் தவிர்க்க முடியாதபடி விளையக் கூடியதும், விளைந்திருப்பதும் இதுவேதான்.

கார்ட்டல்கள் கையாளும் முறைகளுக்கு இன்னுமோர் உதாரணம் தருகிறேன். எங்கு மூலப் பொருள்களின் ஆதாரங்கள் யாவற்றையுமோ, பிரதானமானவற்றையோ கைப்பற்றிக் கொள்வது சாத்தியமாகிறதோ, அங்கே கார்ட்டல்களின் உதயமும் ஏகபோகங்கள் உருவாதலும் மிகவும் சுலபம்தான். ஆனுல் மூலப் பொருள்களின் ஆதாரங்களைக் கைக்குள் அடக்கிக் கொள்வது சாத்தியமில்லாத இதரத் தொழில்களில் ஏகபோகங்கள் தோன்றுவதில்லையெனக் கொள்வது தவருகும். உதாரணமாக, சிமெண்டுத் தொழில் தனக்கு

---

* கேஸ்ட்னர், மேற் குறிப்பிட்ட நூல், பக்கம் 254.

வேண்டிய மூலப் பொருள்களை எங்கும் பெற முடியும். ஆயினும் ஜெர்மனியில் இந்தத் தொழில் பலமாகக் கார்ட்டல்மயமாக் கப்பட்டுள்ளது. சிமெண்டு உற்பத்தியாளர்கள் மண்டலச் சிண்டிக்கேட்டுகளை அமைத்திருக்கிறார்கள்: தெற்கு ஜெர் மன் சிண்டிக்கேட்டு, ரைன் வெஸ்ட்ஃபாலிய சிண்டிக்கேட்டு, முதலியவை. நிர்ணயிக்கப்பட்ட விலைகள் ஏகபோக விலைகள்: ஒரு ரயில் வாகன் சிமெண்டின் அடக்கவிலை 180 மார்க்கு களாய் இருக்கிற பொழுது, அதன் விற்பனை விலை 230 முதல் 280 மர்க்குகள்! இந்தத் தொழில் நிலையங்கள் 12லிருந்து 16 சதவிகிதம் வரையிலான லாப ஈவு கொடுக்கின்றன. லாப ஈவுகளின் மூலம் பெறுவதை அன்னியில் பெருத்த லாபங் களையும் மூட்டை கட்டிக் கொள்ளத் தெரிந்தவர்கள் இந்த நவீன ஊகவணிக "மேதைகள்" என்பதை மறந்துவிடக் கூடாது. இப்படிப்பட்ட லாபகரமான தொழிலில் போட்டி யைத் தடுப்பதற்காக ஏகபோகக்காரர்கள் பற்பல தந்திரங் களையும் கையாளுகிறார்கள்: தங்களது தொழிலில் நிலைமை மோசமாக இருப்பதாகப் பொய்யான வதந்திகளைப் பரப்பு கிறார்கள்; கீழ்க்கண்டவாறு, அநாமதேயமான எச்சரிக்கை கள் செய்தியேடுகளில் வெளியிடப்படுகின்றன: "முதலாளி களே, சிமெண்டுத் தொழிலில் உங்கள் மூலதனத்தைப் போடாதீர்கள்!"; கடைசியாக, "வெளியார்களின்" (சிண்டிக் கேட்டுகளில் சேராத) நிலையங்களை விலைக்கு வாங்கி அவர் களுக்கு 60,000, 80,000, ஏன் 1,50,000 மார்க்குங்கூட "இழப்பீடு" தருகிறார்கள்.* "மிதமான" தொகை கொ டுத்துப் போட்டித் தொழில் நிலையங்களை வாங்கிக் கைப்பற்று வது முதல், அவற்றுக்கு வேட்டு "வைத்திடும்" அமெரிக்க முறை வரை, வழிமுறைகள் குறித்துக் கவலைப்படாமல் எவ் வழியையும் கையாண்டு ஏகபோகமானது எங்கும் தனக்குப் பாதை வகுத்துக் கொள்கிறது.

கார்ட்டல்களால் நெருக்கடிகளை இல்லாது ஒழித்துவிட முடியும் என்ற பேச்சு, முதலாளித்துவப் பொருளியலாளர்

* L. Eschwege, „Zement“ in *Die Bank*,[16] 1909, 1, பக்கங் கள் 115உம் அடுத்தவையும், (**வங்கி** என்ற சஞ்சிகையில் லூ. எஷ்வேகெ, "சிமெண்டு".—**ப-ர்.**).

கள் பரப்பி வரும் ஒரு கட்டுக்கதை, முதலாளித்துவத்தை எப்படியேனும் அனுகூலமானதாகக் காட்ட வேண்டுமென விரும்புகிறவர்கள் இவர்கள். நெருக்கடிகளை ஒழிப்பதற்கு நேர் மாருக, சில தொழிற் கிளைகளில் உருவாக்கப்பட்டிருக்கும் ஏகபோகமானது முதலாளித்துவ உற்பத்தி அனைத்துக்கும் உள்ளியல்பான அராஜகத்தை அதிகரிக்கவும் கடுமையாக்கவுமே செய்கிறது. விவசாய வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் உள்ள ஏற்றத்தாழ்வு, பொதுவாக முதலாளித்துவத்துக்குரிய தனியியல்பாகிய இந்த ஏற்றத்தாழ்வு அதிகமாக்கப்படுகிறது. மிக அதிகமாகக் கார்ட்டல்மயமாக்கப்பட்ட கன இயந்திரத் தொழில் எனப்படுவதற்கு இருந்து வரும், முக்கியமாக நிலக்கரி, இரும்புத் தொழில்களுக்கு இருந்து வரும் சலுகைமிக்க நிலையானது தொழில் துறையின் ஏனைய கிளைகளில் ''மேலும் அதிகமான ஒத்திசைவின்மையையே'' உண்டாக்குகிறது—இதை, ''பெரிய ஜெர்மன் வங்கிகளுக்கும் தொழில் துறைக்குமுள்ள உறவு முறை'' பற்றிய சிறந்த நூல்களில் ஒன்றின் ஆசிரியராகிய எய்டல்ஸ் ஒப்புக்கொள்ளுகிருர்.*

''பொருளாதார அமைப்பு எவ்வளவுக்கு எவ்வளவு அதிக வளர்ச்சி பெற்றதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக அது அபாயகரமான தொழில் முனைப்புகளில் அல்லது பிற நாடுகளிலான தொழில் முனைப்புகளில், வளருவதற்கு அதிக காலம் தேவைப்படுகிறவைகளில், அல்லது இறுதியில் ஓர் இடத்திற்கு மட்டுமே முக்கியமானவைகளில், இறங்குகிறது'' என்று கூச்சம் சிறிதுமின்றி முதலாளித்துவத்துக்காகப் பரிந்து பேசும் லீஃப்மன் எழுதுகிருர்.** கூடுதலாகிச் செல்லும் அபாயமானது, முடிவில் மூலதனத்தின் அபரிமித அதிகரிப்புடன் இணைந்ததாகும், மூலதன

---

* Jeidels, *Das Verhältnis der deutschen Grossbanken zur Industrie mit besonderer Berücksichtigung der Eisenindustrie*, Lpz., 1905, பக்கம் 271 (எய்டல்ஸ், ''பெரிய ஜெர்மன் வங்கிகளுக்குத் தொழில் துறையோடும், முக்கியமாய் இரும்புத் தொழிலோடும் இருக்கும் உறவுமுறை'', லைப்ஸிக்.—ப-ர்.).

** Liefmann, *Beteiligungs- etc*, *Ges.*, பக்கம் 434.

மானது விளிம்பு வரை நிறம்பி மேலும் அதிகரித்து வழிகிறது, வெளிநாடுகளுக்கு ஓடுகிறது என்றும் இன்ன பலவாறும் சொல்லலாம். அதே சமயத்தில், தொழில் நுட்ப முன்னேற்றத்தின் மிதமிஞ்சிய துரித வேகமானது தேசப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வுக்கும், மற்றும் அராஜகத்துக்கும் நெருக் கடிகளுக்குமான கூறுகளை மேலும் மேலும் அதிகமாகத் தோற்றுவிக்கிறது. லீஃப்மன் பின்வருமாறு ஒப்புக் கொள்ள வேண்டியதாகிறது: ''பெரிதும் நிகழக் கூடியது என்னவெ னில், பொருளாதார அமைப்பின் ஒழுங்கினை மேலும் பாதிக் கும் இன்னும் பல முக்கிய தொழில்நுட்பப் புரட்சிகளை மனித குலம் கூடிய சீக்கிரத்தில் காணப் போகிறது''... மின்விசை, விமானப் போக்குவரத்து... ''தீவிரப் பொருளாதார மாறு தல் ஏற்படும் இம்மாதிரியான காலங்களில் பொது விதியாக ஊகவாணிபம் பெரிய அளவில் வளரவே செய்யும்''....*

எல்லா வகையான நெருக்கடிகளும்—மிகப் பெரும் பாலும் பொருளாதார நெருக்கடிகள், ஆனல் இவை மட்டு மல்ல—உற்பத்தி ஒன்றுகுவிப்பும் ஏகபோகமும் வளர்ந்திடும் போக்கை மேலும் வெகுவாய் அதிகரிக்கச் செய்கின்றன. இது சம்பந்தமாக, நாம் ஏற்கனவே கண்டபடி, நவீன ஏக போகத்தின் வரலாற்றில் ஒரு திரும்பு முனையைக் குறித்த 1900ஆம் ஆண்டு நெருக்கடியினது குறிப்பொருள் முக்கியத் துவம் குறித்து எய்டல்ஸின் கீழ்க்கண்ட கருத்துகள் பெரிதும் படிப்பினை அளிப்பவை:

''1900ஆம் ஆண்டு நெருக்கடியானது அடிப்படைத் தொழிற் கிளைகளைச் சேர்ந்த பிரம்மாண்டத் தொழில் நிலையங் களுடன் கூடவே, இன்று காலங்கடந்தனவாகக் கருதப்படக் கூடிய வழிகளில் ஒழுங்கமையப் பெற்ற 'தூய' (இணைவு பெருத) தொழில் நிலையங்களும் இருக்கக் கண்டது. தொழில் துறையின் உயர்வேற்றத்தின் போது தோன்றியவை இந் நிலையங்கள். விலைகளின் வீழ்ச்சியும் தேவையின் சரிவும் இந்தத் 'தூய' நிலையங்களை இக்கட்டான நிலையில் இருத்தின,

---

* Liefmann, *Beteiligungs- etc. Ges.*, பக்கங்கள் 465-466.

ஆனால் இணைவு பெற்ற பிரம்மாண்ட நிலையங்கள் பாதிக்கப் படவே இல்லை, அல்லது சொற்ப காலத்துக்கே பாதிக்கப் பட்டன. இதன் விளைவாய், 1900ஆம் ஆண்டு நெருக்கடி யானது 1873ஆம் ஆண்டு நெருக்கடியைக் காட்டிலும், தொழில் துறையில் அதிக அளவுக்கு ஒன்றுகுவிப்பை உண் டாக்கியது. பிந்திய நெருக்கடியும் சிறந்த சாதனங்களை யுடைய நிலையங்களுக்கான ஒருவித தேர்வு நடந்தேறச் செய் தது, ஆனால் அக்காலத்துத் தொழில்நுட்ப வளர்ச்சியினது நிலையின் காரணமாக, இந்தத் தேர்வு நெருக்கடியிலிருந்து வெற்றிகரமாக வெளிவந்த நிலையங்களை ஏகபோக நிலையில் அமர்த்த முடியவில்லை. நிலைபேறுடைய இத்தகைய ஏகபோ கம், நவீன இரும்பு, எஃகு, மின்சாரத் தொழில்களைச் சேர்ந்த ராக்ஷஸ நிலையங்களில் அவற்றின் சிக்கலான தொழில்நுட் பம், விரிந்த செயலுக்குரிய ஒழுங்கமைப்பு, முதலின் பரிமா ணம் ஆகியவை காரணமாகப் பெரிய அளவிலும், பொறி யியல் தொழிலிலும் உலோகத் தொழிலின் சில கிளைகளிலும் போக்குவரத்திலும் மற்றும் சிலவற்றிலும் சற்று குறைவான அளவிலும் நிலவுகிறது.''*

ஏகபோகம்—''முதலாளித்துவ வளர்ச்சியின் மிக அண் மைய கட்டத்தில்'' இதுவேதான் இறுதி முடிவாய்க் கூறக் கூடிய சொல். ஆனால் வங்கிகள் ஆற்றும் பங்கை நாம் கணக் கில் எடுத்துக் கொள்ளாவிடில் தற்காலத்திய ஏகபோகங் களுக்குள்ள மெய்யான சக்தியும் முக்கியத்துவமும் குறித்து நாம் நிறைவில்லாத, பற்றுக்குறையான, குறைபாடான கருத் தோட்டம் கொண்டவர்களாகவே இருப்போம்.

## 2. வங்கிகளும் அவை ஆற்றும் புதிய பங்கும்

பணச் செலுத்தல்கள் நடந்தேறுகையில் இடைத் தர கராகச் செயல்படுவதே வங்கிகள் ஆற்றும் தலையாய, முத னிலையான பணி. இந்தப் பணியைச் செய்து இவை செயலற்ற

* Jeidels, பக்கம் 108.

மூலதனத்தைச் செயல் முனைப்புள்ள, அதாவது லாபமளிக்கும் மூலதனமாக மாற்றுகின்றன; சகல விதமான பண வருமானங்களையும் அவை வசூலித்து அவற்றை முதலாளித்துவ வர்க்கத்தின் கையில் ஒப்படைக்கின்றன.

வங்கித் தொழில் வளர்ந்து சிறிய எண்ணிக்கையிலான நிறுவனங்களில் ஒன்றுகுவியும் போது, வங்கிகள் சாமான்ய இடைத் தரகரின் நிலையிலிருந்து வளர்ந்து சக்திவாய்ந்த ஏகபோகங்களாகி, எல்லா முதலாளிகள் வசமும் சிறு தொழில், வாணிபப் துறையினர் வசமுமுள்ள பண மூலதனத்தில் அனேகமாய் அனைத்தையும், மற்றும் குறிப்பிட்ட ஒரு நாட்டிலும் மற்றும் பல நாடுகளிலுமுள்ள உற்பத்திச் சாதனங்கள், மூலப் பொருள் ஆதாரங்களில் பெரும் பகுதியையும் தங்களது பிடிக்குள் கொண்டனவாகிவிடுகின்றன. எண்ணிறந்த சாமான்ய இடைத் தரகர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய சொற்ப ஏகபோக்காரர்களாக இப்படி மாற்றம் பெறுவது, முதலாளித்துவமானது முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக வளர்வதன் அடிப்படையான நிகழ்ச்சிப் போக்குகளில் ஒன்றாகும். ஆகவே வங்கித் தொழிலின் ஒன்றுகுவிப்பு குறித்து யாவற்றுக்கும் முதலாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

1907-08ல், ஒவ்வொன்றும் பத்து லட்சம் மார்க்குக்கு அதிகமான மூலதனத்தைக் கொண்ட ஜெர்மன் கூட்டுப் பங்கு வங்கிகளிடம் மொத்தம் 700 கோடி மார்க்கு வைப்புத் தொகைகள் (deposits) இருந்தன. 1912-13ல் இந்த வைப்புகள் ஏற்கனவே 980 கோடி மார்க்காக உயர்ந்துவிட்டன. ஐந்து ஆண்டுகளில் 40 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டது. அதிகரிப்புத் தொகையாகிய இந்த 280 கோடியில், 275 கோடி தலைக்கு 1 கோடி மார்க்குக்கு அதிகமான மூலதனத்தையுடைய 57 வங்கிகளிடையே பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. பெரிய, சிறிய வங்கிகளிடையே வைப்புத் தொகைகளின் வினியோகம் வருமாறு:*

* Alfred Lansburgh "Fünf Jahre d. Bankwesen" in *Die Bank*, 1913, இதழ் 8, பக்கம் 728 (ஆல்ப்ரட் லன்ஸ்பர்க், ''ஜெர்மன் வங்கித் தொழிலின் ஐந்தாண்டுகள்'', வங்கி என்ற சஞ்சிகையில்.—ப-ர்.).

மொத்த வைப்புகளின் சதவிகிதம்

| | 9 பெரிய பெர்லின் வங்கிகளில் | 1 கோடி மார்க்குக்கு மேல் மூலதனமுடைய இதர 48 வங்கிகளில் | 10 லட்சத்திலிருந்து 1 கோடி மார்க் வரை மூலதனமுடைய 115 வங்கிகளில் | (10 லட்சம் மார்க்குக் குக் குறைவான மூலதன முடைய) சிறிய வங்கி களில் |
|---|---|---|---|---|
| *1907-08* | *47* | *32.5* | *16.5* | *4* |
| *1912-13* | *49* | *36* | *12* | *3* |

சிறிய வங்கிகள் பெரிய வங்கிகளால் நெரிக்கப்படுகின்றன; ஒன்பதே ஒன்பது பெரிய வங்கிகளின் கைக்குள் மொத்த வைப்புகளில் கிட்டத்தட்ட சரி பாதியானவை ஒன்றுகுவிந்திருக்கின்றன. ஆனால் பல முக்கியமான விவரங்களை, உதாரணமாக மிகப் பல சிறிய வங்கிகள் மெய் நடப்பில் பெரிய வங்கிகளின் கிளைகளாக மாற்றப்பட்டிருப்பது போன்ற பல விவரங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் நாம் விட்டிருக்கிறோம். இதைப் பற்றிப் பிற்பாடு நான் கூறுவேன்.

1913ன் இறுதியில், மொத்தம் இருந்த வைப்புகளாகிய சுமார் 1,000 கோடி மார்க்கில் 510 கோடி மார்க்கு ஒன்பது பெரிய பெர்லின் வங்கிகளிடம் இருந்தவை என்று ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் மதிப்பிட்டார். வைப்புகளை மட்டுமின்றி, மொத்த வங்கி மூலதனத்தையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, இந்த ஆசிரியர் எழுதினார்: ''1909ஆம் ஆண்டின் இறுதியில் ஒன்பது பெரிய பெர்லின் வங்கிகள், அவற்றுடன் இணைக்கப்பட்ட வங்கிகளையும் சேர்த்து, 1,130 கோடி மார்க்குக்கு மேல், அதாவது மொத்த ஜெர்மன் வங்கி மூலதனத்தில்

சுமார் 83 சதவிகிதத்தை தமது பிடிக்குள் கொண்டிருந்தன. இணைக்கப்பட்ட வங்கிகளையும் சேர்த்து ஏறத்தாழ 300 கோடி மார்க்கைத் தன் பிடிக்குள் வைத்திருக்கும் ஜெர்மனியின் *Deutsche Bank*, பிரஷ்ய அரசாங்க ரயில்வே நிர்வாகத்துக்குச் சமமாய், பழைய உலகத்தின் மிகப் பெரியதும், மையத்துவமின்றி மிகவும் விரவியமைந்துமான மூலதனத் திரட்டலாக விளங்குகிறது.''*

''இணைக்கப்பட்ட'' வங்கிகளைப் பற்றிய குறிப்பை நான் அழுத்தமிட்டுக் காட்டியுள்ளேன், ஏனெனில் இது நவீன முதலாளித்துவ ஒன்றுகுவிப்பின் முக்கிய தனி இயல்புகளில் ஒன்றாகும். பெரிய நிலையங்கள், குறிப்பாக வங்கிகள், சிறியனவற்றை நேரடியாக உட்கிரகித்துக் கொள்ளுவது மட்டுமன்றி, அவற்றைப் ''பிடித்துச் சேர்த்துக் கொள்ளவும்'', அவற்றைக் கீழ்ப்படுத்திக் கொள்ளவும், அவற்றைத் தமது ''சொந்தத்'' தொகுதிக்குள், அல்லது (இதற்குரிய வினைநுட்பச் சொல்லில் சொல்வதெனில்) ''தொழில் நிறுவனத்துள்'' கொண்டு வரவும் செய்கின்றன—அவற்றின் மூலதனத்தில் ''ஓல்டிங்குகள்'' பெறுதல், பங்குகள் வாங்குதல் அல்லது பரிவர்த்தனை செய்துகொள்ளுதல், கடன் அளிப்பு முறை முதலான பல வழிகளிலும் இது செய்யப்படுகிறது. தற்கால ''ஓல்டிங் கம்பெனிகளையும் நிதிக் கம்பெனிகளையும்''** விவரித்து சுமார் 500 பக்கங்கள் கொண்ட பருத்த ''நூல்'' ஒன்றைப் பேராசிரியர் லீஃப்மன் இயற்றியிருக்கிறார்—துரதிர்ஷ்டவசமாகப் பல சந்தர்பங்களிலும் சீரணித்துக் கிரகிக்கப்படாத மூல விவரப் பொருளுடன் ஊசலாட்டமான ''தத்துவார்த்தச்'' சிந்தனைகளையும் சேர்த்தளிக்கின்றார்.

---

* Schulze-Gaevernitz, „Die deutsche Kreditbank", *Grundriss der Sozialökonomik*, Tübingen, 1915, பக்கங்கள் 12, 137. (ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், ''ஜெர்மானியக் கிரெடிட் வங்கி'' சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படைகள் என்பதில், டியூபிங்கன்.—ப-ர்.).

** R. Liefmann, *Beteiligungs-und Finanzierungsgesellschaften. Eine Studie über den modernen Kapitalismus und das Effektenwesen*. 1. Aufl., Jena, 1909, பக்கம் 212.

Deutsche Bankக்கு ஓல்டிங்குகள் உள்ளன:

| | நேரடியான, அல்லது முதற் படி சார்பு நிலை | இரண்டாம் படி சார்பு நிலை | மூன்றும் படி சார்பு நிலை |
|---|---|---|---|
| நிரந்தரமானவை | 17 பிற வங்கிகளில் | இந்தப் 17ல் 9க்கு 34பிற வங்கிகளில் ஓல்டிங்குகள் உள்ளன | இந்த 9ல் 4க்கு 7 பிற வங்கிகளில் ஓல்டிங்குகள் உள்ளன |
| திட்டவட்டமாகக் குறிக்கப்படாத காலத்திற்கு | 5 பிற வங்கிகளில் | — | — |
| சிற்சில சமயங்களில் | 8 பிற வங்கிகளில் | இந்த 8ல் 5க்கு 14 பிற வங்கிகளில் ஓல்டிங்குகள் உள்ளன | இந்த 5ல் 2க்கு 2 பிற வங்கிகளில் ஓல்டிங்குகள் உள்ளன |
| மொத்தம்: | 30 பிற வங்கிகளில் | இந்த 30ல் 14க்கு 48 பிற வங்கிகளில் ஓட்டிங்குகள் உள்ளன | இந்த 14ல் 6க்கு 9 பிற வங்கிகளில் ஓல்டிங்குகள் உள்ளன |

REFERENCE



இந்த ''ஒல்டிங்'' முறையானது ஒன்றுகுவிப்பு சம்பந்தமாக உண்டாக்கும் விளைவுகள் என்னவென்பதற்கு, பெரிய ஜெர்மன் வங்கிகள் குறித்துத் தாமே வங்கித் ''தொழிலதிபராகிய'' ரீசர் என்பவர் எழுதியிருக்கும் புத்தகம் சிறந்த விளக்கமாக அமைகிறது. அவர் அளிக்கும் புள்ளிவிவரங்களைப் பரிசீலனை செய்வதற்கு முன்பு, ''ஒல்டிங்'' முறைக்கு ஸ்தூலமான ஓர் உதாரணத்தை எடுத்துரைப்போம்.

Deutsche Bank ''தொகுப்பு'' பெரிய வங்கித் தொகுப்புகளிலே ஆகப் பெரிதாக இல்லாவிட்டாலும், மிகப் பெரியவற்றுள் ஒன்றாகும். இந்தத் தொகுப்பைச் சேர்ந்த எல்லா வங்கிகளையும் இணைக்கும் முக்கிய இழைகளைக் கண்டு கொள்ளும் பொருட்டு, ஒல்டிங்குகளை முதற் படி, இரண்டாம் படி, மூன்றாம் படி ஆகிய மூன்று வகைகளாக வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்; அல்லது இதையே வேறுவிதமாகக் கூறினால், (Deutsche Bankஐச் சிறிய வங்கிகள்) சார்ந்திருக்கும் நிலையை முதற் படி, இரண்டாம் படி, மூன்றாம் படி ஆகிய மூன்று படித் தரங்களாக வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது பக்கம் 50ல் காணப்படும் சித்திரம் நமக்குக் கிடைக்கிறது.*

339161
335.43 LEN

Deutsche Bankயிடம் ''சிற்சில சமயங்களில்'' ''முதற் படி'' சார்பு நிலை கொண்டிருக்கும் எட்டு வங்கிகளில் மூன்று அயல் நாட்டு வங்கிகளும் அடங்கியுள்ளன: ஒன்று ஆஸ்திரியாவைச் சேர்ந்தது (வியன்னாவிலுள்ள Wiener Bankverein), இரண்டு ருஷ்யாவைச் சேர்ந்தவை (''சைபீரிய வர்த்தக வங்கி'', ''வெளிநாட்டு வர்த்தகத்திற்கான ருஷ்ய வங்கி''). Deutsche Bankஇன் தொகுப்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும், அரைகுறையாகவும் முழுநிறைவாகவும் மொத்தம் 87 வங்கிகள் அடங்கியிருக்கின்றன; மொத்த மூலதனம்—அதற்குச் சொந்தமானதும் அதன் பிடியிலுள்ள பிற வங்கிகளுக்குச்

* Alfred Lansburgh, „Das Beteiligungssystem im deutschen Bankwesen“ in *Die Bank*, 1910, 1, பக்கம் 500 (ஆல்ஃபிரேட் லன்ஸ்பர்க், ''ஜெர்மன் வங்கித் தொழிலில் 'ஒல்டிங்' முறை'', **வங்கி** என்ற சஞ்சிகையில்.—**ப-ர்.**).



CONNEMARA PUBLIC LIBRARY

சொந்தமானவையும் அடங்கலாய்—இருநூறு கோடி மார்க்கிலிருந்து முந்நூறு கோடி மார்க்கு வரை இருக்கு மென மதிப்பிடப்படுகிறது.

இத்தகைய ஒரு தொகுப்பின் தலைமையில் அமைந்து, அரசாங்கக் கடன்களைத் திரட்டுவது போன்ற மிகப் பெரிய, லாபகரமான நிதிச் செயற்பாடுகளில் ஈடுபடும் பொருட்டுத் தன்னிலும் சற்றே சிறியவையான அரைடஜன் இதர வங்கி களுடன் உடன்பாடு செய்து கொள்ளும் ஒரு வங்கி, "இடைத் தரகரின்" பாத்திரத்தைக் கடந்து வளர்ந்து விட்டதாகும், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில ஏகபோகக்காரர்களது கூட்டாக உருவாகிவிட்டதாகும் என்பது தெளிவாகவே விளங்குகிறது.

பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றூண்டின் ஆரம்பத்திலும் ஜெர்மனியில் வங்கித் தொழி லின் ஒன்றுகுவிப்பு எவ்வளவு துரிதமாக நடந்தேறியது என்பதை, ரீசரின் புத்தகத்திலிருந்து நாம் சுருக்கமான வடி வில் எடுத்தளிக்கும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

ஆறு பெரிய பெர்லின் வங்கிகள்

| ஆண்டு | ஜெர்மனியில் கிளைகள் | வைப்புத் தொகை வங்கிகளும் நாணய மாற்று அலுவலகங்களும் | ஜெர்மன் கூட்டுப் பங்கு வங்கிகளில் நிரந்தர ஈடுபாடுகள் | மொத்த ஸ்தாபனங்கள் |
|---|---|---|---|---|
| *1895* | *16* | *14* | *1* | *42* |
| *1900* | *21* | *40* | *8* | *80* |
| *1911* | *104* | *276* | *63* | *450* |

நாடு முழுவதிலும் பரந்தமைந்த கால்வாய்களது நெருங்கிய வலைப்பின்னல் அமைப்பு அதிவேகமாய் விரிவடைந்து, எல்லா மூலதனத்தையும் எல்லா வருவாய்களையும் மையப்படுத்தி, சிதறுண்ட ஆயிரமாயிரம் பொருளாதார நிலையங்களை ஒருமித்த தேசிய முதலாளித்துவப் பொருளாதாரமாகவும், பிறகு உலக முதலாளித்துவப் பொருளாதாரமாகவும் மாற்றமுறச் செய்வதைப் பார்க்கிறோம். இன்றைய முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத்தின் விரிவுரையாளராய் ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் மேலே நாம் மேற்கோளாய் அளித்த வாசகத்தில் கூறும் ''மையத்துவமின்றி விரவியமைந்த'' நிலையானது, முன்பு ஒப்பளவில் ''சுயேச்சையானவையாக'', அல்லது இன்னும் துல்லியமாகச் சொல்வதெனில் முற்றிலும் ஸ்தல வரம்புக்குள் அடங்கிய, மேலும் மேலும் கூடுதலான பொருளாதார அலகுகளை ஒரே மையத்திற்குக் கீழ்ப்படச் செய்வதையே உண்மையில் குறிப்பிடுவதாக இருக்கிறது. எதார்த்தத்தில் இது மையத்துவமே ஆகும், ராக்ஷஸ ஏகபோகங்களது பாத்திரத்தையும் முக்கியத்துவத்தையும் அதிகார வலிமையையும் ஓங்கச் செய்வதே ஆகும்.

பழைய முதலாளித்துவ நாடுகளில் இந்த ''வங்கி வலைப்பின்னல் அமைப்பு'' மேலும் அதிக நெருக்கமாக இருக்கிறது. கிரேட் பிரிட்டனிலும் அயர்லாந்திலும் 1910ல், மொத்தம் 7,151 வங்கிக் கிளைகள் இருந்தன. நான்கு பெரிய வங்கிகள் தலைக்கு 400 கிளைகளுக்கும் அதிகமாக (447 முதல் 689 வரை) பெற்றிருந்தன; நான்கு வங்கிகள் தலைக்கு 200 கிளைகளுக்கும் அதிகமாகவும், பதினொரு வங்கிகள் தலைக்கு 100 கிளைகளுக்கு அதிகமாகவும் பெற்றிருந்தன.

பிரான்சில், மூன்று மிகப் பெரிய வங்கிகள், Crédit Lyonnais, Comptoir National, Société Générale ஆகியவை, தங்களது நடவடிக்கைகளையும், கிளைகளின் வலைப்பின்னல் அமைப்பையும் கீழ்க்கண்டவாறு விரிவுபடுத்திக் கொண்டன:*

* Eugen Kaufmann, *Das französische Bankwesen*, Tübingen, 1911, பக்கங்கள் 356, 362 (ஒய்கென் கௌப்மன், ''பிரெஞ்சு வங்கி அமைப்பு'', டியூபிங்கன்.—ப-ர்.).

| | கிளைகள், அலுவலகங் களின் எண்ணிக்கை | | | மூலதனம் கோடி பிராங்குகளில் | |
|---|---|---|---|---|---|
| | மாநிலங்களில் | பாரிஸில் | மொத்தம் | சொந்த மூலதனம் | மூலதனமாக உபயோகிக்கப் பட்ட வைப்புத் தொகைகள் |
| 1870 | 47 | 17 | 64 | 20 | 42.7 |
| 1890 | 192 | 66 | 258 | 26.5 | 124.5 |
| 1909 | 1,033 | 196 | 1,229 | 88.7 | 436.3 |

ஒரு பெரிய நவீன வங்கியின் ''தொடர்புகளைக்'' காட்டும் பொருட்டு Disconto-Gesellschaft *[டிஸ்கவுண்டு நிறுவனம்]* என்ற வங்கியினுல் அனுப்பப்பட்ட கடிதங்கள், அதற்கு வந்த கடிதங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை பற்றிய கீழ்க்கண்ட புள்ளிவிவரங்களை ரீசர் தருகிருர்; இது ஜெர்மனியின், மற்றும் உலகின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்ருகும் (1914ல் இதன் மூலதனம்: 30 கோடி மார்க்கு):

| | வரப்பெற்ற கடிதங்கள் | அனுப்பப்பட்ட கடிதங்கள் |
|---|---|---|
| 1852 . . . . . | 6,135 | 6,292 |
| 1870 . . . . . | 85,800 | 87,513 |
| 1900 . . . . . | 5,33,102 | 6,26,043 |

''லியோன் கிரெடிட்'' என்ற பெரிய பாரிஸ் வங்கியில் கணக்கு வைத்திருந்தோரின் எண்ணிக்கை 1875ல் 28,535 ஆக இருந்தது, 1912ல் 6,33,539 ஆக உயர்ந்தது.*

மூலதனத்தின் ஒன்றுகுவிப்பும் வங்கிகளுடைய மொத்தக் கொடுக்கல் வாங்கல்களினி வளர்ச்சியும் வங்கிகளது குறிப்

* Jean Lescure, *L'épargne en France*, Paris, 1914, பக்கம் 52 (ஜான் லெஸ்கியூர். ''பிரான்சில் சேமிப்புகள்'', பாரிஸ். —ப-ர்.).

பொருள் முக்கியத்துவத்தை எப்படி அடியோடு மாற்றி வருகின்றன என்பதை நீண்ட விளக்கங்களைக் காட்டிலும் மேற்கூறிய இந்த எளிய புள்ளிவிவரங்களே மிகத் தெளிவாகக் காட்டுகின்றன எனலாம். சிதறியமைந்த முதலாளிகள் ஒருமித்த கூட்டு முதலாளியாக மாற்றம் பெறுகிறார்கள். வங்கியானது ஒருசில முதலாளிகளது நடப்புக் கணக்குகளை நிர்வகித்து வந்தபோது, முற்றிலும் வினைநுட்பத் தன்மையதான, உதவுவதாக மட்டுமே அமைந்த செயலையே புரிந்து வந்தது. ஆனால் இந்தச் செயற்பாடு பிரம்மாண்ட பரிமாணங்களுக்கு வளரும் போது, சொற்ப சில ஏகபோகக்காரர்கள் முதலாளித்துவ சமுதாயம் அனைத்தின் வாணிபத் துறை, தொழில் துறை ஆகிய இரண்டின் செயற்பாடுகளையும் தமது சித்தத்துக்குக் கீழ்ப்படிய வைக்கக் காண்கிறோம். இவர்கள், தங்களது வங்கித் தொழிலின் மூலமான தொடர்புகள் வாயிலாகவும் நடப்புக் கணக்குகள் வாயிலாகவும் ஏனைய நிதிச் செயற்பாடுகள் வாயிலாகவும் பல்வேறு முதலாளிகளின் நிதி நிலைமையை முதற்கண், கறாராகத் தெரிந்து கொள்ளவும், பிறகு அவர்களைக் கட்டுப்படுத்தவும், கடன் வசதிகளைச் சுருக்கியோ பெருக்கியோ, எளிதில் கிடைக்கச் செய்தோ கிடைக்காதபடி இடையூறு செய்தோ அவர்களைத் தங்களது செல்வாக்கின் கீழ் கொண்டு வரவும், முடிவில் முழு அளவுக்குத் தாமே அவர்களது கதியைத் தீர்மானிக்கவும் அவர்களது வருவாயை நிர்ணயிக்கவும், அவர்களுக்கு மூலதனம் இல்லாதபடிச் செய்யவும், அல்லது அவர்களது மூலதனம் விரைவாகப் பிரம்மாண்ட பரிமாணங்களுக்கு அதிகரிக்க அனுமதிக்கவும், இன்ன பலவும் செய்யவும் முடிகிறது.

பெர்லின் Disconto-Gesellschaft வங்கியின் 30கோடி மார்க்கு மூலதனத்தைப் பற்றி சற்று முன்பு குறிப்பிட்டோம். இவ்வங்கியினது மூலதனம் கண்ட இந்த வளர்ச்சியானது, Deutsche Bankஉம் Disconto-Gesellschaft வங்கியும் ஆகிய இவ்விரு மிகப் பெரிய பெர்லின் வங்கிகளுக்கிடையில் மேலாதிக்கத்துக்காக நடைபெற்ற போராட்டத்தின் நிகழ்வுகளில் ஒன்றாகும். 1870ல் முதலாவது வங்கி ஒரு கற்றுக்குட்டியாகவே இருந்தது, அப்போது அதன் மூலதனம் 1 கோடியே 50 லட்

சம் மார்க்குதான், ஆனால் இரண்டாவது வங்கியின் மூலதனம் 3 கோடி மார்க். 1908ல் முதலாவதன் மூலதனம் 20 கோடி, இரண்டாவதன் மூலதனம் 17 கோடி. 1914ல் முதலாவது தனது மூலதனத்தை 25 கோடியாக்கிக் கொண்டுவிட்டது; இரண்டாவது வங்கி மற்றொரு பெரிய முதல் தர வங்கியான Schaaffhausenscher Bankvereinவுடன் [ஷாப்ஹாவுசன் ஐக்கிய வங்கி] இணைந்து தனது மூலதனத்தை 30 கோடியாக அதிகரிக்கச் செய்து கொண்டது. மேலாதிக்கத்துக்கான இந்தப் போராட்டத்துடன் கூடவே, இந்த இரண்டு வங்கிகளுக்குமிடையில் மேலும் மேலும் நிலைத்து நீடிக்கக்கூடிய ''உடன்பாடுகளும்'' மேலும் மேலும் அடிக்கடி முடித்துக் கொள்ளப்பட்டுதான் வந்தன. மிகவும் மிதமான, எச்சரிக்கை உணர்வு மிகுந்த முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்தின் வரம்புகளைக் கொஞ்சங்கூட மீறாத நோக்கு நிலையிலிருந்து பொருளாதாரப் பிரச்சினைகளைக் கருதும் வங்கித் தொழில் நிபுணர்கள் இந்த வளர்ச்சியால் நிர்ப்பந்திக்கப்பட்டுப் பின்வரும் முடிவுகளை வந்தடைகின்றனர்.

Disconto-Gesellschaft வங்கியின் மூலதனம் 30 கோடி மார்க்காக அதிகரித்ததைப் பற்றிக் கருத்துரைக்கையில் Die Bank என்ற ஜெர்மன் சஞ்சிகை எழுதியது: ''ஏனைய வங்கிகளும் இதே பாதையைப் பின்பற்றும். இன்று ஜெர்மனியைப் பொருளாதார வழியில் ஆளுகின்ற 300 ஆட்கள் நாளடைவில் படிப்படியாகக் குறைந்து 50 பேராகவும், 25 பேராகவும், இன்னுங்கூட சொற்பமானோராகவும் ஆகிவிடுவார்கள். ஒன்று குவிப்பை நோக்கி அமைந்த இந்த மிக அண்மைக் காலத்திய போக்கு வங்கித் தொழிலுடன் நின்றுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. தனிப்பட்ட வங்கிகளுக்கு இடையில் நிலவும் நெருங்கிய உறவுகள், இந்த வங்கிகளால் ஆதரிக்கப்படுகின்ற தொழில் துறை சிண்டிக்கேட்டுகளை இயற்கையாகவே ஒன்றிணையச் செய்கின்றன.... திடுமென ஒரு நாள் நாம் விழித்தெழுகையில் டிரஸ்டுகளைத் தவிர வேறு எதையும் காணாமல் வியப்படைவோம், தனியார் ஏகபோகங்களுக்குப் பதிலாக அரசாங்க ஏகபோகங்களை அமைக்க வேண்டிய அவசியம் நம்மை எதிர்நோக்கக் கண்டு திகைப்புறுவோம்.

ஆயினும் விவகாரங்களை அவற்றின் இயற்கையான வழியில் செல்ல விட்டுவிட்டோம், பங்குகளைக் கொண்டு புரியப்படும் சாமர்த்தியங்களால் இப்போக்கு சற்றே துரிதமாக்கப்பட அனுமதித்துவிட்டோம் என்பதைத் தவிர நம்மைப் பற்றி நாம் குறைபட்டுக் கொள்ளத் தேவையில்லை.''*

முதலாளித்துவப் பத்திரிகைத் துறையின் ஏலாமைக்கு இது ஓர் உதாரணமாகும், முதலாளித்துவ விஞ்ஞானத்திடமிருந்து முதலாளித்துவப் பத்திரிகைத் துறை ஒரேயொரு விதத்தில்தான் மாறுபடுகிறது. அதாவது, முன்னது மேலும் நேர்மையற்றதாய் இருக்கிறது, விவகாரத்தின் சாரப் பொருளைப் புலப்படாதபடி குழப்ப எத்தனிக்கிறது, தனி மரங்களைக் காட்டித் தோப்பை மறைக்கப் பார்க்கிறது என்பதில்தான் மாறுபடுகிறது. ஒன்றுகுவிப்பின் விளைவுகளைக் கண்டு ''வியப்படைவதலும்'', முதலாளித்துவ ஜெர்மனியின் அரசாங்கத்தை அல்லது முதலாளித்துவ ''சமுதாயத்தைப்'' பற்றி (''நம்மைப்'' பற்றி) ''குறைபட்டுக் கொள்ளுதலும்'', ஜெர்மன் ''கார்ட்டல்'' நிபுணரான சீர்ஷ்கி அமெரிக்க டிரஸ்டுகளைப் பற்றி அச்சம் தெரிவித்து, ஜெர்மன் கார்ட்டல்கள் ''டிரஸ்டுகளைப் போலத் தொழில்நுட்ப, பொருளாதார முன்னேற்றத்தை அளவு மீறி துரிதப்படுத்தாமல் இருக்கும்'' என்று காரணம் கூறி, ஜெர்மன் டிரஸ்டுகளே ''உசிதமானவை'' என்கிறாரே** அது போல், பிணையங்களும் பங்குகளும் புகுத்தப்படுவதால் ஒன்றுகுவிப்பு ''துரிதப்படுத்தப்படலாம்'' என்று அச்சப்படுவதும்—ஏலாமையின் அறிகுறியே தவிர வேறு என்ன?

ஆனால் உண்மைகள் தொடர்ந்து உண்மைகளாகவே இருக்கின்றன. ஜெர்மனியில் டிரஸ்டுகள் இல்லை, கார்ட்டல்கள்''தான்'' இருக்கின்றன—ஆனால் முந்நூறுக்கு மேற்படாத மூலதனச் சீமான்கள் ஜெர்மனியை ஆளுகிறார்கள். இவர்களது எண்ணிக்கை இடையறாமல் குறைந்து கொண்டே

* A. Lansburgh, „Die Bank mit den 300 Millionen" in *Die Bank*, 1914, 1, பக்கம் 426 (ஆ. லன்ஸ்பர்க், ''30 கோடி மூலதனம் கொண்ட வங்கி'', வங்கி என்ற சஞ்சிகையில்.—ப-ர்.).

** S. Tschierschky, மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 128.

வருகிறது. எப்படியும் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், அவற்றின் வங்கி அமைப்புச் சட்டங்களில் எவ்வளவுதான் வித்தியாசங்கள் இருந்தபோதிலும், மூலதன ஒன்றுகுவிப்புப் போக்கையும் ஏகபோகங்கள் உருவாதலையும் வங்கிகள் வெகுவாகத் தீவிரமாக்கவும் துரிதப்படுத்தவும் செய்கின்றன.

வங்கித் தொழில் அமைப்பானது ''மெய்யாகவே சமூக அளவில் முழுதளாவிய கணக்குப் பதிவுக்கும் உற்பத்திச் சாதன வினியோகத்துக்குமான வடிவம் பெற்றிருக்கிறது, ஆனால் வடிவம் மட்டும்தான் பெற்றிருக்கிறது'' என்று அரை நூற்றாண்டுக்கு முன்பு **மூலதனத்தில்** எழுதினார் மார்க்ஸ் (ருஷ்ய மொழிபெயர்ப்பு, தொகுதி III, பாகம் II, பக்கம் 144). வங்கி மூலதனத்தின் வளர்ச்சி, பெரிய வங்கிகளின் கிளைகள், அலுவலகங்களது அதிகரிப்பு பற்றியும், அவற்றில் கணக்கு வைத்திருப்போரின் அதிகரிப்பு முதலானவை குறித்தும் நாம் எடுத்துரைத்த புள்ளிவிவரங்கள், முதலாளித்துவ வர்க்கம் **அனைத்துக்குமான** இந்த ''முழுதளாவிய கணக்குப் பதிவின்'' ஸ்தூலமான சித்திரத்தைக் கொடுக்கின்றன. இந்தச் சித்திரம் முதலாளிகளுக்கான கணக்குப் பதிவினுடையது மட்டுமல்ல, ஏனெனில் வங்கிகள் எல்லாவகையான பண வருமானங்களையும்—சிறு உடைமையாளர்கள், அலுவலக எழுத்தர்கள், தொழிலாளி வர்க்கத்தின் மிகச் சிறிய மேல் தட்டைச் சேர்ந்தவர்கள் ஆகியோரது பண வருமானங்களையும்—தற்காலிகமாகத்தான் என்றாலுங்கூட—திரட்டுகின்றன. ''முழுதளாவிய உற்பத்திச் சாதன வினியோகம்''—நவீன வங்கிகளிலிருந்து, பிரான்சில் மூன்றிலிருந்து ஆறும், ஜெர்மனியில் ஆறிலிருந்து எட்டுமான மிகப் பெரிய வங்கிகளாய்க் கோடி கோடியான தொகைகளைத் தம் பிடியில் வைத்திருக்கும் இவற்றிலிருந்து, வடிவ அளவில், **வளர்ந்தெழுவதுதான்** இது. ஆனால் **மெய்ப் பொருளில்** உற்பத்திச் சாதன வினியோகம் எவ்வகையிலும் ''முழுதளாவியதாக'' இல்லை, தனியாருடையதாகவே இருக்கிறது; அதாவது பெரு மூலதனத்தின், முக்கியமாகப் பிரம்மாண்ட ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு ஏற்றதாகவே இருக்கிறது. மக்கள் பெருந்திரளினர் வறுமையில் வதையும் நிலைமைகளிலும், விவசாய

வளர்ச்சி அனைத்தும் தொழில் துறையின் வளர்ச்சிக்குப் படுமோசமாகப் பின்தங்கியிருக்கும் நிலைமைகளிலும், தொழில் துறையினுள்ளுங்கூட ''கனரகத் தொழில்கள்'' ஏனைய எல்லாத் தொழிற்கிளைகளிடமிருந்தும் கப்பம் கறக்கும் நிலைமைகளிலும் செயல்படுகின்ற ஏகபோக மூலதனத்தின் நலன்களுக்கு ஏற்றதாகவே இருக்கிறது இந்த வினியோகம்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தைச் சமூகமயமாக்கிடுவதில் சேமிப்பு-வங்கிகளும் அஞ்சலகங்களும் வங்கிகளுடன் போட்டியிட ஆரம்பிக்கின்றன. சேமிப்பு-வங்கிகளும் அஞ்சலகங்களும் அதிக அளவுக்கு ''மையத்துவமின்றி விரவியமைந்திருக்கின்றன'', அதாவது இவற்றின் செல்வாக்கு மேலும் கூடுதலான பிரதேசங்களுக்கும் மிக தொலைவான இடங்களுக்கும் விரிவான மக்கட் பகுதியோருக்கும் பரவியிருக்கிறது. வங்கிகளிலும் சேமிப்பு-வங்கிகளிலும் டெபாசிட்டுகளின் ஒப்பளவிலான வளர்ச்சி பற்றி அமெரிக்கக் கமிஷனால் ஒன்று திரட்டிய புள்ளிவிவரங்கள் வருமாறு*:

வைப்புத் தொகை (நூறுகோடி மார்க்குகளில்)

| | இங்கிலாந்து | | பிரான்ஸ் | | ஜெர்மனி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கிகளில் | சேமிப்பு-வங்கிகளில் | வங்கிகளில் | சேமிப்பு-வங்கிகளில் | வங்கிகளில் | கடன் சங்கங்கள் | சேமிப்பு-வங்கிகளில் |
| *1880* | *8.4* | *1.6* | ? | *0.9* | *0.5* | *0.4* | *2.6* |
| *1888* | *12.4* | *2.0* | *1.5* | *2.1* | *1.1* | *0.4* | *4.5* |
| *1908* | *23.2* | *4.2* | *3.7* | *4.2* | *7.1* | *2.2* | *13.9* |

* அமெரிக்க *Statistics of the National Monetary Commission*, *Die Bank* (''தேசியப் பணவியல் ஆணைக்குழுவின் புள்ளிவிவரங்கள்'', **வங்கி—ப-ர்.**) சஞ்சிகை எடுத்துரைத்தவை, *1910, 2*, பக்கம் *1200*.

சேமிப்பு-வங்கிகள் வைப்புத் தொகைகளுக்கு 4 சதவிகிதம், $4^1/_4$ சதவிகிதம் வட்டி தருவதால், அவை தமது மூலதனத்தை ''லாபகரமாய்'' முதலீடு செய்தாகவேண்டும், உண்டியல்கள், அடமானங்கள் முதலானவற்றில் ஈடுபட்டாக வேண்டும். வங்கிகளுக்கும் சேமிப்பு-வங்கிகளுக்கும் இடையிலான எல்லைக் கோடுகள் ''மேலும் மேலும் மறைந்து வருகின்றன''. கழிவுக்கு உண்டியல்களை மாற்றுதல் போன்ற ''முழுக்க முழுக்க'' வங்கித் தொழிலுக்குரிய வேலைகளில் சேமிப்பு-வங்கிகள் ஈடுபடுவதைத் ''தடை செய்ய வேண்டுமென்று'', உதாரணமாக போஹும், எர்பர்ட் வாணிபச் சங்கங்கள் கோருகின்றன; அஞ்சலகங்களின் ''வங்கித் தொழில்'' செயற்பாடுகளுக்கும் வரம்பிட வேண்டுமென்று அவை கோருகின்றன*. எதிர்பாராத தரப்பிலிருந்து அரசாங்க ஏகபோகம் சந்தடியின்றி தம்மை மிஞ்சிச் சென்றுவிடுமென வங்கித் தொழிலின் சீமான்கள் அஞ்சுவதாகத் தெரிகிறது. ஆனல் இந்த அச்சம், ஒரு வகையில், ஒரே அலுவலகத்தின் இரு பிரிவுகளது நிர்வாகிகளாகக் கொள்ளத் தக்கோரிடையிலான போட்டியின் வெளியீடே தவிர வேறொன்றுமில்லை என்பது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் சேமிப்பு-வங்கிகளிடம் ஒப்படைக்கப்படும் கோடிகள் முடிவாகப் பார்க்கையில் இதே வங்கி மூலதனப் பெரும் புள்ளிகளது பிடிக்குள்தான் நடைமுறையில் வந்துசேருகின்றன; மற்றும் முதலாளித்துவச் சமுதாயத்தில் அரசாங்க ஏகபோகம், திவாலாகும் நிலையிலுள்ள ஏதேனும் ஒரு தொழிற் கிளைக் கோடீஸ்வரர்களது வருவாயை அதிகமாக்குவதற்கும் உத்தரவாதம் செய்வதற்குமான ஒரு சாதனமே ஆகும்.

தடையில்லாப் போட்டியானது ஆதிக்கம் புரிந்த பழைய முதலாளித்துவம், ஏகபோகம் ஆட்சி புரியும் புதிய முதலாளித்துவமாக மாற்றமடைந்ததானது, மற்றும் பலவற்றுடன் கூட, பங்கு மாற்றுச் சந்தையின் முக்கியத்துவம் குன்றியிருப்பதிலும் வெளியீடாகிறது. *Die Bank* சஞ்சிகை எழுதுவ

* *Die Bank* என்ற சஞ்சிகையில் அமெரிக்க *National Monetary Commission*இன் புள்ளிவிவரங்கள், *1913*, பக்கங்கள் *811, 1022; 1914*, பக்கம் *713*.

தாவது: ''புதிய பங்கு வெளியீடுகளில் பெரும் பகுதியை வங்கிகள் தமது வாடிக்கைக்காரர்களிடம் சேர்ப்பிக்க முடியாதிருந்த போது பங்குப் புழக்கத்துக்கு அத்தியாவசியமாயிருந்த தனது பழைய நிலையை பங்கு மாற்றுச் சந்தை இழந்து நெடு நாட்களாகின்றன.''*

'' 'ஒவ்வொரு வங்கியும் ஒரு பங்கு மாற்றுச் சந்தையே ஆகும்'—வங்கியானது மேலும் மேலும் பெரிதாகவும், வங்கித் தொழிலின் ஒன்றுகுவிப்பு மேலும் மேலும் வெற்றி பெற்றும் செல்லுகையில் இந்தப் புதுமொழி மேலும் மேலும் உண்மையாகி வருகிறது''**. ''முன்பு 1870ஆம் ஆண்டுகளில் பங்கு மாற்றுச் சந்தை இளமையின் துடிப்பு மிக்கதாய் இருந்த போது'' (1873 ஆம் ஆண்டின் பங்கு மாற்றுச் சந்தை முறிவையும், கம்பெனி தோற்றுவிப்பு மோசடிகளையும்[17] பிறவற்றையும் இது ''சூசகமாகக்'' குறிக்கிறது) ''ஜெர்மனியின் தொழில் வளர்ச்சி சகாப்தம் ஆரம்பமாகியது. ஆனால் இப்போதெல்லாம் வங்கிகளும் தொழில் துறையும் 'தாமே தனியே இப்பணியை முடித்துக் கொள்ள' முடிகிறது. நம்முடைய பெரிய வங்கிகளுக்குப் பங்கு மாற்றுச் சந்தையின் மீதுள்ள ஆதிக்கம்... முழுதும் ஒழுங்கமைந்துவிட்ட ஜெர்மன் தொழில் துறை அரசின் வெளியீடே ஆகும். தன்னியல்பாய் இயங்கும் பொருளாதார விதிகளின் செயலாட்சி இவ்வாறு குறைக்கப்பட்டு, வங்கிகளின் மூலமான உணர்வு பூர்வமான ஒழுங்கியக்கத்தின் ஆட்சி வெகுவாய் விரிவாக்கப் படுகையில், வழி காட்டும் ஒருசில தலைவர்களின் தேசியப் பொருளாதாரப் பொறுப்பு பிரம்மாண்டமாய் அதிகரிக்கிறது'' என்று எழுதுகிறார் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசுபவரான ஜெர்மன் பேராசிரியர் ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ்.***இவர் எல்லா நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளா

* *Die Bank*, 1914, 1, பக்கம் 316.

** Dr. Oscar Stillich, *Geld-und Bankwesen*, Berlin, 1907, பக்கம் 169 (டாக்டர் ஆஸ்கார் ஷ்டில்லிஹ், ''பணமும் வங்கித் தொழிலும்'', பெர்லின்.—ப-ர்.).

*** Schulze-Gaevernitz, „Die deutsche Kreditbank“, *Grundriss der Sozialökonomik* என்ற வெளியீட்டில், Tübingen, 1915, பக்கம் 101.

லும் தகுதி வாய்ந்த நிபுணராகக் கருதப்படுகிருர். வங்கிகள் மூலமான ''உணர்வுபூர்வமான ஒழுங்கியக்கம்'' என்பது ''முழு அளவுக்கு ஒழுங்கமைக்கப் பெற்ற'' ஒருசில ஏக போகக்காரர்களால் பொது மக்கள் சூறையாடப்படுதலே ஆகுமென்ற ''அற்ப விவரத்தை'' இவர் மூடி மறைக்க முயலு கிருர். முதலாளித்துவப் பேராசிரியரின் பணி, முழு சூட்சு மத்தையும் பட்டவர்த்தனமாகப் புலப்படுத்திக் காட்டுவதோ, ஏகபோகக்காரர்களின் எல்லா சூழ்ச்சிகளேயும் அம்பலப்படுத் துவதோ அல்ல; அவற்றை அழகுபடுத்திக் காட்டுவதே அவரது பணியாக இருக்கிறது.

இவரை விடவும் மதிப்புக்குரிய பொருளியலாளராகக் கருதப்படுகிறவரும், தாமே வங்கித் தொழில் ''அதிபரு மாகிய'' ரீசர் மறுக்க முடியாத உண்மைகளுக்கு நியாயம் கூறும் பொருட்டு, இதே போல் அர்த்தமற்ற தொடர்களேக் கூறி தட்டிக் கழிக்கிருர்: ''...தேசப் பொருளாதாரம் முழுமைக் கும், பிணயங்களின் புழக்கத்திற்கும் [circulation of securities] அத்தியவசியமாக இருக்கிற அந்த அம்சத்தை—தன்பால் வந்து ஒன்றுகுவியும் பொருளாதார இயக்கங்களின் மிகக் கருரான அளவுகோலாக இருப்பது மட்டுமின்றி, இவற்றை அனேகமாகத் தன்னியல்பான முறையில் ஒழுங்கியக்கும் சாதனமாகவும் இருக்கிற அம்சத்தை—பங்கு மாற்றுச் சந்தை மேன்மேலும் இழந்து வருகிறது''.*

வேறு வார்த்தைகளில் சொல்லப் போனல்: பழைய முதலாளித்துவம், அத்தியாவசியமான தனது ஒழுங்கியக்கி யாகிய பங்கு மாற்றுச் சந்தையுடன் கூடிய, தடையில்லாப் போட்டிக்குரிய முதலாளித்துவம் மறைந்து வருகிறது. அதனிடத்தில் ஒரு புதிய முதலாளித்துவம், விரைவில் மாற்ற மடையும் ஒன்றுக்குரிய அப்பட்டமான இயல்புகளுடன் கூடிய, தடையில்லாப் போட்டி, ஏகபோகம் ஆகிய இரண் டின் கலவையான ஒரு புதிய முதலாளித்துவம் வந்தமர்ந்துள் ளது. இந்தப் புதிய முதலாளித்துவம் எதாக ''வளர்ந்து கொண்டிருக்கிறது''? என்ற கேள்வி இயற்கையாகவே எழு

* ரீசர், முன் குறிப்பிட்ட நூல், 4ம் பதிப்பு, பக்கம் 629.

கிறது. ஆனால் முதலாளித்துவ அறிஞர்கள் இக்கேள்வியை எழுப்ப அஞ்சுகிறார்கள்.

''முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, தடையின்றிப் போட்டியிட்டுக் கொண்டிருந்த தொழிலதிபர்கள், 'தொழிலாளர்களது' உடலுழைப்பைத் தவிர்த்து, தமது தொழில் சம்பந்தமான ஏனைய வேலையில் பத்தில் ஒன்பது பங்கைச் செய்து வந்தனர். தற்போது இந்த மூளை வேலையில் பத்தில் ஒன்பது பங்கை சிப்பந்திகள் செய்துவிடுகிறார்கள். இந்தப் பரிணாமத்தின் முன்வரிசையில் இருக்கிறது வங்கித் தொழில்.''* ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் இவ்வாறு ஒப்புக்கொள்வதானது, இந்த நவீன முதலாளித்துவம், ஏகாதிபத்தியக் கட்டத்திலுள்ள இந்த முதலாளித்துவம், எதாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற கேள்விக்கு மீண்டும் நம்மை இட்டுச் செல்கிறது.

ஒன்றுகுவிப்புப் போக்கின் விளைவாக, முதலாளித்துவப் பொருளாதாரம் அனைத்தின் தலைமையில் வந்தமர்ந்துள்ள அந்தச் சொற்ப வங்கிகளிடையே, ஏகபோக உடன்பாட்டுக்கான, வங்கி டிரஸ்டுக்கான போக்கு இயல்பாகவே மேலும் மேலும் துலக்கமாகவே புலனாகிறது. அமெரிக்காவில், ஒன்பது வங்கிகள் அல்ல, கோடீஸ்வரர்களான ராக்ஃபெல்லருக்கும் மார்கனுக்கும் சொந்தமான மிகவும் பெரிய இரண்டே வங்கிகள் ஆயிரத்து நூறு கோடி மார்க் மூலதனத்தைத் தம் பிடியில் கொண்டுள்ளன.** ஜெர்மனியில், நாம் மேலே குறிப்பிட்டபடி Disconto-Gesellshaftவங்கியானது Schaaffhausenscher Bankverein வங்கியை உட்கவர்ந்து கொண்டது குறித்து, பங்கு மாற்றுச் சந்தை நலவுரிமை வட்டாரங்களது பத்திரிகையாகிய ஃபிரங்ஃபுர்ட் ஸைட்டுங் பின்வருமாறு கருத்துரைத்தது:

''வங்கிகளது ஒன்றுகுவிப்புப் போக்கானது கடன்கள் பெறுவதற்குரிய நிறுவனங்களின் வட்டத்தைக் குறுகலாக்கிச் செல்கிறது; இதன் விளைவாகச் சொற்ப எண்ணிக்கையி

---

* Schulze-Gaevernitz, „Die deutsche Kreditbank", *Grundriss der Sozialökonomik* என்ற வெளியீட்டில், Tübingen, 1915, பக்கம் 151.

** *Die Bank*, 1912, 1, பக்கம் 435.

லான வங்கித் தொகுப்புகளை பெருந் தொழில் துறை சார்ந்துள்ள நிலை அதிகரிக்கிறது. தொழில் துறைக்கும், நிதி உலகுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு காரணமாக, வங்கி மூலதனம் தேவைப்படும் தொழில் துறைக் கம்பெனிகளின் இயக்கச் சுதந்திரம் குன்றிக் குறுகி வருகிறது. இதனால், வங்கிகள் டிரஸ்டுமயமாக்கப்படுதலை (டிரஸ்டுகளில் ஒன்றிணைவது அல்லது டிரஸ்டுகளாக மாறுவதை) பெருந் தொழில்கள் கலப்படமான உணர்வுடன் உற்று நோக்குகின்றன. போட்டியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், தனிப்பட்ட பெரிய வங்கி நிறுவனங்களுக்கிடையே சிற்சில உடன்பாடுகளுக்கான ஆரம்பத்தைத் திரும்பத் திரும்பக் காண்கிறோம்.''*

வங்கித் தொழிலின் வளர்ச்சியில் திரும்பத் திரும்ப ஏகபோகமே இறுதியான சொல்.

வங்கிகளுக்கும் தொழில் துறைக்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பைப் பொறுத்தவரையில், வங்கிகள் ஆற்றும் புதிய பாத்திரம் இத்துறையில்தான் மிகவும் எடுப்பாகத் தெரிகிறது எனலாம். வங்கியானது ஒரு தொழிலதிபருக்காக ஓர் உண்டியலை மாற்றும் போதும், ஒரு நடப்புக் கணக்கை ஆரம்பிக்கும் போதும், இன்ன பலவும் செய்யும் போதும், இந்தச் செயல்கள் தனித்தனியே தொழிலதிபரின் சுயேச்சையைச் சிறிதும் குறைத்து விடுவதில்லை; வங்கியானது சாமானிய இடைத் தரகரின் வேலையையே செய்கிறது. ஆனால் இம்மாதியான செயல்கள் பன்மடங்கு பெருகி நிலையான நடைமுறையாகிவிடும் போது, மிகப் பெரும் தொகைகளிலான மூலதனத்தை அந்த வங்கி தன் கைகளில் ''திரட்டிக் கொள்ளும்'' போது, குறிப்பிட்ட ஒரு தொழில் நிறுவனத்தின் நடப்புக் கணக்கை வைத்திருப்பதன் மூலம் வங்கியானது அந்த வாடிக்கைகாரரின் பொருளாதார நிலைமையைப் பற்றி முன்னிலும் முழுமையான, விவரமான தகவலைத் தெரிந்து கொள்ள—இதுதான் நடக்கிறது—முடியும் போது விளைவது என்னவென்றால், அந்தத் தொழில்துறை

* ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், „Grdr. d. S.-Oek." இல் தரும் மேற்கோள், பக்கம் 155.

முதலாளி மேலும் முழு அளவுக்கு அவ்வங்கியைச் சார்ந்திருக்க வேண்டியவராகி விடுகிருர்.

அதே சமயத்தில் வங்கிகளுக்கும் மிகப் பெரிய தொழில், வாணிப நிலேயங்களுக்கிடையே நேரே ஆள் வடிவிலெனச் சொல்லக் கூடிய பிணைப்பும் ஏற்படுகிறது, பங்குகள் பெறுவதன் மூலமாகவும், தொழில், வாணிப நிலேயங்களின் மேலாளர் அவைகளில் (அல்லது டைரக்டர் அவைகளில்) வங்கி டைரக்டர்கள் உறுப்பினர்களாகவும் இதற்கு எதிர்மாருகவும் நியமிக்கப்படுவதன் மூலமாகவும் ஒன்று மற்ருென்றுடன் இணைகிறது. ஜெர்மன் பொருளியலாளராகிய எய்டல்ஸ், இவ்வடிவில் மூலதனமும் நிலேயங்களும் ஒன்றுகுவிவது பற்றி மிகவும் விரிவான விவரங்களைத் தொகுத்துள்ளார். ஆறு மிகப் பெரிய பெர்லின் வங்கிகள் தமது டைரக்டர்களை 344 தொழில் துறைக் கம்பெனிகளிலும், தமது அவை உறுப்பினர்களை மற்றும் 407 கம்பெனிகளிலும்—ஆக மொத்தம் 751 கம்பெனிகளில்—அமர்த்திப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. இந்தக் கம்பெனிகளில் 289ல் ஒவ்வொன்றின் மேலாளர் அவையில் இவ்வங்கிகள் தமது இரண்டு பிரதிநிதிகளை அமர்த்தியிருந்தன, அல்லது இக்கம்பெனிகளில் தலைவர் பதவி வகித்தன. இன்ஷூரன்ஸ், போக்குவரத்து, சிற்றுண்டிச் சாலேகள், தியேட்டர்கள், கலைத் தொழில் முதலான மிகப் பலவகைப்பட்ட தொழிற் கிளைகளை இந்தத் தொழில், வாணிபக் கம்பெனிகளில் காண்கிருேம். மறு புறம், இந்த ஆறு வங்கிகளது மேலாளர் அவைகளில், மிகப் பெரிய தொழிலதிபர்களில் 51 பேர் (1910ல்) இருந்தார்கள்—க்ருப் கம்பெனியின் டைரக்டர், பிரம்மாண்ட „Hapag“ (Hamburg-Amerika) கப்பல் நிறுவனத்தின் டைரக்டர் முதலானேரும் இவர்களில் உட்படுவர். 1895லிருந்து 1910 வரை, இந்த ஆறு வங்கிகளில் ஒவ்வொன்றும், நூற்றுக் கணக்கான (281 முதல் 419 வரையிலான) தொழில் துறைக் கம்பெனிகளின் பங்கு வெளியீடுகளிலும் பிணைய வெளியீடுகளிலும் பங்கெடுத்துக் கொண்டது.*

* எய்டல்ஸ், ரீசர், முன்குறிப்பிட்ட நூல்கள்.

வங்கிகளுக்கும் தொழில் துறைக்கும் இடையிலுள்ள ''நேரே ஆள் வடிவிலுள்ள இந்த பிணைப்புடன்கூட'' இவை இரண்டுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ''நேரே ஆள் வடிவிலான பிணைப்பும்'' சேர்ந்துள்ளது. எய்டல்ஸ் எழுதுகிருர்: ''அதிகாரிகளுடன் உறவுகள் ஏற்படுவதற்குப் பெரிதும் வசதி [!!] செய்யக் கூடியோரான பட்டம் பெற்ற ஆட்களுக்கும் முன்னுள் அரசாங்க அலுவலர்களுக்கும் மேலாளர் அவைகளில் இடங்கள் தாராளமாக வழங்கப்படுகின்றன''.... ''வழக்கமாகப் பெரிய வங்கியின் மேலாளர் அவையில் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது பெர்லின் நகராண்மைக் கழக உறுப்பினர் ஒருவர் இருக்கிருர்.''

ஆகவே, பெரிய முதலாளித்துவ ஏகபோகங்களின் கட்டுமானமும் வளர்ச்சியும் என்பதாகச் சொல்லக் கூடியவை ''இயல்பானவை'', ''இயல்கடந்தவை'' ஆகிய எல்லா வழிகளிலும் முழு மூச்சுடன் நடந்தேறுகின்றன. தற்கால முதலாளித்துவச் சமுதாயத்தின் மீது ஆட்சி செலுத்தும் சில நூறு நிதி மன்னர்களுக்கிடையில் ஒரு வகை உழைப்புப் பிரிவினை முறையாக வளர்க்கப்பட்டு வருகிறது:

''சில பெரிய தொழில் துறை அதிபர்களது செயல் அரங்கு இவ்விதம் விரிவடைவதுடனும் (வங்கிகளது டைரக்டர் அவைகளில் சேர்ந்து கொள்வது முதலானவை), மாநில வங்கி மானேஜர்கள் குறிப்பிட்ட தொழிற் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுவதுடனும் கூடவே, பெரிய வங்கிகளது டைரக்டர்களுக்கிடையில் தனித்தேர்ச்சியும் வளருகிறது. பொதுவாகக் கூறினுல், வங்கித் தொழில் பெரிய அளவில் நடத்தப்படும் போது மட்டுமே, குறிப்பாக அது தொழில் துறையுடன் விரிந்த தொடர்புகளை பெற்றிருக்கும் போது மட்டுமே, இந்தத் தனித்தேர்ச்சி ஏற்பட முடியும். இந்த உழைப்புப் பிரிவினை இரண்டு வழிகளில் நடந்தேறுகிறது: ஒரு புறம், தொழில் துறையுடனுன உறவுகள் முழுவதும் ஒரே டைரக்டரிடம், அவருக்குரிய தனிப் பணியாக ஒப்படைக்கப்படுகின்றன; மறு புறம், ஒவ்வொரு டைரக்டரும் தனிப்பட்ட சில நிலையங்கள், அல்லது ஒரே தொழிற் கிளையிலுள்ள அல்லது ஒரே மாதிரியான அக்கறைகளைக் கொண்ட நிலையங்களின்

ஒரு தொகுப்பை மேற்பார்வை இடும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிருர்.''... (தனிப்பட்ட நிறுவனங்கள் ஒழுங்கமைந்த முறையில் மேற்பார்வையிடப்படும் கட்டத்தை முதலாளித் துவம் ஏற்கனவே வந்தடைந்திருக்கிறது)... ''ஒருவர் ஜெர்மன் தொழில் துறையில், சில சமயங்களில் மேற்கு ஜெர்மன் தொழில் துறையில் மட்டுங்கூட தனித் தேர்ச்சி பெறுகிருர்'' (ஜெர்மனியில் மேற்குப் பகுதிதான் மிக அதிகத் தொழில் வளர்ச்சி பெற்றது) ''ஏனேயோர் அன்னிய நாடுகளுடனும் அன்னியத் தொழில் துறையுடனுமான உறவுகளிலும், தொழிலதிபர்களின், பிற பகுதியோரின் குண இயல்புகள் குறித்த தகவலிலும், பங்கு மாற்றுச் சந்தை விவகாரங்களிலும் இன்ன பிறவற்றிலும் தனித் தேர்ச்சி பெறுகிருர்கள். தவிரவும் வங்கி டைரக்டர் ஒவ்வொருவரும் ஒரு தனிப் பிரதேசத்துக்கோ, தொழில் துறையின் ஒரு தனிக் கிளேக்கோ ஒதுக்கப்படுவதும் அடிக்கடி நடைபெறுகிறது. ஒருவர் முக்கியமாய் மின்சாரக் கம்பெனிகளின் மேலாளர் அவைகளிலும், இன்ெருருவர் இரசாயன ஆலேகள், வடிப்பாலேகள், வள்ளிச் சர்க்கரை ஆலேகளது அவைகளில் வேலேசெய்கிருர், மூன்ருமவர் தனிப்பட்ட ஒருசில தொழில் நிறுவனங்களில் இருந்து கொண்டு அதே போது இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் மேலாளர் அவைகளிலும் வேலே செய்கிருர்.... சுருங்கக் கூறுமிடத்து, பெரிய வங்கிகளின் செயற்பாடுகள் பரிமாணத்திலும் வகை வேறுபாட்டிலும் கண்டிருக்கும் வளர்ச்சியுடன் கூடவே, வங்கி டைரக்டர்களிடையே உழைப்புப் பிரிவினேயும் அதிகரிக்கிறது என்பதில் ஐயமில்லே. இவர்களேக் கலப்பற்ற தூய வங்கித் தொழிலிலிருந்து ஓரளவு மேல் நிலேக்கு உயரச் செய்து, தொழில் துறையின் பொதுப் பிரச்சினேகளிலும் ஒவ்வொரு தொழிற் கிளேயின் தனிப் பிரச்சினேகளிலும் தேர்ந்த நிபுணர்களும் தீர்வாளர்களுமாக்கி, இவ்வழியில் இவர்களே அந்தந்த வங்கிக்குமுரிய தொழில் துறைச் செல்வாக்கு மண்டலத்துள் மேலும் அதிக செயல் வல்லமை வாய்ந்தோராகச் செய்வதே இவர்களிடையே அதிகமாகி வரும் இந்த உழைப்புப் பிரிவினேயின் நோக்கம் எனலாம். இந்த அமைப்பு முறையுடன் கூடவே, இதை நிறைவு செய்

யும் விதத்தில், தொழில் துறை விவகாரங்களில் நிபுணர்களாக விளங்கும் தொழிலதிபர்கள், முன்னுள் அரசாங்க அதிகாரிகள், முக்கியமாய் முன்பு ரயல்வேத் துறையில் அல்லது சுரங்கத் தொழிலில் சேவை ஆற்றியோர் முதலானேரை வங்கிகள் தமது மேலாளர் அவைகளுக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முயற்சிக்கின்றன'', இப்படி இன்னும் பல.*

இதே முறையைத்தான் சிறிது வேறு வடிவத்தில் பிரெஞ்சு வங்கித் தொழிலில் காண்கிறேம். உதாரணமாக, மிக பெரிய மூன்று பிரெஞ்சு வங்கிகளில் ஒன்றுன Crédit Lyonnais,** ஐம்பதுக்கும் அதிகமான பொறியாளர்கள், புள்ளிவிவர இயலினர், பொருளியலாளர்கள், வழக்கறிஞர்கள் முதலான பலரும் நிரந்தரமாக வேலே செய்யும் நிதி ஆய்வுப் பணித் துறை ஒன்றை (service des études financières) அமைத்திருக்கிறது. ஆண்டுதோறும் இதற்காக ஆறு முதல் ஏழு லட்சம் பிராங்கு வரை செலவாகிறது. இந்தப் பணித் துறை எட்டு இலாகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது: தொழில் நிலேயங்கள் பற்றிய தகவல்களேச் சேகரிப்பதில் ஒரு இலாகா தனித் தேர்ச்சி மிக்கதாகச் செயல்படுகிறது, இன்னென்று பொதுப் புள்ளிவிவரங்களே ஆராய்கிறது, மூன்ருவது ரயில்வே, கப்பல் கம்பெனிகள் குறித்தும், நான்காவது பிணேயங்கள் [securities] குறித்தும், ஐந்தாவது நிதி அறிக்கைகள் குறித்தும், இப்படி ஒவ்வொன்றும் ஒரு தனிப் பிரிவு குறித்து ஆராய்கிறது.***

ஒரு புறத்தில் வங்கி மூலதனமும் தொழில் துறை மூலதனமும் மேலும் மேலும் அதிகமாக ஒன்றிணேவதும் — அல்லது நி.இ. புஹாரின் தக்க பெயரிட்டு இதனேக் குறிப்பிடுவது போல், ஒன்றுகலத்தலும்—மறுபுறத்தில் வங்கிகள் மெய்யாகவே ''சர்வ வியாபகத் தன்மையுடைய'' நிலேயங்களாக வளர்தலும்தான் இதனுல் ஏற்படும் விளேவு. இப்பொருள் குறித்து மிக நன்ருய் ஆராய்ந்துள்ளவரான எய்

* எய்டல்ஸ், முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 157-158.

** லியோன் கடன் செலாவணி.— ப-ர்.

*** *Die Bank*இல் (1909, 2, பக்கம் 851உம் அடுத்த பக்கங்களும்) பிரெஞ்சு வங்கிகளேப் பற்றி Eug. Kaufmann எழுதும் ஒரு கட்டுரை.

டல்ஸ் இந்தப் பிரச்சினை சம்பந்தமாய்க் கையாளும் தொடர் களை மேற்கோளாகத் தருவது அவசியமெனக் கருதுகிறேன்:

''தொழில் துறையிலான உறவு முறைகளை ஒட்டுமொத்த அளவில் பரிசீலனை செய்கையில், தொழில் துறையின் சார்பில் செயல்படும் நிதி நிறுவனங்களின் சர்வ வியாபகத் தன்மை வெளிப்படுகிறது. பிற வகைகளைச் சேர்ந்த வங்கிகளைப் போலல்லாமலும், வங்கிகள் தாம் காலூன்றி நிற்கும் தளம் தம்மை விட்டு நழுவாமல் தடுக்கும் பொருட்டு அவை ஒரே தொழில் வகையிலோ, ஒரே தொழிற் கிளையிலோ ஈடுபட்டுத் தனித் தேர்ச்சி பெற வேண்டுமென வெளியீடுகளில் சில சமயம் அவசியத் தேவையாகக் குறிக்கப்படுவதற்கு மாறாக வும்—தொழில் நிலையங்களுடன் தமக்குள்ள தொடர்பு களை வங்கிகள் பிரதேசம் அல்லது தொழிற் கிளைகள் குறித்து கூடுமான அளவுக்கு அதிகமாய்ப் பல்வேறு வகைகளையும் சேர்ந்தனவாய் விரிவுபடுத்திக் கொள்ள முனைகின்றன; தனிப் பட்ட தொழில் நிலையங்கள் வரலாற்று வழியில் கண்ட வளர்ச்சியினால் பிரதேசங்களுக்கிடையிலும் தொழிற் கிளை களுக்கிடையிலும் மூலதனத்தின் வினியோகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வை வங்கிகள் அகற்றுவதற்கு முயற்சி செய் கின்றன.'' ''தொழில் துறையுடனான தொடர்புகளைப் பொ துப்பட அமைந்தனவாக்கிக் கொள்வது ஒரு போக்கு; இந்தத் தொடர்புகளை நீடித்து நிலவுவனவாகவும் நெருங்கியனவாக வும் செய்து கொள்வது மற்றொரு போக்கு. பெரிய ஆறு வங்கிகளில் இந்த இரண்டு போக்குகளும் நிறைவேற்றம் பெற்றிருக்கின்றன—முழுநிறைவாக அல்ல, கணிசமாகவும் சமமான அளவுக்கும் நிறைவேற்றும் பெற்றிருக்கின்றன.''

தொழில் துறை, வாணிப வட்டாரங்கள், வங்கிகளின் ''பயங்கரவாதம்'' குறித்து அடிக்கடி முறையிடுகின்றன. இம்மாதிரியான முறையீடுகள் எழுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஏனெனில் பெரிய வங்கிகள் ''ஆணையிடவே'' செய்கின்றன—பின்வரும் உதாரணம் இதைத் தெளிவுபட காட்டுகிறது. பெரிய வங்கிகளான பெர்லின் „D“ வங்கி கள் எனப்படுவனவற்றில் ஒன்று (யாவற்றிலும் பெரியன வாகிய நான்கு வங்கிகளின் பெயர்களுக்கும் Dதான் முத

லெழுத்து) 1901 நவம்பர் 19ல் ஜெர்மன் மத்திய வடமேற்குச் சிமெண்டு சிண்டிக்கேட்டின் டைரக்டர் அவைக்குக் கீழ்க் கண்டவாறு எழுதிற்று: ''இம்மாதம் 18ஆம் தேதி செய்தியேடு ஒன்றில் நீங்கள் வெளியிட்டிருந்த அறிக்கையின் படி, இம்மாதம் 30ஆம் தேதியன்று நடைபெறப் போகும் உங்களது சிண்டிக்கேட்டின் அடுத்த பொது மன்றக் கூட்டமானது எங்களுக்கு ஏற்புடையனவல்லாத மாற்றங்களை உங்களது தொழில் நிலையத்தில் உண்டாக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுப்பது குறித்து தீர்மானிக்கலாமென்று தெரியவருவதால், நாங்கள் இந்தச் சாத்தியப்பாட்டைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதுகாறும் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டு வந்த கடன் வசதியை இக்காரணங்களை முன்னிட்டு இனி நாங்கள் ரத்து செய்ய வேண்டியிருப்பது குறித்து பெரிதும் வருந்துகிறோம்.... ஆனால் மேற்கூறிய அடுத்த பொது மன்றக் கூட்டம் எங்களுக்கு ஏற்புடையனவல்லாத நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்காதிருக்குமாயின், மற்றும் இந்த விவகாரத்தில் எதிர்காலத்திற்கான தக்க உத்தரவாதங்கள் எங்களுக்கு அளிக்கப்படுமாயின், புதிய கடன் வசதி அளிப்பது குறித்து உங்களுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு நாங்கள் ஆயத்தமாக இருப்போம்''.*

உண்மையில் இது பெரு மூலதனம் தன்னை ஒடுக்குவதாகச் சிறு மூலதனம் கூறி வரும் பழைய புகார்தான். ஆனால் இங்கு இச்சந்தர்ப்பத்தில் ஒரு சிண்டிக்கேட் முழுதுமே ''சிறு'' மூலதனத்தின் பிரிவில் சேரும்படி தள்ளப்பட்டுவிட்டது! சிறு மூலதனத்துக்கும் பெரு மூலதனத்துக்கும் இடையிலான பழைய போராட்டம் வளர்ச்சியின் அளவிட முடியாதபடி மிக உயர்ந்த ஒரு புதிய கட்டத்தில் தொடர்ந்து திரும்பவும் நடை பெறுகிறது. பெரிய வங்கிகளின் நிலையங்கள், கோடிக் கணக்கில் பெறுமானமுள்ள இவை, கடந்த காலத்தியவற்றுடன் எவ்வகையிலும் ஒப்பிட முடியாதனவாகிய சாதனங்களைக் கொண்டு, தொழில் நுட்ப வளர்ச்சி

* Dr. Oscar Stillich, *Geld- und Bankwesen*, Berlin, 1907, பக்கம் 147.

யைத் துரிதப்படுத்த முடியும் என்பது கண்கூடு. உதாரணமாக, வங்கிகள் பிரத்தியேகத் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகங்களை நிறுவுகின்றன; ''நேசத்துக்குரிய'' தொழில் நிலையங்கள் மட்டுமே இக்கழகங்களது வேலைகளினுல் ஆதாயமடைகின்றன. ''மின்சார ரயில்வே ஆராய்ச்சிக் கழகம்'', ''விஞ்ஞான, தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு'' முதலியன இவ்வகையைச் சேர்ந்தவையே.

தேசப் பொருளாதாரத்திற்குப் புதிய நிலைமைகள் உண்டாக்கப்படுவதை பெரிய வங்கிகளின் டைரக்டர்கள் பார்க்கத் தவற முடியாதுதான். ஆனுல் இந்நிகழ்வுகளின் முன்னுல் இவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறுர்கள்.

எய்டல்ஸ் எழுதுகிறுர்: ''பெரிய வங்கிகளின் மேலாளர் அவைகளில் டைரக்டர்களாகவும் உறுப்பினர்களாகவும் பதவி வகிப்போரிடம் அண்மை ஆண்டுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கவனித்திருக்கிற எவரும், தொழில் துறையின் பொது வளர்ச்சியில் பெரிய வங்கிகள் முனைப்புடன் தலையிடுவது அவசியமென்றும், மேலும் மேலும் கூடுதலான முக்கியத்தும் வாய்ந்ததாகுமென்றும் கருதுவோரின் கைகளுக்கு அதிகாரம் சிறிது சிறிதாகச் சென்று கொண்டிருப்பதைக் கவனிக்கத் தவறியிருக்க முடியாது. இந்தப் புதிய ஆட்களுக்கும் பழைய வங்கி டைரக்டர்களுக்கும் இடையில், இவ்விவகாரத்தில் தொழில் சம்பந்தமாகவும், அடிக்கடி தனிப்பட்ட முறையிலும் கருத்து வேறுபாடுகள் வளர்ந்து வருகின்றன. பிரச்சினை இதுதான்: கடன் வசதி நிலையங்களாகிய வங்கிகள் இப்படித் தொழில் துறையில் தலையிடுவது அவற்றுக்குப் பாதகமானது அல்லவா? கடன் வசதிகளுக்கு ஏற்பாடு செய்யும் இடைத் தரகர்களாக வங்கிகள் ஆற்ற வேண்டிய பாத்திரத்துடன் ஒட்டோ உறவோ இல்லாத ஒரு செயல் அரங்கில், வாணிப அலைவுகளின் குருட்டுச் சக்திகளை என்றும் இல்லாத அளவுக்கு எதிர்பட வேண்டி வரும் ஓர் அரங்கில் இறங்கி, தேர்ந்தவையென நிரூபிக்கப்பட்ட கோட்பாடுகளையும் உத்தரவாதமான லாபத்தையும் வங்கிகள் பலியிடுவதாய் ஆகிவிடாதா? பழைய வங்கி டைரக்டர்கள் பலரின் கருத்து இதுவேதான். ஆனுல் இளமையானவர்களில் மிகப்

பலரும் தொழில் துறையில் முனைப்புடன் தலையிடுவது இன்றியமையாததெனக் கருதுகிறார்கள்; பெரிய நவீனத் தொழில் துறையுடன் கூடவே பெரிய வங்கிகளும் நவீனத் தொழில் துறை வங்கி முறையும் எப்படி இன்றியமையாதனவாய் உதித்தெழுந்தனவோ அதே அளவுக்கு இதுவும் இன்றியமையாததாகும் என்கிறார்கள். ஒரேயொரு விஷயத்தில் மட்டும்தான் இரு தரப்பாருக்கும் கருத்து உடன்பாடு நிலவுகிறது: பெரிய வங்கிகளது புதிய செயற்பாடுகளில் நிலையான கோட்பாடுகளோ, திட்டவட்டமான குறிக்கோளோ இல்லை என்பது ஒன்றில் மட்டும்தான்.''*

பழைய முதலாளித்துவம் காலம் கடந்ததாகிவிட்டது. புதிய முதலாளித்துவம் வேறொன்றை நோக்கி மாறிச் செல்வதற்கான இடைநிலைக் கட்டத்தை குறிக்கிறது. ஏகபோகத்தைத் தடையில்லாப் போட்டியுடன் ''இணக்கம் கொள்ளச்'' செய்வதற்குரிய ''நிலையான கோட்பாடுகளையும் திட்டவட்டமான குறிக்கோளையும்'' தேடிப் பயனில்லைதான். நடைமுறைச் செயலில் ஈடுபட்டுள்ளோரது இந்த ஒப்புதல் வாக்குமூலம், முதலாளித்துவத்துக்காகப் பரிந்து பேசுவோரான ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், லீஃப்மன், மற்றும் இவர்களையொத்த ''தத்துவவாதிகள்'', ''ஒழுங்கமைந்த'' முதலாளித்துவத்தின் வனப்பு குறித்து அதிகார முறையில் பாடும் புகழுரைகளிலிருந்து முற்றிலும் மாறானதொன்றாய் ஒலிக்கிறது.

பெரிய வங்கிகளது இந்தப் ''புதிய செயற்பாடுகள்'' இறுதியாக உறுதி பெற்றது கறாராய் எந்தக் காலம்? இந்த முக்கிய கேள்விக்கு எய்டல்ஸ் ஓரளவு திட்டவட்டமான விடை அளிக்கின்றார்:

''தொழில் நிலையங்களுக்கு இடையிலான பிணைப்புகள், புதிய உள்ளடக்கமும் புதிய வடிவங்களும் புதிய செயலுறுப்புகளும் கொண்டமைந்த இவை—அதாவது மையத்துவமானது, மையத்துவமல்லாதது ஆகிய இரு அடிப்படையிலும் அமைந்த பெரிய வங்கிகளைக் கொண்டமைந்த இவை—

* எய்டல்ஸ், முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 183-184.

1890ஆம் ஆண்டுகளுக்கு முன்பு தனி இயல்பாய்க் குறிப்பிடத்தக்க பொருளாதார நிகழ்வாய் மிக அரிதாகவே காணப்பட்டன. ஒரு விதத்தில் இந்த ஆரம்பக் கால வரையை முன்னுல் தள்ளி 1897ஆம் ஆண்டெனக் குறிக்கலாம், அப்போதுதான் முக்கியமான ''இணைவுகள்'' நடைபெற்றன, வங்கிகளின் தொழில் துறைக் கொள்கைக்கு உகந்ததாய் மையத்துவமல்லாத புதிய ஒழுங்கமைப்பு வடிவம் முதன்முதலாய் அப்போதுதான் கைக்கொள்ளபடலாயிற்று. இந்த ஆரம்பக் கால வரையை இன்னுங்கூட முன்னதான தேதிக்குக் கொண்டுவரலாம், ஏனெனில் 1900ஆம் ஆண்டு நெருக்கடிதான் தொழில் துறை, வங்கித் தொழில் இவற்றின் ஒன்றுகுவிப்புப் போக்கினை மிகுந்த வேகமும் கடுமையும் பெறச் செய்தது, இந்த நிகழ்ச்சிப் போக்கை உறுதியாய் நிலைநாட்டித் தொழில் துறையுடனுகிய பிணைப்பை மெய் நடப்பில் முதன்முதலாய்ப் பெரிய வங்கிகளது ஏகபோகமாய் மாற்றியது, இந்தப் பிணைப்பை மேலும் நெருங்கியதாகவும் செயல் முனைப்புடையதாகவும் ஆக்கியது.''*

இவ்வாறு, இருபதாம் நூற்ருண்டானது, பழைய முதலாளித்துவம் புதிய ஒன்ருக, பொதுவாய் மூலதனத்தின் ஆதிக்கம் நிதி மூலதனத்தின் ஆதிக்கமாக மாறியதன் திரும்பு முனையைக் குறிக்கிறது.

## 3. நிதி மூலதனமும் நிதியாதிக்கக் கும்பலும்

''தொழில் துறை மூலதனத்தில் மேலும் மேலும் கூடுதலாகி வரும் விகிதமானது, அதனை உபயோகிக்கின்ற தொழிலதிபர்களுக்குச் சொந்தமானதாக இல்லை'' என்று எழுதுகிருர் ஹில்ஃபர்டிங். ''வங்கிகளின் மூலம் அவர்கள் அதைப் பெற்று உபயோகித்துக் கொள்கிருர்கள். அவர்களைப் பொறுத்த வரை வங்கிகளே இந்த மூலதனத்தின் சொந்தக்காரர்களாக இருக்கின்றன. மறுபுறத்தில், வங்கியானது தனது

* எய்டல்ஸ், முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 181.

மூலதனத்தில் மேலும் மேலும் அதிகமான பகுதியைத் தொழில் துறையில் போடும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறது; இவ்வாருக, வங்கி முதலாளி மேலும் மேலும் அதிகமான அளவுக்குத் தொழில் துறை முதலாளியாக மாற்றப்பட்டு வருகிருர். இந்த வங்கி மூலதனத்தை, அதாவது நடைமுறையில் இவ்வாறு தொழில் துறை மூலதனமாக மாற்றப்படுகின்ற பணவடிவிலுள்ள மூலதனத்தை, நான் 'நிதி மூலதனம்' என்று அழைக்கிறேன்''. ''நிதி மூலதனம் என்பது வங்கிகளின் பிடியில் உள்ளதும் தொழிலதிபர்களால் உபயோகிக்கப்படுவதுமான மூலதனமாகும்''.*

இந்த இலக்கணம் நிறைவானதல்ல, ஏனெனில் அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உண்மை குறித்து இது மௌனம் சாதிக்கிறது—அதாவது, உற்பத்தியும் மூலதனமும் ஒன்றுகுவிதல் அந்த அளவுக்கு அதிகமாகி இந்த ஒன்றுகுவிப்பு ஏகபோகத்துக்கு இட்டுச் செல்வதையும், ஏற்கெனவே இட்டுச் சென்றுள்ளதையும் குறிப்பிடாமல் மௌனம் சாதிக்கிறது. ஆனுல் ஹில்ஃபர்டிங் தமது நூல் முழுவதிலும், குறிப்பாக இந்த இலக்கணம் எந்த அத்தியாயத்திலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கிறதோ அதற்கு முந்திய இரண்டு அத்தியாயங்களில் **முதலாளித்துவ ஏகபோகங்களது** பாத்திரத்தை வலியுறுத்திக் கூறுகின்ருர்.

உற்பத்தியின் ஒன்றுகுவிப்பு; அதிலிருந்து ஏகபோகம் எழுதல்; வங்கிகள் தொழில் துறையுடன் இணைதல் அல்லது ஒன்றுகலத்தல்—இதுதான் நிதி மூலதனத்தின் உதயத்தினுடைய வரலாறு; இதுதான் நிதி மூலதனம் என்ற கருத்தினத்தின் உள்ளடக்கம்.

பண்ட உற்பத்தி, தனியார் சொத்துடைமை ஆகிய இவற்றின் பொது நிலைமைகளில், முதலாளித்துவ ஏகபோகங்களுடைய ''தொழில், வாணிபச் செயற்பாடுகள்'' தவிர்க்க முடியாதபடி நிதி ஆதிக்கக் கும்பலாகிய ஒருசிலரது ஆதிபத்தியத்துக்கு இட்டுச் செல்கின்றன என்பதை இப்பொழுது,

* ரு. ஹில்ஃபர்டிங், **நிதி மூலதனம்**, மாஸ்கோ, *1912*, பக்கங்கள் *338-339*.

நாம் விவரித்தாக வேண்டும். ஜெர்மன்—ஜெர்மன் மட்டு மல்ல—முதலாளித்துவ அறிஞர்கள் எல்லாரும்—ரீசர், ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், லீஃப்மன் முதலானோர்—ஏகாதிபத்தியத்துக்காகவும் நிதி மூலதனத்துக்காகவும் பரிந்து பேசுகிறவர்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். ஒருசிலராலாகிய ஆதிக்கக் கும்பல் உருவாகியதன் ''இயந்திரவியல்'', அதனுடைய செயல்முறைகள், ''நேர் வழியிலும் கேடார்ந்த வழியிலும்'' வரப்பெறும் அதன் வருமானங்களது பருமன், நாடாளுமன்றங்களுடன் அதற்குள்ள தொடர்புகள், இத்தியாதி விவரங்களைப் புலப்படுத்திக் காட்டுவதற்குப் பதில் இவர்கள் மூடிமறைக்கிறார்கள், அல்லது பூசி மெழுகுகிறார்கள். இந்த ''இக்கட்டான பிரச்சினைகளை'' அவர்கள் தட்டிக் கழிக்கிறார்கள்; இதன் பொருட்டு படாடோபமான, தெளிவற்ற தொடர்களைக் கையாளுகிறார்கள், வங்கி டைரக்டர்களது ''பொறுப்புணர்ச்சிக்கு'' அழைப்பு விடுக்கிறார்கள், பிரஷ்ய அதிகாரிகளது ''கடமையுணர்ச்சியை'' மெச்சிப் புகழ்கிறார்கள், ஏகபோகங்களை ''மேற்பார்வையிடுவதற்கும்'' ''ஒழுங்கு படுத்துவதற்குமான'' அறவே நகைக்கத்தக்கவையான நாடாளுமன்ற மசோதாக்களின் அற்ப விவரங்களை எல்லாம் ஆழ்ந்த முறையில் பரிசீலிக்கிறார்கள், உதாரணமாய்ப் பேராசிரியர் லீஃப்மன் வந்தடையும் கீழ்க்கண்ட ''அறிவார்ந்த'' இலக்கணத்தையொத்த தத்துவங்களை எடுத்துரைத்து வேடிக்கை காட்டுகிறார்கள்: **''வாணிபம் எனப்படுவது பண்டங்களின் சேகரம், சேமிப்பு, வழங்கல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு தொழிலாகும்.''*** (கொட்டை எழுத்துகளைக் கொண்டு அளிக்கப்படும் அழுத்தம் பேராசிரியருடையது)... பரிவர்த்தனை என்பதையே அறியாத புராதன மனிதனது காலத்திலும் வாணிபம் இருந்ததென்பதாகவும், சோஷலிசத்திலும் இருக்குமென்பதாகவுமே இதிலிருந்து வரப் பெறும்!

ஆனால், நிதியாதிக்கக் கும்பலின் பயங்கர ஆதிபத்தியத்தைப் பற்றிய பயங்கர உண்மைகள் அப்பட்டமாகவே கண் முன்னால் தெரிவதால் எல்லா முதலாளித்துவ நாடுகளிலும்—

---

* *R. Liefmann*, முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 476.

அமெரிக்காவிலும் பிரான்சிலும் ஜெர்மனியிலும்—இவை குறித்து வரிசையாகப் பல புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. இவை யாவும் முதலாளித்துவக் கண்ணேட்டத்திலிருந்தே எழுதப்பட்டவை என்ருலும், இந்த நிதியாதிக்கக் கும்பலைப் பற்றி ஓரளவுக்கு மெய்யான சித்திரத்தையும் விமர்சனத்தையும்—இயற்கையாகவே குட்டிமுதலாளித்துவத் தன்மையவையே—அளிக்கின்றன.

மேலே நாம் சுருக்கமாய்க் குறிப்பிட்ட ''ஓல்டிங் முறை'' தலைமையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஜெர்மன் பொருளியலாளர் ஹெய்மனே யாவருக்கும் முதலாய் இந்த விவகாரத்தைக் கவனத்துக்குக் கொண்டுவந்தவராகச் சொல்லலாம். இதன் சாரப்பொருளை அவர் பின்வருமாறு விவரிக்கிருர்:

''தொழிலிணைவின் தலைமையானது, தலையாய கம்பெனியை'' (நேர் மொழிபெயர்ப்பில்: ''தாய்க் கம்பெனியை'') ''செயலாண்மை புரிகிறது; இந்தக் கம்பெனி துணைக் கம்பெனிகள்மீது'' (''மகள் கம்பெனிகள்மீது'') ''ஆட்சி செலுத்துகிறது; இவை மற்றும் பல துணைக் கம்பெனிகள்மீது'' (''பேரப் பிள்ளைக் கம்பெனிகள்மீது'') ஆளுமை புரிகின்றன, இப்படித் தொடர்ந்து செல்கிறது. இவ்விதம், ஒப்பளவில் சிறிய மூலதனத்தைக் கொண்டே உற்பத்தியின் மிகப் பெரிய அரங்குகளில் ஆதிக்கம் புரிவது சாத்தியமாகிறது. உண்மையில், மூலதனத்தில் 50 சதவிகிதத்தை ஒல்டிங்காக பெற்றிருப்பது ஒரு கம்பெனியை அடக்கி ஆளுவதற்கு போதுமென்ருல், இரண்டாவது துணைக் கம்பெனிகளில் எண்பது லட்சம் மூலதனத்தை அடக்கி ஆளுவதற்குத் தொழிலிணைவின் தலைமைக்குப் பத்து லட்சமே தேவைப்படுகிறது. தவிரவும் இந்தப் பின்னல் இணைப்பு விரிந்து சென்ருல், பத்து லட்சத்தைக் கொண்டு ஒரு கோடி அறுபது லட்சத்தையும், 3 கோடி இருபது லட்சத்தையும், இதே வரிசையில் பிறவற்றையும் பிடிக்குள் கொண்டு வருவது சாத்தியமாகிறது.''*

* Hans Gideon Heymann, *Die gemischten Werke im deutschen Grosseisengewerbe*, Stuttgart, 1904, பக்கங்கள் 268-269.

உண்மையில், ஒரு கம்பெனியின் விவகாரங்கள் மீது நெறியாண்மை செலுத்த அதன் பங்குகளில் 40 சதவிகிதத்தை உடைமையாகக் கொண்டிருந்தாலே போதும்* என்பதை அனுபவம் தெளிவுபடுத்துகிறது. ஏனெனில் சிதறுண்டுள்ள சிறு பங்குதாரர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் பொது மன்றக் கூட்டங்களுக்கு வந்து கலந்து கொள்வது போன்றதெல்லாம் நடைமுறையில் சாத்தியமாய் இருப்பதில்லை. பங்குகள் உடைமையானது ''ஜனநாயகமயம் ஆக்கப்படுவதன்'' விளைவாக ''மூலதனம் ஜனநாயகமயம் ஆக்கப்படும்'' என்றும் சிறுதிறப் பொருளுற்பத்தியின் பங்கும் முக்கியத்துவமும் அதிகரிக்கும் என்றும் இன்ன பலவாறும் முதலாளித்துவக் குதர்க்கவாதிகளும் ''சமூக-ஜனநாயகவாதிகள்'' எனக் கூறிக் கொண்டு சந்தர்ப்பவாதிகளாக இருப்போரும் எதிர் பார்த்த போதிலும், (அல்லது எதிர்பார்ப்பதாகச் சொல்லிக் கொண்ட போதிலும்), உண்மையில் இது நிதியாதிக்கக் கும்பலின் ஆதிபத்திய வலிமையை அதிகமாக்கிச் செல்வதற்கான வழிகளில் ஒன்றாகவே இருக்கிறது. அதிக முன்னேற்றம் பெற்ற, அல்லது அதிக ''அனுபவம் வாய்ந்த'' முதிய முதலாளித்துவ நாடுகளில் சட்டமானது இக்காரணத்தினால்தான் சிறு மதிப்புகளிலான பங்குகளை வெளியிட அனுமதி அளிக்கிறது என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிட வேண்டும். ஜெர்மனியில், ஓராயிரம் மார்க்குக்கும் குறைவான மதிப்புகளில் பங்குகளை வெளியிடுவதைச் சட்டம் அனுமதிக்கவில்லை; ஆகவே ஜெர்மன் நிதியாதிக்கச் சீமான்கள் ஒரு பவுன் மதிப்பில் (=20 மார்க், சுமார் 10 ரூபிள்) பங்குகள் வெளியிடப்படுவதை அனுமதிக்கின்ற இங்கிலாந்தைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். ''ஒரு பவுன் பங்குதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குரிய அடியாதாரம்''** என்று ஜெர்மனியின் மிகப் பெரியதொரு தொழிலதிபரும், ''நிதித் துறை மன்னனும்'' ஆகிய சீமென்ஸ் 1900 ஜூன் 7ல்

* Liefmann, *Beteiligungsges. etc.* முதற் பதிப்பு, பக்கம் 258.

** Schulze-Gaevernitz, *Grdr. d. S.-Oek.* என்ற வெளியீட்டில், V, 2, பக்கம் 110.

ரைஹ்ஸ்டாக்கில் கூறினுர். ருஷ்ய மார்க்சியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகப் கருதப்படுகிறவரும், ஏகாதிபத்தியம் என்பது குறிப்பிட்ட ஒரு தேசத்துக்குரிய ஒரு கெட்ட பழக்கமாகுமென நம்புகிறவருமாகிய மதிப்பிழந்த ஓர் எழுத்தாளரைக்[18] காட்டிலும், இந்த வியாபாரி ஏகாதிபத்தியத்தை மேலும் ஆழமாகவும், மேலும் அதிக அளவுக்கு ''மார்க்சிய வழியிலும்'' புரிந்து வைத்திருக்கிருர்....

ஆனுல் ''ஒல்டிங் முறையானது'' ஏகபோகக்காரர்களின் வலிமையை பிரம்மாண்டமாக அதிகமாக்குவதற்கு உதவி புரிவது மட்டுமின்றி, பல வகைப்பட்ட மோசடியான, அசிங்கமான தந்திர முறைகளையும் அவர்கள் துணிந்து கையாண்டு பொது மக்களை ஏமாற்றுவதற்கும் வகை செய்கிறது. ஏனெனில் சட்டத்தின் பிரகாரம், ''தாய்க் கம்பெனியின்'' டைரக்டர்கள் ''மகள் கம்பெனி'' சம்பந்தமாகப் பொறுப்புடையவர்களாகக் கருதப்படவில்லை, ''மகள் கம்பெனி'' ''சுயேச்சையான ஒன்ருகக்'' கருதப்படுகிறது; ஆகவே அவர்கள் ''மகள் கம்பெனியைத்'' தமது சாதனமாகக் கொண்டு எதையும் ''சாதித்துக் கொள்ள'' முடியும். *Die Bank* என்ற ஜெர்மன் சஞ்சிகையின் 1914 மே மாத இதழிலிருந்து எடுக்கப்பட்ட ஓர் உதாரணம்:

''கேசெலிலுள்ள 'ஸ்பிரிங் எஃகுக் கம்பெனி' சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மனியின் மிகவும் லாபகரமான தொழில் நிலையங்களில் ஒன்ருகக் கருதப்பட்டது. மோசமான நிர்வாகத்தினுல் அதன் லாப ஈவுகள் 15 சதவிகிதத்திலிருந்து சூன்யமாகச் சரிந்து போயின. இந்தக் கம்பெனியின் மேலாளர் அவை, பங்குதாரர்களைக் கலந்து ஆலோசிக்காமலே தனது 'மகள் கம்பெனிகளில்' ஒன்ருன ஹாசியா கம்பெனிக்கு அறுபது லட்சம் மார்க் தொகையைக் கடனுகத் தந்ததாய்த் தெரிகிறது. இந்த ஹாசியா கம்பெனி சில லட்சம் மார்க்கே பெயரளவிலான மூலதனம் கொண்டது. 'தாய்க் கம்பெனியின்' மூலதனத்தைப் போல் ஏறத்தாழ மூன்று மடங்காகிய இந்தக் கடனைப் பற்றி அதன் இருப்புநிலைக் குறிப்புகளில் குறிக்கப்படவே இல்லை. இப்படிக் குறிக்காமல் விட்டது சட்டத்துக்கு விரோதமான செயல் அல்ல, கம்பெனிச் சட்

டத்தின் எந்த அம்சத்தையும் மீருத ஒன்ருதலால் முழுதாய் இரண்டு ஆண்டுக் காலம் வரை இப்படி மறைத்து வைக்க முடிந்தது. இந்தக் கம்பெனியின் மேலாளர் அவையின் தலைவர், பொறுப்பு வாய்ந்த அதிபதியாக இந்தப் பொய்யான இருப்புநிலை குறிப்புகளில் கையொப்பமிட்டு வந்த இவர், கேசெல் வாணிபச் சங்கத்தின் தலைவராக இருந்தார், இன்றும் இருந்து வருகிருர். ஹாசியா கம்பெனிக்குத் தரப்பட்ட கடனைப் பற்றி வெகு நாட்களுக்குப் பிறகே, பங்குதாரர்களுக்குத் தெரிய வந்தது; கடன் தந்தது தவருகுமென நடைமுறையில் நிரூபணமான பிறகே...'' (தவறு என்னும் சொல்லுக்கு இவ்வாசிரியர் மேற்கோள் குறிகளிட்டிருக்க வேண்டும்)... '' 'ஸ்பிரிங் எஃகுக் கம்பெனியின்' பங்குகளை விவரம் அறிந்தவர்கள் தம் கைகளிலிருந்து தொலைத்துக் கட்டிக் கொண்டிருந்ததால் அதன் பெறுமானம் ஏறத்தாழ 100 சதவிகிதம் சரிந்து விழுந்த பிறகே பங்குதாரர்களுக்கு உண்மை தெரிய வந்தது...

...''கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்ற இருப்புநிலைக் குறிப்புத் தக்கடிவித்தைக்கு இனமாதிரியான இந்த எடுத்துக்காட்டு, இக்கம்பெனிகளின் டைரக்டர் போர்டுகள் தனிப்பட்ட தொழிலதிபர்களைப் போல் கவலைப்படாமல் மெத்தனமாக ஆபத்தான செயற்பாடுகளில் இறங்கத் தயாராயிருப்பதன் காரணத்தை விளக்குகிறது. இருப்புநிலைக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கான நவீன முறைகள், சந்தேகத்துக்குரிய செயற்பாடுகள் சாதாரணப் பங்குதாரரின் கண்ணில் படாதபடி மறைக்கப்படுவதற்கு வகை செய்வதுடன், இவற்றில் மிகவும் அதிகமாகச் சம்பந்தப்பட்டவர்கள் உரிய காலத்தில் தங்களது பங்குகளை விற்பனை செய்து, வெற்றிபெருத ஊக வாணிகத்தின் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும் வசதி செய்கின்றன, ஆனல் தனிப்பட்ட தொழிலதிபர் தான் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் தானே பலியாகிவிடும் அபாயத்துக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது....

''கூட்டுப் பங்குக் கம்பெனிகள் பலவற்றின் இருப்புநிலைக் குறிப்புகள் மத்திய காலத்திய பாலிம்ப்செஸ்டுகளை நமக்கு

நினைவூட்டுகின்றன. பாலிம்ப்செஸ்டுகளில் கண்ணுக்குத் தெரியும் வாசகத்தை முதலில் அழித்து அகற்றியாக வேண்டும், அதன் பிறகுதான் ஆவணத்தின் மெய்ப் பொருளைத் தெரிவிக்கும் மற்றொரு வாசகம் அடியில் இருப்பது தெரிய வரும்.'' (பாலிம்ப்செஸ்டுகள் என்பவை மூலவாசகம் களைத்து அகற்றப்பட்டு அதன் மேல் இன்னொரு வாசகம் பொறிக்கப்பட்ட தோல் ஆவணங்களாகும்.)

''இருப்புநிலைக் குறிப்புகளைப் புரியாத புதிராக்குவதற்காகக் கையாளப்படும் மிக எளியதும், ஆகவே மிகவும் சகஜமானதுமாகிய செயல்முறை என்னவெனில், தனியொரு கம்பெனியாக இருப்பதை—'மகள் கம்பெனிகளை' நிறுவியோ, அவற்றைச் சேர்த்திணைத்துக் கொண்டோ—பல பகுதிகளாகப் பிரித்துக் காட்டுவதுதான். சட்ட பூர்வமானதும் சட்ட விரோதமானதும் ஆகிய பல்வேறு நோக்கங்களுக்கும் இந்தச் செயல்முறையால் ஏற்படும் அனுகூலங்கள் வெளிப்படையாகவே தெரிகின்றன. ஆகவே இந்தச் செயல்முறையைக் கையாளாத பெரிய கம்பெனிகள் அரிய விதிவிலக்கே ஆகும்.''*

இந்தச் செயல்முறையை விரிவாகக் கையாளும் ஒரு பெரிய ஏகபோகக் கம்பெனிக்கு உதாரணமாக, பிரசித்தி பெற்ற ''ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியை'' (A. E. G. என்பதான இதைப் பற்றிப் பிற்பாடு திரும்பவும் குறிப்பிடுவேன்) இவ்வாசிரியர் எடுத்துரைக்கிறார். 1912ல் இந்தக் கம்பெனி 175லிருந்து 200 வரையான பிற கம்பெனிகளில் பங்குகளைத் தனது உடைமையாகக் கொண்டு, இயற்கையாகவே இவற்றின் மீது ஆதிக்கம் புரிந்ததென்றும், இவ்விதம் மொத்தம் சுமார் 150 கோடி மார்க்குகளான மூலதனத்தைத் தன் பிடியில் கொண்டிருந்ததென்றும் மதிப்பிடப்பட்டது.**

* L. Eschwege, „Tochtergesellschaften," *Die Bank*, 1914, 1, பக்கம் 545 (லூ. எஷ்வேகெ, ''மகள் கம்பெனிகள்'', **வங்கி** சஞ்சிகையிலிருந்து.—ப-ர்.).

** Kurt Heinig, „Der Weg des Elektrotrusts", *Neue Zeit* 1912, 30. Jahrg., 2, பக்கம் 484 (குர்ட் ஹைனிக், ''மின்சார டிரஸ்டின் பாதை'', **புதியக் காலம்**, 1912, 30ஆவது ஆண்டு.—ப-ர்.).

நல்லெண்ணங் கொண்ட பேராசிரியர்களும் அதிகாரிகளும்—அதாவது, முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கும் சிங்காரித்துக் காட்டுவதற்கும் வேண்டிய நல்லெண்ணத்தில் ஊறித் திளேக்கும் இவர்கள்—பொது மக்களுக்கு விளக்கிக் கூறி உரை நிகழ்த்துகிருர்களே, அந்தக் கண்காணிப்பு விதிகளும், இருப்புநிலேக் குறிப்புகளேப் பிரசுரித்தலும், வரையறுக்கப்பட்ட வடிவில் இருப்புநிலேக் குறிப்புகளே வகுத்தமைத்தலும், கணக்குகளேப் பொதுத் தணிக்கையாளர்கள் மூலம் தணிக்கை செய்தலும் இன்ன பிறவும் எவ்வித பயனும் அளிக்கவில்லே. ஏனெனில் தனியார் சொத்து புனிதமானது; பங்குகளே வாங்கவோ விற்கவோ பரிவர்த்தனே செய்யவோ அடகுவைக்கவோ, இன்ன பிற செய்யவோ முடியாதபடி யாரும் தடுக்கப்படலாகாது.

பெரிய ருஷ்ய வங்கிகளில் எவ்வளவு தூரம் இந்த ''ஓல்டிங் முறை'' வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை எ.அகாட் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களிலிருந்து முடிவு செய்யலாம். பதினேந்து ஆண்டுகளுக்கு இவர் ருஷ்ய-சீன வங்கியில் ஓர் அதிகாரியாக இருந்தவர், 1914 மே மாதத்தில் இவர் வெளியிட்ட புத்தகத்துக்கு ''பெரிய வங்கிகளும் உலகச் சந்தையும்''* என்று அவ்வளவாகச் சரியல்லாத தலேப்பிடப்பட்டிருக்கிறது. பெரிய ருஷ்ய வங்கிகளே இரண்டு முக்கியத் தொகுப்புகளாக இவ்வாசிரியர் பிரிக்கிருர்: அ) ''ஓல்டிங் முறையின்'' கீழ் வரும் வங்கிகள், ஆ) ''சுயேச்சையான'' வங்கிகள்—ஆனல் ''சுயேச்சை'' என்பது வெளிநாட்டு வங்கி

---

* E. Agahd, *Grossbanken und Weltmarkt. Die wirtschaftliche und politische Bedeutung der Grossbanken im Weltmarkt unter Berücksichtigung ihres Einflusses auf Russlands Volkswirtschaft und die deutsch-russischen Beziehungen.* Berlin, 1914 (எ. அகாட், ''பெரிய வங்கிகளும் உலகச் சந்தையும். உலகச் சந்தையில் பெரிய வங்கிகளுக்குள்ள பொருளாதார, அரசியல் முக்கியத்துவமும், ருஷ்ய தேசியப் பொருளாதாரத்தின் மீதும் ஜெர்மானிய-ருஷ்ய உறவுகள் மீதும் இந்தப் பெரிய வங்கிகளுக்குள்ள செல்வாக்கு குறித்தும்'', பெர்லின்.—ப-ர்.).

களிலிருந்தான சுயேச்சை என்று பொருள்படும்படித் தான் தோன்றித்தனமாய்க் கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நாட்டைச் சேர்ந்த பெரிய வெளிநாட்டு வங்கிகளின் ''ஒல்டிங்குகளேயும்'' ஆதிக்கத்தையும் கருத்தில் கொண்டு, முதல் தொகுப்பை 1) ஜெர்மன் ஒல்டிங்குகள், 2) பிரிட்டிஷ் ஒல்டிங்குகள், 3) பிரெஞ்சு ஒல்டிங்குகள் என்பதாக மூன்று உப-தொகுப்புகளாக இவ்வாசிரியர் பிரிக்கிருர். வங்கிகளின் மூலதனத்தை ''உற்பத்தியாற்றலுள்ள வழியில்'' முதலீடு செய்யப்பட்டது (தொழில் நிலேயங்களிலும் வாணிக நிறுவனங்களிலும்) என்றும், ''ஊக வாணிக வழியில்'' முதலீடு செய்யப்பட்டது (பங்குமாற்றுச் சந்தையிலும், நிதித் துறைச் செயற்பாடுகளிலும்) என்றும் இவ்வாசிரியர் பிரிக்கிருர். முதலாளித்துவத்தில் முதல் வகையைச் சேர்ந்த முதலீட்டை இரண்டாவது வகையைச் சேர்ந்த முதலீட்டிலிருந்து வேறுபடுத்துவதும், இரண்டாவது வகையை ஒழித்திடுவதும் சாத்தியமென்பதாக இவர் தமது குட்டிமுதலாளித்துவச் சீர்திருத்தவாதக் கண்ணேட்டம் காரணமாக அனுமானித்துக் கொள்கிருர்.

(அவர் தரும் புள்ளிவிவரங்களேப் பக்கம் 83ல் காணலாம்.)

இந்தப் புள்ளிவிவரங்களின்படி, பெரிய வங்கிகளது ''நடைமுறை'' மூலதனமாய் இருந்த சுமார் நானூறு கோடி ரூபிளில் முக்கால் பங்குக்கு அதிகமானது, அதாவது முந்நூறு கோடிக்கும் மேற்பட்டது, வெளிநாட்டு வங்கிகளின் ''மகள் கம்பெனிகளாகவே'' உண்மையில் இருந்த வங்கிகளுடையதாய் இருந்தது, இவை முக்கியமாக பாரிஸ் வங்கிகளின் (பிரசித்திபெற்ற மும்மூர்த்திகள்: Union Parisienne, Paris et Pays-Bas, Société Générale), மற்றும் பெர்லின் வங்கிகளின் (குறிப்பாக Deutsche Bank, Disconto-Gesellschaft) ''மகள் கம்பெனிகளாக'' இருந்தன. மிகப் பெரிய ருஷ்ய வங்கிகளில் இரண்டான ருஷ்ய வங்கியும் (வெளிநாட்டு வாணிபத்துக்கான ருஷ்ய வங்கி), சர்வதேசிய வங்கியும் (செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேசிய வாணிப வங்கி) 1906க்கும் 1912க்கும் இடையில் தமது மூலதனத்தை 4

வங்கி உடைமைகள்
(1913 அக்டோபர்-நவம்பருக்கான அறிக்கைகளின்படி)
லட்சம் ரூபிள்களில்

| ருஷ்ய வங்கிகளின் தொகுப்புகள் | முதலீடு செய்யப்பட்ட மூலதனம் | | |
|---|---|---|---|
| | உற்பத்தி ஆற்றலுள்ள வழியில் | ஊக வாணிக வழியில் | மொத்தம் |
| அ 1) நான்கு வங்கிகள்: சைபீரிய வாணிக, ருஷ்ய, சர்வதேசிய, டிஸ்கவுண்டு வங்கிகள் . . . . . | 413.7 | 859.1 | 1,272.8 |
| அ 2) இரண்டு வங்கிகள்: வாணிக-தொழில், ருஷ்ய-பிரிட்டிஷ் . . . | 239.3 | 169.1 | 408.4 |
| அ 3) ஐந்து வங்கிகள்: ருஷ்ய-ஆசிய, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பிரைவேட், அசோவ்-டான், யூனியன் மாஸ்கோ, ருஷ்ய-பிரெஞ்சு வாணிக | 711.8 | 661.2 | 1,373.0 |
| (11 வங்கிகள்) மொத்தம் அ) . . . . | 1,364.8 | 1,689.4 | 3,054.2 |
| ஆ) எட்டு வங்கிகள்: மாஸ்கோ வணிகர்கள், வோல்கா-காமா, ஜங்கர் அண்டு கம்பெனி, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் வாணிக (முன்பு வாவெல்பர்க்), மாஸ்கோ வங்கி (முன்பு ரியாபுஷீன்ஸ்கி), மாஸ்கோ டிஸ்கவுண்ட், மாஸ்கோ வாணிக, மாஸ்கோ பிரைவேட் . | 504.2 | 391.1 | 895.3 |
| (19) வங்கிகள் மொத்தம் | 1,869.0 | 2,080.5 | 3,949.5 |

கோடி 40 லட்சத்திலிருந்து 9 கோடி 80 லட்சம் ரூபிளாக வும், தமது காப்பு நிதியை 1 கோடி 50 லட்சத்திலிருந்து 3 கோடி 90 லட்சம் ரூபிளாகவும் அதிகரித்துக் கொண் டன; இவை ''முக்கால் பங்கு ஜெர்மன் மூலதனத்தைப் பயன்படுத்திக் கொண்டன''. முதலாவது வங்கி பெர்லின் Deutsche Bank ''நிறுவனத்தையும்'', இரண்டாவது பெர்லின் Disconto-Gesellschaft ஐயும் சேர்ந்தனவாய் இருந்தன. பெரும் பான்மைப் பங்குகள் பெர்லின் வங்கிகளுக்குச் சொந்தமான வையாக இருப்பது குறித்தும்,ருஷ்யப் பங்குதாரர்கள் சக்தி யற்றவர்களாக இருப்பது குறித்தும் மதிப்பிற்குரிய அகாட் கடுங் கோபம் கொள்கிருர். மூலதனத்தை ஏற்றுமதி செய் யும் நாடு இயற்கையாகவே திரண்டு வரும் வெண்ணெயை வடித்துக் கொண்டுவிடுகிறது. உதாரணமாக, பெர்லின் Deutsche Bank சைபீரிய வாணிக வங்கியின் பங்குகளை பெர் லின் சந்தையில் பட்டுவாடா செய்யுமுன் ஒரு முழு ஆண்டுக் குத் தனது கையில் வைத்திருந்தது, அதன் பிறகு அவற்றை 100க்கு 193 என்ற விகிதத்தில், அதாவது பங்குகளின் பெய ரளவு மதிப்பைவிட ஏறத்தாழ இரண்டு மடங்கு விலைக்கு விற்று சுமார் 60 லட்சம் ரூபிள் லாபத்தைச்''சம்பாதித்தது''. இந்த லாபத்தைத் ''முன்னேற்றுகிறவரது லாபம்'' என் பதாய் ஹில்ஃபர்டிங் குறிப்பிடுகிருர்.

பிரதான செயின்ட் பீட்டர்ஸ்பர்க் வங்கிகளின் மொத்த ''உள்ளாற்றலை'' நமது நூலாசிரியர் 823 கோடி 50 லட்சம் ரூபிளாக மதிப்பிடுகிருர். ''ஓல்டிங்குகளை'' அல்லது இன்னும் துல்லியமாய்ச் சொல்வதெனில் அன்னிய வங்கிகளது ஆதிக் கத்தின் அளவை அவர் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிருர்: பிரெஞ்சு வங்கிகள்—55 சதவிகிதம், பிரிட்டிஷ் வங்கிகள் —10 சதவிகிதம், ஜெர்மன் வங்கிகள்—35 சதவிகிதம். மொத்தம் $823^1/_2$ கோடி ரூபிளாகிய செயல்படு மூலதனத்தில் 368 கோடி 70 லட்சம் ரூபிள், அதாவது 40 சதவிகிதத்திற்கு மேற்பட்டது, புரோதுகோல், புரோத்மெட் சிண்டிக்கேட்டு களையும்[19] எண்ணெய், உலோக உற்பத்தி, சிமெண்டு தொழில் சிண்டிகேட்டுகளையும் சேர்ந்ததாகுமென இவ்வாசிரியர்

கணக்கிடுகிறார். இவ்வாறாக, முதலாளித்துவ ஏகபோகங்கள் உருவாகியதின் விளைவாய் வங்கி மூலதனமும் தொழில் துறை மூலதனமும் ஒன்றுகலத்தல் ருஷ்யாவிலும் பிரமாதமாய் முன்னேறியிருக்கிறது.

ஒருசிலரது கைகளில் ஒன்றுகுவிந்து நடைமுறையில் ஏகபோக நிலை வகிக்கும் நிதி மூலதனமானது கம்பெனிகளை முன்னேற்றுதல், பங்குகளை வெளியிடுதல், அரசாங்கக் கடன்கள் முதலானவற்றின் மூலம், இடையறாது தொடர்ந்து அதிகரிக்கும் பிரம்மாண்ட லாபங்களை மூட்டை கட்டிக் கொள்கிறது; நிதியாதிக்கக் கும்பலின் ஆதிபத்தியத்தை வலுவாக்கிச் செல்கிறது; மற்றும் ஏகபோகக்காரர்களின் ஆதாயத்துக்காகச் சமுதாயம் முழுவதிலுமிருந்து கப்பம் வசூலிக்கிறது. அமெரிக்க டிரஸ்டுகளின் ''தொழில் முறைகளைப்'' பற்றிக் குறிப்பிடக் கூடிய ஏராளமானவற்றில் ஓர் உதாரணம் வருமாறு, ஹில்ஃபர்டிங் இதை எடுத்துரைக்கிறார்: 65 லட்சம் டாலர் மொத்த மூலதனத்தையுடைய பதினைந்து சிறிய நிறுவனங்களை ஒன்று சேர்த்து 1887ல் ஹாவ்மையர் என்பவர் சர்க்கரை டிரஸ்டை நிறுவினார். இந்த டிரஸ்டின் மூலதனம், அமெரிக்கர்கள் சொல்வதைப்போல ''நீரால் பெருக்கப்பட்டு'' 5 கோடி டாலரென அறிவிக்கப்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் எஃகு டிரஸ்டு இரும்புக் கனிப் பிரதேசங்களை முடிந்த அளவுக்கு வாங்கிச் சேர்த்து எப்படித் தனது எதிர்கால ஏகபோக லாபங்களை எதிர்பார்க்கிறதோ, அதேபோல இந்த ''அமிதமூலதனமாக்கமும்'' ஏகபோக லாபங்களை எதிர் நோக்கியது. உண்மையில் இந்தச் சர்க்கரை டிரஸ்டு ஏகபோக விலைகளை நிர்ணயித்து, ஏழு மடங்கு ''நீரால் பெருக்கப்பட்ட'' மூலதனத்தின்மேல் இவ்வழியில் 10 சதவிகிதம் லாப ஈவு அளிக்கும் அளவுக்கு, அதாவது **டிரஸ்டு நிறுவப்பட்ட போது மெய் நடப்பில்** முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மேல் 70 சதவிகிதம் லாப ஈவு அளிக்கும் அளவுக்கு லாபங்களைப் பெற்றது! 1909ல் இந்தச் சர்க்கரை டிரஸ்டின் மூலதனம் 9 கோடி டாலராகிவிட்டது. இருபத்திரண்டு ஆண்டுகளில் பத்து மடங்குக்கும் அதிகமாக அது தனது மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டுவிட்டது.

பிரான்சில் ''நிதியாதிக்கக் கும்பலின்'' ஆதிபத்தியம் (லிசிஸ் எழுதிய பிரபல புத்தகத்தின் தலைப்பு பிரான்சில் நிதியாதிக்கக் கும்பலை எதிர்த்து என்பது, இதன் ஐந்தாம் பதிப்பு 1908ல் வெளிவந்தது) சொற்ப அளவே வேறான வடிவத்தை ஏற்றது. மிகவும் சக்தி மிக்கனவாகிய நான்கு வங்கிகள், பத்திர வெளியீட்டில் ஒப்பளவிலானது அல்ல, ''முழுமுதலான ஏகபோக நிலை'' வகிக்கின்றன. உண்மையில் இவை ''பெரிய வங்கிகளின் டிராஸ்டாக'' அமைந்துள்ளன. இந்த ஏகபோக நிலையானது பத்திர வெளியீட்டிலிருந்து ஏகபோக லாபங்கள் கிடைக்கும்படி உறுதி செய்கிறது. கடன் வாங்கும் ஒரு நாடு கடன் தொகையில் வழக்கமாய் 90 சதவிகிதத்துக்கு மேல் பெறுவதில்லை. எஞ்சிய 10 சதவிகிதம் வங்கிகளுக்கும் ஏனைய இடைத்தரகர்களுக்கும் போய் விடுகிறது. 40 கோடி பிராங்கு ருஷ்ய-சீனக் கடனிலிருந்து வங்கிகள் 8 சதவிகித லாபம் பெற்றன; ருஷ்யக் (1904) கடனுகிய 80 கோடி பிராங்கிலிருந்து அவற்றுக்குக் கிடைத்த லாபம் 10 சதவிகிதம்; மொரோக்கோ (1904) கடனுகிய 6 கோடி 25 லட்சம் பிராங்கிலிருந்து $18^3/_4$ சதவிகித லாபம் கிடைத்தது. சிறிய கடுவட்டி மூலதனத்துடன் தனது வளர்ச்சியைத் தொடங்கிய முதலாளித்துவம் பிரம்மாண்ட கடுவட்டி மூலதனத்துடன் தனது வளர்ச்சியின் இறுதியை வந்தடைந்து கொண்டிருக்கிறது. ''பிரெஞ்சுக்காரர்கள் ஐரோப்பாவின் கடுவட்டிக்காரர்களாவர்'' என்று லிசிஸ் கூறுகிறூர். பொருளாதார வாழ்வின் சகல நிலைமைகளும் முதலாளித்துவத்தின் இந்த உருமாற்றத்தால் தீவிர மாற்றமடைகின்றன. மாற்றமின்றி நிலையாக இருக்கும் மக்கள் தொகையுடனும் தேங்கிய தொழில், வாணிகம், கப்பல் போக்குவரத்துடனும் ''நாடு'' கடுவட்டிக் கடன்கள் மூலம் செல்வந்தனுக முடியும். ''80 லட்சம் பிராங்கை மூலதனமாகக் கொண்ட ஐம்பது ஆட்கள் நான்கு வங்கிகளில் வைப்புக் கணக்கிலுள்ள 200 கோடி பிராங்குகளைத் தம் பிடிக்குள் கொண்டுவர முடியும்''. ஏற்கெனவே நமக்கு பரிச்சயமாகியிருக்கிற ''ஒல்டிங் முறையும்'' இதே விளைவுக்குத்தான் இட்டுச் செல்கிறது. உதாரணமாக, மிகப் பெரிய வங்கிகளில் ஒன்றுகிய Société Générale

தனது "மகள் கம்பெனியான" "எகிப்தியச் சர்க்கரைச் சுத்திகரிப்பு ஆலைக்கு" 64,000 பத்திரங்களை வழங்குகிறது. பத்திரங்கள் 150 சதவிகித மதிப்பில் வழங்கப்படுகின்றன; அதாவது வங்கியானது பிராங்குக்கு 50 சென்ட்டைம் லாபம் பெறுகிறது. இந்தப் புதியக் கம்பெனியின் லாப ஈவுகள் போலியானவை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. "பொது மக்கள்" 9 கோடியிலிருந்து 10 கோடி பிராங்கு வரை இழக்க நேர்ந்தது. Société Généraleஇன் டைரக்டர்களில் ஒருவர் "சர்க்கரைச் சுத்திகரிப்பு ஆலையின்" டைரக்டர் போர்டு உறுப்பினர். "பிரெஞ்சுக் குடியரசு ஒரு நிதியாதிக்க முடியரசு", "அது நிதியாதிக்கக் கும்பலின் முழுநிறை ஆதிபத்தியமாகும், இந்தக் கும்பல் பத்திரிகைகள் மீதும் அரசாங்கத்தின் மீதும் ஆதிபத்தியம் செலுத்துகிறது"* என்ற முடிவுக்கு ஆசிரியர் வரவேண்டியிருப்பதில் ஆச்சரியமில்லை.

நிதி மூலதனத்தின் பிரதான செயல்களில் ஒன்றுகிய பத்திர வெளியீட்டிலிருந்து மிதமிஞ்சிய உயர் விகிதத்தில் கிடைக்கும் லாபமானது, நிதியாதிக்கக் கும்பலை வளர்த்திடுவதற்கும் வலுவாக்குவதற்கும் மிக முக்கிய பங்காற்றுகிறது. "அன்னியக் கடன்களைத் திரட்டுவதில் கிடைக்கும் லாபங்களுக்கு ஓரளவேனுங்கூட சமமான லாபங்களைத் தரக்கூடிய இவ்வகைப்பட்ட தொழில் ஒன்றுகூட நாட்டினுள் இல்லை" என்று *Die Bank* சஞ்சிகை கூறுகிறது.**

"பிணையங்களது வெளியீட்டிலிருந்து கிடைப்பதுடன் ஒப்பிடத்தக்க லாபங்களை வேறு எந்த வங்கிச் செயற்பாடும் தருவதில்லை." ஜெர்மன் பொருளியலாளர் ஏட்டின்படி, தொழில் துறை பங்குகளது வெளியீட்டிலிருந்து கிடைத்த சராசரி வருடாந்தர லாபங்கள் வருமாறு:

---

* Lysis, *Contre l'oligarchie financière en France*, 5 éd., Paris, 1908, pp. 11, 12, 26, 39, 40, 48 (லிசிஸ், "பிரான்சில் நிதியாதிக்கக் கும்பலை எதிர்த்து", 5ஆவது பதிப்பு, பாரிஸ், 1908, பக்கங்கள் 11, 12, 26, 39, 40, 48.— ப-ர்.).

** *Die Bank*, 1913, 7, S. 630.

| | சதவிகிதம் |
|---|---|
| 1895 . . . . . . . | 38.6 |
| 1896 . . . . . . . | 36.1 |
| 1897 . . . . . . . | 66.7 |
| 1898 . . . . . . . | 67.7 |
| 1899 . . . . . . . | 66.9 |
| 1900 . . . . . . . | 55.2 |

''1891லிருந்து 1900 வரையிலான பத்து ஆண்டுகளில் ஜெர்மன் தொழிற் துறை பங்குகளது வெளியீட்டின் மூலம் நூறு கோடிக்கும் அதிகமான மார்க்குகள் 'சம்பாதிக்கப் பட்டன' ''.*

தொழில் உயர்வேற்றக் காலங்களில் நிதி மூலதனத்தின் லாபங்கள் அளவுகடந்து அதிகரிக்கின்றன; ஆனால் மந்தக் காலங்களில் திடமில்லாத, சிறிய தொழில் நிலையங்கள் இல்லாதொழிகின்றன. பெரிய வங்கிகள் அற்ப விலைக்கு வாங்கி அவற்றில் ''ஒல்டிங்குகளை'' பெறுகின்றன அல்லது அவற்றின் ''புனர்நிர்மாணத்துக்கும்'' ''புனருத்தாரணத் துக்கு''மாகிய லாபகரமான திட்டங்களில் ''பங்கெடுத்துக் கொள்கின்றன''. நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் நிறு வனங்களைப் ''புனர்நிர்மாணம்'' செய்கையில் ''பங்கு மூல தனம் குறைத்து எழுதப்படுகிறது, அதாவது லாபங்கள் முன் னிலும் குறைவான மூலதனத்தின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன; இந்தக் குறைந்த அடிப்படையிலே யே தொடர்ந்து கணக்கிட்டுச் செல்லப்படுகின்றன. அல்லது வருவாயானது பூஜ்ஜியமாகிவிடுகையில் புதிய மூலதனம் தரு விக்கப்படுகிறது; இந்தப் புதிய மூலதனம் குறைந்த பலனுக் குரிய பழைய மூலதனத்துடன் சேர்ந்து போதுமான வரு வாய் கிடைக்க வகை செய்யும்.'' ஹில்ஃபர்டிங் மேலும் சொல்கிறார்: ''இடைக்குறிப்பாய்க் கூற வேண்டியது என்ன

* Stillich, முன்குறிப்பிட்ட நூல், பக்கம் 143; W. Sombart, *Die deutsche Volkswirtschaft im 19. Jahrhundert*, 2, Aufl., 1909, பக்கம் 526, Anlage 8 (வெ. சோம்பார்ட், ''பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மன் தேசப் பொருளாதாரம்'', 2ம் பதிப்பு, 1909, பக்கம் 526, அனுபந்தம் 8.— ப-ர்.).

வெனில், இந்தப் புனருத்தாரணம், புனர்நிர்மாணம் எல்லாம் வங்கிகளைப் பொறுத்தவரை இரு வழிகளில் முக்கியத்துவம் உடையனவாகின்றன: முதலாவதாக, லாபகரமான செயற்பாடுகள் என்ற முறையிலும்; இரண்டாவதாக, இன்னல்களில் சிக்குண்ட கம்பெனிகளைத் தமது பிடிக்குள் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் என்ற முறையிலும்.''*

இதோ ஓர் உதாரணம்: டோர்ட்மன்டிலுள்ள யூனியன் சுரங்கக் கம்பெனி 1872ல் நிறுவப்பட்டது. சுமார் 4 கோடி மார்க்குகளுக்குப் பங்கு மூலதனம் வெளியிடப்பட்டது. முதலாவது ஆண்டுக்கு அது 12 சதவிகிதம் லாப ஈவு அளித்ததும், பங்குகளின் நிலைவர விலை 170 ஆக உயர்ந்தது. இப்படித் திரண்ட வெண்ணெயை நிதி மூலதனம் அள்ளிக் கொண்டது, 2 கோடி 80 லட்சம் மார்க் வரையிலான ஓர் அற்ப தொகையைச் சம்பாதித்தது. இந்தக் கம்பெனியின் பிரதான புரவலராக இருந்தது, மிகவும் வெற்றிகரமாக 30 கோடி மார்க் மூலதனத்தைத் திரட்டிக் கொண்டது மிகப் பெரிய ஜெர்மன் வங்கியான அதே Disconto-Gesellschaft தான். பிற்பாடு இந்த யூனியன் சுரங்கக் கம்பெனியின் லாப ஈவுகள் பூஜ்ஜியமாகக் குறையலாயின; மூலதனம் ''குறைத்து எழுதப்படுவதற்கு'', அதாவது முழு மூலதனத்தையும் இழந்து விடாமலிருப்பதற்காக ஒரு பகுதியை இழப்பதற்குப் பங்குதாரர்கள் இசைய வேண்டியதாயிற்று. தொடர்ச்சியான ''புனருத்தாரணங்கள்'' மூலமாக முப்பதாண்டுக் காலத்தில் 7 கோடி 30 லட்சம் மார்க்குகளுக்கும் அதிகமாக யூனியனின் கணக்குப் புத்தகங்களிலிருந்து கழித்து எழுதப்பட்டன. ''தற்போது இக்கம்பெனியின் ஆதிப் பங்குதாரர்களிடம் அவர்களது பங்குகளின் பெயரளவு மதிப்பில் 5 சதவிகிதம் மட்டுமே இருக்கிறது''**,—ஆனால் வங்கிகள் ஒவ்வொரு ''புனருத்தாரணத்திலிருந்தும்'' ''சம்பாதித்துக் கொண்டு விட்டன''.

---

* நிதி மூலதனம், பக்கம் 172.

** Stillich, முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 138; Liefmann, பக்கம் 51.

துரிதமாக வளர்ந்து வரும் பெரிய நகரங்களின் சுற்று வட்டாரங்களில் இருக்கும் நிலங்களில் ஊக வாணிகம் செய்வது நிதி மூலதனத்துக்குக் குறிப்பிடத்தக்க அளவுக்கு லாபகரமான செயற்பாடாய் அமைகிறது. இங்கு வங்கிகளது ஏகபோகம் நிலவாடகை ஏகபோகத்துடனும் போக்குவரத்துச் சாதனங்களது ஏகபோகத்துடனும் ஒன்றிணைகிறது; ஏனெனில், நில விலையின் ஏற்றமும் நிலத்தைக் கூறு பிரித்து லாபகரமாய் விற்பதற்கான சாத்தியப்பாடும் பிறவும் நகரின் மையப் பகுதியுடன் இவற்றை இணைக்கும் நல்ல போக்குவரத்துச் சாதனங்களையே முக்கியமாகப் பொறுத்திருக்கின்றன. இந்தப் போக்குவரத்துச் சாதனங்கள், ஒல்டிங் முறை மூலமாகவும் டைரக்டர் மன்றங்களிலான இடங்களின் விநியோகம் மூலமாகவும் இதே வங்கிகளுடன் இணைப்பு கொண்டிருக்கும் பெரிய கம்பெனிகளின் கையில் இருக்கின்றன. *Die Bank* சஞ்சிகையில் எழுதும் ஜெர்மன் எழுத்தாளர் லூ. எஷ்வேகெ, தாவரச் சொத்து வாணிகத் துறை, அடமானங்கள் முதலானவற்றில் தனிக் கவனம் செலுத்தி ஆராய்ந்துள்ள இவர் கூறும் ''புதைசேறு'' இதன் விளைவாய் தோற்றுவிக்கப்படுகிறது, நகரச் சுற்றுவட்டார மனைக்கட்டுகளில் வெறித்தனமான ஊக வாணிபமும் பெர்லின் நிறுவனமான போஸ்வாவ் அன்ட் கினுவர் போன்ற கட்டிடக் கம்பெனிகளின் தகர்வும் ஏற்படக் காண்கிறோம். இந்தக் கம்பெனி ''வன்மையும் திண்மையும்'' வாய்ந்த Deutsche Bankஇன் உதவியுடன் 10 கோடி மார்க் வரை திரட்டிச் சேர்த்தது—இந்த வங்கி ''ஒலடிங்'' முறையின் மூலம்தான் செயல்பட்டது, அதாவது திரைமறைவில் இரகசியமாகச் செயலாற்றியது—1 கோடி 20 லட்சம் மார்க்குகள் ''மட்டுமேயான'' நஷ்டத்துடன் இதிலிருந்து வெளிப்பட்டது. ஆனால் நாசத்துக்கு உள்ளாகும் சிறு உடைமையாளர்களும் தொழிலாளர்களும் இந்தப் பித்தலாட்டக் கட்டிடக் கம்பெனிகளிடமிருந்து ஏதும் பெற முடியாமற் போகிறது. மனைக்கட்டுப் பட்டாக்கள், கட்டிடம் கட்டுவதற்கான உரிமைகள் முதலானவற்றின் வழங்கீட்டில் ஆளுகை பெறுவதற்காக ''நேர்மையான'' பெர்லின் போலீசுடனும் நிர்வாகத்துடனும் மொசடியான

பேர உடன்பாடுகளும், இப்படி மற்றும் பலவும் ஏற்படக் காண்கிறோம்.*

ஐரோப்பியப் பேராசிரியர்களும் தூய நோக்கங் கொண்ட முதலாளிமார்களும் கபடமான முறையில் கண்டிக்கும் ''அமெரிக்க நெறிமுறை'' நிதி மூலதனச் சகாப்தத்தில் எந்த நாட்டிலும் எந்தப் பெரிய நகரும் பாக்கியில்லாமல் நடைமுறை நெறியாகிவிடுகிறது.

*1914*ன் தொடக்கத்தில், பெர்லினில் ஒரு ''போக்குவரத்து டிரஸ்டை'' நிறுவுவது குறித்து, அதாவது நகர மின்சார ரயில்வே, டிராம்வே கம்பெனி, பஸ் கம்பெனி ஆகிய பெர்லினின் மூன்று போக்குவரத்து நிறுவனங்களுக்குமிடையில் ''நலவுரிமை ஒற்றுமையை'' உண்டாக்குவது குறித்துப் பேசப்பட்டது. *Die Bank* இவ்வாறு எழுதியது: ''பஸ் கம்பெனியில் பெரும் பகுதி பங்குகள் ஏனைய இரு போக்குவரத்துக் கம்பெனிகளால் வாங்கப்பட்டு விட்டது தெரிந்தது முதலாய் இந்தத் திட்டம் சிந்திக்கப்பட்டு வந்தது என்பதை நாம் அறிவோம்... இந்த நோக்கத்தைப் பின்பற்றுவோர் போக்குவரத்து வசதிகளை ஒன்றிணைப்பதன் மூலம் சிக்கனங்கள் ஏற்படுமென்றும் இவற்றில் ஒரு பகுதி உரியகாலத்தில் பொது மக்களுக்கு ஆதாயமளிப்பதாக இருக்குமென்றும் கூறுவதை நாம் முற்றும் நம்பலாம். ஆனால் நிறுவப்படுகின்ற போக்குவரத்து டிரஸ்டுக்குப் பின்னால் வங்கிகள் இருப்பதானது இந்தப் பிரச்சினையைச் சிக்கலாக்குகின்றது. இந்த வங்கிகள் தமது ஏகபோகமாக்கிக் கொண்டிருக்கும் போக்குவரத்துச் சாதனங்களைத் தாம் விரும்பினால் தமது தாவரச் சொத்து வாணிபத்தின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டுவிட முடியும். இத்தகைய ஊகம் நியாயமானதே என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, நகர மின்சார ரயில்வே கம்பெனி நிறுவப்படுவதை எந்த வங்கி ஊக்குவித்ததோ அந்தப் பெரிய வங்கியின் நலன்கள் அக்கம்பெனி நிறுவப்பட்ட காலத்திலேயே அதனுடன் பிணைந்திருந்ததை நினைவுபடுத்திக் கொண்

---

* *Die Bank*, 1913, பக்கம் *952*, L. Eschwege, *Der Sumpf* (லூ. எஷ்வேகெ, ''புதைசேறு''.— ப-ர்.); அதே சஞ்சிகையில், *1912*, *1*, பக்கம் *223*உம் அடுத்த பக்கங்களும்.

டால் போதும். அதாவது: இந்தப் போக்குவரத்து நிறுவனத்தின் நலன்கள் தாவரச் சொத்து நலன்களுடன் பின்னிப் பிணைந்திருந்தன. விஷயம் என்னவென்ருல், இந்த ரயில்வேயின் கிழக்கத்தியப் பாதை செல்லவிருந்த நிலத்தை ரயில் பாதை போடப்படப்போவது நிச்சயமானதும் இந்த வங்கியானது தனக்கும் இந்த நடவடிக்கையில் தனது கூட்டாளிகளாக இருந்த சிலருக்கும் பெருத்த லாபம் கிடைக்கும் விதத்தில் விற்றதென்பதே இங்குள்ள விவகாரம்...''*

ஏகபோகமானது, அது நிறுவப்பட்டு நூற்றுக்கணக்கான கோடிகளைத் தன் பிடிக்குள் கொண்டுவந்தவுடன், அரசாங்கத்தின் வடிவமும் ஏனைய எல்லா ''விவரங்களும்'' எப்படி இருப்பினும் தவிர்க்க முடியாத வகையில் பொது வாழ்வின் ஒவ்வொரு துறையினுள்ளும் ஊடுருவிவிடுகிறது. பிரஷ்ய அதிகாரவர்க்கத்தின் நேர்மையைப் பற்றிய அடிமைப்புத்தி கொண்ட புகழுரையையும், பிரெஞ்சுப் பனுமா மோசடியையும்[20] அமெரிக்க அரசியல் ஊழலையும் பற்றிய குறிப்புகளையும் ஜெர்மன் பொருளாதார வெளியீடுகளில் சகஜமாகக் காண்கிறோம். ஆனல் உண்மை என்னவென்ருல், ஜெர்மன் வங்கித் தொழில் விவகாரங்கள் சம்பந்தமான முதலாளித்துவ வெளியீடுகளுங்கூட கலப்பற்ற தூய வங்கித் தொழில் விவகாரங்களின் எல்லைகளை இடையருது கடந்து நெடுந்தொலைவுக்கு விலகிச் செல்ல வேண்டியிருக்கிறது; அரசாங்க அதிகாரிகள் மேலும் மேலும் அடிக்கடி வங்கிகளில் வேலை ஏற்பதைக் குறிப்பிட்டு அவை ''வங்கியின் கவர்ச்சி'' குறித்துப் பேச வேண்டியிருக்கிறது, உதாரணமாய், அவை எழுதுவதாவது: ''பேரன்ஷ்த்ராஸ்ஸெயில் (Deutsche Bank தலைமைக் காரியாலயம் இருக்கும் பெர்லின் நகர வீதி) சொகுசான வேலை பெறுவது பற்றி மனத்துள் ஆசையுடன் நினைத்துக் கொண்டிருக்கும் அரசாங்க அதிகாரியின் நேர்மை குறித்து என்ன சொல்வது?''** *Die Bank* சஞ்சிகையின் பதிப்பாளராகிய ஆல்ப்ரட்

---

* „Verkehrstrust", *Die Bank*, 1914, 1, பக்கம் 89 (''போக்குவரத்து டிரஸ்டு'', வங்கி.—ப-ர்.).

** „Der Zug zur Bank", *Die Bank*, 1909, *1*, பக்கம் 79.—(''வங்கியின் கவர்ச்சி'', வங்கி.—ப-ர்.).

லன்ஸ்பர்க் ''பைஸாண்டைனியத்தின் பொருளாதார முக்கியத்துவம்'' என்ற தலைப்பில் 1909ல் எழுதிய ஒரு கட்டுரையில், இரண்டாம் வில்ஹெல்மின் பாலஸ்தீனச் சுற்றுப் பயணத்தைப் பற்றியும், ''இந்தப் பயணத்தின் உடனடி விளைவாய் பாக்தாது ரயில்வே நிர்மாணம் ஆரம்பமானது பற்றியும், 'ஜெர்மன் தொழில் முனைப்பின் மாபெரும் பயனாகிய' இது கேடார்ந்ததாகி, 'முற்றுகை வளையத்துக்கு' நமது அரசியல் தவறுகள் யாவற்றையும் விட அதிகமாய்ப் பொறுப்பானதாகியது''* பற்றியும் இடைக்குறிப்பாய் எடுத்துரைக்கிறார். (முற்றுகை வளையம் என்பது ஜெர்மனியைத் தனிமைப்படுத்தி ஜெர்மனிக்கு விரோதமான ஏகாதிபத்தியக் கூட்டமைப்பைக் கொண்டு ஜெர்மனியைச் சுற்றி வளைப்பதற்காக ஏழாம் எடுவர்டு அனுசரித்த கொள்கையைக் குறிப்பதாகும்.) இதே சஞ்சிகையில் எழுதுபவரான, ஏற்கனவே நான் குறிப்பிட்ட எஷ்வேகெ, ''செல்வராட்சியும், அதிகாரவர்க்கமும்'' என்ற தலைப்பில் 1911ல் எழுதிய ஒரு கட்டுரையில் ஃபோல்கர் என்ற ஜெர்மன் அதிகாரியின் விவகாரத்தை உதாரணமாகக் காட்டி அம்பலப்படுத்தினார்: இந்த அதிகாரி கார்ட்டல் கமிட்டியின் முனைப்பு மிக்க உறுப்பினராக வேலை செய்து வந்தவர், ஆனால் சிறிது காலத்துக்கு எல்லாம் மிகப் பெரிய கார்ட்டலாகிய எஃகு சிண்டிக்கேட்டில் இவர் கொழுத்த சம்பளத்துக்குரிய பதவி பெற்றுக் கொண்டு விட்டார். இதைப் போன்ற நிகழ்வுகள்—எவ்வகையிலும் இவை தற்செயலாய் நடைபெற்றுவிட்டவை அல்ல—இந்த முதலாளித்துவ ஆசிரியரை நிர்ப்பந்தம் செய்து பின்வருமாறு ஒத்துக் கொள்ள வைத்தன: ''ஜெர்மன் அரசியலமைப்புச் சட்டத்தால் உத்தரவாதம் செய்யப்பட்ட பொருளாதாரச் சுதந்திரமானது பொருளாதார வாழ்வின் பல துறைகளிலும் பொருளற்ற வெற்றுத் தொடராகிவிட்டது'', தற்போது நிலவும் செல்வராட்சியில் ''மிக விரிவான அரசியல் சுதந்திர

* அதே நூல், 1, பக்கம் 301.

முங்கூட, சுதந்திரமில்லாத் தேசத்தோராக நாம் மாற்றப்படுவதிலிருந்து நம்மைக் காப்பாற்ற முடியாது''.*

ருஷ்யாவைப் பொறுத்த வரை ஒரேயொரு உதாரணத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். கருவூலத்தின் கடன் செலாவணித் துறையின் டைரக்டர் தவீதவ் தமது அரசாங்கப் பதவியை ராஜினுமா செய்துவிட்டு, குறிப்பிட்ட பெரிய ஒரு வங்கியில் வேலை ஏற்றது பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன்பு எல்லாச் செய்தியேடுகளும் அறிவித்தன. இந்த வங்கியுடனுன ஒப்பந்தப்படி அவர் பெறும் சம்பளம் சில ஆண்டுகளில் மொத்தம் பத்து லட்சம் ரூபிளுக்கும் அதிகமாயிருக்குமென அறிவிக்கப்பட்டது. கடன் செலாவணித் துறையின் பணி ''நாட்டின் எல்லா கடன் வசதி நிலையங்களின் நடவடிக்கைகளையும் ஒருமுகப்படுத்துவதாகும்''; இது தலைநகரிலுள்ள வங்கிகளுக்கு மொத்தம் 80 கோடி முதல் 100 கோடி ரூபிள் வரை உதவி மான்யங்களைத் தருகின்றது.**

மூலதன உடைமையானது, உற்பத்தியில் மூலதனத்தைச் செயற்படுத்துவதிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதும், பண மூலதனமானது தொழில் துறையிலான அல்லது உற்பத்தித் திறனுள்ள மூலதனத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதும், முழுதும் பண மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்கின்ற சுகஜீவி [rentier] தொழில் முனைப்பாளரிடமிருந்தும் மூலதனத்தின் நிர்வாகத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட எல்லோரிடமிருந்தும் பிரிக்கப்பட்டிருப்பதும் பொதுவாக முதலாளித்துவத்தின் குணுதிசயமாகும். ஏகாதிபத்தியம் அல்லது நிதி மூலதன ஆதிக்கம் என்பது இந்தப் பிரிவினை மிகப் பெரும் அளவுகளுக்கு அதிகரித்துவிடும் முதலாளித்துவ உச்ச கட்டமாகும். மூலதனத்தின் ஏனைய எல்லா வடிவங்களின் மீதும் நிதி மூலதனம் தலைமையதிகாரம் பெறுவதானது முதலீட்டாளரும் நிதியாதிக்கக் கும்பலும் தலைமையாதிபத்தியம் பெறுவதைக் குறிக்கிறது; நிதித் துறையில் ''சக்தி வாய்ந்தவையாக'' இருக்கும் சொற்ப எண்ணிக்

* அதே நூல், 1911, 2, பக்கம் 825; 1913, 2, பக்கம் 962.

** E. Agahd, முன் குறிப்பிட்ட புத்தகம், பக்கம் 202.

கையிலான அரசுகள் ஏனைய எல்லா அரசுகளிலும் உயர்ந்தனவாய் தனித்த நிலை பெறுவதை இது குறிக்கிறது. இந்தப் போக்கு எந்த அளவுக்கு நடந்தேறுகிறதென்பதை பத்திர வெளியீடுகள் பற்றிய, அதாவது எல்லா விதமான பிணையங்களின் வெளியீடு பற்றிய புள்ளிவிவரங்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

உலக முழுவதிலும் வெளியிடப்படும் பிணையங்கள் யாவும் உள்ளடங்கும்படி மிகவும் பரவலான, முழுமையான, ஒப்பு நிலையிலான புள்ளிவிவரங்களை அ. நெய்மார்க், சர்வதேசப் புள்ளிவிவரக் கழகத்தின் அறிக்கையில் வெளியிட்டுள்ளார்.* பொருளாதார வெளியீடுகளில் இந்தப் புள்ளிவிவரங்கள் பகுதியளவில் திரும்பத் திரும்ப எடுத்தாளப்பட்டிருப்பவை. நான்கு பத்தாண்டுகளுக்கான மொத்தங்களை அவர் தருகின்றார், அவை வருமாறு:

| பத்தாண்டுக்கான மொத்த வெளியீடு நூறு கோடி பிராங்குகளில் | |
|---|---|
| *1871—1880* | *76.1* |
| *1881—1890* | *64.5* |
| *1891—1900* | *100.4* |
| *1901—1910* | *197.8* |

1870ஆம் ஆண்டுகளில் அனைத்து உலகுக்குமான மொத்த வெளியீட்டின் தொகை அதிகமாயிருந்தது. குறிப்பாக, பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தம் சம்பந்தமாகத் திரட்டப்பட்ட கடன்களும் அந்த யுத்தத்துக்குப் பிறகு ஜெர்மனியில் ஆரம்பமான கம்பெனி-தோற்றுவிப்பு உயர்வேற்றமுமே இதற்குக் காரணம். மொத்தத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி மூன்று பத்தாண்டுகளில் அதிகரிப்பு ஒப்பளவில் மிகத்

* *Bulletin de l'institut international de statistique*, t. XIX, livr. II, La Haye, 1912 (''சர்வதேசப் புள்ளிவிவரக் கழகத்தின் அறிக்கை'', தொகுதி XIX, பகுதி II, ஹேக். — ப-ர்.). இரண்டாவது பத்தியிலுள்ள சிறிய நாடுகள் பற்றிய புள்ளிவிவரங்கள் 1902ன் புள்ளிகளுடன் 20 சதவிகிதத்தைக் கூட்டி மதிப்பிடப்பட்டுள்ளன.

தீவிரமாயில்லை. இருபதாம் நூற்றுண்டின் முதல் பத்தாண்டுகளில்தான் கிட்டத்தட்ட 100 சதவிகித அளவிலான மிகப் பெரிய அதிகரிப்பு காணப்படுகிறது. இப்படியாக, இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பமே திரும்பு முனையாக அமைகிறது—ஏற்கெனவே நாம் எடுத்துரைத்தது போல் ஏகபோகங்களது (கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள்) வளர்ச்சியில் மட்டுமின்றி, நிதி மூலதனத்தின் வளர்ச்சியிலும்.

1910ல் உலகத்தில் நடப்பிலிருந்த வெளியிடப்பட்ட பிணையங்களின் மொத்தத் தொகை சுமார் 81,500 கோடி பிராங்குகளாகுமென நெய்மார்க் மதிப்பிடுகிருர். இரட்டிப் பாகக் கணக்கிடப்பட்டிருக்கக் கூடியவற்றை இத்தொகையிலிருந்து கழித்து, 57,500-60,000 கோடியாக மொத்தத் தொகையை அவர் குறைக்கிருர். இது பல நாடுகளிடையில் கீழ்க்கண்டவாறு பங்கிடப்பட்டிருக்கிறது (மொத்தத் தொகையை நான் 60,000 கோடியாகக் கொள்கிறேன்):

**1910ல் நடப்பிலிருந்த நிதிப் பிணையங்கள்**
**(நூறு கோடி பிராங்குகளில்):**

| | | | | |
|---|---|---|---|---|
| கிரேட் பிரிட்டன் | 142 | 479 | ஹாலந்து | 12.5 |
| அமெரிக்க ஐக்கிய நாடு | 132 | | பெல்ஜியம் | 7.5 |
| பிரான்ஸ் | 110 | | ஸ்பெயின் | 7.5 |
| ஜெர்மனி | 95 | | ஸ்விட்சர்லாந்து | 6.25 |
| ருஷ்யா | 31 | | டென்மார்க் | 3.75 |
| ஆஸ்திரியா-ஹங்கேரி | 24 | | ஸ்வீடன், நார்வே, ருமேனியா முதலியன | 2.5 |
| இத்தாலி | 14 | | | |
| ஜப்பான் | 12 | | | |
| | | | **மொத்தம்** | 600 |

ஒவ்வொன்றும் தோராயமாக 10,000 முதல் 15,000 கோடி பிராங்குகள் வரையிலான தொகைகளுக்குப் பிணையங்களைப் பெற்றிருக்கும் ஆகப் பெருஞ் செல்வம் படைத்த நான்கு முதலாளித்துவ நாடுகள் தெளிவாகத் தனித்து எடுப்பாக நிற்பதை இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து உடனே காண்கிருேம். இந்நான்கில் இரண்டு, இங்கிலாந்தும் பிரான்சும், யாவற்றிலும் பழைய முதலாளித்துவ நாடுகள்; இவை,

பின்னர் நாம் பார்க்கப்போவதைப் போல, யாவற்றிலும் அதிகமான காலனிகளைப் பெற்றிருப்பவை; ஏனைய இரண்டும், அமெரிக்க ஐக்கிய நாடும் ஜெர்மனியும், வளர்ச்சி வேகத்திலும், தொழில் துறையில் முதலாளித்துவ ஏகபோகங்கள் விரிந்துள்ள அளவிலும் தலைமை நிலை வகிக்கும் முதலாளித்துவ நாடுகள். இந்நான்கு நாடுகளும் சேர்ந்து 47,900 கோடி பிராங்குகளை, அதாவது உலக நிதி மூலதனத்தில் கிட்டத்தட்ட 80 சதவிகிதத்தைத் தம்மிடம் வைத்திருக்கின்றன. உலகின் ஏனைய பகுதிகளில் அனேகமாய் யாவுமே இந்தச் சர்வதேச வங்கியர் நாடுகளுக்கு, உலக நிதி மூலதனத்தின் இந்த நான்கு ''தூண்களுக்கும்'' ஏதேனும் ஒரு வகையில், அதிகமாகவோ குறைவாகவோ கடன்பட்டவையாகவும் கப்பம் செலுத்துபவையாகவுமே இருக்கின்றன.

நிதி மூலதனத்துக்குப் பணிய வேண்டிய சார்பு நிலைக்கும் நிதி மூலதனத்தின் தொடர்புகளுக்குமாகிய சர்வதேச வலைப் பின்னல் அமைப்பைத் தோற்றுவிப்பதற்கு மூலதன ஏற்றுமதி ஆற்றும் பங்கைப் பரிசீலனை செய்வது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

## 4. மூலதன ஏற்றுமதி

தடையில்லாப் போட்டி தனியாட்சி புரிந்த பழைய முதலாளித்துவத்தின் குறிப்பண்பாய் இருந்தது பண்டங்களின் ஏற்றுமதி. ஏகபோகங்கள் ஆட்சி புரியும் முதலாளித்துவத்தின் இன்றைய கட்டத்தின் குறிப்பண்பாய் இருப்பது மூலதனத்தின் ஏற்றுமதி.

தனது வளர்ச்சியின் உச்ச கட்டத்தை எட்டிவிட்ட பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திதான் முதலாளித்துவம்; இக்கட்டத்தில் உழைப்புச் சக்தியுங்கூட பரிவர்த்தனைப் பண்டமாகிவிடுகிறது. உள்நாட்டுப் பரிவர்த்தனையின், குறிப்பாகச் சர்வதேசப் பரிவர்த்தனையின் வளர்ச்சி முதலாளித்துவத்துக்குரிய தனி இயல்பாகும். தனிப்பட்ட தொழில் நிலையங்களது, தனிப்பட்ட தொழிற் கிளைகளது, தனிப்பட்ட நாடுகளது ஏற்றத்தாழ்வான, இடையறுந்து சீரில்லா வளர்ச்சி முதலா

ளித்துவ அமைப்பில் தவிர்க்க முடியாததாகும். ஏனைய நாடுகளுக்கெல்லாம் முன்னதாக இங்கிலாந்து முதலாளித்துவ நாடாகிவிட்டது; பத்தொன்பதாம் நூற்றுண்டின் நடுப் பகுதிக்குள் அது தடையில்லா வாணிபத்தை மேற்கொண்டு, ''உலகத்தின் தொழிற்கூடமாய்'' அமைந்து, எல்லா நாடுகளுக்கும் செய்பொருள்களை வழங்கும் நாடாகச் செயல்படுவதற்கு உரிமை கொண்டாடியது. இந்தச் செய்பொருள்களைப் பெற்றுக் கொண்டு பிற நாடுகள் இவற்றுக்குப் பரிவர்த்தனையாக இங்கிலாந்துக்கு மூலப்பொருள்களை அளிக்க வேண்டியிருந்தது. ஆனுல் பத்தொன்பதாம் நூற்றுண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளில், இங்கிலாந்தின் இந்த ஏகபோகத்துக்குக் குழி பறிக்கப்பட்டது; எப்படியெனில் பிற நாடுகள் ''காப்பு வரிகள்'' மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொண்டு சுயேச்சையான முதலாளித்துவ நாடுகளாக வளர்ச்சியடைந்தன. இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் புது வகைப்பட்ட ஏகபோகங்கள் நிறுவப்படக் காண்கிருேம்: முதலாவதாக, முதலாளித்துவ வழியில் வளர்ச்சியுற்ற எல்லா நாடுகளிலும் முதலாளிகளது ஏகபோகக் கூட்டுகள்; இரண்டாவதாக, மூலதனத் திரட்சி பிரம்மாண்டமான அளவுக்கு அதிகரித்துவிட்ட மிகப் பெருஞ் செல்வம் படைத்த ஒருசில நாடுகளின் ஏகபோக நிலை. முன்னேறிய நாடுகளில் மிதமிஞ்சிய அளவுக்கு ''உபரி மூலதனம்'' திரண்டெழுந்துள்ளது.

தொழில் துறையிடமிருந்து எங்கும் இன்று பயங்கரமாகப் பின்தங்கியிருக்கும் விவசாயத்தை முதலாளித்துவத்தால் வளர்ந்தோங்கச் செய்ய முடியுமாஞல், வியக்கத்தக்க தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும் எங்கும் இன்னும் அரைப்பட்டினியாகவும் ஏழ்மையுற்றும் வாழ்கின்ற மக்கள் பெருந்திரளினரின் வாழ்க்கைத் தரத்தை முதலாளித்துவத்தால் உயர்த்த முடியுமாயின், உபரி மூலதனத்தைப் பற்றிய பேச்சுக்கே இடம் இருக்காது என்பதைக் கூறத் தேவையில்லை. இந்த ''வாதம்'' முதலாளித்துவத்தின் குட்டிமுதலாளித்துவ விமர்சகர்களால் அடிக்கடி முன்வைக்கப்படுகிறது. ஆனுல், முதலாளித்துவம் இவற்றைச் செய்வதெனில், அது

முதலாளித்துவமாக இருக்க முடியாது; ஏனெனில் ஏற்றத் தாழ்வான வளர்ச்சியும் மக்கள் பெருந்திரளினரது அரைப் பட்டினி வாழ்க்கை நிலேயுமாகிய இவை இரண்டும் இந்த உற்பத்தி முறைக்குரிய அடிப்படையான, தவிர்க்க முடியாத நிலைமைகளாகவும் முன்னிபந்தனைகளாகவும் இருப்பவை. முதலாளித்துவம் முதலாளித்துவமாகவே இருக்கிறவரை, உபரி மூலதனமானது அந்த நாட்டின் மக்கள் பெருந்திரளினரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பயன்படுத்தப் பட மாட்டாது, ஏனென்றல் இது முதலாளிகளுடைய லாபங்களைச் சரிந்து விழச் செய்வதாகிவிடும்; லாபங்களை அதிகமாக்கும் பொருட்டு பிற்பட்ட நாடுகளுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வதற்கே உபரி மூலதனம் பயன்படுத்தப் படும். இந்தப் பிற்பட்ட நாடுகளில் மூலதனம் மிகச் சொற்பமாகவும், நிலத்தின் விலை ஒப்பளவில் தாழ்நிலேயிலும், கூலிகள் குறைவாகவும், மூலப் பொருள்கள் மலிவாகவும் இருப்பதால் லாபங்கள் வழக்கமாய் அதிகமாக இருக்கின்றன. பிற்பட்ட நாடுகள் பலவற்றிலும் முக்கிய ரயில் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன அல்லது போடப்பட்டு வருகின்றன; தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய ஆதார நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன; இப்படி மற்றும் பலவும் நடந்தேறி இந்த நாடுகள் ஏற்கெனவே உலக முதலாளித்துவ ஒட்டுறவினுள் இழுக்கப்பட்டுள்ளன. ஆகவே மூலதன ஏற்றுமதி சாத்தியமாகியிருக்கிறது. ஒருசில நாடுகளில் முதலாளித்துவம் ''கனிந்து அழுகும்'' நிலையை எய்திவிட்டதாலும், (விவசாயத்தின் பின்தங்கிய நிலை, பொதுமக்களின் வறுமை நிலை ஆகியவை காரணமாக) மூலதனத்துக்கு ''லாபகரமான'' முதலீட்டுத் துறை இல்லாமற் போவதாலும் மூலதனத்தை ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியம் எழுகிறது.

முதன்மையான மூன்று நாடுகளால் வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனத்தின் தொகையைக் காட்டும் தோராயமான புள்ளிவிவரங்கள் வருமாறு:*

* Hobson, *Imperialism*, London, 1902, பக்கம் *58;* Riesser, முன் கூறிய நூல், பக்கங்கள் *395, 404;* P. Arndt, *Weltwirtschaftliches Archiv* என்ற வெளியீட்டில் Bd. 7, 1916, S. 35

REFERENCE


வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனம்
(100 கோடி பிராங்குகளில்)

| ஆண்டு | கிரேட் பிரிட்டன் | பிரான்ஸ் | ஜெர்மனி |
|---|---|---|---|
| *1862* | *3.6* | — | — |
| *1872* | *15.0* | *10(1869)* | — |
| *1882* | *22.0* | *15(1880)* | *?* |
| *1893* | *42.0* | *20(1890)* | *?* |
| *1902* | *62.0* | *27—37* | *12.5* |
| *1914* | *75—100.0* | *60* | *44.0* |

---

*(பி. அருந்த், ''உலகப் பொருளாதாரத்தின் பழைய ஆவணங்கள்'', தொகுதி 7, 1916, பக்கம் 35.*— ப-ர்.); Neymarck, *Bulletin*இல்; ஹில்பர்டிங், ''நிதி மூலதனம்'', பக்கம் 492; *Lloyd-George*, காமன்ஸ் சபையில் சொற்பொழிவு, மே 4, 1915, *Daily Telegraph*, மே 5, 1915ல் வெளியிடப்பட்டிருக்கிறது; B. Harms, *Probleme der Weltwirtschaft*, Jena, 1912, S. 235 முதலியன *(பி. ஹார்ம்ஸ், ''உலகப் பொருளாதாரப் பிரச்சினைகள்'', யேனு, 1912, பக்கம் 235 முதலியன.*— ப-ர்.); Dr. Siegmund Schilder, *Entwicklungstendenzen der Weltwirtschaft*, Berlin, 1912. Bd. 1. S. 150 *(டாக்டர் சீக்முண்ட் ஷில்டர், ''உலகப் பொருளாதார வளர்ச்சியின் போக்குகள்'', பெர்லின், 1912, தொகுதி 1, பக்கம்150.*—ப-ர்.); *Journal of the Royal Statistical Society* என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்ட George Paish, „Great Britain's Capital Investments etc.'', vol. LXXIV, 1910-11, பக்கம் 167உம் அடுத்தவையும் *(ஜார்ஜ் பெய்ஷ், ''கிரேட் பிரிட்டனின் மூலதன முதலீடுகள், முதலியன'', ''ராயல் புள்ளி விவரக் கழகத்தின் சஞ்சிகை'', தொகுதி* LXXIV.—ப-ர்.). Georges Diouritch, *L'Expansion des banques allemandes à l'étranger, ses rapports avec le développement économique de l'Allemagne*, Paris, 1909, p. 84 *(ஜார்ஜ் டியுரிச், ''ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சியினைத் தொடர்ந்து வெளிநாடுகளில் ஜெர்மன் வங்கிகளின் விஸ்தரிப்பு'', பாரிஸ், 1909, பக்கம் 84.*—ப-ர்.).

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில்தான் மூலதனத்தின் ஏற்றுமதி பிரம்மாண்ட பரிமாணங்களை அடைந்ததென்பதை இந்தப் பட்டியல் காட்டுகிறது. யுத்தத்துக்கு முன்னுல் இந்த மூன்று முதன்மையான நாடுகளும் வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த மூலதனத்தின் தொகை 17,500 கோடியிலிருந்து 20,000 கோடி பிராங்குகளுக்கு இடைப்பட்டதாக இருந்தது. மிதமான விகிதமான 5 சதவீதத்தில் இந்தத் தொகையிலிருந்து ஆண்டொன்றுக்கு 800 கோடியிலிருந்து 1,000 கோடி பிராங்குகள் வரை வருமானம் கிடைத்திருக்க வேண்டும்—இதுவேதான் உலகின் பெரும்பாலான நாடுகள், தேசங்கள் மீதான ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும், ஒருசில செல்வந்த அரசுகளின் முதலாளித்துவப் புல்லுருவித்தனத்துக்கும் திடமான அடித்தளம்!

வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனம் பல்வேறு நாடுகளுக்கிடையில் எவ்வாறு வினியோகமாகியிருக்கிறது? இம்மூலதனம் எங்கு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது? இக்கேள்விகளுக்குத் தோராயமான பதில்தான் அளிக்க முடியும்; ஆயினும் தற்கால ஏகாதிபத்தியத்தின் பொதுவான சில உறவுகளையும் தொடர்புகளையும் தெளிவுபடுத்த இந்தப் பதில் போதுமானதாகும். (102ஆம் பக்கம் பார்க்கவும்).

பிரிட்டிஷ் மூலதனம் முதலீடு செய்யப்பட்டிருக்கும் முக்கிய மண்டலங்கள் பிரிட்டிஷ் காலனிகள், இவை அமெரிக்கக் கண்டத்திலுங்கூட (உதாரணமாக, கானடா) மிகவும் பெரிய அளவில் இருக்கின்றன; ஆசியாவையும் பிறவற்றையும் கூறவே வேண்டியதில்லை. ஆகவே இங்கு பெரிய அளவிலான மூலதன ஏற்றுமதிகள் விரிந்து பரந்திருக்கும் காலனிகளுடன் மிகவும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்திற்குக் காலனிகளின் முக்கியத்துவத்தைப் பற்றி பிற்பாடு கூறுகிறேன். பிரான்சின் விவகாரத்தில் நிலைமை வேறுகும். பிரெஞ்சு மூலதன ஏற்றுமதிகள் முக்கியமாக ஐரோப்பாவில், முதன்மையாக ருஷ்யாவில் (ஆயிரம் கோடி பிராங்குகளுக்குக் குறையாமல்) முதலீடு செய்யப்பட்டிருக்கின்றன; பெரும்பாலும் இவை **கடன்** மூலதனமாகும், அரசாங்கக் கடன்களாகும்; தொழில் துறை முயற்சிகளில் முதலீடு

அன்னிய மூலதனம் (தோராயமாக) வினியோகமாகி யிருக்கும் உலகப் பகுதிகள் (1910ஆம் ஆண்டின் வாக்கில்)

| | கிரேட் பிரிட்டன் | பிரான்ஸ் | ஜெர்மனி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | (100 கோடி மார்க்குகள்) | | | |
| ஐரோப்பா . . . . | 4 | 23 | 18 | 45 |
| அமெரிக்கா . . . . | 37 | 4 | 10 | 51 |
| ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா . . | 29 | 8 | 7 | 44 |
| மொத்தம் . . . . | 70 | 35 | 35 | 140 |

செய்யப்பட்ட மூலதனமல்ல. பிரிட்டிஷ் காலனியாதிக்க ஏகாதிபத்தியத்தைப் போலல்லாது, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைக் கடுவட்டிக் கடன் ஏகாதிபத்தியம் என்பதாகக் குறிப்பிடலாம். ஜெர்மனியின் விவகாரத்தைப் பொறுத்த வரை அது மூன்றுவது வகையினதாக இருக்கக் காண்கிறோம்: காலனிகள் கணிசமாய் இல்லை, வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்ட ஜெர்மன் மூலதனம் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மிகவும் சமமான அளவில் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மூலதனத்தின் ஏற்றுமதி, எந்த நாடுகளுக்கு அது ஏற்றுமதி செய்யப்படுகிறதோ அந்நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சியின்மீது செல்வாக்கு செலுத்துகிறது, இந்த வளர்ச்சியை வெகுவாகத் துரிதப்படுத்துகிறது. ஆகவே, மூலதன ஏற்றுமதியானது, மூலதன-ஏற்றுமதி நாடுகளின் வளர்ச்சியை ஓரளவுக்கு தடைப்படுத்தக் கூடும் என்றாலும், உலகெங்கும் மேலும் தொடர்ந்து முதலாளித்துவம் காணும் வளர்ச்சியை

விரிவுபடுத்தியும் ஆழமாக்கியும் செல்வதன் மூலமே அது இதனைச் செய்ய முடியும்.

மூலதன-ஏற்றுமதி நாடுகள் அநேகமாக எப்பொழுதும் சில ''அனுகூலங்களைப்'' பெற முடிகிறது; அவ்வனுகூலங்களின் தன்மை நிதி மூலதன, ஏகபோக சகாப்தத்தின் குணாதிசயத்தைத் தெளிவுபடுத்துகிறது. உதாரணமாக, பின்வரும் வாசகம் பெர்லின் சஞ்சிகையாகிய *Die Bank*, 1913 அக்டோபர் இதழில் வெளிவந்தது:

''அரிஸ்டஃபேன்சின் எழுதுகோலுக்கு ஏற்றதாகிய நகைச்சுவை நாடகம் ஒன்று தற்போது சிறிது காலமாய்ச் சர்வதேச மூலதனச் சந்தையில் ஆடப்பட்டு வருகிறது. ஸ்பெயினிலிருந்து பால்கன் நாடுகள் வரை, ருஷ்யாவிலிருந்து ஆர்ஜென்டீனா, பிரேஸில், சீனா வரை மிகப் பல வெளிநாடுகள், பகிரங்கமாகவோ இரகசியமாகவோ பெரிய பணச் சந்தைகளில் தோன்றி கடன்கள் வேண்டுமென்று, சில நேரங்களில் விடாப்பிடியான முறையிலுங்கூட கோருகின்றன. தற்போது பணச் சந்தைகள் நல்ல நிலையில் இல்லை, அரசியல் நிலவரம் நம்பிக்கையூட்டுவதாக இல்லை. ஆயினும் கடன் அளிக்க மறுக்கும் துணிவு எந்தவொரு பணச் சந்தைக்கும் இல்லை, தனது அண்டை அயலார் யாரேனும் தன்னை முந்திக் கொண்டு கடன் அளிக்க சம்மதித்து விடலாம், இவ்வழியில் அவர் கைம்மாறாகச் சில உபகாரங்களைப் பெற்றுக் கொண்டுவிடலாம் என்று ஒவ்வொரு சந்தையும் அஞ்சுகிறது. இந்தச் சர்வதேசப் பேரங்களில், கடன் அளிப்பவர் அனேகமாய் எப்போதும் அதிகப்படியான சில ஆதாயங்களைப் பெற்றுக் கொண்டு விடுகிறார்: வர்த்தக உடன்படிக்கையில் சாதகமான ஒரு பிரிவோ, நிலக்கரி வழங்கு நிலையமோ, துறைமுகம் கட்டுவதற்கானதோர் ஒப்பந்தமோ, கொழுத்த சலுகையோ, பீரங்கிகளுக்கான ஆணையோ கிடைத்துவிடுகிறது.''*

நிதிமூலதனம் ஏகபோகங்களது சகாப்தத்தைத் தோற்றுவித்திருக்கிறது. ஏகபோகங்கள் ஏகபோகத்துக்குரிய கோட்பாடுகளை எங்கும் செயல்பட வைக்கின்றன: பகிரங்கச் சந்தையிலான போட்டிக்குப் பதில், லாபகரமான பேரங்

* *Die Bank*, 1913, 2, 1024-1025.

களுக்காகத் ''தொடர்புகள்'' பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. கொடுக்கப்படுகின்ற கடனில் ஒரு பகுதி, கடன் தருகிற நாட்டிலிருந்து பொருள்கள் வாங்குவதற்காக, குறிப்பாகப் போர்த் தளவாடங்கள் அல்லது கப்பல்கள் போன்றவற்றை வாங்குவதற்காகச் செலவிடப்பட வேண்டுமென நிபந்தனை இடுவது மிகவும் சகஜமாகிவிட்டது. கடந்த இரண்டு பத்தாண்டுகளில் (1890—1910) பிரான்ஸ் இம்முறையை அடிக்கடி கையாண்டிருக்கிறது. இவ்வாறு மூலதன ஏற்றுமதியானது பண்ட ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான மார்க்கமாகிறது. இச்சந்தர்ப்பத்தில் முக்கியமாய்ப் பெரிய நிறுவனங்களுக்கிடையிலான பேரங்கள், ஷில்டர்* ''இதமான முறையில்'' குறிப்பிடுவது போல ''லஞ்ச ஊழலுக்கு ஒப்பான'' வடிவத்தைப் பெறுகின்றன. சக்தி வாய்ந்த வங்கிகளுடனும் அரசாங்கங்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவையும் கடன் அளிக்க ஏற்பாடு செய்யும் போது எளிதில் ''உதாசீனம்'' செய்துவிட முடியாதவையுமான நிறுவனங்களுக்கு ஜெர்மனியில் குருப்பும், பிரான்சில் ஷினைடரும், இங்கிலாந்தில் ஆம்ஸ்ட்ராங்கும் உதாரணங்களாகும்.

ருஷ்யாவுக்குக் கடன்கள் அளிக்கையில், பிரான்ஸ் 1905 செப்டம்பர் 16 வர்த்தக உடன்படிக்கையில் அதை''நெரித்து இடுக்கி'', சில சலுகைகள் 1917 வரை நீடிப்பதற்கு நிபந்தனை இட்டது. ஜப்பானுடன் செய்து கொள்ளப்பட்ட 1911 ஆகஸ்டு 19 வாணிப உடன்படிக்கையிலும் பிரான்ஸ் இதே போல் செய்தது. ஏழு மாத இடைநிறுத்தத்துடன் 1906 முதல் 1911 வரை ஆஸ்திரியாவுக்கும் செர்பியாவுக்குமிடையில் நடைபெற்ற சுங்கவரிப் போருக்கு, செர்பியாவுக்குப் போர்த் தளவாடங்கள் வழங்குவதில் ஆஸ்திரியாவுக்கும் பிரான்சுக்குமிடையே ஏற்பட்ட போட்டியும் ஓரளவுக்குக் காரணமாகும். 1908லிருந்து 1911வரை பிரெஞ்சு நிறுவனங்கள் $4^1/_2$ கோடி பிராங்கு மதிப்புள்ள போர்த் தளவாடங்களை செர்பியாவுக்கு வழங்கினதாகப் பிரதிநிதிகள் சபையில் 1912 ஜனவரியில் போல் டெஷனெல் கூறினர்.

* Schilder, முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 346, 350, 371.

ஸாவோ-பாவுலோவில் (பிரேஸில்) இருக்கும் ஆஸ்திரிய-ஹங்கேரிய கான்சலிடமிருந்து வந்த செய்தியறிக்கை கூறுவதாவது: ''பிரேஸிலிய ரயில்வேக்கள் முக்கியமாக பிரெஞ்சு, பெல்ஜிய, பிரிட்டிஷ், ஜெர்மன் மூலதனத்திஞல் போடப்பட்டு வருகின்றன. இந்த ரயில்வேக்களின் கட்டுமானத்துடன் தொடர்பு கொண்ட நிதித் துறைச் செயற்பாடுகளில், தேவையான ரயில்வேத் தளவாடங்களுக்கான ஆணைகள் தமக்குக் கிடைப்பதற்குச் சம்பந்தப்பட்ட அந்தந்த நாடும் நிபந்தனை இடுகிறது.''

இந்த நிதி மூலதனம் உலகின் எல்லா நாடுகளிலும் உண்மையிலேயே தனது வலையை விரிக்கிறது என்று கூறலாம். காலனிகளில் நிறுவப்பட்டுள்ள வங்கிகளும் அவற்றின் கிளைகளும் இதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. இவ்வழியில் தமக்கு ஏற்பாடு செய்து கொள்வதில் குறிப்பிடத்தக்க ''வெற்றியடைந்திருக்கும்'' ''பழைய'' காலனியாதிக்க நாடுகளைப் பார்த்து ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் பொறுமைப் படுகிருர்கள். 1904ல் கிரேட் பிரிட்டன் 2,279 கிளைகளுடன் கூடிய 50 காலனி வங்கிகளைப் பெற்றிருந்தது (1910ல் 5,449 கிளைகளுடன் கூடிய 72 வங்கிகளைப் பெற்றிருந்தது); பிரான்ஸ் 136 கிளைகளுடன் கூடிய 20 வங்கிகளையும் ஹாலந்து 68 கிளைகளுடன் கூடிய 16 வங்கிகளையும் பெற்றிருந்தன, ஆஞல் ஜெர்மனி 70 கிளைகளுடன் கூடிய 13 வங்கிகளை ''மட்டுமே'' பெற்றிருந்தது.* அமெரிக்க முதலாளிகள் அவர்களது தரப்பிலிருந்து ஆங்கிலேய, ஜெர்மன் முதலாளிகளைப் பார்த்துப் பொறுமைப்படுகிருர்கள். ''தென்னமெரிக்காவில் ஐந்து ஜெர்மன் வங்கிகள் நாற்பது கிளைகளையும், ஐந்து ஆங்கிலேய வங்கிகள் எழுபது கிளைகளையும் பெற்றிருக்கின்றன... இங்கிலாந்தும் ஜெர்மனியும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் ஆர்ஜென்டீஞ, பிரேஸில், உருகுவே ஆகிய நாடுகளில் கிட்டத்தட்ட நானூறு கோடி டாலர் முதலீடு செய்துள்ளன. இதன் விளைவாக, இவை இரண்டும் இந்த மூன்று நாடுகளது மொத்த வாணிபத்தில் 46 சதவிகிதத்தைத் தமக்குரியதாய்

* Riesser, முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 375, 4வது பதிப்பு; Diouritch, பக்கம் 283.

வைத்துக் கொண்டு அனுபவிக்கின்றன'' என்று 1915ல் அமெரிக்க முதலாளிகள் முறையிட்டார்கள்.*

மூலதன-ஏற்றுமதி நாடுகள் உலகத்தைத் தம்மிடையே பாகப் பிரிவினை செய்து கொண்டுவிட்டதாக உருவக முறையில் கூறலாம். ஆனால் நிதி மூலதனம் மெய் நடப்பில் உலகம் பாகப் பிரிவினை செய்யப்படுவதற்கு வகை செய்திருக்கிறது.

## 5. முதலாளித்துவக் கூட்டுகளிடையே உலகம் பங்கிடப்படுதல்

முதலாளித்துவ ஏகபோகக் கூட்டுகளும் கார்ட்டல்களும் சிண்டிக்கேட்டுகளும், டிரஸ்டுகளும் முதலில் உள்நாட்டுச் சந்தையைத் தம்மிடையே பங்கிட்டுக் கொண்டு தமது நாட்டின் தொழில் துறையை அனேகமாய் முழு அளவுக்குக் கைப்பற்றிக் கொள்கின்றன. ஆனால் முதலாளித்துவத்தில் உள்நாட்டுச் சந்தை தவிர்க்கமுடியாதவாறு வெளிநாட்டுச் சந்தையுடன் பிணைந்திருக்கிறது. நெடுங் காலத்துக்கு முன்பே முதலாளித்துவம் உலகச் சந்தையைத் தோற்றுவித்துவிட்டது. மூலதன ஏற்றுமதி பெருகியதையும், மிகப் பெரிய ஏகபோகக் கூட்டுகளின் அந்நியத் தொடர்புகளும் காலனித் தொடர்புகளும் ''செல்வாக்கு மண்டலங்களும்'' எல்லா வழிகளிலும் விரிவடைந்ததையும் தொடர்ந்து இக்கூட்டுகளுக்கிடையில் சர்வதேச உடன்பாடு ஏற்படுவதற்கும், சர்வதேசக் கார்ட்டல்கள் அமைக்கப்படுவதற்கும் விவகாரங்கள் ''இயற்கையாக'' இட்டுச் சென்றன.

மூலதனத்திலும் உற்பத்தியிலும் உலக அளவிலான ஒன்று

---

* *The Annals of the American Academy of Political and Social Science*, vol. LIX, May 1915, p. 301(''அமெரிக்க அரசியல், சமூக விஞ்ஞானக் கழகத்தின் வரலாற்றுக் குறிப்புகள்'', தொகுதி LIX,மே 1915,பக்கம் 301.—ப-ர்.).இதே தொகுதியில் பக்கம் 331ல், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து ஆகியவை ஏற்றுமதி செய்த மூலதனத்தின் தொகை 4,000 கோடி டாலராகும், அதாவது 20,000 கோடி பிராங்காகும் என்று பிரபல புள்ளிவிவர இயலாளர் பெய்ஷ் நிதித் துறை சஞ்சிகையாகிய *The Statist* இன் கடந்த இதழில் மதிப்பிடுவதாகப் படிக்கிறோம்.

குவிப்பில் இது ஒரு புதிய கட்டமாகும், முந்திய கட்டங்களைக் காட்டிலும் ஒப்புயர்வல்லாதபடி மிகவும் உயர்ந்த கட்டமாகும். இந்த மீ-ஏகபோகம் [supermonopoly] எவ்வாறு வளர்ச்சியுறுகிறது என்பதைக் கவனிப்போம்.

மின்விசைத் தொழிலானது மிக நவீனத் தொழில்நுட்பச் சாதனைகளுக்குப் பெரிதும் முன்மாதிரியான எடுத்துக்காட்டு; பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்துக்குமுரிய முதலாளித்துவத்தின் மிகச் சிறந்த இனமாதிரியானது. புதிய முதலாளித்துவ நாடுகளின் இரு தலைவர்களாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஜெர்மனியிலும் இத்தொழில் மிகவும் அதிகமாக வளர்ச்சியடைந்துள்ளது. ஜெர்மனியில் 1900ஆம் ஆண்டு நெருக்கடி இத்தொழிலின் ஒன்றுகுவிப்புக்குக் குறிப்பிடத்தக்க வலுவுடன் ஒரு தூண்டுதலளித்தது. தொழிலுடன் ஏற்கெனவே ஓரளவு நன்றாகவே ஒன்றிணைந்திருந்த வங்கிகள் இந்நெருக்கடியின் போது ஒப்பளவில் சிறியனவாயிருந்த நிறுவனங்களின் அழிவையும், பெரிய நிறுவனங்களால் இவை உட்கவரப்படுவதையும் மிகப் பெரிய அளவுக்குத் துரிதப்படுத்திக் கடுமையாக்கின. எய்டல்ஸ் எழுதுகிறார்: ''மூலதனம் மிகவும் அதிகமாகத் தேவைப்பட்ட கம்பெனிகளுக்கு வங்கிகள் உதவி செய்ய மறுத்து, போதுமான அளவு நெருக்கமாகத் தம்முடன் பிணைக்கப்படாத கம்பெனிகளுக்கு முதலில் வெறிதனமான வேகத்தில் உயர்வேற்றமும் பிறகு மீள வழியில்லாத முறிவும் ஏற்படச் செய்தன.''*

இதன் விளைவாக, 1900க்குப் பிறகு ஜெர்மனியில் ஒன்றுகுவிப்பு பெரு நடைபோட்டு வளர்ந்தது. 1900 வரை மின்விசைத் தொழிலில் ஏழு அல்லது எட்டு ''தொகுப்புகள்'' இருந்து வந்தன; ஒவ்வொன்றும் பல கம்பெனிகளைக் கொண்டிருந்தது (மொத்தம் 28 இருந்தன); 2 முதல் 11 வரையிலான வங்கிகள் இத்தொகுப்பு ஒவ்வொன்றுக்கும் ஆதரவாக நின்றன. 1908க்கும் 1912க்கும் இடையில் இத்தொகுப்புகள் எல்லாம் இரண்டு அல்லது ஒரு தொகுப்பாய் ஒன்றிணைந்துவிட்டன. பின்வரும் விளக்கச் சித்திரம் இந்த நிகழ்முறையைத் தெளிவுபடுத்துகிறது: (108ஆம் பக்கம் பார்க்க.)

* எய்டல்ஸ், முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 232.

மின்விசைத் தொழிலிலுள்ள தொகுப்புகள்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1900க்கு முன்பு: | பெல்டனும் கில்யோமும் | லாமயர் | யூனியன் A.E.G. | சீமென்ஸும் ஹல்ஸ்கெயும் | ஷுகெர்ட்டும் கம்பெனியும் | பெர்க்மன் | கும்மர் |
| | பெல்டனும் லாமயரும் | | A.E.G. (ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி) | சீமென்ஸும் ஹல்ஸ்கெ-ஷுகெர்ட்டும் | | பெர்க்மன் | 1900ல் முறிந்தது |
| 1912க்குள் | A.E.G. (ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி) | | | சீமென்ஸும் ஹல்ஸ்கெ-ஷுகெர்ட்டும் | | | |

(1908க்கும் பிறகு நெருங்கிய "கூட்டுறவு")

இவ்வழியில் வளர்ந்த பிரபல A.E.G. (ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி), 175லிருந்து 200 வரையிலான கம்பெனிகளையும் (''ஓல்டிங்'' முறை மூலம்) மொத்தம் சுமார் 150 கோடி மார்க் வரையிலான மூலதனத்தையும் தனது பிடியினுள் வைத்திருக்கிறது. வெளிநாடுகளில் நேரடியான ஏஜென்ஸிகளாக மட்டும் இது பத்துக்கும் அதிகமான நாடுகளில் முப்பத்து நான்கு ஏஜென்ஸிகளைப் பெற்றிருக்கிறது; இவற்றில் பன்னிரண்டு கூட்டுப் பங்குக் கம்பெனிகளாகும். 1904ஆம் ஆண்டிலேயே ஜெர்மன் மின்விசைத் தொழில் வெளிநாடுகளில் முதலீடு செய்திருந்த தொகை 23 கோடி 30 லட்சம் மார்க்குகளாக மதிப்பிடப்பட்டது. இதில் 6 கோடி 20 லட்சம் ருஷ்யாவில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனியானது, பிரம்மாண்டமான ''கூட்டிணைவு'' ஆகுமென்பதைக் கூறத் தேவையில்லை. உற்பத்திக் கம்பெனிகள் மட்டும் பதினாறுக்குக் குறையாமல் இதனிடம் உள்ளன. இது கேபிள்கள், இன்சுலேட்டர்கள் ஆகியவற்றிலிருந்து மோட்டார் கார்கள், பறக்கும் இயந்திரங்கள் வரை மிகவும் பல்வேறுபட்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது.

ஆனால் ஐரோப்பாவில் ஒன்றுகுவிப்பு, அதேபோது அமெரிக்காவிலான ஒன்றுகுவிப்பு நிகழ்ச்சிப்போக்கில் ஓர் உள்ளடக்கக் கூறே ஆகும். பின்வருமாறு இது வளர்ச்சியுற்றது:

ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி

| | | |
|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடு: | தாம்சன்-ஹொஸ்டன் கம்பெனி ஐரோப்பாவில் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துகிறது | எடிசன் கம்பெனி ஐரோப்பாவில் பிரெஞ்சு எடிசன் கம்பெனியை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரெஞ்சுக் கம்பெனி தனது பேடண்டுகளை ஜெர்மன் நிறுவனத்துக்கு மாற்றுகிறது |
| ஜெர்மனி: | யூனியன் எலெக்டிரிக் கம்பெனி | ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (A.E.G.) |

ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (A.E.G.)

இவ்வாறாக, இரண்டு மின்விசை ''வல்லரசுகள்'' அமைக்கப்பட்டன: ''இவற்றிலிருந்து முழுதும் சுயேச்சையான மின்விசை கம்பெனிகள் எவையுமே உலகில் இல்லை'' என்று ''மின்விசை டிரஸ்ட்டின் பாதை'' என்ற தமது கட்டுரையில் ஹைனிஹ் எழுதினர். இந்த இரண்டு ''டிரஸ்டுகளின்'' மொத்தப் பண்டப் புரள்வைப் பற்றியும், தொழில் நிலையங்களது பரிமாணத்தைப்பற்றியும் பின்வரும் புள்ளிவிவரங்களிலிருந்து ஒரு சித்திரத்தை—எவ்விதத்திலும் முழுமையானதாய் இல்லாததே என்றாலும்—பெறலாம்:

| | பண்டப் புரள்வு (பத்து லட்சம் மார்க்குகளில்) | தொழிலாளர்களின் எண்ணிக்கை | நிகர லாபம் (பத்து லட்சம் மார்க்குகளில்) |
|---|---|---|---|
| அமெரிக்கா: ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (G.E.C.) | | | |
| 1907 . . . . | 252 | 28,000 | 35.4 |
| 1910 . . . . | 298 | 32,000 | 45.6 |
| ஜெர்மனி: ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (A.E.G.) | | | |
| 1907 . . . . | 216 | 30,700 | 14.5 |
| 1911 . . . . | 362 | 60,800 | 21.7 |

பிறகு 1907ல் ஜெர்மன் டிரஸ்டும் அமெரிக்க டிரஸ்டும் உலகைத் தம்மிடையே பாகப் பிரிவினை செய்து கொள்வது பற்றி ஒப்பந்தம் செய்து கொண்டன. இவற்றுக்கிடையே போட்டி நின்றது. அமெரிக்க ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (G.E.C.), அமெரிக்க ஐக்கிய நாட்டையும் கானடாவையும்

''பெற்றது''; ஜெர்மன் ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி (A.E.G.) ஜெர்மனி, ஆஸ்திரியா, ருஷ்யா, ஹாலந்து, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து, துருக்கி, பால்கன் நாடுகள் ஆகியவற்றைப் ''பெற்றது''. புதிய தொழிற் கிளைகளில், இன்னும் முறையாகப் பங்கிடப்படாத ''புதிய'' நாடுகளில் ''மகள் கம்பெனிகள்'' ஊடுருவுவதற்காக தனி ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன—இயற்கையாகவே இவை இரகசியமானவையே. புதிய கண்டுபிடிப்புகளையும் பரிசோதனைகளையும் இரண்டு டிரஸ்டுகளும் தம்மிடையே பரிமாறிக் கொள்வதென்று ஏற்பாடாயிற்று.*

உண்மையில் ஒரே அமைப்பாய் உலக முழுவதும் பரந்தமைந்து, பல நூறு கோடி மூலதனத்தைத் தன் பிடியில் கொண்டு, உலகின் ஒவ்வொரு முடுக்கிலும் தனது ''கிளைகளையும்'' ஏஜென்ஸிகளையும் பிரதிநிதிகளையும் தொடர்புகளையும் இன்ன பிறவற்றையும் பெற்றுள்ள இந்த டிரஸ்டுடன் போட்டியிடுவது எவ்வளவு கடினமென்பது கூறாமலே விளங்கும். ஆனால் சக்திமிக்க இரு டிரஸ்டுகளுக்கிடையே உலகம் பங்கிடப்பட்டுக் கொள்ளப்பட்டதானது, ஏற்றத் தாழ்வான வளர்ச்சியாலும் யுத்தத்தாலும் போண்டியாவதாலும் பிற காரணங்களாலும் சக்திகளின் உறவு நிலையில் மாற்றம் ஏற்படுமாயின் மறுபங்கீட்டினைத் தவிர்த்துவிடவில்லை.

இம்மாதிரியான மறுபங்கீட்டுக்கான முயற்சிக்கு, மறுபங்கீட்டுக்கான போராட்டத்துக்கு, அறிவு புகட்டும்படியான ஓர் உதாரணத்தை எண்ணெய்த் தொழில் தருகிறது.

1905ல் எய்டல்ஸ் எழுதினர்: ''உலகக் கனிய எண்ணெய்ச் சந்தையானது இன்றுங்கூட இரண்டு பெரிய நிதிக் கோஷ்டிகளுக்கிடையே பங்கிடப்பட்டே இருக்கிறது: ராக்ஃபெல்லரது அமெரிக்க ஸ்டான்டர்டு எண்ணெய்க் கம்பெனி (Standard Oil Co.), பாக்கூவில் உள்ள ருஷ்ய எண்ணெய் வயல்

---

* Riesser, முன் குறிப்பிட்ட நூல்; Diouritch, முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 239; Kurt Heinig, முன் குறிப்பிட்ட கட்டுரை.

களைத் தம் பிடியில் கொண்டுள்ள ரொத்ஷீல்டும் நோபலும் ஆகியவையே இவ்விரு கோஷ்டிகள். இரண்டு கோஷ்டிகளும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆனால் இவற்றின் ஏகபோகத்தை ஐந்து எதிரிகள் கடந்த சில ஆண்டுகளாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்''*: 1)அமெரிக்க எண்ணெய் வயல்கள் வளங் குன்றிச் செல்லுதல்; 2) பாக்கூவின் மன்தாஷேவ் நிறுவனத்தின் போட்டி; 3) ஆஸ்திரிய எண்ணெய் வயல்கள்; 4) ருமேனிய எண்ணெய் வயல்கள்; 5) கடல் கடந்த தேசங்களில், குறிப்பாக டச்சுக் காலனிகளில் உள்ள எண்ணெய் வயல்கள் (மிகுந்த செல்வம் படைத்த நிறுவனங்களான சாமுவேலும், ஷெல்லும் பிரிட்டிஷ் மூலதனத்துடனும் தொடர்பு கொண்டவை). இதில் கடைசி மூன்று கோஷ்டிகளும் பிரம்மாண்ட Deutsche Bankஇன் தலைமையில் அமைந்த பெரிய ஜெர்மன் வங்கிகளுடன் தொடர்பு கொண்டவை. இந்த வங்கிகள் காலூன்றத் தமக்குச் ''சொந்த'' இடம் வேண்டுமென்று, உதாரணமாக ருமேனியாவில் சுயேச்சையாகவும் முறையாகவும் எண்ணெய்த் தொழிலை வளர்த்துச் சென்றன. ருமேனிய எண்ணெய்த் தொழிலில் முதலீடு செய்யப்பட்ட அந்நிய மூலதனம் 18 கோடி 50 லட்சம் பிராங்குகள் என்று 1907ல் மதிப்பிடப்பட்டது. இதில் 7 கோடி 40 லட்சம் ஜெர்மன் மூலதனமாகும்.**

''உலகின் பங்கீட்டுக்கான'' போராட்டம்—பொருளாதார வெளியீடுகளில் உண்மையில் இவ்வாறுதான் இது குறிக்கப்படுகிறது—தொடங்கியது. ஒரு புறத்தில் ராக்ஃபெல்லர் ''எண்ணெய் டிரஸ்டு'' யாவற்றையும் தன் கைக்குள் கொண்டு வர விரும்பி, நேரே ஹாலந்திலேயே ''மகள் கம்பெனி'' ஒன்றை அமைத்து, தனது தலையாய எதிரியாகிய ஆங்கிலோ-டச்சு ''ஷெல்'' டிரஸ்டைத் தாக்குவதற்காக வேண்டி, டச்சு இந்தியத் தீவுகளில் எண்ணெய் வயல்களை வாங்கியது. மறுபுறத்தில் Deutsche Bankஉம் ஏனைய பெர்லின் வங்கிகளும் ''தங்களுக்கென'' ருமேனியாவைத் தம் கையிலே ''இருத்தி

* எய்டல்ஸ், முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 192-193.
** Diouritch, முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 245-246.

வைத்துக் கொள்வதையும்'', ராக்ஃபெல்லருக்கு எதிராக அதை ருஷ்யாவுடன் ஐக்கியப்படுத்துவதையும் நோக்கமாய்க் கொண்டு செயல்பட்டன. ராக்ஃபெல்லர் டிரஸ்டு ஏனையவற்றைக் காட்டிலும் மிக அதிகமான மூலதனத்தையும், எண்ணெய்ப் போக்குவரத்திற்கும் விநியோகத்திற்குமான தலைசிறந்த அமைப்பு முறையையும் பெற்றிருந்தது. இப்போராட்டம் Deutsche Bankஇன் படுதோல்வியிலேதான் முடிய வேண்டியிருந்தது, அவ்வாறே 1907ல் முடியவும் செய்தது. Deutsche Bankஇன் முன்னால் இரண்டே வழிகள்தான் இருந்தன: ஒன்று தனது ''எண்ணெய்த் தொழில் நலன்களை'' விட்டொழத்துக் கோடிக் கணக்கில் இழப்புக்கு உள்ளாவது, அல்லது பணிந்துவிடுவது. அது பணிவதெனத் தீர்மானித்தது; ''எண்ணெய் டிரஸ்டுடன்'' மிகவும் பிரதிகூலமான ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. ''அமெரிக்க நலன்களுக்கு ஊறு செய்யும் எதையும் செய்ய முயலுவதில்லை'' என்று Deutsche Bank ஒத்துக் கொண்டது. ஆயினும், ஜெர்மனியில் அரசு எண்ணெய் ஏகபோகம் ஒன்று நிறுவப்படும் பட்சத்தில் இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு வகை செய்யும் வாசகம் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

பிறகு ''எண்ணெய்த் துறைக் கூத்து'' ஆரம்பமாகியது. ஜெர்மனியின் நிதி மன்னர்களில் ஒருவரும், Deutsche Bankஇன் டைரக்டருமான வான் கிவின்னர், அரசு எண்ணெய் ஏகபோகத்தை நிறுவுவதற்காக, தனது அந்தரங்கச் செயலாளர் ஷ்டோஸ் மூலம் ஒரு பிரசார இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த மிகப் பெரிய பெர்லின் வங்கியின் பிரம்மாண்டமான பொறியமைவும் பரவலான அதன் ''தொடர்புகள்'' யாவும் முடுக்கி விடப்பட்டன. அமெரிக்க டிரஸ்டின் ''ஆதிக்கத்தை'' எதிர்த்துத் ''தேசபக்தக்'' கோபாவேசங் கொண்டு பத்திரிகைகள் பொங்கியெழுந்தன. எண்ணெய் ஏகபோகத்தை நிறுவுவதற்கான மசோதாவைக் கொண்டு வரும்படி அரசாங்கத்திடம் கோரும் தீர்மானம் அனேகமாய் ஒருமனதாக ரைஹ்ஸ்டாகில் நிறைவேற்றப்பட்டது. ''மக்களது ஆதரவுக்குரிய'' இந்தக் கருத்தினை அரசாங்கம் துள்ளியெழுந்து பிடித்துக்கொண்டது. தனது அமெரிக்க எதிராளியை

ஏமாற்றவும், அரசு ஏகபோகத்தின் மூலம் தனது தொழிலை மேம்படுத்திக் கொள்ளவும் நினைத்து Deutsche Bank செயல்படுத்திய சூழ்ச்சித் திட்டம் வெற்றியடைந்து விட்ட தாகவே தோன்றியது. ருஷ்யச் சர்க்கரை ஆலைக்காரர்களது லாபங்களுக்குக் குறையாத பெருத்த லாபங்கள் கிடைக்கப் போவதாக ஜெர்மன் எண்ணெய்த் தொழில் மன்னர்கள் ஏற் கெனவே அகமகிழ்ந்து கொண்டனர்.... ஆனால் முதலாவ தாக, கொள்ளையைப் பகிர்ந்து கொள்வதில் பெரிய ஜெர்மன் வங்கிகள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டன. Deutsche Bankஇன் பேராசை கொண்ட நோக்கங்களை Disconto-Gesellschaft அம்பலப்படுத்தியது; இரண்டாவதாக ராக்ஃபெல் லருடன் போரிடுவதால் ஏற்படக்கூடிய விளைவு குறித்து அர சாங்கம் பீதி கொண்டது. ஏனெனில் ஜெர்மனிக்குப் பிற ஆதாரங்களிலிருந்து எண்ணெய் கிடைப்பது உறுதிதானு என்பது பெரிதும் சந்தேகத்துக்குரியதாய் இருந்தது (ருமே னிய உற்பத்தி சிறிதாகவே இருந்தது); மூன்றுவதாக, அப் போதுதான் ஜெர்மனியின் யுத்தத் தயாரிப்புகளுக்காக 1913ஆம் ஆண்டின் நூறு கோடி மார்க் கடன்கள் அங்கீகரிக் கப்பட்டிருந்தன. எண்ணெய் ஏகபோகத்துக்கான திட்டம் ஒத்திப் போடப்பட்டது. போராட்டத்தில் ராக்ஃபெல்லர் ''எண்ணெய் டிரஸ்டு'' அப்போதைக்கு வெற்றி வாகை சூடி யது.

ஜெர்மனியானது மின்விசை ஏகபோகம் ஒன்றை நிறுவி நீர் ஆற்றலை மலிவான மின்விசையாக மாற்றுவதன் மூலம் மட்டும்தான், எண்ணெய் டிரஸ்டை எதிர்த்துப் போரிட முடியும் என்று பெர்லின் சஞ்சிகை *Die Bank* இச்சந்தர்ப் பத்தில் எழுதியது. அதன் ஆசிரியர் தொடர்ந்து எழுதியதா வது: ''ஆனல் மின்விசை ஏகபோகமானது உற்பத்தியாளர் களுக்குத் தேவைப்படும் போதுதான் உதித்தெழும், அதா வது மின்விசைத் தொழிலில் அடுத்த பெரிய தகர்வு நெருங்கி வந்து, தனியாரது மின்விசை 'நிறுவனங்களால்' பெருஞ் செலவில் எங்கும் தற்போது கட்டப்பெற்று வரும் விலை உயர்ந்த மிகப் பெரிய மின்விசை நிலையங்கள்—ஏற்கெனவே நகரங்களிடமிருந்தும் ராஜ்யங்களிடமிருந்தும் பிறவற்றிட

மிருந்தும் அரைகுறை ஏகபோக உரிமைகள் பெற்று வருகின்ற இந்த மின்விசை நிலையங்கள்—லாபத்துடன் தொடர்ந்து இயங்க முடியாமற் போகும் போதுதான் மின்விசை ஏகபோகம் உதித்தெழும். அப்போது நீரின் ஆற்றலை உபயோகித்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் இதை அரசாங்கச் செலவில் மலிவான மின்விசையாக மாற்ற முடியப் போவதில்லை. 'அரசாங்கத்தின் கண்காணிப்புக்கு உட்பட்ட தனியார் ஏகபோகம்' ஒன்றினிடம்தான் இதையும் ஒப்படைக்க வேண்டியிருக்கும். ஏனெனில் தனியார் தொழில் துறை ஏற்கனவே இதனுடன் மிகப் பல ஒப்பந்தங்கள் செய்து முடித்திருக்கிறது; பெருத்த இழப்பீட்டுக்கான நிபந்தனைகளுடன் கூடியவை இவை... நைட்டிரேட் ஏகபோகம் குறித்தும் இவ்வாறுதான் நடைபெற்றது; எண்ணெய் ஏகபோகம் குறித்தும் இவ்வாறுதான் நடைபெறுகிறது; மின்விசை ஏகபோகம் குறித்தும் இவ்வாறேதான் நடைபெறும். நமது அரசு சோஷலிஸ்டுகள், எழிலார்ந்த ஒரு கோட்பாடு கண்களை மறைத்துத் தம்மைக் குருடர்களாக்குவதற்கு அனுமதிக்கும் இவர்கள், இனியும் காலந் தாழ்த்தாது முடிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில்: ஜெர்மனியில் ஏகபோகங்கள் நுகர்வார்களுக்கு ஆதாயம் கிடைக்கச் செய்வதையோ, முன்னின்று தோற்றுவிப்போரின் லாபங்களில் ஒரு பகுதியை அரசிடம் தருவதையோகூட எந்நாளும் தமது நோக்கமாகக் கொண்டிருந்ததில்லை; ஏகபோகங்களால் இம்மதிரியான விளைவு ஏற்பட்டதுமில்லை; திவாலகும் நிலையிலுள்ள தனியார் தொழில்கள் அரசின் செலவில் புத்துயிர் பெற்று மீண்டெழுவதற்கு வசதி செய்வதற்கே ஏகபோகங்கள் சேவை புரிந்து வந்துள்ளன.''*

ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்கள் நிர்ப்பந்தம் காரணமாய் அளிக்க வேண்டியிருக்கும் மதிப்பு மிக்க ஒப்புதல் வாக்குமூலங்களாகும் இவை. நிதி மூலதனத்தின் சகாப்தத்தில் தனியார் ஏகபோகங்களும் அரசு ஏகபோகங்களும் எப்படிப் பின்னிப்பிணைந்து கொண்டுவிடுகின்றன என்

* *Die Bank*, 1912, 2, பக்கங்கள் 629, 1036; 1913, 1, பக்கம் 388.

பதையும், உலகைப் பங்கிட்டுக் கொள்வதற்காகப் பெரிய ஏகபோகக்காரர்களிடையே நடைபெறும் ஏகாதிபத்தியப் போராட்டத்தில் இவை இரண்டும் எப்படித் தனித்தனி கரணைகளே ஆகும் என்பதையும் இங்கே நாம் தெட்டத் தெளிவாகக் காண்கிறோம்.

வாணிபக் கப்பல் போக்குவரத்திலும் ஒன்றுகுவிப்பின் பிரம்மாண்டமான வளர்ச்சி உலகைப் பங்கு போட்டுக் கொள்வதில்தான் முடிவுற்றிருக்கிறது. ஜெர்மனியில் சக்தி வாய்ந்த இரண்டு கம்பெனிகள் முன்னிலைக்கு வந்துள்ளன: ஹாம்பர்க்-அமெரிக்கா, வடக்கு ஜெர்மன் லாயிடு. இவை ஒவ்வொன்றும் 20 கோடி மார்க்குகள் மூலதனமும் (பங்குகளிலும் பத்திரங்களிலும்), 18 கோடி 50 லட்சத்திலிருந்து 18 கோடி 90 லட்சம் மார்க்குகள் வரை மதிப்புள்ள கப்பல்களும் பெற்றவை. மறு புறத்தில் அமெரிக்காவில், மார்கன் டிரஸ்டு எனப்படும் சர்வதேச வாணிபக் கடல் கம்பெனி 1903 ஜனவரி 1ல் நிறுவப்பட்டது. ஒன்பது அமெரிக்க, பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளை அது ஒன்றிணைத்தது, 12 கோடி டாலர்கள் (48 கோடி மார்க்குகள்) மூலதனம் பெற்றிருந்தது. 1903லேயே ஜெர்மன் ராக்ஷசக் கம்பெனிகளும் இந்த அமெரிக்க-பிரிட்டிஷ் டிரஸ்டும் லாபங்களைப் பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாக உலகைத் தம்மிடையே பங்கிட்டுக் கொள்வது பற்றி ஒப்பந்தம் முடித்துக் கொண்டன. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான போக்குவரத்தில் ஜெர்மன் கம்பெனிகள் போட்டியிடாதிருக்க இசைந்தன. ஒவ்வொன்றுக்கும் எந்தெந்தத் துறைமுகங்கள் ''ஒதுக்கித் தரப்பட வேண்டும்'' என்பது திட்டமாக நிர்ணயிக்கப்பட்டது; கூட்டுக் கண்காணிப்புக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது; இப்படி மற்றும் பலவும் செய்யப்பட்டன. இருபது ஆண்டுகளுக்காக இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. யுத்தம் நேரிட்டால் இவ்வொப்பந்தம் ரத்தாகிவிடும் என்று முன்னெச்சரிக்கையுடன் இதில் ஒரு ஷரத்தும் சேர்க்கப்பட்டது.*

---

* ரீசர், முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 125.

சர்வதேசத் தண்டவாளக் கார்ட்டல் அமைக்கப்பட்ட கதையும் வெகுவாய் அறிவு புகட்டக் கூடியதாகும். 1884லேயே, தொழில் துறையானது கடுமையான மந்தத்துக்கு உள்ளாகியிருந்த போது, இத்தகைய கார்ட்டல் ஒன்றை அமைப்பதற்கான முதல் முயற்சியை பிரிட்டிஷ், பெல்ஜிய, ஜெர்மன் தண்டவாள உற்பத்தியாளர்கள் மேற்கொண்டனர். சம்பந்தப்பட்ட நாடுகளின் உள்நாட்டுச் சந்தைகளில் ஒருவரோடொருவர் போட்டியிடாதிருக்க இந்த உற்பத்தியாளர்கள் உடன்பட்டனர்; அன்னியச் சந்தைகளைப் பின்வரும் பங்களவுகளில் தம்மிடையே பிரித்துக் கொண்டார்கள்: கிரேட் பிரிட்டன், 66 சதவிகிதம்; ஜெர்மனி, 27 சதவிகிதம்; பெல்ஜியம், 7 சதவிகிதம். இந்தியா மற்றும் கிரேட் பிரிட்டனுக்கே உரியதாக்கப்பட்டது. இந்தக் கார்ட்டலில் சேராமல் இருந்த ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்தை எதிர்த்துக் கூட்டாகப் போர் துவக்கப்பட்டது; எல்லா விற்பனைகளின் மீதும் விதிக்கப்பட்ட சதவிகிதக் கட்டணத்தின் மூலம் இப்போரின் செலவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் 1886ல் இரண்டு பிரிட்டிஷ் நிறுவனங்கள் இதிலிருந்து விலகியதும் இந்தக் கார்ட்டல் தகர்ந்து போயிற்று. அடுத்து வந்த தொழில் உயர்வேற்றக் காலங்களில் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாமற் போனது குணாதிசயமாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

1904ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஜெர்மன் எஃகு சிண்டிக்கேட்டு அமைக்கப்பட்டது. 1904 நவம்பரில், சர்வதேசத் தண்டவாளக் கார்ட்டல் உயிர்ப்பிக்கப்பட்டது, பங்களவுகள் வருமாறு: இங்கிலாந்து, 53.5 சதவிகிதம்; ஜெர்மனி, 28.83 சதவிகிதம்; பெல்ஜியம், 17.67 சதவிகிதம். பிரான்ஸ் பிற்பாடு இந்தக் கார்ட்டலில் சேர்ந்து கொண்டது; 100 சதவிகித வரம்புக்குக் மேற்பட்டதில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஆண்டுக்கு முறையே 4.8 சதவிகிதமும் 5.8 சதவிகிதமும் 6.4 சதவிகிதமும்—அதாவது மொத்தம் முறையே 104.8 சதவிகிதத்திலும் பிறவற்றிலும் மேற்கூறிய சதவீதங்களை—பெற்றுக் கொண்டது. 1905ல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் எஃகுக் கார்ப்பொரேஷன் இந்தக் கார்ட்டலில் சேர்ந்தது; பிறகு ஆஸ்திரியாவும் ஸ்பெயினும் சேர்ந்தன.

1910ல் ஃபோகல்ஷ்டைன் எழுதினர்: ''இந்தச் சமயத்தில் உலகின் பங்கீடு முற்றுப் பெற்றுவிட்டது; பெரிய நுகர்வாளர்கள், முதன்மையாக அரசு ரயில்வேக்கள்—இவற்றின் நலன்களைக் கருதாமலே உலகம் பங்கிடப்பட்டுவிட்டதால்—கவிஞனைப் போல் இப்பொழுது வியாழனின் விண்ணிலே வாசம் புரியலாம்.''*

சர்வதேசத் துத்தநாக சிண்டிக்கேட்டையும் நான் குறிப்பிட வேண்டும். இது 1909ல் நிறுவப்பட்டது. ஜெர்மன், பெல்ஜிய, பிரெஞ்சு, ஸ்பானிய, பிரிட்டிஷ் ஆகிய ஐந்து தொழிற்சாலை தோகுப்புகளிடையே உற்பத்தியினை இது கருராகப் பிரித்து ஒதுக்கியது. மற்றும் சர்வதேச வெடி மருந்து டிரஸ்டையும் குறிப்பிட வேண்டும்; இந்த டிரஸ்டு ''எல்லா ஜெர்மன் வெடி பொருள் உற்பத்தியாளர்களும் அடங்கிய, மிகவும் நவீனமான, நெருங்கிய கூட்டணியாகும்; இந்தக் கார்ட்டலும் இதே முறையில் ஒழுங்கமைக்கப்பட்ட பிரெஞ்சு, அமெரிக்க வெடி மருந்து உற்பத்தியாளர்களும் சேர்ந்து அனைத்து உலகையும் தம்மிடையே பங்கிட்டுக் கொண்டார்கள் எனலாம்''** என்று லீஃப்மன் கூறுகிறார்.

ஜெர்மனி பங்கு பெற்றிருந்த சர்வதேசக் கார்ட்டல்கள் 1897ல் மொத்தம் சுமார் நாற்பது இருந்ததாகவும், 1910க்குள் சுமார் நூறு ஆகிவிட்டதாகவும் லீஃப்மன் கணக்கிட்டார்.

சர்வதேசக் கார்ட்டல்கள் மூலதனம் சர்வதேசமயமாக்கப்படுதலின் மிகவும் எடுப்பான வெளிப்பாடுகளில் ஒன்றுகுமாதலால், முதலாளித்துவத்தில் தேசங்களிடையே சமாதானம் மலர்வதற்கான நம்பிக்கையை அளிப்பனவாகுமென்ற கருத்தைச் சில முதலாளித்துவ எழுத்தாளர்கள் வெளியிட்டிருக்கிருர்கள் (முன்பு, உதாரணமாக 1909ல், தாம் அனுசரித்து வந்த மார்க்சிய நிலையை அடியோடு விட்டொழித்துவிட்ட கார்ல் காவுத்ஸ்கியும் இப்போது இந்த எழுத்தாளர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கிருர்). தத்துவார்த்தத்தில்

* Vogelstein, *Organisationsformen*, பக்கம் 100.
** Liefmann, *Kartelle und Trusts*, 2, A., பக்கம் 161.

இந்தக் கருத்து அறவே அபத்தமானது, நடைமுறையில் இது குதர்க்கவாதமும் [sophistry], படுமோசமான சந்தர்ப்பவாதத்தை நேர்மையற்ற முறையில் ஆதரித்து வாதாடுவதுமே ஆகும். முதலாளித்துவ ஏகபோகங்கள் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றன என்பதையும், பல்வேறு முதலாளித்துவக் கூட்டுகளுக்கிடையே நடைபெறும் போராட்டத்தின் நோக்கம் என்ன என்பதையும் சர்வதேசக் கார்ட்டல்கள் காண்பிக்கின்றன. கடைசியாகக் கூறப்பட்ட நிலைமைதான் மிகவும் முக்கியமானது; இது மட்டும்தான் தற்போது நடைபெறுவதன் வரலாற்று-பொருளாதார அர்த்தத்தை நமக்குக் காண்பிக்கிறது; ஏனெனில் மாறுகிறவையும் ஒப்பளவில் பிரத்தியேகமானவையும் தாற்காலிகமானவையும் ஆகிய காரணங்களுக்கு ஏற்ப, போராட்டத்தின் வடிவங்கள் மாற்றமடையக் கூடும், இடையருது மாற்றமடையவும் செய்கின்றன, ஆனல் போராட்டத்தின் சாராம்சம், அதன் வர்க்க உள்ளடக்கம், வர்க்கங்கள் இருந்து வரும் வரை நிச்சயம் மாற்றமடைய முடியாது. இன்றையப் பொருளாதாரப் போராட்டத்தின் சாராம்சத்தை (உலகின் பங்கீட்டை) மறைப்பதும், இப்போராட்டத்தின் ஒரு வடிவத்தை ஒரு சமயமும் இன்னெரு வடிவத்தை இன்னெரு சமயமும் வலியுறுத்துவதும், உதாரணமாக ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கே—மெய் நடப்பில் காவுத்ஸ்கி தமது தத்துவார்த்த வாதங்களில் இவ்வர்க்கத்தின் தரப்புக்கு மாறிச் சென்றுவிடுகிருர் (இதைப் பற்றி பிற்பாடு எடுத்துரைப்பேன்) — இயற்கையாக உகந்தனவாகும். காவுத்ஸ்கி இதே தவறைத்தான் செய்கிருர். உண்மையில் நாம் மனத்தில் கொண்டிருப்பது ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தை மட்டுமல்ல, உலகமெங்கிலும் உள்ள முதலாளித்துவ வர்க்கத்தைக் கொண்டுள்ளோம். முதலாளிகள் உலகைப் பங்கிட்டுக் கொள்வது குறிப்பிட்டத்தக்க எந்தக் கெட்ட எண்ணத்தாலும் உந்தப்பட்டு அல்ல; ஒன்றுகுவிப்பு ஏற்கெனவே வந்தடைந்துவிட்ட வளர்ச்சி நிலையானது லாபங்கள் பெறுவதற்காக இந்த முறையை மேற்கொள்ளுமாறு

அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவதாலேயே அவர்கள் இதைச் செய்கிறார்கள். உலகை அவர்கள் ''மூலதனத்தின் விகிதத்தில்'', ''வலிமையின் விகிதத்தில்'' பங்கிட்டுக் கொள்கிறார்கள், ஏனெனில் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியிலும் முதலாளித்துவத்திலும் வேறு எந்தப் பங்கீட்டு முறையும் இருக்க முடியாது. ஆனால் வலிமையானது பொருளாதார, அரசியல் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மாற்றமடைகிறது; என்ன நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு, வலிமையில் ஏற்படும் மாற்றங்களால் தீர்க்கப்படும் பிரச்சினைகள் எவை என்பதைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்த மாற்றங்கள் ''தூய்மையான'' பொருளாதாரத் தன்மையனவா, அல்லது பொருளாதாரமல்லாத பிறிதொரு தன்மையனவா (உதாரணமாக இராணுவத் தன்மையனவா) என்ற கேள்வி இரண்டாந்தரமான ஒன்று; முதலாளித்துவத்தின் மிக அண்மையதான இந்தச் சகாப்தத்தைப் பற்றிய அடிப்படைக் கருத்துக்களைக் கிஞ்சித்தும் பாதிக்க முடியாத ஒரு கேள்வி இது. முதலாளித்துவக் கூட்டுகளிடையிலான போராட்டம், உடன்பாடுகள் ஆகியவற்றின் சாராம்சத்தைப் பற்றிய பிரச்சினைக்குப் பதிலாக, இவற்றின் வடிவத்தை (இன்று சமாதானமானதும், நாளைக்குப் போர் வழிப்பட்டதும், நாளை மறுநாள் மீண்டும் போர் வழிப்பட்டதுமான இந்த வடிவத்தைப்) பற்றிய பிரச்சினையை எடுப்பது குதர்க்கவாதியின் நிலைக்கு இழிவுற்றுவிடுவதே ஆகும்.

முதலாளித்துவத்தின் மிகவும் அண்மைய கட்டத்துக்குரிய இந்தச் சகாப்தம் நமக்குத் தெளிவுபடுத்துவது என்னவெனில்: உலகின் பொருளாதாரப் பங்கீட்டின் அடிப்படையில் முதலாளித்துவக் கூட்டுகளிடையே குறிப்பிட்ட சில உறவுகள் வளருகின்றன; அதேபோது இதற்கு இணைவாகவும் இதனுடன் தொடர்பு கொண்டும் உலகின் பிரதேசப் பங்கீட்டின் அடிப்படையில், காலனிகளுக்கான போராட்டத்தின், ''செல்வாக்கு மண்டலங்களுக்கான போராட்டத்தின்'' அடிப்படையில் அரசியல் கூட்டணிகளுக்கிடையில், அரசுகளுக்கிடையில் குறிப்பிட்ட சில உறவுகள் வளருகின்றன என்பதுதான்.

## 6. வல்லரசுகளிடையே உலகம் பங்கிடப்படுதல்

''ஐரோப்பியக் காலனிகளது பரப்பின் வளர்ச்சி''* பற்றிய தமது நூலில், பூகோளவியலாளரான ஆ. சூப்பன் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் இவ்வளர்ச்சியினைப் பின்வருமாறு சுருக்கமாய்த் தொகுத்துரைக்கிறுர்:

ஐரோப்பியக் காலனியாதிக்க அரசுகளுக்குச் சொந்தமான பரப்பின் சதவிகிதம் (அமெரிக்க ஐக்கிய நாடும் உள்ளிட்டு)

| | 1876 | 1900 | அதிகரிப்பு அல்லது குறைவு |
|---|---|---|---|
| ஆப்பிரிக்காவில் . . | 10.8% | 90.4% | +79.6% |
| போலினீஷியாவில் . | 56.8% | 98.9% | +42.1% |
| ஆசியாவில் . . . | 51.5% | 56.6% | + 5.1% |
| ஆஸ்திரேலியாவில் . | 100.0% | 100.0% | — |
| அமெரிக்காவில் . . | 27.5% | 27.2% | — 0.3% |

''ஆகவே இந்தக் காலகட்டத்தின் தனி இயல்பு, ஆப்பிரிக்காவும் போலினீஷியாவும் பங்கிட்டுப் பிரித்துக் கொள்ளப்பட்டிருப்பதுதான்'' என்று அவர் முடிவு கட்டுகிறுர். ஆசியாவிலும் அமெரிக்காவிலும் பிடித்துக் கொள்ளப்படாத பரப்புகள்—அதாவது எந்த அரசுக்கும் உடைமையாகாத பரப்புகள் — இப்பொழுது இல்லாததால், சூப்பனுடைய முடிவை விரிவுபடுத்தி, புவிக் கோளத்தின் பங்கீடு முடிவுற்றுவிட்டதே பரிசீலனையிலுள்ள இந்தக் காலகட்டத்தின் தனி இயல்பாகுமெனக் கூற வேண்டும்—பங்கீடு முடிவுற்றுவிட்டதென்பது மறுபங்கீடு சாத்தியமல்ல என்னும் அர்த்தத்தில் அல்ல, மாறுக மறுபங்கீடுகள் சாத்தியமானவையும் தவிர்க்க முடியாதவையும் ஆகும்; முதலாளித்துவ நாடுகளின் காலனி

* A. Supan, *Die territoriale Entwicklung der europäischen Kolonien*, 1906, பக்கம் 254 (ஆ. சூப்பன், ''ஐரோப்பியக் காலனிகளது பரப்பின் வளர்ச்சி''.—ப-ர்.).

யாதிக்கக் கொள்கையானது நமது புவிக் கோளத்தில் பிடிக் கப்படாத பரப்புகள் கைப்பற்றப்படுவதை **நிறைவு பெறச் செய்துவிட்டது** என்னும் அர்த்தத்தில்தான் பங்கீடு முடிவுற்று விட்டதாகக் கூறுகிறேம். உலகமானது முதன்முதலாக இப்போது முழு அளவுக்குப் பங்கிட்டுக் கொள்ளப்பட்டுவிட் டது, ஆகவே இனி வருங்காலத்தில் மறுபங்கீடு **மட்டுமே**தான் சாத்தியம், அதாவது பரப்புகள் ஓர் ''உடைமையாளர்'' இடமிருந்து இன்னெருவருக்கு மாற முடியுமே தவிர, உடை மையாக்கப்படாத பரப்பு ''உடைமையாளர்'' ஒருவரிடம் மாற வழியில்லை.

உலகக் காலனியாதிக்கக் கொள்கையினது தனியியல்பு வாய்ந்த ஒரு சகாப்தத்தில், ''முதலாளித்துவ வளர்ச்சியின் மிக அண்மையதான கட்டத்துடன்'', நிதி மூலதனத்துடன் மிக நெருங்கிய பிணைப்பு கொண்டதான ஒரு சகாப்தத்தில் நாம் வாழ்ந்து வருகிறேம். இந்தக் காரணத்தினுல் உண்மை நிலைவரங்களை மேலும் விவரமாகப் பரிசீலிப்பது யாவற்றுக் கும் முதலாய் அவசியமாகிறது; இந்தச் சகாப்தத்தை இதற்கு முற்பட்டவற்றிடமிருந்து வேறுபடுத்துவது என்ன, தற்போ துள்ள சூழ்நிலை என்ன என்பதைக் கூடுமான அளவுக்குத் துல்லியமாக நிர்ணயம் செய்யும் பொருட்டு இது அவசிய மாகிறது. முதலாவதாக, இங்கு இரண்டு கேள்விகள் எழுகின் றன: இந்த நிதி மூலதனச் சகாப்தமாகப் பார்த்துக் காலனி யாதிக்கக் கொள்கை கடுமையடைய, காலனிகளுக்கான போராட்டம் கூர்மையாகிவிடக் காண்கிறேமா? இப்படிப் பார்க்கையில் உலகம் தற்போது எவ்விதம் பங்கிடப்பட் டிருக்கிறது?

காலனியாக்கத்தின் வரலாறு பற்றிய தமது நூலில் அமெ ரிக்க எழுத்தாளர் மாரிஸ்,* பத்தொன்பதாம் நூற்றுண்டின் வெவ்வேறு காலப் பகுதிகளில் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ்,

* Henry C. Morris, *The History of Colonization*, New Jork, 1900, Vol. II, p. 88; Vol. I, p. 419; Vol. II, p. 304 (ஹென்ரி சி. மாரிஸ், ''காலனியாக்கத்தின் வரலாறு'', நியூ யார்க், 1900, தொகுதி II, பக்கம் 88; தொகுதி I, பக்கம் 419; தொகுதி II, பக்கம் 304.—ப-ர்.).

ஜெர்மனி ஆகியவற்றின் காலனி உடைமைகளைப் பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுத்துரைக்க முயற்சி செய்தார். அவர் வந்தடைந்த முடிவுகளின் சுருக்கமான தொகுப்புரை வருமாறு:

காலனி உடைமைகள்

| ஆண்டு | கிரேட் பிரிட்டன் | | பிரான்ஸ் | | ஜெர்மனி | |
|---|---|---|---|---|---|---|
| | பரப்பளவு (பத்து லட்சம் சதுர மைலில்) | மக்கள் தொகை (பத்து லட்சத்தில்) | பரப்பளவு (பத்து லட்சம் சதுர மைலில்) | மக்கள் தொகை (பத்து லட்சத்தில்) | பரப்பளவு (பத்து லட்சம் சதுர மைலில்) | மக்கள் தொகை (பத்து லட்சத்தில்) |
| 1815—1830 | ? | 126.4 | 0.02 | 0.5 | — | — |
| 1860 | 2.5 | 145.1 | 0.2 | 3.4 | — | — |
| 1880 | 7.7 | 267.9 | 0.7 | 7.5 | — | — |
| 1899 | 9.3 | 309.0 | 3.7 | 56.4 | 1.0 | 14.7 |

கிரேட் பிரிட்டனுக்கு, 1860க்கும் 1880க்கும் இடைப்பட்ட காலம்தான் காலனிக் கைப்பற்றல்கள் பிரம்மாண்டமாய் விரிவடைந்துவிட்ட காலமாகும்; பத்தொன்பதாம் நூற்ருண்டின் கடைசி இருபது ஆண்டுகளிலும் காலனிக் கைப்பற்றல் கணிச அளவில் நடைபெற்றது. இதே இருபது ஆண்டுகள்தாம் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் காலனிக் கைப்பற்றல்கள் பெரிதும் விரிவடைந்த காலமாகும். ஏகபோகத்துக்கு முற்பட்ட முதலாளித்துவத்தின், தடையில்லாப் போட்டி மேலோங்கியிருந்த முதலாளித்துவத்தின் வளர்ச்சி 1860ஆம் ஆண்டுகளிலும் 1870ஆம் ஆண்டுகளிலும் அதன் உச்ச வரம்பை எட்டியதென்று மேலே கண்டோம். சரியாக அதே காலகட்டத்துக்குப் பிறகுதான் காலனிக் கைப்பற்றல்

களில் பிரமாதமான ''உயர்வேற்றம்'' ஆரம்பமாகி, உலகின் பரப்பைப் பங்கிட்டுக் கொள்வதற்கான போராட்டம் மிக மிஞ்சிக் கூர்மையடைகிறதென்று இப்பொழுது காண்கிறோம். ஆகவே முதலாளித்துவமானது ஏகபோக முதலாளித்துவக் கட்டத்துக்கு, நிதி மூலதனத்துக்கு மாறிச் சென்ற நிகழ்ச்சிப் போக்கு உலகைப் பங்கு போட்டுக் கொள்வதற்கான போராட்டம் கடுமையடைந்ததுடன் **பிணைக்கப்பட்டிருக்கிறது** என்பது சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாகிறது.

1884க்கும் 1900க்கும் இடையிலான ஆண்டுகளே பிரதான ஐரோப்பிய அரசுகள் தீவிர ''விஸ்தரிப்பு'' அடைந்த காலம் என்று ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தமது நூலில் ஹாப்ஸன் குறிப்பிடுகிறார். அவரது மதிப்பீட்டின்படி, இவ்வாண்டுகளில் கிரேட் பிரிட்டன் 5 கோடி 70 லட்சம் மக்களைக் கொண்ட 37 லட்சம் சதுர மைல் பரப்பைத் தனதாக்கிக் கொண்டது; இதே போல பிரான்ஸ் 3 கோடி 65 லட்சம் மக்களைக் கொண்ட 36 லட்சம் சதுர மைல் பரப்பையும், ஜெர்மனி 1 கோடி 47 லட்சம் மக்களைக் கொண்ட 10லட்சம் சதுர மைல் பரப்பையும், பெல்ஜியம் 3 கோடி மக்களைக் கொண்ட 9 லட்சம் சதுர மைல் பரப்பையும், போர்த்துகல் 90 லட்சம் மக்களைக் கொண்ட 8 லட்சம் சதுர மைல் பரப்பையும் தமதாக்கிக் கொண்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், குறிப்பாக 1880க்குப் பிறகும், எல்லா முதலாளித்துவ நாடுகளும் நடத்திய காலனி வேட்டை, அரசுத் தந்திரம், அயல்நாட்டுக் கொள்கை ஆகியவற்றின் வரலாற்றில் எல்லாரும் அறிந்த உண்மையே ஆகும்.

கிரேட் பிரிட்டனில் தடையில்லாப் போட்டி தழைத்தோங்கியிருந்த காலத்தில், அதாவது 1840க்கும் 1860க்கும் இடையில், தலையாய பிரிட்டிஷ் முதலாளித்துவ அரசியல்வாதிகள் காலனியாதிக்கக் கொள்கையை **எதிர்த்தார்கள்**; காலனிகளின் விடுதலை, பிரிட்டனிடமிருந்து அவை முழுமையாகப் பிரிந்து செல்லுதல் தவிர்க்க முடியாததும் விரும்பத்தக்கதும் ஆகுமெனக் கருதினார்கள். பொதுவாக ஏகாதிபத்தியச் சார்பு கொண்டிருந்த, ஆங்கில அரசியல்வாதி டிஸ்ரேலி

''காலனிகள் நமது கழுத்தில் இருத்தப்பட்ட ஏந்திரக் கற்களாகும்'' என்று 1852ல் கூறியதாக, 1898ல் வெளிவந்த ''நவீன பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்''* என்ற ஒரு கட்டுரையில் மா.பெர் எடுத்துரைக்கிறார். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், பிரிட்டனின் அன்றைய வீரர்களாகக் கொண்டாடப்பட்டவர்கள் ஏகாதிபத்தியத்தை பகிரங்கமாகவே மெச்சிப் பேசி, மிகவும் கோடூரமாய் ஏகாதிபத்தியக் கொள்கையைச் செயல்படுத்தியவர்களான செசில் ரோட்ஸும், ஜோசப் சேம்பர்லினும்தாம்.

இந்தத் தலைமையான பிரிட்டிஷ் முதலாளித்துவ அரசியல்வாதிகளுங்கூட நவீன ஏகாதிபத்தியத்தின் தூய பொருளாதார வேர்களென்றும் சமூக-அரசியல் வேர்களென்றும் கூறத் தக்கவற்றுக்கு இடையிலான தொடர்பினைக் கண்டுணர்ந்து கொண்டது கவனிக்கத் தக்கதாகும். ஏகாதிபத்தியமானது ''மெய்யான, விவேகம் வாய்ந்த, பொருளியலுக்கு உகந்த கொள்கையாகு''மெனச் சேம்பர்லின் போற்றினார்; உலகச் சந்தையில் கிரேட் பிரிட்டன் எதிர்த்து நிற்க வேண்டியிருந்த ஜெர்மன், அமெரிக்க, பெல்ஜியப் போட்டியை அவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டினார். கார்ட்டல்களையும் சிண்டிக்கேட்டுகளையும் டிரஸ்டுகளையும் அமைத்து வந்த முதலாளிகள் ஏகபோகமே விமோசனத்துக்கான வழியாகுமெனக் கூறினார்கள். இன்னும் பங்கிடப்படாமல் உலகில் எஞ்சியிருந்த பகுதிகளைச் சுவீகரித்துக் கொள்வதற்காக அவசரமாய் வேலை செய்து வந்த முதலாளித்துவ வர்க்க அரசியல் தலைவர்கள், ஏகபோகமே விமோசனத்துக்கான வழியென்று எதிரொலி எழுப்பினர். செசில் ரோட்ஸ் அவரது ஏகாதிபத்தியக் கருத்தோட்டங்களைப் பின்வருமாறு 1895ல் தம்மிடம் வெளியிட்டதாக, அவரது அத்யந்த நண்பரான பத்திரிகையாளர் ஸ்தேட் நமக்கு எடுத்துரைக்கிறார்: ''நேற்று லண்டனின் ஈஸ்ட் என்டில்'' [தொழிலாளி வர்க்கம் வசிக்கும் பகுதி] ''இருந்தேன்; வேலையில்லாதோரது கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். ஆவேசமான பேச்சுக்களைக் கேட்டேன், 'ரொட்டி! ரொட்டி!'

---

* *Die Neue Zeit*, XVI, I, 1898, பக்கம் 302.

என்ற கூப்பாடுகளாகவே இருந்தன அவை. வீட்டுக்குத் திரும்பும் வழியில் அக்காட்சியைப் பற்றிச் சிந்தித்தேன். ஏகாதிபத்தியத்தின் முக்கியத்துவத்தை என்றும் இல்லாதபடி ஐயமற உணரலானேன்.... நான் மதித்துப் போற்றும் கருத்து சமுதாயப் பிரச்சினைக்குரிய தீர்வாகும், அதாவது ஐக்கிய முடியரசில் [United Kingdom] உள்ள 4 கோடி மக்களை இரத்தப் பெருக்கெடுக்கும் உள்நாட்டுப் போரிலிருந்து காப்பாற்றும் பொருட்டு, காலனி அரசுத்துறையினரான நாம் உபரி மக்கள் தொகையோர் குடியேறுவதற்காக, தொழிற் சாலைகளிலும் சுரங்கங்களிலும் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குப் புதிய சந்தைகள் கிடைப்பதற்காகப் புதிய பிரதேசங்களைப் பெற்றாக வேண்டும். நான் எப்பொழுதுமே கூறிவந்துள்ளது போல் சாம்ராஜ்ஜியம் என்பது வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடும் பிரச்சினையாகும். உள்நாட்டுப் போரைத் தவிர்க்க விரும்புவோர் ஏகாதிபத்தியவாதிகள் ஆவது அவசியமாகும்''*

1895ல் செசில் ரோட்ஸ் கூறியது இது—அவர் ஒரு லட்சாதிபதி, நிதி மன்னர், ஆங்கில-போயர் யுத்தத்துக்குப் பிரதான காரணஸ்தர். மெய்தான், அவர் ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும் முறை பண்படாததாய், கொடு மனங் கொண்டதாய் இருக்கிறது; ஆயினும் உட்பொருளில் அது திருவாளர்கள் மாஸ்லவும் சூடேகுமும் பத்ரேசவும் டேவிடும் ருஷ்ய மார்க்சியத்தின் நிறுவகரும் ஏனையோரும்எடுத்துரைத்து வரும்'' தத்துவத்திலிருந்து'' வேறுபடவில்லை. செசில் ரோட்ஸ் இன்னும் கொஞ்சம் நேர்மையான சமூக-தேசியவெறியராய் இருந்தார்...

உலகின் பிரதேசப் பங்கீடு பற்றியும், இது சம்பந்தமாகக் கடந்த சில பத்தாண்டுகளில் நிகழ்ந்துள்ள மாறுதல்கள் பற்றியும் கூடுமான அளவுக்குக் கறாரான சித்திரம் அளிப்பதற்காக, உலகின் எல்லா வல்லரசுகளது காலனி உடைமைகள் குறித்து ஏற்கெனவே எடுத்துரைக்கப்பட்ட நூலில் சூப்பன் கொடுத்திருக்கும் விவரங்களைப் பயன்படுத்திக் கொள்கிறேன். 1876, 1900 ஆகிய ஆண்டுகளை சூப்பன் எடுத்துக்கொள்

* *Die Neue Zeit*, XVI, I, 1898, பக்கம் 304.

கிறுர்; நான் 1876ஆம் ஆண்டையும்—இவ்வாண்டு மிகவும் பொருத்தமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது; ஏனெனில் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் ஏக போகத்திற்கு முந்தையதான கட்டம் அப்போதுதான் பிரதானமாக நிறைவு பெற்றதாய்க் கூறக் கூடிய ஆண்டு அது—1914ம் ஆண்டையும் எடுத்துக் கொள்கிறேன்; சூப்பனுடைய புள்ளிகளுக்குப் பதிலாக, மேலும் அண்மைய காலத்தியவையான ஹியூப்னரது, **பூகோளவியல், புள்ளியியல் அட்டவணைகளின்** புள்ளிகளை எடுத்தாள்கிறேன். காலனிகளைப் பற்றி மட்டும்தாம் சூப்பன் புள்ளிகள் தருகிறுர்; உலகம் பங்கீடு செய்யப்பட்டிருப்பதன் முழுச் சித்திரத்தையும் அளிப்பதற்கு, காலனிகள் அல்லாதவையும் அரைக் காலனிகளுமாகிய நாடுகளைப் பற்றிய சுருக்கமான விவரங்களையும் சேர்த்துக் கொடுப்பது பயனுடையதாகுமென நினைக்கிறேன். இம்மாதிரியான நாடுகளின் வகையில் நான் பாரசீகம், சீனு, துருக்கி ஆகியவற்றைக் கொள்கிறேன்: இவற்றில் முதலாவது நாடு அனேகமாய் முழு அளவுக்கு ஏற்கெனவே காலனியாகி இருப்பது, இரண்டாவதும் மூன்ருவதும் இப்படி ஆகி வருகின்றவை.

இவ்வாருக நமக்குக் கிடைப்பதாவது: (128ஆம் பக்கம் பார்க்க.)

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்திலும் உலகின் பாகப் பிரிவினை எந்த அளவுக்கு ''நிறைவு பெற்றுவிட்டது'' என்பதை இப் புள்ளிவிவரங்களில் தெளிவாகப் பார்க்கிறேம். 1876க்குப் பிறகு காலனி உடைமைகள் பிரம்மாண்ட பரிமாணங்களுக்கு அதிகரிக்கலாயின, யாவற்றிலும் பெரிய ஆறு வல்லரசுகளுக்கு இவ்வுடைமைகள் ஐம்பது சதவிகிதத்துக்கும் அதிகமாக, 4 கோடி சதுர கிலோமீட்டரிலிருந்து 6 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டராக அதிகரித்தன; இந்த அதிகரிப்பு 2 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டராகும், காலனியாதிக்க நாடுகளின் பரப்பைக் காட்டிலும் (1 கோடி 65 லட்சம் சதுர கிலோமீட்டர்) ஐம்பது சதவிகிதம் அதிகமாகும். 1876ல் மூன்று வல்லரசுகளுக்குக் காலனிகள் இல்லை, நான்காவதான

பெரிய வல்லரசுகளின் காலனி உடைமைகள்
(பரப்பு 10 லட்சம் சதுர கிலோமீட்டர்களிலும், மக்கள் தொகை 10 லட்சத்திலும்)

| | காலனிகள் | | | | ஆதிக்க நாடுகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1876 | | 1914 | | 1914 | | 1914 | |
| | பரப்பு | மக்கள் தொகை | பரப்பு | மக்கள் தொகை | பரப்பு | மக்கள் தொகை | பரப்பு | மக்கள் தொகை |
| கிரெட் பிரிட்டன் | 22.5 | 251.9 | 33.5 | 393.5 | 0.3 | 46.5 | 33.8 | 440.0 |
| ருஷ்யா . . . | 17.0 | 15.9 | 17.4 | 33.2 | 5.4 | 136.2 | 22.8 | 169.4 |
| பிரான்ஸ் . . . | 0.9 | 6.0 | 10.6 | 55.5 | 0.5 | 39.6 | 11.1 | 95.1 |
| ஜெர்மனி . . . | — | — | 2.9 | 12.3 | 0.5 | 64.9 | 3.4 | 77.2 |
| அமெரிக்க ஐக்கிய நாடு . . . | — | — | 0.3 | 9.7 | 9.4 | 97.0 | 9.7 | 106.7 |
| ஜப்பான் . . . | — | — | 0.3 | 19.2 | 0.4 | 53.0 | 0.7 | 72.2 |
| 6 வல்லரசுகளுக்கும் மொத்தம் . . | 40.4 | 273.8 | 65.0 | 523.4 | 16.5 | 437.2 | 81.5 | 960.6 |
| இதர அரசுகளின் (பெல்ஜியம், ஹாலந்து முதலியவை) காலனிகள் | | | | | | | 9.9 | 45.3 |
| அரைக் காலனி நாடுகள் (பாரசீகம், சீனு, துருக்கி). . . . . . . | | | | | | | 14.5 | 361.2 |
| பிற நாடுகள். . . . . . . . . . . . . . . . . . | | | | | | | 28.0 | 289.9 |
| உலகத்துக்கான மொத்தம் . . . . . . . . . . . . . . | | | | | | | 133.9 | 1657.0 |

பிரான்சிடம் மிகச் சொற்பமாகவே இருந்தன. 1914க்குள் இந்நான்கு வல்லரசுகளும் 1 கோடி 41 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள, அதாவது ஐரோப்பாவின் பரப்பைக் காட்டிலும் சுமார் அரைப் பங்கு அதிகமான பரப்புள்ள காலனிகளை, ஏறத்தாழ 10 கோடி மக்களைக்கொண்டவற்றைத் தமதாக்கிக் கொண்டுவிட்டன. காலனி உடைமைகளது விஸ்தரிப்பு விகிதம் மிகுந்த ஏற்றத்தாழ்வுடையதாகும். உதாரணமாக, பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் அதிகம் வேறுபடாத பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றை ஒப்பிடுவோமாயின், முதலாவது நாடு ஏனைய இரண்டும் சேர்ந்து பெற்றுக் கொண்டதைக் காட்டிலும் ஏறக்குறைய மும்மடங்கு அதிகமான காலனிப் பரப்பைப் பெற்றுக் கொண்டு விட்டதைக் காண்போம். நிதி மூலதனத்தைப் பொறுத்த வரை இதிலும் பிரான்ஸ், நாம் பரிசீலிக்கும் இந்தக் காலகட்டத்தின் தொடக்கத்தில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய இரண்டுமாகச் சேர்ந்து உடைத்திருந்ததை விட ஒருசில மடங்கேனும் அதிகச் செல்வமுடைத்திருந்ததாகக் கூறலாம். கலப்பற்ற தூய பொருளாதார நிலைமைகளை அல்லாமலும், மற்றும் இவற்றின் அடிப்படையிலும், பூகோள நிலைமைகளாலும் பிற நிலைமைகளாலுங்கூட காலனி உடைமைகளது பரிமாணங்கள் பாதிக்கப்படுகின்றன. பெருவீதத் தொழில் துறை, பரிவர்த்தனை, நிதி மூலதனம் ஆகியவற்றால் ஏற்படும் நிர்ப்பந்தத்தின் விளைவாய் உலகம் சமனமாக்கப்படும் போக்கு, வெவ்வேறு நாடுகளிலும் பொருளாதார நிலைமைகளும் வாழ்க்கை நிலைமைகளும் சமனமாக்கப்படும் போக்கு கடந்த சில பத்தாண்டுகளில் எவ்வளவுதான் வலிமை வாய்ந்ததாய் இருந்திருப்பினும், கணிச அளவிலான வேறுபாடுகள் இன்னும் இருந்தே வருகின்றன. மேற் குறிப்பிட்ட ஆறு வல்லரசுகளில் முதலாவதாக, அசாதாரண வேகத்தில் முன்னேற்றமடைந்திருக்கும் இளம் முதலாளித்துவ நாடுகள் (அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான்) இருக்கக் காண்கிறோம்; இரண்டாவதாக, முன்னேற்ற வேகம் முன்கூறிய நாடுகளுடையதைக் காட்டிலும் அண்மைக் காலத்தில் மிகவும் குறைந்து விட்ட பழைய முதலாளித்துவ வளர்ச்சியுடன் கூடிய நாடுகள்

(பிரான்சும், கிரேட் பிரிட்டனும்) இருக்கக் காண்கிறோம்; மூன்றாவதாக, பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்பட்டதும், முதலாளித்துவத்துக்கு முற்பட்ட காலத்திய உறவுகளின் குறிப்பான அளவுக்கு நெரிசலான வலைப்பின்னலில் நவீன முதலாளித்துவ ஏகாதிபத்தியம் சிக்குண்டு அமைந்துள்ளதுமான ஒரு நாடு (ருஷ்யா) இருக்கக் காண்கிறோம்.

வல்லரசுகளின் காலனி உடைமைகளுடன், சிறிய அரசுகளின் சிறு காலனிகளையும் சேர்ந்து அமரச் செய்துள்ளோம். காலனிகளது சாத்தியமானதும் எதிர்பார்க்கக் கூடியதுமான ''மறுபங்கீட்டின்'' அடுத்த இலக்குகளாக இந்தச் சிறு காலனிகள் இருந்து வருவதாகச் சொல்லலாம். வல்லரசுகள் முட்டி மோதிக் கொள்ளும் நலன்களாலும் இசைவின்மையாலும் பிறவற்றாலும் இழுத்தடிக்கப்பட்டு ஒன்றோடொன்று மல்லுக்கு நிற்பதால் இவை தம்மிடையே கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்வது குறித்து உடன்பாட்டுக்கு வர முடியாமல் தடுக்கப் படுகின்றன—இதனால்தான் சிறிய அரசுகள் பெருமளவுக்குத் தமது காலனிகளை தொடர்ந்து தம்மிடமே இருத்தி வைத்துக் கொள்ள முடிகிறது. ''அரைக் காலனி'' நாடுகளைப் பொறுத்தவரை, இயற்கையிலும் சமுதாயத்திலும் எல்லாத் துறைகளிலும் காணக் கூடிய இடைநிலை வடிவங்களுக்கு அவை ஓர் உதாரணமாகும். நிதி மூலதனமானது பொருளாதார உறவுகள் யாவற்றிலும், சர்வதேச உறவுகள் யாவற்றிலும் அத்தனை பெரிய சக்தியாக—அவ்வளவு தீர்மானகரமான சக்தியாக என்றுகூட சொல்லலாம்—இருப்பதால், முழு அளவுக்கு அரசியல் சுயேச்சை வாய்ந்தனவாய் இருக்கும் அரசுகளையுங்கூட அது தனக்குக் கீழ்ப்படிய வைக்க வல்லதாய் இருக்கிறது, மெய் நடப்பில் இவ்வாறு கீழ்ப்படிய வைக்கவும் செய்கிறது; இதற்கான உதாரணங்களை சீக்கிரமே இங்கு நாம் காண்போம். கீழ்ப்படுத்தப்படும் நாடுகளும் மக்களும் அரசியல் சுயேச்சையை இழக்க நேர்வதுடன் இணைந்த கீழ்ப்படிதல் வடிவம்தான் நிதி மூலதனத்துக்கு மிகவும் ''வசதியானதாகவும்'', மிகவும் அதிக லாபம் அளிப்பதாகவும் இருக்கிறதென்பது கூறாமலே விளங்கும். அரைக் காலனி நாடுகள் இந்த விதத்தில் ''மத்திமக் கட்டத்துக்குச்'' சிறந்த

உதாரணமாகும். எஞ்சிய உலகம் அனைத்தும் ஏற்கெனவே பங்கிடப்பட்டுவிட்ட நிதி மூலதனச் சகாப்தத்தில் இந்த அரைச் சார்புநிலை நாடுகளுக்கான போராட்டம் குறிப்பிடத் தக்கவாறு உக்கிரமடைவது இயற்கையே.

காலனியாதிக்கக் கொள்கையும் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவத்தின் இந்த நவீனக் கட்டத்துக்கு முன்பே, முதலாளித்துவத்துக்கும் முன்பேகூட இருந்தவையே. அடிமையுடைமையை ஆதாரமாகக் கொண்டு அமைந்த ரோமானியப் பேரரசும் காலனியாதிக்கக் கொள்கையைப் பின்பற்றியது; ஏகாதிபத்தியத்தைக் கையாண்டது. ஆயினும் சமுதாய-பொருளாதார அமைப்புக்களுக்கு இடையிலுள்ள அடிப்படையான வேறுபாட்டைக் கவனியாமலோ, அதைப் பின்னுக்குத் தள்ளிவிட்டோ, ஏகாதிபத்தியததைப் பற்றிப் ''பொதுப்பட'' பேசுவது, ''மீபெரும் ரோமும் மீபெரும் பிரிட்டனும்''* என்பதான ஒப்பீட்டைப் போல் உப்புச் சப்பில்லாத புன்மையாகவோ, வாய்வீச்சாகவோதான் தவிர்க்க முடியாதபடி மாறிவிடும். முதலாளித்துவத்தின் முந்தைய கட்டங்களினுடைய முதலாளித்துவக் காலனியாதிக்கக் கொள்கையுங்கூட, நிதி மூலதனத்தின் காலனியாதிக்கக் கொள்கையிலிருந்து சாராம்சத்தில் வேறானதாகும்.

முதலாளித்துவத்தின் நவீன கட்டத்தினுடைய தலையாய அம்சம், மிகப் பெரிய தொழிலதிபர்களது ஏகபோகக் கூட்டுகளின் ஆதிக்கமாகும். மூலப் பொருள்களுக்கான ஆதாரங்கள் அனைத்தும் ஒரு கூட்டினால் கைப்பற்றப்பட்டுவிடும் போது இந்த ஏகபோகங்கள் உறுதியாக நிலைபெற்றுவிடுகின்றன; போட்டியிடுவதற்கான எல்லா வாய்ப்புக்களையும் எதிராளிகளிடமிருந்து பறிப்பதற்காக, உதாரணமாய் இரும்புக் கனிப்

* C. P. Lucas, *Greater Rome and Greater Britain*, Oxford, 1912 (சி.பி. லூகாஸ், ''மீபெரும் ரோமும் மீபெரும் பிரிட்டனும்'', ஆக்ஸ்போர்டு, 1912.— ப-ர்.), அல்லது Earl of Cromer, *Ancient and modern Imperialism*, London 1910(எர்ல் குரோமர், ''பண்டைய ஏகாதிபத்தியமும் தற்கால ஏகாதிபத்தியமும்'', லண்டன், 1910.—ப-ர்.).

பிரதேசங்கள், எண்ணெய் வயல்கள் முதலானவற்றை வாங்கிக் கொண்டுவிடுவதற்காக சர்வதேச முதலாளித்துவக் கூட்டுகள் எப்படி ஆவேசமாய்ப் பாடுபடுகின்றன என்பதை நாம் பார்த்தோம். போட்டியாளர்களுக்கு எதிரான போராட்டத்தில் எழக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும், அரசு ஏக போகம் ஒன்றை ஏற்படுத்தும் சட்டத்தின் மூலமாக எதிராளி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பும் சந்தர்ப்பமும் அடங்கலாய் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், ஏகபோகங்களுக்கு முழு உத்தரவாதம் அளிக்கக்கூடியது காலனி உடைமை மட்டுமேதான். முதலாளித்துவத்தின் வளர்ச்சி எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாகிறதோ, மூலப் பொருள்களின் பற்றுக் குறை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகக் கடுமையாக உணரப் படுகிறதோ, உலகெங்கிலும் மூலப் பொருள்களின் ஆதாரங்களுக்கான போட்டியும் வேட்டையும் எவ்வள வுக்கு எவ்வளவு அதிக உக்கிரமாகின்றனவோ, காலனிகளைப் பெறுவதற்கான போராட்டமும் அவ்வளவுக்கு அவ்வளவு மூர்க்கமானதாகிவிடுகிறது.

''ஓரளவு அணித்தான எதிர்காலத்தில் நகரத்திலும் தொழில் துறையிலுமான மக்கள் தொகையின் வளர்ச்சி உணவுப் பொருள் பற்றுக்குறையைவிடத் தொழில் துறைக்கு வேண்டிய மூலப் பொருள்களின் பற்றுக்குறையினல் தடை படுவதற்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறதென்று—சிலருக்கு இது முரணுரையாகச் தோன்றினும்கூட—வலியுறுத்திக் கூற லாம்''—இவ்வாறு ஷில்டர் எழுதுகிருர். உதாரணமாக, வெட்டு மரங்களின் பற்றுக்குறையும்—இவற்றின்விலை மேலும் மேலும் ஏறிக் கொண்டிருக்கிறது—தோல், ஜவுளித் தொழி லுக்கான மூலப் பொருள்கள் ஆகியவற்றின் பற்றுக்குறையும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ''உலகப் பொருளாதாரம் அனைத்திலுமாய் விவசாயத்துக்கும் தொழில் துறைக்குமிடை யில் ஒரு சம நிலையை உண்டாக்குவதற்குத் தொழிலதிபர் களின் கூட்டுகள் முயற்சிகள் எடுத்து வருகின்றன; இதற்கு ஓர் உதாரணமாக 1904ல் முக்கியத் தொழில் துறை நாடு கள் சிலவற்றில் நிறுவப்பட்ட பருத்தி நூற்பாளர் சங்கங் களது சர்வதேச சம்மேளனத்தையும், இதை மாதிரியாகக்

கொண்டு1910ல் நிறுவப்பட்ட சணல் நூற்பாளர் சங்கங்களது ஐரோப்பிய சம்மேளனத்தையும் கூறலாம்.''*

''செலவு மிக்கதும் ஆபத்தானதுமாகிய'' காலனியாதிக்கக் கொள்கை இல்லாமலே தடையில்லாச் சந்தையில் மூலப் பொருள்களைப் பெறுவது ''சாத்தியமே'' என்பதாகவும், பொதுவாக விவசாயத்தில் நிலைமைகளைச் ''சாமானியமாய்'' மேம்படச் செய்வதன் மூலமே மூலப் பொருள்களின் சப்ளையைப் பிரம்மாண்டமான அளவுக்கு அதிகரிப்பது ''சாத்தியமே'' என்பதாகவும் வாதாடி, முதலாளித்துவச் சீர்திருத்த வாதிகளும், அவர்களுள் குறிப்பாகக் காவுத்ஸ்கியின் இன்றைய ஆதரவாளர்களும் மேற்கூறிய உண்மைகளின் முக்கியத்துவத்தைச் சிறுமைப்படுத்த முயலுவது மெய்தான். ஆனால், இத்தகைய வாதங்கள் ஏகாதிபத்தியத்திற்காகப் பரிந்து பேசுவதே ஆகும், அதற்கு மேற் பூச்சிட்டு அதைப் பளிச்சிடச் செய்வதற்கான முயற்சியே ஆகும். ஏனெனில், முதலாளித்துவத்தின் இந்த நவீன கட்டத்தின் தலையாய இயல்பாகிய ஏகபோகங்களை இந்த வாதங்கள் கவனியாது ஒதுக்கிவிடுகின்றன. தடையில்லாச் சந்தை மேலும் மேலும் கடந்த காலத்துக்கு உரியதாகி வருகிறது; ஏகபோகச் சிண்டிக்கேட்டுகளும் டிரஸ்டுகளும் நாள்தோறும் அதனை மேலும் மேலும் குறுகிச் சிறுக்க வைக்கின்றன; விவசாயத்தில் நிலைமைகளைச் ''சாமானியமாய்'' மேம்படச் செய்வதென்பது பெருந்திரள் மக்களது நிலைமைகளை மேம்படச் செய்வதும், கூலியை உயர்த்துவதும், லாபத்தைக் குறைப்பதும் ஆகும். காலனிகளைப் பிடிப்பதல்லாமல் பெருந்திரள் மக்களது நிலைமைகளில் நாட்டங்கொள்ளக் கூடிய டிரஸ்டுகள், உணர்ச்சி வயப்பட்ட சீர்திருத்தவாதிகளின் கற்பனையிலே தவிர வேறு எங்கேனும் உண்டா?

ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட மூலப் பொருள் ஆதாரங்களில் மட்டுமின்றி, இனி உருவாக்கப்படக் கூடியவற்றிலும் நிதி மூலதனம் அக்கறை கொண்டுள்ளது. ஏனெனில், இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி மிகவும் துரிதமாய் நடந்

* Schilder, முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 38—42.

தேறுகிறது, ஆகவே இன்று உபயோகமற்றவையாக இருந்து வரும் நிலங்கள், புது முறைகள் கண்டுபிடித்து வகுக்கப்படு மாயின் (இதற்காகப் பெரிய வங்கியானது பொறியாளர்களை யும் விவசாய வித்தகர்களையும் ஏனையோரையும் கொண்ட தனி ஆராய்ச்சிக் குழுவை அமைத்துச் செயல்பட வைக்க முடியும்), பெருந் தொகைகளிலான மூலதனம் முதலீடு செய் யப்படுமாயின், நாளைக்கு மேம்பாடு செய்யப்பட்டு விடலாம். கனி வளங்களைக் கண்டுபிடித்தல், மூலப் பொருள்களைப் பதனம் செய்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் புது முறைகள் காணல் முதலான பலவற்றுக்கும் இது பொருந்து வதாகும். எனவேதான் நிதி மூலதனம் தனது செல்வாக்கு மண்டலங்களையும் மெய் நடப்பில் தன் வசமுள்ள பரப்பு களையும்கூட விரிவாக்கிச் செல்வதற்காக தவிர்க்க முடியாத வாறு பிரயத்தனம் செய்கிறது. டிரஸ்டுகள் எப்படி தமது சொத்திலிருந்து ‘‘வருங்காலத்தில் கிடைக்கக் கூடியதான’’ லாபங்களையும் (மெய் நடப்பில் தற்போது கிடைப்பவற்றை அல்ல), ஏகபோகத்தால் மேலும் பெறக் கூடிய பலன்களை யும் கணக்கிலெடுத்து வரப்பெறும் மதிப்பை இரண்டு அல்லது மூன்று மடங்காகப் பெருக்கி அச்சொத்தினை முத லாக்கம் செய்கின்றனவோ, அதே போல் பொதுவாய் நிதி மூலதனமானது வருங்காலத்தில் கண்டுபிடிக்கப்படக் கூடிய மூலப்பொருள் ஆதாரங்களைக் கணக்கிலெடுத்துக் கொண் டும், இன்னும் பங்கிடப்படாத பிரதேசங்களாய் எஞ்சியிருக் கும் கடைசிப் பகுதிகளுக்காகவோ, ஏற்கனவே பங்கிடப் பட்டுவிட்ட பிரதேசங்களின் மறுபங்கீட்டுக்காகவோ நடை பெறும் மூர்க்கமான போராட்டத்தில் பின்னிலையில் விடப் பட்டு விடுவோமோ என்று அஞ்சியும், எல்லா இடங்களிலும் உள்ள எல்லா வகையான நிலங்களையும் எவ்வளவு அதிகமாகக் கைப்பற்ற முடியுமோ அவ்வளவையும் எல்லா வழிகளிலும் கைப்பற்றிக் கொள்ள பிரயத்தனம் செய்கிறது.

பிரிட்டிஷ் முதலாளிகள் தங்களது காலனியாகிய எகிப்தில் பருத்தி பயிர்ச் சாகுபடியை வளர்ப்பதற்கு எல்லா முயற்சி களையும் மேற்கொள்கிறார்கள் (1904ல் சாகுபடி செய்யப் பட்ட 23 லட்சம் ஹெக்டேர் பரப்பில், 6 லட்சம் ஹெக்

டேரில், அல்லது கால் பங்குக்கும் அதிகமான பரப்பில் பருத்தி பயிரிடப்பட்டது). ருஷ்யர்களும் தங்களது காலனியாகிய துர்கெஸ்தானில் இதையேதான் செய்கிறார்கள்; ஏனெனில், இவ்விதம் அவர்கள் தமது அன்னியப் போட்டியாளர்களை வெல்வதற்கும், மூலப் பொருள் ஆதாரங்களைத் தங்களது ஏகபோகமாக்கிக் கொண்டு, பருத்தி உற்பத்தியிலும் பருத்திச் செய்பொருள் தொழிலிலும் அடங்கிய எல்லா நிகழ்முறைகளும் ''ஒன்றிணைக்கப்பட்டு'' ஒரே தொகுப்பைச் சேர்ந்த உடைமையாளர்களின் கையில் ஒன்றுகுவிக்கப்பட்டு, மேலும் சிக்கனமானதும் லாபமளிக்கக் கூடியதுமான ஜவுளி டிரஸ்டு ஒன்றை நிறுவுவதற்கும் முன்னிலும் சிறந்த நிலையில் இருப்பார்கள்.

எந்த நலன்களை முன்னிட்டு மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுகிறதோ அந்த நலன்கள் காலனிகளைக் கைப்பற்றுமாறும் தூண்டுகின்றன; ஏனெனில் போட்டியை அகற்றுவதற்கும், சப்ளைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், அவசியமான ''தொடர்புகளைப்'' பெறுவதற்கும், இன்ன பலவும் செய்வதற்கும் ஏகபோக முறைகளைக் கையாளுவதும் (சில நேரங்களில் இவை மட்டுமே கையாளப்படக் கூடியனவாய் இருக்கின்றன) காலனிச் சந்தையில் எளிதாகிவிடுகிறது.

நிதி மூலதனத்தின் அடிப்படைமீது எழும் பொருளாதாரமல்லாத மேல்கட்டுமானம்—அதன் அரசியலும் அதன் சித்தாந்தமுமாகிய இந்த மேல்கட்டுமானம்—காலனி பிடிக்கும் ஆசையைத் தூண்டுகிறது. ஹில்ஃபர்டிங் உள்ளதை உள்ளபடி எடுத்துரைப்பது போல, ''நிதி மூலதனம் சுதந்திரத்தை விரும்பவில்லை, ஆதிக்கத்தையே விரும்புகிறது''. பிரெஞ்சு முதலாளித்துவ எழுத்தாளர் ஒருவர் மேலே நாம் குறிப்பிட்ட செசில் ரோட்ஸின் கருத்துக்களை* விரித்து வளர்த்தும், விட்டது நிரப்பியும் செல்வதாகச் சொல்லத்தக்கவாறு, தற்காலக் காலனியாதிக்கக் கொள்கையின் பொருளாதாரக் காரணங்களுடன் சமூகக் காரணங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென எழுதுகிறார்: ''வாழ்க்கையின் வளர்ந்துவரும்

---

* இப்புத்தகத்தில் 125-126ஆம் பக்கங்களைப் பார்க்க.—ப-ர்.

சிக்கல்களின் காரணமாகவும், தொழிலாளி மக்கள் திர ளினரை மட்டுமின்றி மத்தியதர வர்க்கங்களையும் சுமையாக வருத்தும் இன்னல்களின் காரணமாகவும் 'பொறுமையின் மையும் எரிச்சலும் வெறுப்பும்' பழைய நாகரீகத்து நாடுகள் யாவற்றிலும் திரண்டு குவிந்து 'பொது அமைதிக்கு அபாய மாகி வருகின்றன; திட்டவட்டமான வர்க்கக் கால்வாயிலிருந்து வெளியே பாய்ச்சப்படும் சக்தியானது உள்நாட்டில் வெடிப் பை உண்டாக்குவதைத் தவிர்க்கும் பொருட்டு, நாட்டுக்கு வெளியே அதனை வேலையில் அமர்த்தியாக வேண்டும்'.''*

முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் காலனி யாதிக்கக் கொள்கையைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருப்ப தால், நிதி மூலதனமும் இதன் அயல்நாட்டுக் கொள்கையும் —உலகின் பொருளாதார, அரசியல் பாகப் பிரிவினைக்காக வல்லரசுகளுக்கிடையிலான போராட்டமாகிய இந்த அயல் நாட்டுக் கொள்கையும் —அரசுச் சார்புநிலையின் பல இடை நிலை வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன என்பதைக் குறிப் பிட வேண்டும். காலனி உடைமை நாடுகள் என்றும் காலனி கள் என்றும் நாடுகளிடையிலான இரண்டு பிரதான தொகுதி கள் மட்டுமின்றி, அரசியல் துறையில் பெயரளவில் சுயேச்சையானவையே என்றாலும் உண்மையில் நிதித் துறை, அரசுத் தந்திரத் துறை சார்புநிலை எனும் வலைப்பின்னலால் கட்டுண்டிருக்கும் சார்பு நாடுகளின் பல்வேறு வடிவங்களும் இச்சகாப்தத்துக்குரிய இனமாதிரியானவை ஆகும். சார்பு நிலையின் ஒரு வடிவமாகிய அரைக்காலனியை ஏற்கெனவே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இன்னொரு வடிவத்துக்கு உதாரணமாக ஆர்ஜென்டீனாவைக் கொள்ளலாம்.

''பிரிட்டிஷ் வாணிபக் காலனி என்பதாகவே சொல்லப் பட வேண்டிய அளவுக்குத் தென் அமெரிக்காவும், குறிப் பாய் ஆர்ஜென்டீனாவும் நிதித் துறையில் லண்டனைச் சார்ந்து பணிந்திருக்கின்றன'' என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப்

* Wahl, *La France aux colonies* (வால், ''காலனிகளில் பிரான்ஸ்''.—ப-ர்.)—Henri Russier, *Le Partage de l'Océanie*, Paris,(அன்ரி ரூசியே, ''ஓஷியானா பங்கிடப்படுதல்'', பாரிஸ். —ப-ர்.), *1905*, பக்கம் 165ல் மேற்கோள் காட்டப்படுகிறது.

பற்றிய தமது நூலில் ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் எழுதுகிறார்.* போனஸ்-அயர்ஸிலிருந்த ஆஸ்திரிய-ஹங்கேரியக் கான்சலின் 1909ஆம் வருடத்திய அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு, ஆர்ஜென்டீனாவில் பிரிட்டிஷ் மூலதனத்தின் முதலீடுகளை 875 கோடி பிராங்குகளாக ஷில்டர் மதிப்பிடுகிறார். இவ்வழியில் பிரிட்டிஷ் நிதி மூலதனமும் (அதன் விசுவாச "நண்பனான" பிரிட்டிஷ் அரசுத் தந்திரமும்) ஆர்ஜென்டீனாவின் முதலாளித்துவ வர்க்கத்துடன், அந்நாட்டின் பொருளாதார, அரசியல் வாழ்வு அனைத்தையும் தம் பிடியில் கொண்ட வட்டாரங்களுடன் எவ்வளவு வலுவான பிணைப்புகளைக் கொண்டுள்ளன என்பதை எளிதில் ஊகித்துக் கொள்ளலாம்.

அரசியல் சுயேச்சையுடன் கூடவே, மேற்கூறியதிலிருந்து ஓரளவு வேறான வடிவங் கொண்ட நிதித் துறை, அரசுத் தந்திரத் துறைச் சார்புநிலையினை போர்த்துகலின் உதாரணம் நமக்குக் காட்டுகிறது. போர்த்துகலானது அனைத்துரிமை பெற்ற சுயேச்சை அரசு, ஆயினும் உண்மையில், இருநூறு ஆண்டுகளுக்கும் அதிகமாக, ஸ்பெயின் வாரிசுரிமை யுத்தத்தின் (1701-1714) காலம் முதலாய், அது பிரிட்டிஷ் காப்பாட்சிக்கு உட்பட்டதாகவே இருந்து வருகிறது. ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய தனது எதிராளிகளுடனான போராட்டத்தில் தனது நிலையைப் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டுக் கிரேட் பிரிட்டன், போர்த்துகலையும் போர்த்துகீசியக் காலனி

---

* Schulze-Gaevernitz, *Britischer Imperialismus und englischer Freihandel zu Beginn des 20-ten Jahrhunderts*, Leipzig, 1906, S. 318 (ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ், "இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இங்கிலாந்தின் தடையில்லா வாணிபமும்", லைப்சிக், பக்கம் 318.—ப-ர்.); *Das volkswirtschaftliche System der Kapitalanlage im Auslande*, Berlin, 1907, S. 46ல் இதையேதான் Sartorius v. Waltershausen கூறுகிறார் (சார்டொரியஸ் ஃபன் வால்டர்ஸ்ஹாவுசன், "வெளிநாடுகளிலான முதலீட்டின் தேசியப் பொருளாதார அமைப்பு", பெர்லின், 1907, பக்கம் 46.—ப-ர்.).

களையும் பாதுகாத்து வந்துள்ளது. அதற்குப் பிரதியாக வாணிபத் தனியுரிமைகளையும் போர்த்துகலுக்குள்ளும் போர்த்துகலின் காலனிகளுக்குள்ளும் பண்டங்களையும் குறிப்பாக மூலதனத்தையும் இறக்குமதி செய்வதற்கு அனுகூலமான சலுகைகளையும், போர்த்துகலின் துறைமுகங்களையும் தீவுகளையும் அதன் கடல் தந்தி வழிகளையும் உபயோகிக்கும் உரிமையையும் இன்னும் பலவற்றையும் பிரிட்டன் பெற்றுள்ளது.* பெரிய அரசுகளுக்கும் சிறிய அரசுகளுக்குமிடையே இம்மாதிரியான உறவுகள் எப்போதுமே இருந்துள்ளவைதாம், ஆனல் முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் இவை ஒரு பொதுவான அமைப்பு முறையாகி, ''உலகைப் பங்கிட்டுக் கொள்வதற்கான'' உறவுகளின் மொத்தத் தொகுதியில் ஒரு பகுதியாக அமைந்து, உலக நிதி மூலதனத்தின் செயற்பாடுகளது சங்கிலித் தொடரின் கரணைகளாகி விடுகின்றன.

உலகின் பங்கீட்டுப் பிரச்சினையை முடித்துக் கொள்ளும் பொருட்டு மேலும் நான் பின்வருவதையும் குறிப்பிட வேண்டும். இந்தப் பிரச்சினையை முற்றிலும் வெளிப்படையாகவும் திட்டவட்டமாகவும் எழுப்பியது, பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதி முடிவிலும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் ஸ்பானிஷ்-அமெரிக்க யுத்தத்துக்குப் பிறகு அமெரிக்க வெளியீடுகளும், ஆங்கில-போயர் யுத்தத்துக்குப் பிறகு ஆங்கிலேய வெளியீடுகளும் மட்டும் அல்ல; ''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை'' ''மிகுந்த பொருமையுடன்'' கவனித்து, முறையாக இவ்வுண்மை குறித்துத் தமது மதிப்பீட்டை அளித்து வந்திருக்கும் ஜெர்மன் வெளியீடுகள் மட்டும் அல்ல. பிரெஞ்சு முதலாளித்துவ வெளியீடுகளும் முதலாளித்துவ நோக்கு நிலையிலிருந்து எந்த அளவுக்கு முடியுமென நினைக்கக் கூடுமோ அந்த அளவுக்குத் திட்டவட்டமாகவும் விரிவாகவும் இப்பிரச்சினையை எழுப்பியிருக்கின்றன. வரலாற்றியலாளர் ட்ரியோ எழுதியதை மேற்கோளாக அளிக்கிறேன். பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் அரசியல்,

---

* ஷில்டர், முன் குறிப்பிட்ட நூல், தொகுதி I, பக்கங்கள் *160-161*.

**சமூகப் பிரச்சினைகள்** என்ற தமது நூலில் ''வல்லரசுகளும் உலகின் பங்கீடும்'' என்ற அத்தியாயத்தில் அவர் பின்வருமாறு எழுதினர்: ''கடந்த சில ஆண்டுகளில் சீனுவைத் தவிர்த்து புவிக் கோளத்தின் கீழ்ப்படுத்தப்படாத நிலப்பரப்பு அனைத்தும் ஐரோப்பாவையும் வட அமெரிக்காவையும் சேர்ந்த வல்லரசுகளால் பிடித்துக் கொள்ளப்பட்டு விட்டது. இதனுல் ஏற்கெனவே சில மோதல்களும் செல்வாக்கு மண்டலங்களில் பெயர்வுகளும் ஏற்பட்டிருக்கின்றன; இவை சமீபத்திய வருங்காலத்தில் மேலும் பயங்கர கொந்தளிப்புகள் ஏற்படும் என்பதற்கான முன்னறிவிப்புகளாகும். ஏனெனில் அவசரமாகச் செயல்படுவது அவசியமாகும். தமக்குத் தேவையானவற்றுக்கு இன்னும் ஏற்பாடு செய்து கொள்ளாத தேசங்கள், தமது பங்கை எந்நாளும் பெருதோராய் விடப்பட்டு, அடுத்த நூற்ருண்டின்'' (அதாவது இருபதாம் நூற்ருண்டின்) ''சாராம்சமான ஓர் இயல்பாய் இருக்கப்போகும் புவிக் கோளத்தின் பிரம்மாண்டமாகச் சுரண்டலில் பங்கில்லாதோராகிவிடும் ஆபத்துக்கு உள்ளாகின்றன. அதனுல்தான் அனைத்து ஐரோப்பாவும் அமெரிக்காவும் பத்தொன்பதாம் நூற்ருண்டு இறுதியின் மிகவும் குறிப்பிடத்தக்க இயல்பாகிய காலனியாதிக்க ஆவேசத்தால், 'ஏகாதிபத்திய'' ஆவேசத்தால் அண்மையில் பீடிக்கப்பட்டுள்ளன.'' இந்த ஆசிரியர் மேலும் எழுதியதாவது: ''உலகின் இந்தப் பங்கீட்டில், புவிக் கோளத்தின் செல்வங்களுக்கும் பெருஞ் சந்தைகளுக்குமான வெறிகொண்ட இவ்வேட்டையில், இந்தப் பத்தொன்பதாம் நூற்ருண்டில் நிறுவப்பட்ட சாம்ராஜ்யங்களின் ஒப்பளவிலான வலிமை, இந்த சாம்ராஜ்யங்களை நிறுவிய தேசங்கள் ஐரோப்பாவில் வகிக்கும் நிலைக்குச் சிறிதும் பொருத்தமற்றதாக இருக்கிறது. ஐரோப்பாவில் ஆதிக்கத்திலுள்ள அரசுகள், இக்கண்டத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் அரசுகள், அனைத்து உலகிலும் இதற்குச் சமமான அளவில் மேலாண்மை செலுத்துவனவாய் இருக்கவில்லை. காலனியாதிக்க வலிமையானது, இன்னும் அளவிடப்படாத செல்வத்தைத் தம் கைக்குள் கொண்டு வரலாமென்ற நம்பிக்கை, ஐரோப்பிய அரசுகளின் ஒப்பளவிலான வலிமையின் மீது செயல்படச் செய்யு

மென்பது தெளிவாதலால், ஐரோப்பாவிலும் அரசியல் நிலைமைகளை ஏற்கெனவே மாற்றியமைத்துள்ள காலனியாதிக்கப் பிரச்சினை—'ஏகாதிபத்தியம்' எனக் கூற விரும்புவீர்களாயின் அப்படியும் கூறலாம்—இந்நிலைமைகளை மேலும் மேலும் மாற்றியமைக்கவே செய்யும்.''*

## 7. முதலாளித்துவத்தின் தனியொரு கட்டமாகிய ஏகாதிபத்தியம்

இப்பொழுது நாம் தொகுத்துரைக்க முயல வேண்டும், ஏகாதிபத்தியம் குறித்து மேலே கூறப்பட்டவற்றின் இழைகளை ஒன்று சேர்த்திட முயல வேண்டும். பொதுவாக முதலாளித்துவத்தின் அடிப்படைக் குணாதிசயங்களின் வளர்ச்சியாகவும், நேரடியான தொடர்ச்சியாகவும் ஏகாதிபத்தியம் எழுந்தது. ஆனால் முதலாளித்துவம் அதன் வளர்ச்சியில் திட்டவட்டமான, மிக உயர்ந்த ஒரு கட்டத்தில்தான் முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக மாறியது; இக்கட்டத்தில்தான் முதலாளித்துவத்தின் சில அடிப்படை குணாதிசயங்கள் அவற்றின் நேர் எதிரானவையாக மாற ஆரம்பித்தன; முதலாளித்துவத்திலிருந்து மேலானதொரு சமுதாய-பொருளாதார அமைப்புக்கு மாறி செல்வதற்கான காலத்தினுடைய இயல்புகள் உருப்பெற்று எழுந்து எல்லாத் துறைகளிலும் தம்மை வெளிக்காட்டிக் கொண்டன. பொருளாதார வழியில் இந்த நிகழ்ச்சிப்போக்கின் மிக முக்கிய அம்சம், தடையில்லா முதலாளித்துவப் போட்டி அகற்றப்பட்டு அதனிடத்தில் முதலாளித்துவ ஏகபோகம் எழுந்ததுதான். தடையில்லாப் போட்டிதான், முதலாளித்துவத்துக்கும் பொதுவாகப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்குமுரிய அடிப்படை இயல்பு; ஏகபோகம் தடையில்லாப் போட்டிக்கு நேர் எதிரான

---

* J.-E. Driault, *Problèmes politiques et sociaux*, P., 1900, பக்கம் 299 (ஜா. ஏ. ட்ரியோ, ''அரசியல், சமூகப் பிரச்சினைகள்'', பாரிஸ்.—ப-ர்.).

தாகும். ஆனல் தடையில்லாப் போட்டி நம் கண்முன்னல் ஏகபோகமாக மாற்றப்படக் கண்டோம், பெருவீதத் தொழில் துறையைத் தோற்றுவித்துச் சிறு தொழிலை நெரித்து வெளியேற்றவும், பெருவீதத் தொழில் துறையின் இடத்தில் மேலும் பெரியதான பெருவீதத் தொழில் துறை அமரவும் கண்டோம். இவ்விதம் உற்பத்தியின், மூலதனத்தின் ஒன்று குவிப்பு அந்த அளவுக்கு அதிகமாக்கப்பட்டு அதிலிருந்து ஏகபோகம் வளர்ந்தெழுந்துள்ளது, தொடர்ந்து வளர்ந் தெழுந்து வருகிறது: கார்ட்டல்களும் சிண்டிக்கேட்டுகளும் டிரஸ்டுகளும் இவற்றுடன் ஒன்றுகலந்துவிடும் பத்துப் பதி னைந்து வங்கிகளின், நூறு கோடிக் கணக்கிலான தொகை களைத் தம் பிடியில் கொண்டு காரியமாற்றும் வங்கிகளின் மூலதனமுமாகிய ஏகபோகமாகும் இது. தடையில்லாப் போட்டியிலிருந்து வளர்ந்தெழுந்த இந்த ஏகபோகங்கள் அதே போது போட்டியை அகற்றிவிடவில்லை, போட்டிக்கு மேலும் அதனுடன் கூடவும் நிலவுகின்றன, இவ்வழியில் மிகுந்த கடுமையும் உக்கிரமும் வாய்ந்த மிகப் பல முரண் பாடுகளையும் பூசல்களையும் மோதல்களையும் தோற்றுவிக்கின் றன. ஏகபோகமானது முதலாளித்துவத்திலிருந்து அதைவிட மேலானதோர் அமைப்புக்கு மாறிச் செல்வதாகும்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றி இயன்ற அளவுக்கு சுருக்க மான இலக்கணம் அளிக்க வேண்டுமாயின், முதலாளித்துவத் தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம் என்று கூற வேண் டும். இத்தகைய இலக்கணம் யாவற்றிலும் முக்கியமானதை தன்னுள் கொண்டதாக இருக்கும். ஏனெனில் ஒரு புறத்தில், நிதி மூலதனம் என்பது தொழிலதிபர்களின் ஏகபோகக் கூட்டுகளின் மூலதனத்துடன் ஒன்றுகலந்துவிட்ட ஒருசில மிகப் பெரிய ஏகபோகப் வங்கிகளின் வங்கி மூலதன மாகும்; மறுபுறத்தில், உலகின் பங்கீடானது எந்த முத லாளித்துவ அரசாலும் கைப்பற்றப்படாத பிரதேசங்களுக்குத் தடையின்றிப் பரவிச் செல்லும் காலனியாதிக்கக் கொள்கை யிலிருந்து, முற்றும் பங்கிடப்பட்டுக் கொண்டுவிட்ட உலக நிலப்பரப்பை ஏகபோக உடைமையாக கொண்டிருப்பதற் குரிய காலனியதிக்கக் கொள்கைக்கு மாறிச் செல்வதாகும்.

ஆனால் மிகவும் சுருக்கமான இலக்கணங்கள் முக்கிய அம்சங்களைத் தொகுத்துத் தருவதால் வசதியாக இருந்தாலும் கூட அவை பற்றாக் குறையானவையே; ஏனெனில் வரையறை செய்யப்பட வேண்டிய நிகழ்வின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை அவற்றிலிருந்து வருவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே பொதுவாக எல்லா இலக்கணங்களும் நிபந்தனைக்குட்பட்ட, சார்புநிலையிலான மதிப்பே கொண்டவை, நிகழ்வினது முழு வளர்ச்சியிலும் அதன் தொடர்புடைமைகள் யாவும் அடங்கியனவாய் ஒருபோதும் இருக்க முடியாது என்பதை மறக்காமல் மனதிற் கொண்டு, ஏகாதிபத்தியத்தின் பின்வரும் ஐந்து அடிப்படை இயல்புகளும் உள்ளடங்குமாறு அதற்கு இலக்கணம் கூறியாக வேண்டும்: 1) பொருளாதார வாழ்வில் தீர்மானகரமான பங்காற்றும் ஏகபோகங்களைத் தோற்றுவிக்கும்படியான உயர்ந்த கட்டத்துக்கு உற்பத்தியின், மூலதனத்தின் ஒன்றுகுவிப்பு வளர்ந்துவிடுதல்; 2) வங்கி மூலதனம் தொழில் துறை மூலதனத்துடன் ஒன்றுகலத்தலும், இந்த ''நிதி மூலதனத்தின்'' அடிப்படையில் நிதியாதிக்கக் கும்பல் உருவாதலும்; 3) பண்ட ஏற்றுமதியிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டியதாகிய மூலதன ஏற்றுமதி தனி முக்கியத்துவம் பெறுதல்; 4) சர்வதேச ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள் உருவாகி, உலகையே இவை தமக்கிடையே பங்கிட்டுக்கொள்ளுதல்; 5) மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப்பட்டுக் கொள்ளுதல் நிறைவுறுகிறது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் எந்தக் கட்டத்தில் ஏகபோகங்கள், நிதி மூலதனம் ஆகியவற்றின் ஆதிக்கம் நிலைநாட்டப்படுகிறதோ, மூலதன ஏற்றுமதி முனைப்பான முக்கியத்துவம் பெற்று விட்டதோ, சர்வதேச டிரஸ்டுகளுக்கிடையில் உலகம் பங்கிடப்படுவது தொடங்கியுள்ளதோ, உலகின் நிலப்பரப்பு அனைத்தும் மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையே பங்கிடப்படுவது நிறைவு பெற்று விட்டதோ, அக்கட்டத்திலான முதலாளித்துவமே ஏகாதிபத்தியமாகும்.

அடிப்படையான, தூய பொருளாதாரக் கருத்தினங்களை மட்டுமின்றி—மேலே கூறப்பட்ட இலக்கணம் இக்கருத்தினங்

களின் வரம்புக்குள் அடங்குவதாகும்—பொதுவாக முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் முதலாளித்துவத்தின் இந்தக் கட்டம் வரலாற்றில் வகிக்கும் இடத்தையும், அல்லது ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளி வர்க்க இயக்கத்திலுள்ள இரண்டு முக்கியப் போக்குகளுக்குமுள்ள உறவையும் மனதிற் கொண்டால் ஏகாதிபத்தியத்துக்கு வேறு விதமான இலக்கணம் கூற முடியும், கூறவும் வேண்டுமென்பதைப் பிற்பாடு நாம் கவனிப்போம். தற்போது எடுத்துரைக்கப்பட வேண்டியது என்னவெனில் ஏகாதிபத்தியமானது, மேலே விளக்கப்பட்டது போல், சந்தேகத்துக்கு இடமின்றி முதலாளித்துவ வளர்ச்சியில் ஒரு தனிக் கட்டத்தைக் குறிப்பதாகும் என்பதுதான். ஏகாதிபத்தியம் குறித்து சிறந்த ஆதாரத்தின் அடிப்படையிலான கருத்தை வாசகர்களுக்கு அளிக்கும் பொருட்டு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இந்த மிக அண்மையதான கட்டத்தைப் பற்றிய மறுக்க முடியாத மிக உறுதியான உண்மைகளை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும் முதலாளித்துவ பொருளியலாளர்களிடமிருந்து வேண்டுமென்றேதான் நான் கூடுமான அளவுக்கு விரிவாய் மேற்கோள் காட்ட முயன்றுள்ளேன். இதே நோக்கத்தைக் கருத்தில் கொண்டுதான், எந்த அளவுக்கு வங்கி மூலதனமும் பிறவும் வளர்ந்துவிட்டன என்பதையும், அளவானது பண்பாக மாற்றமடைவது, வளர்ச்சியடைந்த முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாற்றமடைவது துல்லியமாய் எதில் வெளியாகிறது என்பதையும் கண்டு கொள்ள உதவும் விரிவான புள்ளி விவரங்களை மேற்கோளாய்த் தந்துள்ளேன். இயற்கையிலும் சமுதாயத்திலும் எல்லா எல்லைக் கோடுகளும் வழக்காற்றின் பாற்பட்டவையே, மாற்றப்படக் கூடியவையே என்பதைக் கூறத் தேவையில்லை. உதாரணமாக, எந்தக் குறிப்பிட்ட ஆண்டில் அல்லது எந்தப் பத்தாண்டில் ஏகாதிபத்தியம் ''திட்டவட்டமாய்'' நிலைநாட்டப்பட்டது என்று வாதாடுவது அபத்தமே ஆகும்.

ஆனால் ஏகாதிபத்தியத்துக்கு இலக்கணம் கூறும் விவகாரத்தில் நாம் முக்கியமாகக் கார்ல் காவுத்ஸ்கியுடன் சம்வாதத்தில் இறங்க வேண்டியிருக்கிறது. கார்ல் காவுத்ஸ்கி இரண்

டாவது அகிலம் எனப்படுவதான சகாப்தத்தின், அதாவது 1889க்கும் 1914க்கும் இடைப்பட்ட இருபத்தைந்தாண்டுக் காலத்தின் தலையாய மார்க்சியத் தத்துவவாதி. ஏகாதிபத்தியத்துக்கு நாம் அளித்திடும் இலக்கணத்தில் வெளியிடப்படும் அடிப்படைக் கருத்துக்களைக் காவுத்ஸ்கி 1915லும், 1914 நவம்பரிலுங்கூட மிகவும் வைராக்கியமாகத் தாக்கினார். ஏகாதிபத்தியத்தை அவர் ஒரு பொருளாதாரக் ''கட்டமாகவோ'' படியாகவோ கருதக் கூடாது, ஒரு கொள்கையாகவே நிதி மூலதனத்தினால்''உகந்ததெனவிரும்பி ஏற்கப்படும்'' திட்டவட்டமானதொரு கொள்கையாகவே கருத வேண்டும் என்றார்; ஏகாதிபத்தியத்தை ''இன்றைய முதலாளித்துவத்துக்கு'' ''முழுதொத்ததாகக்'' கொள்ளக் கூடாது என்றும், ஏகாதிபத்தியமானது ''இன்றைய முதலாளித்துவத்தின் எல்லா நிகழ்வுகளையும்''—கார்ட்டல்கள், காப்புவரிக் கொள்கை, நிதியதிபர்களது ஆதிக்கம், காலனியாதிக்கக் கொள்கை ஆகியற்றை — குறிப்பதாகக் கொண்டால் முதலாளித்துவத்துக்கு ஏகாதிபத்தியம் தேவைதானா என்னும் கேள்வி ''ஒன்றையே பல விதமாகத் திருப்பிக் கூறும் வெற்றுரையாக'' இழிந்துவிடுகிறது, ஏனெனில் அப்போது ''ஏகாதிபத்தியம் இயற்கையாகவே முதலாளித்துவத்துக்கு அத்தியாவசியமானதாகவே இருக்கும்'' என்றும் இன்ன பல வாறாகவும் கூறினார். காவுத்ஸ்கியினுடைய கருத்தை எடுத்துரைப்பதற்குரிய சிறந்த வழி, ஏகாதிபத்தியத்துக்கு அவர் அளித்திடும் இலக்கணத்தை, நான் கூறியிருக்கும் கருத்துக்களின் சாரப் பொருளுக்கு நேர் விரோதமானதான இந்த இலக்கணத்தை அப்படியே இங்கு தருவதுதான் (ஏனெனில் நான் கூறியிருப்பவற்றுக்கு ஒத்தவையான கருத்துக்களை ஏற்கெனவே பல ஆண்டுகளாக ஆதரித்து வந்துள்ள ஜெர்மன் மார்க்சியவாதிகளது முகாமிடமிருந்து எழும் மறுப்புரைகள் மார்க்சியத்தில் ஒரு திட்டவட்டமான போக்கிடமிருந்து எழும் மறுப்புரைகளாகுமென்பது நெடு நாட்களாகவே காவுத்ஸ்கியிற்குத் தெரிந்ததுதான்).

காவுத்ஸ்கியின் இலக்கணம் வருமாறு:

''அதிக வளர்ச்சி பெற்றுவிட்ட தொழில் துறை முதலாளித்துவத்தின் ஒரு விளைவே ஏகாதிபத்தியம். தொழில் துறை முதலாளித்துவத் தேசம் ஒவ்வொன்றும் மேலும் மேலும் பெரிய அளவில் விவசாயப் பிரதேசங்களை (அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது), அவற்றில் வாழும் தேசத்தவர்களைப் பற்றிக் கவலைப்படாமலே, தனக்குக் கீழ்ப்படுத்திக் கொள்வதற்கோ, பிடித்துத் தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்கோ மேற்கொள்ளும் முயற்சிகளில்தான் அது அடங்கியுள்ளது.''*

இந்த இலக்கணம் உதவாக்கரையானது, ஏனெனில் இது ஒருச்சார்பாக, அதாவது மனம்போன போக்கில் தேசிய இனப் பிரச்சினையை மட்டும் (இப்பிரச்சினை அதன் அளவிலும் மற்றும் ஏகாதிபத்தியத்துடன் அதற்குள்ள உறவிலும் அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்ததே என்றாலுங்கூட) தனிப்பட குறிப்பிடுகிறது; இப்பிரச்சினையைப் பிற தேசங்களைப் பிடித்துச் சேர்த்துக் கொள்ளும் நாடுகளில் உள்ள தொழில் துறை மூலதனத்துடன் மட்டும் மனம்போன போக்கிலும் தவறாகவும் இணைத்திடுகிறது; விவசாயப் பிரதேசங்கள் பிடித்துச் சேர்த்துக் கொள்ளப்படுவதை இதே போல மனம்போன போக்கிலும் தவறாகவும் முதன்மைப்படுத்தி முன்னிலையிலே கொண்டு வந்து வைக்கிறது.

பிரதேசங்களைக் கைப்பற்றுவதற்கான பிரயத்தனமே ஏகாதிபத்தியம்—இதுதான் காவுத்ஸ்கியினுடைய இலக்கணத்தின் அரசியல் பகுதி கூறுவதெல்லாம். இது சரியானதே, ஆனால் பெரிதும் அரைகுறையானது; ஏனென்றால் அரசியல் வழியில் ஏகாதிபத்தியமானது பொதுவாக வன்முறையையும் பிற்போக்கையும் நோக்கியமைந்த பிரயத்தனமாகும். ஆனால் தற்போதைக்கு இப்பிரச்சினையின் பொருளாதார அம்சத்தில்தான் நாம் கருத்துக் கொண்டுள்ளோம்; காவுத்ஸ்கியேதான் இந்த அம்சத்தைத் தமது இலக்கணத்தில் புகுத்தியிருக்கிறார். காவுத்ஸ்கியின் இலக்கணத்திலுள்ள பிழைகள்

* *Die Neue Zeit*, 1914, 2, (தொகுதி 32), பக்கம் 909, செப்டெம்பர் 11, 1914; ஒப்பிடவும் 1915, 2, பக்கம் 107 முதலியன.

அப்பட்டமானவை. ஏகாதிபத்தியத்தின் குணுதிசயம் தொழில் துறை மூலதனம் அல்ல, நிதி மூலதனம்தான். பிரான்சில் நிதி மூலதனத்தின் அதிவேக வளர்ச்சியும், தொழில் துறை மூலதனம் பலம் குன்றியதும்தான் 1880ஆம் ஆண்டுகள் முதலாய் பிரதேசங்களைக் கைப்பற்றும் (காலனியாதிக்கக்) கொள்கையை மட்டுமீறி உக்கிரமடையச் செய்தன என்பது தற்செயலான நிகழ்ச்சியல்ல. ஏகாதிபத்தியத்தை இனம் காண்பதற்குரிய குணுதிசயமாக இருப்பது விவசாயப் பிரதேசங்களை மட்டும் அது கைப்பற்ற முனைகிறது என்பது அல்ல, வெகுவாய்த் தொழில் வளர்ச்சியடைந்த பிரதேசங்களையும் அது கைப்பற்ற முனைவதும் ஆகும் (பெல்ஜியத்தை விழுங்க ஜெர்மனிக்குள்ள ஆவல்; லோரைனை விழுங்க பிரான்சுக்குள்ள ஆவல்). இதற்குக் காரணம் என்னவெனில், 1) உலகம் ஏற்கெனவே பங்கிட்டுக் கொள்ளப்பட்டுவிட்டதென்ற உண்மையானது மறுபங்கீட்டுக்காகத் திட்டமிடுவோரை எந்த விதமானப் பிரதேசத்தையும் கைப்பற்றிக் கொள்ளும்படி முனைவு பெறச் செய்கிறது; 2) மேலாதிக்கம் பெறுவதற்காக, அதாவது பிரதேசக் கைப்பற்றலுக்காக ஒருசில வல்லரசுகளுக்கிடையில் நடைபெறும் போட்டியானது அவ்வளவாகத் தமக்கே நேரடியாகப் பிரதேசம் வேண்டும் என்பதற்காக அல்லாமல், தமது எதிராளியைப் பலவீனப்படுத்துவதற்காகவும் அவனது மேலாதிக்கத்துக்குக் குழிபறிப்பதற்காகவும் எழும் போட்டியாக இருப்பது ஏகாதிபத்தியத்தின் அவசிய குணுதிசயமாகும் (பிரிட்டனை எதிர்த்துச் செயல்படுவதற்கான தளமாக பெல்ஜியம் ஜெர்மனிக்கு மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது; ஜெர்மனியை எதிர்த்துச் செயல்படுவதற்கான தளமாக பாக்தாது பிரிட்டனுக்குத் தேவைப்படுகிறது, இப்படி மற்றும் பல).

காவுத்ஸ்கி குறிப்பாகவும்—மற்றும் திரும்பத் திரும்பவும்—ஆங்கிலேய எழுத்தாளர்களைச் சுட்டிக் காட்டுகிருர், ஏகாதிபத்தியம் என்னும் சொல்லைத் தாம், அதாவது காவுத்ஸ்கி, புரிந்து கொள்ளும் அதே முறையில் முற்றிலும் அரசியல் அர்த்தத்தை அவர்கள் அளித்திடுவதாகச் சொல்லிக் காட்டுகிருர். ஆங்கிலேய எழுத்தாளர் ஹாப்ஸன்

எழுதிய ஏகாதிபத்தியம் என்ற நூலை எடுத்துக் கொள்வோம், இது 1902ல் வெளியானது. இதில் நாம் படிப்பதாவது:

''புதிய ஏகாதிபத்தியம் பழைய ஏகாதிபத்தியத்திலிருந்து வேறுபடுவது எவற்றிலென்றால், முதலாவதாக, வளர்ந்து செல்லும் ஒரேயொரு சாம்ராஜ்யத்துக்கான ஆசைக்குப் பதிலாக, அரசியல் ஆதிக்க விஸ்தரிப்பும் வாணிப ஆதாயமுமாகிய ஒத்த வேட்கைகளினால் ஒவ்வொன்றும் உந்திவிடப்பட்டுப் போட்டியிடும் சாம்ராஜ்யங்களது தத்துவமும் நடைமுறையுமாக இருப்பதிலும்; இரண்டாவதாக, வாணிப நலன்கள்மீது நிதி அல்லது முதலீட்டு நலன்கள் ஆதிக்கம் பெறுவதிலும் ஆகும்.''*

காவுத்ஸ்கி பொதுப்பட ஆங்கிலேய எழுத்தாளர்களைச் சுட்டிக் காட்டுவது (கொச்சையான ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகளையோ, ஏகாதிபத்தியத்துக்கு அப்பட்டமாகவே பரிந்து பேசுவோரையோ அவர் மனதிற் கொண்டிருந்தாலன்றி) அறவே தவறாகும் என்பதைக் காண்கிறோம். மார்க்சியத்தைத் தொடர்ந்து ஆதரித்து நிற்பதாகச் சொல்லளவில் கூறிக் கொண்டு உண்மையில் காவுத்ஸ்கி, சமூக-மிதவாதி ஹாப்ஸனுடன் ஒப்பிடுகையில் ஓரடி பின்னோக்கிச் செல்கிறார். காவுத்ஸ்கியைக் காட்டிலும் ஹாப்ஸன் அதிக அளவுக்குச் சரியானபடி நவீன ஏகாதிபத்தியத்தின் ''வரலாற்று வழியில் ஸ்தூலமான'' இரு இயல்புகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறார் (காவுத்ஸ்கியின் இலக்கணம் வரலாற்று வழியிலான ஸ்தூலத் தன்மையைக் கேலி செய்வதாயுள்ளது!): 1) ஒன்றுக்கு மேற்பட்டதான ஏகாதிபத்தியங்களுக்கிடையில் போட்டி, 2) வணிகர் மீது நிதியதிபர் ஆதிக்கம் பெறுதல். தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகள் விவசாய நாடுகளைக் கைப்பற்றிக் கொள்வதே பிரதான விவகாரமாக இருந்தால், அப்பொழுது வணிகரின் பாத்திரம் முதன்மையானதாக முன்னிலையில் நிற்கும்.

காவுத்ஸ்கியின் இலக்கணம் தவறானது, மார்க்சியத்துக்கு முரணானது என்பது மட்டுமல்ல. மார்க்சியத் தத்துவத்திட

* Hobson, *Imperialism*, லண்டன், 1902, பக்கம் 324.

மிருந்தும் மார்க்சிய நடைமுறையிடமிருந்தும் நெடுகிலும் முறித்துக் கொண்டு சென்றுவிடும் ஒரு முழுத் தொகுதியாக அமையும் கருத்துக்களுக்கு அவரது இந்த இலக்கணம் அடிப்படையாகிவிடுகிறது. இதைப் பற்றி பிற்பாடு நான் குறிப்பிடுவேன். முதலாளித்துவத்தின் மிக அண்மையதான இந்தக் கட்டத்தை ஏகாதிபத்தியமென அழைப்பதா, அல்லது நிதி மூலதனக் கட்டமென அழைப்பதா என்று சொற்கள் குறித்துக் காவுத்ஸ்கி எழுப்பும் வாக்குவாதம் முக்கிய கவனத்துக்கு உரியதல்ல. எப்படி வேண்டுமாலுைம் அழையுங்கள், இரண்டும் ஒன்றுதான். விவகாரத்தின் சாரப் பொருள் என்னவென்ருல், ஏகாதிபத்தியத்தின் அரசியலே காவுத்ஸ்கி அதன் பொருளாதாரத்திலிருந்து பிரித்து விடுகிருர், பிரதேசக் கைப்பற்றலானது நிதி மூலதனத்திஞல் ''உகந்ததென விரும்பி ஏற்கப்படும்'' ஒரு கொள்கை என்பதாகப் பேசுகிருர், இதே நிதி மூலதன அடிப்படையில் மற்ருெரு முதலாளித்துவக் கொள்கையும் சாத்தியமே என்று சொல்லி இதனே அதற்கு எதிராக வைக்கிருர். அப்படியாஞல், பொருளாதாரத்தில் ஏகபோகங்களும், அரசியலில் ஏகபோகமல்லாத, வன்முறையல்லாத, பிரதேசக் கைப்பற்றலல்லாத முறைகளும் இணக்கமாகச் சேர்ந்திருக்க முடியும் என்ருகிறது. அப்படியாஞல், நிதி மூலதனத்துக்குரிய இந்தச் சகாப்தத்தில் நிறைவு பெற்று, மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளுக்கிடையிலான போட்டிப் போராட்டத்தின் இன்றைய விசேஷ வடிவங்களின் அடிப்படையாக இருப்பதாகிய உலகப் பரப்பின் பங்கீடானது ஏகாதிபத்தியமல்லாத ஒரு கொள்கையுடன் இணக்கமாகச் சேர்ந்திருக்க முடியும் என்ருகிறது. இதன் விளைவு என்னவெனில், முதலாளித்துவத்தின் மிக அண்மையதான இந்தக் கட்டத்தின் மிக ஆழமான முரண்பாடுகளே அடியோடு அம்பலமாக்கிக் காட்டுவதற்குப் பதில் இவை பூசிமெழுகப்பட்டு மூடிமறைக்கப்படுவதுதான்; மார்க்சியத்துக்குப் பதில் முதலாளித்துவச் சீர்திருத்தவாதம்தான்.

ஏகாதிபத்தியத்துக்காகவும் பிரதேசக் கைப்பற்றல்களுக்காகவும் பரிந்து பேசும் ஜெர்மானியர் குஞெவ் என்பவருடன் காவுத்ஸ்கி விவாதத்தில் இறங்குகிருர். இன்றைய முதலா

ளித்துவமே ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது, முற்போக்கானது, ஆகவே ஏகாதிபத்தியம் முற்போக்கானதுதான், ஆதலால் அதைத் தொழுதெழுந்து புகழ்ந்து போற்ற வேண்டும் என்பதாகக் குனெவ் அசிங்கமாய்க் கடுப்புடன் வாதிடுகிறுர்! ஒரு விதத்தில் இது ருஷ்ய மார்க்சியவாதிகள் குறித்து 1894-95ல் நரோத்னிக்குகள் அளித்து வந்த கேலிச் சித்திரத்தைப் போன்றதாய் இருக்கிறது. நரோத்னிக்குகள் வாதாடினுர்கள்: ருஷ்யாவில் முதலாளித்துவம் தவிர்க்க முடியாதது, அது முற்போக்கானது என்பதாக மார்க்சியவாதிகள் நம்பினுல், அவர்கள் ஒரு சாராயக்கடை திறந்து முதலாளித்துவத்தை நாட்ட முற்பட வேண்டும். குனெவுக்குக் காவுத்ஸ்கி அளித்த பதில் வருமாறு: ஏகாதிபத்தியம் இன்றைய முதலாளித்துவமல்ல; இன்றைய முதலாளித்துவத்தின் கொள்கையினது வடிவங்களில் ஒன்றே அது. நாம் இந்தக் கொள்கையை—ஏகாதிபத்தியத்தை, பிரதேசக் கைப்பற்றல்களை, இன்ன பிறவற்றை—எதிர்த்துப் போரிட முடியும், போரிடவும் வேண்டும்.

இந்தப் பதில் முற்றிலும் பொருத்தமானதாகவே தோன்றுகிறது, ஆனுல் உண்மையில் இது ஏகாதிபத்தியத்துடன் இணக்கம் காண வேண்டுமென மேலும் நுண்ணயம் வாய்ந்த, மேலும் மறைமுகமான (ஆகவே மேலும் அபாயகரமான) வாதமுறையே ஆகும். ஏனெனில் டிரஸ்டுகள், வங்கிகளின் பொருளாதார அடிப்படைக்குப் பங்கம் விளைவிக்காதபடி, டிரஸ்டுகள், வங்கிகளின் கொள்கையை எதிர்த்துப் ''போராடுவது'' முதலாளித்துவச் சீர்திருத்தவாதமும் அமைதிவாதமுமே ஆகும்; ஆத்மார்த்திக விருப்பங்களின் காருண்ய மிக்க, பேதமை வாய்ந்த வெளிப்பாடே ஆகும். உண்மையில் நிலவுகின்ற முரண்பாடுகளின் முழு ஆழத்தையும் வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, இந்த முரண்பாடுகளைத் தட்டிக் கழித்து விலகியோடுதல், இவற்றில் மிகவும் முக்கியமானதை மறந்து விடுதல்—இதுவேதான் காவுத்ஸ்கியின் தத்துவம்; இதற்கும் மார்க்சியத்துக்கும் பொதுவானது ஏதும் இல்லை. இயற்கையாகவே இப்படிப்பட்ட ஒரு ''தத்துவம்'' குனெவ்

களுடன் ஒற்றுமை வேண்டுமென வாதாடுவதற்கே அன்றி வேறு எதற்கும் உதவக் கூடியது அல்ல!

''தூய பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், முதலாளித்துவமானது கார்ட்டல் கொள்கையை அயல்நாட்டுக் கொள்கைக்கும் விஸ்தரிக்கச் செய்வதெனும் மேலும் ஒரு புதிய கட்டத்துள், அதீத-ஏகாதிபத்தியத்துக்கான கட்டத்துள் (ultra-imperialism)",* அதாவது மீ-ஏகாதிபத்தியத்துக்கான (superimperialism), அனைத்து உலகின் ஏகாதிபத்தியங்களுக்கிடையே போராட்டத்துக்கு அல்ல, அவற்றின் ஒன்றியத்துக்கான கட்டத்துக்கு, முதலாளித்துவத்தில் யுத்தங்கள் இல்லாதொழியும் கட்டத்துக்கு, ''சர்வதேச அளவில் ஒன்றுபட்ட நிதி மூலதனம் கூட்டாக உலகைச் சுரண்டும்'' ஒரு கட்டத்துக்குச் செல்வது முடியாததல்ல''** என்று எழுதுகிறார் காவுத்ஸ்கி.

இந்த ''அதீத-ஏகாதிபத்தியமெனும் தத்துவம்'' மார்க்சியத்திலிருந்து எவ்வளவு தீர்மானமாகவும் முழுநிறைவாகவும் முறித்துக் கொண்டு விலகிவிடுகிறது என்பதை விவரமாகத் தெளிவுபடுத்திக் காட்டும் பொருட்டுப் பிற்பாடு நாம் இந்தத் தத்துவத்தைப் பரிசீலிப்போம். தற்போதைக்கு நாம், இந்த நூலின் பொதுவான திட்டத்திற்கு ஏற்ப, இப்பிரச்சினை பற்றிய துல்லியமான பொருளாதாரப் புள்ளி விவரங்களைப் பரிசீலிப்போம். ''தூய பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில்'', இந்த ''அதீத-ஏகாதிபத்தியம்'' சாத்தியமா, அல்லது இது அதீத-அபத்தமா?

தூய பொருளாதாரக் கண்ணோட்டம் என்பதன் மூலம் ''தூய'' கருத்துருவாக்கம் குறிக்கப்படுமாயின், அப்போது சொல்லக் கூடியது எல்லாம் பின்வரும் அடியுரையாகக் குறுகி விடுகிறது: வளர்ச்சியானது ஏகபோகங்களை நோக்கிச் செல்கிறது, ஆகவே, தனியொரு உலக ஏகபோகத்தை நோக்கி, தனியொரு சர்வதேச டிரஸ்டை நோக்கிச் செல்கிறது. இது

* *Die Neue Zeit*, 1914, 2 (தொகுதி 32), பக்கம் 921, செப். 11, 1914; ஒப்பிடவும் 1915, 2, பக்கம் 107உம் அடுத்த பக்கங்களும்.

** *Die Neue Zeit*, 1915, 1, பக்கம் 144, ஏப்ரல் 30, 1915.

மறுக்க முடியாததுதான்; ஆனுல் அறவே அர்த்தமற்றது—ஆய்வுக்கூடங்களிலேயே உணவு பொருள்களை உற்பத்தி செய்வதை நோக்கி ''வளர்ச்சியானது செல்கிறது'' என்று கூறுவது எப்படி அர்த்தமற்றதோ, அதே போல. இந்தக் கருத்தின் படி, ''அதீத-விவசாயத் தத்துவம்'' எவ்வளவு அபத்த மானதோ அதே அளவுக்கு அதீத-ஏகாதிபத்தியத் ''தத்துவமும்'' அபத்தமானதுதான்.

ஆனுல், நிதி மூலதனச் சகாப்தத்தை இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஆரம்பமான வரலாற்று வழியில் ஸ்தூலமான ஒரு சகாப்தமாகக் கொண்டு, இச்சகாப்தத்தின் ''தூய பொருளாதார'' நிலைமைகளைப் பற்றி விவாதிக்கிருேமெனில், அப்பொழுது ''அதீத-ஏகாதிபத்தியம்'' என்பதான உயிரற்ற கருத்துருவாக்கங்களுக்கு (உண்மையில் நிலவுகின்ற பகைமைகளின் ஆழத்திலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் மிகப் பிற்போக்கான நோக்கத்துக்கே இவை முழுக்க முழுக்க பயன்படுகிறவை) அளிக்கக் கூடிய சிறந்த பதில் இவற்றை இன்றைய உலகப் பொருளாதாரத்தின் ஸ்தூலமான பொருளாதார எதார்த்த உண்மைகளுடன் ஒப்பிட்டு எப்படி இவை உண்மைகளிடமிருந்து வேறுபடுகின்றன என்று காட்டுவதுதான். அதீத-ஏகாதிபத்தியமென்று கிஞ்சித்தும் அர்த்தமில்லாமலே காவுத்ஸ்கி பேசும் பேச்சு ஏனைய பலவற்றுடன் கூட, அறவே தவருன ஒரு கருத்துக்கே ஊக்கமளிக்கிறது—ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசுவோருக்குச் சாதகமான கருத்துக்கே, அதாவது உலகப் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த ஏற்றத்தாழ்வையும் முரண்பாடுகளையும் நிதி மூலதனத்தின் ஆட்சி குறையச் செய்கிறது என்ற கருத்துக்கே ஊக்கமளிக்கிறது. உண்மையில் இவ்வாட்சி இந்த ஏற்றத்தாழ்வையும் முரண்பாடுகளையும் அதிகரிக்கவே செய்கிறது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் முடிவிலும் இருபதாம் நூற்ருண்டின் ஆரம்பத்திலும் உலகப் பொருளாதாரத்தின் உள்ளுறவுகள் பற்றிய ஒரு ஸ்தூலமான சித்திரத்தைப் பெறுவதற்கு உதவி செய்யும் பிரதான, தூய பொருளாதாரப் புள்ளிவிவரங்களைத் தொகுத்தளிப்பதற்கு, உலகப் பொரு

ளாதாரம், ஓர் அறிமுகம்* என்ற தமது சிறிய நூலில் ரி. கால்வெர் முயற்சி செய்துள்ளார். உலகை அவர் கீழ்க் கண்ட ஐந்து ''பிரதான பொருளாதாரப் பிரதேசங்களாக'' பிரிக்கிறுர். 1) மத்திய ஐரோப்பா (ருஷ்யாவும் கிரேட் பிரிட்டனும் நீங்கலாக ஐரோப்பா முழுதும்); 2) கிரேட் பிரிட்டன்; 3) ருஷ்யா; 4) கிழக்கு ஆசியா; 5) அமெரிக்கா. காலனிகளை அவை எந்த அரசுகளுக்குச் சொந்தமோ அந்த அரசுகளின் ''பிரதேசங்களுடன்'' அவர் சேர்த்துக் கொள் கிறுர்; பிரதேசங்களுக்கு ஏற்ப வகை பிரிக்கப்படாத சில நாடுகளை—ஆசியாவில் பாரசீகம், ஆப்கனிஸ்தானம், அராபியா, ஆப்பிரிக்காவில் மொரோக்கோ, அபிசீனியா முதலானவற்றை—அவர் ''சேர்க்காமல் விட்டுவிடுகிறுர்.''

இப்பிரதேசங்களைப்பற்றி அவர் எடுத்துரைக்கும் பொருளாதாரப் புள்ளிவிவரங்களின் சுருக்கமான தொகுப்பு வருமாறு: (153ஆம் பக்கம் பார்க்க).

முதலாளித்துவம் மிகவும் வளர்ச்சி பெற்றிருக்கும்(போக்குவரத்துச் சாதனங்கள், வாணிபம், தொழில் துறை ஆகியவை மிகவும் வளர்ச்சி பெற்றிருக்கும்) மூன்று பிரதேசங்கள் இருக்கப் பார்க்கிறேம்—மத்திய ஐரோப்பிய, பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதேசங்கள். இம்மூன்றில் உலகை ஆதிக்கம் புரியும் ஜெர்மனி, கிரேட் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய மூன்று அரசுகள் இருக்கின்றன. மிகவும் குறைவான பிரதேசத்தையும் ஒருசில காலனிகளையுமே ஜெர்மனி பெற்றிருப்பதால், இந்நாடுகளுக்கிடையில் ஏகாதிபத்தியப் போட்டியும் போராட்டமும் மிகவும் தீவிரமடைந்துள்ளன; ''மத்திய ஐரோப்பாவின்'' உருவாக்கம் இன்னும் எதிர்காலத்துக்கான ஒன்ருய் இருக்கிறது; கடுமையான போராட்டத்திற்கிடையே அது உருவாகிக் கொண்டிருக்கிறது. அரசியல் ஒற்றுமையின்மையானது ஐரோப்பா அனைத்தின் தற்போதைய குணுதிசயமாக இருக்கிறது. இதற்கு மாருக, பிரிட்டிஷ், அமெரிக்கப் பிரதேசங்களில் அரசியல் ஒன்றுகுவிப்பு மிக

* R. Calwer, *Einführung in die Weltwirtschaft*, Berlin, 1906.

| பிரதானப் பொருளாதாரப் பிரதேசங்கள் | பரப்பு | மக்கள் தொகை | போக்குவரத்து | | வாணிபம் | தொழில் துறை | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உற்பத்தியளவு | | |
| | பத்து லட்சம் சதுர கிலோமீட்டர்கள் | பத்து லட்சம் | ரயில்வேக்கள் (ஆயிரம் கிலோமீட்டர்கள்) | வியாபாரக் கப்பல்கள் (பத்து லட்சம் டன்) | இறக்குமதி, ஏற்றுமதி (நூறு கோடி மார்க்குகள்) | நிலக்கரி (பத்து லட்சம் டன்) | வார்ப்பு இரும்பு (பத்து லட்சம் டன்) | பருத்தி நூற்கும் கதிர்கள் (பத்து லட்சம்) |
| 1. மத்திய ஐரோப்பா | 27.6 (23.6)* | 388 (146) | 204 | 8 | 41 | 251 | 15 | 26 |
| 2. கிரேட் பிரிட்டன் . | 28.9 (28.6)* | 398 (355) | 140 | 11 | 25 | 249 | 9 | 51 |
| 3. ருஷ்யா . . . | 22 | 131 | 63 | 1 | 3 | 16 | 3 | 7 |
| 4. கிழக்கு ஆசியா | 12 | 389 | 8 | 1 | 2 | 8 | 0.02 | 2 |
| 5. அமெரிக்கா . . . | 30 | 148 | 379 | 6 | 14 | 245 | 14 | 19 |

* அடைப்புக் குறிகளில் உள்ள எண்கள் காலனிகளின் பரப்பையும் மக்கள் தொகையையும் காட்டுகின்றன.

அதிக அளவுக்கு வளர்ந்திருக்கிறது, ஆனல் ஒன்றிடம் ஏராள மான காலனிகளும் மற்ருென்றிடம் மிகச் சொற்ப காலனி களுமாய்ப் பெரிய ஏற்றத்தாழ்வு நிலவுகிறது.காலனிகளிலோ முதலாளித்துவம் இப்பொழுதுதான் வளர ஆரம்பித் திருக்கிறது.தென் அமெரிக்காவிற்கான போராட்டம் மேலும் மேலும் தீவிரமாகி வருகிறது.

முதலாளித்துவம் சொற்பமாகவே வளர்ச்சி பெற்றுள்ள இரண்டு பிரதேசங்கள் இருக்கின்றன: அவை ருஷ்யாவும் கிழக்கு ஆசியாவும். முன்னதில் மக்கள் நெருக்கம் மிக மிகக் குறைவு, பின்னதில் மிக மிக அதிகம்; முன்னதில் அரசியல் ஒன்றுகுவிப்பு அதிகம், பின்னதில் இல்லவே இல்லை. சீனுவின் பங்கீடு இப்பொழுதுதான் ஆரம்பமாகி வருகிறது; அதற்காக ஜப்பானுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் பிறவற்றுக் கும் இடையிலான போராட்டம் மேன்மேலும் தீவிரமடைந்து வருகிறது.

இந்த எதார்த்த நிலையை—பொருளாதார, அரசியல் நிலைமைகளில் பெருத்த வேற்றுமை, வெவ்வேறு நாடுகளின் வளர்ச்சி விகிதத்தில் பெருத்த ஏற்றத்தாழ்வு முதலானவை, மற்றும் ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையே வன்முறை வெறி கொண்ட போராட்டம் ஆகியவற்றை—''அமைதி யான'' அதீத-ஏகாதிபத்தியம் என்பதாய்க் காவுத்ஸ்கி கூறும் அசட்டுத்தனமான கட்டுக்கதையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மிரண்டு போன குட்டிமுதலாளித்துவ அற்பவாதி கொடிய எதார்தத்திலிருந்து ஒளிந்து கொள்வதற்காக மேற் கொள்ளும் பிற்போக்குத்தனமான முயற்சி அல்லவா இது? ''அதீத-ஏகாதிபத்தியத்தின்'' கருக்கள் என்பதாய்ச் சர்வ தேசக் கார்ட்டல்களைக் காவுத்ஸ்கி கற்பனை செய்து கொள் கிருரே (ஆய்வுக்கூடத்தில் மாத்திரைகள் தயாரிக்கப்படு வதை ஒருவர் இதே போல கருவடிவிலான அதீத-விவசாயம் என்பதாய்க் கூறிக் கொள்ள ''முடியும்''), அந்தச் சர்வ தேசக் கார்ட்டல்கள் உலகின் பங்கீட்டிற்கும், மற்றும் மறு பங்கீட்டிற்கும், அமைதி வழியிலான பங்கீட்டிலிருந்து அமைதி யல்லாத வழியிலான பங்கீட்டிற்கும், பின்னதிலிருந்து முன் னதுக்கும் மாறிச் செல்வதற்கு ஓர் உதாரணம் அல்லவா?

ஜெர்மனியின் பங்குடன்—உதாரணமாய், சர்வதேசத் தண்ட வாள சிண்டிக்கேட்டிலும் சர்வதேச வாணிபக் கப்பல் டிரஸ்ட்டிலும்—அனைத்து உலகையும் அமைதியாகப் பங்கிட்டுக் கொண்ட அமெரிக்க நிதி மூலதனமும், ஏனைய அரசுகளின் நிதி மூலதனமும், தற்போது சிறிதும் அமைதியல்லாத முறைகளின் மூலம் மாற்றப்பட்டு வரும் சக்திகளது புதிய உறவின் அடிப்படையில் உலகை மறுபங்கீடு செய்வதில் ஈடுபட்டிருக்கவில்லையா?

உசகப் பொருளாதாரத்தின் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சி வேகத்திலுள்ள வேறுபாடுகளை நிதி மூலதனமும் டிரஸ்டுகளும் அதிகரிக்கச் செய்கின்றனவே ஒழிய குறைக்கவில்லை. சக்திகளது உறவு மாற்றப்பட்டுவிடும் போது, முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள வன்முறையைத் தவிர முதலாளித்துவத்தில் வேறு வழி காண முடியுமா? உலகப் பொருளாதாரத்தில் முதலாளித்துவத்தின், நிதி மூலதனத்தின் வெவ்வேறு வளர்ச்சி விகிதங்களைப் பற்றிக் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கறாரான புள்ளிகளை ரயில்வேப் புள்ளிவிவரங்கள் தருகின்றன.* ஏகாதிபத்திய வளர்ச்சியினது கடந்த சில பத்தாண்டுகளில் ரயில் பாதைகளின் மொத்த நீளம் கீழ்க்கண்டவாறு மாறியிருக்கிறது. (156ஆம் பக்கத்திலுள்ள அட்டவணையைப் பார்க்கவும்.)

இவ்வாறாக, ரயில் பாதைகளின் வளர்ச்சி, ஆசியாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த காலனிகளிலும் சுயேச்சை அரசுகளிலும் (பகுதியளவு சுயேச்சை அரசுகளிலும்) மிகவும் துரிதமாக இருந்திருக்கிறது. இங்கே நான்கு அல்லது ஐந்து மிகப் பெரிய முதலாளித்துவ அரசுகளின் நிதி மூலதனம் தனியாட்சி புரிகிறது என்பது தெரிந்ததே. ஆசியாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த காலனிகளிலும் பிற நாடுகளி

* *Statistisches Jahrbuch für das Deutsche Reich*, 1915; *Archiv für Eisenbahnwesen*, 1892 (''ஜெர்மன் அரசின் புள்ளிவிவர ஆண்டு நூல்'', 1915; ''ரயில் பாதை ஆவணங்கள்'', 1892. —ப-ர்.); 1890ல் பல்வேறு நாடுகளின் காலனிகளுக்கிடையில் ரயில் பாதைகள் விநியோகிக்கப்பட்டிருந்தது பற்றிய சிறுதிற விவரங்களைத் தோராயமாக மதிப்பிட வேண்டியிருந்தது.

ரயில் பாதைகள்
(ஆயிரம் கிலோமீட்டர்கள்)

| | 1890 | 1913 | + |
|---|---|---|---|
| ஐரோப்பா . . . | 224 | 346 | +122 |
| அமெரிக்க ஐக்கிய நாடு . . . . | 268 | 411 | +143 |
| எல்லாக் காலனிகளிலும் . . . . | 82 } 125 | 210 } 347 | +128 } +222 |
| ஆசியாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த சுயேச்சை, பகுதியளவு சுயேச்சை அரசுகள் . . . | 43 } | 137 } | +94 } |
| மொத்தம் . . . . | 617 | 1,104 | |

லும் இரண்டு லட்சம் கிலோமீட்டர் புதிய ரயில் பாதைகள் என்ருல், குறிப்பான அளவுக்கு அனுகூலமான நிபந்தனைகளின் பேரில், நல்ல வருவாய்க்கான விசேஷ உத்தரவாதத்துடனும், எஃகு ஆலைகளுக்கான லாபகரமான ஆணைகளுடனும், இன்ன பல ஆதாயங்களுடனும் கூடிய 4,000 கோடி மார்க்குக்கும் அதிகமான மூலதனம் புதிதாக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று ஆகிறது.

காலனிகளிலும் கடல் கடந்த நாடுகளிலும் முதலாளித்துவம் மிகவும் துரிதமான வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. கடல் கடந்த நாடுகளிடையே புதிய ஏகாதிபத்திய அரசுகள் உதித்தெழுகின்றன (உதாரணம்: ஜப்பான்). உலக ஏகாதிபத்தியங்களுக்கிடையே போராட்டம் மேலும் தீவிரமாகி வருகிறது. காலனிகளிலும் கடல் கடந்த நாடுகளிலும் மிகுந்த லாபம் தருவனவாய் உள்ள நிறுவனங்களிடமிருந்து நிதி மூலதனம் வசூலிக்கின்ற கப்பம் அதிகமாகிச் செல்கிறது.

இக்''கொள்ளையின்'' பங்கீட்டில் அசாதாரணமாகப் பெரிய தொரு பாகம், உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி வேகத்தில் எப்போதும் உச்ச நிலையில் இல்லாத நாடுகளுக்குச் செல்கின் றது. காலனிகளையும் சேர்த்துக் கணக்கிடுகையில் மிகப் பெரி யவையான நாடுகளாய் இருப்பவற்றில் ரயில் பாதைகளின் மொத்த நீளம் வருமாறு:

(ஆயிரம் கிலோமீட்டர்கள்)

| | 1890 | 1913 | |
|---|---|---|---|
| அமெரிக்க ஐக்கிய நாடு . . . | 268 | 413 | +145 |
| பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் . . . | 107 | 208 | +101 |
| ருஷ்யா . . . . . . . | 32 | 78 | + 46 |
| ஜெர்மனி . . . . . . . | 43 | 68 | + 25 |
| பிரான்ஸ் . . . . . . . | 41 | 63 | + 22 |
| 5 வல்லரசுகளுக்குமான மொத்தம் | 491 | 830 | +339 |

இவ்வாருக, தற்போதுள்ள ரயில் பாதைகளின் மொத்த நீளத்தில் சுமார் 80 சதவிகிதம் மிகப் பெரிய ஐந்து வல்லரசு களின் கையில் ஒன்றுகுவிந்திருக்கிறது. ஆனால் இந்த ரயில் பாதைகளிலான உடைமையின் ஒன்றுகுவிப்பு, நிதி மூலதனத் தின் ஒன்றுகுவிப்பு, அளவின்றி இன்னும் அதிகமாக இருக் கிறது; ஏனெனில், உதாரணமாக, பிரெஞ்சு, ஆங்கிலேயக் கோடீஸ்வரர்கள் அமெரிக்க, ருஷ்ய ரயில்வேக்களிலும் பிற ரயில்வேக்களிலும் மிகப் பெருந் தொகைகளிலான பங்கு களையும் பிணையங்களையும் உடைமையாகப் பெற்றிருக்கிருர் கள்.

தன்னிடம் காலனிகள் இருப்பதால், கிரேட் பிரிட்டன் ''தனது'' ரயில் பாதைகளின் நீளத்தை 1 லட்சம் கிலோ மீட்டர், ஜெர்மனியைப் போல் நான்கு மடங்கு, அதிகமாக்கி யிருக்கிறது. ஆயினும், ஜெர்மனியில் உற்பத்தி சக்திகளின்

வளர்ச்சி, குறிப்பாக நிலக்கரி, இரும்புத் தொழில்களின் வளர்ச்சி, இந்தக் காலகட்டத்தில் இங்கிலாந்தைக் காட்டிலும்—பிரான்சையும் ருஷ்யாவையும் சொல்லவே வேண்டாம்— ஒப்பிட முடியாத அளவுக்கு அதிவேகமாய் இருந்துள்ளது என்பது யாவரும் அறிந்ததே. 1892ல் ஜெர்மனி 49 லட்சம் டன்னும் கிரேட் பிரிட்டன் 68 லட்சம் டன்னும் தேனிரும்பு உற்பத்தி செய்தன; 1912ல் ஜெர்மனி 1 கோடி 76 லட்சம் டன்னும் கிரேட் பிரிட்டன் 90 லட்சம் டன்னும் உற்பத்தி செய்தன. ஆகவே, இங்கு ஜெர்மனி இங்கிலாந்தை நெடுந் தொலைவு கடந்து சென்று மேனிலையில் இருந்தது.* ஒரு புறத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் மூலதனத் திரட்டலுக்கும், மறு புறத்தில் நிதி மூலதனத்திற்காகக் காலனிகள், ''செல்வாக்கு மண்டலங்களின்'' பங்கீட்டுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வைச் சரிசெய்வதற்கு யுத்தத்தைத் தவிர முதலாளித்துவத்தில் வேறு மார்க்கம் ஏதும் உண்டா? என்பதே கேள்வி.

## 8. முதலாளித்துவத்தின் புல்லுருவித்தனமும் அழுகலும்

இப்போது நாம் ஏகாதிபத்தியத்தினுடைய இன்னொரு முக்கியமான அம்சத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும்; ஏகாதிபத்தியத்தைப் பற்றிய பெரும்பாலான விவாதங்களில் வழக்கமாய் இதற்குப் போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. மார்க்சியவாதியாகிய ஹில்ஃபர்டிங்கினுடைய குறைபாடுகளில் ஒன்று என்னவெனில், மார்க்சியவாதியல்

* ஒப்பு நோக்குக; Edgar Crammond, "*The Economic Relations of the British and German Empires*", *Journal of the Royal Statistical Society*, 1914, July, pp. 777 et seq. (எட்கார் கிரம்மாண்ட், ''பிரிட்டிஷ், ஜெர்மன் சாம்ராஜ்யங்களின் பொருளாதார உறவுகள்'', ''ராயல் புள்ளியியல் கழகத்தின் சஞ்சிகை'', 1914 ஜூலை, பக்கம் 777உம் அடுத்த பக்கங்களும்.—ப-ர்.).

லாத ஹாப்ஸனுடன் ஒப்பிடுகையில் இவர் இந்த விவகாரத்தில் ஓர் அடி பின்னேக்கிச் சென்றுவிடுகிருர். ஏகாதிபத்தியத்தின் குணுதிசயமான புல்லுருவித்தனத்தை இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

ஏகபோகமே ஏகாதிபத்தியத்தின் ஆழ்நிலைப் பொருளாதார அடிப்படையாகும் என்பதை நாம் முன்பே கண்ணுற்றுள்ளோம். இது முதலாளித்துவ ஏகபோகமாகும், அதாவது முதலாளித்துவத்திலிருந்து தோன்றி, முதலாளித்துவத்துக்கும் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கும் போட்டிக்குமான பொதுவான சூழலில், இந்தப் பொதுச் சூழலுக்கு நிரந்தரமான, தீர்வு காண முடியாத முரண்பாடான ஒன்ருய் நிலவும் ஏகபோகமாகும். ஆனபோதிலும், எல்லா விதமான ஏகபோகத்தையும் போலவே இதுவும் தவிர்க்க முடியாதபடித் தேக்கத்துக்கும் அழுகலுக்குமான போக்கை உண்டாக்குகிறது. ஏகபோக விலைகள்—தாற்காலிகமாகவே ஆயினும்—நிலைநாட்டப்பட்டிருப்பதால், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் இதன் விளைவாய் ஏனைய எல்லா முன்னேற்றத்துக்கும் உந்துவிசையாய் அமையும் காரணமானது ஓரளவுக்கு மறைந்துவிடுகிறது, தவிரவும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை வேண்டுமென்றே மட்டுப்படுத்துவதற்கான பொருளாதாரச் சாத்தியப்பாடும் உதித்தெழுகிறது. உதாரணமாக, பாட்டில்களது உற்பத்தியின் செய்முறையில் புரட்சிகர முன்னேற்றத்தை உண்டாக்கிய ஓர் இயந்திரத்தை ஓவன்ஸ் என்பவர் அமெரிக்காவில் கண்டுபிடித்தார். பாட்டில் உற்பத்தி செய்யும் ஜெர்மன் கார்ட்டலானது ஓவன்சின் காப்புரிமையை விலைக்கு வாங்கியது; ஆனுல் அதை உபயோகிக்காமல் இருத்தி வைத்துக் கொண்டது. மெய்தான், முதலாளித்துவத்தில் ஏகபோகத்தால் முழுமையாகவும் மிக நெடுங் காலத்துக்கும் போட்டியினை உலகச் சந்தையிலிருந்து நீக்கிவிட முடியாதுதான் (அதீத-ஏகாதிபத்தியமெனும் தத்துவம் இப்படி அபத்தமான ஒன்ருக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்பதை இடைக் குறிப்பாய் இங்கு கூறலாம்). தொழில்நுட்ப மேம்பாடுகளைப் புகுத்துவது உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் லாபங்களை அதிகரிப்பதற்கும் உள்ள சாத்தியப்

பாடு மாற்றமுண்டாக்கும் திசையில் செயல்படுவதும் உண்மையே. ஆனுலும் ஏகபோகத்தின் குணுதிசயமாகிய தேக்கத்திற்கும் அழுகலுக்குமான போக்கு தொடர்ந்து செயல்படுகிறது; சில தொழிற் கிளைகளில், சில நாடுகளில், குறிப்பிட்ட காலங்களுக்கு இந்தப் போக்கு மேலோங்கிவிடவும் செய்கிறது.

விரிந்து பரந்த, வளமான அல்லது வசதியான தக்க இடத்தில் அமைந்த காலனிகளின் ஏகபோக உடைமையும் இதே திசையில் செயல்படுகிறது.

மேலும் பண மூலதனம் ஒரு சில நாடுகளில் ஏராளமாகத் திரண்டுவிடுவதே ஏகாதிபத்தியம்; 10,000-15,000 கோடி பிராங்கு வரையிலான பிணையங்களின் உருவில் இம் மூலதனம் திரண்டுவிடுவதை முன்பே நாம் பார்த்தோம். எனவேதான் பண மூலதனத்தைக் கொண்டு சுகஜீவிகளாக வாழ்வோரின், அதாவது எந்தத் தொழில் நிலையத்திலும் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்ளாமல் சோம்பேறி வாழ்வையே தொழிலாகக் கொண்டு ''சீட்டுக் கத்தரித்து'' ஜீவிப்போரின் வர்க்கம் ஒன்று, துல்லியமாய்ச் சொல்வதெனில் படிவம் ஒன்று வெகுவாய் வளர்ந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தின் மிகவும் முக்கியமான பொருளாதார அடித்தளங்களில் ஒன்ருன மூலதன ஏற்றுமதியானது, பண மூலதனத்தைக் கொண்டு சுகஜீவிகளாக வாழ்வோரைப் பொருளுற்பத்தியிலிருந்து மேலும் முழுமையாகத் தனிமைப்படுத்தி ஒதுக்குகிறது, கடல் கடந்த நாடுகளும் காலனிகளுமான சிலவற்றின் உழைப்பைச் சுரண்டி வாழும் புல்லுருவித்தனமானது ஒரு நாடு முழுவதையுமே பீடித்துக் கொள்கிறது.

''1893ல் வெளி நாடுகளில் போடப்பட்ட பிரிட்டிஷ் மூலதனம் பிரிட்டனின் மொத்த செல்வத்தில் சுமார் 15 சதவிகிதமாக இருந்தது'' என்று ஹாப்ஸன் எழுதுகிருர்.* 1915க்குள் இந்த மூலதனம் சுமார் இரண்டரை மடங்கு பெருகிவிட்டது என்பதை வாசகர்களுக்கு நான் நினைவூட்டுகிறேன். ஹாப்ஸன் மேலும் கூறுகிருர்: ''வரி கொடுப்போ

* Hobson, முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 59, 62.

ருக்கு அவ்வளவு பெரும் செலவாய் வருத்துவதும், உற்பத்தியாளருக்கும் வணிகருக்கும் அவ்வளவு சொற்ப மதிப்புக்குரியதுமான ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியம்... முதலீடு செய்வோருக்குப் பெருத்த லாபத்துக்கான ஆதாரமாக அமைகிறது.... தனது அயல்நாட்டு வாணிபம், காலனிகளுடனான வாணிபம், இறக்குமதி, ஏற்றுமதி ஆகியவை முழுவதிலிருந்துமான தரகுகளிலிருந்து கிரேட் பிரிட்டன் பெறுகின்ற வருடாந்தர வருமானத்தை சர் ஆர். ஜிஃபென், மொத்த வாணிபப் புரள்வாகிய 80 கோடி பவுனின் மேல் $2^1/_2$ சத விகிதத் தரகாகக் கொண்டு, 1899ல் 1 கோடி 80 லட்சம் பவுனுக (சுமார் 17 கோடி ரூபிள்) மதிப்பிடுகிருர்.'' இத்தொகை பெரியதே என்ருலும், கிரேட் பிரிட்டனின் ஆக்கிரமிப்பு ஏகாதிபத்தியத்திற்கு இது காரணம் விளக்கம் கூறும் ஆதாரமாகிவிட முடியாது; ''முதலீடு செய்யப்பட்ட'' மூலதனத்திலிருந்து கிடைக்கும் 9 கோடியிலிருந்து 10 கோடி பவுன் வரையிலான வருமானம்தான், பண மூலதன சுகஜீவிகளுடையதாகிய இந்த வருமானம்தான் அதற்குக் காரணம் விளக்கம் கூறும் ஆதாரமாகும்.

பண மூலதன சுகஜீவிகளுடைய வருமானம், உலகின் மிகப் பெரிய ''வாணிப'' நாட்டுக்கு அயல்நாட்டு வாணிபத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் ஐந்து மடங்கு அதிகமாகும்! இதுவேதான் ஏகாதிபத்தியத்தின், ஏகாதிபத்தியப் புல்லுருவித்தனத்தின் சாராம்சம்.

இந்தக் காரணத்தினல், ''பண மூலதன சுகஜீவி அரசு'' (Rentnerstaat) அல்லது கடுவட்டி மூலதன அரசு என்னும் தொடர் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய பொருளாதார வெளியீடுகளில் பொது வழக்குக்கு வந்து கொண்டிருக்கிறது. உலகமானது ஒருசில கடுவட்டி மூலதன அரசுகளாகவும், மிக பெருவாரி அரசுகளாகிய கடனாளி அரசுகளாவும் பிரிக்கப் பட்டுவிட்டது. ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் எழுதுவதாவது: ''அந்நிய முதலீடுகளது பட்டியலின் உச்சியில், அரசியல் வழியில் சார்பு நாடுகளாகவோ, நேச நாடுகளாகவோ இருத்தப்பட்டிருப்பவை காணப்படுகின்றன: எகிப்து, ஜப்பான், சீன, தென் அமெரிக்கா ஆகியவற்றுக்குக் கிரேட் பிரிட்டன்

கடன்கள் வழங்குகிறது. பிரிட்டிஷ் கடற்படை அவசியம் ஏற்படும் போது அமீனுவாகச் செயல்படுகிறது. கிரேட் பிரிட்டனின் அரசியல் வலிமைதான் அதன் கடனாளிகளுடைய ஆத்திரத்திலிருந்து அதைக் காப்பாற்றுகிறது''.* **வெளிநாடுகளில் மூலதன முதலீட்டின் தேசியப் பொருளாதார அமைப்பு** என்ற தமது நூலில் சார்டொரியஸ் ஃபன் வால்டர்ஸ் ஹாவுசன், ''பண மூலதன சுகஜீவி அரசுக்கு'' முன் மாதிரியாக ஹாலந்தைக் குறிப்பிட்டு, பிரிட்டனும் பிரான்சும் இப்பொழுது இதே மாதிரியாக மாறிவருவதாகக் கூறுகிருர்.** கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்விட்சர்லாந்து ஆகிய ஐந்து தொழில் துறை அரசுகளும் ''நிச்சயமாய் முனைப்பான கடனீட்டு நாடுகளாகி'' விட்டன என்று ஷில்டர் கருதுகிருர். ஹாலந்து ''குறைவாகவே தொழில் வளர்ச்சி பெற்றுள்ளது'' என்பதனுலேயே அவர் இதை இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை.*** அமெரிக்க ஐக்கிய நாடு அமெரிக்க நாடுகளுக்கு மட்டுமே கடனீவோனுக இருக்கிறது.

ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் கூறுவதாவது: ''கிரேட் பிரிட்டனது தொழில் துறை அரசிலிருந்து கடனீட்டு அரசாகச் சிறிது சிறிதாக மாற்றமடைந்து வருகிறது. தொழில் துறை உற்பத்தியிலும் செய்பொருள்களின் ஏற்றுமதியிலும் தனிமுதலான அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், வட்டியிலிருந்தும் லாப ஈவுகளிலிருந்தும் பிணையங்களது வெளியீட்டிலிருந்தும் தரகுகளிலிருந்தும் ஊக வாணிபத்திலிருந்தும் கிடைக்கும் வருமானத்தின் ஒப்பளவு முக்கியத்துவம் தேசியப் பொருளாதாரம் அனைத்திலும் வளர்ந்து பெருகியிருக்கிறது. ஏகாதிபத்திய ஏற்றத்திற்கு எனது அபிப்பிராயத்தில் பொருளாதார அடிப்படையாக அமைவது இதுவே தான். விற்பவர் வாங்குகிறவருடன் பிணைக்கப்படுவதைக் காட்டிலும் உறுதி வாய்ந்த முறையில் கடனீவோர் கடனாளியுடன்

* Schulze-Gaevernitz, *Britischer Imperialismus*, பக்கம் 320, முதலியன.

** Sartorius von Waltershausen, *Das Volkswirtschaftliche System*, etc., Berlin, 1907, Buch IV.

*** Schilder, பக்கம் 393.

பிணைக்கப்படுகிறார்.''* ஜெர்மனியைப் பொறுத்தவரை பெர்லின் சஞ்சிகையாகிய *Die Bank* இன் வெளியீட்டாளரான ஆ. லன்ஸ்பர்க், ''ஜெர்மனி—பண மூலதன சுகஜீவி அரசு'' என்ற தலைப்பு கொண்ட ஒரு கட்டுரையில் 1911ல் பின் வருமாறு எழுதினார்: ''பிரான்சின் மக்களிடையே காணப் படுகின்ற மூலதன சுகஜீவிகளாக வேண்டுமென்ற ஆசை மேலோங்குவதைப் பரிகாசம் செய்வதற்கு ஜெர்மனியில் எல்லாரும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஜெர்மனியில் முதலாளித்துவ வர்க்கத்தைப் பொறுத்தவரை ஜெர்மனியின் நிலைமையும் பிரான்சினுடையதைப் போலவே மேலும் மேலும் ஆகிவிருகிறது என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.''**

பண மூலதன சுகஜீவி அரசு, புல்லுருவித்தனமான, அழுகலாகி வரும் முதலாளித்துவத்தின் அரசாகும்; இந்த சூழ்நிலை சம்பந்தப்பட்ட நாடுகளில் பொதுவாக எல்லாச் சமுதாய, அரசியல் நிலைமைகளையும், குறிப்பாகத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலுள்ள அடிப்படையான இரு போக்குகளையும் பாதிக்காமல் இருக்க முடியாது. இதைக் கூடுமான அளவுக்குத் தெட்டத் தெளிவாய்ப் புலப்படுத்திக் காட்டுவதற்காக நான் ஹாப்ஸனிடமிருந்து மேற்கோள் அளிக்கின்றேன். இவர் மிகவும் ''நம்பகமான'' சாட்சி; ஏனெனில் ''மார்க்சிய வைதிகத்தில்'' ஈடுபாடு கொண்டவராக யாரும் இவரை சந்தேகிக்க முடியாது; அதே போது இவர் ஆங்கிலேயர், காலனிகளிலும், நிதி மூலதனத்திலும், ஏகாதிபத்திய அனுபவத்திலும் எல்லா நாடுகளிலும் செழுமையானதாகிய தமது நாட்டின் சூழ்நிலையை நன்கு அறிந்தவர்.

ஆங்கில-போயர் யுத்தத்தின் நினைவுகள் தம் மனத்தில் பசுமையாக இருக்கும் ஒரு நேரத்தில் ஹாப்ஸன், ஏகாதிபத்தியத்துக்கும் ''நிதியதிபர்களின்'' நலன்களுக்குமுள்ள தொடர்பினை, கான்ட்ராக்டுகள், சப்ளைகள் முதலியவற்றிலிருந்து அவர்களுக்கு மேலும் மேலும் அதிகமாகக் கிடைக்கும் லாபங்கள் முதலானவற்றை விவரிக்கின்றார்; அவர் எழுதுவதாவது: ''திட்டவட்டமாகப் புல்லுருவித்தன்மை வாய்ந்த

* Schulze-Gaevernitz, முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 122.
** *Die Bank*, 1911, 1, பக்கங்கள் 10—11.

தாகிய இந்தக் கொள்கையின் நெறியாளர்கள் முதலாளிகளே ஆவர், அதேபோது தொழிலாளர்களில் சில தனி வகுப்புக் களையும் இதே நோக்கங்கள் கவர்ந்திழுக்கின்றன. பல நகரங் களில், மிகவும் முக்கியமான தொழிற் கிளைகள் அரசாங்கக் கான்ட்ராக்டுகளையே சார்ந்திருக்கின்றன; உலோகத் தொழில் மையங்கள், கப்பல் கட்டும் மையங்கள் ஆகியவற்றின் ஏகாதிபத்திய மனப்பாங்கு பெருமளவுக்கு இவ்வுண்மை யிலிருந்தே எழுவதாகும்.'' இந்த எழுத்தாளரின் அபிப் பிராயத்தின்படி, இரு வகை நிலைமைகளால் பழைய சாம் ராஜ்யங்கள் பலவீனமடையலாயின: 1) ''பொருளாதாரப் புல்லுருவித்தனம்'', 2) கீழ்ப்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து திரட்டிச் சேனைகள் நிறுவப்படுதல். ''பொருளாதாரப் புல் லுருவித்தனத்துக்குரிய பழக்கம் முதலாவதாகும். ஆதிக்கம் புரியும் அரசு தனது ஆளும் வர்க்கத்தைச் செல்வச் செழிப் புடையதாக்கிக் கொள்வதற்காகவும், தனது கீழ்நிலை வர்க் கங்களுக்கு லஞ்சம் கொடுத்து அவற்றைத் தனக்கு இணங்கி நடக்கும்படிச் செய்வதற்காகவும் தனது மாநிலங்களையும் காலனிகளையும் சார்பு நாடுகளையும் பயன்படுத்துக் கொள்ளும் பழக்கமாகும் இது.'' இந்த லஞ்சத்தின் வடிவம் எது வாயினும் இப்படி லஞ்சம் கொடுப்பது சாத்தியமாவதற்கு உயர்ந்த ஏகபோக லாபங்கள் தேவைப்படுகின்றன என்பதை இங்கு நான் சேர்த்துக் கொள்கிறேன்.

இரண்டாவது நிலைமை குறித்து ஹாப்ஸன் எழுதுகிறார்: ''கிரேட் பிரிட்டனும் பிரான்சும் ஏனைய சாம்ராஜ்ய ஆதிக்க தேசங்களும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் கண்ணை மூடிக் கொண்டு இந்த ஆபத்தான சார்பு நிலைப் பாதையில் போய்க் கொண்டிருப்பதானது, ஏகாதிபத்தியத்தின் கபோதித் தனத்துக்கு மிகவும் விநோதமான ஓர் அறிகுறியாகும். இந்தப் பாதையில் கிரேட் பிரிட்டன் மிக நெடுந் தொலைவு சென்றுவிட்டது. நமது இந்திய சாம்ராஜ்யத்தைப் பெறுவதற் காக நடைபெற்ற போர்களில் மிகப் பெரும்பாலானவை சுதேசி மக்களாலேயே நடத்தப்பட்டவை யாகும். இந்தியா விலும் இன்னும் அண்மைக் காலத்தில் இதே போல எகிப் திலும் பெரிய நிரந்தர சேனைகள் பிரிட்டிஷ் தளபதிகளுக்குக்

கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன; நமது ஆப்பிரிக்க சாம்ராஜ்ய உடைமைகள் சம்பந்தமான போர்களில் அனேகமாய் யாவுமே, தென் பகுதியில் நடைபெற்றவற்றைத் தவிர்த்து, நமக்காக சுதேசி மக்களால் நடத்தப்பட்டவையே ஆகும்.''

சீனு பங்கிட்டுப் பிரித்துக் கொள்ளப்படுவதன் எதிர்கால விளைவுகள் குறித்து, ஹாப்ஸன் பின்வரும் பொருளாதார மதிப்பீட்டைத் தருகிறுர்: ''அப்பொழுது மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதி, இங்கிலாந்தின் தென் பகுதியிலும் ரிவீராவிலும் உல்லாசப் பயணிகள் மண்டியுள்ள அல்லது குடியிருப்புக்கு வசதியான இடங்களாகிய இத்தாலி, ஸ்விட்சர்லாந்து இவ்விரு நாடுகளின் பகுதிகளிலும் ஏற்கெனவே காணக்கூடியதாகிவிட்ட அதே தோற்றத்தையும் தன்மையையும் பெற்றுவிடலாம். அதாவது தொலைக் கிழக்கிலிருந்து லாப ஈவுகளும் பென்ஷன்களும் பெறும் செல்வச் சீமான்களது சிறு தொகுதிகளும், இன்னும் சற்று அதிக அளவிலான பரிவாரத்தினரும் வணிகர்களுமான தொகுதிகளும், மேலும் கூடுதலான வீட்டு வேலையாட்களாலும் போக்குவரத்துத் துறையிலும் விரைவில் கெட்டுப் போய்விடும் பண்டங்களது உற்பத்தியின் இறுதிப் பிரிவுகளிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களாலுமான தொகுதிகளும் வாழும் திட்டுகளாகிவிடும். பிரதான உயிரூட்டத் தொழில்கள் யாவும் மறைந்து போயிருக்கும்; முக்கிய உணவுப் பொருள்களும் பகுதியளவு தயாரான செய்பொருள்களும் ஆசியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் கப்பமாக வந்து குவிந்து கொண்டிருக்கும்.... மேலும் பெரிய அளவிலான மேலைய அரசுகளது கூட்டணி ஒன்று, ஐரோப்பிய வல்லரசுகளது கூட்டரசு ஒன்று உதிக்கலாம் என்ற முன்னறிவிப்பும் நமக்குக் கிடைத்து வருகிறது. இந்தக் கூட்டரசு உலக நாகரிக இலட்சியத்தை முன்னுக்கு எடுத்துச் செல்வதற்குப் பதிலாய் மேலைப் புல்லுருவித்தனத்தாலான பயங்கர அபாயத்துக்குத்தான் வழி செய்வதாக இருக்கும். இந்த முன்னேறிய தொழில் துறை தேசங்களது மேல் வர்க்கங்கள் ஆசியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் அளவிலாக் கப்பம் வசூலிக்கும். இந்தக் கப்பத்தைக் கொண்டு இவ்வர்க்கங்கள், பணிந்து நடக்கும் பரிவாரத்தினரின் பெருந்

திரளுக்குத் தீனி போட்டுக் கட்டிக் காக்கும். இப்பரிவாரத்தினர் இனி செய்பொருள் உற்பத்தி, விவசாயம் போன்ற பிரதான பொருளாதாரக் கிளைகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். அதற்குப் பதில் புதிய நிதியாதிக்கப் பிரபுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் தனிநபர்களுக்கான பணிவிடைகளிலும் சிறு சேவைத் தொழில்களிலும் இவர்கள் ஈடுபடுத்தப்படுவர். இது போன்ற ஒரு தத்துவம்'' [சாத்தியக் கூறு என்பதாக அவர் சொல்லியிருக்க வேண்டும்] ''பரிசீலனைக்குத் தகுதியுடைத்ததல்ல என்று ஒதுக்க விரும்புவோர், ஏற்கெனவே இந்த நிலைமைக்குத் தாழ்த்தப்பட்டுவிட்ட இங்கிலாந்தின் தெற்குப் பகுதிகளில் உள்ள பொருளாதார, சமூக நிலைமைகளை ஆராய வேண்டும். இத்தகைய நிதியாதிக்கத்தினர், ''முதலீட்டாளர்கள்'', அரசியல், தொழில் அதிகாரிகள் ஆகியோரது கோஷ்டிகள் சீனாவைத் தமது பொருளாதாரப் பிடிக்குக் கீழ்ப்படியச் செய்து, இதுவரை உலகம் கண்டிராத அளவுக்கு லாபம் திரட்டுவதற்கான பிரம்மாண்டமானதோர் ஆதாரமாக அமையவல்ல இந்தக் கருவூலத்தைத் துடைத்து அள்ளி ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்து அனுபவிக்கும்படியான இந்நிலைமையால், மேற்கூறியது போன்ற ஓர் அமைப்பு எல்லையின்றி விஸ்தரிக்கப்படுவது சாத்தியமே என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வருங்காலம் எப்படி இருக்கும் என்பது பற்றிய இந்த விளக்கமோ, அல்லது வேறு எந்தவொரு விளக்கமோ அப்படியே உண்மையாகிவிடும் என்று கூற முடியாதபடி நிலைமை மிக மிகச் சிக்கலாய் இருக்கிறது, உலகச் சக்திகளது செயற்பாட்டின் விளைவுகள் கணித்துச் சொல்ல முடியாதனவாய் இருக்கின்றன. ஆனால் இன்று மேலைய ஐரோப்பாவின் ஏகாதிபத்தியத்தை ஆட்டிப்படைக்கும் சக்திகள் இத்திசையிலேதான் போய்க் கொண்டிருக்கின்றன; எதிர்த்தடிக்கப்பட்டால் ஒழிய, அல்லது திசை திருப்பிவிடப்பட்டால் ஒழிய அவை மேற்கூறிய விளைவையே உண்டாக்கும்.''*

---

* Hobson, முன் குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 103, 205, 144, 335, 386.

இவ்வாசிரியர் சொல்வது முற்றிலும் சரியே: ஏகாதிபத்தியத்தின் சக்திகள் எதிர்த்தடிக்கப்படாது விடப்பட்டிருந்தால், இவர் விவரித்திருக்கும் இதே நிலைமைக்குத்தான் இச் சக்திகள் இட்டுச் சென்றிருக்கும். இன்றைய ஏகாதிபத்திய நிலைமையில் ''ஐரோப்பிய ஐக்கிய அரசு'' என்பதன் உட்பொருள் இங்கே சரியாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உள்ளேயும் கூட, பெரும்பாலான நாடுகளில் இந்த நேரத்தில் தாற்காலிகமாக வெற்றி பெற்றிருக்கிற சந்தர்ப்பவாதிகள் இதே திசையில்தான் முறையாகவும் வழி பிறழாமலும் ''வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்பதையும் அவர் சேர்த்துக் கூறியிருக்க வேண்டும். உலகின் பாகப் பிரிவினையும், சீனா மட்டுமின்றி மற்ற நாடுகளும் சுரண்டப்படுவதையும், மிகச் சொற்பமான சில பணக்கார நாடுகளுக்கு உயர்ந்த ஏகபோக லாபங்கள் கிடைப்பதையும் குறிப்பதாகிய ஏகாதிபத்தியமானது, பாட்டாளி வர்க்கத்தின் மேல் மட்டத்துப் படிவத்தினருக்கு லஞ்சங் கொடுத்துச் சரிக்கட்டுவதைப் பொருளாதார வழியில் சாத்தியமானதாக்குகிறது; இவ்விதம் அது சந்தர்ப்பவாதத்திற்கு ஊட்டமளித்து, அதை உருப் பெற வைத்து, பலம் பெறச் செய்கிறது. ஆயினும் நாம், பொதுவாக ஏகாதிபத்தியத்தையும், குறிப்பாகச் சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்தடித்துச் செயல்படுகின்ற சக்திகளைக் காணத் தவறிவிடக் கூடாது. சமூக-மிதவாதியாகிய ஹாப்ஸனால் இச்சக்திகளைப் கண்டு கொள்ள முடியாமற் போனது இயற்கையே.

கெர்ஹார்ட் ஹில்டிபிரான்ட் என்ற ஜெர்மன் சந்தர்ப்பவாதி, ஏகாதிபத்தியத்தை ஆதரித்ததற்காக ஒரு காலத்தில் கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர், இன்று அவரால் ஜெர்மனியின் ''சமூக-ஜனநாயகக்'' கட்சி என்பதாக அழைக்கப்படும் கட்சியில் ஒரு தலைவராக முடிந்திருக்கிறது. ''மேற்கு ஐரோப்பாவின் ஐக்கிய அரசு'' (ருஷ்யா இல்லாதது) என்பதற்கு ஆதரவான தமது வாதத்தின் மூலம் இவர், ஹாப்ஸன் கூறியதை நிறைவு பெறச் செய்கிறார்; இந்த ஐக்கிய அரசு ''கூட்டு'' நடவடிக்கை எடுப்பதற்காக... ஆப்பிரிக்க நீக்ரோக்களுக்கு எதிராகவும், ''மாபெரும் இஸ்லாமிய இயக்

கத்துக்கு'' எதிராகவும், ''சீன-ஜப்பானியக் கூட்டணிக்கு'' எதிராய்ச் ''சக்தி வாய்ந்த சேனையையும் கடற் படையை யும்'' வைத்துக் கொள்வதற்காகவும், இன்ன பிறவற்றுக்காக வும் வேண்டும் என்கிறார்.*

''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம்'' குறித்து ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸின் புத்தகத்தில் தரப்படும் சித்திரமும் இதே புல்லுருவித்தனத்துக்குரிய குணங்களைப் புலப்படுத்துகிறது. 1865க்கும் 1898க்கும் இடையில் கிரேட் பிரிட்டனின் தேசிய வருமானம் ஏறத்தாழ இரண்டு மடங்காக அதிகரித்தது; அதே காலத்தில் ''வெளி நாடுகளிலிருந்து'' கிடைத்த வரு மானம் **ஒன்பது மடங்கு** அதிகரித்தது. ஏகாதிபத்தியத்தின் ''சிறப்பு'' என்னவெனில், அது ''நீக்ரோவைத் தொழில் துறைக்குரிய பழக்கங்களைப் பெறும்படிப் பயிற்றுவிக்கிறது'' (பலவந்தம் செய்யாமல் நடைபெறும் காரியமல்ல...), அதே போது ஏகாதிபத்தியத்தின் ''அபாயம்'' எதில் அடங் கியிருக்கிறது என்றால், ''ஐரோப்பாவானது உடலுழைப்பின் சுமையை—முதலில் விவசாயத்திலும் சுரங்கத் தொழிலிலும் பிறகு தொழில் துறையிலான முரட்டு வேலைகளையும்—நிற மரபினத்தாரிடம் ஒதுக்கிவிட்டு, தான் பண மூலதன சுகஜீவி யாகிவிடுவதிலும், இவ்விதம் நிற மரபினத்தாரது பொரு ளாதார விடுதலைக்கும், பிற்பாடு அரசியல் விடுதலைக்கும் பாதையைச் செப்பனிடக் கூடும் என்பதிலும்தான்''.

கிரேட் பிரிட்டனில் மேலும் மேலும் அதிகமான விகிதத் தில் நிலம் பயிர்த் தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்டு, விளை யாட்டுப் போட்டிகளுக்காக, செல்வந்தர்களின் பொழுது போக்குக்காக உபயோகிக்கப்படுகிறது. பிரபுக் குலத்தோ ருக்கு வேட்டைக்கும் ஏனைய விளையாட்டுகளுக்குமான சிறந்த இடமாகிய ஸ்காத்லந்தைப் பொறுத்தவரை, அது ''தனது இறந்த காலத்தையும் மிஸ்டர் கர்னேகியையும்''

* Gerhard Hildebrand, *Die Erschütterung der Industrieherrschaft und des Industriesozialismus*, 1910, பக்கம் 229உம் அடுத்த பக்கங்களும் (கெர்ஹார்ட் ஹில்டிபிரான்ட், ''தொழில் ஆதிக்கத்தின், தொழில் சோஷலிசத்தின் சிதைவு''.—ப-ர்.).

*(அமெரிக்க கோடீசுவரர்) ''நம்பி வாழ்வதாகக்'' கூறப்படுகிறது. குதிரைப் பந்தயத்துக்காகவும் நரி வேட்டைக்காகவும் மட்டும் பிரிட்டன் ஆண்டு தோறும் 1 கோடி 40 லட்சம் பவுன் (கிட்டத்தட்ட 13 கோடி ரூபிள்) செலவு செய்து வருகிறது. இங்கிலாந்தில் பண மூலதன சுகஜீவிகளது எண்ணிக்கை சுமார் பத்து லட்சமாகிவிட்டது. மொத்த மக்கள் தொகையில், பொருளுற்பத்தித் துறைகளில் வேலை செய்வோரது சதவிகிதம் குறைந்து வருகிறது:*

| | இங்கிலாந்தும் வேல்சும் மக்கள் தொகை | அடிப்படைத் தொழில்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகையில் சதவிகிதம் |
|---|---|---|---|
| | பத்து லட்சத்தில் | | |
| *1851 . . . . .* | *17.9* | *4.1* | *23* |
| *1901 . . . . .* | *32.5* | *4.9* | *15* |

*''இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப்'' பற்றி ஆராயும் முதலாளித்துவ ஆய்வாளர், பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிப் பேசுகையில், தொழிலாளர்களில்* ''மேல் அடுக்கினர்'',''அசல் பாட்டாளி வர்க்கக் கீழ் அடுக்கினர்'' *என்று இரண்டையும் முறையாக வேறுபடுத்திக் கூற வேண்டியிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், விளையாட்டுப் போட்டி மன்றங்கள், மிகப் பல சமயக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களில் மிகப் பெரும் பகுதியினர் மேல் அடுக்கிலிருந்து வருகிறுர்கள். தேர்தல் அமைப்பானது இந்த மேல் அடுக்குக்குத் தகவமைந்ததாகவே இருக்கிறது, கிரேட் பிரிட்டனில் தேர்தல் அமைப்பு இன்னும்* ''அசல் பாட்டாளி வர்க்கக் கீழ்

அடுக்கினர் விலக்கப்பட்டுவிடும்படி போதுமான அளவுக்குத் தடை வரம்புகள் இடப்பட்டிருக்கிறது''!! பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமையைக் கவர்ச்சி வாய்ந்ததாகக் காட்டும் பொருட்டு, பாட்டாளி வர்க்கத்தில் ஒரு சிறு பான்மையே ஆகிய இந்த மேல் அடுக்கைப் பற்றி மட்டும் பேசுவதே வழக்கமாய் இருந்து வருகிறது. ஓர் உதாரணம்: ''வேலையில்லாப் பிரச்சினை என்பது முக்கியமாக லண்டன் நகருக்கும், அரசியலாளர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்காத பாட்டாளி வர்க்கக் கீழ் அடுக்கினருக்கும் உரிய பிரச்சினையே ஆகும்...''*. முதலாளித்துவ அரசியலாளர்களும் ''சோஷலிஸ்டு'' சந்தர்ப்பவாதிகளும் அதிக முக்கியத்துவம் அளிக்காத... என்பதாக அவர் கூறியிருக்க வேண்டும்.

ஏகாதிபத்தியத்தின் தனி இயல்புகளில் ஒன்று—இங்கு நான் விவரித்துவரும் உண்மைகளுடன் இணைந்த ஒரு தனி இயல்பு — என்னவெனில், ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வெளியேறுவோர் குறைந்து செல்ல, குறைந்த கூலி விகிதங்கள் தரப்படும் ஓர் அளவு பிற்பட்ட நாடுகளிலிருந்து இந்த ஏகாதிபத்திய நாடுகளுக்குக் குடி புகுவோர் அதிகரித்துச் செல்கிறார்கள். ஹாப்ஸன் குறிப்பிடுவது போல, கிரேட் பிரிட்டனிலிருந்து குடி வெளியேற்றம் 1884 முதலாய்க் குறைந்து வருகிறது. அவ்வாண்டில் வெளியேறியவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 42 ஆயிரம்; ஆனால் 1900ல் அந்த எண்ணிக்கை 1 லட்சத்து 69 ஆயிரம்தான். 1881க்கும் 1890க்குமிடையே ஜெர்மனியிலிருந்து குடி வெளியேற்றம் உச்ச நிலையை அடைந்தது: அப்பொழுது மொத்தம் 14 லட்சத்து 53 ஆயிரம் பேர் வெளியேறினார்கள். அடுத்த இரண்டு பத்தாண்டுக் காலங்களில் இத்தொகை 5 லட்சத்து 44 ஆயிரம் ஆகவும், 3 லட்சத்து 41 ஆயிரம் ஆகவும் குறைந்து போயிற்று. இதற்கு மாறாக, ஆஸ்திரியா, இத்தாலி, ருஷ்யாவிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் ஜெர்மனிக்கு வந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை உயர்ந்து சென்றது. 1907ஆம் ஆண்டுக் குடிக் கணக்கின்படி ஜெர்

* Schulze-Gaevernitz, *Britischer Imperialismus*, பக்கம் 301.

மனியில் 13 லட்சத்து 42 ஆயிரத்து 294 அந்நியர்கள் இருந்தார்கள்; இவர்களில் 4 லட்சத்து 40 ஆயிரத்து 800 பேர் ஆலைத் தொழிலாளர்கள்; 2 லட்சத்து 57 ஆயிரத்து 329 பேர் விவசாயத் தொழிலாளர்கள்.* பிரான்சில் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களில் ''பெரும் பகுதியினர்'' அந்நியர்கள்: போலந்துக்காரர்கள், இத்தாலியர் கள், ஸ்பானிஷ்காரர்கள்.** அமெரிக்க ஐக்கிய நாட்டில், கிழக்கு, தெற்கு ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறியவர் கள் பெரும்பாலும் சொற்பக் கூலிக்குரிய வேலைகளிலேயே ஈடுபட்டுள்ளனர்; அமெரிக்கத் தொழிலாளர்கள்தான் மேலாளர்களில் அல்லது உயர்ந்த சம்பளத்துக்குரிய தொழி லாளர்களில் அதிக சதவிகிதத்தினர்.*** தொழிலாளர்களிடை யேயும் சலுகை பெற்ற பிரிவினரைத் தோற்றுவித்து, இவர் களைப் பாட்டாளி வர்க்கப் பெருந்திரளினரிடமிருந்து பிரித்து வைப்பது ஏகாதிபத்தியத்துக்குரிய போக்காகும்.

தொழிலாளர்களைப் பிளவுபடுத்தி, அவர்களிடையே சந் தர்ப்பவாதத்தைப் பலம் பெறச் செய்து, தொழிலாளி வர்க்க இயக்கத்தில் தாற்காலிக அழுகலை உண்டாக்குவ தாகிய ஏகாதிபத்தியத்துக்குரிய இந்தப் போக்கு கிரேட் பிரிட் டனில் பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதிக்கும் இருபதாம் நூற்றூண்டின் தொடக்கத்துக்கும் மிகவும் முன்னதாகவே வெளியாயிற்று என்பதைக் குறிப்பிட வேண்டும். பத்தொன் பதாம் நூற்றூண்டின் நடுப்பகுதியிலேயே ஏகாதிபத்தியத்தின் இரண்டு முக்கிய குணுதிசயங்களைக் கிரேட் பிரிட்டனில் காண முடிந்தது: இவை பரவலான காலனி உடைமைகளும், உலகச் சந்தையில் ஏகபோக நிலையும் ஆகும். தொழிலாளி வர்க்க

---

* *Statistik des Deutschen Reichs*, Bd. 211 (''ஜெர்மன் அரசின் புள்ளிவிவரங்கள்'', தொகுதி 211.—ப-ர்.).

** Henger, *Die Kapitalsanlage der Franzosen*, Stuttgart, 1913 (ஹெங்கெர், ''பிரெஞ்சு முதலீடுகள்'', ஷ்டுட்கார்ட், 1913.—ப-ர்.).

*** Hourwich, *Immigration and Labour*, New Jork, 1913 (ஹூர்விச், ''குடியேற்றமும் உழைப்பும்'', நியூயார்க், 1913.—ப-ர்.).

இயக்கத்திலான சந்தர்ப்பவாதத்திற்கும், பிரிட்டிஷ் முதலாளித்துவத்தின் ஏகாதிபத்திய இயல்புகளுக்கும் இடையிலான இந்தத் தொடர்பை முறையாக மார்க்சும் எங்கெல்சும் பல பத்தாண்டுகள் அடங்கிய காலப் பகுதியில் கண்ணுற்று விவரித்துக் கூறினர். உதாரணமாக, *1858* அக்டோபர் *7*ல் எங்கெல்ஸ் மார்க்சுக்கு எழுதினர்: ''ஆங்கிலேயப் பாட்டாளி வர்க்கம் மெய்யாகவே மேலும் மேலும் முதலாளித்துவமயமாகி வருகிறது. எல்லாத் தேசங்களிலும் மிகவும் முதலாளித்துவமயமான இங்கிலாந்து இவ்வாறு முதலாளித்துவ வர்க்கத்துடன் கூடவே முதலாளித்துவப் பிரபுக் குலம் ஒன்றையும், முதலாளித்துவப் பாட்டாளி வர்க்கம் ஒன்றையும் பெற வேண்டுமென்ற இறுதிக் குறிக்கோளைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. அனைத்து உலகையும் சுரண்டுகிற ஒரு தேசத்துக்கு இது ஓரளவு நியாயமானதே.'' ஏறத்தாழ கால் நூற்றுண்டுக்குப் பிறகு, *1881* ஆகஸ்டு *11* தேதியிட்ட ஒரு கடிதத்தில், ''முதலாளித்துவ வர்க்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட அல்லது எப்படியும் அவ்வர்க்கத்தால் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிற ஆட்கள் தமக்குத் தலைமை தாங்க அனுமதிக்கும் அந்தப் படுமோசமான ஆங்கிலேயத் தொழிற்சங்கங்கள்'' என்பதாக எங்கெல்ஸ் குறிப்பிடுகிறுர். *1882* செப்டம்பர் *12* தேதியிட்டுக் காவுத்ஸ்கிக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் கூறுவதாவது: ''காலனிக் கொள்கையைப் பற்றி ஆங்கிலேயத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறுர்கள் என்று கேட்கிறீர்கள். என்ன நினைக்கிறுர்கள், பொதுவாக அரசியலைப் பற்றி என்ன நினைக்கிறுர்களோ, அதுவேதான். இங்கு தொழிலாளர் கட்சி என்பதாக எதுவும் இல்லை; கன்சர்வேட்டிவ்களும் மிதவாத-தீவிரவாதிகளும் தான் இருக்கிறுர்கள்; உலகச் சந்தையிலும் காலனிகளிலும் இங்கிலாந்துக்குள்ள ஏகபோகத்தின் விருந்தில் தொழிலாளர்கள் பங்கு பெற்றுக் களிப்புறுகிறுர்கள்.''* (*1892*ல்

* *Briefwechsel von Marx und Engels*, Bd. II, S. 290; IV, S. 433 (''மார்க்ஸ்-எங்கெல்ஸ் கடிதப் போக்குவரத்து'', தொகுதி II, பக்கம் *290:* தொகுதி IV, பக்கம் *433.*—ப-ர்.).—K. Kautsky, *Sozialismus und Kolonial-politik*,

வெளியான இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைமை என்ற நூலின் இரண்டாவது பதிப்புக்கான முகவுரையில் இதே மாதிரியான கருத்துக்களை எங்கெல்ஸ் நூல் வடிவிலும் வெளியிட்டார்.)

காரணங்களையும் விளைவுகளையும் இது தெளிவாகக் காட்டுகிறது. காரணங்களாவன: 1) இந்நாட்டினால் அனைத்து உலகமும் சுரண்டப்படுதல்; 2) உலகச் சந்தையில் இந்நாட்டுக்குள்ள ஏகபோக நிலை; 3) இதனுடைய காலனி ஏகபோகம். விளைவுகளாவன: 1) பிரிட்டிஷ் பாட்டாளி வர்க்கத்தில் ஒரு பகுதி முதலாளித்துவமயமாகின்றது; 2) பாட்டாளி வர்க்கத்தில் ஒரு பகுதி, முதலாளித்துவ வர்க்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்ட, அல்லது எப்படியும் அதனால் ஊதியம் அளிக்கப்பட்டு வருகிற ஆட்களை தனக்குத் தலைமை தாங்க அனுமதிக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏகாதிபத்தியம், ஒரு சில அரசுகளுக்கிடையில் உலகம் பங்கிடப்பட்டுக் கொள்வதை நிறைவு பெறச் செய்தது; இந்த அரசுகளில் ஒவ்வொன்றும் ''அனைத்து உலகத்தின்'' ஒரு பகுதியை—இங்கிலாந்து 1858ல் சுரண்டிய பகுதியை விடச் சற்றே சிறியதானதை—இன்று சுரண்டுகிறது (மிகை லாபங்கள் பெறுகின்றது என்ற அர்த்தத்தில்); ஒவ்வொன்றும் டிரஸ்டுகள், கார்ட்டல்கள், நிதி மூலதனம், கடனளி-கடனீவோன் உறவுகள் ஆகியவை மூலம் உலகச் சந்தையில் ஏகபோக நிலை வகிக்கிறது; ஒவ்வொன்றும் ஓரளவுக்குக் காலனி ஏகபோகத்தை அனுபவிக்கிறது (அனைத்துக் காலனி உலகின் மொத்தப் பரப்பாகிய 7 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டரில் 6 கோடி 50 லட்சம் சதுர கிலோமீட்டர், அல்லது 86 சதவிகிதம், ஆறு வல்லரசுகளின் உடைமையாக இருப்பதையும், 6 கோடி 10 லட்சம் சதுர கிலோமீட்டர், அல்லது 81 சதவிகிதம் மூன்று வல்லரசுகளின் உடைமையாக இருப்பதையும் நாம் முன்பே கண்டோம்).

---

Berlin, 1907, பக்கம் 79 (கா. காவுத்ஸ்கி, ''சோஷலிசமும் காலனி அரசியலும்'', பெர்லின்.—ப-ர்.). தொன்னெடுங் காலத்துக்கு முன்பு காவுத்ஸ்கி இன்னும் மார்க்சியவாதியாகவே இருந்த போது, அவர் இச்சிறு நூலை எழுதினார்.

சந்தர்ப்பவாதத்துக்கும் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் பொதுவான, ஜீவாதார நலன்களுக்குமிடையே இணக்கத்துக்கு இடமில்லா ஒவ்வாமையை நிச்சயம் அதிகமாக்கும்படியான பொருளாதார, அரசியல் நிலைமைகள் இப்பொழுது மேலோங்குகின்றன — இதுவே இன்றைய சூழ்நிலையின் குணவிசேஷமாகும்: கரு நிலையிலிருந்து ஆதிக்கம் செலுத்தும் ஓர் அமைப்பாக ஏகாதிபத்தியம் வளர்ந்திருக்கிறது; தேசியப் பொருளாதாரத்திலும் அரசியலிலும் முதலாளித்துவ ஏகபோகங்கள் முதன்மை நிலை வகிக்கின்றன; உலகின் பங்கீடு நிறைவு பெற்றுவிட்டது; மறு புறத்தில் கிரேட் பிரிட்டனுடைய தனி ஏகபோகத்துக்குப் பதிலாக, இந்த ஏகபோகத்தில் பங்கு பெறும் உரிமைக்காகச் சில ஏகாதிபத்திய வல்லரசுகள் போரிட்டுக் கொண்டிருப்பதை காண்கிறோம்; இந்தப் போராட்டம், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி அனைத்துக்குமான குணாதிசயமாக இருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பாதியில் இங்கிலாந்தில் வெற்றி கண்டிருந்தது போல, சந்தர்ப்பவாதமானது பல பத்தாண்டுகளுக்கு ஒரு நாட்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இப்பொழுது முழுநிறை வெற்றி பெற முடியாது; ஆனால், பல நாடுகளில் அது பழுத்துக் கனிந்து அழுகிப் போயும் இருக்கிறது; சமூக-தேசியவெறி* வடிவில் முதலாளித்துவக் கொள்கையுடன் பூரணமாக ஒன்றுகலந்து விட்டது.

## 9. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம்

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனம் என்பதன் மூலம், இப்பதத்தின் விரிவான பொருளில், நாம் குறிப்பது

* ருஷ்ய சமூக-தேசியவெறி, பத்ரேசவ், சிஹென்கெலி, மாஸ்லவ் போன்றோரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வெளிப்படையான வடிவிலும், (சிஹெயீத்ஸே, ஸ்கோபெலெவ், அக்செல்ரோத், மார்த்தவ் முதலியோரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்) மறைமுகமான வடிவிலும், சந்தர்ப்பவாதத்தின் ருஷ்ய வகையான, கட்சிக் கலைப்புவாதத்திலிருந்து[21] தோன்றியதே.

சமுதாயத்தின் வெவ்வேறு வர்க்கங்களும் அவற்றின் பொது சித்தாந்தத்தின் தொடர்பாக ஏகாதிபத்தியக் கொள்கை குறித்து அனுசரிக்கும் போக்கு ஆகும்.

பிரம்மாண்டப் பரிமாணங்களில் நிதி மூலதனம் ஒரு சிலரது கைகளில் ஒன்றுகுவிந்து, அசாதாரணய் அடர்ந்தும் பரந்தும் வலைப்பின்னலாய் அமைந்த உறவுகளையும் தொடர்புகளையும் தோற்றுவித்து, ஒரு புறத்தில் சிறிய, நடுத்தர முதலாளிகளை மட்டுமின்றி, சின்னஞ் சிறு முதலாளிகளையும் கைவினை அதிபர்களையுங்கூட இந்த வலைப்பின்னலால் கீழ்ப் படியச் செய்துவிடுகிறது; மறு புறத்தில் உலகின் பங்கீட்டுக் காகவும் பிற நாடுகளின்மீது ஆதிக்கம் பெறுவதற்காகவும் ஏனைய தேசிய-அரசு நிதியதிபதிக் கோஷ்டிகளை எதிர்த்து மேலும் மேலும் உக்கிரமான போராட்டம் நடத்தப்படுகிறது—இவற்றின் காரணமாய்ச் சொத்துடைத்த வர்க்கங்கள் அனைத்தும் ஏகாதிபத்தியத்தின் தரப்புக்குச் சென்று விடுகின்றன. ஏகாதிபத்தியத்திற்குள்ள வருங்கால வாய்ப்புகள் பற்றிய ''பொதுவான'' உற்சாகம், வெறிகொண்டு அதை ஆதரித்து நிற்றல், கவர்ச்சியான வண்ணங்களில் அதைச் சித்திரித்துக் காட்டுதல்—இவை யெல்லாம் இக் காலத்தின் அறிகுறிகளாகும். ஏகாதிபத்தியச் சித்தாந்தம் தொழிலாளி வர்க்கத்துள்ளும் ஊடுருவுகிறது. தொழிலாளி வர்க்கம் சீனத்துச் சுவரால் பிற வர்க்கங்களிடமிருந்து பிரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை. ஜெர்மனியின் இன்றைய ''சமூக-ஜனநாயகக்'' கட்சி என்பதன் தலைவர்கள், ''சமூக-ஏகாதிபத்தியவாதிகள்'' என—அதாவது சொல்லில் சோஷலிஸ்டுகளும் செயலில் ஏகாதிபத்தியவாதிகளுமாவர் என—முழு நியாயத்துடன்தான் அழைக்கப்படுகிறார்கள்; ஆனால் 1902 லேயே, சந்தர்ப்பவாத ''ஃபேபியன் கழகத்தைச்''[22] சேர்ந்த ''ஃபேபியன் ஏகாதிபத்தியவாதிகள்'' இங்கிலாந்தில் இருந்ததை ஹாப்ஸன் குறிப்பிட்டார்.

முதலாளித்துவ அறிஞர்களும் கருத்துரையாளர்களும் வழக்கமாய் இலை மறைவு காய் மறைவான முறையில்தான் ஏகாதிபத்தியத்தை ஆதரித்து வாதாட முற்படுகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் பூரண ஆதிக்கத்தையும் ஆழமாய்ச்

செல்லும் அதன் வேர்களையும் அவர்கள் மூடி மறைக்கிறார்கள்; தனிப்பட்ட இரண்டாந்தரமான விவரங்களை முன்னிலையிலே கொண்டு வந்து நிறுத்த முயலுகிறார்கள்; டிரஸ்டுகளை அல்லது வங்கிகளை போலீஸ் மேற்பார்வை செய்தல் என்பது போன்ற முற்றிலும் நகைக்கத்தக்கவையான ''சீர்திருத்தத்'' திட்டங்களைக் கொண்டு அடிப்படையான அம்சங்களிலிருந்து கவனத்தைத் திசை திருப்புவதற்குத் தம்மால் இயன்றது அனைத்தும் செய்கிறார்கள். ஏகாதிபத்தியத்தின் அடிப்படைக் குணுதிசயங்களைச் சீர்திருத்தலாமென்ற கருத்து அபத்தமானதென்பதைத் தைரியமாக ஒப்புக்கொள்ளும் நெஞ்சழுத்தம் வாய்ந்த ஒளிவு மறைவற்ற ஏகாதிபத்தியவாதிகளை அரிதாகவே காண முடியும்.

இதோ ஓர் உதாரணம். **உலகப் பொருளாதார ஆவணங்கள்** என்னும் சஞ்சிகையில் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் காலனிகளில் நடைபெறும் தேசவிடுதலை இயக்கங்களைக் கவனிக்க முயலுகிறார்கள் (குறிப்பாக ஜெர்மனிக்குச் சொந்தமானவற்றைத் தவிர்த்து ஏனைய காலனிகளில் நடைபெறுகின்றவற்றையே கவனிக்க முயலுகிறார்கள் என்பதைக் கூறத் தேவையில்லை). இந்தியாவில் நடக்கும் கலவரத்தையும் கண்டன இயக்கங்களையும், நேட்டாலிலும் (தென் ஆப்பிரிக்கா), டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலும் பிற இடங்களிலும் நடைபெறும் இயக்கங்களையும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள். அன்னிய ஆட்சிக்கு உட்பட்ட ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய மக்களைச் சேர்ந்த பல்வேறு தேசங்கள், வருண இனங்களது பிரதிநிதிகள் 1910, ஜூன் 28-30ல் நடத்திய ஒரு மகாநாட்டைப் பற்றிய ஆங்கிலேயச் செய்தியறிக்கை குறித்துக் கருத்துரைக்கையில் இந்த ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளில் ஒருவர், இம்மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகளை மதிப்பீடு செய்து எழுதுவதாவது: ''நாம் ஏகாதிபத்தியத்துடன் போரிட வேண்டும்; அடிமைப்பட்ட மக்கள் சுதந்திரம் பெற உரிமையுடையவர்கள் என்பதை ஆளும் அரசுகள் அங்கீகரிக்க வேண்டும்; வல்லரசுகளுக்கும் பலவீன தேசத்தோருக்கும் இடையிலான உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதை சர்வதேச நீதிமன்றம் மேற்பார்வை செய்ய வேண்டும் என்

றெல்லாம் நமக்குக் கூறப்படுகிறது. இந்த ஆத்மார்த்திக விருப்பங்களை வெளியிடுவதற்கு மேல் இவர்கள் செல்லவில்லை. கீழ்க்கண்ட உண்மையை அவர்கள் புரிந்து கொண்டதற்கான ஓர் அறிகுறியையும் நாம் காணவில்லை: ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் தற்போதைய வடிவத்துடன் நீக்கமறப் பிணைந்திருக்கிறது; ஆகவே [!!] ஏகாதிபத்தியத்துக்கு எதிரான, பகிரங்கப் போராட்டத்தால் பயன் ஏதுமில்லை, குறிப்பிடத்தக்கவாறு அக்கிரமமான அதன் அடாத செயல்களாய் இருக்கும் சிலவற்றைக் கண்டிக்கலாமே தவிர அதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கில்லை.''* ஏகாதிபத்தியத்திற்கு அடிப்படையாய் இருப்பதைச் சீர்திருத்தம் செய்வதென்பது ஏமாற்றுகும், ஆத்மார்த்திக விருப்பமாகும் என்பதால், ஒடுக்கப்பட்ட தேசங்களின் முதலாளித்துவப் பிரதிநிதிகள் ''மேலும்'' முன்னே செல்லவில்லை என்பதால், ஒடுக்குகின்ற ஒரு தேசத்தின் முதலாளித்துவப் பிரதிநிதி ''மேலும்'' பின்னே செல்கிறார்—''விஞ்ஞான வழியில்'' செல்வதாகக் கூறிக் கொண்டு அந்தத் திரை மறைவில் ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாகிறார். இதுவும் ஒருவிதமான ''தர்க்க வாதம்தான்''!

ஏகாதிபத்தியத்தின் அடிப்படையாக இருப்பதைச் சீர்திருத்துவது சாத்தியம்தானு, அது தோற்றுவிக்கின்ற முரண்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துவதையும் ஆழமாக்குவதையும் நோக்கி முன்னே செல்வதா, அல்லது இம்முரண்பாடுகளைத் தணிப்பதை நோக்கிப் பின்னே செல்வதா என்ற கேள்விகள், ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விமர்சனத்தில் அடிப்படையான கேள்விகளாகும். நிதியாதிக்கக் கும்பலின் ஒடுக்குமுறையின் காரணமாகவும் தடையில்லாப் போட்டி அகற்றப்பட்டதன் காரணமாகவும் எங்கும் பிற்போக்கும் கூடுதலான தேசிய ஒடுக்குமுறையும்தான் ஏகாதிபத்தியத்தின் பிரத்தியேக அரசியல் இயல்புகளாக இருப்பதால்,

---

* *Weltwirtschaftliches Archiv*, Bd. II, பக்கம் 193 (''உலகப் பொருளாதாரத்தின் ஆவணங்கள்'', தொகுதி II.—ப-ர்.).

இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அனேகமாய் எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகக் குட்டிமுதலாளித்துவ-ஜனநாயக எதிர்த்தரப்பு ஒன்று எழுந்தது. அதன் பொருளாதார அடிப்படையில் மெய்யாகவே பிற்போக்கானதாகிய இந்தக் குட்டிமுதலாளித்துவச் சீர்திருத்தவாத எதிர்த்தரப்பினைக் காவுத்ஸ்கி எதிர்ப்பதற்கு முனையவும் இல்லை, எதிர்ப்பதற்கான திராணியும் அவரிடம் இல்லை என்பது மட்டுமின்றி, நடைமுறையில் அதனுடன் ஒன்றுசேர்ந்து கொண்டும் விட்டார். காவுத்ஸ்கியும், விரிந்தமைந்த சர்வதேசக் காவுத்ஸ்கிவாதப் போக்கும் மார்க்சியத்தைத் துறந்துவிட்டு ஓடியது இங்குதான் காணக்கிடக்கிறது.

1898ல் ஸ்பெயினுக்கு எதிரான ஏகாதிபத்திய யுத்தம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் கடைசி மோஹிகன்களான "ஏகாதிபத்திய-எதிர்ப்பாளர்களது" எதிர்ப்பைத் தூண்டியது. இவர்கள் இந்த யுத்தம் "கொடுங் குற்றமாகும்" என்று அறிவித்தனர், அன்னியப் பிரதேசங்களைக் கைப்பற்றுதல் அமெரிக்க அரசியல் சட்டத்துக்கு விரோதமாகுமெனக் கூறினர், பிலிப்பினோக்களின் தலைவரான ஆக்வினல்டோவிடம் நடந்து கொண்ட முறையானது (அவருடைய நாட்டுக்குச் சுதந்திரம் தருவதாக அமெரிக்கர்கள் வாக்களித்துவிட்டுப் பிற்பாடு துருப்புக்களை இறக்கி அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார்கள்) "தேசியவெறி கொண்ட துரோகச் செயலாகும்" என்று சொல்லி லிங்கனது சொற்களை மேற்கோளாய் எடுத்துரைத்தனர்: "வெள்ளை மனிதன் தன்னைத் தானே அரசாண்டு கொள்வானுகில் அது தன்னுட்சி, ஆனுல் அவன் தன்னைத் தானே அரசாண்டு கொண்டு ஏனையோரையும் அரசாளுவானுகில் அது எதேச்சாதிகாரமே அன்றி தன்னுட்சி அல்ல."* ஆனுல் இந்த விமர்சனம் எல்லாம், ஏகாதிபத்தியத்துக்கும் டிரஸ்டுக்குமிடையி

* J. Patouillet, *L'imperialisme américain*, Dijon, 1904, பக்கம் 272 (ஜெ. படுய்யே, "அமெரிக்க ஏகாதிபத்தியம்", டிஜோன்.—ப-ர்.).

லும், ஆகவே ஏகாதிபத்தியத்துக்கும் முதலாளித்துவ அடிப் படைகளுக்குமிடையிலும் இருக்கும் பிரிக்க முடியாத பிணைப்பைக் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிச் சென்ற வரை, பெருவீத முதலாளித்துவத்தாலும் அதன் வளர்ச்சியாலும் தோற்றுவிக்கப்பட்ட சக்திகளுடன் சேர்ந்து கொள்ளாமல் ஒதுங்கிச் சென்ற வரை, இது வெறும் ''ஆத்மார்த்திக விருப்பமாகவே'' இருந்து வந்தது.

ஹாப்ஸன் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய தமது விமர்சனத்தில் மேற்கொள்ளும் பிரதான நிலையையும் இதுவேதான். ''ஏகாதிபத்தியம் தவிர்க்க முடியாதது'' என்ற வாதத்தை எதிர்ப்பதிலும், மக்களது ''நுகர்வு ஆற்றலை அதிகமாக்குவது'' (முதலாளித்துவத்தின் கீழ்!) அவசியமென்று வலியுறுத்துவதிலும் காவுத்ஸ்கியை ஹாப்ஸன் முந்திக் கொண்டு விட்டார். ஏகாதிபத்தியத்தையும் வங்கிகளது சர்வ வல்லமையையும் நிதியாதிக்கக் கும்பலையும் இன்ன பிறவற்றையும் பற்றிய விமர்சனத்தில் வெளியாகும் இந்தக் குட்டிமுதலாளித்துவக் கருத்தோட்டத்தைத்தான் மேலே நான் அடிக்கடி மேற்காட்டியுள்ள ஆசிரியர்களான அகாட், ஆ. லன்ஸ்பர்க், ஹா. எஷ்வேகெ போன்றோரும், பிரெஞ்சு எழுத்தாளர்களில், 1900ல் வெளிவந்த **இங்கிலாந்தும் ஏகாதிபத்தியமும்** என்ற மேலெழுந்த வாரியான ஒரு புத்தகத்தின் ஆசிரியராகிய விக்டர் பேராரும் கொண்டுள்ளனர். இந்த ஆசிரியர்கள் தம்மை மார்க்சியவாதிகளாகக் கூறிக் கொள்கிறவர்கள் அல்லர், இவர்கள் ஏகாதிபத்தியமானது தடையில்லாப் போட்டிக்கும் ஜனநாயகத்துக்கும் எதிரானதாக இருப்பதை எடுத்துரைக்கிறார்கள், மோதல்களுக்கும் யுத்தத்துக்கும் வித்திடும் பாக்தாது ரயில் பாதைத் திட்டத்தைக் கண்டிக்கிறார்கள், சமாதானம் வேண்டுமென்ற ''ஆத்மார்த்திக விருப்பங்களையும்'' இன்ன பலவற்றையும் தெரிவிக்கிறார்கள். சர்வதேச வங்கிகள், பிணையங்களின் வெளியீடு பற்றிய புள்ளிவிவரங்களைத் தொகுத்திடும் அ. நெய்மார்க்குக்கும் இது பொருந்தும், ''சர்வதேசப்'' பிணையங்களாகிய நூறு கோடிக் கணக்கான பிராங்குகளைக் கணக்கிட்டுக் காட்டிவிட்டு 1912ல் இவர் வியந்து கூறினார்: ''சமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்கப்

படுமென.... இத்தகைய பெருந் தொகைகளின் முன்னல் எவரும் துணிந்து யுத்தத்தைத் துவக்குவாரென நம்ப முடியுமா?''*

முதலாளித்துவப் பொருளியலாளர்களின் இந்த அப்பாவித்தனம் வியப்புக்குரியதல்ல; தவிரவும் இப்படித் தாம் அறியாப் பிள்ளைகளாய் இருப்பது போலப் பாசாங்கு செய்வதும், ஏகாதிபத்தியத்தின் கீழ் சமாதானம் குறித்து ''கருத்தார்ந்த முறையில்'' பேசுவதும் அவர்களது நலன்களுக்கு ஏற்றவையே. ஆனல், காவுத்ஸ்கி *1914*லும் *1915*லும் *1916*லும் இந்த முதலாளித்துவ-சீர்திருத்தவாதக் கண்ணேட்டத்தை ஏற்றுக் கொண்டு சமாதானம் குறித்து ''எல்லோரும் உடன்பாடு கொண்டிருக்கிருர்கள்'' (ஏகாதிபத்தியவாதிகளும், போலி சோஷலிஸ்டுகளும், சமூக-அமைதிவாதிகளும்) என்று கூறுகையில் அவரது மார்க்சியத்தில் எஞ்சியிருப்பதுதான் என்ன? ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளைப் பகுத்து ஆராய்வதற்கும் அவற்றின் ஆழத்தை வெளிப்படுத்துவதற்கும் பதிலாக, அவற்றை ஒதுக்கிவிடுவதற்கும் தட்டிக்கழிப்பதற்குமான சீர்திருத்தவாத ''ஆத்மார்த்திக விருப்பத்தைத்தான்'' காண்கிறோம்.

ஏகாதிபத்தியத்தைப்பற்றி காவுத்ஸ்கியின் பொருளாதார விமர்சனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு இதோ இருக்கிறது. எகிப்துடன் பிரிட்டிஷ் ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தின் *1872*, *1912*ஆம் ஆண்டுப் புள்ளிவிவரங்களை அவர் எடுத்துக் கொள்கிருர்; பிரிட்டனுடைய வெளிநாட்டு வாணிபம் ஒட்டுமொத்தமாகக் கண்ட வளர்ச்சியைக் காட்டிலும் இந்த ஏற்றுமதி, இறக்குமதி வாணிபம் குறைவாகவே வளர்ந்திருக்கிறதாம். இதிலிருந்து காவுத்ஸ்கி முடிவு கட்டுகிருர்: ''இராணுவத்தைக் கொண்டு பிடிக்கப்படாமல் இருந்திருந்தால், வெறும் பொருளாதாரக் காரணக் கூறுகளது செயல்பாட்டினுலேயே எகிப்துடன் பிரிட்டிஷ் வர்த்தகத்தின் வளர்ச்சி குறை

* *Bulletin de l'institut internationale de statistique*, T. XIX, livr.II, p. 225 (''சர்வதேசப் புள்ளிவிவரக் கழகத்தின் அறிக்கை'', தொகுதி XIX, புத்தகம் II, பக்கம் *225*.—ப-ர்.)

வாக இருந்திருக்கும் என்று கொள்வதற்குக் காரணம் ஏதும் இல்லை''. ''விரிந்து பெருக மூலதனத்துக்குள்ள துடிப்பு... திருப்தி செய்யப்படுவதற்குச் சிறந்த வழி அமைதியான ஜனநாயகமே அன்றி ஏகாதிபத்தியத்தின் வன்முறை அல்ல.''*

காவுத்ஸ்கியின் இந்த வாதத்தை அவரது ருஷ்யச் சேவகரான, (மற்றும் சமூக-தேசியவெறியர்களது ருஷ்யக் காவலருமான) திரு. ஸ்பெக்தாத்தர் ஒவ்வொரு சுருதியிலும் திருப்பிப் பாடுகிறார். இந்த வாதம்தான் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய காவுத்ஸ்கிவாத விமர்சனத்தின் அடிப்படையாக அமைந்திருக்கிறது. எனவே இதை நாம் விவரமாக பரிசீலிக்க வேண்டும். ஹில்ஃபர்டிங்கின் முடிவுகள் ''எல்லா சோஷலிஸ்டுத் தத்துவவாதிகளாலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகக்'' காவுத்ஸ்கி பல சந்தர்ப்பங்களிலும், குறிப்பாக 1915 ஏப்ரலிலும் கூறியிருக்கிறார்; ஆகவே ஹில்ஃபர்டிங்கின் நூலிலிருந்து ஒரு மேற்கோளுடன் தொடங்குவோம்.

''மேலும் முன்னேற்றமான முதலாளித்துவக் கொள்கையினை தற்போது காலங் கடந்ததாகிவிட்ட தடையில்லா வாணிபத்துக்கும் அரசுடனை பகைமைக்குமாகிய சகாப்தத்தின் கொள்கையுடன் ஒப்பீடு செய்து காட்டுவது தொழிலாளி வர்க்கத்தின் வேலை அல்ல. நிதி மூலதனத்தின் பொருளாதாரக் கொள்கைக்கு, ஏகாதிபத்தியத்துக்குப் பாட்டாளி வர்க்கம் அளிக்கும் பதில் சோஷலிசமே தவிர தடையில்லா வாணிபமாக இருக்க முடியாது. பாட்டாளி வர்க்கக் கொள்கையின் நோக்கம் இன்று தடையில்லாப் போட்டியை மீட்டமைத்திடும் இலட்சியமாக இருக்க முடியாது—இப்போது இது பிற்போக்கான இலட்சியமாகிவிட்டது—முதலாளித்துவத்துக்கு முடிவு கட்டிப் போட்டியை அடியோடு அகற்று

---

* Kautsky, *Nationalstaat, imperialistischer Staat und Staatenbund*, Nürnberg, 1915, பக்கங்கள் 72, 70 (காவுத்ஸ்கி, ''தேசிய அரசு, ஏகாதிபத்திய அரசு, அரசுகளின் ஐக்கியம்'', நூரன்பர்க்.— ப-ர்.).

வதுதான் குறிக்கோளாக இருக்க முடியும்'' என்று எழுதுகிறார் ஹில்ஃபர்டிங்.*

நிதி மூலதனச் சகாப்தத்தில் ஒரு ''பிற்போக்கான குறிக்கோளை'', ''அமைதியான ஜனநாயகத்தை'', ''வெறும் பொருளாதாரக் காரணக் கூறுகளது செயற்பாட்டை'' ஆதரிப்பதன் மூலம் காவுத்ஸ்கி மார்க்சியத்திலிருந்து முறித்துக் கொண்டுவிட்டார்; ஏனெனில் இக்குறிக்கோள் புறநிலை நோக்கில் நம்மை ஏகபோக முதலாளித்துவத்திடமிருந்து ஏகபோகமில்லாத முதலாளித்துவத்துக்குப் பின்னேக்கி இழுத்துச் செல்கிறது; இது சீர்திருத்தவாத மோசடியே ஆகும்.

எகிப்துடன் (அல்லது எந்த ஒரு காலனி அல்லது அரைக் காலனியுடன்) வாணிபம், இராணுவத்தைக் கொண்டு பிடிக்காமலே, ஏகாதிபத்தியம் இல்லாமலே, நிதி மூலதனம் இல்லாமலே மேலும் அதிகமாக ''வளர்ந்திருக்க முடியும்''. இதற்கு என்ன பொருள்? பொதுவாக ஏகபோகங்களாலோ, நிதி மூலதனத்தின் ''தொடர்புகளாலோ'', நுகத்தடியாலோ (அதாவது, ஏகபோகத்தாலோ), அல்லது சில நாடுகள் காலனிகளின் ஏகபோக உடைமையாளனுய் இருப்பதாலோ, தடையில்லாப் போட்டி குறுகலாக்கப்படாமலிருந்தால் முதலாளித்துவம் இன்னும் துரிதமாக வளர்ச்சியடைந்திருக்கும் என்பதுதானே இதன் பொருள்?

காவுத்ஸ்கியின் வாதத்துக்கு வேறு எந்த அர்த்தமும் இருக்க முடியாது; இந்த ''அர்த்தம்'' அர்த்தமற்றதாகும். தடையில்லாப் போட்டி, எந்த விதமான ஏகபோகமும் இன்றி, முதலாளித்துவத்தையும் வாணிபத்தையும் இன்னும் துரிதமாக வளரச் செய்திருக்கலாம் என்பதாய் வைத்துக் கொள்வோம். ஆனல் வாணிபமும் முதலாளித்துவமும் எவ்வளவு துரிதமாக வளர்கின்றனவோ, உற்பத்தியின் ஒன்றுகுவிப்பும் மூலதன ஒன்றுகுவிப்பும் அவ்வளவு அதிகரித்து இந்த ஒன்றுகுவிப்பு ஏகபோகத்தைத் தோற்றுவிக்கிறது. ஏகபோகங்கள் ஏற்கெனவே எழுந்துள்ளன—தடையில்லாப் போட்டியிலிருந்தே தான் எழுந்துள்ளன! ஏகபோகங்கள்

* நிதி முலதனம், பக்கம் 567.

இப்பொழுது முன்னேற்றத்துக்குத் தடை போட ஆரம்பித்திருப்பினும், தடையில்லாப் போட்டிக்கு இது ஆதரவான வாதமாகிவிடவில்லை. ஏனெனில், தடையில்லாப் போட்டியானது ஏகபோகத்தைத் தோற்றுவித்தபின் இப்போட்டி சாத்தியமற்றதாகியுள்ளது.

காவுத்ஸ்கியின் வாதத்தை எந்தப் பக்கமாகத் திருப்பிப் பார்த்தாலும், அதில் பிற்போக்கையும் முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்தையும் தவிர வேறொன்றையும் காண்பதற்கில்லை.

இந்த வாதத்தைத் திருத்தி ஸ்பெக்தாத்தர் சொல்வது போல், காலனிகள் பிரிட்டனுடன் புரியும் வாணிபமானது ஏனைய நாடுகளுடன் அவை புரியும் வாணிபத்தைக் காட்டிலும் மெதுவாகவே இப்பொழுது வளருகிறது என்று கூறுவோமாயினுங்கூட, அப்போதும் காவுத்ஸ்கி காப்பாற்றப்பட்டுவிடவில்லை. ஏனெனில் கிரேட் பிரிட்டனைத் தோற்கடிப்பதும் ஏகபோகம்**தான்**, ஏகாதிபத்தியம்**தான்**—வேறொரு நாட்டின் (அமெரிக்கா, ஜெர்மனி) ஏகபோகமும் ஏகாதிபத்தியமும் அதைத் தோற்கடிக்கின்றன. கார்ட்டல்கள் ஒரு புதிய விசித்திரமான வடிவில் காப்புச் சுங்க வரிகளைத் தோற்றுவித்திருக்கின்றன என்பது தெரிந்ததே, அதாவது ஏற்றுமதிக்கு உகந்த பண்டங்களுக்குக் காப்பு அளிக்கப்படுகிறது (மூலதனம், தொகுதி 3ல் எங்கெல்ஸ் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்). கார்ட்டல்களும் நிதி மூலதனமும் தங்களுக்கே விசேஷமாக உரித்தான ஒரு முறையை, அதாவது, ''கழிவு செய்யப்பட்ட விலைகளுக்குப் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்'' முறையை, அல்லது ஆங்கிலேயர்கள் கூறுவது போல ''கொட்டிக் குவிக்கும்'' முறையை (dumping) கைக்கொள்கின்றன என்பதும் தெரிந்ததே: தனது நாட்டிற்குள் தனது பண்டங்களை உயர்ந்த ஏகபோக விலைக்கு விற்கிறது; ஆனால் வெளி நாடுகளில் போட்டியாளரைக் குறைந்த விலையால் வீழ்த்துவதற்காகவும் தனது உற்பத்தியை உச்சத்துக்குப் பெருகச் செய்வதற்காகவும் பிறவற்றுக்காகவும் தனது பண்டங்களை மிகக் குறைந்த விலைக்கு விற்கிறது. பிரிட்டிஷ் காலனிகளுடன் ஜெர்மனியின் வர்த்தகம் கிரேட் பிரிட்டனின்

வர்த்தகத்தைவிட துரிதமாக வளர்ச்சியடைகிறது என்ருல் ஜெர்மன் ஏகாதிபத்தியம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் காட்டிலும் இளையது, பலம் பொருந்தியது, நன்கு ஒழுங்கமைக்கப் பெற்றது, மேனிலையில் இருப்பது என்பதைத்தான் அது நிரூபிக்கிறதே ஒழிய, எவ்வகையிலும் தடையில்லா வாணிபத்தின் ''மேனிலையை'' நிரூபிக்கவில்லை. ஏனெனில் போர் நடைபெறுவது தடையில்லா வாணிபத்துக்கும் காப்புக்கும் காலனிச் சார்புநிலைக்கும் இடையிலல்ல; போட்டியிடும் இரு ஏகாதிபத்தியங்களுக்கிடையே, இருஏகபோகங்களுக்கிடையே, நிதி மூலதனத்தின் இரு கோஷ்டிகளிடையே நடைபெறும் போராகும் இது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குமேல் ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குள்ள மேனிலை, காலனி எல்லைகளாலாகிய அல்லது காப்பு வரிகளாலாகிய தடைமதில்களைக் காட்டிலும் அதிக வலிமை வாய்ந்தாக இருக்கிறது. இதைப் போய்த் தடையில்லா வாணிபத்துக்கும் ''அமைதியான ஜனநாயகத்துக்கும்'' சாதகமான ஒரு ''வாதமாகக்'' கொள்வது உப்புச்சப்பற்றதாகும், ஏகாதிபத்தியத்தினுடைய சாராம்ச இயல்புகளையும் குணுதிசயங்களையும் மறந்து விடுவதும், மார்க்சியத்துக்குப் பதிலாகக் குட்டிமுதலாளித்துவச் சீர்திருத்தவாதத்தைக் கைக்கொள்வதும் ஆகும்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றி முதலாளித்துவப் பொருளியலாளர் ஆ. லன்ஸ்பர்க் செய்துள்ள விமர்சனம், காவுத்ஸ்கியினுடையதைப் போலவே குட்டிமுதலாளித்துவத் தன்மையதாகவே இருப்பினும், காவுத்ஸ்கியைவிட அவர் வாணிபப் புள்ளிவிவரங்களை அதிக அளவுக்கு விஞ்ஞான வழியில் ஆராய்வதை நோக்கி நெருங்கிச் சென்றுள்ளது கவனிக்கத்தக்கதாகும். குருட்டாம்போக்கில் எடுக்கப்பட்ட ஒரேயொரு நாட்டையும் ஒரேயொரு காலனியையும் பிற நாடுகளுடன் அவர் ஒப்பிடவில்லை; ஓர் ஏகாதிபத்திய நாடு, 1) நிதித் துறையில் அதைச் சார்ந்துள்ளவையும் அதனிடமிருந்து கடன் வாங்குகிறவையுமான நாடுகளுடனும், 2) நிதித் துறையில் சுயேச்சையான நாடுகளுடனும் நடத்தும் ஏற்றுமதி வாணிபத்தை அவர் பரிசீலனை செய்தார். அதிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகளைப் பெற்ருர்:

ஜெர்மனியின் ஏற்றுமதி வாணிபம்
(பத்து லட்சம் மார்க்குகள்)

| | | 1889 | 1908 | சதவிகித வளர்ச்சி |
|---|---|---|---|---|
| நிதித் துறையில் ஜெர்மனியைச் சார்ந்துள்ள நாடுகளுடன் | ருமேனியா . . | 48.2 | 70.8 | +47% |
| | போர்த்துகல் . . | 19.0 | 32.8 | +73% |
| | ஆர்ஜென்டீனு . . | 60.7 | 147.0 | +143% |
| | பிரேஸில் . . . | 48.7 | 84.5 | +73% |
| | சிலி . . . . | 28.3 | 52.4 | +85% |
| | துருக்கி . . . | 29.9 | 64.0 | +114% |
| | மொத்தம் . . . | 234.8 | 451.5 | +92% |
| நிதித் துறையில் ஜெர்மனியிடமிருந்து சுயேச்சையான நாடுகளுடன் | கிரேட் பிரிட்டன் | 651.8 | 997.4 | +53% |
| | பிரான்ஸ் . . | 210.2 | 437.9 | +108% |
| | பெல்ஜியம் . . | 137.2 | 322.8 | +135% |
| | ஸ்விட்சர்லாந்து | 177.4 | 401.1 | +127% |
| | ஆஸ்திரேலியா . . | 21.2 | 64.5 | +205% |
| | டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் | 8.8 | 40.7 | +363% |
| | மொத்தம் . . . | 1,206.6 | 2,264.4 | +87% |

இதிலிருந்து லன்ஸ்பர்க் முடிவுகளை வந்தடையவில்லை; ஆகவே, தமது புள்ளிவிவரங்கள் நிருபிப்பது எதாவது இருந்தால், தமது கருத்து சரியல்ல என்பதே அதுவென்பதைக் கண்டு கொள்ள விபரீதமாகத் தவறிவிடுகிறுர். ஏனெனில் நிதித் துறையில் ஜெர்மனியைச் சார்ந்துள்ள நாடுகளுக்கான ஏற்றுமதியானது, நிதித் துறையில் சுயேச்சையான நாடுகளுக்கான ஏற்றுமதியைவிடத் துரிதமாக—சற்றேதான் என்றுலும்—வளர்ந்திருக்கின்றது (லன்ஸ்பர்க்கின் புள்ளிவிவரங்

கள் சற்றும் முழுமையாய் இல்லையாதலால், ''ஏதாவது இருந் தால்'' என்பதை நான் அழுத்தி வலியுறுத்துகிறேன்).

ஏற்றுமதிகளுக்கும் கடன்களுக்குமிடையிலான தொடர்பை ஆராய்ந்து லன்ஸ்பர்க் எழுதுவதாவது:

''1890-91ல் ருமேனியக் கடன் ஒன்று, முந்திய ஆண்டு களில் ஏற்கெனவே அதன் பேரில் முன்பணங்கள் கொடுத் திருந்த ஜெர்மானிய வங்கிகள் மூலமாகத் திரட்டப்பட்டது. ஜெர்மனியில் முக்கியமாக ரயில்வேத் தளவாடங்கள் வாங்கு வதற்காக இக்கடன் செலவிடப்பட்டது. 1891ல் ருமேனியா வுக்கு ஜெர்மன் ஏற்றுமதிகளின் மதிப்பு 5 கோடி 50 லட்சம் மார்க்குகளாக இருந்தது. அடுத்த ஆண்டில் இந்த ஏற்றுமதி கள் 3 கோடி 94 லட்சம் மார்க்குகளாகக் குறைந்து போயின; பிறகு ஏறியும் இறங்கியும் சென்று 1900ல் 2 கோடி 54 லட்சமாகக் குறைந்தன. அண்மை ஆண்டுகளில்தான், இரண்டு புதிய கடன்களின் விளைவாக, இந்த ஏற்றுமதிகள் 1891ம் ஆண்டின் அளவைத் திரும்பவும் எட்டிப் பிடித்தன.

''1888-89ம் ஆண்டின் கடன்களைத் தொடர்ந்து, போர்த் துகலுக்கு ஜெர்மன் ஏற்றுமதிகள் 2 கோடி 11 லட்சமாக (1890ல்) உயர்ந்தன; அடுத்த இரண்டு ஆண்டுகளில் 1 கோடி 62 லட்சமாகவும் 74 லட்சமாகவும் குறைந்து போயின; 1903ல்தான் அவை முந்தைய அளவை வந்தடைந்தன.

''ஆர்ஜென்டீனாவுடன் ஜெர்மன் வாணிபத்தின் புள்ளி விவரங்கள் மேலும் பளிச்சென புலப்படுத்துகின்றவை. 1888லும் 1890லும் கடன்கள் திரட்டப்பட்டன; ஆர்ஜென் டீனாவுக்கு ஜெர்மன் ஏற்றுமதிகள் 6 கோடி 7 லட்சம் மார்கு களை எட்டின (1889). இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவை 1 கோடி 86 லட்சம் மார்க்குகளாகிவிட்டன; இது முந்தைய தொகையைவிட மூன்றில் ஒரு பங்கு குறைவானது. 1901ல் தான், இவை 1889ம் ஆண்டின் அளவை மீண்டும் எட்டி அதைத் தாண்டி மேலே செல்ல முடிந்தது; அரசாங்கத்தா லும் நகராண்மைக் கழகங்களாலும் புதிய கடன்கள் திரட்டப்பட்டு, மின்விசை நிலையங்கள் கட்டுவதற்காக முன் தொகைகள் அளிக்கப்பட்டதாலும் ஏனைய கடன் செலாவணி நடவடிக்கைகளாலும்தான் இது சாத்தியமாகியது.

''1889ஆம் ஆண்டின் கடனின் விளைவாக, சிலிக்கு ஏற்றுமதிகள் 4 கோடி 52 லட்சம் மார்க்குகளாக (1892ல்) உயர்ந்தன; ஓர் ஆண்டுக்குப் பிறகு இவை 2 கோடி 25 லட்சம் மார்க்குகளாகக் குறைந்தன. 1906ல் ஜெர்மன் வங்கிகள் சிலிக்குத் திரட்டிய புதிய கடனைத் தொடர்ந்து ஏற்றுமதிகள் 8 கோடி 47 லட்சம் மார்க்குகளாக (1907ல்) உயர்ந்தன; 1908ல் 5 கோடி 24 லட்சம் மார்க்குகளாக மீண்டும் வீழ்ச்சியடைந்தன.''*

இந்த விவரங்களிலிருந்து லன்ஸ்பர்க் வேடிக்கையான குட்டிமுதலாளித்துவ நீதிநெறியை வந்தடைகிறார்: கடன்களுடன் இணைக்கப்பட்ட ஏற்றுமதி வாணிபம் எவ்வளவு நிலையற்றதாகவும் ஒழுங்குமுறை இல்லாததாகவும் ஆகிவிடுகிறது, உள்நாட்டுத் தொழில் துறையை ''இயற்கையாகவும்'', ''இசைவாகவும்'' வளர்ப்பதற்குப் பதிலாக மூலதனத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்வது எவ்வளவு கேடானது, கடன்களைத் திரட்டும்போது குருப் கோடிக் கணக்கில் இனும் கைப்பணம் தர வேண்டியிருப்பது எவ்வளவு பெரிய ''செலவாகிவிடுகிறது'' என்றும் இன்ன பலவாறுகவும் கூறுகிறார். ஆனால் மேற்கண்ட உண்மைகள் தெளிவாகவே நமக்குக் கூறுகின்றன: ஏற்றுமதியின் வளர்ச்சி நிதி மூலதனத்தின் இந்த ஏமாற்று வித்தைகளுடன்தான் இணைக்கப்பட்டுள்ளது; நிதி மூலதனத்துக்கு முதலாளித்துவ நீதிநெறி குறித்துக் கவலையில்லை, அதன் நாட்டமெல்லாம் ஒன்றுக்கு இரண்டு தரம் காளையிடமிருந்து தோலுரித்து எடுக்கலாம் என்பது தான்—முதலில், கடனிலிருந்து வரும் லாபங்களை அது மூட்டை கட்டுகிறது; பிறகு குருப்பிடமிருந்து பண்டங்கள் வாங்கவோ, எஃகு சிண்டிக்கேட்டிலிருந்து ரயில்வேத் தளவாடங்கள் வாங்கவோ இன்ன பிறவற்றுக்கோ கடனாளி இதே கடன் தொகையை உபயோகிக்கும்போது கிடைக்கும் பிற லாபங்களையும் மூட்டை கட்டுகிறது.

லன்ஸ்பர்கின் புள்ளிவிவரங்கள் முழுமையானவை என்று நாம் கருதவில்லை என்பதை மீண்டும் கூறுகிறோம்; ஆயினும்

---

* *Die Bank*, 1909, 2, பக்கம் 819உம் அடுத்த பக்கங்களும்.

இவை காவுத்ஸ்கி, ஸ்பெக்தாத்தர் ஆகியோரது புள்ளிவிவரங்களைவிட அதிக அளவுக்கு விஞ்ஞான வழியில் அமைந்தவை என்பதாலும், பிரச்சினையை அணுகுவதற்குச் சரியான வழியை லன்ஸ்பர்க் சுட்டிக்காட்டுகிறார் என்பதாலும் நாம் இவற்றை இங்கு எடுத்துரைத்தோம். ஏற்றுமதிகளும் பிறவும் சம்பந்தமாய் நிதி மூலதனத்தின் உட்பொருள் முக்கியத்துவத்தை விவாதிக்கையில், முக்கியமாகவும் தனியேயும் நிதியாளர்களின் தந்திரங்களுடனும், முக்கியமாகவும் தனியேயும் கார்ட்டல்களின் பண்ட விற்பனையுடனும், இன்ன பிறவற்றுடனும் ஏற்றுமதிகளுக்குள்ள இணைப்பினைத் தனிப்பட புலப்படுத்திக் காட்டும் திறனுடையவராய் இருக்க வேண்டும். பொதுவாகக் காலனிகளைக் காலனியல்லாத நாடுகளோடும், ஓர் ஏகாதிபத்தியத்தைப் பிறிதொன்றோடும், ஓர் அரைக் காலனியை அல்லது காலனியை (எகிப்து) ஏனைய எல்லா நாடுகளோடும் வெறுமனே ஒப்பிடுவது பிரச்சினையின் சாராம்சத்தையே தட்டிக் கழிப்பதும், மூடி மறைப்பதுமே ஆகும்.

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய காவுத்ஸ்கியின் தத்துவார்த்த விமர்சனத்துக்கும் மார்க்சியத்துக்கும் பொதுவானது ஏதும் இல்லை. சந்தர்ப்பவாதிகளுடனும் சமூக-தேசிய வெறியர்களுடனும் சமாதானமும் ஒற்றுமையும் காண்பதற்கான பிரசாரத்துக்குப் பீடிகையாவதற்கே இவ்விமர்சனம் ஏற்றது; ஏனென்றால் இது ஏகாதிபத்தியத்தினுடைய மிகவும் ஆழமான, அடிப்படையான முரண்பாடுகளை தட்டிக் கழிக்கிறது, மூடி மறைக்கிறது: ஏகபோகத்துக்கும் அதன் கூடவே இருந்துவரும் தடையில்லாப் போட்டிக்குமிடையிலுள்ள முரண்பாடு; நிதி மூலதனத்தின் பிரம்மாண்ட ''செயற்பாடுகளுக்கும்'' (பிரம்மாண்ட லாபங்களுக்கும்) தடையில்லாச் சந்தையிலான ''நேர்மையான'' வாணிபத்துக்கும் இடையிலான முரண்பாடு; ஒரு பக்கம் கார்ட்டல்களும், டிரஸ்டுகளுமானவற்றுக்கும் மறு பக்கம் கார்ட்டல்மயமாகாத தொழிலுக்கும் இடையிலான முரண்பாடு முதலானவை.

காவுத்ஸ்கியால் புனையப்பட்ட ''அதீத-ஏகாதிபத்தியம்'' என்ற அபகீர்த்தி வாய்ந்த தத்துவமும் இதே போல் பிற்

போக்கானதுதான். இப்பொருள் குறித்து 1915லான அவரது வாதங்களை 1902லான ஹாப்சனின் வாதங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

காவுத்ஸ்கி: ''...தேசிய நிதி மூலதனங்களுக்கிடையிலான பரஸ்பரப் போட்டிகளுக்குப் பதிலாக, சர்வதேச அளவில் ஐக்கியப்பட்ட நிதி மூலதனம் கூட்டு முறையில் உலகைச் சுரண்டுவதற்குரிய ஏற்பாட்டைப் புகுத்தும் புதிய, அதீத-ஏகாதிபத்தியக் கொள்கையால் இன்றைய ஏகாதிபத்தியக் கொள்கை அகற்றப்பட முடியாதா? முதலாளித்துவத்தின் இம்மாதிரியான ஒரு புதிய கட்டம் எப்படியும் கருதத் தக்கதே ஆகும்.இதைச் சாதிக்க முடியுமா?இக்கேள்விக்குப் பதில் சொல்வதற்குப் போதுமான முதற்கோள்கள் இன்னும் வரப் பெற்றுகவில்லை.''*

ஹாப்ஸன்: ''ஒவ்வொன்றும் நாகரிக வளர்ச்சியில்லாத வரிசையாகப் பல காலனிகளையும் சார்பு நாடுகளையும் கொண்ட சில பெரிய கூட்டாட்சி சாம்ராஜ்யங்களாக கிறுத்துவ உலகம் அமைந்திருப்பதுதான்... இன்றையப் போக்குகளின் மிகவும் நியாயமான வளர்ச்சியாகவும், அகில-ஏகாதிபத்தியம் [interimperialism] என்ற உறுதியான அடிப்படையில் நிரந்தரமான சமாதானத்துக்கு யாவற்றிலும் நம்பிக்கையளிக்கும் வளர்ச்சியாகவும் பலருக்குத் தோன்றுகிறது.''

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னுல் ஹாப்ஸன் எதை இன்டர்-இம்பீரியலிசம் அதாவது அகில-ஏகாதிபத்தியம் அல்லது பரஸ்பர-ஏகாதிபத்தியம் என்பதாகக் கூறினுரோ, அதையே அல்ட்ரா-இம்பீரியலிசம் அதாவது அதீத-ஏகாதிபத்தியம் அல்லது மிகை-ஏகாதிபத்தியம் என்கிருர் காவுத்ஸ்கி. சொல்லின் ஒரு லத்தீன முன்னடைக்குப் பதிலாக இன்னென்றைக் கையாண்டு சாமர்த்தியமாய் ஒரு புதிய பதத்தை உருவாக்கியுள்ளார் என்பதைத் தவிர, ''விஞ்ஞான வழியிலான'' சிந்தனைத் துறையில் காவுத்ஸ்கி கண்டிருக்கும் முன்னேற்றம் எல்லாம், சாராம்சத்தில் ஆங்கிலேயப் பாதிரிமார்களது பகட்டுரையாக முன்பு ஹாப்ஸன் எடுத்துரைத்த

---

* *Die Neue Zeit*, ஏப்ரல் 30, 1915, பக்கம் 144.

தை இவர் மார்க்சியமாய் அளித்திடுகிருர் என்பதுதான். ஆங்கில-போயர் யுத்தத்துக்குப் பிறகு இந்த மாண்புமிக்க பாதிரி மார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தென் ஆப்பிரிக்கப் போர்க்களங்களில் பல உறவினர்களை இழந்தோரும் பிரிட்டிஷ் நிதியாளர்களுக்கு இன்னும் அதிகமான லாபங்களை உத்தரவாதம் செய்வதற்காக மேலும் அதிக அளவில் வரிகள் கட்டும்படி நிர்ப்பந்திக்கப்பட்டோருமான பிரிட்டிஷ் மத்திய வர்க்கத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் **மன ஆறுதல்** அளிப்பதற்காகப் பெரு முயற்சி செய்ய வேண்டியிருந்தது இயற்கையே. ஏகாதிபத்தியம் அப்படி ஒன்றும் மோசமானதல்ல, நிரந்தர சமாதானத்துக்கு வகை செய்யும்படியான அகில- (அல்லது அதீத-) ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் நெருங்கியதான ஒன்றே அது என்னும் தத்துவத்தைவிட மனத்துக்கு ஆறுதல் அளிக்கக் கூடியது வேறு என்ன இருக்க முடியும்? ஆங்கிலேயப் பாதிரிமார்கள், அல்லது உணர்ச்சிப் பசப்பு வாய்ந்த காவுத்ஸ்கி எவ்வளவுதான் நல்ல எண்ணங்கள் கொண்டவர்களாக இருப்பினும், காவுத்ஸ்கியின் ''தத்துவத்தினுடைய'' எதார்த்தப் புறநிலை உட்பொருள், அதாவது உண்மையான, சமுதாய உட்பொருள் இதுதான்: தற்காலத்தின் தீவிர முரண்பாடுகளிலிருந்தும், கடும் பிரச்சினைகளிலிருந்தும் பெருந்திரள் மக்களது கவனத்தைத் திசை திருப்பி, அதை வருங்காலத்தில் கற்பனையான ''அதீத-ஏகாதிபத்தியம்'' என்பதாக ஒன்று எழப் போவது பற்றிய மாய் மாலத்தின் பால் திரும்பச் செய்வதன் மூலம் முதலாளித்துவத்தில் நிரந்தர சமாதானம் சாத்தியமே என்பதாக நம்ப வைத்து இம்மக்கள் பெருந்திரளினருக்கு மன ஆறுதல் அளிப்பதற்கு மிகவும் பிற்போக்கான ஒரு முயற்சியே ஆகும். மக்கள் பெருந்திரளினரை ஏமாற்ற வேண்டும்—காவுத்ஸ்கியின் ''மார்க்சியத்'' தத்துவத்தில் உள்ளடங்கியிருப்பது இதுவேதான்.

மறுக்க முடியாத பிரசித்த உண்மைகளை ஒப்பிட்டுப் பார்த்தாலே போதும், ஜெர்மன் தொழிலாளர்களுக்கு முன்னுல் (மற்றும் எல்லா நாடுகளின் தொழிலாளர்களுக்கு முன்னுலும்) காவுத்ஸ்கி மாயமாய் உதித்தெழச் செய்ய முயற்சிக்

கும் வருங்கால வாய்ப்புகள் முழுக்க முழுக்க பொய்யானவை என்பது சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாகிவிடும். இந்தியாவையும் இந்தோ-சீனுவையும் சீனுவையும் எடுத்துக் கொள்வோம். அறுபது அல்லது எழுபது கோடி மக்களைக் கொண்ட இந்த மூன்று காலனி, அரைக் காலனி நாடுகளும் பல ஏகாதிபத்திய வல்லரசுகளினுடைய—கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு முதலான பலவற்றின் — நிதி மூலதனத்தால் சுரண்டப்படுகின்றன என்பது தெரிந்ததுதான். இந்த ஆசிய நாடுகளில் தங்களது உடைமைகளையும் நலன்களையும் ''செல்வாக்கு மண்டலங் களையும்'' பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லது மேலும் விரிவாக்கிக் கொள்வதற்காக இந்த ஏகாதிபத்திய நாடுகள் தமக்கிடையே கூட்டணிகளை நிறுவிக் கொள்வதாக வைத்துக் கொள்வோம்; இந்தக் கூட்டணிகள் ''அகில-ஏகாதிபத்திய'', அல்லது ''அதீத-ஏகாதிபத்தியக்'' கூட்டணிகளாகவே இருக்கும். ஆசியாவின் இந்தப் பகுதிகளைச் ''சமாதான முறை யில்'' பங்கிட்டுக் கொள்வதற்காக **எல்லா** ஏகாதிபத்திய நாடுகளும் ஒரு கூட்டணி அமைத்துக் கொள்வதாக வைத்துக் கொள்வோம்; இந்தக் கூட்டணி ''சர்வதேச அள வில் ஒன்றுபட்ட நிதி மூலதனத்தின்'' கூட்டணியாகவே இருக்கும். இருபதாம் நூற்ருண்டின் வரலாற்றில் இம்மா திரியான கூட்டணிக்குக் கண்கூடான உதாரணங்கள் இருக் கின்றன — சீனுவின் பால் இவ்வல்லரசுகளது போக்கை[23] உதாரணமாகக் கூறலாம். முதலாளித்துவ அமைப்பு அப்படி யே இருப்பதாக வைத்துக் கொள்வோமாயின் (இதே அனு மானத்தைத்தான் காவுத்ஸ்கி செய்து கொள்கிருர்), இம்மா திரியான கூட்டணிகள் தாற்காலிகக் கூட்டணிகளாகவே அன்றி வேறு எதுவாகவும் இருக்கக் கூடியவை என்ருே, சாத்தியமான எல்ல விதமான பூசல்களையும் மோதல்களையும் போராட்டத் தையும் அகற்றிவிடுமென்ருே ''நினைக்கவும்'' முடியுமா என்று கேட்கிருேம்.

இந்தக் கேள்வியைத் தெளிவான முறையில் எழுப்பி னுலே போதும், எதிர்மறைப் பதிலைத் தவிர வேறு எதுவும் சாத்தியமற்றதாகிவிடும். காரணம் என்னவென்ருல், செல்

வாக்கு மண்டலங்கள், நலன்கள், காலனிகள் முதலானவற்றின் பங்கீட்டுக்கு முதலாளித்துவத்தில் சாத்தியமான ஒரேயொரு அடிப்படை பங்கு கொள்வோரின் வலிமை பற்றிய, அவர்களது பொதுவான பொருளாதார, நிதித் துறை, இராணுவ வலிமை முதலானவை பற்றிய கணக்கீடுதான். இந்தப் பங்கீட்டில் பங்கு கொள்வோரின் பலம் சமமான அளவில் மாறுவதில்லே; ஏனெனில் வெவ்வேறு நிறுவனங்கள், டிரஸ்டுகள், தொழிற் கிளேகள் அல்லது நாடுகளின் ஏற்றத்தாழ்வற்ற வளர்ச்சி முதலாளித்துவத்தில் சாத்தியமன்று. அரை நூற்ருண்டுக்கு முன்பு ஜெர்மனியானது, அதன் முதலாளித்துவ வலிமையை அக்காலத்திய பிரிட்டனுடையதுடன் ஒப்பிடுகையில், பரிதாபத்துக்குரியதாய், புறக்கணிக்கத்தக்க நாடாய் இருந்தது; ருஷ்யாவுடன் ஒப்பிடுகையில் அன்று ஜப்பானும் இதே விதமானதாகவே இருந்தது. பத்து அல்லது இருபது ஆண்டுக் காலத்தில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஒப்புநிலே வலிமை மாற்றமின்றி அப்படியே இருந்திருக்குமென ''நினேக்கவும்'' முடியுமா? முடியவே முடியாது.

ஆகவே முதலாளித்துவ அமைப்பின் எதார்த்த நிலேவரங்களில்—ஆங்கிலேயப் பாதிரிமார்கள் அல்லது ஜெர்மன் ''மார்க்சியவாதி'' காவுத்ஸ்கியின் சாரமற்ற அற்பவாத கற்பனேகளில் அல்ல—''அகில-ஏகாதிபத்திய'' அல்லது ''அதீத-ஏகாதிபத்தியக்'' கூட்டணிகள், அவை எந்த வடிவத்தில் அமைந்தவையாயினும், ஒரு ஏகாதிபத்திய கூட்டணிக்கு எதிரான இன்னெரு ஏகாதிபத்தியக் கூட்டணியாக இருந்தாலும் சரி, அல்லது எல்லா ஏகாதிபத்திய அரசுகளேயும் கொண்ட பொதுவான கூட்டணியாக இருந்தாலும் சரி, யுத்தங்களுக்கு இடையிலான காலங்களுக்குரிய ''போர்நிறுத்த உடன்பாடுகளாகவே'' தவிர்க்க முடியாதபடி இருக்குமே அன்றி வேறல்ல. சமாதானக் கூட்டணிகள் யுத்தங்களுக்கு அடி கோலுகின்றன; அவையும் இந்த யுத்தங்களிலிருந்தே உதித்தெழுகின்றன. ஒன்று மற்றென்றை நெறிப்படுத்துகிறது, உலகப் பொருளாதாரத்திலும் உலக அரசியலிலும் நிலவும் ஏகாதிபத்தியத் தொடர்புகள், உறவுகள் என்ற ஒரே அடிப்படையிலிருந்து சமாதான வழியிலும் சமாதான

மல்லாத வழியிலுமான போராட்ட வடிவங்களை மாறி மாறித் தோற்றுவிக்கின்றது. ஆனால் தொழிலாளர்களைச் சாத்விகப்படுத்துவதற்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குத் துறந்தோடிவிட்ட சமூக-தேசியவெறியர்களுடன் அவர்களை இணக்கங் கொள்ளச் செய்வதற்காகவும் மெத்தப் பெரிய மேதாவியாகிய காவுத்ஸ்கி ஒரே சங்கிலித் தொடரிலிருந்து ஒரு கரணையை மற்றொன்றிலிருந்து **தனியே பிரித்தெடுக்கிறார்;** சீனாவை "அமைதிப்படுத்துவதற்காக" (பாக்ஸர் எழுச்சி[24] ஒடுக்கப்பட்டதை நினைவு கூருங்கள்) **எல்லா வல்லரசுகளும்** சேர்ந்து இன்று ஏற்படுத்தியிருக்கிற சமாதான (மற்றும் அதீத-ஏகாதிபத்திய, இல்லை, அதீத-அதீத-ஏகாதிபத்தியக்) கூட்டணியை, நாளைக்கு நடக்கப் போகும் சமாதான மல்லாத மோதலிலிருந்து பிரித்திடுகிறார். இந்த மோதலானது நாளைக்கு மறுநாள் வேறொரு நாட்டை—உதாரணமாகத் துருக்கியை—பங்கிடுவதற்கான மற்றொரு "சமாதானப்" பொதுக் கூட்டணியைத் தோற்றுவிக்கும், இப்படியே **தொடர்ந்து நடைபெறும்.** ஏகாதிபத்தியச் சமாதானக் காலங்களுக்கும், ஏகாதிபத்தியப் போர்க் காலங்களுக்கும் இடையிலான உயிர்த் தொடர்பைக் காட்டுவதற்குப் பதிலாக, தொழிலாளர்களை அவர்களது உயிரற்ற தலைவர்களுடன் இணக்கம் கொள்ளச் செய்வதற்காகக் காவுத்ஸ்கி இத்தொழிலாளர்களுக்கு உயிரற்ற ஒரு கற்பனையை அளிக்கின்றார்.

ஐரோப்பாவின் சர்வதேச வளர்ச்சியில் அரசுத்தந்திரத்தின் **வரலாறு** என்ற நூலில் அமெரிக்க எழுத்தாளர் ஹில் அரசுத்தந்திரத்தின் அண்மைக் காலத்திய வரலாற்றில் கீழ்க் கண்ட காலகட்டங்களைப்பற்றித் தமது முகவுரையில் குறிப்பிடுகிறார்: 1) புரட்சி சகாப்தம்: 2) அரசியலமைப்புச் சட்ட இயக்கம்; 3) இன்றைய சகாப்தமாகிய "வாணிப ஏகாதிபத்தியம்".* வேறொரு எழுத்தாளர், 1870க்குப் பின் கிரேட் பிரிட்டனது "உலகக் கொள்கையின்" வரலாற்றை நான்கு

* David Jayne Hill, *A History of the Diplomacy in the International Development of Europe*, Vol. I, p. X (டேவிட் ஜெய்ன் ஹில்,"ஐரோப்பாவின் சர்வதேச வளர்ச்சியில் அரசுத்தந்திரத்தின் வரலாறு", தொகுதி 1, பக்கம் X.—ப-ர்.).

காலகட்டங்களாகப் பிரிக்கிறார்: 1) முதல் ஆசியக் காலகட்டம் (மத்திய ஆசியாவில் இந்தியாவை நோக்கிய ருஷ்யாவின் முன்னேற்றத்துக்கு எதிரான போராட்டத்தின் காலம்; 2) ஆப்பிரிக்கக் காலகட்டம்(ஏறத்தாழ1885—1902)—ஆப்பிரிக்காவைப் பங்கிட்டுக் கொள்வதற்காக பிரான்சுடன் போராடிய காலம் (1898ல் ''ஃபஷோடா சம்பவம்''[25] பிரிட்டனை பிரான்சுடன் போர் தொடங்கிவிடும் நிலைக்கு அனேகமாய் வந்துவிடும்படிச் செய்தது); 3) இரண்டாவது ஆசியக் காலகட்டம் (ருஷ்யாவுக்கெதிராக ஜப்பானோடு கூட்டணி); 4)''ஐரோப்பியக்'' காலகட்டம்—பிரதானமாக ஜெர்மனிக்கு எதிரானது.* ''அரசியல் ரோந்துப் படை மோதல்கள் நிதித் துறையில் நடைபெற்று வருகின்றன'' என்று வங்கியதிபர் ரீசர் 1905ல் எழுதினார். இத்தாலியில் செயல்படும் பிரெஞ்சு நிதி மூலதனம் இந்நாடுகளின் அரசியல் கூட்டணிக்கு எப்படிப் பாதையைச் செப்பனிடுகிறதென்றும், பாரசீகம் சம்பந்தமாய் ஜெர்மனிக்கும் கிரேட் பிரிட்டனுக்குமிடையிலும் சீனக் கடன்கள் குறித்து எல்லா ஐரோப்பிய முதலாளிகளிடையிலும் எப்படி மோதல் வளர்கிறதென்றும் இன்ன பிறவற்றையும் அவர் எடுத்துரைத்தார். பிரிக்க முடியாதபடி சாதாரண ஏகாதிபத்திய மோதல்களுடன் இணைந்து பிணைந்த சமாதான ''அதீத-ஏகாதிபத்தியக்'' கூட்டணிகளது உயிர் நிலை எதார்த்தத்தைப் பாருங்கள்!

ஏகாதிபத்தியத்தின் மிகவும் ஆழமான முரண்பாடுகளைக் காவுத்ஸ்கி மூடி மறைப்பதானது, தவிர்க்க முடியாதபடி ஏகாதிபத்தியத்தைப் பளிச்சிடும் வண்ணங்களில் தீட்டுவதாய் முடிவுறும் இது, ஏகாதிபத்தியத்தின் அரசியல் இயல்புகளைப் பற்றிய இந்த எழுத்தாளரின் விமர்சனத்திலும் தனது சுவடுகளைப் பதித்துச் செல்கிறது. ஏகாதிபத்தியமானது சுதந்திரத்துக்கான முயற்சியை அல்ல, ஆதிக்கத்துக்கான முயற்சியையே எங்கும் புகுத்திடும் நிதி மூலதனத்துக்கும் ஏகபோகங்களுக்கும் உரித்தான சகாப்தமாகும். அரசியல் அமைப்பு எதுவாய் இருப்பினும் இந்தப் போக்குகளால் ஏற்

---

* Schilder, முன் குறிப்பிட்ட நூல், பக்கம் 178.

படும் விளைவு எங்கும் பிற்போக்கும், இத்துறையில் பகைமைகள் மிதமிஞ்சிக் கடுமையாவதும்தான். தேசிய ஒடுக்குமுறையும் பிரதேசக் கைப்பற்றல்களுக்கான முயற்சியும், அதாவது தேச சுதந்திரத்தை மிதிப்பதும் (ஏனெனில் பிரதேசக் கைப்பற்றலானது தேசங்களின் சுய நிர்ணய உரிமையை நசுக்குவதே ஆகும்)குறிப்பிடத்தக்கவாறு தீவிரமடைகின்றன. ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய ஒடுக்குமுறை கடுமையாகிவிடுவதற்கும் இடையிலுள்ள தொடர்பினை ஹில்ஃபர்டிங் சரியானபடி எடுத்துரைக்கிறுர்: ''புதிதாகத் திறக்கப்பட்ட நாடுகளில், இறக்குமதி செய்யப்படும் மூலதனம் பகைமைகளைத் தீவிரப்படுத்துகிறது; தேசிய உணர்வு பெற்று விழித்தெழும் மக்களிடையே வெளியிலிருந்து வந்து நுழைவோருக்கு எதிராய் மேன்மேலும் கூடுதலான எதிர்ப்பினைத் தூண்டிவிடுகிறது. இவர்களது எதிர்ப்பு, அன்னிய மூலதனத்துக்கு அபாயம் விளைவிக்கும் நடவடிக்கைகளாக எளிதில் வளர்ந்துவிடக் கூடும். பழைய சமூக உறவுகள் முற்றும் புரட்சிகரமாய் மாற்றம் பெறுகின்றன, ''வரலாற்றுக்குப் புறத்தமைந்த தேசங்களது'' விவசாயத் தன்மையதான தொன்னெடுங் காலத் தனிமைப்பாடு ஒழிக்கப்பட்டு முதலாளித்துவச் சூறுவளியினுள் அவை இழுக்கப்படுகின்றன. அடிமைப்பட்ட மக்கள் விடுதலையடைவதற்கான சாதனங்களையும் வகைதுறைகளையும் முதலாளித்துவமே படிப்படியாக அவர்களுக்கு அளிக்கிறது. ஒரு காலத்தில் ஐரோப்பிய தேசங்களுக்கு மிகவும் உயர்ந்ததாகத் தோன்றிய இலக்கை அடைய, பொருளாதார, கலாசார சுதந்திரம் அடைவதற்குரிய சாதனமாக ஐக்கிய தேசிய அரசு ஒன்றை உருவாக்கும் இலக்கை அடைய அவர்கள் முற்படுகிறுர்கள். தேச சுதந்திரத்துக்கான இந்த இயக்கம் ஐரோப்பிய மூலதனத்தை உயர் மதிப்புக்கும் வளமான வாய்ப்புக்குமுரிய அதன் சுரண்டல் துறைகளில் அச்சுறுத்துகிறது. ஆகவே ஐரோப்பிய மூலதனம் தனது ராணுவப் படைகளைத் தொடர்ந்து அதிகமாக்கிச் சென்ருல்தான் அதனுல் தனது ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.''*

* நிதி மூலதனம், பக்கம் 487.

இத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது என்ன வெனில், புதிதாகத் திறக்கப்பட்ட நாடுகளில் மட்டுமின்றி, பழைய நாடுகளிலுங்கூட ஏகாதிபத்தியமானது பிரதேசக் கைப்பற்றலுக்கும், கூடுதலான தேசிய ஒடுக்குமுறைக்கும், இதன் விளைவாகக் கூடுதலான எதிர்ப்புக்கும் இட்டுச் செல் கிறது. ஏகாதிபத்தியத்தால் அரசியல் பிற்போக்கு கடுமை யாவதை ஆட்சேபிக்கும் அதே சமயத்தில், காவுத்ஸ்கி மிகவும் அவசரமான ஒரு பிரச்சினையை, அதாவது ஏகாதிபத் திய சகாப்தத்தில் சந்தர்ப்பவாதிகளுடன் ஒற்றுமை சாத்திய மல்ல என்ற பிரச்சினையை ஒதுக்கி வைத்துவிடுகிறார். பிர தேசக் கைப்பற்றல்களை ஆட்சேபிக்கும் அதே சமயத்தில், அவர் தமது ஆட்சேபணைகளைச் சந்தர்ப்பவாதிகளுக்கு மிக வும் ஏற்புடைத்ததும் அதிகமாய் மனத்தாங்கல் உண்டாக் காததுமான வடிவில் வகுத்தளிக்கிறார். ஜெர்மன் வாசகர் களுக்காக அவர் எழுதுகிறார், ஆயினும் இன்று இவர்களுக்கு மிகவும் கவனத்துக்குரிய முக்கிய விவகாரத்தை, உதாரண மாக ஆல்சேஸ்-லோரைன் ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட தை அவர் மூடி மறைக்கிறார். காவுத்ஸ்கியின் இந்தப்''புத்தி தடுமாற்றம்'' எத்தன்மையது என்று மதிப்பீடு செய்வதற் காகப் பின்வரும் உதாரணத்தைக் குறிப்பிடுகிறேன். அமெ ரிக்கர்கள் பிலிப்பைன் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டதை ஜப்பானியர் ஒருவர் கண்டனம் செய்வதாக வைத்துக் கொள்வோம். இங்கு எழும் கேள்வி என்னவென்றால், அவர் கண்டனம் செய்வதற்குக் காரணம் பிரதேசக் கைப்பற்றலை அவர் வெறுக்கிறார் என்பதே ஒழிய, பிலிப்பைன் தீவுகளைத் தாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்ற விருப்பமல்ல வென பலராலும் நம்ப முடியுமா? கொரியாவை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டதை இந்த ஜப்பானியர் எதிர்த்துப் போராடி, கொரியா ஜப்பானிலிருந்து பிரிந்து செல்ல அதற்குச் சுதந்திரமளிக்க வேண்டுமென வற்புறுத்தினால்தான், பிரதேசக் கைப்பற்றல்களை எதிர்த்து அவர் ''போராடுவது'' உள்ளப்பூர்வமானதென்றும் அரசியல் நேர்மை வாய்ந்த தென்றும் கருத முடியுமெனச் சொல்வோம் அல்லவா?

ஏகாதிபத்தியத்தைப் பற்றிய காவுத்ஸ்கியின் தத்துவார்த்தப் பகுத்தாய்வும், ஏகாதிபத்தியத்தைப் பற்றிய அவருடைய பொருளாதார, அரசியல் விமர்சனமும் ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முரண்பாடுகளை மூடிமறைத்து மெருகிடுவதும், ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்துடனை ஒற்றுமையை, தகர்ந்துவரும் இந்த ஒற்றுமையைப் பழுதின்றி எப்படியேனும் பாதுகாப்பதுமாகிய, மார்க்சியத்துக்கு சிறிதும் ஒவ்வாத மனப்பாங்கில் முழுக்க முழுக்க ஊறியதாகும்.

## 10. வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடம்

அதன் பொருளாதார சாராம்சத்தில் ஏகாதிபத்தியமானது ஏகபோக முதலாளித்துவமே ஆகுமெனக் கண்டோம். இதுவேதான் வரலாற்றில் ஏகாதிபத்தியத்தின் இடத்தை நிர்ணயிக்கிறது. ஏனெனில் தடையில்லாப் போட்டியின் விளைநிலத்திலிருந்து, கருராகத் தடையில்லாப் போட்டியிலிருந்தே உதித்தெழும் ஏகபோகமானது முதலாளித்துவ அமைப்பிலிருந்து மேலும் உயர்ந்ததொரு சமூகப் பொருளாதார அமைப்புக்கு மாறிச் செல்வதற்கான இடைநிலையாகும். ஏகபோகத்தின் நான்கு பிரதான வகைகளில் அல்லது ஏகபோக முதலாளித்துவத்தின் நான்கு பிரதான வெளிப்பாடுகளில் நாம் பரிசீலிக்கும் இச்சகாப்தத்தின் குணுதிசயங்களாக விளங்கும் இவற்றில் நாம் தனிப்பட கருத்து செலுத்தியாக வேண்டும்.

முதலாவதாக, உற்பத்தியின் ஒன்றுகுவிப்பினது மிக உயர்ந்த கட்டத்தில் ஏகபோகம் உருவாகியெழுந்தது. இது ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகள், கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. இன்றைய பொருளாதார வாழ்வில் இவை ஆற்றும் முக்கியமான பாத்திரத்தை நாம் ஏற்கெனவே கண்டோம். முன்னேறிய நாடுகளில் ஏகபோகங்கள் இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திற்குள் முழுநிறைத் தலைமை ஆதிக்கம் பெற்றுவிட்டன. உயர்ந்த சுங்க வரிகளின் பாதுகாப்பைக் கொண்

டிருந்த நாடுகளில்தான் (ஜெர்மனி, அமெரிக்கா) கார்ட்டல் களை அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன என்ற போதிலும், தடையில்லா வாணிப அமைப் பைக் கொண்டிருந்த கிரேட் பிரிட்டனிலும், சற்றுப் பிற் பாடுதான் என்ருலும், இதே அடிப்படை நிகழ்வு, அதாவது உற்பத்தியின் ஒன்றுகுவிப்பிலிருந்து ஏகபோகம் உருவாகி யெழுதல் நடந்தேறியது.

இரண்டாவதாக, மூலப் பொருள்களின், முக்கியமாய் முதலாளித்துவ சமுதாயத்தில் வெகுவாய் கார்ட்டல்மயமாக் கப்பட்ட அடிப்படைத் தொழில்களாகிய நிலக்கரி, இரும்புத் தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களின் மிக முக்கிய ஆதாரங்கள் கைப்பற்றப்படுவதற்கு ஏகபோகங்கள் தூண்டுதல் அளித்துள்ளன. மூலப் பொருள்களின் மிக முக்கிய ஆதாரங்களிலான ஏகபோகமானது பெரு மூலதனத் தின் அதிகாரத்தை அளவின்றி அதிகரிக்கச் செய்திருக்கிறது, கார்ட்டல்மயமாகிவிட்ட தொழிலுக்கும், கார்ட்டல்மயமா காத தொழிலுக்குமிடையே பகைமையைக் கூர்மையாக்கி இருக்கிறது.

மூன்ருவதாக, ஏகபோகமானது வங்கிகளிடமிருந்து உதித்தெழுந்திருக்கிறது. வங்கிகள் எளிய இடைநிலைத் தரகு நிலையங்களாக இருந்த நிலையிலிருந்து வளர்ந்து நிதி மூலதன ஏகபோகங்களாகிவிட்டன. முதன்மையான முதலாளித்துவ நாடுகள் ஒவ்வொன்றிலும் மூன்றிலிருந்து ஐந்து வரையிலான மிகப் பெரிய வங்கிகள், தொழில் துறை மூலதனத்துக்கும் வங்கி மூலதனத்துக்குமிடையில் ''நேரடி ஆள் வடிவிலான ஒன்றிணைப்பை'' அமைத்துக் கொண்டு, நாடு அனைத்துக்கு மான மூலதனத்திலும் வருவாயிலும் பெரும் பகுதியான நூறு கோடியிலும் ஆயிரங் கோடியிலுமான தொகைகளைத் தங்கள் பிடிக்குள் கொண்டு ஒன்றுகுவியச் செய்துவிட்டன. இன்றைய முதலாளித்துவச் சமுதாயத்தில் விதிவிலக்கின்றி எல்லாப் பொருளாதார, அரசியல் நிறுவனங்களையும் சார்பு நிலை உறவுகளாலாகிய நெருக்கமான வலைப்பின்னலுக்குள் இருத்திவிடும் நிதியாதிக்கக் கும்பல்தான் இந்த ஏகபோகத் தின் மிகவும் எடுப்பான வெளிப்பாடாய் விளங்குகிறது.

நான்காவதாக, ஏகபோகம் காலனியாதிக்கக் கொள்கையிலிருந்து வளர்ந்தெழுந்திருக்கிறது. காலனியாதிக்கக் கொள்கைக்குரிய மிகப் பல ''பழைய'' நோக்கங்களுடன்கூட நிதி மூலதனமானது மூலப் பொருள்களின் ஆதாரங்களுக்கும் மூலதன ஏற்றுமதிக்கும் ''செல்வாக்கு மண்டலங்களுக்கு'' மான போராட்டத்தையும், அதாவது லாபகரமான பேரங்கள், சலுகைகள், ஏகபோக லாபங்கள் முதலானவற்றுக்குரிய மண்டலங்களுக்கும் பொதுவாகப் பொருளாதாரப் பிரதேசங்களுக்குமான போராட்டத்தையும் சேர்த்திருக்கிறது. ஐரோப்பிய அரசுகளுடைய காலனிகள், உதாரணமாக ஆப்பிரிக்காவின் பரப்பில் பத்தில் ஒரு பங்கே ஆனவையாக இருந்த போது (1876ல் இப்படித்தான் இருந்தது) ஏகபோக முறை அல்லாத பிற முறைகளில்—''தடையின்றிக் கபளீகரம் செய்தல்'' மூலம் என்பதாகக் கூறலாம்—காலனியாதிக்கக் கொள்கை வளர முடிந்தது. ஆனல் ஆப்பிரிக்காவில் பத்தில் ஒன்பது பகுதி பிடிக்கப்பட்டுவிட்டபின் (1900க்குள் இது நடைபெற்று முடிந்துவிட்டது), அனைத்து உலகமும் பங்கிடப்பட்டு விட்டபின், காலனிகளில் ஏகபோக உடைமைக்கும், ஆகவே உலகின் பங்கீட்டுக்கும் மறு பங்கீட்டுக்குமாகிய மிகவும் கடுமையான போராட்டத்துக்குமான சகாப்தம் தவிர்க்க முடியாதபடி ஆரம்பமாகியது.

முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளையும் ஏகபோக முதலாளித்துவம் எந்த அளவுக்குத் தீவிரப்படுத்தியிருக்கிறது என்பது பொதுவாகத் தெரிந்ததே. உயர்ந்த வாழ்க்கைச் செலவையும், கார்ட்டல்களின் கொடுங்கோன்மையையும் குறிப்பிட்டாலே போதும். முரண்பாடுகளது இந்தக் கடுந் தீவிரம்தான் வரலாற்றின் இந்த இடைக்கால கட்டத்தின், உலக நிதி மூலதனம் இறுதி வெற்றி கண்டதும் ஆரம்பமாகிய இந்த இடைக்கால கட்டத்தின் மிகவும் சக்திவாய்ந்த உந்து விசையாகச் செயல்பட்டு வருகிறது.

ஏகபோகங்கள், ஆதிக்கக் கும்பல், சுதந்திரத்திற்காக அல்லாமல் ஆதிக்கத்துக்கான முயற்சிகள், ஒருசில மிகுந்த செல்வந்த அல்லது மிகுந்த வலிமையான தேசங்கள் மேலும் மேலும் கூடுதலாகிச் செல்லும் சிறிய அல்லது பலவீன

தேசங்களைச் சுரண்டுதல்—இவை எல்லாம், ஏகாதிபத்தியத்தின் தனிப்பட்ட குணுதிசயங்களை—புல்லுருவித்தனமான அல்லது அழுகிவரும் முதலாளித்துவமாக ஏகாதிபத்தியத்துக்கு இலக்கணம் கூறும்படி நம்மை நிர்ப்பந்திக்கும் அந்த குணுதிசயங்களை—தோற்றுவித்திருக்கின்றன. ''பண மூலதன சுகஜீவிகளது அரசு'', கடுவட்டி மூலதன அரசு, மேலும் மேலும் அதிகமான அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மூலதனத்திலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டும் ''சீட்டுக் கத்தரித்தும்'' வாழும் முதலாளித்துவ வர்க்கத்துக்கான அரசு உருவாக்கப்படுவது ஏகாதிபத்தியத்தின் போக்குகளில் ஒன்ருக மேன்மேலும் முன்னிலைக்கு வருகிறது. இந்த அழுகல் போக்கு முதலாளித்துவத்தின் துரிதமான வளர்ச்சிக்கு இடமில்லாதபடிச் செய்வதாகக் கருதுவது தவருகும். இந்தப் போக்கு அப்படி ஒன்றும் செய்யவில்லை. ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் சிற்சில தொழிற் கிளைகளும், முதலாளித்துவ வர்க்கத்தின் சிற்சில படிவத்தினரும், சிற்சில நாடுகளும் அதிகமாகவோ குறைவாகவோ இத்தகைய போக்குகளில் இப்பொழுது ஒன்றையும் பிறகு இன்னென்றையுமாய் வெளிப்படுத்துகின்றன. ஒட்டுமொத்தமாக முதலாளித்துவம் முன்னிலும் விரைவாகவே வளர்ந்து கொண்டிருக்கிறது; ஆனுல் இந்த வளர்ச்சி பொதுவாக மேலும் மேலும் ஏற்றத்தாழ்வானதாகி வருகிறது என்பது மட்டுமின்றி, மூலதனத்தில் மிகவும் செல்வந்த நாடாக இருப்பனவற்றின் (இங்கிலாந்தில்) அழுகலில் இந்த ஏற்றத்தாழ்வான வளர்ச்சி குறிப்பிடத்தக்கவாறு வெளிப்பட்டும் வருகிறது.

ஜெர்மனியின் பொருளாதார வளர்ச்சியினது வேகம் குறித்து, பெரிய ஜெர்மன் வங்கிகளைப் பற்றிய நூலின் ஆசிரியராகிய ரீசர் கூறுகிருர்: ''முந்தையகாலகட்டத்திலான *(1848—1870)* வளர்ச்சி—அது ஒன்றும் அவ்வளவு மெதுவாக இருந்துவிடவில்லை—இக்காலகட்டத்தில் *(1870—1905)* ஜெர்மனியின் பொருளாதாரம் முழுவதும் அதனுடன்கூட ஜெர்மன் வங்கித் தொழிலும் கண்டிருக்கும் வளர்ச்சியின் வேகத்துடன் ஒப்பிடப்படுகையில் இந்த விகிதம், பழங்காலத்துத் தபால் கோச்சு வண்டியின் வேகம் இன்றைய

மோட்டார் காரின்வேகத்துடன்ஒப்பிடப்படுகையில் கிடைக்கும் விகிதத்துக்கு ஏறத்தாழ சமமானதாகும்... இன்றைய மோட்டார் கார் அதன் பாதையில் செல்லும் பழிபாவமறியாத பாதசாரிகளுக்கு மட்டுமின்றி, காரினுள் அமர்ந்திருப்போருக்குங்கூட ஆபத்து உண்டாகும்படி அப்படி தலைதெறிக்கும் வேகத்தில் விரைந்தோடுகிறது.'' இப்படி மிதமிஞ்சிய வேகத்தில் வளர்ந்திருக்கும் இந்த நிதி மூலதனம், இவ்வளவு சடுதியில் வளர்ந்துவிட்டதன் காரணத்தினலேயே, அதிக அளவுக்குச் செல்வந்த நாடுகளாக இருப்பவற்றிடமிருந்து சமாதான வழிகளில் மட்டுமின்றி பிற வழிகளிலும் கைப்பற்ற வேண்டியிருக்கும் காலனிகளை மேலும் ''அமைதியாய்'' உடைமை கொண்டிருக்கும் நிலைக்கு மாறிச் செல்ல விருப்பமற்றதாக இருக்கவில்லை. கடந்த சில பத்தாண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டில் பொருளாதார வளர்ச்சியானது ஜெர்மனியில் இருந்ததைக் காட்டிலுங்கூட அதிக வேகமானதாய் இருந்துள்ளது. இக்காரணத்தினலேயே நவீன அமெரிக்க முதலாளித்துவத்தின் புல்லுருவி இயல்புகள் குறிப்பான அளவுக்கு எடுப்பாய்த் தெரியும்படி மேலோங்கியிருக்கின்றன. மறு புறத்தில், குடியரசுவாத அமெரிக்க முதலாளித்துவ வர்க்கத்தையும் முடியரசுவாத ஜப்பானின் அல்லது ஜெர்மனியின் முதலாளித்துவ வர்க்கத்தையும் உதாரணமாய் எடுத்துக் கொண்டு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், மிகவும் எடுப்பான அரசியல் வேறுபாடு ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் மிகப் பெரும் அளவுக்குக் குறுகிச் சிறுத்துவிட்டதென்பது தெரிய வருகிறது; இதற்குக் காரணம் இந்த வேறுபாடு பொதுவாக முக்கியமல்லாதது என்பது அல்ல, இந்த எல்லா நாடுகளிலும் திட்டவட்டமான புல்லுருவித்தன இயல்புகளைப் பெற்றுவிட்ட முதலாளித்துவ வர்க்கம் குறித்துப் பேசுகிறோம் என்பதே இதற்குக் காரணம்.

பல தொழிற் கிளைகளில் ஒன்றில், பல நாடுகளில் ஒன்றில், அல்லது இன்ன பலவற்றில் ஒன்றில் முதலாளிகள் உயர்ந்த ஏகபோக லாபங்கள் பெறுவதானது, லஞ்சம் கொடுத்துத் தொழிலாளர்களில் சில பிரிவினரை, சிறிது காலத்துக்கு அவர்களில் சற்று கணிசமான சிறுபான்மையினரைக் கவர்ந்து,

மற்றெல்லார்க்கும் எதிராகக் குறிப்பிட்ட தொழிலின் அல்லது குறிப்பிட்ட நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்தினரது தரப்புக்கு வந்துவிடும்படி இழுத்துக் கொள்வதை அம் முதலாளிகளுக்குப் பொருளாதார வழியில் சாத்தியமான தாக்குகிறது. உலகின் பங்கீட்டுக்காக ஏகாதிபத்திய தேசங்களுக்கிடையே பகைமைகள் கடுமையாவதானது இந்த வேட்கையை அதிகமாக்குகிறது. ஏகாதிபத்தியத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்குமிடையே இருந்து வரும் பந்தம் இவ்வாறுதான் உண்டாக்கப்படுகிறது. முதலாவதாகவும் மிகவும் தெளிவாகவும் கிரேட் பிரிட்டனில் இந்தப் பந்தம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது; ஏனைய நாடுகளைக் காட்டிலும் மிகவும் முன்னதாகவே பிரிட்டனில் ஏகாதிபத்திய வளர்ச்சியின் சில இயல்புகள் கண்கூடாகியதே இதற்குக் காரணம். ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் இருந்து வரும் சந்தர்ப்பவாதத்துக்குமிடையிலான இந்தத் தொடர்பினை—தற்போது குறிப்பான அளவுக்கு அப்பட்டமானதாகிவிட்ட இதை—சில எழுத்தாளர்கள் (உதாரணமாய் எல். மார்த்தவ்) ஒதுக்கித் தள்ளிவிட முனைகிறார்கள்; இதன் பொருட்டு இவர்கள் பின்வருவது போன்ற ''அதிகார பூர்வமான நன்னம்பிக்கையை'' (காவுத்ஸ்கி, ஹியூயிஸ்மன்ஸ் பாணியில்) வெளியிடுகிறார்கள்: சந்தர்ப்பவாதம் அதிகரிக்க நேர்ந்திருப்பதற்கு முற்போக்கான முதலாளித்துவமே காரணமெனில், அல்லது சிறந்த ஊதியத்துக்குரிய தொழிலாளர்கள்தான் சந்தர்ப்பவாதத்தின் பக்கம் சாய்கிறார்களெனில், முதலாளித்துவத்தை எதிர்ப்போரின் இலட்சியம் நம்பிக்கைக்கு இடமில்லாததாகிவிடும் என்பதாகவும் இன்னபலவாறுகவும் கூறுதல். இந்த மாதிரியான ''நன்னம்பிக்கை'' குறித்து நமக்கு எவ்விதமான பிரமைகளும் இருக்கலாகாது. இது சந்தர்ப்பவாதத்தைப் பற்றிய நன்னம்பிக்கையாகும், சந்தர்ப்பவாதத்தை மூடிமறைப்பதற்குத் துணை புரியும் நன்னம்பிக்கையாகும். உண்மையில் பார்க்கப் போனால், சந்தர்ப்பவாத வளர்ச்சியின் இந்த அபார வேகமும், வெகுவாய் அருவருக்கத்தக்கதான தன்மையும் அதன் வெற்றி நிலையானது என்பதற்கான உத்தரவாதமாக எவ்விதத்திலும்

அமைந்துவிடவில்லை. ஆரோக்கியமான உடலில் வேதனைக்குரிய சீழ்க்கட்டி வளரும் வேகம் துரிதமடைவதானது இன்னும் சீக்கிரமாகவே அந்தக் கட்டியை உடைய வைத்து உடலை நலமடையச் செய்யும். சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்திருந்தாலொழிய, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம் வெறும் பாசாங்கும் ஏமாற்றுமே ஆகுமென்பதைப் புரிந்து கொள்ள விரும்பாதவர்கள் இந்த விவகாரத்தில் யாவரையும் விட மிகவும் அபாயகரமானவர்கள்.

இந்தப் புத்தகத்தில் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாரம் குறித்து கூறப்பட்டிருப்பவை யாவற்றிலிருந்தும் பெறப்படுவது இதுதான்: ஏகாதிபத்தியத்தை மாற்றத்துக்குரிய இடைக்கால முதலாளித்துவமாக, அல்லது இன்னும் துல்லியமாய் அந்திமக் கால முதலாளித்துவமாக நிர்ணயம் செய்தாக வேண்டும். நவீன முதலாளித்துவத்தை விவரிக்கையில் முதலாளித்துவப் பொருளியலாளர்கள், ''பின்னிப் பிணைதல்'', ''தனிமை நீக்கம்'' என்பன போன்ற பதப் பிரயோகங்களையும் தொடர்களையும் அடிக்கடி கையாளுவதைக் குறிப்பிடுவது இங்கு விளக்கம் தருவதாய் இருக்கும்; ''தமது பணிகளுக்கும் வளர்ச்சிப் போக்குக்கும் ஏற்ப'' வங்கிகள் ''முற்றிலும் தனியார்-தொழில் நிறுவனங்களாக இருக்கவில்லை, முற்றும் தனியார்-தொழில் ஒழுங்கியக்கத்துக்கான அரங்கைக் கடந்து மேலும் மேலும் வளர்ந்து செல்கின்றன''. யாரிடமிருந்து இங்கு நான் மேற்கோள் தந்துள்ளேனே அதே ரீசர் ''சமுதாயமயமாதல்'' குறித்து மார்க்சியவாதிகள் ''வருவது அறிவிக்கும் முறையில் கூறியது'' ''மெய்ப்பிக்கப்பட்டாகவில்லை'' என்று மிகவும் கருத்தார்ந்த முறையில் சொல்கிறார்!

அப்படியானால், ''பின்னிப் பிணைதல்'' என்பதான இந்தக் குறித் தொடர் குறிப்பது என்னவாம்? நம் கண் முன்னால் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்கின் மிகவும் முனைப்பான இயல்பைத்தான் இது குறிப்பிடுகிறது. பார்வையாளர் தனித்தனி மரங்களைப் பார்த்து எண்ணிக் கணக்கிடுகிறார், இம்மரங்கள் எல்லாமாகச் சேர்ந்து காடாக அமைவதைக் கவனிக்கத் தவறிவிடுகிறார் என்பதையே இது காட்டுகிறது.

மேம்போக்கானதையும் தற்செயலானதையும் குழப்படியானதையும் அப்படியே அடிமைப் புத்தியுடன் எடுத்துரைத்துக் காப்பியடிப்பதே ஆகும் இது. பார்வையாளர் பெருந் திரளான மூல விவரப் பொருள்கள் தம்மை மூழ்க்கடிக்கும்படிச் செய்து விடுகிருர், அவற்றின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் கண்டுணரும் திறன் அறவே இல்லாதவர் என்பதையே அது வெளிப்படுத்துகிறது. பங்குகளிலான உடைமைகள், தனிச் சொத்து உடைமையாளர்களுக்கு இடையிலான உறவுகள் ''தற்செயலான முறையில் பின்னிப் பிணைந்து கொள்கின்றன''. ஆனல் இந்தப் பின்னலுக்கும் பிணைவுக்கும் அடிநிலையாய் இருப்பவை—அதன் அடிப்படையாக அமைந்தவை—மாறிச் செல்லும் சமூக உற்பத்தி உறவுகளாகும். ஒரு பெரிய தொழில் நிலையமானது பிரம்மாண்டமான பரிமாணங்களுடையதாகி, பெருந்திரளான புள்ளிவிவரங்களைத் துல்லியமாகக் கணிப்பதன் அடிப்படையில், கோடிக்கணக்கான மக்களுக்குத் தேவையான முழு அளவில் மூன்றில் இரண்டு அல்லது முக்கால் பங்காகிய பிரதான மூலப் பொருள்களை வழங்கும் பணியினை திட்டத்தின் பிரகாரம் ஒழுங்கமைத்திடுகையில்; இந்த மூலப் பொருள்கள் மிக்கப் பொருத்தமான உற்பத்தி இடங்களுக்கு, சில சமயங்களில் ஒன்றிலிருந்து ஒன்று நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலுமான மைல்கள் விலகியமைந்த இடங்களுக்கு, முறையாகவும் ஒழுங்கமைந்த முறையிலும் அனுப்பி வைக்கப்படுகையில்; மிகப் பல வகைகளிலான இறுதிப் பண்டங்களின் தயாரிப்பு வரையில் இப்பொருள்களைப் பதனம் செய்வதில் அடுத்தடுத்துள்ள எல்லா கட்டங்களையும் தனியொரு மையமானது நெறியாண்மை புரிகையில்; இந்தப் பண்டங்கள் ஒரே திட்டத்தின்படி கோடிக் கணக்கிலும் பத்து கோடிக் கணக்கிலுமான நுகர்வாளர்களிடையே வினியோகிக்கப்படுகையில் (அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் அமெரிக்க எண்ணெய் டிரஸ்டு இவ்விதம்தான் எண்ணெயை வினியோகிக்கிறது)—அப்போது நாம் காண்பது ''பின்னிப் பிணைதலை'' மட்டுமல்ல, உற்பத்தியின் சமூகமயமாதலையே காண்கிறோம் என்பதும், உள்ளடக்கத்துக்கு இனி ஒவ்வாத மேலோடாய் தனியார்

பொருளாதார உறவுகளும் தனியார் சொத்துறவுகளும் அமைந்திருக்கின்றன, இந்த மேலோடு அகற்றப்படுவது செயற்கையான முறையில் தாமதப்படுத்தப்படுமாயின் தவிர்க்க முடியாத முறையில் இந்த மேலோடு அழுகியே செல்லும், அழுகிய நிலையில் ஓரளவு நீண்ட காலத்துக்கு இந்த மேலோடு இருந்து வரலாம் (படுமோசமான நிலைமையே ஏற்பட்டு, சந்தர்ப்பவாதச் சீழ்க்கட்டி நீக்கப்பட நீண்ட காலமாகிவிடுமாயின்) என்ற போதிலும் தவிர்க்க முடியாதபடி இம்மேலோடு எப்படியும் அகற்றப்பட்டு விடும் என்பதும் தெளிவாகவே விளங்குகின்றன.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை மெச்சிப் புகழ்வதில் ஆர்வமிக்கவராகிய ஷுல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் வியந்து கூறுகிறார்:

''ஜெர்மன் வங்கிகளின் தலைமை நிர்வாகம் பன்னிரண்டு, பதின்மூன்று பேரிடம் ஒப்படைக்கப்பட்டதும், இவர்களது செயற்பாடு இன்றே பெரும்பாலான அரசாங்க அமைச்சர்களுடைய செயற்பாட்டைக் காட்டிலும் பொது நலனுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது.... [வங்கி அதிபர்கள், அமைச்சர்கள், தொழிலதிபர்கள், பண மூலதன சுகஜீவிகள் ஆகியோர்''பின்னிப் பிணைந்திருக்கிறார்கள்''என்பது இங்கே வசதியான முறையில் மறக்கப்பட்டுவிடுகிறது] நாம் எடுத்துரைத்த அந்தப் போக்குகளின் வளர்ச்சி அவற்றின் தர்க்கவாத முடிவுக்கு இட்டு செல்லப்படுவதாகக் கொள்வோமாயின், நமக்குக் கிடைப்பவை வருமாறு: தேசத்தின் பண மூலதனம் வங்கிகளில் ஒன்றுதிரளுகிறது; வங்கிகள் கார்ட்டல்களாக இணைகின்றன; தேசத்தின் முதலீட்டு மூலதனம் பிணையங்களது வடிவில்அமைந்திருக்கிறது. மேதாவிலாசம் வாய்ந்த சான்-சிமோன் முன்னறிந்து கூறியவை அப்போது நிறைவேற்றம் பெறும்: 'ஒருங்கிணைந்த ஒழுங்கியக்கமின்றிப் பொருளாதார உறவுகள் வளர்ந்து வருவதுடன் இணைந்து உற்பத்தியில் தற்போது இருந்து வரும் அராஜகமானது ஒழிந்து, உற்பத்தியில் ஒழுங்கமைப்பு நிலவ இடமளிக்க வேண்டும். ஒருவரிடமிருந்து ஒருவர் சுயேச்சையாகச் செயல்படுவோரும் மனிதர்களது பொருளாதாரத் தேவை

களைப் பற்றி அறியாதவர்களுமான தனிமைப்பட்ட தொழில் அதிபர்களால் இனி பொருளுற்பத்தி நெறியாண்மை செய்யப்படாமல், குறிப்பிட்ட பொது நிறுவனத்தால் நெறியாண்மை செய்யப்படும். சமூகப் பொருளாதாரத்தின் விரிந்தமைந்த அரங்கினை உயரமான நோக்கு நிலையிலிருந்து பார்வையிடக் கூடியதான மத்திய நிர்வாகக் கமிட்டி, சமுதாயம் அனைத்தின் நலனுக்கு ஏற்ப இந்தப் பொருளாதாரத்தை ஒழுங்கியக்கி, உற்பத்திச் சாதனங்கள் தக்கவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யும், எல்லாவற்றுக்கும் மேலாய் உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையே இடையறாத இசைவு இருக்கும்படி கவனித்துக் கொள்ளும். பொருளாதார உழைப்புக்குக் குறிப்பிட்ட ஒழுங்கமைப்பு அளித்திடுவதை தமது பணிகளில் ஒரு பகுதியாகக் கொண்டிருக்கும் நிறுவனங்களாகிய வங்கிகள் ஏற்கெனவே இருந்து வருகின்றன.' சான்-சிமோன் முன்னறிந்த கூறியதானது நிறைவேற்றம் பெறும் நிலையிலிருந்து நாம் இன்னும் நெடுந் தொலைவிலேதான் இருக்கிறோம்; ஆயினும் அந்நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்: இது மார்க்ஸ் கற்பனை செய்ததிலிருந்து வேறுபடும், வடிவத்தில் மட்டுமே வேறுபடும் மார்க்சியமாகும்.''*

மார்க்சை தகர்க்கும்படியான ''மறுப்புரைதான்'', மார்க்சின் கறாரான விஞ்ஞானப் பகுத்தாய்வை விட்டுச் சரிந்து, சான்-சிமோனின் ஊகப் புனைவுக்கு—மேதை ஒருவரது என்றாலுங்கூட ஊகப் புனைவே ஆகிய ஒன்றுக்கு—பின் வாங்கிச் செல்கிறது.

1916 ஜனவரி-ஜூனில்
எழுதப்பட்டது

முதலில் 1917 நடுவில்
பெத்ரொகிராதில்,
**பூரீஸ்ன் இ ஸ்ஞனியே**
பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது;
பிரெஞ்சு, ஜெர்மன் பதிப்புகளின்
முன்னுரை 1921ல்
**கம்மூனிஸ்திச்செஸ்கி இன்தர்நாஷனல்**
இதழ் 18ல் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி 27,
பக்கங்கள் 299-426

* *Grundriss der Sozialökonomik*, பக்கம் 146.

# அரசும் புரட்சியும்

## அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்[26]

## முதற் பதிப்பின் முன்னுரை

அரசு பற்றிய பிரச்சினை தத்துவத்திலும் நடைமுறை அரசியலிலும் இன்று மிகுந்த முக்கியத்துவமானது பெற்று வருகிறது. ஏகபோக முதலாளித்துவமானது அரசு-ஏகபோக முதலாளித்துவமாய் மாற்றப்படும் நிகழ்ச்சிப்போக்கை ஏகாதிபத்திய யுத்தம் அளவுகடந்த வேகமும் தீவிரமும் பெறச் செய்திருக்கிறது. அனைத்து வல்லமை கொண்ட முதலாளித்துவக் கூட்டுகளுடன் மேலும் மேலும் இணைந்து ஒன்றிவரும் அரசானது உழைப்பாளி மக்களை அசுரத்தனமாய் ஒடுக்குவது மேலும் மேலும் அசுரத்தனமானதாகி வருகிறது. முன்னேறிய நாடுகள்—அவற்றின் ''உட்பகுதிகளைக்'' குறிப்பிடுகிறோம்—தொழிலாளர்களுக்கு இராணுவக் கடுங்காவல் சிறைக் கூடங்களாகி வருகின்றன.

நீடிக்கும் யுத்தத்தின் இதன்முன் என்றும் கண்டிராத கொடுமைகளும் துயரங்களும் மக்களுடைய நிலையைப் பொறுக்க முடியாததாக்கி அவர்களுடைய சீற்றத்தை உக்கிரமடையச் செய்கின்றன. உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி முற்றி வருவது தெளிவாய்த் தெரிகிறது. அரசின்பால் இதற்குள்ள போக்கு பற்றிய பிரச்சினை நடைமுறை முக்கியத்துவமுடையதாகி வருகிறது.

ஒப்பளவில் சமாதான வழியிலான வளர்ச்சிக்குரிய கடந்த பல பத்தாண்டுகளில் திரண்டு பெருகிய சந்தர்ப்பவாதத்தின் கூறுகள் சமூக-தேசியவெறிப் போக்கினை உருவாக்கி அதற்கு ஊட்டமளித்திருக்கின்றன. இப்போக்கு உலகெங்கும் அதிகாரபூர்வமான சோஷலிஸ்டுக் கட்சிகளில் கோலோச்சு

கிறது. சொல்லளவில் சோஷலிசம், செயலில் தேசியவெறி—இதுதான் இப்போக்கு (ருஷ்யாவில் பிளெஹானவ், பத்ரேசவ், பிரெஷ்கோவ்ஸ்கயா, ருபனோவிச், ஓரளவு மறைமுகமான வடிவில் தெஸெரெத்தேலி, சேர்னேவ் வகையறுக்கள்; ஜெர்மனியில் ஷெய்டெமன், லெகின், டேவிட், மற்றும் பலர்; பிரான்சிலும் பெல்ஜியத்திலும் ரெனொடேல், கெட்டு, வண்டர்வேல்டே; இங்கிலாந்தில் ஹைண்ட்மன், ஃபேபியன்கள், இத்தியாதி). ''சோஷலிசத்தின் தலைவர்கள்'' ''தமது'' தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு மட்டுமின்றி ''தமது'' அரசின் நலன்களுக்கும் அடிபணிந்து இழிவுற்றுக் தொண்டூழியம் புரிவோராய் மாற்றமடைவது இந்தப் போக்கின் தனி விசேஷமாகும். வல்லரசுகள் எனப்படுவனவற்றில் பெரும்பாலானவை நெடுங்காலமாய் மிகப் பல சிறிய பலவீன இனங்களைச் சுரண்டியும் அடிமைப்படுத்தியும் வந்திருக்கின்றன. ஏகாதிபத்திய யுத்தம் இவ்வகைக் கொள்ளையைப் பகிர்ந்து கொள்வதற்கும் மறுபங்கீடு செய்வதற்குமான யுத்தமாகும். ''அரசு'' குறித்த சந்தர்ப்பவாதத் தப்பெண்ணங்களை எதிர்த்துப் போராடாமல், பொதுவில் முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கிலிருந்தும், குறிப்பாய் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வாக்கிலிருந்தும் உழைப்பாளி மக்களை விடுவிக்கப் போராடுவது சாத்தியமன்று.

முதற்கண், அரசு பற்றிய மார்க்ஸ், எங்கெல்ஸ் போதனையைப் பரிசீலிக்கிறோம். இந்தப் போதனையில் கவனியாது புறக்கணிக்கப்பட்டிருக்கும் அல்லது சந்தர்ப்பவாத முறையில் திரித்துப் புரட்டப்பட்டிருக்கும் கூறுகளை மிகவும் முக்கியமாய் விளக்குகிறோம். அடுத்து, இந்தப் புரட்டல்களுக்குப் பிரதான காரணஸ்தராகிய கார்ல் காவுத்ஸ்கி குறித்து—நடப்பு யுத்தத்தின்போது கையாலாகாததாகிப் பரிதாப முடிவை எய்தியிருக்கும் இரண்டாவது அகிலத்தின் (1889—1914) பிரபல தலைவர் அவர்—தனிப்பட விவாதிக்கிறோம். இறுதியில், 1905ஆம் ஆண்டு, இன்னும் முக்கியமாய் 1917ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சிகளது அனுபவத்தின் பிரதான முடிவுகளைத் தொகுத்துக் கூறுகிறோம். 1917ஆம் ஆண்டின் ருஷ்யப்

புரட்சி இப்பொழுது (1917 ஆகஸ்டுத் தொடக்கம்) அதன் வளர்ச்சியினுடைய முதற் கட்டத்தின் இறுதியை நெருங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மொத்தத்தில் இந்தப் புரட்சியை ஏகாதிபத்திய யுத்தத்தின் காரணமாய் மூளும் சோஷலிசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் கோவையில் ஓர் இணைப்பாய் அன்றி வேறு எவ்விதத்திலும் புரிந்து கொள்ள முடியாது. ஆகவே அரசின்பால் சோஷலிசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குள்ள போக்கு குறித்த பிரச்சினை நடைமுறை அரசியல் முக்கியத்துவம் மட்டுமின்றி, இன்றைய மிக அவசர அவசியப் பிரச்சினை ஒன்ருகவும்—முதலாளித்துவக் கொடுங்கோன்மையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வெகு ஜனங்கள் கூடிய சீக்கிரத்தில் என்ன செய்ய வேண்டியிருக்கும் என்பதை அவர்களுக்கு விளக்கிச் சொல்லும் பிரச்சினையாகவும்—முக்கியத்துவம் பெற்று வருகிறது.

1917 ஆகஸ்டு ஆசிரியர்

---

## இரண்டாம் பதிப்பின் முன்னுரை

அத்தியாயம் 2க்கு 3ஆம் பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர அனேகமாய் வேறு மாற்றம் எதுவும் இன்றி இந்த இரண்டாம் பதிப்பு வெளியிடப்படுகிறது.

மாஸ்கோ ஆசிரியர்
1918 டிசம்பர் 17

## அத்தியாயம் 1

# வர்க்கச் சமுதாயமும் அரசும்

### 1. வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவாய்த் தோன்றியதே அரசு

மார்க்சின் போதனைக்குத் தற்போது என்ன நேர்ந்து வருகிறதோ, அதுவேதான் விடுதலைக்காகப் போராடும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய புரட்சிகரச் சிந்தனையாளர்களும் தலைவர்களுமானேரின் போதனைகளுக்கு வரலாற்றிலே அடிக்கடி நேர்ந்துள்ளது. ஒடுக்கும் வர்க்கங்கள் மாபெரும் புரட்சியாளர்களை அவர்களுடைய வாழ்நாளில் ஓயாமல் வேட்டையாடின; அவர்களுடைய போதனைகள் மீது காட்டுத்தனமான காழ்ப்பும் வெறித்தனமான வெறுப்பும் கொண்டு கயமையான பொய்ப் பிரசார அவதூறு இயக்கம் நடத்தின. அவர்கள் இறந்த பிற்பாடு அவர்களை அபாயமற்ற பூஜையறைப் படங்களாக்கி வழிபாட்டுக்குரியோராக்கவும், ஓரளவு அவர்களுடைய பெயர்களைப் புனிதத் திருப்பெயர்களாக்கவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை ''ஆன்ம திருப்தி'' பெறச் செய்வதும், அவற்றை ஏமாற்றுவதும், அதேபோதில் புரட்சி போதனையிடமிருந்து அதன் சாரப் பொருளைக் களைந்து, அதன் புரட்சி முனையை மழுக்கடித்து, அதைக் கொச்சைப்படுத்துவதும்தான் இந்த முயற்சிகளின் நோக்கம். முதலாளித்துவ வர்க்கத்தாரும் தொழிலாளர் இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதிகளும் இன்று மார்க்சியத்தை இவ்வாறு ''பதனம் செய்வதில்'' ஒன்றுபடுகிறார்கள். இந்தப் போதனையின் புரட்சித் தன்மையை, இதன் புரட்சி ஆன்மாவை அவர்கள் விட்டொழிக்கவோ, மூடிமறைக்கவோ, திரித்துப் புரட்டவோ செய்கிறார்கள். முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏற்புடையதை, அல்லது ஏற்புடைய

தாய்த் தோன்றுவதை முதன்மையதாய் முன்னிலைக்குக் கொண்டுவந்து மெச்சிப் புகழ்கிறார்கள். சமூக-தேசிய வெறியர்கள் எல்லோருமே இப்பொழுது ''மார்க்சியவாதிகள்'' ஆகிவிட்டனர் (சிரிக்க வேண்டாம்!). ஜெர்மன் முதலாளித்துவ அறிஞர்கள்—நேற்று வரை மார்க்சியத்தை அழித்தொழிக்கும் நிபுணர்களாய் இருந்தவர்கள்—மார்க்ஸ் ''ஜெர்மன் தேசத்தவர்'' என்பதாய் அடிக்கடி பேசுகிறார்கள்; கொள்ளைக்கார யுத்தம் புரிவதற்கு இவ்வளவு திறம் பட ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் தொழிற் சங்கங்களுக்குப் போதமளித்தவர் என்பதாய் முழங்குகிறார்கள்!

மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவது என்றுமில்லாத அளவுக்கு மலிந்திருக்கும் இப்படிப்பட்ட ஒரு நிலைமையில், மெய்யாகவே மார்க்ஸ் அரசு என்னும் பொருள் குறித்து என்ன போதித்தார் என்பதைத் திரும்பவும் நிலைநாட்டுவதே நமது தலையாய கடமை. இதற்கு, நேரடியாக மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களிலிருந்து நீண்ட பல மேற்கோள்கள் தருவது இன்றியமையாதது. நீண்ட மேற்கோள்கள் வாசகத்தைக் கடினமாக்கிவிடும், சுவையாகவும் எளிதாகவும் பலரும் படிக்கத்தக்க வாசகமாக்குவதற்குத் தடையாகிவிடும் என்பது மெய்தான். ஆயினும் இம்மேற்கோள்களைத் தவிர்ப்பது சாத்தியமன்று. மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களில் அரசு என்னும் பொருள் குறித்து காணப்படும் எல்லாப் பகுதிகளையும், அல்லது அத்தியாவசியமான எல்லாப் பகுதிகளையேனும் கூடுமான வரை முழு அளவில் எப்படியும் மேற்கோளாய்க் கொடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் விஞ்ஞான சோஷலிசத்தின் மூலவர்களுடைய கருத்துக்களின் முழுப் பரிமாணத்தையும், அவற்றின் வளர்ச்சியையும் பற்றி வாசகர் சுயேச்சையான ஓர் அபிப்பிராயத்தை வந்தடைய முடியும்; இக்கருத்துக்கள் தற்போது மேலோங்கிவிட்ட ''காவுத்ஸ்கிவாதத்தால்'' திரித்துப் புரட்டப்பட்டிருப்பதை ஆவண ஆதாரத்தால் நிரூபித்து, கண்கூடாய்ப் புலப்படுத்த முடியும்.

எங்கெல்சின் நூல்களில் மிகவும் பெயர் பெற்றதான குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்பதிலிருந்து தொடங்குவோம். இந்நூலின் ஆறாம் பதிப்பு

1894லேயே ஷ்டுட்கர்ட் நகரில் வெளியிடப்பட்டது. ருஷ்ய மொழிபெயர்ப்புகள் ஏராளம் இருப்பினும் பெரும்பாலும் அரைகுறையாகவோ, சிறிதும் திருப்தியளிக்காதவையாகவோ இருப்பதால், ஜெர்மன் மூலங்களிலிருந்து மேற்கோள்களை மொழிபெயர்க்க வேண்டியிருக்கிறது.

வரலாற்று வழிப்பட்ட தமது பகுத்தாய்வினைத் தொகுத்தளித்து எங்கெல்ஸ் கூறுவதாவது:

> ''ஆகவே அரசானது எவ்வகையிலும் வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது வலுக்கட்டாயமாய் இருத்தப்பட்ட சக்தியல்ல; இதே போல அது எவ்வகையிலும் ஹெகல் வலியுறுத்தும் 'அறநெறிக் கருத்தின் எதார்த்த உருவோ', 'அறிவின் பிம்பமும் எதார்த்தமுமோ' அல்ல. மாருக, சமுதாயத்தின் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டத்தின் விளைவே அரசு. இந்தச் சமுதாயம் தன்னுடனை தீராத முரண்பாட்டில் சிக்கிக்கொண்டுவிட்டது, இணக்கம் காண முடியாத பகை சக்திகளாய்ப் பிளவுண்டுவிட்டது, இந்தப் பகைமை நிலையை அகற்றத் திறனற்றதாகிவிட்டது என்பதை ஒப்புக்கொள்வதன் விளைவே அரசு. ஆனுல் இந்தப் பகை சக்திகள், முரண்பட்டு மோதிக் கொள்ளும் பொருளாதார நலன்களைக் கொண்ட இந்த வர்க்கங்கள், தம்மையும் சமுதாயத்தையும் பயனற்ற போராட்டத்தில் அழித்துக் கொண்டுவிடாமல் தடுக்கும் பொருட்டு, மோதலைத் தணித்து 'ஒழுங்கின்' வரம்புகளுக்குள் இருத்தக் கூடிய ஒரு சக்தியை, வெளிப்பார்வைக்குச் சமுதாயத்துக்கு மேலானதாய்த் தோன்றும் ஒரு சக்தியை நிறுவுவது அவசியமாயிற்று. சமுதாயத்திலிருந்து உதித்ததானுலும் சமுதாயத்துக்கு மேலானதாய்த் தன்னை அமர்த்திக் கொண்டு மேலும் மேலும் தன்னை அதற்கு அயலானுக்கிக் கொள்ளும் இந்தச் சக்தியே அரசு எனப்படுவது'' (ஆருவது ஜெர்மன் பதிப்பு, பக்கங்கள் 177-78).[27]

அரசின் வரலாற்றுப் பாத்திரம் குறித்தும், அரசு என்ருல் என்னவென்பது குறித்தும் மார்க்சியத்தின் அடிப்படை

கருத்தை இது தெட்டத் தெளிவாய் எடுத்துரைக்கிறது. வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவும் வெளியீடுமே அரசு. எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்கு வர்க்கப் பகைமைகள் புறநிலைக் காரணங்களால் இணக்கம் காண முடியாதவை ஆகின்றனவோ, அங்கே, அப் பொழுது, அந்த அளவுக்கு அரசு உதித்தெழுகிறது. எதிர் மறையில் கூறுமிடத்து, அரசு ஒன்று இருப்பதானது வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவையாய் இருத்தலை நிரூபிக்கிறது.

மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டும் போக்கு மிகவும் முக்கியமான, அடிப்படையான இந்த விவகாரத்திலிருந்து தான் தொடங்கி இரு பிரதான வழிகளில் செல்கிறது.

ஒரு புறத்தில், முதலாளித்துவ சித்தாந்தவாதிகளும், குறிப்பாய்க் குட்டிமுதலாளித்துவ சித்தாந்தவாதிகளும், எங்கே வர்க்கப் பகைமைகளும் வர்க்கப் போராட்டமும் உள்ளனவோ அங்கு மட்டுமே அரசு இருக்கிறதென்பதை மறுக்க முடியாத வரலாற்று உண்மைகளின் நிர்பந்தம் காரணமாய் ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகி, வர்க்கங்களிடையே இணக்கம் உண்டாக்குவதற்கான உறுப்பே அரசு என்று தோன்றும் வண்ணம் மார்க்சுக்குத் ''திருத் தம்'' கூறுகிறார்கள். வர்க்கங்களிடையே இணக்கம் உண் டாக்க முடிந்திருந்தால், மார்க்சின் கருத்துப்படி அரசு உதித் தும் இருக்க முடியாது, தன்னை நிலைநிறுத்திக் கொண்டிருக்க வும் முடியாது. அற்பவாதக் குட்டிமுதலாளித்துவப் பேராசிரி யர்களும் நூலாசிரியர்களும் கூறும் கருத்துப்படி—அருள் கூர்ந்து அவர்கள் அடிக்கடி மார்க்சை ஆதாரங் காட்டுகிறார் கள்—அரசானது வர்க்கங்களிடையே இணக்கம் உண்டாக்கு வதாய்த் தோன்றுகிறது. மார்க்சின் கருத்துப்படி வர்க்க ஆதிக்கத்துக்கான ஓர் உறுப்பே, ஒரு வர்க்கம் பிறிதொன்றை ஒடுக்குவதற்கான ஓர் உறுப்பே அரசு; வர்க்கங்களுக்கு இடையிலான மோதலை மட்டுப்படுத்துவதன் வாயிலாய் இந்த ஒடுக்குமுறையைச் சட்ட முறையாக்கி, நிரந்தரமாக்கிடும் ''ஒழுங்கை'' நிறுவுவதே அரசு. ஆனால் குட்டிமுதலாளித்துவ அரசியல்வாதிகளின் அபிப்பிராயத்தில், ஒழுங்கு என்றால் ஒரு

வர்க்கம் பிறிதொன்றை ஒடுக்குவதல்ல, வர்க்கங்களிடையே இணக்கம் உண்டாக்குவதே ஒழுங்கு; மோதலை மட்டுப்படுத்துவது என்ருல் ஒடுக்குவோரைக் கவிழ்ப்பதற்கான குறிப்பிட்ட போராட்ட சாதனங்களையும் முறைகளையும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களிடமிருந்து பறிப்பதல்ல, வர்க்கங்களிடையே இணக்கம் உண்டார்க்குவதே மோதலை மட்டுப்படுத்துவது.

உதாரணமாய், 1917ஆம் ஆண்டுப் புரட்சியின்போது அரசின் முக்கியத்துவத்தையும் பாத்திரத்தையும் பற்றிய பிரச்சினை உடனடிச் செயல்—அதுவும் வெகுஜன அளவிலான செயல்—தேவைப்பட்ட நடைமுறைப் பிரச்சினையாய் அதன் முழுப் பரிமாணத்திலும் எழுந்தபோது, எல்லா சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் ''அரசானது'' வர்க்கங்களிடையே ''இணக்கம் உண்டாக்குகிறது'' என்னும் குட்டி முதலாளித்துவத் தத்துவத்துக்கு உடனே சரிந்து சென்று விட்டனர். இவ்விரு கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளுடைய எண்ணற்ற தீர்மானங்களும் கட்டுரைகளும் இந்த அற்பத்தனமான குட்டிமுதலாளித்துவ ''இணக்கம் காணும்'' தத்துவத்திலே மூழ்கித் திளைத்தன. குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின், தனது எதிர்சக்தியுடன் (தன்னை எதிர்க்கும் வர்க்கத்துடன்) இணக்கம் கொள்ள முடியாததாகிவிட்ட குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கான ஓர் உறுப்பே அரசு என்பது குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் ஒருபோதும் புரிந்து கொள்ள இயலாத ஒன்ருகும். எமது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுகளே அல்ல (போல்ஷிவிக்குகளாகிய நாம் எப்பொழுதுமே கூறி வந்துள்ள விவரம்தான் இது), ஓரளவு சோஷலிசப் பதங்களைப் பிரயோகிக்கும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளேயன்றி வேறல்ல என்பதற்கு, அரசு சம்பந்தமாய் அவர்கள் அனுசரிக்கும் போக்கு மிகவும் எடுப்பான எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

மறு புறத்தில், மார்க்சியத்தைப் பற்றிய ''காவுத்ஸ்கிவாதப்'' புரட்டு இன்னும் நுண்ணயம் வாய்ந்தது. அரசானது வர்க்க ஆதிக்கத்துக்கான ஓர் உறுப்பு என்பதையோ, வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை என்

பகையோ ''தத்துவார்த்தத்தில்'' இப்புரட்டு மறுப்பதில்லை. ஆனல் அது பராமுகமாய் விட்டொழிப்பது அல்லது பூசி மெழுகிச் செல்வது இதுதான்: வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆகியதன் விளைவே அரசு என்ருல், அது சமுதாயத்துக்கு மேலானதாய் நின்று ''மேலும் மேலும் தன்னை அதற்கு அயலாளுக்கிக் கொள்ளும்'' சக்தியாகும் என்ருல், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் விடுதலை பலாத்காரப் புரட்சியின்றி சாத்தியமில்லை என்பதோடு, ஆளும் வர்க்கத்தால் தோற்றுவிக்கப்பட்டதும் ''அயலாளுய் இருக்கும்'' இந்நிலையின் உருவகமானதும் ஆன அரசு அதிகார இயந்திரத்தை அழித்திடாமலும் இந்தவிடுதலை சாத்தியமில்லை என்பது தெளிவு. தத்துவார்த்த வழியில் தாஞகவே வெளிப்படும் இந்த முடிவினை மார்க்ஸ், புரட்சியின் கடமைகளைப் பற்றிய ஸ்தூலமான வரலாற்று வழிப்பட்ட பகுத்தாய்வின் அடிப்படையில் திட்டவட்டமாய் எடுத்துரைத்தார்—இதனை நாம் பிற்பாடு காணப் போகிறோம். இந்த முடிவைத்தான்—பிற்பாடு நாம் விவரமாய்க் காட்டப் போவது போல—காவுத்ஸ்கி ''மறந்துவிடுகிருர்'', திரித்துப் புரட்டுகிருர்.

### 2. ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகளும், சிறைக்கூடங்களும், இன்ன பிறவும்

எங்கெல்ஸ் தொடர்ந்து கூறுகிருர்:

> ''...புராதன மக்களின் (குலங்கள் அல்லது கணங்களின்) ஒழுங்கமைப்பு[28] போலல்லாது, அரசு முதலில் அதன் குடிமக்களை பிரதேச வாரியாகப் பிரிக்கிறது...''

> இந்தப் பிரிவினை நமக்கு ''இயல்பானதாய்த்'' தோன்றுகிறது. ஆனல் தலைமுறைகள் அல்லது குலங்களின் பிரகாரம் அமைந்த பழைய ஒழுங்கமைப்பை எதிர்த்து நீண்டநெடும் போராட்டம் இதற்கு அவசியமாயிருந்தது.

''...ஒரு பொது அதிகாரம் நிறுவப்பட்டது இரண்டாவது சிறப்பியல்பாகும். இந்தப் பொது அதிகாரம் முன்பு போல இப்பொழுது மக்கள் தம்மை ஆயுதமேந்தியோராய் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு நேரடியாக ஒத்ததாயில்லை. இந்தத் தனிவகைப்பட்ட பொது அதிகாரம் ஏன் தேவையாயிற்று என்ருல், சமுதாயம் வர்க்கங்களாய்ப் பிளவுண்ட பிற்பாடு தாஞகவே இயங்கும் மக்களது ஆயுதமேந்திய ஒழுங்கமைப்பு சாத்தியமற்றதாகிவிட்டது... இந்தப் பொது அதிகாரம் ஒவ்வொரு அரசிலும் இருந்து வருகிறது. இது ஆயுதமேந்திய ஆட்களை மட்டுமின்றி, புராதன (குலச்) சமுதாயம் அறிந்திராத பொருளாயதத் துணைச் சாதனங்களையும் சிறைக்கூடங்களையும், எல்லா வகையான பலாத்கார ஏற்பாடுகளையும் கொண்டதாகும்...''

அரசு எனப்படும் ''சக்தி'' சமுதாயத்திலிருந்து உதித்தது, ஆனல் சமுதாயத்துக்கு மேலானதாய்த் தன்னை இருத்திக் கொள்கிறது, சமுதாயத்துக்குத் தன்னை மேலும் மேலும் அயலாஞக்கிக் கொள்கிறது என்கிற இக்கருத்தை எங்கெல்ஸ் தெளிவுபடுத்துகிருர். இந்தச் சக்தி பிரதானமாய் எவற்ருல் ஆனது? சிறைக்கூடங்களையும் இன்ன பிறவற்றையும் தமது ஆதிக்கத்தில் வைத்திருக்கும் ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகளால் ஆனது அது.

ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகள் என்பதாய் நாம் பேச முழு நியாயம் உண்டு, ஏனெனில், அரசு ஒவ்வொன்றுக்கும் உரியதான இந்தப் பொது அதிகாரம் ஆயுதம் தாங்கிய மக்களுக்கு, அவர்களது ''தானே இயங்கும்'' ஆயுதமேந்திய ஒழுங்கமைப்புக்கு'' ''நேரடியாக ஒத்ததாயில்லை''.

தற்போது ஆதிக்கம் புரியும் அற்பவாதக் கண்ணேட்டத்தின்படி, சிறிதும் கவனிக்கத் தேவையற்றதென்றும் பழக்கப்பட்டு சர்வசாதாரணமாகிவிட்டதென்றும் கருதப்படும் ஒன்றை, வேர்விட்டு ஆழப் பதிந்ததோடு இறுகிக் கெட்டிப் பிடித்தவை என்றும் சொல்லத்தக்க தப்பெண்ணங்களால்

புனிதமென உயர்த்தி வைக்கப்படும் இதனை, மாபெரும் புரட்சிகர சிந்தனையாளர்கள் எல்லோரையும் போலவே எங்கெல்சும் வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருகிறார். நிரந்தரச் சேனையும் போலீசும் தானே அரசு அதிகாரத்தின் பிரதான கருவிகள். இவ்வாறின்றி வேறு எப்படி இருக்க முடியும்?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியைச் சேர்ந்த மிகப் பெருவாரியான ஐரோப்பியர்களுடைய கண்ணோட்டத்தின் படி—இவர்களுக்காகவே எங்கெல்ஸ் எழுதினார், இவர்கள் எந்தவொரு பெரும் புரட்சியையும் அனுபவித்து அறியாதவர்கள் அல்லது அருகிலிருந்து பார்த்திராதவர்கள்—இது வேறு எப்படியும் இருக்க முடியாது. ''தானாகவே இயங்கும் மக்களது ஆயுதமேந்திய ஒழுங்கமைப்பு'' என்றால் என்னவென்பது அவர்களால் புரிந்து கொள்ள முடியாத ஒன்று. சமுதாயத்துக்கு மேலானதாய் நின்று மேலும் மேலும் அதற்குத் தம்மை அயலானாக்கிக் கொள்ளும் ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகள் (போலீசும் நிரந்தரச் சேனையும்) அவசியமாகியது ஏனென்று கேட்டால், மேற்கு ஐரோப்பிய, ருஷ்ய அற்பவாதிகள் ஸ்பென்சர் அல்லது மிகைலோவ்ஸ்கியிடமிருந்து கடன் வாங்கிய சில தொடர்களைக் கூறி, மேலும் மேலும் சிக்கலாகி வரும் சமுதாய வாழ்வையும், பணிப் பிரிவினையும், பிறவற்றையும் குறிப்பிட முற்படுகிறார்கள்.

இவ்வாறு குறிப்பிடுவது ''விஞ்ஞான வழிப்பட்டதாய்த்'' தோன்றுகிறது. மிகவும் முக்கியமான, அடிப்படையான உண்மையை, அதாவது இணக்கம் காண முடியாத பகை வர்க்கங்களாய்ச் சமுதாயம் பிளவுண்டுவிட்டதென்ற உண்மையைக் கண்ணில் படாதபடி மூடிமறைத்து சாதாரண மனிதனைத் தூக்கத்தில் இருத்த இது பயன்படுவதாகிவிடுகிறது.

இந்தப் பிளவு உண்டாகாமல் இருந்திருந்தால், ''தானாகவே இயங்கும் மக்களது ஆயுதமேந்திய ஒழுங்கமைப்பு'', அதன் சிக்கலினாலும் அதன் உயர் நுட்பத்திறனாலும் பிறவற்றாலும் தடிகள் ஏந்திய குரங்கு மந்தை அல்லது புராதன மனிதர்கள் அல்லது குலங்களாய் இணைந்த மனிதர்களின்

புராதன ஒழுங்கமைப்பிலிருந்து வேறுபட்டிருக்கும். ஆயினும் இது போன்ற ஓர் ஒழுங்கமைப்பு அப்பொழுதும் சாத்திய மாகவே இருந்திருக்கும்.

நாகரிகச் சமுதாயம் பகை வர்க்கங்களாய், அதுவும் இணக்கம் காண முடியாத பகை வர்க்கங்களாய்ப் பிளவுண்ட தால்தான் இது சாத்தியமற்றதாகியது. இவ்வர்க்கங்கள் ''தானகவே இயங்கும்'' ஆயுதபாணிகளாய் இருப்பின், இவற் றினிடையே ஆயுதமேந்திய போராட்டம் மூண்டுவிடும். அரசு உதித்தெழுகிறது, தனிவகை சக்தி, ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகள் அமைக்கப்படு கின்றன. ஒவ்வொரு புரட்சியும் அரசு இயந்திரத்தை அழிப்பதன் மூலம், வர்க்கப் போராட்டத்தை ஒளிவுமறை வின்றி நமக்குப் புலப்படுத்திக் காட்டுகிறது; ஆளும் வர்க்கம் தனக்குச் சேவை புரியக் கூடிய ஆயுதமேந்திய ஆட் களைக் கொண்ட தனிவகைப் படைகளை மீட்டமைக்க எப்படி முயலுகிறது என்பதையும், ஒடுக்கப்பட்ட வர்க்கம் ஒடுக்கு வோருக்குப் பதிலாய் ஒடுக்கப்பட்டோருக்குச் சேவை புரியக் கூடிய இப்படிப்பட்ட ஒரு புதிய ஒழுங்கமைப்பைத் தோற்று வித்துக் கொள்ள எப்படி முயலுகிறது என்பதையும் நமக்குத் தெளிவாய்க் காட்டுகிறது.

மாபெரும் புரட்சி ஒவ்வொன்றும் நடைமுறையில், திட்டவட்டமாகவும், இன்னும் முக்கியமாய் வெகுஜனச் செயல் அளவிலும் நம்முன் எழுப்பும் அதே பிரச்சினையை, அதாவது ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட ''தனிவகைப்'' படைகளுக்கும் ''தானகவே இயங்கும் மக்களது ஆயுதமேந் திய ஒழுங்கமைப்புக்கும்'' இடையிலான உறவு பற்றிய பிரச் சினையை மேற்கூறிய மேற்கோளில் எங்கெல்ஸ் தத்துவார்த்த வழியில் எழுப்புகிறார். ஐரோப்பிய, ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம் இந்தப் பிரச்சினைக்கு எப்படித் திட்டவட்டமான முறையில் பதிலளிக்கிறது என்பதை நாம் பார்ப்போம்.

இப்பொழுது எங்கெல்சின் விளக்கத்துக்குத் திரும்பலாம்.

சில சமயங்களில்—உதாரணமாய் வட அமெரிக்காவின் சில பகுதிகளில்—இந்தப் பொது அதிகாரம் பலவீனமாய் இருப்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார் (முதலாளித்துவச்

சமுதாயத்தில் அரிய விதிவிலக்காய் இருந்த ஒன்றை, வட அமெரிக்காவில் ஏகாதிபத்திய காலகட்டத்துக்கு முன்பு கட்டற்ற குடியேற்றக் குடியினர் பெருவாரியாய் இருந்த சில பகுதிகளை இங்கு அவர் மனதிற் கொண்டுள்ளார்). ஆனல் பொதுவாய்க் கூறுமிடத்து இந்தப் பொது அதிகாரம் வளர்ந்து வலிமையுறுகிறது என்று குறிப்பிடுகிருர்:

> ''...அரசினுள் எந்த அளவுக்கு வர்க்கப் பகைமைகள் மேலும் கடுமையாகின்றனவோ, அக்கம் பக்கத்து அரசுகள் பெரிதாகி அவற்றின் மக்கள் தொகை பெருகுகின்றனவோ, அதே அளவுக்குப் பொது அதிகாரம் வளர்ந்து வலிமையுறுகிறது. இன்றைய ஐரோப்பாவைக் கவனித்தால் போதும், இது தெளிவாகிவிடும். இங்கு பொது அதிகாரம் சமுதாயம் அனைத்தையும், அரசையும்கூட விழுங்கிவிடுமோ என்று அஞ்சத்தக்க அளவுக்கு வர்க்கப் போராட்டமும் நாடு பிடிக்கும் போட்டா போட்டியும் அதைத் தீவிரமாய் வளரச் செய்திருக்கின்றன...''.

கடந்த நூற்றுண்டின் தொண்ணூரும் ஆண்டுகளின் தொடக்கப் பகுதியில் எழுதப்பட்டது இது. எங்கெல்சின் கடைசி முன்னுரை 1891 ஜூன் 16ஆம் தேதியிடப்பட்டதாகும். ஏகாதிபத்தியத்துக்கான மாற்றம்—டிரஸ்டுகளின் முழு ஆதிக்கத்துக்கும் பெரிய வங்கிகளின் சர்வ வல்லமைக்கும் மிகப் பெரிய அளவிலான காலனியாதிக்கக் கொள்கைக்கும் இன்ன பிறவற்றுக்குமான மாற்றம்—அப்பொழுது தான் பிரான்சில் ஆரம்பித்துக் கொண்டிருந்தது; வட அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் இந்த மாற்றம் இன்னும்கூட பலவீனமாகவே இருந்தது. இதற்குப் பிற்பட்ட காலத்தில் ''நாடு பிடிக்கும் போட்டாபோட்டி'' பிரம்மாண்ட அளவுக்கு மும்முரமாகிவிட்டது. இருபதாம் நூற்றுண்டின் இரண்டாம் பத்தாண்டின் தொடக்கத்துக்குள் ''நாடு பிடிக்கும் போட்டியாளர்களிடையே'', அதாவது கொள்ளைக்கார பேரரசுகளிடையே உலகம் பூராவுமே பங்கிடப்பட்டுவிட்டதால் இந்தப் போட்டாபோட்டி மேலும் கடுமையாகிவிட்டது. இதன்பின்

இராணுவ, கடற்படைப் போர்க் கருவிகள் நம்ப முடியாத படி வளர்ந்துவிட்டன; பிரிட்டன் அல்லது ஜெர்மனி உலகெங்கும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்பதற்காக, கொள்ளையின் பாகப் பிரிவினைக்காகக் கட்டவிழ்த்துவிடப் பட்ட 1914-17ஆம் ஆண்டுகளின் கொள்ளைக்கார யுத்தத்தைத் தொடர்ந்து சமுதாயத்தின் எல்லா சக்திகளையும் நாசகர அரசு அதிகாரம் ''கபளீகரம் செய்வது'' படுபயங்கர விபத்தாகிவிடும் அளவுக்கு முற்றிவிட்டது.

''நாடு பிடிக்கும் போட்டாபோட்டி'' வல்லரசுகளுடைய அயல்நாட்டுக் கொள்கையின் மிக முக்கிய தனி இயல்புகளில் ஒன்றுகுமென்று 1891லேயே எங்கெல்சினுல் சுட்டிக்காட்ட முடிந்தது. ஆனுல் 1914-1917ஆம் ஆண்டுகளில், இந்தப் போட்டாபோட்டி பன்மடங்கு கடுமையாகி ஏகாதிபத்திய யுத்தத்தை மூண்டெழச் செய்தபோது சமூக-தேசியவெறிக் கயவர்கள் ''தமது சொந்த'' முதலாளித்துவ வர்க்கத்தின் கொள்ளைக்கார நலன்களின் பாதுகாப்பைத் ''தாயகப் பாதுகாப்பு'', ''குடியரசின், புரட்சியின் பாதுகாப்பு'' என்பன போன்ற சொல்லடுக்குகளால் மூடிமறைத்து வருகிறுர்கள்.

### 3. அரசு—ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சுரண்டுவதற்கான கருவி

சமுதாயத்துக்கு மேலானதாய் நிற்கும் தனிவகைப் பொது அதிகாரத்தின் பராமரிப்புக்காக வரிகளும் அரசுக் கடன்களும் தேவைப்படுகின்றன.

> ''...பொது அதிகாரமும் வரிகள் வசூலிக்கும் உரிமையும் பெற்ற அதிகாரிகள் சமுதாயத்தின் ஆட்சி உறுப்புக்கள் என்ற முறையில் சமுதாயத்துக்கு மேலானவர்களாய் நிற்கிறுர்கள்'' என்று எங்கெல்ஸ் எழுதுகிறுர். ''புராதன (குலச்) சமுதாய அமைப்பின் ஆட்சி உறுப்புக்களுக்கு மனம் விரும்பி சுதந்திரமாய் அளிக்கப்பட்ட மதிப்பும் மரியாதையும்—அவர்களால் இவற்றைப் பெறமுடிவதாய்க் கொண்டாலுங்கூட—அவர்

களுக்குத் திருப்தி அளிப்பனவாய் இல்லை...'' அதிகாரி களுடைய புனித நிலையையும் காப்புரிமையையும் பறை சாற்றும் தனிச்சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ''கீழ்த்தர போலீஸ் ஊழியனுக்குக்கூட'' குலத்தின் பிரதிநிதிகளைக் காட்டிலும் அதிக ''செல்வாக்கு'' இருக்கிறது. ஆயினும் குலத்தின் மூதாளருக்கு சமுதாயம் அளித்த ''வலுக் கட்டாயமற்ற மதிப்பையும் மரியாதையையும்'' கண்டு நாகரிக அரசின் இராணுவ அதிகாரத்தின் தலைவருங்கூட பொறாமை கொள்வார்.

அரசு அதிகார உறுப்புக்களான அதிகாரிகளுடைய தனி உரிமை நிலை என்கிற பிரச்சினை இங்கு எழுப்பப்படுகிறது. இங்கு சுட்டிக்காட்டப்படும் பிரதான விவரம் இதுவே: இவர்களை சமுதாயத்துக்கு மேலானவர்களாய் அமர்த்துவது எது? இந்தத் தத்துவார்த்தப் பிரச்சினைக்கு 1871ல் பாரிஸ் கம்யூன்[29] நடைமுறையில் எவ்வாறு தீர்வு கண்டது என்பதையும், பிற்போக்கான ஒரு நிலையிலிருந்து 1912ல் காவுத்ஸ்கி எப்படி இதனை மூடிமறைத்தார் என்பதையும் பிற்பாடு நாம் பார்ப்போம்.

> ''...வர்க்கப் பகைமைகளைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் காரணமாய் அரசு உதித்தது என்பதனாலும், அதே போதில் இந்த வர்க்கங்களுக்கிடையிலான மோதல்களிலிருந்தே அது உதித்தது என்பதனாலும், பொதுவாக அது மிகப் பெரும் பலம் படைத்த, பொருளாதாரத் துறையில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தின் அரசாகி விடுகிறது. அரசின் உதவியால் இவ்வர்க்கம் அரசியல் துறையிலும் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகி, ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அடக்கி வைப்பதற்கும் சுரண்டுவதற்கும் இவ்வாறு புதிய சாதனங்களைப் பெற்றுக் கொள்கிறது...'' புராதன அரசுகளும் பிரபுத்துவ அரசுகளும் அடிமைகளையும் பண்ணையடிமைகளையும் சுரண்டுவதற்கான அமைப்புகளாய் இருந்தன. இதே போல ''நவீன காலப் பிரதிநிதித்துவ அரசு கூலி உழைப்பை மூலதனம் சுரண்டுவதற்கான கருவியாய்

இருக்கிறது. ஆனல் விதிவிலக்காய்ச் சில காலகட்டங்கள் ஏற்படுவது உண்டு. ஒன்ருெடொன்று போரிடும் வர்க்கங்கள் ஒன்றுக்கொன்று ஏறத்தாழ சமநிலை பெறும் இக்கட்டங்களில் அரசு அதிகாரம் வெளித்தோற்றத்துக்கு நடுவர் போலாகி, சொற்ப காலத்துக்கு இரு தரப்பாரிடமிருந்தும் ஓரளவு சுயேச்சையுடையதாகிறது...'' பதினேழு, பதினெட்டாம் நூற்ருண்டுகளின் வரம்பற்ற முடியாட்சி முறையும், பிரான்சில் முதலாவது, இரண்டாவது சாம்ராஜ்யங்களது போனப்பார்ட் ஆட்சியும்[30] ஜெர்மனியில் பிஸ்மார்க் ஆட்சியும் இத்தகையனவே.

குடியரசு ருஷ்யாவில், கேரென்ஸ்கி அரசாங்கம் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளுடைய தலைமையின் காரணமாய், சோவியத்துகள் ஏற்கெனவே ஆற்றலிழந்தும் முதலாளித்துவ வர்க்கம் அவற்றைக் கலைக்க இன்னமும் பலம் பெருமலும் இருந்த ஒரு தருணத்தில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடத் தொடங்கியது முதலாய் இத்தகையதே என்பதையும் இங்கு நாம் குறிப்பிடலாம். எங்கெல்ஸ் மேலும் எழுதுகிருர்:

> ஜனநாயகக் குடியரசில் ''செல்வமானது மறைமுகமாய், ஆனல் முன்னிலும் திடமாய் அதிகாரம் செலுத்துகிறது''. முதலாவதாக ''நேரடியாய் அதிகாரிகளுக்கு லஞ்சம் தருவதன் மூலமும்'' (அமெரிக்கா), இரண்டாவதாக ''அரசாங்கத்தைப் பங்கு மார்க்கெட்டுடன் கூட்டு சேரச் செய்வதன்'' மூலமும் (பிரான்சும் அமெரிக்காவும்) அது அதிகாரம் செலுத்துகிறது.

எல்லா வகையான ஜனநாயகக் குடியரசுகளிலும் தற்போது ஏகாதிபத்தியமும் வங்கிகளுடைய ஆதிக்கமும், செல்வத்தின் வரம்பில்லா அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கும் செயல்படுத்துவதற்குமான இவ்விரு வழிகளையும் தனிப் பெருங் கலையாய் ''வளரச் செய்துவிட்டன''. உதாரணமாய், ருஷ்ய ஜனநாயகக் குடியரசின் ஆரம்ப மாதங்களில்,—

''சோஷலிஸ்டுகளான'' சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு மாலையிட்டுக் கூட்டு அரசாங்கத்தில் கூடித் தேன்நிலவு கொண்டாடியபோது எனலாம்—திரு பல்ச்சீன்ஸ்கி, முதலாளிகளையும், அவர்களுடைய கொள்ளைக்காரச் செயல்களையும், இராணுவக் காண்டிராக்டுகள் மூலம் அரசை அவர்கள் சூறையாடியதையும் கட்டுப்படுத்துவதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும் தடுத்து நின்றார். பிற்பாடு அமைச்சரவையிலிருந்து திரு பல்ச்சீன்ஸ்கி ராஜினமா செய்ததும் (முற்றிலும் அவரையே ஒத்த மற்றொரு பல்ச்சீன்ஸ்கிதான் அவரிடத்தில் அமர்ந்தார் என்பதைக் கூறத் தேவையில்லை), ஆண்டுக்கு 1,20,000 ரூபிள் சம்பளத்தில் சொகுசான வேலை கொடுத்து முதலாளிகள் அவருக்கு ''வெகுமதி'' அளித்தார்களே, அதை என்னென்பது? நேரடியான அல்லது மறைமுகமான லஞ்சம் என்பதா? அரசாங்கத்துக்கும் சிண்டிக்கேட்டுகளுக்கும் இடையிலான கூட்டு என்பதா? அல்லது ''வெறும்'' நேச உறவுகள் என்பதா? செர்னேவ்கள், தெஸெரெத்தேலிகள், அவ்க்சேன்தியெவ்கள், ஸ்கோபெலெவ்கள் ஆகியோர் ஆற்றும் பணி என்ன? இவர்கள் கஜானவைச் சூறையாடும் கோடீஸ்வரர்களின் ''நேரடிக்'' கூட்டாளிகளா? அல்லது மறைமுகக் கூட்டாளிகளா?

ஜனநாயகக் குடியரசில் ''செல்வத்தின்'' சக்கராதிபத்தியம் மேலும் உறுதியாகிவிடுவதன் காரணம் என்னவெனில், அரசியல் பொறியமைவின் தனிப்பட்ட குறைபாடுகளையோ, முதலாளித்துவத்தின் மோசமான அரசியல் கவசத்தையோ அது ஆதாரமாய்க் கொண்டிருக்கவில்லை என்பதுதான். ஜனநாயகக் குடியரசுதான் முதலாளித்துவத்துக்கு மிகச் சிறந்த அரசியல் கவசமாகும். ஆகவே மூலதனம் இந்த மிகச் சிறந்த கவசத்தை (பல்ச்சீன்ஸ்கிகள், செர்னேவ்கள், தெஸெரெத்தேலிகள் முதலானேர் மூலம்) பெற்றுக் கொண்டதும், அது முதலாளித்துவ-ஜனநாயகக் குடியரசின் ஆட்களிலோ, நிறுவன ஏற்பாடுகளிலோ, கட்சிகளிலோ ஏற்படும் எந்த மாற்றத்தாலும் அசைக்க முடியாதபடி திடமாகவும் உறுதியாகவும் தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்கிறது.

அனைத்து மக்கள் வாக்குரிமையை எங்கெல்ஸ் மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்துக்குரிய கருவி என்பதாய் அழைப்பதையும் நாம் குறிப்பிட வேண்டும். ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் நெடுங்கால அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் அவர் பின்வருமாறு கூறுகிறார்:

> அனைத்து மக்களின் வாக்குரிமை, ''தொழிலாளி வர்க்கத்தினுடைய முதிர்ச்சியின் அளவுகோலாகும். தற்கால அரசில் அது இதற்கு மேல் எதுவாகவும் இருக்காது, இருக்கவும் முடியாது.''

நம்முடைய சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் மென்ஷிவிக்குகளையும் போன்ற குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும், இவர்களுடைய உடன் பிறந்த சகோதரர்களான மேற்கு ஐரோப்பிய சமூக-தேசியவெறியர்கள், சந்தர்ப்பவாதிகள் அனைவரும் அனைத்து மக்களின் வாக்குரிமையிடமிருந்து இதற்கு ''மேற்பட்ட'' ஒன்றை எதிர்ப்பார்க்கிறார்கள். ''**இன்றைய** அரசில்'' அனைத்து மக்களின் வாக்குரிமை உழைப்பாளி மக்களில் பெரும்பாலானேரின் சித்தத்தை மெய்யாகவே புலப்படுத்திக் காட்ட வல்லது, இந்தச் சித்தம் நிறைவேற வழி செய்ய வல்லது என்ற பொய்க் கருத்தை இவர்கள் கொண்டுள்ளனர்; மக்களுக்கும் இதனை ஊட்டி வருகின்றனர்.

இங்கு இந்தப் பொய்க் கருத்தைச் சுட்டிக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்கிறோம். எங்கெல்சின் முற்றிலும் தெளிவான, கருரான, ஸ்தூலமான உரை ''அதிகாரபூர்வமான'' (அதாவது சந்தர்ப்பவாத) சோஷலிஸ்டுக் கட்சிகளின் பிரசாரத்திலும் கிளர்ச்சியிலும் இடையருது திரித்துப் புரட்டப் படுவதை மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம். எங்கெல்ஸ் இங்கு உதறியெறியும் இந்தக் கருத்து முழுக்க முழுக்கப் பொய்யானதென்பது ''**இன்றைய**'' அரசு குறித்த மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துக்களைப் பற்றி மேலும் தொடர்ந்து நாம் கூறுவதிலிருந்து விவரமாய்ப் புலப்படும்.

எங்கெல்ஸ் தமது கருத்துக்களை மிகவும் பெயர் பெற்ற தமது நூலில் பின்வருமாறு தொகுத்துக் கூறுகிறார்:

''ஆகவே அரசு அனாதிக் காலம் முதலாய் இருந்துள்ள ஒன்றல்ல. அரசின்றியே நிலவிய சமுதாயங்கள், அரசையும் அரசு அதிகாரத்தையும் அறியாத சமுதாயங்கள் இருந்திருக்கின்றன. பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில்—சமுதாயம் வர்க்கங்களாய்ப் பிளவுண்டதுடன் இணைந்த ஒரு கட்டத்தில்—அரசு இந்தப் பிளவின் காரணமாய் இன்றியமையாததாகியது. இந்த வர்க்கங்கள் பொருளுற்பத்திக்கு இன்றியமையாத் தேவையாய் இருப்பது மறைவதோடு, நேரடியாகவே இடையூறுமாகிவிடும் ஒரு கட்டத்தைப் பொருளுற்பத்தி வளர்ச்சியில் இப்பொழுது நாம் விரைவாய் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். முந்திய ஒரு கட்டத்தில் வர்க்கங்கள் தவிர்க்க முடியாதவாறு உதித்தெழுந்தது போலவே தவிர்க்க முடியாதவாறு அவை மறைந்தொழியும். அவற்றுடன்கூடவே அரசும் தவிர்க்க முடியாதவாறு மறைந்தொழியும். சமுதாயமானது உற்பத்தியாளர்களுடைய சுதந்திரமான, சரிசமத்துவமான கூட்டமைப்பின் அடிப்படையில் பொருளுற்பத்தியைப் புனரமைத்து, அரசுப் பொறியமைவு அனைத்தையுமே அதற்கு அப்பொழுது உரித்தானதாகிவிடும் இடத்தில், அதாவது தொல்பொருள் காட்சிக்கூடத்தில், கைராட்டைக்கும் வெண்கலக் கோடரிக்கும் பக்கத்திலே கொண்டு போய் வைத்துவிடும்''.

இன்றைய சமூக-ஜனநாயகவாதிகளின் பிரசார, கிளர்ச்சி வெளியீடுகளில் இந்த மேற்கோளைக் காண்பது அரிதாகிவிட்டது. அப்படி இது காணப்படும்போதுகூட, பூஜையறைப் படத்தைத் தொழுதெழுகிறவரின் பாணியிலேதான், அதாவது சம்பிரதாய முறையில் எங்கெல்சுக்கு மரியாதை செலுத்தும் பாணியிலேதான் பெரும்பாலும் எடுத்தாளப்படுகிறது. ''அரசுப் பொறியமைவு அனைத்தையும் தொல்பொருள் காட்சிக்கூடத்தில்'' கொண்டுபோய் வைப்பதில் அடங்கியுள்ள

புரட்சியின் வீச்சையும் ஆழத்தையும் மதிப்பிட்டறிய எம் முயற்சியும் எடுக்கப்படுவதில்லே. அரசுப் பொறியமைவு என்று எங்கெல்ஸ் குறிப்பிடுவதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதாகக்கூட பல சந்தர்ப்பங்களில் தெரியக் காணோம்.

### 4. அரசு ''உலர்ந்து உதிர்வதும்'' பலாத்காரப் புரட்சியும்

அரசு ''உலர்ந்து உதிர்வது'' பற்றி எங்கெல்ஸ் கூறிய சொற்கள் மிகவும் பிரபலமானவை; அடிக்கடி மேற்கோளாய் எடுத்தாளப்படுபவை; மார்க்சியத்தைச் சந்தர்ப்பவாதத் துக்கு இசைவானதாக்குவதற்காக வழக்கமாய்ச் செய்யப் படும் புரட்டின் சாரப் பொருளே மிகத் தெளிவாகப் புலப் படுத்துகிறவை. ஆகவே இவற்றை நாம் விவரமாய்ப் பரி சீலிக்க வேண்டும். இவை எங்கிருந்து எடுக்கப்பட்டனவோ அந்த வாக்குவாதம் முழுவதையுமே நாம் மேற்கோளாய்த் தந்தாக வேண்டும்.

> ''பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப் பற்றி உற்பத்திச் சாதனங்களே முதலில் அரசு உடைமையாக்குகிறது. ஆனுல் இதன் மூலம் அது, பாட்டாளி வர்க்கமாகத் தான் இருத்தலே ஒழித்துக் கொள்கிறது, எல்லா வர்க்க வேறுபாடுகளேயும் வர்க்கப் பகைமைகளேயும் ஒழித்திடுகிறது, அரசு அரசாய் இருத்தலேயும் ஒழித்திடுகிறது. இது வரை சமுதாயம் வர்க்கப் பகைமைகளின் அடிப்படையில் அமைந்திருந்ததால் அதற்கு அரசு தேவைப்பட்டது; அதாவது, குறிப்பிட்ட சுரண்டும் வர்க்கத்துக்கான ஒழுங்கமைப்பு ஒன்று தேவைப்பட்டது. இந்தச் சுரண்டும் வர்க்கத்துக்குரிய பொருளுற்பத்திப் புறநிலேமைகளே நிலேநாட்டுவதற்காகவும், இதன் பொருட்டு இன்னும் முக்கியமாய், சுரண்டப் படும் வர்க்கத்தை அந்தந்தப் பொருளுற்பத்தி அமைப் பாலும் (அடிமை முறை, பண்ணேயடிமை முறை, கூலியுழைப்பு முறை) நிர்ணயிக்கப்படும் ஒடுக்குமுறை

நிலைமைகளில் பலவந்தமாய் இருத்தி வைப்பதற்காக வும் இந்தச் சமுதாயத்துக்கு அரசு தேவைப்பட்டது. சமுதாயம் அனைத்தின் அதிகாரபூர்வமான பிரதிநிதி யாக, கண்கூடான அதன் உருவகத் திரட்சியாக அரசு விளங்கிற்று. ஆனால் எந்த வர்க்கம் தன்னுடைய காலத் தில் சமுதாயம் முழுவதுக்கும் தானே பிரதிநிதியாக இருந் ததோ அந்த வர்க்கத்தின் அரசாய் இருந்த அள வுக்குத்தான், அதாவது புராதன காலத்தில் அடிமை யுடைமைக் குடிகளின் அரசாகவும், இடைக் காலத்தில் பிரபுக்களின் அரசாகவும், நாம் வாழும் இக்காலத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாகவும் இருந்த அள வுக்குத்தான், அரசால் இவ்வாறு விளங்க முடிந்தது. இறுதியில் அரசானது சமுதாயம் முழுமைக்கும் மெய் யான பிரதிநிதியாகிவிடும்போது, அது தன்னைத் தேவையற்றதாக்கிக் கொள்கிறது. இனி கீழ்ப்படுத்தி வைக்க வேண்டிய சமூக வர்க்கம் எதுவும் இல்லாமற் போனதும், வர்க்க ஆதிக்கமும் பொருளுற்பத்தி முறை யில் தற்போதுள்ள அராஜகத்தின் அடிப்படையில் நடைபெறும் தனியார் வாழ்வுப் போராட்டமும் இந்தப் போராட்டம் காரணமாய் எழும் மோதல்களும் மட்டு மீறிய செயல்களும் நீக்கப்பட்டதும், கீழ்ப்படுத்தி வைப்பதற்கு எதுவும் இல்லாமற் போகிறது, ஆதலால் தனிவகைப் பலவந்த சக்தியை—அரசினை—அவசியமாக் கும் எதுவும் இல்லாமற் போகிறது. அரசானது சமுதா யம் முழுமையின் பிரதிநிதியாக மெய்யாகவே முன் வந்து புரிந்திடும் முதலாவது செயல்—அதாவது பொரு ளுற்பத்திச் சாதனங்களைச் சமுதாயத்தின் உடைமை யாக்கிக் கொள்ளும் இச்செயல்—அரசு என்ற முறை யில் சுயேச்சையாய் அது புரிந்திடும் இறுதிச் செயலாக வும் அமைந்துவிடுகிறது. சமூக உறவுகளில் அரசின் தலையீடு ஒவ்வொரு துறையிலுமாய்த் தேவையற்றதாகி, பிற்பாடு தானாகவே தணிந்து அணைந்துவிடுகிறது. ஆட் களை ஆளும் அரசாங்கமானது பொருள்களது நிர்வகிப் பாய், பொருளுற்பத்தி வேலைகளது நடப்பாய் மாறி

விடுகிறது. அரசு 'ஒழிக்கப்படுவதில்லை'. அது உலர்ந்து உதிர்ந்துவிடுகிறது. 'சுதந்திர மக்கள் அரசு' என்னும் தொடர் எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும்—கிளர்ச்சியை முன்னிட்டு சில நேரங்களில் எந்த அளவுக்கு அதன் பிரயோகம் நியாயமென்பதையும், முடிவில் விஞ்ஞான வழியில் அது எவ்வளவு குறைபாடானதென்பதையும்—அராஜகவாதிகளுடைய கோரிக்கையாகச் சொல்லப்படும் ஒரே நொடியில் அரசு ஒழிக்கப் பட வேண்டுமென்ற கோரிக்கை எந்த அளவுக்கு மதிக்கத்தக்கது என்பதையும் மேற்கூறியது புலப்படுத்துகிறது'' (விஞ்ஞானத்தில் திருவாளர் ஒய்கென் டூரிங்கின் புரட்சி [டூரிங்குக்கு மறுப்பு], பக்கங்கள் *301-03*, மூன்ருவது ஜெர்மன் பதிப்பு).

கருத்து வளத்தில் தலைசிறந்து விளங்கும் எங்கெல்சின் இந்த வாக்குவாதத்தில் ஒரேயொரு விவரம் மட்டும்தான் நவீன கால சோஷலிஸ்டுக் கட்சிகளுடைய சோஷலிசச் சிந்தனையில் இடம் பெறுகிறதெனத் திடமாய்க் கூறலாம். அரசு ''ஒழிக்கப்பட வேண்டும்'' என்னும் அராஜகவாதக் கோட்பாட்டுக்கு மாருக, மார்க்சின் கருத்துப்படி அரசு ''உலர்ந்து உதிர்ந்துவிடும்'' என்கிற ஒரேயொரு விவரம் மட்டும்தான் ஏற்கப்பட்டுள்ளது. மார்க்சியத்தை இந்த அளவுக்கு வெட்டிக் குறுக்குவதானது மார்க்சியத்தைச் சந்தர்ப்பவாதமாய்ச் சிறுமைப்படுத்துவதே அன்றி வேறல்ல. ஏனெனில் இந்த ''வியாக்கியானம்'' பாய்ச்சல்களும் சூருவளிகளும் இல்லாமலே, புரட்சி இல்லாமலே, மெதுவாகவும், ஏன் பையப் பையவுங்கூட நடந்தேறும் மாறுதல் என்கிற தெளிவற்ற கருத்தை மட்டும்தான் விட்டுவைக்கிறது. அரசு ''உலர்ந்து உதிர்வது'' பற்றி தற்போது பரவலாய்—பிரபலமாய் என்றுகூடச் சொல்லலாம்—நிலவும் கருத்தினை, புரட்சியை நிராகரிக்கும் கருத்தெனக் கொள்ளாவிடினும், நிச்சயமாய்ப் புரட்சியை முனை மழுங்கச் செய்யும் கருத்தென்றே கொள்ள வேண்டும்.

மார்க்சியத்தை அப்பட்டமாய்த் திரித்துப் புரட்டும் ''வியாக்கியானமே'' ஆகும் இது. முதலாளித்துவ வர்க்கத்

துக்குத்தான் இதனால் அனுகூலம். தத்துவத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், உதாரணமாய் மேலே நாம் முழுமையாய் எடுத்தளித்த எங்கெல்சின் ''தொகுப்பு உரை'' சுட்டிக் காட்டும் மிக முக்கிய நிலைமைகளையும் காரணக் கூறுகளையும் புறக்கணிப்பதையே இது அடிப்படையாய்க் கொண்டுள்ளது.

முதலாவதாக, எங்கெல்ஸ் தமது உரையின் தொடக்கத்திலேயே, பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் அது ''அரசு அரசாய் இருத்தலை ஒழித்திடுகிறது'' என்கிறார். இதன் பொருள் குறித்து சிந்திப்பது அவசியமெனக் கருதப்படுவதில்லை. பொதுவாய் இது சிறிதும் கவனியாது விடப்படுகிறது, அல்லது எங்கெல்சிடம் இருந்த ஒரு வகை ''ஹெகலியப் பலவீனத்தின்'' பாற்பட்டதாய்க் கருதப்படுகிறது. ஆனால் உண்மை என்னவெனில், இச்சொற்கள் மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளில் ஒன்றான 1871ஆம் ஆண்டின் பாரிஸ் கம்யூனது அனுபவத்தைச் சுருக்கமாய் எடுத்துரைக்கின்றன. இது குறித்து உரிய இடத்தில் நாம் விவரமாய்ப் பேசுவோம். உண்மை என்னவெனில், எங்கெல்ஸ் இங்கு பாட்டாளி வர்க்கப் புரட்சி முதலாளித்துவ அரசை ''ஒழித்திடுவது'' குறித்துப் பேசுகிறார். அரசு ''உலர்ந்து உதிர்வது'' பற்றிய சொற்கள் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு பாட்டாளி வர்க்க அரசின் மிச்சங்களைக் குறிப்பனவாகும். எங்கெல்சின் கருத்துப்படி முதலாளித்துவ அரசு ''உலர்ந்து உதிர்வதில்லை''; புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்கத்தால் ''ஒ ழி க் க ப் ப டு கி ற து''. இந்தப் புரட்சிக்குப் பிறகு உலர்ந்து உதிர்வது பாட்டாளி வர்க்க அரசு அல்லது அரை-அரசே ஆகும்.

இரண்டாவதாக, அரசு என்பது ''தனிவகைப் பலவந்த சக்தியாகும்''. தேர்ந்த தெளிவுடன் இங்கு எங்கெல்ஸ் இந்த அற்புதமான, ஆழ்ந்த பொருட் செறிவுள்ள இலக்கணத்தை வகுத்தளிக்கிறார். இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், பாட்டாளி வர்க்கத்தை முதலாளித்துவ வர்க்கம் அடக்குவதற்காக, கோடானுகோடியான உழைப்பாளி மக்களை ஒரு சில செல்வந்தர்கள் ஒடுக்குவதற்காக அமைந்த ''தனி

வகைப் பலவந்த சக்திக்குப்'' பதிலாய், முதலாளித்துவ வர்க்கத்தைப் பாட்டாளி வர்க்கம் அடக்குவதற்கான ''தனி வகைப் பலவந்த சக்தியை'' (பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை) அமைத்தாக வேண்டும். ''அரசு அரசாய் இருத்தலை ஒழித்திடுவது'' என்பதன் அர்த்தம் இதுவே. பொருளுற்பத்திச் சாதனங்களைச் சமுதாயத்தின் உடைமையாக்கிக் கொள்ளும் ''செயல்'' இதுவேதான். ஒரு (முதலாளித்துவ) ''தனிவகை சக்திக்குப்'' பதிலாய் மற்றொரு (பாட்டாளி வர்க்க) ''தனிவகை சக்தியை'' இத்தகைய முறையில் அமைத்திடுவது ''உலர்ந்து உதிரும்'' வடிவில் நடைபெறுவது சாத்தியமல்ல என்பது கூறாமலே விளங்கக் கூடியது.

மூன்றாவதாக, அரசு ''உலர்ந்து உதிர்வது'' பற்றியும், இன்னுங்கூட பளிச்சென விளங்கும் வண்ணம் கவர்ச்சிகரமாய் அமைந்த ''தானாகவே தணிந்து அணைந்துவிடுவது'' பற்றியும் பேசுகையில் எங்கெல்ஸ், ''பொருளுற்பத்திச் சாதனங்களைச் சமுதாயம் அனைத்தின் உடைமையாக்கிக் கொண்டதற்குப்'' பி ற் ப ட் ட காலத்தையே, அதாவது சோஷலிசப் புரட்சிக்குப் பி ற் ப ட் ட காலத்தையே மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடுகிறார். இக்காலத்தில் ''அரசின்'' அரசியல் வடிவம் முழு அளவிலான முழு நிறைவான ஜனநாயகமாகும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே எங்கெல்ஸ் இங்கு ஜ ன நா ய க ம் ''தானாகவே தணிந்து அணைந்துவிடுவது'' அல்லது ''உலர்ந்து உதிர்ந்துவிடுவது'' பற்றிப் பேசுகிறார்; வெட்கங் கெட்ட முறையில் மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டும் சந்தர்ப்பவாதிகள் யாருடைய மண்டையிலும் இது நுழைவதே இல்லை. முதல் பார்வைக்கு இது மிக்க விநோதமாகவே தோன்றுகிறது. ஆனால் ஜனநாயகம் என்பதும் ஓர் அ ர சே ஆகும், ஆதலால் அரசு மறையும்போது அதுவும் மறைந்தே ஆக வேண்டும் என்பது பற்றி ஆலோசிக்காதவர்களுக்குத்தான் இது ''புரியாததாய்'' இருக்கும். புரட்சியால் மட்டுமே முதலாளித்துவ அரசை ''ஒழிக்க'' முடியும். பொதுவாக அரசு எனப்படுவது, அதாவது முழு அளவிலான, முழு நிறைவான ஜனநாயகம் எனப்படுவது ''உலர்ந்து உதிரவே'' முடியும்.

நான்காவதாக, ''அரசு உலர்ந்து உதிர்கிறது'' என்ற புகழ் பெற்ற தமது கோட்பாட்டை வகுத்தளித்ததும் எங்கெல்ஸ் இந்தக் கோட்பாடு சந்தர்ப்பவாதிகள், அராஜகவாதிகள் ஆகிய இரு சாராரின் கூற்றுக்கும் எதிரானது என்பதைத் திட்டவட்டமாய் உடனே விளக்குகிறார். இவ்வாறு விளக்குகையில், ''அரசு உலர்ந்து உதிர்கிறது'' என்ற நிர்ணயிப்பிலிருந்து பெறப்படுவதில் சந்தர்ப்பவாதிகளுக்கு விரோதமான முடிவை எங்கெல்ஸ் முன்னணியிலே நிறுத்துகிறார்.

அரசு ''உலர்ந்து உதிர்வது'' பற்றி படித்தோ, கேட்டோ இருப்போரில் பத்தாயிரத்தில் 9,990 பேர் எங்கெல்ஸ் எடுத்துரைத்த முடிவுகள் விரோதமாயிருந்தது அராஜகவாதிகளுக்கு மட்டுமல்ல என்பதைச் சிறிதும் உணராதவர்களாகவோ, ஞாபகத்தில் வைத்திராதவர்களாகவோதான் இருப்பார்கள் என்று பந்தயம் கட்டலாம். எஞ்சியுள்ள பத்துப் பேரில், ஒன்பது பேர் ''சுதந்திர மக்கள் அரசு'' என்பதன் பொருள் தெரியாதவர்களாகவோ, இந்த முழக்கத்தைத் தாக்குவது சந்தர்ப்பவாதிகளைத் தாக்குவதாக அமைவது ஏனென்று அறியாதவர்களாகவோதான் இருப்பார்கள். வரலாறு இவ்விதம்தான் எழுதப்படுகிறது! மாபெரும் புரட்சிப் போதனை இவ்விதம்தான் சன்னம் சன்னமாய்ப் பொய்யாகத் திரித்துக் கூறப்பட்டு நடப்பிலுள்ள அற்பவாதத்துக்கு ஏற்றதாக்கப்படுகிறது. அராஜகவாதிகளுக்கு விரோதமான முடிவு ஆயிரக் கணக்கான முறை திரும்பத் திரும்பப் பறைசாற்றப்பட்டிருக்கிறது; கொச்சைப்படுத்தப் பட்டுப் படுமோசமான வடிவத்தில் மக்களுடைய மனதில் ஆழப் பதிக்கப்பட்டு தப்பெண்ணமாய் இறுகிவிடும்படி வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் சந்தர்ப்பவாதிகளுக்கு விரோதமான முடிவு மழுக்கடிக்கப்பட்டு ''மறக்கப்பட்டுவிட்டது''!

''சுதந்திர மக்கள் அரசு'' என்பது 1870-80ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளது வேலைத்திட்டத்தில் குறிக்கப்பட்ட கோரிக்கையாய் அமைந்து அவர்களிடையே பெருவழக்காகிவிட்ட முழக்கமாயிருந்தது. இந்த முழக்கம் ஜனநாயகம் என்னும் கருத்தோட்டத்தை ஆடம்பரமான அற்பவாதப் பாணியில் சித்திரிக்கிறதென்பதைத்

தவிர வேறு அரசியல் உள்ளடக்கம் சிறிதும் இல்லாததே ஆகும். சட்டமுறையில் அனுமதிக்கப்பட்ட வழியில் சூசகமாய் அது ஜனநாயகக் குடியரசைக் குறித்தவரை, கிளர்ச்சியை முன்னிட்டு ''சில நேரங்களில்'' அதைப் பிரயோகிப்பது ''நியாயமே'' என்பதை எங்கெல்ஸ் ஏற்றுக் கொண்டார். ஆனுல் அது சந்தர்ப்பவாத முழக்கமே ஆகும். ஏனெனில் அது முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு மெருகிட்டி மினுக்கச் செய்வதுடன் நில்லாமல், பொதுவாய் அரசு குறித்த சோஷலிச விமர்சனத்தைப் புரிந்து கொள்ளவும் தவறிவிடுகிறது. ஜனநாயகக் குடியரசானது முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு மிகச் சிறந்த அரசு அமைப்பாகுமென நாம் அதனை ஆதரிக்கிறோம். ஆனுல் மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசிலுங்கூட கூலியடிமையிலேதான் மக்கள் உழல வேண்டியிருக்கிறதென்பதை மறக்க நமக்கு உரிமை இல்லை. மேலும் ஒவ்வொரு அரசும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அடக்கியாளுவதற்கான ''தனிவகை சக்தியே'' ஆகும். ஆகவே, எந்தவொரு அரசும் சுதந்திரமானதும் அல்ல, மக்கள் அரசும் அல்ல. மார்க்சும் எங்கெல்சும் *1870-80*ஆம் ஆண்டுகளில் தமது கட்சித் தோழர்களுக்கு இதைத் திரும்பத் திரும்ப விளக்கிக் கூறினர்.

ஐந்தாவதாக, அரசு உலர்ந்து உதிர்வது பற்றிய கருத்து—யாரும் மறக்காது நினைவில் கொண்டுள்ள இந்தக் கருத்து—காணப்படும் எங்கெல்சின் அதே நூலில், பலாத்காரப் புரட்சியின் முக்கியத்துவம் குறித்த கருத்தும் அடங்கியிருக்கிறது. பலாத்காரப் புரட்சியின் பாத்திரம் குறித்து எங்கெல்ஸ் அளிக்கும் வரலாற்று வழிப்பட்ட பகுத்தாய்வு, பலாத்காரப் புரட்சியைப் போற்றும் மெய்யான புகழுரையாகிவிடுகிறது. இது ''யாருக்கும் நினைவில் இல்லை''. நவீன கால சோஷலிஸ்டுக் கட்சிகளில் இந்தக் கருத்தின் முக்கியத்துவம் குறித்துப் பேசுவதும், ஏன் நினைப்பதுங்கூட தகாததாகிவிட்டது. இக்கட்சிகள் மக்களிடையே நடத்தும் அன்றாடப் பிரசாரத்திலும் கிளர்ச்சியிலும் இக்கருத்துக்கு எவ்விதப் பங்கும் அளிக்கப்படுவதில்லை. ஆயினும் இக்கருத்து அரசு

''உலர்ந்து உதிரும்'' கருத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்த தாகும்.

இதோ இருக்கிறது எங்கெல்சின் கருத்து:

> ''...ஆனல் வரலாற்றில், பலாத்காரம் இன்னெரு பாத்திரமும்'' (பேய்த்தனமான சக்திக்குரிய பாத்திரத் தை அன்னியில் இன்னென்றும்) ''ஆற்றுகிறது; புரட்சிப் பாத்திரமும் ஆற்றுகிறது. மார்க்சின் சொற்களில் கூறுவதெனில், புதிய சமுதாயத்தைக் கருக் கொண் டுள்ள ஒவ்வொரு பழைய சமுதாயத்துக்கும் அந்தப் பலாத்காரம் மருத்துவத் தாதியாய்ச் செயல்படுகிறது; சமூக இயக்கமானது செத்து மடிந்து இறுகிப்போய் விட்ட அரசியல் வடிவங்களைத் தகர்த்துக் கொண்டு பலவந்தமாய்த் தனக்குப் பாதை வகுத்துக் கொள்ள உதவும் கருவியாய்ச் செயல்படுகிறது. இவையெல்லாம் குறித்து திருவாளர் டூரிங் ஒரு வார்த்தைகூடச் சொல்ல வில்லை. சுரண்டலை அடிப்படையாய்க் கொண்ட ஒரு பொருளாதார முறையைக் கவிழ்க்கப் பலாத்காரம் ஒருவேளை அவசியமாகி விடலாமென்று ஏக்கத் தவிப் புக்கும் முனகலுக்கும் இடையே ஒருவாறு அவர் ஒத்துக் கொள்கிருர்—இது துரதிர்ஷ்டமே என்கிருர், ஏனெ னில் பலாத்காரத்தின் எவ்வகையான பிரயோகமும் அதைப் பிரயோகிப்பவரைச் சீரழியச் செய்கிறதாம். வெற்றிகரமான ஒவ்வொரு புரட்சியும் அறநெறித் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் அளவு கடந்த ஆர்வமும் வேகமும் அளித்திடுவதைப் பொருட்படுத் தாமல் புறக்கணித்துவிட்டுக் கூறப்படுகிறது இது! அது வும் ஜெர்மனியிலே, முப்பதாண்டுப் போரின்[31] அவக் கேட்டைத் தொடர்ந்து தேச மனேபாவத்தில் ஊடுருவி விட்ட அடிமைப் புத்தியானது பலாத்கார மோதலால் —மக்கள் இதில் இறங்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுவது சாத்தியமே—ஒழித்துக் கட்டப்படுமென்ற அனுகூலமாவது கிட்டும் நிலையிலுள்ள ஜெர்மனியிலே, இது கூறப்படுகிறது. பாதிரியாருக்குரிய உப்புச்சப்பில்

லாத, செயலிழந்த, கிழடு தட்டிய இந்தச் சிந்தனை இதுவரை வரலாறு கண்டறிந்த கட்சிகளில் மிகவும் புரட்சிகரக் கட்சியின் மீது தன்னை இருத்திக் கொண்டு விடலாமென நினைக்கிறது!'' (பக்கம் 193, மூன்றுவது ஜெர்மன் பதிப்பு, பாகம் 2, அத்தியாயம் 4ன் முடிவில்.)

பலாத்காரப் புரட்சியைப் போற்றும் இந்தப் புகழுரையை எங்கெல்ஸ் 1878க்கும் 1894க்கும் இடையில்—அதாவது அவர் இறக்கும் தருணம் வரையில்—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் கவனத்துக்கு ஓயாது கொண்டுவந்த வண்ணமிருந்தார். இதனையும் அரசு ''உலர்ந்து உதிரும்'' தத்துவத்தையும் இணைத்து ஒருமித்த ஒரே தத்துவமாக்குவது எப்படி?

வழக்கமாய்க் கதம்பத் தேர்வுவாத வழியில், முதலில் ஒன்றும் பிற்பாடு மற்றென்றுமாய்த் தான்தோன்றித்தனமாய் (ஆதிக்கம் செலுத்துவோர் மகிழும் பொருட்டு) கொள்கை கோட்பாடின்றி அல்லது குதர்க்கவாத முறையில் தேர்வு செய்யப்பட்டு இவை இரண்டும் இணைக்கப்படுகின்றன. நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது சந்தர்ப்பங்களிலும் அதற்கும் கூடுதலாகவும்''உலர்ந்து உதிரும்''கருத்து முன்னணியிலே நிறுத்தப்படுகிறது. இயக்கவியல் கைவிடப்பட்டு அதற்குப் பதிலாய்க் கதம்பத் தேர்வுவாதம் கைக்கொள்ளப்படுகிறது —மார்க்சியம் சம்பந்தமான அதிகாரபூர்வமான இன்றைய சமூக-ஜனநாயக வெளியீடுகளில் இதுவே மிகவும் பரவலாகக் காணப்படும் சர்வசாதாரண நடைமுறை. இவ்வகையான மாருட்டம் ஒன்றும் புதியதல்ல; முதுபெரும் கிரேக்கத் தத்துவவியலின் வரலாற்றிலேகூட காணப்பட்டதுதான். சந்தர்ப்பவாத முறையில் மார்க்சியத்தைப் புரட்டிப் பொய்யாக்குவதில், இயக்கவியலுக்குப் பதிலாய்க் கதம்பத் தேர்வுவாதத்தைக் கைக்கொள்வதுதான் மக்களை ஏமாற்ற மிகவும் எளிய வழி. இது பிரமையான போலி மனநிறைவு அளிக்கிறது. நிகழ்ச்சிப் போக்கின் எல்லாத் தரப்புகளையும், வளர்ச்சியின் எல்லாப் போக்குகளையும், முரண்பட்டு மோதிக் கொள்

ளும் எல்லாச் செயற்பாடுகளேயும், இன்ன பிறவற்றையும் இது கணக்கில் எடுத்துக் கொள்வதாய்த் தோன்றுகிறது. ஆனல் உண்மையில் இது சமூக வளர்ச்சிப் போக்கைப் பற்றி முழுமையான ஒருமித்த புரட்சிகரக் கருத்தோட்டம் தருவதே இல்லே.

பலாத்காரப் புரட்சி தவிர்க்க முடியாததென்ற மார்க்ஸ், எங்கெல்சின் போதனே முதலாளித்துவ அரசைக் குறித்ததாகும் என்பதை ஏற்கனவே நாம் கூறியிருக்கிறேம், பிற்பாடு இன்னும் விவரமாய்ச் சொல்வோம். முதலாளித்துவ அரசை நீக்கி அதனிடத்தில் பாட்டாளி வர்க்க அரசை (பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை) நிறுவுவது ''உலர்ந்து உதிரும்'' நிகழ்ச்சிப் போக்கின் வாயிலாய் நடந்தேற முடியாது; பொது விதிக்கு இணங்க இது பலாத்காரப் புரட்சியின் வாயிலாகவே நடந்தேற முடியும். பலாத்காரப் புரட்சியைப் போற்றும் எங்கெல்சின் புகழுரை மார்க்ஸ் திரும்பத் திரும்ப கூறியதற்கு முற்றிலும் இசைவானதே (**மெய்யறிவின் வறுமை, கம்யூனிஸ்டு அறிக்கை** இவற்றின் கடைசி வாசகங்கள் பலாத்காரப் புரட்சி தவிர்க்க முடியாததென்பதைப் பெருமிதத்தோடும் பகிரங்கமாகவும் பறைசாற்றுவதைப் பார்க்கவும்; இதன்பின் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு, 1875ஆம் ஆண்டின் கோத்தா வேலேத்திட்டத்தை[32] விமர்சனம் செய்கையில் அந்த வேலேத்திட்டத்தின் சந்தர்ப்பவாதத் தன்மையைத் தயவு தாட்சண்யமின்றி கண்டித்து மார்க்ஸ் எழுதியதைப் பார்க்கவும்). எங்கெல்சின் இந்தப் புகழுரை வெறும் ''உணர்ச்சி வேகமோ'', உத்வேக முழக்கமோ, சண்டப் பிரசண்டமோ அல்ல. பலாத்காரப் புரட்சி பற்றிய திட்டவட்டமான இதே கருத்தோட்டத்தை முறையாய் வெகுஜனங்களின் மனதில் ஆழப் பதியச் செய்வது அவசியமென்பது மார்க்ஸ், எங்கெல்சின் போதனே அனேத்தின் ஆணி வேர் போன்றதாகும். இவர்களுடைய போதனேக்குத் தற்போது நடப்பிலுள்ள சமூக-தேசியவெறிப் போக்கும் காவுத்ஸ்கிவாதப் போக்கும் இழைத்துவரும் துரோகமானது, இந்தப் போக்குகள் இத்தகைய பிரசாரத்தையும் கிளர்ச்சியையும் கைவிட்டுவிட்டதில் மிகவும் எடுப்பாய் வெளிப்படுகிறது.

பலாத்காரப் புரட்சி இல்லாமல் முதலாளித்துவ அரசு பாட்டாளி வர்க்க அரசாய் மாற முடியாது. பாட்டாளி வர்க்க அரசு, அதாவது பொதுவில் அரசெனப்படுவது, ''உலர்ந்து உதிரும்'' நிகழ்ச்சிப்போக்கின் மூலமாகவே அன்றி வேறு எவ்வழியிலும் அகற்றப்பட முடியாது.

குறிப்பிட்ட புரட்சிகரச் சூழ்நிலை ஒவ்வொன்றையும் பரிசீலித்ததன் மூலமும், குறிப்பிட்ட புரட்சி ஒவ்வொன்றின் அனுபவத்தைப் பகுத்தாய்ந்ததன் மூலமும் மார்க்சும் எங்கெல்சும் இந்தக் கருத்துக்களை விவரமாகவும் ஸ்தூலமாகவும் விளக்கினர். சந்தேகத்துக்கு இடமின்றி இதுவே அவர்களுடைய போதனையின் மிக முக்கிய பகுதி. இனி இந்த முக்கிய பகுதிக்குச் செல்வோம்.

அத்தியாயம் 2

## அரசும் புரட்சியும். 1848-51ஆம் ஆண்டுகளின் அனுபவம்

### 1. புரட்சி தொடங்கும் தறுவாயில்

முதிர்ச்சியுற்ற மார்க்சியத்தின் முதலாவது நூல்களான **மெய்யறிவின் வறுமையும், கம்யூனிஸ்டு அறிக்கையும்** 1848ஆம் ஆண்டுப் புரட்சி தொடங்கும் தறுவாயில் வெளிவந்தவை. இக்காரணத்தால் அவை மார்க்சியத்தின் பொதுக் கோட்பாடுகளை எடுத்துரைப்பதோடு, ஸ்தூலமான அக்காலத்திய புரட்சிகரச் சூழ்நிலையையும் ஓரளவு பிரதிபலித்துக் காட்டின. ஆகவே இந்நூல்களின் ஆசிரியர்கள் 1848-51ஆம் ஆண்டுகளின் அனுபவத்திலிருந்து முடிவுகளை வந்தடைவதற்கு உடனடியாய் முன்னதாக அரசு குறித்து என்ன சொன்னர்கள் என்பதைப் பரிசீலிப்பது இன்னுங்கூட பயனுடையதாய் இருக்கும்.

**மெய்யறிவின் வறுமையில்** மார்க்ஸ் எழுதினர்:

*"...தொழிலாளி வர்க்கம் தனது வளர்ச்சிப் போக்கிலே பழைய முதலாளித்துவச் சமுதாயத்துக்குப் பதிலாக, எல்லா வர்க்கங்களையும் அவற்றின் பகைமையையும் விலக்கிவிடும் ஒரு சங்கத்தை அமைக்கும், முறையாகச் சொல்லக் கூடிய அரசியல் அதிகாரம் இனி இராது, ஏனெனில் அரசியல் அதிகாரம் என்பது முதலாளித்துவச் சமுதாயத்திலுள்ள வர்க்கப் பகைமையின் அதிகாரபூர்வமான வெளிப்பாடாகும்" (பக்கம் 182, ஜெர்மன் பதிப்பு, 1885).*

வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டதும் அரசு மறைந்துவிடுமென்ற கருத்தின் இந்தப் பொது விளக்கத்தை, இதற்குச் சில மாதங்களுக்குப் பிற்பாடு—துல்லியமாய்க் கூறுவதெனில் 1847 நவம்பரில்—மார்க்சும் எங்கெல்சும் எழுதிய கம்யூனிஸ்டு அறிக்கையில் காணப்படும் விளக்கத்துடன் ஒப்பிடுதல் பயனுடையது:

*"...பாட்டாளி வர்க்கத்தினது வளர்ச்சியின் மிகப் பொதுவான கட்டங்களை விவரித்த நாம், தற்கால சமுதாயத்தில் ஏறக்குறைய திரை மறைவில் நடைபெறும் உள்நாட்டுப் போரை, அது பகிரங்கப் புரட்சியாய் வெடித்து, முதலாளித்துவ வர்க்கம் பலாத்காரமாய் வீழ்த்தப்படுவதன் மூலம் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்துக்கு அடித்தளம் இடப்படும் நிலை வரையில் உருவரை தீட்டிக் காட்டினோம்...*

*"...பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயரச் செய்வதுதான், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி ஈட்டுவதுதான், தொழிலாளி வர்க்கம் நடத்தும் புரட்சியின் முதலாவது படி என்பதை மேலே கண்டோம்.*

*"பாட்டாளி வர்க்கம் தனது அரசியல் மேலாண்மையைப் பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து படிப்படியாய் மூலதனம் முழுவதையும் கைப்பற்றும்; உற்பத்திக் கருவிகள் யாவற்றையும் அரசின் கைகளில், அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த*

*பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் ஒருசேர மையப் படுத்தும்; மற்றும் உற்பத்தி சக்திகளது ஒட்டுமொத்தத் தொகையைச் சாத்தியமான முழு வேகத்தில் அதிக மாக்கும்'' (பக்கங்கள் **31, 37**, ஏழாவது ஜெர்மன் பதிப்பு, **1906**).*

*அரசு என்னும் பொருள் குறித்து மார்க்சியத்துக்குள்ள மிகச் சிறப்பான, மிக முக்கியக் கருத்துக்களில் ஒன்று, அதாவது ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்'' (பாரிஸ் கம்யூனுக்குப் பிற்பாடு மார்க்சும் எங்கெல்சும் இப்படித்தான் இதனை அழைக்கத் தொடங்கினர்) என்னும் கருத்து, இங்கு வரையறுத்துக் கூறப்படுவதைக் காண்கிறோம். அதோடு அரசைப் பற்றிய மிகச் சுவையான ஒரு இலக்கணமும்—மார்க்சியத்தின் ''மறக்கப்பட்ட உரைகளில்'' இதுவும் ஒன்றாகிவிட்டது —இங்கு நமக்குத் தரப்படுகிறது:* **“அரசு, அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம்.''**

*அதிகார பூர்வமான சமூக-ஜனநாயகக் கட்சிகளது தற்போதைய பிரசார, கிளர்ச்சி வெளியீடுகளில் இந்த இலக்கணம் விளக்கப்படுவதே இல்லை. அது மட்டுமல்ல, வேண்டுமென்றே இது ஒதுக்கித் தள்ளப்படுகிறது. காரணம் என்னவென்றால், இந்த இலக்கணம் சீர்திருத்தவாதத்துக்குச் சிறிதும் இணங்காததாகும்; ''ஜனநாயகத்தின் சமாதான வழிப்பட்ட வளர்ச்சி'' என்பதாய் சகஜமாய் நிலவும் சந்தர்ப்பவாதத் தப்பெண்ணங்களுக்கும் அற்பவாதக் குட்டிமுதலாளித்துவப் பிரமைகளுக்கும் இது முற்றிலும் புறம்பானதாகும்.*

*பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு வேண்டும்—எல்லாச் சந்தர்ப்பவாதிகளும் சமூக-தேசியவெறியர்களும் காவுத்ஸ்கிவாதிகளும் இதைத் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள். மார்க்ஸ் இதைத்தான் போதித்தார் என்று நம்மிடம் வலியுறுத்துகிறார்கள். ஆனால் இதோடுகூட கூறப்பட வேண்டியதை அவர்கள் கூற* **''மறந்துவிடுகிறார்கள்''**. *முதலாவதாக, மார்க்சின் கருத்துப்படி, பாட்டாளி வர்க்கத்துக்கு வேண்டியது உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கும் அரசு மட்டுமே*

தான், அதாவது உடனடியாகவே உலர்ந்து உதிரத் தொடங்கு வதாகவும், உலர்ந்து உதிர்வதாய் அன்றி வேறு விதமாய் இருக்க வொண்ணுததாகவும் அமைந்த ஓர் அரசு மட்டுமே தான். இரண்டாவதாக, உழைப்பாளி மக்களுக்கு வேண்டி யது ஓர் ''அரசு'', ''அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங் கமைந்த பாட்டாளி வர்க்கம்''.

அரசு என்பது பலத்தின் ஒரு தனிவகை ஒழுங்கமைப்பு; ஏதோவொரு வர்க்கத்தை அடக்குவதற்கான பலாத்கார ஒழுங்கமைப்பு. பாட்டாளி வர்க்கத்தால் அடக்கப்பட வேண் டிய வர்க்கம் எது? சுரண்டும் வர்க்கம்தான், அதாவது முதலாளித்துவ வர்க்கம்தான் என்பதே இக்கேள்விக்குரிய இயற்கையான பதில். சுரண்டுவோருடைய எதிர்ப்பை அடக்குவதற்கு மட்டுமே உழைப்பாளி மக்களுக்கு அரசு தேவைப்படுகிறது. பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே சுரண்டு வோருடைய எதிர்ப்பை அடக்கும் பணிக்குத் தலைமை தாங்க முடியும், அதனுல் மட்டுமே இப்பணியைச் செய்து முடிக்க முடியும். ஏனென்ருல், பாட்டாளி வர்க்கம்தான் முரணின்றி முற்றிலும் புரட்சிகரமான ஒரே வர்க்கம்; முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில், அவ்வர்க்கத்தை அறவே அகற்றிடுவதில், உழைப்பாளர்களும் சுரண்டப்படு வோருமான மக்கள் எல்லோரையும் ஒன்றுபடச் செய்யக் கூடிய ஒரே வர்க்கம்.

சுரண்டும் வர்க்கங்களுக்குச் சுரண்டலை நிலைநாட்டிக் கொள்வதற்காக, அதாவது மிகப் பெருவாரியான மக்களுக்கு விரோதமாய் மிகச் சொற்பமான சிறுபான்மையினரது சுய நலத்துக்காக, அரசியல் ஆட்சி தேவைப்படுகிறது. சுரண்டப் படும் வர்க்கங்களுக்கு, எல்லா விதச் சுரண்டலையுமே அறவே ஒழிக்கும் பொருட்டு, அதாவது மிகப் பெருவாரியான மக்களது நலன்களுக்காக வேண்டி, நவீன கால அடிமையுடைமை யாளர்களாகிய நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமான மிகச் சொற்ப சிறுபான்மையினருக்கு எதிராய் அரசியல் ஆட்சி தேவைப்படுகிறது.

குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள், வர்க்கப் போ ராட்டத்துக்குப் பதிலாய் வர்க்க இசைவு பற்றிய பகற்கனவு

களில் ஈடுபடும் இந்தப் போலி சோஷலிஸ்டுகள், சோஷலிச மாற்றத்தையுங்கூட கனவுலகப் பாணியில் சித்திரித்தனர்—சுரண்டும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை வீழ்த்துவதாய்ச் சித்திரிக்காமல், பெரும்பான்மையினர் தமது நோக்கங்களை உணர்ந்து கொண்டுவிடுவதாகவும், சிறுபான்மையினர் சமாதானமாகவே அவர்களுக்குக் கீழ்ப்படிந்துவிடுவதாகவும் சித்திரித்தனர். இந்தக் குட்டிமுதலாளித்துவக் கற்பனை, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது அரசு என்ற கருத்திலிருந்து பிரிக்க முடியாதது. நடைமுறையில் இந்தக் கற்பனை உழைப்பாளி வர்க்கங்களுடைய நலன்களுக்குத் துரோகமிழைக்கவே செய்தது. உதாரணமாய், 1848, 1871ஆம் ஆண்டுகளின் பிரெஞ்சுப் புரட்சிகளின் வரலாறும், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் பிரிடன், பிரான்ஸ், இத்தாலி, மற்றும் பல நாடுகளில் முதலாளித்துவ அமைச்சரவைகளில் ''சோஷலிஸ்டுகள்'' பங்கு கொண்டதன் அனுபவமும் இதைத் தெளிவுபடுத்தின.

தற்போது ருஷ்யாவில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியாலும் மென்ஷிவிக் கட்சியாலும் புத்துயிர் ஊட்டப் பெற்றுள்ள இந்தக் குட்டிமுதலாளித்துவ சோஷலிசத்தை எதிர்த்து மார்க்ஸ் தமது வாழ்நாள் முழுதும் போராடினுர். அவர் தமது வர்க்கப் போராட்டத் தத்துவத்தை அரசியல் ஆட்சியதிகாரம், அரசு பற்றிய தத்துவம் வரையிலும் முரணின்றி வளர்த்து வகுத்தார்.

முதலாளித்துவ ஆதிக்கத்தை வீழ்த்த வல்லது பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான். இந்த ஒரு வர்க்கம் மட்டும்தான் தனது வாழ்க்கையின் பொருளாதார நிலைமைகளால் இந்தப் பணிக்குத் தயார் செய்யப்படுகிறது, இந்தப் பணியைச் செய்து முடிப்பதற்குரிய சாத்தியப்பாடும் சக்தியும் அளிக்கப்படுகிறது. முதலாளித்துவ வர்க்கம் விவசாயிகளையும் எல்லாக் குட்டிமுதலாளித்துவப் பகுதிகளையும் சிதைத்துச் சின்னுபின்னமாக்குகிறது; ஆனுல் அது பாட்டாளி வர்க்கத்தை ஒரு சேர இணைத்து ஒன்றுபடுத்துகிறது, நிறுவன வழியில் ஒழுங்கமையச் செய்கிறது. பாட்டாளி வர்க்கம் மட்டும்தான்

—பெருவீதப் பொருளுற்பத்தியில் அது ஆற்றும் பொருளாதாரப் பாத்திரம் காரணமாய்—உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்கள் எல்லோருக்கும் தலைவனாக வல்லது. ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்கள் அனைவரையும் முதலாளித்துவ வர்க்கம் ஒடுக்கி நசுக்கிய போதிலும், பாட்டாளி வர்க்கத்தினரைக் காட்டிலும் குறைவாக அல்ல பல சந்தர்ப்பங்களில் அதிகமாகவே ஒடுக்கி நசுக்கிய போதிலும், இவர்கள் தமது விடுதலைக்காக சுயேச்சையாய்ப் போராடும் வல்லமை இல்லாதவர்கள்.

அரசு, சோஷலிசப் புரட்சி இவற்றின் பிரச்சினையில் மார்க்ஸ் வர்க்கப் போராட்டத் தத்துவத்தைப் பிரயோகித்ததும், தவிர்க்க முடியாதபடி அது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கத்தின், அதன் சர்வாதிகாரத்தின், அதாவது யாருடனும் பகிர்ந்து கொள்ளாமல் நேரடியாய் மக்களுடைய ஆயுதப்பலத்தை ஆதாரமாய்க் கொண்ட ஆட்சியதிகாரத்தின் அங்கீகாரத்துக்கு இட்டுச் சென்றது. பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின் தவிர்க்க முடியாத ஆவேசமான எதிர்ப்பை நசுக்கவும், உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்கள் அனைவரையும் புதிய பொருளாதார அமைப்புக்காக ஒழுங்கமைக்கவும் வல்லமை படைத்த ஆளும் வர்க்கமாக மாறுவதனால் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்த முடியும்.

சுரண்டலாளர்களுடைய எதிர்ப்பை நசுக்குவதற்கும் சோஷலிசப் பொருளாதாரத்தை ''ஒழுங்கமைப்பதில்'' மாபெரும் திரள்களான மக்களுக்கு—விவசாயிகளும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும், அரைகுறைப் பாட்டாளி வர்க்கத்தினருமானோருக்கு — தலைமை தாங்குவதற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு அரசு அதிகாரம், பலத்தின் மத்தியத்துவ நிறுவன ஒழுங்கமைப்பு, பலாத்காரத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு தேவைப்படுகிறது.

மார்க்சியமானது தொழிலாளர் கட்சிக்குப் போதமளிப்பதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படைக்குப் போதமளிக்கிறது. ஆட்சியதிகாரம் ஏற்று அனைத்து மக்களுக்கும் தலைமை தாங்கி சோஷலிசத்துக்கு அழைத்துச் செல்ல,

புதிய அமைப்பை நெறிப்படுத்தி ஒழுங்கமைக்க, உழைப் பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்கள் அனைவரும் முதலாளித்துவ வர்க்கம் இல்லாமலும் முதலாளித்துவ வர்க கத்தை எதிர்த்தும் தமது சமுதாய வாழ்வினை ஒழுங்கமைத் துக் கொள்வதில் அவர்களுக்குப் போதகனாகவும் வழிகாட்டி யாகவும் தலைவனாகவும் செயலாற்ற வல்லமை படைத்த இந்த முன்னணிப் படைக்கு அது போதமளிக்கிறது. தற்போது ஆதிக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதமானது, இதற்கு மாறாய், தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களை உயர்ந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளாய்ச் செயல் படுவதற்கு—வெகுஜனங்களுடன் தொடர்பு இழந்து, முத லாளித்துவத்தில் எப்படியோ ஓரளவு ''நல்லபடியாகவே'' இருந்து, எச்சித் துண்டுக்காகத் தமது பிறப்புரிமையையே விற்கும், அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து மக்களது புரட்சிகரத் தலைவர்களாய்த் தாம் ஆற்ற வேண்டிய பாத்திரத்தைத் துறந்துவிடும் இத்தகைய பிரதிநிதிகளாய்ச் செயல்படுவதற்கு—பயிற்றுவிக்கிறது.

''அரசு, அதாவது ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம்'' பற்றிய மார்க்சின் தத்துவம் வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்துக்குரிய புரட்சிப் பாத்திரம் குறித்த அவருடைய போதனை அனைத்துடன் இரண்டறக் கலந்த தாகும். இந்தப் பாத்திரத்தின் இறுதி நிலையே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம்.

ஆனால் பாட்டாளி வர்க்கத்துக்கு, முதலாளித்துவத்துக்கு எதிரான பலாத்காரத்தின் ஒழுங்கமைப்புக்குரிய தனிவகை வடிவமான அரசு தேவைப்படுவதால், பின்வரும் முடிவு தானாகவே எழுகிறது: முதலாளித்துவ வர்க்கத்தினர் தமக்கென உருவாக்கிக் கொண்ட அரசுப் பொறியமைவை முதலில் ஒழித்திடாமல், தகர்த்தெறியாமல் இத்தகைய ஒழுங்கமைப் பினை உருவாக்க முடியுமென நினைக்கலாமா? கம்யூனிஸ்டு அறிக்கை நேரடியாக இந்த முடிவுக்கே இட்டுச் செல்கிறது. 1848-51ஆம் ஆண்டுகளின் அனுபவத்தை தொகுத்துக் கூறு கையில் மார்க்ஸ் இதே முடிவைத்தான் எடுத்துரைக்கிறார்.

## 2. புரட்சியிலிருந்து பெறப்பட்ட முடிவுகளின் தொகுப்புரை

நாம் பரிசீலிக்கும் அரசெனும் பொருள் குறித்து மார்க்ஸ் 1848-51ஆம் ஆண்டுகளின் புரட்சியிலிருந்து தாம் வந்தடைந்த முடிவுகளை லுயீ போனப்பார்ட்டின் புரூமேர் பதினெட்டு என்ற நூலில் பின்வருமாறு தொகுத்துரைக்கிறார்:

''...ஆனல் புரட்சி முற்றிலும் முறைப்படி யாவற்றையும் செய்கிறது. கழித்தொழிக்கப்பட வேண்டியவற்றை எரித்துச் சாம்பலாக்கும் நெருப்புக் கட்டத்திலேதான் இன்னமும் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. முறை தவருது அது தனது பணியைச் செவ்வனே செய்கிறது. தனது தயாரிப்புப் பணியில் ஒரு பாதியை 1851 டிசம்பர் 2ஆம் நாளுக்குள் (லுயீ போனப்பார்ட் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்திய நாள்) செய்து முடித்துவிட்டது. இப்பொழுது மற்ரெரு பாதியைச் செய்து முடித்துக் கொண்டிருக்கிறது. முதலில் அது நாடாளுமன்ற ஆட்சி முறையைச் செம்மை செய்தது—இதனை வீழ்த்திடுவதற்காக. தற்போது அது இதில் சித்தி பெற்றுவிட்டதனல், நிர்வாக ஆட்சி முறையைச் செம்மை செய்து வருகிறது; கலப்பற்ற இதன் தூய வடிவுக்கு இதைத் தேய்த்துக் குறுக்கி, தனிமைப்படுத்தி, இதைத் தனக்கு எதிரான ஒரே பகையாய் அமைத்து வருகிறது—அழித்தொழித்திடுவதற்கான சக்திகள் அனைத்தையும் இதற்கு விரோதமாய் ஒன்றுகுவியச் செய்ய வேண்டும் என்பதற்காக (அழுத்தம் எம்முடையது). புரட்சி தனது பூர்வாங்கப் பணியின் இந்த இரண்டாவது பாதியைச் செய்து முடித்ததும், ஐரோப்பா அதன் இருக்கையை விட்டுத் துள்ளியெழுந்து, முழக்கமிடுமே!

''இந்த நிர்வாக ஆட்சியமைப்பு பிரம்மாண்டமான அதிகாரவர்க்க, இராணுவ அமைப்பைக் கொண்டது, சிக்கல் மிக்க செயற்கையான அரசுப் பொறியமைவுடன் கூடியது, ஐம்பது லட்சம் எண்ணிக்கை கொண்ட

ஏராளமான அதிகாரிகளையும் மற்றும் ஐம்பது லட்சம் ஆட்களையுடைய சேனையையும் பெற்றிருப்பது. இந்த மிகக் கொடிய புல்லுருவி அமைப்பு—பிரெஞ்சு சமுதாயத்தின் உடல் பூராவும் படர்ந்து வலை போல இறுக்கி சர்வாங்கத்தையும் நெரித்துத் திணறடிக்கும் இவ்வமைப்பு—எதேச்சாதிகார முடியரசுக் காலத்தில், பிரபுத்துவ அமைப்பு சிதைந்து வந்த காலத்தில் உதித்தது, பிரபுத்துவ அமைப்பின் அழிவைத் துரிதப்படுத்த உதவியது.'' முதலாவது பிரெஞ்சுப் புரட்சி மத்தியத்துவத்தை வளரச் செய்தது; ''அதே போதில் அரசாங்க அதிகாரத்தின் வீச்சையும், அதன் பரிவாரங்களையும், கையாட்களின் எண்ணிக்கையையும் அதிகமாக்கிற்று. இந்த அரசுப் பொறியமைவு நெப்போலியனால் பூரண நிறைவுடையதாக்கப்பட்டது.'' மரபுவழி முடியரசும் ஜூலை முடியரசும் ''வேலைப் பிரிவினையை அதிகமாக்கியதற்கு மேல் புதிதாய் ஒன்றும் செய்யவில்லை...

''...இறுதியில் நாடாளுமன்றக் குடியரசானது புரட்சிக்கு எதிரான தனது போராட்டத்தில், அடக்குமுறை நடவடிக்கைகளுடன் கூடவே அரசாங்க அதிகாரத்தின் சாதனங்களையும் அதன் மத்தியத்துவத்தையும் வலுவாக்கிச் செல்ல வேண்டியதாயிற்று. **எல்லாப் புரட்சிகளும் இந்தப் பொறியமைவைத் தகர்ப்பதற்குப் பதிலாய் மேலும் செம்மையாக்கியே வந்தன**'' (அழுத்தம் எம்முடையது). ''ஆதிக்கத்துக்காக ஒன்றன் பின் ஒன்றாய்ப் போராடிய கட்சிகள் அரசெனும் இந்தப் பிரம்மாண்டக் கோட்டையைக் கைப்பற்றி வைத்துக் கொள்வதே வெற்றியாளனுக்குக் கிடைக்கும் பிரதான சன்மானமென்று கருதின'' (**லுயீ போனப்பார்ட்டின் புரூமேர் பதினெட்டு**, பக்கங்கள் 98-99, நான்காம் பதிப்பு, ஹாம்பர்க், 1907).

மார்க்சியமானது சிறப்புக்குரிய இந்த வாசகத்தில், **கம்யூனிஸ்டு அறிக்கையுடன்** ஒப்பிடுகையில் மிகப் பெரியதொரு முன்னேற்ற அடி எடுத்து வைக்கிறது. **கம்யூனிஸ்டு அறிக்கை**

யில் இன்னமும் அரசு மிகப் பெருமளவுக்குக் கருத்தியலான முறையிலேதான், மிகவும் பொதுப்படையான தொடர்களிலும் வாக்கியங்களிலும்தான் பரிசீலனைக்கு எழுப்பப் படுகிறது. மேலே தரப்பட்ட வாசகத்தில் இப்பிரச்சினை ஸ்தூலமான முறையில் பரிசீலிக்கப்படுகிறது; மிகமிகத் துல்லியமான, திட்டவட்டமான, நடைமுறை சார்ந்த, கண்கூடான முடிவு பெறப்படுகிறது: முந்தியப் புரட்சிகள் எல்லாம் அரசுப் பொறியமைவைச் செம்மையே செய்தன, ஆனால் இந்தப் பொறியமைவு தகர்த்து நொறுக்கப்பட்டாக வேண்டும்.

இம்முடிவுதான் அரசு பற்றிய மார்க்சிய போதனையில் தலையாயதும் அடிப்படையானதுமான அம்சம். இந்த அடிப் படை அம்சத்தைத்தான் ஆதிக்கத்திலுள்ள அதிகார பூர்வ மான சமூக-ஜனநாயகக் கட்சிகள் அறவே புறக்கணிக்கின் றன; மேலும் இரண்டாவது அகிலத்தின் பிரபல தத்துவவாதி யான கார்ல் காவுத்ஸ்கி (பிற்பாடு நாம் காணப் போவது போல) திரித்துப் புரட்டுகிறார்.

கம்யூனிஸ்டு அறிக்கை வரலாற்றைப் பொதுப்படச் சுருக்கமாய்த் தொகுத்துரைக்கிறது, இந்தத் தொகுப்புரை, அரசை வர்க்க ஆதிக்கத்துக்கான உறுப்பாகக் கருத வேண்டுமென்பதை நமக்கு வற்புறுத்துகிறது. பாட்டாளி வர்க்கம் முதலில் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற் றாமல், அரசியல் ஆதிக்கத்தைப் பெறாமல், அரசை ''ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கமாய்'' மாற்றாமல், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்த முடியாது; இந்தப் பாட்டாளி வர்க்க அரசு அதன் வெற்றியை அடுத்து உடனடியாய் உலர்ந்து உதிரத் தொடங்கிவிடும், ஏனெனில் வர்க்கப் பகைமைகள் இல்லாத ஒரு சமுதாயத்தில் அரசு தேவையில்லை, இருக்கவும் முடியாது என்கிற தவிர்க்க முடி யாத முடிவுக்கு அது நம்மை இட்டுச் செல்கிறது. முதலா ளித்துவ அரசு நீங்கி அதனிடத்தில் பாட்டாளி வர்க்க அரசு தோன்றுவது வரலாற்று வளர்ச்சியின் கண்ணோட்டத்தில் எப்படி நடந்தேறுமென்ற பிரச்சினை இங்கு எழுப்பப்பட வில்லை.

இந்தப் பிரச்சினையைத்தான் மார்க்ஸ் 1852ல் எழுப்பி அதற்குப் பதிலளிக்கிறார். தமது இயக்கவியல் பொருள்முதல் வாதத் தத்துவவியலுக்கு ஏற்ப மார்க்ஸ் 1848லிருந்து 1851 வரையிலான மாபெரும் புரட்சி ஆண்டுகளின் சரித்திர ரீதியான அனுபவத்தைத் தமது அடிப்படையாய்க் கொள்கிறார். மற்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் போலவே இங்கும் அவருடைய போதனை அனுபவத்தைத் தொகுத்துரைப்பதாகவே அமைகிறது; ஆழ்ந்த தத்துவவியல் உலகக் கண்ணோட்டத்தாலும் வரலாறு பற்றிய செழுமிய ஞானத்தாலும் இது ஒளியூட்டப்பட்டிருக்கிறது.

அரசு பற்றிய பிரச்சினை தனிப்படத் தெளிவாய் எழுப்பப்படுகிறது: முதலாளித்துவ அரசு, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சிக்குத் தேவையான இந்த அரசுப் பொறியமைவு, வரலாற்று வழியில் உருவானது எப்படி? முதலாளித்துவப் புரட்சிகளின் போதும் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய சுயேச்சையான செயல்களின் முன்னும் அதில் ஏற்படும் மாறுதல்களும் அதன் பரிணாமமும் என்ன? இந்த அரசுப் பொறியமைவு சம்பந்தமாய்ப் பாட்டாளி வர்க்கம் செய்ய வேண்டிய பணிகள் யாவை?

முதலாளித்துவ சமுதாயத்துக்கே உரித்தான மத்தியத்துவ அரசு அதிகாரம் வரம்பிலா முடியாட்சியின் வீழ்ச்சிக் காலத்தில் தோன்றியதாகும். அதிகாரவர்க்கமும் நிராந்தரச் சேனையும் இந்த அரசுப் பொறியமைவின் இன்றியமையாத இரு அங்கங்கள். முதலாளித்துவ வர்க்கம் இவ்விரு அங்கங்களுடன் ஆயிரமாயிரம் தொடர்புகளால் இணைக்கப்பட்டிருப்பதை மார்க்சும் எங்கெல்சும் தமது நூல்களில் திரும்பத் திரும்பத் தெரியப்படுத்துகின்றனர். ஒவ்வொரு தொழிலாளியின் அனுபவமும் இந்த இணைப்பினை தெட்டத் தெளிவாகவும் எடுப்பாகவும் நிரூபித்துக் காட்டுகிறது. தொழிலாளி வர்க்கம் கொடுமையான சொந்த அனுபவத்தின் வாயிலாய் இந்த இணைப்பினைக் கண்டறியத் தெரிந்து கொள்கிறது. எனவேதான் அது இந்த இணைப்பின் தவிர்க்க இயலாத் தன்மையைப் பற்றிய கோட்பாட்டை அவ்வளவு சுலபமாய்ச் சடுதியில் புரிந்துகொள்கிறது, அவ்வளவு உறுதியாய்க் கற்றறிந்து

கொள்கிறது. ஆனல் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் அறியாமையின் காரணமாகவோ அலட்சியம் காரணமாகவோ இதனை மறுக்கின்றனர்; அல்லது இன்னுங்கூட அதிக அலட்சியமாய் இதனை ''பொதுப்படையாய்'' ஒத்துக்கொண்டு அதேபோதில் உரிய நடைமுறை முடிவுகளைச் செய்யத் தவறி விடுகிறார்கள்.

அதிகாரவர்க்கமும் நிரந்தரச் சேனையும் முதலாளித்துவச் சமுதாயத்தின் உடலில் புல்லுருவியாய் அமைந்தவை— இந்தச் சமுதாயத்தைப் பிளந்திடும் உட்பகைமைகளால் தோற்றுவிக்கப்பட்ட புல்லுருவியாய் அமைந்தவை. இந்தப் புல்லுருவி இச்சமுதாயத்தின் சர்வாங்கத்தையும் ''நெரித்துத் திணறடிக்கிறது''. ஒரு புல்லுருவியாய் அமைந்ததே அரசென்னும் கருத்து அராஜகவாதத்துக்கு மட்டுமே உரிய ஒரு தனிக் குணத்தைக் குறிப்பதாகுமென்று அதிகார பூர்வமான சமூக-ஜனநாயகத்தில் தற்போது கோலோச்சி வரும் காவுத்ஸ்கிவாதச் சந்தர்ப்பவாதம் கருதுகிறது. மார்க்சியத்தை இவ்வாறு திரித்துப் புரட்டுவது, ''தாயகப் பாதுகாப்பு'' எனும் கருத்தைக் கையாண்டு ஏகாதிபத்திய யுத்தம் நியாயமென நிரூபித்து, அதைச் சிங்காரித்து மினுக்கச் செய்திடும், கண்டும் கேட்டுமிராத அவக்கேடாய் சோஷலிசத்தை இழிவு படுத்தியுள்ள இந்த அற்பர்களுக்கு மிகவும் ஆதாயமாயிருப்பது கூருமலே விளங்கினலும், சந்தேகத்துக்கு இடமின்றி இது ஒரு புரட்டே ஆகும்.

பிரபுத்துவத்தின் வீழ்ச்சிக்குப் பிற்பாடு ஐரோப்பா கண்டிருக்கும் எண்ணிலடங்கா முதலாளித்துவப் புரட்சிகள் யாவற்றின்போதும் அதிகாரவர்க்க இராணுவ இயந்திரம் தொடர்ந்து வளர்ச்சியுற்று செம்மையாக்கப்பட்டு வலுவடைந்தே வந்துள்ளது. குறிப்பாக, குட்டிமுதலாளித்துவப் பகுதியோர் பெருமளவுக்கு இந்த அமைப்பு மூலம்தான் பெருமுதலாளிகளின் பக்கத்துக்குக் கவரப்பட்டு அவர்களுக்குக் கீழ்ப்படியலாயினர். விவசாயிகள், சிறு கைவினைஞர்கள், வணிகர்கள் முதலானேரின் மேல் மட்டப் பகுதியோருக்கு இவ்வமைப்பு ஒப்பளவில் வசதியான, அமைதிவாய்ந்த கவுரவமான உத்தியோகங்கள் அளித்து, அவர்களை மக்களுக்கு

மேலானேரோய் உயர்த்தி வைக்கிறது. 1917 பிப்ரவரி 27க்குப் பிறகு வந்த ஆறு மாதங்களில் ருஷ்யாவில் நடைபெற்றதைக் கவனியுங்கள்.[33] முன்பெல்லாம் முன்னுரிமையாய்க் கறுப்பு நூற்றுவருக்கே[34] அளிக்கப்பட்டு வந்த அரசாங்கப் பதவிகள் இப்பொழுது காடேட்டுகளுக்கும்[35] மென்ஷிவிக்குகளுக்கும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்குமுரிய சன்மானங்களாகி விட்டன. உண்மையில் யாருக்கும் எந்த முக்கிய சீர்திருத்தம் கொண்டுவருவதிலும் நாட்டம் இல்லே. சீர்திருத்தங்களே ''அரசியல் நிர்ணயச் சபை கூடும்வரை'' ஒத்திப்போடவும், அரசியல் நிர்ணயச் சபை கூட்டப்படுவதை யுத்தம் முடிவுறும் வரை தொடர்ந்து ஒத்திப்போட்டுச் செல்லவும்தான்[36] எல்லா வழிகளிலும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது! ஆனல் சன்மானங்களேப் பகிர்ந்து கொள்வதில், அமைச்சர்கள், துணேயமைச்சர்கள், கவர்னர்-ஜெனரல்கள் போன்ற பசையுள்ள மிகப் பல பதவிகள் பெறுவதில் தாமதம் ஏற்படவில்லே, அரசியல் நிர்ணயச் சபைக்காகக் காத்திருக்க வேண்டி வரவில்லே! ''சன்மானங்களேப்'' பங்கீடும் மறுபங்கீடும் செய்து கொள்வதானது மேல் மட்டங்களிலும் கீழ் மட்டங்களிலும், நாடெங்கும், மத்திய அரசாங்கத்திலும் ஸ்தல அலுவலகங்களிலும் நடைபெற்றுள்ளது. அரசாங்கம் நிறுவுவதில் பல்வேறு கூட்டுகள் சேர்ந்து ஆடப்பட்டுள்ள நாடகம் சாராம்சத்தில் இந்தப் பங்கீடும் மறுபங்கீடும் நடந்தேறுவதன் வெளியீடே ஆகும். 1917 பிப்ரவரி 27க்கும் ஆகஸ்டு 27க்கும் இடைப்பட்ட ஆறு மாதங்களில் நடைபெற்றுள்ளதைச் சர்ச்சைக்கு இடமின்றிப் புறநோக்குடன் சுருக்கமாய் இவ்வாறு கூறிவிடலாம்: சீர்திருத்தங்கள் ஒத்திப்போடப்பட்டன, அரசாங்க உத்தியோகங்களின் வினியோகம் முடிக்கப்பட்டது, வினியோகத்தின்போது நிகழ்ந்த ''தவறுகள்'' ஒருசில மறு வினியோகங்களின் மூலம் சரிசெய்யப்பட்டன.

ஆனல் அதிகாரவர்க்க இயந்திரம் பல்வேறு முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவக் கட்சிகளிடையே (ருஷ்ய உதாரணத்தில் காடேட்டுகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகள் ஆகியோரிடையே) எவ்வளவுக்கு எவ்வளவு ''மறுபங்கீடு'' செய்து கொள்ளப்படுகிறதோ, ஒடுக்கப்பட்ட

வர்க்கங்களும் அவற்றின் தலைமையிலுள்ள பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ சமுதாயம் அனைத்துக்கும் தமக்குமுள்ள இணக்கம் காண முடியாத பகைமையை அவ்வளவுக்கு அவ்வளவு துல்லியமாய் உணர்ந்து கொள்கின்றன. ஆகவே எல்லா முதலாளித்துவக் கட்சிகளும், மிக ஜனநாயகமான, ''புரட்சிகர-ஜனநாயகமான'' கட்சிகளுங்கூட, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்து அடக்குமுறை நடவடிக்கைகளைக் கடுமையாக்க வேண்டியதாகிறது, பலவந்தம் செய்வதற்கான இயந்திரத்தை, அதாவது அரசுப் பொறியமைவைப் பலப்படுத்த வேண்டியதாகிறது. நிகழ்ச்சிகளின் இந்தப் போக்கு புரட்சியை அரசு அதிகாரத்துக்கு விரோதமாய் ''அழித்தொழித்திடுவதற்கான சக்திகள் அனைத்தையும் ஒன்றுகுவியச் செய்து கொள்ளும்படி'' நிர்ப்பந்தம் செய்கிறது; அரசுப் பொறியமைவை மேம்பாடு செய்வதையல்ல, அதனைத் தகர்த்து நொறுக்குவதையே, அழித்துவிடுவதையே தனது குறிக்கோளாய்க் கொள்ளும்படி நிர்ப்பந்தம் செய்கிறது.

இந்த விவகாரம் இம்முறையில் எடுத்துரைக்கப்படுவதற்கு வழிகோலியது, 1848-51ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளது எதார்த்த வளர்ச்சிப் போக்கே அன்றி, இவ்வாண்டுகளில் கிடைத்த நடைமுறைஅனுபவமே அன்றி, தர்க்கவாத முறையிலான காரணகாரிய ஆய்வு அல்ல. எவ்வளவு கண்டிப்பாய் மார்க்ஸ் வரலாற்று அனுபவமெனும் உறுதி வாய்ந்த அடிப்படையிலே நின்றார் என்பதை, தகர்த்து நொறுக்கப்படும் அரசுப் பொறியமைவுக்குப் பதிலாய்த் தோன்றப் போவது எது என்னும் பிரச்சினையை 1852ல் திட்டவட்டமான முறையில் இன்னும் அவர் எழுப்பாமல் இருந்ததிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்தப் பிரச்சினையை எழுப்பிப் பதில் காண்பதற்கு வேண்டிய உண்மை விவரங்களை இன்னமும் அனுபவம் அப்பொழுது அளித்தாகவில்லை. பிற்பாடுதான், 1871ல் தான் வரலாறு இப்பிரச்சினையை நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டு வந்தது. 1852ல் வரலாற்று விஞ்ஞானப் பார்வையின் பிழையற்ற துல்லியத்துடன் நிலைநாட்ட முடிந்ததெல்லாம், பாட்டாளி வர்க்கப் புரட்சியானது'' அழித்

தொழித்திடுவதற்கான சக்திகள் அனைத்தையும்'' அரசு அதிகாரத்தை எதிர்த்து ''ஒன்றுகுவியச் செய்யும்'' பணி யினை, அரசுப் பொறியமைவை ''நொறுக்கும்'' பணியினை நெருங்கிவந்துவிட்டது என்பதுதான்.

இங்கே ஒரு கேள்வி எழலாம்: மார்க்ஸ் கண்ட அனுப வத்தையும் அவர் கண்ணுற்றவற்றையும் அவர் வந்தடைந்த முடிவுகளையும் பொதுப்படக் கொள்வது சரியா? 1848க்கும் 1851க்கும் இடைப்பட்ட மூன்று ஆண்டுகளிலான பிரெஞ்சு வரலாற்றைக் காட்டிலும் விரிவான ஓர் அரங்கில் அவற் றைக் கையாளுவது சரியா? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முற்படுமுன், நாம் எங்கெல்ஸ் கூறிய ஒரு குறிப்பை நினைவு படுத்திக் கொண்டு, பிறகு உண்மைகளைப் பரிசீலிப்போம்.

புரூமேர் பதினெட்டின் மூன்றும் பதிப்புக்குரிய தமது முன்னுரையில் எங்கெல்ஸ் எழுதினர்:

> ''...வரலாற்றுச் சிறப்புடைத்த வர்க்கப் போராட் டங்கள் வேறு எங்கேயும்விட பிரெஞ்சு நாட்டில்தான் ஒவ்வொரு தடவையும் இறுதி முடிவு வரை நீடித்து நடைபெற்றுள்ளன; ஆகவே, இந்தப் போராட்டங்களது இயக்க வரைகளாகி இப்போராட்டங்களின் பலாபலன் கள் தொகுத்தளிக்கப்படும் மாறியவண்முள்ள அரசி யல் வடிவங்கள் வேறு எங்கேயும்விட இங்கு மிகத் தெளி வான உருவரைகளில் குறிக்கப்பட்டிருக்கின்றன. மத் திய காலத்தில் பிரபுத்துவத்தின் கேந்திரமாகவும், மறு மலர்ச்சிக்குப் பிற்பாடு சமூகப் படிநிலைகளை அடிப்படை யாய்க் கொண்ட ஒன்றுபட்ட முடியாட்சிக்கு எடுத்துக் காட்டாகவும் திகழ்ந்த பிரெஞ்சு நாடு, மாபெரும் புரட்சியின்போது பிரபுத்துவத்தைத் தகர்த்திட்டு வேறு எந்த ஐரோப்பிய நாடும் கண்டிராத கலப்பற்ற அவ்வளவு தூய வடிவில் முதலாளித்துவ ஆதிக்கத்தை நிறுவிக்கொண்டது. தலைதூக்கி வந்த பாட்டாளி வர்க்க மானது ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டம் வேறெங்கும் கண்டிராத உக்கிர வடிவில் இங்கு மூண்டது'' (பக்கம் 4, 1907ஆம் ஆண்டுப் பதிப்பு).

இறுதியில் கூறப்படுவது காலம் கடந்ததாகிவிட்டது. ஏனெனில் 1871க்குப் பிறகு பிரெஞ்சுப் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் தேக்கநிலை ஏற்பட்டிருக்கிறது. இது நீடிப்பதாகவே இருப்பதானாலுங்கூட, இறுதி முடிவு வரை வர்க்கப் போராட்டத்தை நடத்திச் செல்வதில் பிரெஞ்சு நாடு வரப்போகிற பாட்டாளி வர்க்கப் புரட்சியில் முன்னுதாரணமாய்த் திகழும் சாத்தியப்பாடு இதனால் இல்லாமற் போய் விடவில்லை.

நிற்க, பத்தொன்பதாவது நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாவது நூற்றாண்டின் தொடக்கத்திலும் முன்னேறிய நாடுகளது வரலாற்றைப் பொதுவில் பார்வையிடுவோம். அதே வளர்ச்சிப்போக்கு இன்னும் மெதுவாகவும், பலதரப்பட்ட வடிவங்களிலும், பரவலான அரங்கிலும் நடைபெறுவதைக் காண்கிறோம். ஒருபுறம் ''நாடாளுமன்ற ஆட்சிமுறை'' குடியரசு நாடுகளிலும் (பிரான்ஸ், அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து), முடியரசுகளிலும் (பிரிட்டன், ஓரளவுக்கு ஜெர்மனி, இத்தாலி, ஸ்காந்திநேவிய நாடுகள் முதலானவை) வளர்ச்சியுறுவதைக் காண்கிறோம். மறுபுறத்தில், முதலாளித்துவச் சமுதாயத்தின் அடித்தளங்களில் எந்த மாற்றமுமின்றி அரசாங்கப் பதவிச் ''சன்மானங்களை'' வினியோகமும் மறுவினியோகமும் செய்து கொண்ட பல்வேறு முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவக் கட்சிகளிடையே ஆட்சியதிகாரத்துக்கான போராட்டம் நடைபெறக் காண்கிறோம். முடிவாக, ''நிர்வாக அதிகாரம்'', அதன் அதிகாரிகளாலான அமைப்பு, இராணுவம் இவற்றின் இயந்திரம் செம்மை செய்யப்பட்டு உறுதியாக்கப்படுவதைக் காணலாம்.

இந்தப் போக்குகள் எல்லா முதலாளித்துவ அரசுகளின் நவீன காலப் பரிணாமம் முழுவதுக்கும் பொதுவானவை என்பதில் துளியும் சந்தேகமில்லை. முதலாளித்துவ உலகு அனைத்துக்கும் தனி விசேஷமாய் அமைந்த அதே வளர்ச்சிப் போக்குகள் அதிவிரைவான, கூர்மையான, செறிவுமிக்க வடிவில் 1848க்கும் 1851க்கும் இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் பிரான்சில் நடந்தேறின.

ஏகாதிபத்தியமானது—வங்கி மூலதனத்தின், பிரம்மாண்ட முதலாளித்துவ ஏகபோகக் கம்பெனிகளின், ஏகபோக முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாய் வளர்வதன் சகாப்தம் இது—''அரசுப் பொறியமைவு'' அசாதாரணமாய்ப் பலம் பெறுவதையும், முடியாட்சி நாடுகளில் மட்டுமின்றி மிகுந்த சுதந்திரம் படைத்த குடியரசு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராய் அடக்குமுறை நடவடிக்கைகள் கடுமையாகிவிட்டதையொட்டி அரசாங்க அதிகார வர்க்க, இராணுவ இயந்திரம் முன்பின் கண்டிராத அளவுக்கு வளருவதையும் குறிப்பதாகும் என்பது தெளிவாய்ப் புலனுகியுள்ளது.

அரசுப் பொறியமைவை ''அழித்தொழிப்பதற்காக'' 1852ஐக் காட்டிலும் தற்போது ஒப்பீடில்லாப் பெரிய அளவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ''எல்லா சக்திகளும் ஒன்றுகுவிக்கப்படுவதை'' நோக்கி உலக வரலாறு நடைபோடுகிறது என்பதில் ஐயமில்லே.

அழித்தொழிக்கப்படும் அரசுப் பொறியமைவின் இடத்தில் பாட்டாளி வர்க்கம் அமர்த்தப் போவது என்னவென்பதை பாரிஸ் கம்யூன் அளித்திடும் படிப்பினைமிக்க விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

### 3. 1852ல் இப்பிரச்சினையை மார்க்ஸ் எழுத்துரைத்தது*

மார்க்ஸ் 1852 மார்ச் 5 தேதியிட்டு வெய்டமையருக்கு எழுதிய கடிதத்திலிருந்து சில பகுதிகளை 1907ல் மேரிங் *Neue Zeit*[37] சஞ்சிகையில் (மலர் 25, இதழ் 2, பக்கம் 164) வெளியிட்டார். இந்தக் கடிதத்தில் பிறவற்றுடன்கூட சிறப்புக்குரிய பின்வரும் வாசகமும் அடங்கியுள்ளது:

> ''என்னைப் பொறுத்தவரை, தற்போதைய சமுதாயத்தில் வர்க்கங்கள் இருப்பதையோ, அவற்றினிடையே போராட்டம் நடைபெறுவதையோ கண்டுபிடித்த பெருமை என்னைச் சாராது. எனக்கு நெடுங்காலம்

* இப்பகுதி இரண்டாவது பதிப்பில் சேர்க்கப்பட்டது.

முன்னதாகவே முதலாளித்துவ வரலாற்றியலாளர்கள் இந்த வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று வழிப்பட்ட வளர்ச்சியையும், முதலாளித்துவப் பொருளியலாளர்கள் வர்க்கங்களுடைய பொருளாதார அமைப்பியலையும் விவரித்திருந்தனர். நான் செய்ததில் புதியது என்னவெனில் பின்வருவனவற்றை நிரூபித்ததுதான்: *1)* வர்க்கங்கள் இருப்பது, பொருளுற்பத்தியினது வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் (historische Entwicklungsphasen der Production) மட்டுமே இணைந்ததாகும், *2)* வர்க்கப் போராட்டம் கட்டாயமாய்ப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது, *3)* இந்தச் சர்வாதிகாரம் எல்லா வர்க்கங்களும் ஒழிக்கப்படுவதற்கும், வர்க்கமில்லாத சமுதாயத்திற்குமான இடைக்கால கட்டமே ஆகும்...''

முதலாவதாக, தமது போதனைக்கும் முதலாளித்துவ வர்க்கத்தின் முன்னேறிய ஆழ்ந்த சிந்தனையாளர்களுடைய போதனைகளுக்குமுள்ள பிரதான, அடிப்படை வேறுபாட்டையும், இரண்டாவதாக, அரசு பற்றிய தமது போதனையின் சாரப்பொருளையும் மார்க்ஸ் இச்சொற்களிலே தெக்கத் தெளிவாய் எடுத்துரைத்துவிடுகிறார்.

வர்க்கப் போராட்டமே மார்க்சின் போதனையிலுள்ள பிரதான கூறுகுமென அடிக்கடி கூறப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறது. இது தவறு. இந்தத் தவறான கருத்தின் விளைவாய் மார்க்சியம் அடிக்கடி சந்தர்ப்பவாத வழியில் திரித்துப் புரட்டப்படுகிறது, முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஏற்புடைய பாங்கிலே பொய்யாக்கப்படுகிறது. எப்படியென்றால், வர்க்கப் போராட்டத் தத்துவம் மார்க்சால் தோற்றுவிக்கப்பட்டது அல்ல, மார்க்சுக்கு முன்னரே முதலாளித்துவ வர்க்கத்தாரால் தோற்றுவிக்கப்பட்டது. பொதுவாய்க் கூறுகையில் இது முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏற்புடைய தத்துவமே. வர்க்கப் போராட்டத்தை மட்டும் அங்கீகரிப்போர் மார்க்சியவாதிகளாகிவிடுவதில்லை; இன்னமும் அவர்கள் முதலாளித்துவச் சிந்தனை, முதலாளித்துவ அரசியல் இவற்றின் வரம்பு

களுக்குள் நிற்போராகவே இருக்கக் கூடும். மார்க்சியத்தை வர்க்கப் போராட்டத் தத்துவத்துக்கு அப்பால் செல்லாது இருத்துவதானது, மார்க்சியத்தைக் குறுகலாக்கித் திரித்துப் புரட்டுவதும் முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஏற்றதாய்க் குறுக்குவதுமே ஆகும். வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிப் பதோடு நிற்காமல் இதனைப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத் துக்கான அங்கீகரிப்பாகவும் விரித்துச் செல்கிறவர் மட்டுமே மார்க்சியவாதி ஆவார். மார்க்சியவாதிக்கும் சாதாரண குட்டி (மற்றும் பெரு) முதலாளித்துவவாதிக்கும் இடையிலுள்ள மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடு இதில் தான் அடங்கியிருக்கிறது. மார்க்சியத்தை மெய்யாகவே புரிந்து கொள்கிறாரா, அதை அங்கீகரிக்கிறாரா என்பதைச் சோதித்துப் பார்க்க உரைகல்லாய் அமைவது இதுவே. இந்தப் பிரச்சினையை ஐரோப்பிய வரலாறு ஒரு நடைமுறைப் பிரச்சினையாகத் தொழிலாளி வர்க்கத்தின் முன் நேருக்கு நேர் கொண்டு வந்தபோது, எல்லாச் சந்தர்ப்பவாதிகளும் சீர்திருத்தவாதிகளும் மட்டுமின்றி, எல்லா ''காவுத்ஸ்கிவாதிகளும்கூட'' (சீர்திருத்தவாதத்துக்கும் மார்க்சியத்துக்கும் இடையே ஊசலாடுவோர் இவர்கள்) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிராகரிக்கும் கேடுகெட்ட அற்பவாதிகளாகவும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளாகவும் தம்மை நிரூபித்துக் கொண்டதில் வியப்பில்லை. 1918 ஆகஸ்டில், அதாவது இந்த புத்தகத்தின் முதல் பதிப்பு வெளியாகி நெடுங் காலத்துக்குப் பிற்பாடு வெளிவந்த காவுத்ஸ்கியின் பிரசுரமான பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், மார்க்சியத்தைக் குட்டிமுதலாளித்துவ வழியில் திரித்துப் புரட்டுவதற்கும், வஞ்சகமாய் அதைச் சொல்லளவில் அங்கீகரித்து விட்டு செயலில் கைவிட்டு ஓடும் கயமைக்கும் அப்பட்டமானதோர் எடுத்துக்காட்டு (பட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும், பெத்ரொகிராது, மாஸ்கோ, 1918, என்ற எனது பிரசுரத்தைப் பார்க்கவும்).

இன்றைய சந்தர்ப்பவாதம்—அதன் பிரதான பிரதிநிதியான, முன்னாள் மார்க்சியவாதி காவுத்ஸ்கியின் வடிவில்—மேலே தரப்பட்ட மேற்கோளில் முதலாளித்துவ நிலை குறித்து

மார்க்ஸ் அளித்திடும் வரையறுப்புக்கு முழுக்க முழுக்கப் பொருந்துவதாகும். ஏனெனில் இந்தச் சந்தர்ப்பவாதம் வர்க்கப் போராட்டத்துக்கான அங்கீகாரத்தை முதலாளித்துவ உறவுகளின் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்திக் கொள்கிறது. (இந்த எல்லைகளுக்குள், இந்தக் கட்டுக்கோப்புக்குள், வர்க்கப் போராட்டத்தைக் ''கோட்பாட்டளவில்'' அங்கீகரிக்க, கல்வியறிவுடைய எந்த மிதவாதியும் மறுக்க மாட்டார்!) சந்தர்ப்பவாதமானது வர்க்கப் போராட்டத்துக்கான அங்கீகாரத்தை, தலையாய விவகாரத்துக்கு, அதாவது முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய காலகட்டத்துக்கு, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி அதை அறவே அழித்திடும் காலகட்டத்துக்கு, விரித்துச் செல்வதில்லை. உண்மையில் இந்தக் காலகட்டம் தவிர்க்க முடியாதபடி வர்க்கப் போராட்டம் என்றுமில்லாத மூர்க்கத்துடன், என்றுமில்லாத உக்கிர வடிவங்களில் நடைபெறும் காலகட்டமாகும். ஆகவே இந்தக் காலகட்டத்தில் தவிர்க்க முடியாதபடி அரசு ஒரு புதிய வழியில் ஜனநாயகமான (பாட்டாளி வர்க்கத்துக்கும் பொதுவில் சொத்தில்லாதோருக்கும்), ஒரு புதிய வழியில் சர்வாதிகாரமாய் அமைவதான (முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்) அரசாகவே இருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. தனியொரு வர்க்கத்தின் சர்வாதிகாரம் தேவைப்படுவது பொதுவில் ஒவ்வொரு வர்க்கச் சமுதாயத்துக்கும் மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி விட்ட பாட்டாளி வர்க்கத்துக்கு மட்டுமல்ல, முதலாளித்துவத்தை ''வர்க்கங்களில்லாத சமுதாயத்திலிருந்து'', கம்யூனிசத்திலிருந்து பிரித்திடும் வரலாற்றுக் கட்டம் முழுமைக்கும் தேவைப்படுகிறது என்பதை உணர்வோர் மட்டுமே அரசு பற்றிய மார்க்சின் போதனையினது சாரப் பொருளைக் கற்றுத் தேர்ந்தோர் ஆவர். முதலாளித்துவ அரசுகள் வடிவத்தில் பலதரப்பட்டவை, ஆனால் இவற்றின் சாராம்சம் ஒன்றேதான்: வடிவம் எப்படியிருப்பினும் இந்த அரசுகள் எல்லாம், முடிவாய்ப் பார்க்குமிடத்து, தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரமே ஆகும்.

முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக்காலம் பலதரப்பட்ட அரசியல் வடிவங்களையும் மிகவும் ஏராளமாய்த் தோன்றவே செய்யும், ஆனால் சாராம்சம் தவிர்க்க முடியாதபடி ஒன்றாகவே இருக்கும்: **பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமாகவே இருக்கும்.**

*அத்தியாயம் 3*

## அரசும் புரட்சியும். 1871ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனது அனுபவம். மார்க்சின் பகுத்தாய்வு

### 1. கம்யூனார்டுகளைத் தீர முயற்சியில் இறங்கச் செய்தது எது?

*1870ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில், கம்யூனுக்குச் சில மாதங்கள் முன்பு, மார்க்ஸ் பாரிஸ் தொழிலாளர்களை எச்சரித்தது தெரிந்ததே—அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான எந்த முயற்சியும் நம்பிக்கை இழந்தோரின் அசட்டுத் துணிச்சலே ஆகுமென்று எச்சரித்தார்.*[38] *ஆயினும் 1871 மார்ச்சில் தொழிலாளர்கள் தீர்மானகரமான போரில் இறங்கும்படியான* நிர்ப்பந்தம் *ஏற்பட்டு, அவர்களும் இதை ஏற்றுக் கொண்டுவிட்டபோது, எழுச்சி எதார்த்த உண்மையாகி விட்டபோது, பாதக அறிகுறிகள் தென்பட்டுங்கூட, மார்க்ஸ் அளவிலா ஆர்வத்தோடு பாட்டாளி வர்க்கப் புரட்சியை வரவேற்றார். மார்க்சியத்தை விட்டோடி அவக்கேடுற்ற ருஷ்ய ஓடுகாலி பிளெஹானவ் 1905 நவம்பரில் தொழிலாளர், விவசாயிகளின் போராட்டத்தை ஆதரித்து எழுதி விட்டு, ஆனால் 1905 டிசம்பருக்குப் பிற்பாடு மிதவாதியின் பாணியில் ''அவர்கள் போர் தொடங்கியிருக்கக் கூடாது'' என்று ஓலமிட்டது போல, பகட்டுப் புலமையொடு நெறிமுறை பேசிக் ''காலத்துக்கு முன்னதாகவே துவக்கப்பட்ட''*

இயக்கமென்று மார்க்ஸ் கண்டனம் கூறிக் கொண்டிருக்க வில்லே.

''விண்ணைச் சாடியவர்கள்'' என்று கம்யூனர்டுகளை மார்க்ஸ் போற்றினர்.[39] ஆனல் அவர் கம்யூனர்டுகளின் வீரத்தை ஆர்வமோடு பாராட்டியதுடன் நின்றுவிடவில்லை. வெகுஜனப் புரட்சி இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை என்ரு லுங்கூட, அது அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று அனுபவமாகுமென, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் குறிப்பிட்டதொரு முன்னேற்றமாகுமென, நூற்றுக் கணக்கான வேலைத்திட்டங்களையும் வாதங்களையும் காட்டிலும் முக்கியமான நடைமுறைச் செயலாகுமெனக் கருதினர். மார்க்ஸ் இந்தப் புரட்சி இயக்கத்தின் அனுபவத்தைப் பகுத்தாராயவும், அதனிடமிருந்து போர்த்தந்திரப் படிப்பினைகள் பெறவும், இந்த அனுபவத்தின் அடிப்படையிலே தமது தத்துவத்தை மறுபரிசீலனை செய்து பார்க்கவும் முற்பட்டார்.

கம்யூனிஸ்டு அறிக்கைக்கு மார்க்ஸ் தேவையெனக் கருதிய ஒரேயொரு ''திருத்தம்'', பாரிஸ் கம்யூனர்டுகளின் புரட்சிகர அனுபவத்தின் அடிப்படையிலே அவர் செய்ததாகும்.

கம்யூனிஸ்டு அறிக்கையின் புதிய ஜெர்மன் பதிப்புக்கு அதன் இரு ஆசிரியர்களும் கையொப்பமிட்டு எழுதிய கடைசி முன்னுரை 1872 ஜூன் 24ஆம் தேதியிடப்பட்டதாகும். இந்த முன்னுரையில் அதன் ஆசிரியர்களான கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் கம்யூனிஸ்டு அறிக்கையின் வேலைத் திட்டம் ''சில விவரங்களில் காலங் கடந்ததாகி விட்டது'' என்று குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறுவதாவது:

> ''...கம்யூனது முக்கியமாய் ஒரு விவரத்தை, அதாவது 'ஏற்கனவே உள்ள அரசுப் பொறியமைவைத் தொழிலாளி வர்க்கம் அப்படியே கைப்பற்றித் தனது சொந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டுவிட முடியாது' என்பதை, நிரூபித்துக் காட்டிற்று...''

இந்த வாசகத்தில் ஒற்றை மேற்கோள் குறியிட்டுக் காட்டப்படும் சொற்களை ஆசிரியர்கள், மார்க்ஸ் எழுதிய

பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற நூலிலிருந்து அப்படியே எடுத்துக் கையாளுகின்றனர்.

இவ்வாறுக, பாரிஸ் கம்யூனின் தலைமையானதும் அடிப் படையானதுமான ஒரு படிப்பினையை, கம்யூனிஸ்டு அறிக்கையில் ஒரு முக்கிய திருத்தமாய்ப் புகுத்தும்படி அவ்வளவு பிரம்மாண்டமான முக்கியத்துவமுடையதாய் மார்க்சும் எங் கெல்சும் கருதினர்.

இந்த முக்கிய திருத்தம் சந்தர்ப்பவாதிகளால் திரித்துப் புரட்டப் பெற்றிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. கம்யூ னிஸ்டு அறிக்கையின் வாசகர்களில் பத்தில் ஒன்பது பேருக்கு, ஏன் நூற்றில் தொண்ணூற்று ஒன்பது பேருக்குங்கூட, இதன் பொருள் அனேகமாய்த் தெரிந்திருக்காது எனலாம். இந்தப் புரட்டலைப் பிற்பாடு, புரட்டல்களுக்கென்றே ஒதுக்கப்பட் டுள்ள ஒரு தனி அத்தியாயத்தில், நாம் பரிசீலிப்போம். மேலே தரப்பட்ட மார்க்சின் புகழ்மிக்க வாக்கியத்துக்குத் தற் போது சகஜமாய் அளிக்கப்படும் கொச்சையான ''வியாக்கி யானத்தை'' மட்டும் இங்கு குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கிறோம். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதலுக்கு மாறாய், மெதுவாய்ப் பையப் பைய வளர்ச்சி காணும் கருத்தினை மார்க்ஸ் இங்கு வலியுறுத்துகிறார் என்பதாய் ''வியாக்கியானம்'' அளிக்கப்படுகிறது.

ஆனால் இதற்கு நேர் எதிரானதே உண்மை. ''ஏற்கனவே உள்ள அரசுப் பொறியமைவை'' தொழிலாளி வர்க்கம் கைப்பற்றுவதோடு மட்டும் நிற்காமல், அதை அழித் தொழித்திடவும் நொறுக்கவும் வேண்டுமென் பதே மார்க்ஸ் கூறும் கருத்து.

*1871 ஏப்ரல் 12ல்*, அதாவது கம்யூன் நடைபெற்ற அதே காலத்தில், குகல்மனுக்கு மார்க்ஸ் எழுதினர்.

> ''...எனது புரூமேர் பதினெட்டின் கடைசி அத்தி யாயத்தைப் பார்த்தால், பிரெஞ்சுப் புரட்சியின் அடுத்த முயற்சி இனி முன்பு போல அதிகாரவர்க்க-இராணுவப் பொறியமைவை ஒருவர் கையிலிருந்து இன்னொருவர் கைக்கு மாற்றுவதாய் இருக்காது, அதை நொறுக்கிடு

வதாகவே இருக்குமென நான் கூறுவதைக் காண்பீர்கள்'' (அழுத்தம் மார்க்சினுடையது—மூலத்தில் இருப்பது zerbrechen), ''ஐரோப்பியக் கண்டத்து நாடுகளில் மெய்யான மக்கள் புரட்சி ஒவ்வொன்றுக்கும் இது முன்னிபந்தனையாகும்: வீரமிக்க நமது கட்சித் தோழர்கள் பாரிசில் இதைத்தான் செய்ய முயன்று வருகிறார்கள்'' (*Neue Zeit*, மலர் 20, இதழ் 1, 1901-02, பக்கம் 709). (குகல்மனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதங்கள் இரண்டுக்குக் குறையாத பதிப்புகளில் ருஷ்யனில் வெளிவந்திருக்கின்றன; இவற்றில் ஒன்று நான் பதிப்பித்து முன்னுரை எழுதியதாகும்.)

''அதிகாரவர்க்க-இராணுவப் பொறியமைவை நொறுக்கிடுவது''—இச்சொற்கள் புரட்சியின்போது பாட்டாளி வர்க்கம் அரசு சம்பந்தமாய்ச் செய்ய வேண்டிய பணிகள் குறித்து மார்க்சியம் கூறும் பிரதான படிப்பினையைச் சுருக்கமாய் எடுத்துரைக்கின்றன. இந்தப் படிப்பினையைத்தான், தற்போது ஆதிக்கத்திலுள்ள காவுத்ஸ்கிவாதம் மார்க்சியத்துக்கு அளிக்கும் ''வியாக்கியானம்'' அடியோடு புறக்கணிப்பதோடு, அப்பட்டமாய்த் திரித்துப் புரட்டியுமுள்ளது!

மார்க்ஸ் குறிப்பிடும் **புரூமேர் பதினெட்டில்** இது பற்றிய முழு வாசகத்தையும் ஏற்கனவே நாம் மேலே மேற்கோளாய்க் கொடுத்திருக்கிறோம்.

மேற்கூறிய மார்க்சின் வாதத்தில் குறிப்பாய் இரு விவரங்கள் கருத்துக்குரியனவாகும். முதலாவதாக, அவர் தமது முடிவைக் கண்டத்து நாடுகளுக்கு மட்டும் பொருந்துவதாய் வரம்பிட்டுக் கொள்கிறார். 1871ல் இது புரிந்து கொள்ளக் கூடியதே. அப்பொழுது பிரிட்டன் இராணுவவாதக் கும்பலும், பெருமளவுக்கு அதிகாரவர்க்கமும் இல்லாத கலப்பற்ற முதலாளித்துவ நாட்டுக்குரிய எடுத்துக்காட்டாகவே இருந்து வந்தது. ஆகவே பிரிட்டனை மார்க்ஸ் விலக்கிக் கொண்டார். ''ஏற்கனவே உள்ள அரசுப் பொறியமைவை'' அழித்தொழிக்க வேண்டுமென்ற முன்னிபந்தனை இல்லாமலே அன்று பிரிட்டனில் புரட்சி, மக்கள் புரட்சியுங்கூட, நடை

பெறுவது சாத்தியமாய்த் தோன்றியது, உண்மையில் சாத்திய மாகவும் இருந்தது.

இன்று, 1917ல், முதலாவது ஏகாதிபத்திய யுத்தம் நடைபெறும் காலத்தில், மார்க்ஸ் முன்பு வரம்பிட்டது பொருந்தாததாகிவிட்டது. பிரிட்டன், அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும், இராணுவவாதக் கும்பலும் அதிகாரவர்க்கமும் இல்லாதவை என்கிற பொருளில் அனைத்து உலகிலும் ஆங்கிலோ-சாக்சன் ''சுதந்திரத்துக்கு'' மிகப் பெரிய கடைசிப் பிரதிநிதிகளாய் விளங்கிய இவ்விரு நாடுகளும், யாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தி யாவற்றையும் நசுக்கும் அதிகாரவர்க்க-இராணுவ அமைப்புகளாலான இரத்தக் கறை படிந்த படுமோசமான அனைத்து ஐரோப்பியச் சகதியில் முழுகிவிட்டன. இன்று பிரிட்டனிலும் அமெரிக்காவிலும்கூட, ''ஏற்கனவே உள்ள அரசுப் பொறியமைவை'' (1914-17ஆம் ஆண்டுகளில் இது இந்நாடுகளில் ''ஐரோப்பிய'', பொதுவான ஏகாதிபத்தியப் பூரண நிலையை எய்திவிட்டது) நொறுக்குவதும், அழித்தொழிப்பதும் ''மெய்யான மக்கள் புரட்சி ஒவ்வொன்றுக்கும் முன்னிபந்தனையாகும்''.

இரண்டாவதாக, அதிகாரவர்க்க-இராணுவஅரசுப் பொறியமைவை அழித்தொழிப்பது ''மெய்யான மக்கள் புரட்சி ஒவ்வொன்றுக்கும் முன்னிபந்தனையாகும்'' என்று மார்க்ஸ் கூறும் ஆழ்ந்த கருத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ''மக்கள்'' புரட்சி என்னும் கருத்து மார்க்சிடமிருந்து வருவது விந்தையாய்த் தோன்றுகிறது. ஆகவே தாம் மார்க்சியவாதிகளாய்க் கருதப்பட வேண்டுமென விரும்பும் ஸ்துருவேயைப் பின்பற்றுவோராகிய ருஷ்யப் பிளெஹானவ்வாதிகளும் மென்ஷிவிக்குகளும் இந்தத் தொடர் மார்க்ஸ் ''கை தவறி'' எழுதியதெனக் கூறுமளவுக்குச் சென்றாலும் செல்லலாம். இவர்கள், முதலாளித்துவப் புரட்சி, பாட்டாளி வர்க்கப் புரட்சி ஆகிய இரண்டு மட்டுந்தான் ஒன்றுக்கொன்று எதிராய் இருக்க முடியும் என்னும் அளவுக்கு மார்க்சியத்தைக் கேவலமான மிதவாத முறையில் திரித்துவிடுகிறார்கள்; மேலும் இந்த எதிர்நிலையையும்கூட கிஞ்சித்தும் உயிரில்லாத முறையில்தான் புரிந்து கொள்கிறார்கள்.

இருபதாம் நூற்றுண்டின் புரட்சிகளை உதாரணங்களாய் எடுத்துக் கொண்டால், போர்த்துகல், துருக்கிப் புரட்சிகள்[40] இரண்டும் முதலாளித்துவப் புரட்சிகளே என்பதை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். ஆனால் இவை இரண்டில் எதுவும் ''மக்கள்'' புரட்சியல்ல; ஏனெனில் எதிலும் மக்களில் பெருந் திரளானோர், மிகப் பெருவாரியானோர் குறிப்பிடத் தக்க அளவுக்குத் தமது சொந்தப் பொருளாதார, அரசியல் கோரிக்கைகளை எழுப்பிச் செயலூக்கத்துடன் சுயேச்சையாய் முன்வரவில்லை. இதற்கு மாருக 1905-07ஆம் ஆண்டுகளின் ருஷ்ய முதலாளித்துவப் புரட்சி, போர்த்துகல், துருக்கிப் புரட்சிகளுக்குச் சில நேரங்களில் கிடைத்தது போன்ற ''பிர மாதமான'' வெற்றிகள் பெறவில்லை என்ருலுங்கூட, இது ''மெய்யான மக்கள்'' புரட்சி என்பதில் ஐயமில்லை; ஏனெனில் பெருந் திரளான மக்கள், அவர்களில் பெரும்பான்மை யினர், ஒடுக்குமுறையாலும் சுரண்டலாலும் நசுக்கப்பட்ட மிகவும் ''அடிநிலை'' சமுதாயத் தொகுதியோர் சுயேச்சை யாய்க் கிளர்ந்தெழுந்து தமது சொந்த கோரிக்கைகளின் முத்திரையை, ஒழிக்கப்பட்டு வந்த பழைய சமுதாயத்துக்குப் பதிலாய் ஒரு புதிய சமுதாயத்தைத் தமது சொந்த வழியில் கட்டியமைப்பதற்கான தமது முயற்சிகளின் முத்தி ரையை இப்புரட்சியின் போக்கு அனைத்திலும் பதித்தனர்.

ஐரோப்பாவில் 1871ல் கண்டத்து நாடு எதிலும் பாட் டாளி வர்க்கம் மக்களில் பெரும்பான்மையாய் இருக்கவில்லை. ''மக்கள்'' புரட்சியானது, பெரும்பான்மையோரை மெய் யாகவே தன் போக்கிலே இழுத்துச் செல்லும் புரட்சியானது பாட்டாளி வர்க்கம், விவசாயிகள் ஆகிய இரு பகுதியோரை யும் தன்னுள் கொண்டதாய் இருந்தால்தான் இவ்வாறு ''மக்கள்''புரட்சியாய் இருந்திருக்க முடியும். இவ்விரு வர்க்கங் களும்தான் அன்று ''மக்கள்'' என்போர். ''அதிகாரவர்க்க-இராணுவ அரசுப் பொறியமைவு'' இவ்விரு வர்க்கங்களையும் ஒடுக்கியும் நசுக்கியும் சுரண்டியும் வருகிறது என்பதால் இரண்டும் ஒன்றிணைக்கப்படுகின்றன. இந்தப் பொறியமைவை நொறுக்குவது, இதை அழித்தொழிப்பது மெய்யாகவே ''மக்களுக்கு'', அவர்களில் பெரும்பான்மையோருக்கு,

தொழிலாளர்களுக்கும் பெரும் பகுதி விவசாயிகளுக்கும் நலம் பயக்கிறது என்பதுதான், ஏழை விவசாயிகள் பாட்டாளிகளின் சுதந்திரமான கூட்டணிக்கு ''முன்னிபந்தனை யாகும்''. இது போன்ற கூட்டணி இல்லாதவரை ஜனநாயகம் நிலையற்றதாகவே இருக்கும்; சோஷலிச மாற்றம் ஏற்படுவது சாத்தியமல்ல.

பாரிஸ் கம்யூன் இத்தகைய கூட்டணியை நோக்கி மெய்யாகவே நடைபோட்டது என்பது பிரசித்தமானது. ஆனால் பல உள்நாட்டு, வெளிநாட்டுக் காரணங்களால் அது தனது குறிக்கோளை வந்தடைய முடியாமற் போய்விட்டது.

ஆகவே மார்க்ஸ் ''மெய்யான மக்கள் புரட்சி'' குறித்துப் பேசுகையில் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரின் தனி இயல்புகளைச் சிறிதும் உதாசீனம் செய்யாமல் (இவர்களைப் பற்றி அவர் நிறையவும் அடிக்கடியும் பேசினார்) ஐரோப்பாவில் 1871ல் கண்டத்து நாடுகள் மிகப் பெருவாரியானவற்றில் வர்க்கங்களுடைய பலத்தின் ஒப்புநிலையைத் துல்லியமாய்க் கணக்கில் எடுத்துக் கொண்டார். மறுபுறத்தில் அவர் அரசுப் பொறியமைவை ''நொறுக்குவது'' தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய இருசாராரின் நலன்களுக்கும் அவசியமென்று, இவர்களை இது ஒன்றுபடுத்துகிறதென்று, ''புல்லுருவியை'' அகற்றி விட்டு அதனிடத்தில் புதிய ஒன்றை அமைத்திடும் பொதுவான பணியை இது இந்த இருசாரார் முன்னும் வைக்கிறதென்று கூறினார்.

அமைத்திட வேண்டிய இந்தப் புதிய ஒன்று எது?

## 2. தகர்க்கப்படும் அரசுப் பொறியமைவுக்குப் பதிலாய் அமையப் போவது எது?

1847ல் கம்யூனிஸ்டு அறிக்கையில் மார்க்ஸ் இந்தக் கேள்விக்கு அளித்த பதில் முற்றிலும் கருத்தியலானதாகவே இருந்தது. இன்னும் சரியாய்க் கூறுவதெனில், அந்தப் பதில் செய்ய வேண்டிய பணிகளைச் சுட்டிக்காட்டியதே தவிர இவற்றைச் செய்து முடிப்பதற்கான வழிகளைச் சொல்லவில்லை.

இந்தப் பொறியமைவுக்குப் பதிலாய் ''ஆளும் வர்க்கமாய்ப் பாட்டாளி வர்க்கம் ஒழுங்கமைய'' வேண்டும், ''ஜனநாயகத் துக்கான போரில் வெற்றி பெற'' வேண்டும் என்பதே கம்யூனிஸ்டு அறிக்கையில் தரப்படும் பதில்.

மார்க்ஸ் கற்பனைகளில் ஈடுபடவில்லை. பாட்டாளி வர்க் கம் ஆளும் வர்க்கமாய் நிறுவன வழியில் ஒழுங்கமைவது திட்டவட்டமான எந்த வடிவங்களில் நடந்தேறும், இந்த ஒழுங்கமைப்பு ''ஜனநாயகத்துக்கான போரில்'' முழுநிறை வான, முடிவான ''வெற்றி பெறுவதுடன்'' இணைக்கப்படு வதற்குரிய திட்டவட்டமான முறை என்ன என்ற கேள்விக்கு வெகுஜன இயக்கத்தின் அனுபவம் பதிலளிக்குமென்று அவர் எதிர்பார்த்தார்.

கம்யூனுடைய அனுபவம் சொற்பமாகவே இருந்ததென் ருலும், மார்க்ஸ் இந்த அனுபவத்தை பிரான்சில் உள்நாட்டுப் போர் என்ற நூலில் மிகவும் உன்னிப்பாய்ப் பகுத்தாய்ந் தார். இந்நூலின் மிக முக்கிய வாசகங்களை மேற்கோளாய்த் தருகிருேம்.

> ''நிரந்தரச் சேனை, போலீஸ், அதிகாரவர்க்கம், சமயக் குருமார் அமைப்பு, நீதி மன்றம் ஆகிய சர்வ வியாபகச் செயலுறுப்புக்களைக் கொண்ட மத்தியத் துவ அரசு அதிகாரம்'' மத்திய காலத்தில் உதித்து, பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஓங்கி வளர்ந்தது. மூல தனத்துக்கும் உழைப்புக்குமிடையே வர்க்கப் பகைமை கள் வளர்ச்சியுற்றதைத் தொடர்ந்து ''மேலும் மேலும் அரசு அதிகாரமானது உழைப்பை அடக்குவதற்கான பொது சக்தியின் தன்மையை, வர்க்க ஆதிக்கத்திற் குரிய பொறியமைவின் தன்மையைப் பெற்றது. வர்க்கப் போராட்டத்தின் முன்னேற்றத்தைக் குறிக்கும் ஒவ் வொரு புரட்சியையும் அடுத்து, அரசு அதிகாரத்தின் அப்பட்டமான பலவந்தத் தன்மை மேலும் மேலும் கண்கூடாய்ப் புலப்படுகிறது''. 1848-49ஆம் ஆண்டு களின் புரட்சிக்குப் பிற்பாடு அரசு அதிகாரம் ''...உழைப் புக்கு எதிரான மூலதனத்தின் தேசியப் போர்க் கருவி''

ஆகிவிட்டது. இரண்டாவது சாம்ராஜ்யம் இதை உறுதியாக்கிற்று.

''சாம்ராஜ்யத்துக்கு நேர்மாருன எதிர்நிலையே கம்யூன்.'' ''வர்க்க ஆதிக்கத்தின் முடியாட்சி வடிவத்தை மட்டுமின்றி, வர்க்க ஆதிக்கத்தையே அகற்றிடுவதற்கான ஒரு குடியரசுக்கு உரிய குறிப்பிட்ட ஒரு வடிவமே கம்யூன்...''

பாட்டாளி வர்க்க, சோஷலிசக் குடியரசுக்கு ''உரிய'' இந்த வடிவம் என்ன? அது தோற்றுவிக்கத் தொடங்கிய அரசு எது?

''...நிரந்தரச் சேனையை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாய் ஆயுதமேந்திய மக்களைத் தோற்றுவித்ததே கம்யூனுடைய முதலாவது அரசாணையாகும்...''

இப்பொழுது இந்தக் கோரிக்கை, தன்னை சோஷலிஸ்டு என்பதாய்க் கூறிக் கொள்ளும் ஒவ்வொரு கட்சியின் வேலைத் திட்டத்திலும் இருப்பதைக் காண்கிருேம். ஆனல் இந்தக் கட்சிகளுடைய வேலைத்திட்டங்கள் உண்மையில் எந்த அளவுக்கு மதிக்கத்தக்கவை என்பது எங்களுடைய சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் நடந்து கொண்ட முறையிலிருந்து வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறது. பிப்ரவரி 27ஆம் நாள் புரட்சியை அடுத்து இவர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றத் தீர்மானமாய் மறுத்து விட்டனர்!

''...அனைத்து மக்களது வாக்குரிமையின் அடிப்படையில் பாரிஸ் நகரின் பல்வேறு தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்டு, கம்யூன் நிறுவப்பட்டது. இந்த உறுப்பினர்கள் பொறுப்புள்ளவர்களாகவும் எந்நேரத்திலும் நீக்கப்படக் கூடியவர்களுமாய் இருந்தனர். இயற்கையாகவே அதன் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் தொழிலாளர்களாகவோ, தொழிலாளி வர்க்கத்தின் முழு ஆதரவுக்குரிய பிரதிநிதிகளாகவோ தான் இருந்தனர்...

''...இதுகாறும் அரசாங்கத்தின் கைக்கருவியாய் இருந்து வந்த போலீஸ் இப்பொழுது திடுதிப்பென அதன் அரசியல் செயற்பாடுகள் யாவும் பறிக்கப்பட்டு பொறுப்புள்ள, எக்காலத்திலும் நீக்கப்படக்கூடிய கம்யூன் கைக்கருவியாய் மாற்றப்பட்டது... நிர்வாகத்தின் ஏனைய எல்லாத் துறைகளையும் சேர்ந்த அதிகாரிகளும் இதே போல மாற்றப்பட்டனர்... கம்யூன் உறுப்பினர்கள் முதலாய் எல்லோரும் தொழிலாளருக்குரிய சம்பளங்கள் பெற்றுப் பொதுச் சேவை புரிய வேண்டியதாயிற்று. அரசின் உயர் பதவியாளர்கள் மறைந்ததோடு உயர் பதவியாளர்களது தனியுரிமைகளும் சலுகைகளும் பிரதிநிதித்துவ மான்யத் தொகைகளும் மறைந்துவிட்டன... பழைய அரசாங்கத்தின் பௌதிகப் பலாத்காரக் கருவிகளான நிரந்தரச் சேனையையும் போலீசையும் ஒழித்துக்கட்டியதும் கம்யூனனது உடனே ஆன்மிக அடக்குமுறைக் கருவியையும், அதாவது குருமார்களுடைய அதிகாரத்தையும் தகர்க்க முற்பட்டது. நீதி மன்றத்தினர் போலியான சார்பற்ற நிலையை இழந்துவிட்டனர்... இனி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியோரும், பொறுப்புடையோரும், நீக்கப்படக் கூடியோரும் ஆயினர்...''[41]

ஆக, கம்யூனனது நொறுக்கப்பட்ட அரசுப் பொறியமைவுக்குப் பதிலாய் நிறைவான ஜனநாயகத்தை நிறுவியதாய் ''மட்டும்தான்'' தோன்றும். அதாவது, நிரந்தரச் சேனையை ஒழித்தது; எல்லா அதிகாரிகளையும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாக்கி, திருப்பியழைக்கப்படக் கூடியவர்களாக்கியது. ஆனால் உண்மையில் இந்த ''மட்டும்தான்'' என்பது ஒருவகை நிறுவனங்களை அகற்றி அவற்றினிடத்தில் அடிப்படையிலேயே வேறொரு தன்மையதான பிற நிறுவனங்களைத் தோற்றுவிக்கும் பிரம்மாண்ட மாறுதலைக் குறிப்பதாகும். ''அளவு பண்பாய் மாறுவதன்'' எடுத்துக்காட்டு இது. அதாவது முடியுமான அளவுக்கு முழுமையாகவும் முரணின்றியும் செயல்படுத்தப்பட்ட ஜனநாயகமானது முதலா

ளித்துவ ஜனநாயகத்திலிருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயக மாய் மாற்றமடைந்து விடுகிறது; அதாவது அரசு (=குறிப் பிட்ட ஒரு வர்க்கத்தை அடக்குவதற்கான தனிவகை சக்தி) இனி மெய்யான அரசு அல்லாத ஒன்ருய் மாற்றமடைந்துவிடு கிறது.

முதலாளித்துவ வர்க்கத்தாரை அடக்குவதும் அவர்க ளுடைய எதிர்ப்பை நசுக்குவதும் இனியும் அவசியமாகவே இருக்கிறது. கம்யூனுக்கு இது மிக மிக அவசியமாயிருந்தது. கம்யூன் இப்பணியைப் போதிய உறுதியோடு செய்யாதது அதன் தோல்விக்குரிய காரணங்களில் ஒன்ருகும். ஆனுல் அடக்குவதற்கான செயலுறுப்பு இங்கு மக்களின் பெரும் பான்மைப் பகுதியே அன்றி, அடிமையுடைமைச் சமுதாயம், பண்ணையடிமைச் சமுதாயம், கூலியடிமைச் சமுதாயம் ஆகிய இவை யாவற்றிலும் இருந்தது போலச் சிறுபான்மைப் பகுதி யல்ல. பெரும்பான்மை மக்கள், தாமே தமது ஒடுக்குமுறை யாளர்களே அடக்குவதால், அடக்குவதற்கான ''தனிவகை சக்தி'' ஒன்று இனி தேவையில்லை! இந்த அர்த்தத் தில் அரசு உலர்ந்து உதிரத் தொடங்குகிறது. தனிச் சலுகை படைத்த சிறுபான்மையோரது தனி வகை நிறுவனங்க ளுக்குப் பதிலாய் (தனிச் சலுகை பெற்ற அதிகாரவர்க்கம், நிரந்தரச் சேனையின் தலேவர்கள்), பெரும்பான்மை மக்கள் நேரில் தாமே இந்தப் பணிகளே நிறைவேற்ற முடிகிறது. அரசு அதிகாரத்தின் பணிகள் மேலும் மேலும் கூடுதலாய்ப் பெருந்திரளான மக்களுக்குரியதாகும்போது, இந்த அதிகாரத் திற்கான அவசியம் மேலும் மேலும் குறைந்துவிடுகிறது.

இச்சந்தர்ப்பத்தில், மார்க்ஸ் வலியுறுத்திக் கூறிய கம்யூ னின் பின்வரும் நடவடிக்கைகள் மிகவும் குறிப்பிடத்தக் கனவாகும்: அதிகாரிகளுக்கான எல்லாப் பிரதிநிதித்துவ மான் யங்களேயும் பண வகையிலான எல்லாத் தனிச் சலுகைகளே யும் ஒழித்தல், அரசின் எல்லா ஊழியர்களது ஊதியங்களே யும் ''தொழிலாளர்களுக்குரிய சம்பளங்களின்'' நிலேக்குச் சமமாக்குதல். முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து பாட் டாளி வர்க்க ஜனநாயகத்துக்கு, ஒடுக்குவோரின் ஜனநாய கத்திலிருந்து ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய ஜனநாயகத்

துக்கு, குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தை அடக்குவதற்கான ''தனிவகை சக்தியாய்'' அமைந்த அரசிலிருந்து ஒடுக்குவோரை அடக்குவதற்கான பெரும்பான்மை மக்களது—அதாவது தொழிலாளர்கள், விவசாயிகளது—பொது சக்திக்கு ஏற்பட்ட மாற்றத்தை ஏனைய எவற்றையும்விட இந்த நடவடிக்கைகள் மிகத் தெளிவாய்ப் புலப்படுத்துகின்றன. மிகவும் எடுப்பான இந்த விவகாரத்தில்தான், அரசு சம்பந்தமான பிரச்சினையைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியமானதெனக் கொள்ளத் தக்க இந்த விவகாரத்தில்தான், மார்க்சின் கருத்துக்கள் அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன! ஜனரஞ்சகமான விளக்க உரைகளில்—இவை எண்ணில் அடங்காதவை—இக் கருத்துக்கள் குறிப்பிடப்படுவதே இல்லை. கிறிஸ்தவர்கள், அவர்களுடைய மதம் அரசின் மதமானதும் ஜனநாயக-புரட்சிகர மனப்பான்மை கொண்ட புராதனக் கிறிஸ்தவத்தின் ''சூதறியாப் பேதைமையை'' ''மறந்துவிட்டது'' போல, இதுவும் காலத்துக்கு ஒவ்வாத பழம் பாணியிலான ''சூதறியாப் பேதைமையின்'' வகைப்பட்டதாய்க் கொள்ளப்பட்டு, இதைப் பற்றிக் குறிப்பிடாமலே மௌனமாயிருப்பதே ''உசித''மென்றாகிவிட்டது.

அரசின் உயர் அதிகாரிகளுடைய சம்பளம் குறைக்கப்பட வேண்டுமென்பது சூதறியாப் பேதைமை கொண்ட புராதன ஜனநாயகத்தின் கோரிக்கையாக ''மட்டுமே'' தோன்றுகிறதாம். நவீன சந்தர்ப்பவாதத்தின் ''மூலவர்களில்'' ஒருவரான முன்னாள் சமூக-ஜனநாயகவாதி எடுவார்டு பெர்ன்ஷ்டைன் ''புராதன'' ஜனநாயகம் குறித்து கூறப்படும் கொச்சையான முதலாளித்துவக் கேலியையும் கிண்டலையும் பன்முறை தாமும் திருப்பிக் கூறியிருக்கிறார். எல்லாச் சந்தர்ப்பவாதிகளையும், இன்றைய காவுத்ஸ்கிவாதிகளையும்போலவே அவரும் நிலைமையைப் புரிந்துகொள்ளவே இல்லை. முதலாவதாக ''புராதன'' ஜனநாயகத்துக்கு ஓரளவு ''பின்னடைந்து செல்லாமல்'' (வேறு எப்படித்தான் பெரும்பான்மையோரும், பிறகு விதிவிலக்கின்றி மக்கள் அனைவரும் அரசுப் பணிகளை ஏற்று நிறைவேற்ற முற்படுவதாம்?) முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச்

செல்வது சாத்தியமன்று என்பதையும்; இரண்டாவதாக, முதலாளித்துவம், முதலாளித்துவக் கலாசாரம் இவற்றின் அடிப்படையில் அமைந்த ''புராதன ஜனநாயகமானது'' வரலாற்றுக்கு முற்பட்ட, அல்லது முதலாளித்துவத்துக்கு முற்பட்ட காலங்களைச் சேர்ந்த புராதன ஜனநாயகத்தைப் போன்றதல்ல என்பதையும் புரிந்து கொள்ளவே இல்லை. முதலாளித்துவக் கலாசாரம் பெருவீதப் பொருளுற்பத்தியையும், ஆலைகளையும் ரயில்பாதைகளையும், அஞ்சல் துறையையும், தொலை பேசிகளையும், இன்ன பிறவற்றையும் தோற்றுவித்திருக்கிறது. இவற்றின் அடிப்படையில் பழைய ''அரசு அதிகாரத்தின்'' பணிகளில் மிகப் பெருவாரியானவை மிகவும் சுலபமாகிவிட்டதால், எழுத்தறிவுள்ள ஒவ்வொருவரும் எளிதில் செய்துவிடக் கூடிய மிக மிகச் சுலபமான பதிவு செய்தல், தொகுத்து வைத்தல், சரிபார்த்தல் ஆகிய வேலைகளாய் இவற்றைக் குறுக்கிக் கொண்டுவிட முடியும். சாதாரண ''தொழிலாளர்களுக்குரிய சம்பளங்களைப் பெற்று இந்த வேலைகளை எளிதில் செய்துவிடலாம். தனிச் சலுகைகள், ''அதிகார ஆடம்பரங்கள்'' இவற்றில் இம்மியையும் விட்டு வைக்காமல் இந்தப் பணிகளிலிருந்து அறவே களைந்துவிட முடியும் (களைந்துவிடவும் வேண்டும்).

விதிவிலக்கின்றி எல்லா அதிகாரிகளும் தேர்ந்தெடுக்கப்படுதல், எந்நேரத்திலும் பதவியிலிருந்து திருப்பியழைக்கப்படக் கூடியவர்களாய் இருத்தல், அவர்களுடைய சம்பளங்களைச் சாதாரணத் ''தொழிலாளர்களுக்குரிய சம்பளங்களின்'' நிலைக்குச் சமமாக்குதல்—''கூருமலே விளங்கும்'' இந்த சர்வசாதாரண ஜனநாயக நடவடிக்கைகள், தொழிலாளர்களுடைய நலன்களையும் விவசாயிகளில் மிகப் பெருவாரியானோரின் நலன்களையும் முழு அளவுக்கு ஒன்றுபடச் செய்வதோடு, அதேபோது முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு இட்டுச் செல்லும் பாலமாகவும் அமைகின்றன. அரசின் புனரமைப்பு சம்பந்தமான, முற்றிலும் அரசியல் வழியிலான சமுதாயப் புனரமைப்பு சம்பந்தமான நடவடிக்கைகளே இவை. ''உடைமை பறிப்போர் உடைமை பறிக்கப்படுதல்'' நடைபெறுவதுடனே, அதற்கான தயாரிப்புகளுடனே இணைக்

கப்படும்போது மட்டும்தான், அதாவது உற்பத்திச் சாதனங்களில் முதலாளித்துவத் தனியுடைமை சமுதாய உடைமையாய் மாற்றப்படுவதுடன் இணைக்கப்படும்போது மட்டுமே, இந்த நடவடிக்கைகள் அவற்றின் முழுப் பொருளையும் முக்கியத்துவத்தையும் பெறுகின்றன என்பதைக் கூறத் தேவையில்லை.

> ''எல்லா முதலாளித்துவப் புரட்சிகளும் எழுப்பிய அந்தக் கவர்ச்சிக் கோஷமாகிய மலிவான அரசாங்கத்தை, கம்யூனது செலவினங்களுக்கு இரு பெரும் ஆதாரங்களாய் அமைந்த சேனையையும் அதிகாரவர்க்கத்தையும் ஒழித்ததன் மூலம் நடைமுறை உண்மையாக்கிற்று'' என்று மார்க்ஸ் எழுதினார்.

ஏனைய குட்டிமுதலாளித்துவப் பகுதியினரில் எப்படியோ அதுபோலவே, விவசாயிகளிடமிருந்தும் மிகச் சொற்பமானோர் மட்டுமே முதலாளித்துவ அர்த்தத்தில் ''மேல் நிலைக்கு உயருகிறார்கள்'', ''வாழ்க்கையில் முன்னேறிச் சுகமாய் வாழ்கிறார்கள்'', அதாவது செல்வமுடையோராகவோ முதலாளிகளாகவோ அல்லது வசதி படைத்த தனிச் சலுகையுள்ள அதிகாரிகளாகவோ ஆகின்றனர். விவசாயிகள் இருந்து வரும் முதலாளித்துவ நாடு ஒவ்வொன்றிலும் (மிகப் பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் விவசாயிகள் இருக்கிறார்கள்), மிகப் பெரும் பகுதி விவசாயிகள் அரசாங்கத்தால் ஒடுக்கப்படுகிறார்கள்; அரசாங்கம் வீழ்த்தப்படி வேண்டுமென, ''மலிவான'' அரசாங்கம் வேண்டுமென ஏங்குகிறார்கள். பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே இதனைச் சித்திபெறச் செய்ய முடியும். இதைச் சித்திபெறச் செய்வதன் மூலம் பாட்டாளி வர்க்கம் அதேபோதில் அரசை சோஷலிச வழியில் புனரமைத்திடுவதை நோக்கி முன்னேறிச் செல்கிறது.

### 3. நாடாளுமன்ற முறையை ஒழித்தல்

> ''கம்யூனது நாடாளுமன்ற உறுப்பாயில்லாமல் செயலாற்றும் உறுப்பாய், ஒருங்கே சட்டமன்றமாகவும் நிர்வாகக் குழுவாகவும் செயல்படும் உறுப்பாய்த் திட்டமிடப்பட்டது'' என்று மார்க்ஸ் எழுதினார்.

> ''...ஆளும் வர்க்கத்தின் எந்த உறுப்பினர் நாடாளு மன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அடக்கி யொடுக்குவதென (ver- und zertreten) மூன்று அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தரம் தீர்மானிப்பதற்குப் பதி லாய், அனைத்து மக்கள் வாக்குரிமையானது கம்யூன் களாய் வகுக்கப்பெற்ற மக்களுக்கு—எந்த ஒரு முத லாளியும் தனது தொழிலுக்குத் தொழிலாளர்களையும் போர்மன்களையும் கணக்கர்களையும் தேடிக் கொள்ள தனியார் வாக்குரிமை பணியாற்றுகிறதல்லவா, அது போல—பணியாற்ற வேண்டும்.''

நாடாளுமன்ற முறை குறித்து 1871ல் அளிக்கப்பெற்ற சிறப்பு மிக்க இந்த விமர்சனமுங்கூட, வெகுவாய் மலிந்து விட்ட சமூக-தேசியவெறியின் காரணமாகவும் சந்தர்ப்பவா தத்தின் காரணமாகவும் இப்பொழுது மார்க்சியத்தின் ''மறக் கப்பட்ட வாசகங்களில்'' ஒன்ருகிவிட்டது. அமைச்சராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருப்பதையே தொழிலாய்க் கொண்டோரும், பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகம் புரி வோரும், தற்காலத்துச் ''செயல்முறை'' சோஷலிஸ்டுகளும் நாடாளுமன்ற முறை பற்றிய எல்லா விமர்சனத்தையும் அரா ஜகவாதிகளிடத்தே விட்டுவைத்துவிட்டனர். இந்த அதிசய மான காரணத்தால் நாடாளுமன்ற முறை பற்றிய எல்லா விமர் சனத்தையுமே அவர்கள் ''அராஜகவாதமென'' பறைசாற்று கிருர்கள்!! ''முன்னேறிய'' நாடாளுமன்ற நாடுகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினர், ஷெய்டெமன்களையும் டேவிட் களையும் லெகின்களையும் செம்பாக்களையும் ரெனெடேல்களை யும் ஹெண்டர்சன்களையும் வண்டர்வேல்டேகளையும் ஸ்டா னிங்குகளையும் பிரான்டிங்குகளையும் பிஸ்ஸொலாட்டியையும் அவர் சகாக்களையும் போன்ற ''சோஷலிஸ்டுகளிடம்'' அரு வருப்பு கொண்டு அராஜகவாத-சிண்டிக்கலிசத்துக்கு—இது சந்தர்ப்பவாதத்தின் உடன்பிறந்த இரட்டையே ஆயினுங் கூட—மேலும் மேலும் ஆதரவு தெரிவிப்பதில் வியப்பில்லை.

ஆனல் மார்க்சுக்குப் புரட்சிகர இயக்கவியலானது, பிளெ ஹானவும் காவுத்ஸ்கியும் ஏனையோரும் ஆக்கிக் கொண்டு

விட்ட வெற்று ஜம்பமாகவோ விளையாட்டுக் கிலுகிலுப்பை யாகவோ ஒருபோதும் இருந்ததில்லை. முதலாளித்துவ நாடாளுமன்ற முறை ''பன்றித் தொழுவமே'' ஆயினுங்கூட அதனைப் பயன்படுத்திக் கொள்ள, முக்கியமாய் நிலைமை புரட்சிகரமானதாய் இல்லை என்பது தெளிவாய்த் தெரியும் நேரத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் திராணியற்ற தாய் இருந்ததென்பதற்காக அராஜகவாதத்திடமிருந்து தயவு தாட்சண்யமின்றி முறித்துக் கொள்ள மார்க்சுக்குத் தெரிந்திருந்தது. அதேபோது நாடாளுமன்ற முறையை மெய்யாகவே புரட்சிகரமான பாட்டாளி வர்க்க நிலையிலிருந்து விமர்சிக்கவும் அவருக்குத் தெரிந்திருந்தது.

ஆளும் வர்க்கத்தின் எந்த உறுப்பினர் நாடாளுமன்றத் தின் மூலம் மக்களை அடக்கி ஒடுக்க வேண்டுமெனச் சில ஆண்டு களுக்கு ஒரு தரம் தீர்மானிப்பதே முதலாளித்துவ நாடாளு மன்ற முறையின் மெய்யான சாரப் பொருள்—நாடாளுமன்ற-அரசியல்சட்டத்துக்கு உட்பட்ட முடியரசுகளில் மட்டுமின்றி, மிகவும் ஜனநாயகமான குடியரசுகளிலுங்கூட இதுவேதான் நிலைமை.

அரசு குறித்த பிரச்சினையைப் பரிசீலிப்போமாயின், இந்தத் துறையில் பாட்டாளி வர்க்கத்தின் முன்னுள்ள பணி களின் கண்ணோட்டத்தில் அரசுக்குரிய நிறுவனங்களில் ஒன்று கிய நாடாளுமன்ற முறையைப் பரிசீலிப்போமாயின் நாடாளு மன்ற முறையை விட்டொழிக்கும் வழி என்ன? நாடாளு மன்ற முறையைத் தவிர்ப்பது எப்படி?

மறுபடியும் கூறுகிறோம்: கம்யூனை ஆராய்ந்து மார்க்ஸ் எடுத்துரைத்த படிப்பினைகள் அப்படி அடியோடு மறக்கப் பட்டுவிட்டதால், இன்றைய ''சமூக-ஜனநாயகவாதியால்'' (அதாவது, சோஷலிசத்தின்இன்றைய துரோகியால்) நாடாளு மன்ற முறை பற்றிய அராஜகவாத அல்லது பிற்போக்கு விமர்சனத்தைத் தவிர்த்து வேறு எந்த விமர்சனத்தையும் உண்மையில் புரிந்து கொள்ள முடிவதில்லை.

நாடாளுமன்ற முறையை விட்டொழிப்பதானது பிரதிநி தித்துவ உறுப்புக்களையும் தேர்தலையுமே விட்டொழிப்ப தாகாது. பிரதிநிதித்துவ உறுப்புக்கள் வெறும் வாய்ப்பேச்சுக்

கூடங்களாய் இருப்பதை மாற்றி அவற்றைச் ''செயலாற்றும்'' உறுப்புக்களாக்க வேண்டுமென்பதே இதன் பொருள். ''கம்யூனைது நாடாளுமன்ற உறுப்பாயில்லாமல் செயலாற்றும் உறுப்பாய், ஒருங்கே சட்டமன்றமாகவும் நிர்வாகக் குழுவாகவும் செயல்படும் உறுப்பாய்த் திட்டமிடப்பட்டது.''

''நாடாளுமன்ற உறுப்பல்ல, செயலாற்றும் உறுப்பு''— தற்கால நாடாளுமன்றத்தினருக்கும் சமூக-ஜனநாயகத்தின் நாடாளுமன்றச் ''செல்லப் பிள்ளைகளுக்கும்'' இது சரியான சவுக்கடி! அமெரிக்கா முதல் ஸ்விட்சர்லாந்து வரை, பிரான்ஸ் முதல் பிரிட்டன், நார்வே வரை இவ்வாறு எந்த நாடாளுமன்ற நாட்டை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்நாடுகளில் எல்லாம் ''அரசுக்குரிய'' மெய்யான வேலை திரைக்குப் பின்னால் நடத்தப்படுகிறது; இலாகாக்களும் அமைச்சகச் செயலகங்களும் படைத் தலைமையகங்களும் இதை நடத்துகின்றன. ''பொது மக்களை'' ஏய்ப்பதற்கென வாய்ப்பேச்சு பேசுவதே நாடாளுமன்றத்துக்கு அளிக்கப்பட்டிருக்கும் பணி. இதுவே உண்மை என்பதை முதலாளித்துவ-ஜனநாயகக் குடியரசாகியுள்ள ருஷ்யக் குடியரசுங்கூட புலப்படுத்துகிறது—மெய்யான நாடாளுமன்றம் ஒன்றை இக்குடியரசு நிறுவிக் கொள்ளும் முன்னரேகூட நாடாளுமன்ற முறையின் இந்தக் கேடுகள் யாவும் உடனடியாகவே வெளிப்பட்டு விட்டன. கேடுகெட்ட குட்டிமுதலாளித்துவ அற்பவாதத்தின் வீரர்களானோர்—ஸ்கோபெலெவ்களையும் தெஸெரெத்தேலிகளையும், செர்னேவ்களையும் அவ்க்சேன்தியெவ்களையும் போன்றோர்—அருவருப்பு மிக்க முதலாளித்துவ நாடாளுமன்ற முறையிலே சோவியத்துகளையும் நச்சுப்படுத்தி அவற்றை வெறும் வாய்ப்பேச்சுக் கூடங்களாய் மாற்றுவதில் வெற்றியுங்கூட பெற்றுவிட்டனர். சோவியத்துகளில்''சோஷலிஸ்டு'' அமைச்சர்கள் வாய்வீச்சுக்களாலும் தீர்மானங்களாலும் நாட்டுப்புறத்து ஏமாளிகளை ஏய்த்து வருகிறார்கள். ஒருபுறம் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களிலும் மென்ஷிவிக்குகளிலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமானோருக்குப் பசையுள்ள, சிறப்புக்குரிய பதவிகளான ''சன்மானங்கள்'' கிட்டும் பொருட்டும், மறுபுறத்தில் மக்களுடைய ''கவனம்''

திசைதிருப்பப்பட்டுக் ''கவரப்படும்'' பொருட்டும் அரசாங்கத்தினுள் ஓயாத ஆள்மாற்றம் நடந்தேறுகிறது. இதற்கிடையில் அமைச்சகச் செயலகங்களும் படைத் தலைமையகங்களும் ''அரசுக்குரிய'' வேலைகளை ''நடத்துகின்றன''.

ஆனால் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் ஏடான தியேலோ நரோதா[42] அண்மையில் ஒரு தலையங்கத்தில்—''எல்லோருமே'' அரசியல் விபசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ''உயர் குலத்து'' மாந்தரது ஒப்பிலா நேர்மையோடு ஒப்புக் கொண்டது: ''சோஷலிஸ்டுகள்'' தலைமை தாங்கும் அமைச்சகங்களிலுங்கூட அதிகாரிகளாலான அமைப்பு எந்த மாற்றமுமின்றி அப்படியே இருக்கிறதென்றும், பழைய பாணியிலேயே வேலை செய்து புரட்சிகர நடவடிக்கைகளைத் ''தங்கு தடையின்றி'' சீர்குலைத்து வருகிறதென்றும் ஒப்புக்கொண்டது! இந்த ஒப்புதல் வாக்குமூலமின்றியே, அரசாங்கத்தில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் பங்கு கொள்வதன் நடைமுறை வரலாறே இதனை நிரூபிக்கவில்லையா? ஆயினும் அமைச்சரவையில் காடெட்டுகளுடைய சகவாசத்தால் செர்னேவ்களும் ருசானவ்களும் ஸென்ஸினவ்களும் தியேலோ நரோதாவின் பிற ஆசிரியர்களும் இப்படி வெட்கங் கெட்டவர்களாகி ஏதோ அற்பவிவரத்தைக் குறிப்பிடுவதுபோல ''தமது'' அமைச்சகங்களில் எதுவும் மாற்றமின்றி அப்படியே இருப்பதாய்க் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும்!! கிராமப்புற ஏழை எளியோரை ஏய்க்கப் புரட்சிகர-ஜனநாயகச் சொல்லடுக்குகள், முதலாளிமார்கள் ''மனம் மகிழ'' அதிகார வர்க்க ஆட்சியும் செயலயங்களுக்கு வழக்கமான இழுத்தடிப்பும்—இதுதான் ''நேர்மை மிக்க'' கூட்டு அமைச்சரவையின் சாராம்சம்.

முதலாளித்துவ சமுதாயத்தின் ஊழல் மலிந்த நாற்றம் பிடித்த நாடாளுமன்ற முறைக்குப் பதிலாய், கம்யூனானது கருத்துச் சுதந்திரமும் விவாதச் சுதந்திரமும் ஏமாற்று வித்தையாய்ச் சீரழிந்துவிடாத உறுப்புக்களைத் தோற்றுவிக்கிறது. எப்படியெனில் நாடாளுமன்றத்தினர் தாமே வேலை செய்யவும், தாம் இயற்றும் சட்டங்களைத் தாமே செயல்படுத்தவும், உண்மையில் சாதிக்கப் பெற்ற பலன்களைத் தாமே

சோதித்துப் பார்க்கவும், தம்மைத் தேர்ந்தெடுத்த தொகுதியோருக்கு நேரடியாகத் தாமே பொறுப்புக் கூறவும் வேண்டியதாகிறது. பிரதிநிதித்துவ உறுப்புக்கள் தொடர்ந்து நிலவுகின்றன; ஆனால் நாடாளுமன்ற முறை ஒரு தனி வகை அமைப்பாய், சட்டமியற்றுவதற்கும் செயல்படுத்துவதற்கும் இடையிலான உழைப்புப் பிரிவினையாய், பிரதிநிதிகளது தனிச் சலுகை நிலையாய் நிலவவில்லை. பிரதிநிதித்துவ உறுப்புக்கள் இல்லாமல் ஜனநாயகத்தை, பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தையும்கூட கற்பனை செய்து பார்க்க முடியாது. ஆனால் நாடாளுமன்ற முறை இல்லாமல் ஜனநாயகத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியும், **கட்டாயம்** பார்க்கவும் வேண்டும். முதலாளித்துவ சமுதாயத்தை நாம் விமர்சித்துக் கண்டிப்பது வெறும் சொல் அளவிலான விமர்சனமாய் நின்றுவிடக் கூடாதெனில், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதிக்கத்தை வீழ்த்த வேண்டுமென்ற விருப்பம், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் விவகாரத்திலும், மற்றும் ஷெய்டெமன்கள், லெகின்களின் விவகாரத்திலும், செம்பாக்கள், வண்டர்வேல்டேகளின் விவகாரத்திலும் இருப்பது போல தொழிலாளர்களுடைய வாக்குகளைக் கவருவதற்கான வெறும் ''தேர்தல்'' முழக்கமாயிராது நமது திடமான உள்ளப் பூர்வமான விருப்பமாய் இருந்தால் கட்டாயம் நாம் இவ்வாறே செய்ய வேண்டும்.

கம்யூனுக்கும் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்கும் அவசியமான அந்த அதிகாரிகளின் பணிகள் குறித்துப் பேசுகையில் மார்க்ஸ் அவர்களை ''எந்த ஒரு முதலாளியின்'' ஊழியர்களுடன், அதாவது சாதாரண முதலாளித்துவத் தொழில் நிலையத்தின் ''தொழிலாளர்கள், போர்மன்கள், கணக்கர்களுடன்'' ஒப்பிடுவது கருத்தூன்றிக் கவனிக்கத்தக்கதாகும்.

''புதிய'' சமுதாயம் ஒன்றைத் தாமே கற்பனாசக்தியால் தோற்றுவித்துக் கொண்டார், அல்லது கண்டுபிடித்துக் கொண்டார் என்கிற பொருளில் மார்க்சிடம் கற்பனாவாதத்தின் சாயல் இம்மியும் கிடையாது. இல்லை, பழைய சமுதாயத்தின் **உள்ளிருந்து** புதிய சமுதாயம் **பிறப்பதையும்**, முன்னது பின்னதாய் மாறிடும் வடிவங்களையும் இயற்கை

யான வரலாற்று நிகழ்ச்சிப்போக்காய் அவர் ஆராய்ந்தார். வெகுஜனப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் ஸ்தூலமான அனுபவத்தைப் பரிசீலித்து, அதனின்று நடைமுறைப் படிப்பினைகள் பெற முயன்ருர். மாபெரும் புரட்சிகர சிந்தனையாளர்கள் எல்லோருமே ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய மாபெரும் இயக்கங்களின் அனுபவத்திலிருந்து தயக்கமின்றி கற்றறிந்து கொண்டது போலவே அவர் கம்யூனிலிருந்து "கற்றறிந்து கொண்டாரே" அன்றி, ("அவர்கள் போர் தொடங்கியிருக்கக் கூடாது" என்று பிளெஹானவ் கூறியதைப் போலவோ, "வர்க்கமானது உரிய வரம்புக்கு உட்பட்டாக வேண்டும்" என்று தெஸெரெத்தேலி கூறியதைப் போலவோ) பகட்டுப் புலமை வாய்ந்த "ஞான உபதேசம்" செய்ய முற்பட்டதில்லை.

உடனடியாகவும் எல்லா இடத்தும் முற்ருகவும் அதிகார வர்க்க ஆட்சியை அழித்துவிடுவது முடியாத காரியம். அது ஓர் ஆகாயக் கோட்டையே ஆகும். ஆனல் பழைய அதிகார வர்க்கப் பொறியமைவை உடனடியாகவே நொறுக்குவதும், எல்லாவகை அதிகாரவர்க்க ஆட்சியையும் படிப்படியாய் ஒழித்திட வழி கோலும் புதிய பொறியமைவை உடனே அமைத்திடத் தொடங்குவதும் ஆகாயக் கோட்டை அல்ல, கம்யூனினது அனுபவமாகும்; புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குரிய நேரடியான, உடனடியான பணி இது.

"அரசு" நிர்வாகத்தின் பணிகளை முதலாளித்துவம் எளிதாக்கிவிடுகிறது. "நாட்டாண்மை புரிவது" விட்டொழிக்கப்படுவதும், யாவும் பாட்டாளி வர்க்கத்தினர் (ஆளும் வர்க்கமாய்) ஒழுங்கமையும் விவகாரமாகிவிடுவதும் இதனல் சாத்தியமாகிறது. இவ்வாறு ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம் சமுதாயம் அனைத்தின் பெயரில் "தொழிலாளர்களையும் போர்மன்களையும் கணக்கர்களையும்" சம்பளத்துக்கு அமர்த்திக்கொள்ளும்.

நாம் கற்பனுவாதிகள் அல்ல. நிர்வாகம் அனைத்தையும், கீழ்ப்படிதல் அனைத்தையும் உடனடியாகவே விட்டொழித்துவிடலாமென நாம் "கனவு காணவில்லை". பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குள்ள கடமைகளைப் புரிந்துகொள்ளாததே

இந்த அராஜகவாதக் கனவுகளுக்கு அடிப்படை. இவை மார்க்சியத்துக்கு முற்றிலும் புறம்பானவை. உண்மையில் மக்கள் வேறு விதமானோராய் மாறுகிறவரை சோஷலிசப் புரட்சியை ஒத்திப் போடுவதற்கே இவை வகை செய்கின் றன. இல்லை, மக்கள் தற்போது இருக்கும் இதே நிலையிலேயே, கீழ்ப்படிதலையும், மேற்பார்வையையும், ''போர்மன் களையும் கணக்கர்களையும்'' விட்டொழிக்க முடியாதவர் களாயுள்ள மக்களது இதே நிலையிலேயே, நாம் சோஷலிசப் புரட்சி நடத்த விரும்புகிறோம்.

ஆனால் கீழ்ப்படிதலானது, சுரண்டப்படுவோரும் உழைப் பாளர்களுமானோர் அனைவரின் ஆயுதமேந்திய முன்னணிப் படைக்கு, அதாவது பாட்டாளி வர்க்கத்துக்குக் கீழ்ப்படித லாய் இருத்தல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளது தனி வகை ''நாட்டாண்மையை'' ''போர்மன்கள், கணக்கர்கள்'' இவர்களது எளிய பணிகளாய் மாற்றுவதற்கு உடனடியாக வே, இத்தருணமே தொடங்கிவிட முடியும், தொடங்கவும் வேண்டும். இந்த எளிய பணிகள் ஏற்கனவே சராசரி நகரவாசி யின் ஆற்றலுக்கு முற்றிலும் உட்பட்டவையே ஆனதால், ''தொழிலாளர்களுக்குரிய சம்பளம்'' பெற்று இவற்றைத் திறம்படச் செய்ய முடியும்.

தொழிலாளர்களாகிய நாம் முதலாளித்துவம் ஏற்கனவே தோற்றுவித்திருப்பதன் அடிப்படையிலே பெருவீதப் பொருளுற்பத்தியை ஒழுங்கமைத்து நிறுவுவோம். தொழி லாளர்களான நம்முடைய சொந்த அனுபவத்தை ஆதார மாய்க் கொண்டும், ஆயுதமேந்திய தொழிலாளர்களது அரசு அதிகாரத்தின் துணையுடன் கண்டிப்பான, உருக்கு உறுதி கொண்ட கட்டுப்பாட்டை நிலைநாட்டியும் இதனைச் செய் திடுவோம். அரசு அதிகாரிகளுடைய பாத்திரத்தைப் பொறுப் புள்ள, விலக்கப்படக் கூடிய, சாதாரணச் சம்பளம் பெறும் ''போர்மன்களும், கணக்கர்களுமாய்'' இருந்து (எல்லாவகை களையும் ரகங்களையும் தரங்களையும் சேர்ந்த தொழில்நுட்ப ஊழியர்களது உதவியுடன்தான்) நமது உத்தரவுகளை நிறை வேற்றுவது மட்டுமான பாத்திரமாய்க் குறைத்துவிடுவோம். இதுவே நமக்குரிய பாட்டாளி வர்க்கக் கடமை. பாட்டாளி

வர்க்கப் புரட்சியைச் சித்தி பெறச் செய்வதில் இதுவே நாம் செய்யத் தொடங்கக் கூடியதும், செய்யத் தொடங்க வேண்டியதும் ஆகும். பெருவீதப் பொருளுற்பத்தியின் அடிப்படையிலே அமைந்த இத்தகைய ஒரு துவக்கம் ஏற்படுமாயின், அதுவே அதிகாரவர்க்கம் அனைத்தும் படிப்படியாய் ''உலர்ந்து உதிர்ந்துவிடுவதற்கு'' இட்டுச் செல்லும். மேலும் மேலும் எளிதாகி வரும் காண்காணிப்பு, கணக்கு வைப்பு வேலைகள் கிரமப்படி ஒவ்வொருவராலும் செய்யப்பட்டு, பிறகு நிலையான பழக்கமாகி, முடிவில் மக்களில் ஒரு தனிப் பகுதியோருக்குரிய தனி வகை வேலைகளாய் இருக்கும் நிலை மறைந்தொழிந்துவிடும்படியான ஒழுங்கு முறை—மேற்கோள் குறிகளிட்டுக் காட்டப்பட வேண்டியில்லாத ஒழுங்கு முறை, கூலியுழைப்பு அடிமை முறையின் சாயல் இம்மியும் இல்லாத ஒழுங்கு முறை—படிப்படியாய்த் தோற்றுவிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும்.

கடந்த நூற்றுண்டின் எழுபதாம் ஆண்டுகளில் வேடிக்கையான ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி ஒருவர் அஞ்சல் பணித் துறையை சோஷலிசப் பொருளாதார அமைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாய்க் குறிப்பிட்டார். இது மிகவும் சரிதான். தற்போது அஞ்சல் பணித் துறை அரசு-முதலாளித்துவ ஏகபோக முறையில் அமைந்த தொழிலாய் இருந்து வருகிறது. ஏகாதிபத்தியமானது எல்லா டிரஸ்டுகளையுமே இதையொத்த நிறுவனங்களாகப் படிப்படியாய் மாற்றி வருகிறது. இவற்றில் அதே முதலாளித்துவ அதிகாரவர்க்கம்தான், அளவு மீறிய வேலைப் பளுவுக்கும் பட்டினிக்கும் இலக்காகி அவதியுறும் ''சாதாரண'' உழைப்பாளி மக்களுக்கு மேலானதாய் நிற்கிறது. ஆனால் சமூக நிர்வாகத்தின் கட்டமைவு ஏற்கனவே இவற்றில் தயாராய் இருக்கிறது. முதலாளிகளை நாம் வீழ்த்தி இந்தச் சுரண்டலாளர்களுடைய எதிர்ப்பை ஆயுதமேந்திய தொழிலாளர்களது இரும்புக் கரம் கொண்டு நசுக்கி, தற்கால அரசின் அதிகாரவர்க்க பொறியமைவை நொறுக்கியதும், உன்னத முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்தக் கட்டமைவு, ''புல்லுருவி''யிடமிருந்து விடுவிக்கப்பட்டு நம் கைக்குக் கிட்டிவிடும். ஒன்றுபட்ட தொழி

லாளர்கள் தாமே இந்தக் கட்டமைவைத் திறம்பட இயங்கச் செய்யமுடியும். இத்தொழிலாளர்கள் தொழில்நுட்ப நிபுணர்களையும் போர்மன்களையும் கணக்கர்களையும் சம்பளத்துக்கு அமர்த்திக் கொள்வார்கள்; அவர்கள் எல்லோருக்கும், பொதுவாய் ''அரசு'' அதிகாரிகள் எல்லோருக்கும் எப்படியோ அதே போல, தொழிலாளர்களுக்குரிய சம்பளங்களையே தருவார்கள். எல்லா டிரஸ்டுகள் சம்பந்தமாகவும் உடனடியாகவே நிறைவேற்றப்படக் கூடிய ஸ்தூலமான, நடைமுறைப் பணியாகும் இது. இந்தப் பணி நிறைவேற்றப் பட்டதும் உழைப்பாளி மக்கள் சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டுவிடுவார்கள். ஏற்கனவே கம்யூனது நடைமுறையில் செய்யத் தொடங்கியதை (குறிப்பாய் அரசை அமைத்திடுவது சம்பந்தமாய்) கணக்கில் எடுத்துக் கொண்டு வகுக்கப் பெற்ற பணி இது.

பொருளாதாரம் அனைத்தையுமே அஞ்சல் பணித் துறையைப் போல ஒழுங்கமைத்து, தொழில்நுட்ப நிபுணர்கள், போர்மன்கள், கணக்கர்கள், மற்றும் எல்லா அதிகாரிகளும் ''தொழிலாளருக்குரிய சம்பளத்துக்கு'' அதிகமல்லாத சம்பளம் பெறச் செய்து, அனைத்தையுமே ஆயுதமேந்திய பாட்டாளி வர்க்கத்தின் கண்காணிப்பிலும் தலைமையிலும் இருத்த வேண்டும்—இதுவே நமது உடனடிக் குறிக்கோள். இதுவே நமக்குத் தேவையான அரசும், பொருளாதார அடித்தளமும். நாடாளுமன்ற முறையை ஒழித்து, பிரதிநிதித்துவ உறுப்புக்களை விடாமல் பாதுகாக்கப் போவது இதுவே. இந்த உறுப்புக்களை முதலாளித்துவ வர்க்கம் ஆழ்த்திய இழிநிலையிலிருந்து உழைப்பாளி வர்க்கங்களை விடுவிக்கப் போவது இதுவே.

### 4. தேசிய ஒற்றுமையின் நிறுவன ஒழுங்கமைப்பு

''...தேசிய நிறுவன ஒழுங்கமைப்புப் பற்றிய சுருக்கமான உருவரையில்—இந்த ஒழுங்கமைப்பை வளர்த்து விரிவாக்கக் கம்யூனுக்கு அவகாசம் கிடைக்கவில்—

மிகச் சிறிய கிராமத்துக்குங்கூட கம்யூன்தான் உரிய அரசியல் வடிவமாய் இருக்குமென்று அது மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது...'' கம்யூன்கள் பாரிசில் ''தேசியப் பிரதிநிதிக் குழுவைத்'' தேர்ந்தெடுப்பதாய் இருந்தன.

''...ஒருசிலவே ஆயினும், மத்திய அரசாங்கத்திடம் இனியும் எஞ்சி இருக்கக்கூடிய முக்கியமான பணிகள், —வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டுள்ளது போல —ஒழித்துக் கட்டப்பட்டுவிட மாட்டா. மாருக, கம்யூனுடைய, அதாவது முற்றிலும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களான அதிகாரிகளுக்கு அவை மாற்றப்படும்...

''...தேசிய ஒற்றுமை குலேக்கப்பட்டுவிடாது; மாருக, கம்யூன் அமைப்பால் அது ஒழுங்கமைக்கப்படும். இந்த ஒற்றுமையின் உருவகமாய் வேடம் தரித்து, ஆனல் தேசத்தைச் சாராமல் சுயேச்சையானதாகவும் அதற்கு மேம்பட்டதாகவும் இருக்க விரும்பிய அரசு அதிகாரம், தேசத்தின் உடலில் புல்லுருவியாய் வளர்ந்து வேண்டாத தசைப் பிண்டமாய் அமைந்த அரசு அதிகாரம் ஒழிக்கப்படுவதன் மூலம் தேசிய ஒற்றுமை எதார்த்த உண்மையாக்கப்படும். பழைய அரசாங்க அதிகாரத்தின் வெறும் அடக்குமுறை உறுப்புக்கள் வெட்டியெறியப்பட்டு, அதேபோதில் அதன் நியாயமான பணிகள் சமுதாயத்தைவிட மேம்பட்டதாய் நிற்க உரிமை கொண்டாடிய இந்த அதிகாரத்திடமிருந்து பிடுங்கப் பெற்று, சமுதாயத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களான ஊழியர்கள் வசம் மீட்டடைக்கப்படும்.''

மார்க்சின் இந்தக் கருத்துரைகளேத் தற்கால சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதிகள் புரிந்து கொள்ள எந்த அளவுக்குத் தவறிவிட்டார்கள்—மறுத்துவிட்டார்கள் என்ருல் இன்னும் பொருத்தமாயிருக்கும்—என்பதற்கு ஓடுகாலி பெர்ன்ஷ்டைனது ஹெரஸ்திராதியப் புகழ் பெற்ற சோஷலிசத்தின் முதற்கோள்களும் சமூக-ஜனநாயகவாதிகளுடைய கடமை

களும் என்னும் புத்தகம் தெளிவான எடுத்துக்காட்டாகும். மார்க்சின் மேற்கூறிய வாசகம் குறித்துத்தான் பெர்ன்ஷ்டைன் எழுதினர்: ''இதன் அரசியல் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை'' இந்த வேலைத்திட்டம் ''இதன் சாராம்சக் கூறுகள் யாவற்றிலும் புரூதோனின் கூட்டாட்சிக் கோட்பாட்டை மிகவும் ஒத்திருக்கிறது... மார்க்சுக்கும் 'குட்டிமுதலாளித்துவ' புரூதோனுக்குமிடையே (சிலேடைப் பொருளில் தொனிக்க வேண்டுமென்று ''குட்டிமுதலாளித்துவ'' என்னும் சொல்லை பெர்ன்ஷ்டைன் மேற்கோள் குறிகளிட்டு உபயோகிக்கிறர்) ஏனைய யாவற்றிலும் எவ்வளவுதான் வேறுபாடு இருப்பினும், இந்த விவகாரங்களில், அவர்களுடைய வாத முறைகள் மிகமிக நெருங்கி வந்துவிடுகின்றன''. நகராண்மைக் கழகங்களுடைய முக்கியத்துவம் அதிகரித்து வருவது மெய்தான் என்று பெர்ன்ஷ்டைன் மேலும் தொடர்ந்து எழுதுகிறர். இருப்பினும் ''மார்க்சும் புரூதோனும் நினைக்கிற மாதிரி தற்கால அரசுகளை இப்படி அடியோடு கலைத்து (Auflösung) அவற்றின் ஒழுங்கமைப்பை இப்படி முற்றிலும் மாற்றுவதும் (Umwandlung) (கம்யூன்களால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாலான மாநில அல்லது மாவட்டச் சபைகளுடைய பிரதிநிதிகளைக் கொண்டு தேசிய சபை அமைக்கப்படும்படி) இதன் விளைவாய்த் தேசியப் பிரதிநிதித்துவத்துக்கான பழைய முறையை மறையச் செய்வதுமே ஜனநாயகத்தின் முதற்பணியாய் இருக்குமென்பது சந்தேகத்துக்குரியதாகவே எனக்குத் தோன்றுகிறது'' (பெர்ன்ஷ்டைன், முதற்கோள்கள், ஜெர்மன் பதிப்பு, 1899, பக்கங்கள் 134, 136).

''புல்லுருவியாய் வளர்ந்து வேண்டாத தசைப் பிண்டமாய் அமைந்த அரசு அதிகாரத்தை ஒழிப்பது'' பற்றிய மார்க்சின் கருத்தோட்டங்களைப் புரூதோனின் கூட்டாட்சிக் கோட்பாட்டுடன் போட்டுக் குழப்புவது முழுக்க முழுக்க அபாண்டமேயாகும்! ஆனல் இந்தக் குழப்படி ஏதோ தற்செயலாய் நிகழ்வதல்ல. ஏனெனில் மத்தியத்துவத்துக்கு எதிராய்க் கூட்டாட்சிக் கோட்பாடு குறித்து இங்கு மார்க்ஸ் பேசவேயில்லை, எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் செயல்படும் பழைய, முதலாளித்துவ அரசுப் பொறியமைவை

நொறுக்குவது பற்றியே பேசுகிறுர் என்பது எந்தச் சந்தர்ப்ப வாதிக்கும் புலப்படாதுதான்.

இந்தச் சந்தர்ப்பவாதிக்குப் புலப்படுவதெல்லாம் குட்டி முதலாளித்துவ அற்பத்தனமும் ''சீர்திருத்தவாதச்'' சகதியும் மலிந்துவிட்ட சூழலில் தன்னேச் சுற்றிலும் தான் காண்பதுதான், அதாவது ''நகராண்மைக் கழகங்கள்தான்''! பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்துச் சிந்திக்கும் பழக்கத்தையே இந்தச் சந்தர்ப்பவாதி விட்டொழித்துவிட்டார்.

இது நகைக்கத்தக்கதே. ஆனல் இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவெனில் இந்த விவகாரத்தில் யாருமே பெர்ன்ஷ்டைனே எதிர்த்து வாதாடவில்லே. பலரும் பெர்ன்ஷ்டைனே எதிர்த்து வாதாடியிருக்கிறுர்கள்—முக்கியமாய் ருஷ்ய வெளியீடுகளில் பிளெஹானவையும் ஐரோப்பிய வெளியீடுகளில் காவுத்ஸ்கியையும் குறிப்பிடலாம். ஆயினும் இந்த விவகாரத்தில் மார்க்சை பெர்ன்ஷ்டைன் திரித்துப் புரட்டியது குறித்து இவர்களில் எவரும் எதுவுமே கூறியதில்லே.

இந்தச் சந்தர்ப்பவாதி புரட்சிகர வழியில் சிந்திக்கவும் புரட்சி குறித்து நினேக்கவும் அறவே மறந்துவிட்டதால், அவர் ''கூட்டாட்சிக் கோட்பாட்டை'' மார்க்சுக்குரியதாகக் கற்பித்துக் கூறுகிறுர், அராஜகவாதத்தின் மூலவரான புருதோனுடன் மார்க்சை இணேத்துக் குழப்புகிறுர். மரபு வழுவாத மார்க்சியவாதிகள் என்றும் புரட்சிகர மார்க்சியத் தத்துவத்தின் காவலர்கள் என்றும் கூறிக் கொள்ளும் காவுத்ஸ்கியையும் பிளெஹானவையும் பொறுத்தவரை, இந்த விவகாரத்தில் அவர்கள் மௌனம் சாதித்துவிடுகின்றனர்! மார்க்சியத்துக்கும் அராஜகவாதத்துக்கும் இடையேயுள்ள வேறுபாடு குறித்து அளவு மீறிக் கொச்சையான கருத்துக்களே வெளியிடுவது காவுத்ஸ்கிவாதிகள், சந்தர்ப்பவாதிகள் ஆகிய இருசாராருக்குமுரிய குணுதிசயமாய் இருப்பதற்கான மூல காரணங்களில் ஒன்று இங்கு அடங்கியுள்ளது. இதை நாம் பிற்பாடு திரும்பவும் விவாதிப்போம்.

கம்யூனுடைய அனுபவம் குறித்து மார்க்ஸ் கூறும் மேற்கண்ட கருத்துரைகளில் கூட்டாட்சிக் கோட்பாட்டின் சாயல்

சிறிதும் காணப்படவில்லை. சந்தர்ப்பவாதி பெர்ன்ஷ்டைன் காணத் தவறும் அதே விவரத்தில்தான் மார்க்ஸ் புரூதோனுடன் உடன்பாடு கொண்டிருந்தார். பெர்ன்ஷ்டைன் அவர்களிடையே ஒற்றுமை இருக்கக் கண்ட விவரத்தில் மார்க்ஸ் புரூதோனுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்.

தற்கால அரசுப் பொறியமைவு ''நொறுக்கப்பட வேண்டும்'' என்பதே இருவருடைய நிலையும்—இதில் மார்க்ஸ் புரூதோனுடன் உடன்பாடுகொண்டிருந்தார். இந்த விவரத்தில் மார்க்சியத்துக்கும் அராஜகவாதத்துக்கும் (புரூதோன், பக்கூனின் ஆகிய இருவரின் அராஜகவாதத்துக்கும்) இடையே கருத்து ஒற்றுமை இருப்பதைச் சந்தர்ப்பவாதிகளோ காவுத்ஸ்கிவாதிகளோ காண விரும்பவில்லை. ஏனெனில் இங்கிருந்துதான் அவர்கள் மார்க்சியத்திடமிருந்து விலகி ஓடினர்.

கூட்டாட்சிக் கோட்பாடு பற்றிய பிரச்சினையில்தான் மார்க்ஸ் புரூதோனுடனும் பக்கூனினுடனும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார் (பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தைப் பற்றி சொல்லவே வேண்டாம்). கூட்டாட்சிக் கோட்பாடு அராஜகவாதத்தின் குட்டிமுதலாளித்துவக் கருத்துக்களிலிருந்து தர்க்க வழியில் இயல்பாய்ப் பெறப்படும் ஒன்று. மார்க்ஸ் மத்தியத்துவவாதி. மேலே தரப்பட்ட அவருடைய கருத்துரைகளில் மத்தியத்துவத்திலிருந்து எவ்விதத்திலும் அவர் விலகிச் சென்றுவிடவில்லை. அரசுபற்றிய அற்பத்தனமான ''மூடபக்தியில்'' மூழ்கிக் கிடப்போரே முதலாளித்துவ அரசுப் பொறியமைவை அழிப்பது மத்தியத்துவத்தை அழிப்பதாகுமென நினைத்துத் தவறிழைக்க முடியும்!

பாட்டாளி வர்க்கத்தினரும் ஏழை விவசாயிகளும் அரசு அதிகாரத்தைத் தாமே மேற்கொண்டு, முற்றிலும் சுதந்திரமாய்த் தம்மைக் கம்யூன்களில் ஒழுங்கமைத்துக் கொண்டு, மூலதனத்தை தாக்குவதிலும், முதலாளிகளின் எதிர்ப்பை அடக்குவதிலும், தனியார் உடைமைகளாயிருக்கும் ரயில் பாதைகளையும் ஆலைகளையும் நிலத்தையும் இன்ன பிறவற்றையும் தேசம் அனைத்தின், சமுதாயம் முழுமையின் உடைமைகளாய் மாற்றுவதிலும் எல்லாக் கம்யூன்களுடைய

செயலையும் ஒன்றுபடுத்திக் கொண்டால், அது மத்தியத்துவம் இல்லாமல் பிறகு என்ன? சிறிதும் முரணில்லாத ஜனநாயக மத்தியத்துவத்தோடு, பாட்டாளி வர்க்க மத்தியத்துவமும் இல்லாமல் பிறகு என்ன?

மனமுவந்த முறையிலான மத்தியத்துவம், கம்யூன்கள் தாமே மனமுவந்து ஒரு தேசமாய் ஒன்றிணைவது, முதலாளித்துவ ஆதிக்கத்தையும் முதலாளித்துவ அரசுப் பொறியமைவையும் அழித்திடுவதற்காகப் பாட்டாளி வர்க்கக் கம்யூன்கள் மனமுவந்து ஒன்ருய் ஒன்றிவிடுவது சாத்தியமே என்பதை பெர்ன்ஷ்டைன் நினைத்துக்கூட பார்க்க இயலாதவராய் இருக்கிருர். எல்லாக் குட்டிமுதலாளித்துவ அற்பவாதிகளையும் போல பெர்ன்ஷ்டைன் மத்தியத்துவத்தை முற்றிலும் மேலிருந்தே, முற்றிலும் அதிகாரிகளாலும் இராணுவக் கும்பலாலும் மட்டுமே பலவந்தமாய்த் திணிக்கப்பட்டு நிலைநிறுத்தப்படும் ஒன்ருகவே கற்பனை செய்துகொள்கிருர்.

மார்க்ஸ் தமது கருத்துக்கள் திரித்துப் புரட்டப்படுமென முன்னறிந்து வைத்திருந்தாற் போல, கம்யூனது தேசிய ஒற்றுமையை அழிக்க விரும்பிற்று, மத்திய அதிகாரத்தை ஒழிக்க விரும்பிற்று என்னும் குற்றச்சாட்டு மனமறிந்து வேண்டுமென்றே செய்யப்படும் ஏமாற்ருகுமெனத் தெளிவுபட வலியுறுத்திஞர். வேண்டுமென்றேதான் மார்க்ஸ் ''தேசிய ஒற்றுமை... ஒழுங்கமைக்கப்படும்'' என்று குறிப்பிட்டார். முதலாளித்துவ, இராணுவ, அதிகாரவர்க்க மத்தியத்துவத்தை எதிர்த்து உணர்வு பூர்வமான, ஜனநாயக வழிப்பட்ட, பாட்டாளி வர்க்க மத்தியத்துவத்தை வலியுறுத்தும் பொருட்டு இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆனுல் கேட்க விரும்பாதவர்களைப் போன்ற டமாரச் செவிடர்கள் வேறு யாருமில்லை. அரசு அதிகாரம் அழிக்கப்பட வேண்டும், புல்லுருவியாய் வளர்ந்து வேண்டாத தசைப் பிண்டமாய் இருப்பதை வெட்டியெறிய வேண்டும் என்பதுதான் தற்கால சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதிகள் கேட்க விரும்பாத உண்மையாகும்.

## 5. புல்லுருவி-அரசை ஒழித்தல்

இப்பொருள் குறித்து மார்க்ஸ் கூறியதை ஏற்கனவே மேற்கோளாய்க் கொடுத்திருக்கிறேம். இப்பொழுது கூடுதலாய் மேலும் சிலவற்றைத் தர வேண்டும்.

''...வரலாற்றின் புதிய படைப்புகள், அவை ஓரளவு உருவ ஒற்றுமை கொண்டிருக்கக் கூடிய சமுதாய வாழ்வின் பழைய, மரபற்று மறைந்துவிட்ட வடிவங்களின் நேர் பிரதிகளாகத் தவருய்க் கருதப் படுகின்றன. இது பொதுவாய்ப் புதிய படைப்புகளுக்கு ஏற்படும் கதியாகும்'' என்று அவர் எழுதினர். ''இவ்வாறு தான், நவீன அரசு அதிகாரத்தைத் தகர்த்திடும்(bricht—நொறுக்கும்) இந்தப் புதிய கம்யூனும் மத்திய காலக் கம்யூன்களுடைய மறுபிறவியாய்... சிறு அரசுகளுடைய கூட்டமைப்பாய் (மான்டிஸ்கியேவும் ஜிராண்டுவாதிகளும்[43] கற்பனை செய்தவற்றைப் போன்றதாய்)...அதீத மத்தியத்துவத்துக்கு எதிரான பழைய போராட்டத்தின் மிகைப்பட்ட வடிவமாய்... கருதப்பட்டிருக்கிறது.

''...புல்லுருவியாய் வளர்ந்த வேண்டாத தசைப் பிண்டமானது, சமுதாயச் செலவில் உண்டு கொழுத்து சமுதாயத்தின் தங்குதடையற்ற இயக்கத்தைத் தடுத்திடும் 'அரசானது' இதுகாறும் உறிஞ்சியிழுத்துக் கொண்ட சக்திகள் அனைத்தையும் கம்யூன் அரசியல் அமைப்பு சமுதாய உடலுக்கு மீட்டளித்திருக்கும். இந்த ஒரு செயலாலேயே பிரெஞ்சு நாட்டின் புத்தெழுச்சி துவக்கி வைக்கப்பட்டிருக்கும்...

''...கம்யூன் அரசியல் அமைப்பு கிராமப்புற உற்பத்தியாளர்களை அவர்களது மாவட்ட மைய நகர்களது சித்தாந்தத் தலைமையில் கொண்டு வந்திருக்கும்; அங்கே நகர உழைப்பாளிகளின் வடிவில் அவர்களது நலன்களின் இயற்கையான காப்பாளர்களைப் பெற்றுத் தந்திருக்கும். கம்யூன் இருப்பதானது இயல்பாகவே பிரதேச சுயாட்சி நிர்வாகத்தைக் குறிப்பதாகும். ஆனல்

> பிரதேச சுயாட்சி இனி அரசு அதிகாரத்தின் எதிர் எடையாய் இருக்காது, ஏனென்ருல் அரசு அதிகாரமே இப்பொழுது தேவையற்றதாகிவிடும்.''

''புல்லுருவியாய் வளர்ந்து வேண்டாத தசைப் பிண்டமாய்'' விளங்கும் ''அரசு அதிகாரத்தைத் தகர்த்திடல்'', அதை ''வெட்டியெறிதல்'', அதை ''நொறுக்குதல்''; ''அரசு அதிகாரம் இப்பொழுது தேவையற்றதாகிவிடுதல்''— இவையே கம்யூனுடைய அனுபவத்தை மதிப்பிடுகையிலும் பகுத்தாராய்கையிலும் அரசு குறித்து மார்க்ஸ் உபயோகிக்கும் தொடர்கள்.

இவை யாவும் அரை நூற்ருண்டுக்குச் சற்றுக் குறைவான காலத்துக்கு முன்பு எழுதப்பட்டவை. திரித்துப் புரட்டப் படாத மார்க்சியத்தைப் பெருந் திரளான மக்களுக்குத் தெரியப்படுத்த இன்று அகழ்வாய்வு நடத்திப் புதைபொருள் தேடுவது போலத் தேடிப்பிடித்தாக வேண்டியிருக்கிறது. தம் வாழ்நாளில் நடைபெற்ற கடைசி பெரும் புரட்சியைக் கண்ணுற்றதிலிருந்து மார்க்ஸ் வகுத்தளித்த முடிவுகள், அடுத்த பெரிய பாட்டாளி வர்க்கப் புரட்சிகளுக்குரிய காலம் பிறந்துவிட்ட ஒரு நேரத்தில் மறக்கப்பட்டுவிட்டன.

> ''...கம்யூனுக்கு முந்திய எல்லா அரசாங்க வடிவங்களும் சாராம்சத்தில் அடக்கி ஒடுக்கும் தன்மையனவாகவே இருந்திருக்கையில் கம்யூன் மட்டும் மிகுந்த நெகிழ்வுடைய அரசியல் வடிவமாய் இருந்ததென்பதைக் கம்யூனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பலவகை விளக்கங்களும், கம்யூனில் வெளிப்பட்ட பலவகை நலன்களும் காட்டுகின்றன. அதன் மெய்யான இரகசியம் இதில் தான் அடங்கியிருந்தது: சாராம்சத்தில் அது தொழிலாளி வர்க்க அரசாங்கமாகும், உற்பத்தியாளர் வர்க்கம் அபகரிப்பாளர் வர்க்கத்தை எதிர்த்து நடத்திய போராட்டத்தின் விளைவாகும், உழைப்பானது பொருளாதார விடுதலை பெறும் பொருட்டு இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட அரசியல் வடிவமாகும்...

''இந்தக் கடைசி நிபந்தனை இல்லையேல் கம்யூன் அரசியல் அமைப்பு சாத்தியமற்றதாகவும் பகற்கனவாகவுமே இருந்திருக்கும்...''

சமுதாயத்தை சோஷலிச முறையில் புனரமைப்பதற்குரிய அரசியல் வடிவங்களைக் ''கண்டுபிடிப்பதில்'' கற்பனுவாதிகள் முனைந்திருந்தனர். அரசியல் வடிவங்களைப் பற்றிய பிரச்சினையையே அராஜகவாதிகள் முற்றிலும் புறக்கணித்துவிட்டனர். தற்கால சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதிகள் நாடாளுமன்ற ஜனநாயக அரசுக்குரிய முதலாளித்துவ அரசியல் வடிவங்கள் இறுதி வரம்பென்றும் இவற்றுக்கு அப்பால் அடியெடுத்து வைக்கக் கூடாதென்றும் கருதிவிட்டனர். இந்த ''முன்மாதிரியின்'' முன் மண்டியிட்டு வணங்கி மண்டையை உடைத்துக் கொண்டனர். இந்த வடிவங்களைத் தகர்த்திட வேண்டுமென்ற முயற்சி எதனையும் அராஜகவாதமெனக் கூறிக் கண்டித்தனர்.

அரசு மறைந்தே தீருமென்றும், அதன் மறைவுக்கான இடைக்கால வடிவம் (அரசுக்கும் அரசு இல்லாததற்கும் இடைப்பட்ட காலத்துக்குரிய வடிவம்) ''ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கமாகவே'' இருக்குமென்றும் சோஷலிசம், அரசியல் போராட்டம் இவற்றின் வரலாறு முழுவதிலுமிருந்து மார்க்ஸ் முடிவுக்கு வந்தார். ஆனல் இந்த வருங்காலத்திற்குரிய அரசியல் வடிவங்களை மார்க்ஸ் கண்டுபிடிக்க முற்படவில்லை. பிரெஞ்சு வரலாற்றை உற்று நோக்கி, அதனைப் பகுத்தாய்ந்து, 1851ஆம் ஆண்டிலிருந்து பெறப்படும் முடிவினை, அதாவது முதலாளித்துவ அரசுப் பொறியமைவு அழிக்கப்படுவதை நோக்கி விவகாரங்கள் முற்றிச் சென்றன என்னும் முடிவினை எடுத்துரைப்பதோடு நின்றுவிட்டார்.

பிறகு பாட்டாளி வர்க்கத்தின் வெகுஜனப் புரட்சி இயக்கம் வெடித்ததும் மார்க்ஸ், இவ்வியக்கம் தோல்வியுற்றதென்றாலும், குறுகிய காலத்துக்கே நடந்ததென்றாலும், தெளிவாகவே பலவீனம் கொண்டிருந்ததென்றாலும், இது கண்டுபிடித்த வடிவங்களை ஆராய முற்பட்டார்.

உழைப்பானது பொருளாதார விடுதலை பெறும் பொருட்டு பாட்டாளி வர்க்கப் புரட்சியால் ''இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்ட'' வடிவம்தான் கம்யூன்.

முதலாளித்துவ அரசுப் பொறியமைவை நொறுக்கு வதற்குப் பாட்டாளி வர்க்கப் புரட்சியால் மேற்கொள்ளப் பட்ட முதல் முயற்சியே கம்யூன். நொறுக்கப்படும் அரசுப் பொறியமைவிற்குப் பதிலாய் அமையக் கூடியதாகவும் அமைந்தாக வேண்டியதாகவும் ''இறுதியாகக் கண்டுபிடிக் கப்பட்ட'' அரசியல் வடிவம் இதுவே.

1905ஆம் ஆண்டு, 1917ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சிகள் கம்யூனின் பணியை வேறுவித சூழ்நிலைகளிலும் வேறுவித நிலைமைகளிலும் தொடர்ந்து நடத்திச் சென்றதையும், மார்க்சின் உன்னத வரலாற்று வழிப் பகுத்தாய்வை மெய்ப் பித்து உறுதி செய்ததையும் பிற்பாடு நாம் காண்போம்.

அத்தியாயம் 4

## தொடர்ச்சி. கூடுதலாய் எங்கெல்ஸ் அளித்த விளக்கங்கள்

கம்யூனுடைய அனுபவத்தின் முக்கியத்துவம் பற்றிய அடிப்படை கருத்துக்களை மார்க்ஸ் எடுத்துரைத்தார். எங்கெல்ஸ் இதே பொருளுக்கு மீண்டும் மீண்டும் திரும்பி மார்க்சின் பகுத்தாய்வையும் முடிவுகளையும் விளக்கிக் கூறி ஞர். சில சந்தர்ப்பங்களில் இப்பிரச்சினையின் பிற கூறுகளை எங்கெல்ஸ் அத்தனை வலிமையோடு தெக்கத் தெளிவாய் விளக்குவதால், அவருடைய விளக்கங்களைத் தனியே விவரிப்பது அவசியமாகும்.

### 1. ''குடியிருப்புப் பிரச்சினை''

குடியிருப்புப் பிரச்சினை பற்றிய தமது நூலிலேயே (1872)[44] எங்கெல்ஸ் கம்யூனுடைய அனுபவத்தைக் கணக் கில் எடுத்து, அரசு சம்பந்தமாய்ப் புரட்சிக்குள்ள பணிகளைப்

பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். இந்தப் பிரத்தியேக விவகாரம் பற்றிய பரிசீலனை தெளிவாய்ப் புலப்படுத்துபவை, கருத்தூன்றிக் கவனிக்கத் தக்கவை: ஒருபுறம், பாட்டாளி வர்க்க அரசுக்கும் தற்போதுள்ள அரசுக்கும் இருக்கும் ஒற்றுமைக் கூறுகளையும்—இரு சந்தர்ப்பங்களிலும் அரசெனச் சொல்வது சரியே என்பதை உறுதிப்படுத்தும் ஒற்றுமைக் கூறுகளையும்,—மறுபுறம், இவை இரண்டுக்குமுள்ள வேற்றுமைக் கூறுகளையும், அதாவது அரசு அழிந்தொழிவதற்குரிய இடைக்கால நிலையையும், இந்தப் பரிசீலனை தெளிவாய்ப் புலப்படுத்துகிறது.

> ''அப்படியானால், குடியிருப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எப்படி? இன்றைய சமுதாயத்தில் இது ஏனைய எந்தச் சமூகப் பிரச்சினையையும் போலவேதான் தீர்க்கப்படுகிறது: தேவையையும் அளிப்பையும் பொருளாதார வழியில் படிப்படியாய்ச் சமன் செய்வதன் மூலம் தீர்க்கப்படுகிறது. பிரச்சினையை மீண்டும் மீண்டும் அப்படியே தோற்றுவிக்கும் ஒரு தீர்வே இது. ஆகவே இது தீர்வாகவே அமைவதில்லை. சமுதாயப் புரட்சி ஒன்று இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணும் என்பது குறிப்பிட்ட அந்தந்தச் சந்தர்ப்பத்திலும் நிலவும் சூழ்நிலையைச் சார்ந்ததென்பதோடு, மேலும் பன்மடங்கு ஆழமான பிரச்சினைகளுடன் இணைக்கப்பட்டதாகவும் இருக்கும். இவற்றில் மிகவும் அடிப்படையானவற்றுள் ஒன்று, நகருக்கும் கிராமத்துக்குமுள்ள முரண் நிலை ஒழிக்கப்படுதல். வருங்கால சமுதாய ஒழுங்கமைப்புக்கான கற்பனாவாதத் திட்டங்களைச் சிருஷ்டிப்பது எமது பணியல்ல. ஆதலால் இந்தப் பிரச்சினையை இங்கு பரிசீலிப்பது வீண் வேலையே ஆகும். ஆயினும் ஒன்று மட்டும் உறுதியாய்ச் சொல்லலாம்: பெரிய நகரங்களில் ஏற்கனவே போதிய அளவு வீடுகள் இருக்கின்றன, நல்லறிவுக்கு உகந்த நேரிய வழியில் இவை பயன்படுத்தப்படும் பட்சத்தில் மெய்யான 'குடியிருப்புப் பற்றுக்குறை' அனைத்தையும் உடனடியாகவே நிவர்த்திச்

செய்துவிடலாம். ஆனால் தற்போதுள்ள உடைமையாளர்களிடமிருந்து வீடுகளைப் பறிமுதல் செய்து வீடில்லாத தொழிலாளர்களையும் மற்றும் இடமின்றி அளவு மீறிய நெரிசலில் அவதியுறும் தொழிலாளர்களையும் இவ்வீடுகளில் குடிபுகச் செய்தாலன்றி இது சாத்தியமல்ல. பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரம் வென்றதும், பொது நலத்தை முன்னிட்டு இத்தகைய நடவடிக்கையை எடுத்து நிறைவேற்றுதல், தற்போதுள்ள அரசு வேறு துறைகளில் செய்யும் பறிமுதல்களையும் குடியிருப்பிடங்களை வசப்படுத்திக் கொள்ளுதலையும் போல எளிதில் நடைபெறும் காரியமே'' *(1887ஆம் ஆண்டு ஜெர்மன் பதிப்பு, பக்கம் 22).*

*அரசு அதிகாரத்தின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் இங்கு பரிசீலிக்கப்படவில்லை, அதன் செயற்பாட்டின் உள்ளடக்கம் மட்டுமே பரிசீலிக்கப்படுகிறது. பறிமுதல்களும் குடியிருப்பிடங்களை வசப்படுத்திக் கொள்ளுதலும் தற்போதுள்ள அரசினாலுங்கூட ஆணையிட்டு நிறைவேற்றப்படுகின்றன. வடிவத்தைப் பொறுத்தவரை, பாட்டாளி வர்க்க அரசுங்கூட ''ஆணையிட்டுக்'' குடியிருப்பிடங்களை வசப்படுத்திக் கொள்ளும், வீடுகளைப் பறிமுதல் செய்யும். ஆனால் பழைய நிர்வாக இயந்திரம், முதலாளித்துவ வர்க்கத்தாருடன் இணைந்த அதிகார வர்க்கமானது பாட்டாளி வர்க்க அரசின் ஆணைகளை நிறைவேற்றச் சிறிதும் ஏற்றதாய் இராதென்பது தெளிவு.*

''...உழைப்பாளி மக்கள் உழைப்புக் கருவிகள் யாவற்றையும், தொழில் துறை அனைத்தையுமே 'நடைமுறையில் கைப்பற்றுவது, புரூதோனிய 'மீட்புக்கு' நேர்முரணாகும் என்பதைக் குறிப்பிட வேண்டும். பின்னதில் தனிப்பட்ட உழைப்பாளி வீட்டின், விவசாயப் பண்ணையின், உழைப்புக் கருவிகளின் உடைமையாளனாகிறான்; ஆனால் முன்னதில் 'உழைப்பாளி மக்கள்' வீடுகளின், ஆலைகளின், உழைப்புக் கருவிகளின் கூட்டு உடைமையாளர்களாய் இருக்கிறார்கள். இடைக்காலத்திலேனும் தனி நபர்களோ, கூட்டுகளோ இந்த வீடுகள்,

ஆலைகள், மற்றும் பலவற்றின் பெறுமானத்துக்கு ஈடு அளிக்காமலே இவற்றை உபயோகிக்க அனுமதிப்பார்களென நினைக்க முடியாது. இதே போல, நிலத்தில் சொத்துரிமையின் ஒழிப்பு நில வாடகையின் ஒழிப்பைக் குறிக்காது; இந்த நில வாடகை, திருத்தப்பெற்ற வடிவிலேதான் என்றாலும், சமுதாயத்துக்கு மாற்றப்படுவதையே குறிக்கும். ஆகவே உழைப்புக் கருவிகள் யாவற்றையும் நடைமுறையில் உழைப்பாளி மக்கள் கைப்பற்றிக் கொண்டு விடுவதானது வாடகை உறவுகள் நீடிக்க வழியில்லாதபடிச் செய்துவிடாது'' (பக்கம் 68).

இந்த வாசகத்தில் குறிப்பிடப்படும் பிரச்சினை குறித்து, அதாவது அரசு உலர்ந்து உதிருவதன் பொருளாதார அடித்தளம் குறித்து, அடுத்த அத்தியாயத்தில் பரிசீலிப்போம். பாட்டாளி வர்க்க அரசு கட்டணமின்றியே வீடுகளை உபயோகித்துக் கொள்ள அனுமதிக்குமென ''நினைக்க முடியாது'', ''இடைக்காலத்திலேனும்'' அப்படி அனுமதிக்குமென நினைக்க முடியாது என்று எங்கெல்ஸ் மிகுந்த எச்சரிக்கையுடன் கூறுகிறார். மக்கள் அனைவரின் சொத்தான வீடுகளைத் தனிப்பட்ட குடும்பங்களுக்கு வாடகைக்கு விடுவதெனில் வாடகை வசூலிப்பு, ஓரளவு கண்காணிப்பு, குடியிருப்பிடங்கள் ஒதுக்குவதில் சில நியதிகளை அனுசரித்தல் ஆகியவை அவசியமாகி விடுகின்றன. இவற்றுக்கெல்லாம் ஒரு வகை அரசு வேண்டியிருக்கும். ஆனால் தனிச்சலுகை பெற்றுள்ள அதிகாரவர்க்க இயந்திரமும் தனிவகை இராணுவ ஏற்பாடும் இருக்க வேண்டிய தேவையில்லை. வாடகை இல்லாமலே இலவசமாய்க் குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது சாத்தியமாகி விடும் நிலைக்கு மாறிச் செல்வது அரசு அறவே ''உலர்ந்து உதிருவதைப்'' பொறுத்ததாகும்.

கம்யூனுக்குப் பிற்பாடும் அதன் அனுபவத்தினது செல்வாக்கின் கீழும் பிளான்கிஸ்டுகள்[45] மார்க்சியத்தின் அடிப்படை நிலையை ஏற்றுக் கொண்டது குறித்துப் பேசுகையில், போகிற போக்கில் எங்கெல்ஸ் இந்த நிலையைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறுகிறார்:

"...வர்க்கங்களையும் அவற்றுடன்கூட அரசையும் ஒழித்திடுவதற்காகப் பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் செயலும் அதன் சர்வாதிகாரமும் அவசியமாயிருக்கும்..." (பக்கம் 55).

"அரசின் ஒழிப்புக்கு" அளிக்கப்படும் இந்த அங்கீகாரத்துக்கும், **டூரிங்குக்கு மறுப்பு** என்னும் நூலிலிருந்து மேலே தரப்பட்ட வாசகத்தில் இந்தச் சூத்திரம் அராஜகவாத நிர்ணயிப்பு என்பதாய் நிராகரிக்கப்படுவதற்கும் முரண்பாடு இருப்பதாய் விதண்டாவாதப் பிரியர்களும் "மார்க்சியத்தை ஒழித்துக் கட்டுவதில்" முனைந்துள்ள முதலாளித்துவப் பிண்டங்களும் கருதினாலும் கருதலாம். எங்கெல்சையேகூட சந்தர்ப்பவாதிகள் "அராஜகவாதியாகக்" கொள்வார்களாயினும் வியப்புறுவதற்கில்லை. ஏனெனில் அராஜகவாதக் குற்றமிழைப்பதாய்ச் சர்வதேசவாதிகள்மீது குற்றம் சாட்டுவது சமூக-தேசியவெறியர்களிடையே மேலும் மேலும் சகஜமாகி வருகிறது.

வர்க்கங்கள் ஒழியும்போது அரசும் ஒழிந்துவிடுமென்று தான் மார்க்சியம் எப்பொழுதுமே போதித்து வந்திருக்கிறது. **டூரிங்குக்கு மறுப்பு** என்னும் நூலில் "அரசு உலர்ந்து உதிர்வது" பற்றிக் கூறும் புகழ்பெற்ற வாசகம் அராஜகவாதிகளைச் சாடுவது அவர்கள் திடுதிப்பென "ஒரே நாளில்" அரசை ஒழித்துவிடலாமென உபதேசிக்கிறார்கள் என்பதற்காகவே அன்றி, அரசு ஒழிவதை ஆதரிக்கிறார்கள் என்பதற்காக அல்ல.

தற்போது நிலவி வரும் "சமூக-ஜனநாயகக்" கோட்பாடானது அரசை அழிப்பது பற்றிய பிரச்சினையில் அராஜகவாதத்தின்பால் மார்க்சியத்திற்குள்ள போக்கினை அறவே திரித்துப் புரட்டுவதால், மார்க்சும் எங்கெல்சும் அராஜகவாதிகளை எதிர்த்து நடத்திய ஒரு வாக்குவாதத்தை நினைவு கூர்தல் பெரிதும் பயனுடையதாய் இருக்கும்.

## 2. அராஜகவாதிகளுடன் வாக்குவாதம்

இந்த வாக்குவாதம் 1873ல் நடைபெற்றது. புரூதோனியர்களை, "சுயாட்சியாளர்களை" அல்லது "அதிகார-எதிர்ப்பாளர்களை" எதிர்த்து மார்க்சும் எங்கெல்சும் இத்தாலிய

சோஷலிஸ்டு ஆண்டு வெளியீடு ஒன்றுக்குக் கட்டுரைகள் வழங்கினர். 1913ஆம் ஆண்டில்தான் இந்தக் கட்டுரைகள் ஜெர்மன் மொழியில் *Neue Zeit*இல் வெளிவந்தன.[46]

> அரசியலை நிராகரிப்பதற்காக அராஜகவாதிகளைக் கிண்டல் செய்து மார்க்ஸ் எழுதினர்: ''தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் போராட்டம் புரட்சிகர வடிவங்களை ஏற்குமாயின், முதலாளித்துவ வர்க்கத்தாரின் சர்வாதிகாரத்துக்குப் பதிலாய்த் தொழிலாளர்கள் தமது புரட்சிகர சர்வாதிகாரத்தை நிறுவிக்கொண்டார்களாயின் அவர்கள் கோட்பாடுகளை இழிவுபடுத்திப் பயங்கரக் குற்றமிழைப்பவர்கள் ஆகிவிடுகிருர்கள். எப்படியென்ருல் தமது ஆயுதங்களைத் துறந்து அரசை ஒழித்திடுவதற்குப் பதிலாய், அவர்கள் கேவலம் தமது அன்ருட அற்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவும் முதலாளித்துவ வர்க்கத்தாரது எதிர்ப்பை நசுக்குவதற்காகவும் அரசுக்குப் புரட்சி கரமான இடைக்கால வடிவம் ஒன்றை அளிக்கிருர்கள்...'' (*Neue Zeit*, மலர் 32, இதழ் 1, 1913-14, பக்கம் 40).[47]

அராஜகவாதிகளுக்கு மறுப்பு கூறுகையில், இவ்வகையான அரசு ''ஒழிப்பை'' மட்டுமே மார்க்ஸ் எதிர்த்துப் போராடினர்! வர்க்கங்கள் மறையும்போது அரசும் மறையும் அல்லது வர்க்கங்கள் ஒழிக்கப்படும்போது அரசும் ஒழிக்கப் படும் என்னும் கருத்தை அவர் எதிர்க்கவே இல்லை. அவர் எதிர்த்தது எல்லாம், தொழிலாளர்கள் ஆயுதப் பிரயோகத்தை, ஒழுங்கமைந்த பலாத்காரத்தை, அதாவது அரசை, ''முதலாளித்துவ வர்க்கத்தாரது எதிர்ப்பை நசுக்குவதற்காகப்'' பயன்படுத்திக் கொள்வதற்குரிய அரசைக் கைவிட்டுவிட வேண்டுமென்ற கூற்றைத்தான்.

அராஜகவாதத்துக்கு எதிரான தமது போராட்டத்தின் மெய்ப்பொருள் திரித்துப் புரட்டப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவைப்படும் அரசு ''புரட்சிகரமான இடைக்கால வடிவம்'' கொண்டதென்பதை மார்க்ஸ் தெளிவாய் வலியுறுத்திக் கூறினர். பாட்டாளி

வர்க்கத்துக்குத் தற்காலிகமாகவே அரசு தேவைப்படுகிறது. அரசு ஒழிக்கப்படுவதென்ற குறிக்கோளைப் பொறுத்த மட்டில் நாம் அராஜகவாதிகளுடன் சிறிதும் கருத்து வேற்றுமை கொண்டதில்லை. இந்தக் குறிக்கோளை அடைவதில் சித்தி பெறுவதற்காக, சுரண்டலாளர்களுக்கு விரோதமாய் அரசு அதிகாரத்தின் கருவிகளையும் சாதனங்களையும் முறைகளையும் தற்காலிகமாய் நாம் உபயோகித்துக் கொண்டாக வேண்டுமென, வர்க்கங்களை அழிக்க ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் தற்காலிகச் சர்வாதிகாரம் எப்படி அவசியமோ அதே போல இதுவும் அவசியமென நாம் வற்புறுத்துகிறோம். அராஜகவாதிகளை எதிர்த்துத் தமது நிலையை எடுத்துரைக்க மார்க்ஸ் மிகக் கூர்மையான, மிகத் தெளிவான வழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்: முதலாளிகளுடைய ஆதிக்கத்தைக் கவிழ்த்ததும் தொழிலாளர்கள் ''தமது ஆயுதங்களைத் துறந்துவிட'' வேண்டுமா? அல்லது முதலாளிகளுடைய எதிர்ப்பை நசுக்குவதற்காகத் தமது ஆயுதங்களை அவர்களுக்கு எதிராக உபயோகிக்க வேண்டுமா? என்று கேட்கிறார். ஒரு வர்க்கம் பிறிதொன்றை எதிர்த்து முறையாய் ஆயுதங்கள் உபயோகிப்பதென்பது அரசின் ''இடைக்கால வடிவம்'' அல்லாது வேறு என்ன?

சமூக-ஜனநாயகவாதியான ஒவ்வொருவரும் தன்னைத் தானே கேட்டுப் பார்க்கட்டும்: அராஜகவாதிகளுக்கு எதிரான வாக்குவாதத்தில் அரசு பற்றிய பிரச்சினையை அவர் இப்படியா எடுத்துரைத்து வந்துள்ளார்? இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த அதிகாரபூர்வமான மிகப் பெரும்பாலான சோஷலிஸ்டுக் கட்சிகள் இப்படியா எடுத்துரைத்து வந்துள்ளன?

எங்கெல்ஸ் இன்னும்கூட விவரமாகவும் ரஞ்சகமாகவும் இதே கருத்துக்களை விளக்குகிறார். முதலில் அவர் புரூதோனியவாதிகளுடைய குழப்படிக் கருத்துக்களை நையாண்டி செய்கிறார். புரூதோனியவாதிகள் தம்மை''அதிகார-எதிர்ப்பாளர்களாய்'' அழைத்துக் கொண்டவர்கள், அதாவது அவர்கள் எல்லா வகையான அதிகாரத்தையும், கீழ்ப்படிதலையும், ஆட்சியையும் நிராகரித்தவர்கள். ஓர் ஆலை அல்லது ரயில் அல்லது விரிகடலில் செல்லும் கப்பலை எடுத்துக் கொள்

வோம் என்கிறார் எங்கெல்ஸ். இயந்திர சாதனங்களை உபயோகித்துக் கொள்வதையும் மிகப் பலரது முறையான ஒத்துழைப்பையும் அடிப்படையாய்க் கொண்ட சிக்கலான இந்தத் தொழில்நுட்ப நிலையங்கள் ஓரளவு கீழ்ப்படிதலும், ஆகவே ஓரளவு அதிகாரமும் அல்லது ஆட்சியும் இன்றி, இயங்க முடியாதென்பது தெளிவாய் விளங்கவில்லையா?

''...மிகவும் ஆவேசமான அதிகார-எதிர்ப்பாளர்களுக்கு எதிராய் நான் இந்த வாதங்களை எழுப்புகையில் எனக்கு அவர்கள் தரவல்ல ஒரேயொரு பதில் இது தான்: 'ஓ, அது சரிதான், ஆனால் இங்கு நாங்கள் எங்கள் பிரதிநிதிகளுக்கு வழங்குவது அதிகாரம் அல்ல, பொறுப்புரிமையைத்தான் அளிக்கிறோம்!' இந்த ஆட்கள் ஒரு பொருளின் பெயரை மாற்றுவதன் மூலம் அப்பொருளையே மாற்றி விடுவதாய் நினைத்துக் கொள்கிறார்கள்....''48

இவ்விதம் அதிகாரம், சுயாட்சி ஆகியவை சார்புநிலைத் தொடர்களே என்பதையும், அவற்றின் பிரயோக அரங்கு சமுதாய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும் மாறுபடுகிறது என்பதையும், அவற்றைச் சார்பிலா முழுமுதலானவையாய்க் கொள்வது அறிவுடைமையாகாது என்பதையும் விளக்கிவிட்டு, எங்கெல்ஸ் இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்படும் அரங்கும் பெருவீதப் பொருளுற்பத்தியும் இடையறாது விரைவடைவதையும் குறிப்பிடுகிறார். பிறகு அதிகாரத்தைப் பற்றிய பொது விவாதத்திலிருந்து அரசெனும் பிரச்சினைக்குச் செல்கிறார்.

''...சுயாட்சிக் கோட்பாட்டாளர்கள் வருங்கால சமுதாய அமைப்பானது பொருளுற்பத்தி நிலைமைகள் தவிர்க்க முடியாததாக்கும் வரம்புகளுக்குள் மட்டுமே அதிகாரம் இயங்க அனுமதிக்குமென்று சொல்வதோடு நின்றிருந்தார்களானால், அவர்களுடன் உடன்பாட்டுக்கு வர முடிந்திருக்கும். ஆனால் அதிகாரத்தை அவசியமாக்கும் உண்மைகளை எல்லாம் பார்க்காமலே கண்களைக்

கெட்டியாய் மூடிக் கொண்டு ஆவேசமாய் இச்சொல்லை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

''அதிகார-எதிர்ப்பாளர்கள் அரசியல் அதிகாரத்தை எதிர்த்து, அரசை எதிர்த்து, கூச்சலிடுவதோடு நிறுத்திக் கொண்டால் என்ன? வருகிற சமுதாயப் புரட்சியின் விளைவாய் அரசும் அதனுடன் அரசியல் அதிகாரமும் மறைந்துவிடுமென்று, அதாவது பொதுப் பணிகள் அவற்றின் அரசியல் குணத்தை இழந்து சமுதாய நலன்களைக் கண்காணித்துக் கொள்ளும் வெறும் நிர்வாகப் பணிகளாகிவிடுமென்று எல்லா சோஷலிஸ்டுகளும் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் அதிகார-எதிர்ப்பாளர்கள் அரசியல் வழியிலான அரசினை, அதைப் பெற்றெடுத்த சமூக உறவுகள் அழிக்கப்படுவதற்கு முன்பே, ஒரே மூச்சில் உடனடியாக அழித்துவிட வேண்டுமெனக் கோருகிறார்கள். அதிகாரத்தை ஒழித்திடுவதே சமுதாயப் புரட்சியின் முதற் செயலாயிருக்க வேண்டுமெனக் கோருகிறார்கள்.

''இந்தக் கனவான்கள் எப்பொழுதாவது ஒரு புரட்சியைப் பார்த்திருக்கிறார்களா? புரட்சியைப் போல அதிகார ஆதிக்கம் செலுத்தும் எதுவுமே இருக்க முடியாது. துப்பாக்கிகளும் துப்பாக்கிக் குத்தீட்டிகளும் பீரங்கிகளும் கொண்டு—இவை யாவுமே மிகக் கடுமையான அதிகார ஆதிக்கச் சாதனங்கள் — ஒரு பகுதி மக்கள் எஞ்சிய பகுதியின்மீது தமது சித்தத்தைத் திணிக்கும் செயலே புரட்சி. வெற்றி பெறும் தரப்பு தனது படைபலம் பிற்போக்குவாதிகளிடத்தே உண்டாக்கும் குலைநடுக்க பயங்கரத்தின் மூலமாய்த் தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டாக வேண்டும். பாரிஸ் கம்யூன் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு எதிராய் ஆயுதமேந்திய மக்களுடைய அதிகாரத்தைப் பிரயோகிக்காதிருந்தால் அதனால் ஒரு நாளுக்கு மேல் நீடித்திருக்க முடியுமா? அதிகாரத்தைப் பிரயோகித்ததென்று கண்டிப்பதற்குப் பதில் இந்த அதிகாரத்தை மிகச் சொற்பமாகவே உபயோகித்தது என்றல்லவா

அதன்மீது குற்றம் சாட்ட வேண்டும்? ஆகவே இரண்டில் ஒன்றுதான் உண்மை: ஒன்று அதிகார-எதிர்ப்பாளர்கள் என்ன பேசுகிறேம் என்பது தெரியாமலே பேசிக் கொண்டிருக்கிறுர்கள்—அப்படியாஞல் அவர்கள் குழப்பம் உண்டாக்குவதைத் தவிர வேறு எதுவும் செய்ய வில்லே; அல்லது அவர்கள் தெரிந்தே பேசுகிறுர்கள் என்றுல், பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியத்துக்குத் துரோகம் புரிகின்றனர். இரண்டில் எதுவாயினும், அவர்கள் பிற்போக்குக்குப் பணியாற்றுவோரே ஆவர்'' *(பக்கம் 39).*[49]

இந்தக் கருத்துரை குறிப்பிடும் பிரச்சினேகள் அரசு உலர்ந்து உதிருகையில் அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் இருக்கும் உறவுநிலே சம்பந்தமாய்ப் பரிசீலிக்கப்பட வேண்டியவை (அடுத்த அத்தியாயம் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது). சமுதாயப் பணிகள் அரசியல் பணிகளிலிருந்து வெறும் நிர்வாகப் பணிகளாய் மாற்றப்படுதலும், ''அரசியல் வழியிலான அரசுமே'' இப்பிரச்சினேகள். கடைசியில் குறிக்கப்பட்ட ''அரசியல் வழியிலான அரசு'' என்னும் தொடர் குறிப்பாய்த் தவருன வழியில் அர்த்தப்படுத்தப் படக் கூடியது. இத்தொடர் அரசு உலர்ந்து உதிரும் நிகழ்ச்சிப் போக்கைச் சுட்டிக்காட்டுகிறது: இந்த நிகழ்ச்சிப்போக்கின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கும் அரசு அரசியல் தன்மையதல்லாத அரசாய் அழைக்கப்படக் கூடியதாகிவிடுகிறது.

திரும்பவும் எங்கெல்சின் இந்த கருத்துரையில் சிறப்பு முக்கியத்துவமுடையதாய் விளங்குவது, அராஜகவாதிகளே எதிர்த்து அவர் பிரச்சினேயை எடுத்துரைக்கும் முறையே ஆகும். எங்கெல்சின் சீடர்களெனக் கூறிக் கொள்ளும் சமூக-ஜனநாயகவாதிகள் அராஜகவாதிகளே எதிர்த்து இப்பொருள் குறித்து 1873 முதலாய் லட்சக் கணக்கான முறை வாதாடியிருக்கிறுர்கள், ஆஞல் மார்க்சியவாதிகள் வாதாடத்தக்க, வாதாட வேண்டிய முறையில் அவர்கள் வாதாடியதே இல்லே. அரசு ஒழிக்கப்பட வேண்டியது பற்றிய அராஜகவாதக் கருத்து

குழப்படியானது, புரட்சிகரமல்லாதது — இதுவே எங்கெல்சின் வாதம். புரட்சியை அதன் எழுச்சியிலும் வளர்ச்சியிலும், பலாத்காரம், அதிகாரம், ஆட்சி, அரசு ஆகியவை குறித்து அதற்குரிய பிரத்தியேகப் பணிகளுடன் பார்க்க அராஜக வாதிகள் தவறிவிடுகிறார்கள்.

தற்கால சமூக-ஜனநாயகவாதிகள் அராஜகவாதத்தைப் பற்றி வழக்கமாய்க் கூறும் விமர்சனம் முற்றிலும் அவலமான குட்டிமுதலாளித்துவ அற்பத்தனமாய்ச் சிறுமையுற்றுவிட்டது: ''அரசை நாங்கள் அங்கீகரிக்கிறோம், ஆனால் அராஜக வாதிகள் அங்கீகரிப்பதில்லை!'' என்பதாகிவிட்டது. இத்தகைய அவலம், சிறிதளவேனும் சிந்தனை ஆற்றலும் புரட்சி மனோ பாவமும் கொண்ட தொழிலாளர்களை அருவருப்புக் கொண்டு விலகிவிடச் செய்வது இயற்கையே. எங்கெல்ஸ் கூறுவது முற்றிலும் வேறு. சோஷலிசப் புரட்சியின் விளைவாய் அரசு மறைந்துவிடும், எல்லா சோஷலிஸ்டுகளும் இதை ஒத்துக் கொள்கிறார்கள் என்று அவர் வலியுறுத்துகிறார். பிறகு புரட்சி யெனும் பிரச்சினையைப் பிரத்தியேகமான பிரச்சினையாய்க் கொண்டு பரிசீலிக்கிறார். இந்தப் பிரச்சினையைத்தான் சந்தர்ப்பவாதம் காரணமாய் சமூக-ஜனநாயகவாதிகள் வழக்கமாய்த் தட்டிக்கழித்து, இதனை அராஜகவாதிகளே ''வகுத்துரைக்கும்'' வண்ணம் முற்றிலும் அவர்கள் கைக்கு விட்டுவிடுகிறார்கள். எங்கெல்ஸ் அரசெனும் பிரச்சினையைப் பரிசீலிக்கையில், நேரே அதன் மைய விவகாரத்தைக் குறிவைத்துத் தாக்குகிறார்: கம்யூனது அரசினுடைய—அதாவது ஆயுதம் தாங்கி ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கத்தினுடைய—புரட்சிகர ஆட்சியதிகாரத்தை இன்னும் அதிகமாய்ப் பிரயோகித்திருக்க வேண்டாமா என்று கேட்கிறார்.

புரட்சியின்போது பாட்டாளி வர்க்கத்துக்குள்ள ஸ்தூலமான பணிகள் குறித்த பிரச்சினையைத் தற்போது ஆதிக்கத்திலுள்ள அதிகாரபூர்வமான சமூக-ஜனநாயகமானது அற்பவாத முறையில் ஏளனம் செய்து, அல்லது அதிகம் போனால் ''வருங்காலம் இதைத் தெரியப்படுத்தும்'' என்று குதர்க்கவாதம் பேசித் தட்டிக்கழித்து, வழக்கமாய்ப் புறக்கணித்துள்ளது. தொழிலாளர்களுக்குப் புரட்சிகரப் போதனை

யளிக்கும் பணியினை விட்டொழிக்கிறார்களென அராஜகவாதிகள் இத்தகைய சமூக-ஜனநாயகவாதிகள் குறித்துக் கூறியது முற்றிலும் நியாயமே. வங்கிகள், அரசு இவை இரண்டும் குறித்துப் பாட்டாளி வர்க்கம் என்ன செய்ய வேண்டும், இதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை மிகவும் ஸ்தூலமான முறையில் ஆய்ந்தறிவதற்காக, கடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனுபவத்தை எங்கெல்ஸ் பயன்படுத்திக் கொள்கிறார்.

### 3. பெபெலுக்கு எழுதிய கடிதம்

அரசு பற்றி மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களிலே மிகச் சிறப்பானதென இல்லையேல், மிகச் சிறப்பானவற்றுள் ஒன்றெனக் கொள்ளத்தக்கக் கருத்துரை *1875* மார்ச் *18-28* தேதியிட்டு பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதத்தின் பின்வரும் வாசகத்தில் காணப்படுகிறது. நமக்குத் தெரிந்த வரை இந்தக் கடிதம் பெபெலால் *1911*ல் வெளிவந்த தமது நினைவுக் குறிப்புகளின் (*Aus meinem Leben*) இரண்டாம் தொகுதியில்தான் வெளியிடப்பட்டது, அதாவது இக்கடிதம் எழுதியனுப்பப்பட்டதற்கு முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பிற்பாடுதான் வெளியிடப்பட்டது என்பதை இங்கு நாம் இடைக்குறிப்பாய்ச் சொல்ல வேண்டும்.

மார்க்ஸ் முன்பு பிராக்கேயிற்கு[50] எழுதிய புகழ் பெற்ற கடிதத்தில் விமர்சனம் செய்யும் அதே கோத்தா வேலைத் திட்ட நகலை விமர்சித்து எங்கெல்ஸ் பெபெலுக்கு எழுதினார். குறிப்பாய் அரசு பற்றிய பிரச்சினை குறித்து எங்கெல்ஸ் எழுதினார்:

> ''...சுதந்திர மக்கள் அரசு என்பது சுதந்திர அரசாய் மாற்றப்பட்டிருக்கிறது. அதன் இலக்கண வழிப் பொருளில், சுதந்திர அரசு என்பது தனது குடிமக்கள் சம்பந்தமாய் சுதந்திரமாயுள்ள அரசாகும், ஆகவே எதேச்சாதிகார அரசாங்கத்தைக் கொண்ட அரசாகும். அரசு பற்றிய வெறும் பேச்சையே—குறிப்பாய், அரசெனும்

சொல்லின் சரியான பொருளில் அரசாய் இருக்காத கம்யூனுக்குப் பிற்பாடு—விட்டுவிட வேண்டும். சோஷலிச சமுதாய அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட பிறகு அரசு தானுகவே தேய்ந்து (sich auflöst) மறைந்து விடுமென்று புரூதோனுக்கு எதிரான புத்தகமும்[51] பிற்பாடு கம்யூனிஸ்டு அறிக்கையும் தெட்டத் தெளிவாய்க் கூறிய போதிலும் அராஜகவாதிகள் 'மக்கள் அரசு' என்பதனைக் குறிப்பிட்டு சலிப்பும் அருவருப்பும் ஊட்டத்தக்க அளவுக்கு ஓயாது அதனை நம் முகத்திலே எறிந்து வருகிறுர்கள். அரசு என்பது இடைக்காலத்துக்கு மட்டுமே உரிய அமைப்பாகையால், போராட்டத்தில், புரட்சியில் வன்முறை மூலம் எதிராளிகளை அடக்கி வைப்பதற்குரிய அமைப்பாகையால், 'சுதந்திர மக்கள் அரசு' என்பதாய்ப் பேசுவது கிஞ்சித்தும் பொருளுடையதாகாது. பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவையாயிருக்கும் வரையில், தனது எதிராளிகளை அடக்கி வைக்கும் பொருட்டே அல்லாமல் சுதந்திரத்தின் நலன்களுக்காக அதற்கு அரசு தேவைப்படவில்லை. சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமானதுமே அரசு அரசாய் இல்லாதொழிகிறது. ஆகவே எல்லா இடங்களிலும் அரசு என்பதற்குப் பதிலாய்க் ''கம்யூன்'' என்னும் பிரெஞ்சு சொல்லுக்குப் பிரதியாய் அமையக் கூடிய ''மக்கட்சமுதாயம்'' (Gemeinwesen) என்கிற நல்லதொரு பழைய ஜெர்மானியச் சொல்லை உபயோகிக்கலாமென நாங்கள் ஆலோசனை கூற விரும்புகிறோம் (ஜெர்மானிய மூலத்தில் பக்கங்கள் 321-22).

இந்தக் கடிதம் இதற்குச் சில வாரங்களுக்குப் பின்புதான் மார்க்ஸ் எழுதிய ஒரு கடிதத்தில் (மார்க்சின் கடிதம் 1875 மே 5ஆம் தேதியிடப்பட்டது) விமர்சிக்கப்பட்ட அதே கட்சி வேலைத்திட்டத்தைத்தான் குறிப்பிடுகிறது என்பதையும், அவ்வமயம் எங்கெல்ஸ் லண்டனில் மார்க்சுடன் வசித்து வந்தார் என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும். ஆகவே கடைசி வாக்கியத்தில் எங்கெல்ஸ் ''நாங்கள்'' என்று குறிப்

பிடுவதன் மூலம் தன் சார்பிலும் மற்றும் மார்க்சின் சார்பிலும் ஜெர்மன் தொழிலாளர் கட்சியின் தலைவருக்கு ''அரசு'' என்னும் சொல்லை வேலைத்திட்டத்திலிருந்து எடுத்துவிட்டு அதற்குப் பதில் ''மக்கட்சமுதாயம்'' என்னும் சொல்லைக் கையாளும்படி ஆலோசனை கூறுகிறார் என்பதில் ஐயமில்லை.

சந்தர்ப்பவாதிகளுடைய வசதிக்காக வேண்டி பொய்யாய்த் திரித்துப் புரட்டப்பட்டுவிட்ட இன்றைய ''மார்க்சியத்தின்'' தலைவர்களிடம், வேலைத்திட்டத்தில் இத்தகைய ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்ற ஆலோசனை முன் வைக்கப்பட்டால் ''அராஜகவாதம்'' என்பதாய் ஏக கூச்சல் அல்லவா எழுப்புவார்கள்!

அவர்கள் கூச்சல் எழுப்பட்டும். அது அவர்களுக்கு முதலாளித்துவ வர்க்கத்தாரிடமிருந்து புகழ்மாலைகள் பெற்றுத் தரும்.

நாம் நமது வேலையைச் செய்து செல்வோம். நம்முடைய கட்சியின் வேலைத்திட்டத்தில் திருத்தம் செய்கையில், உண்மையிடம் மேலும் நெருங்கிச் செல்லும் பொருட்டு, திரித்துப் புரட்டப்பட்டவற்றைக் களைந்தெறிந்து மார்க்சியத்தை மீட்டமைக்கவும் தொழிலாளி வர்க்கம் அதன் விடுதலைக்காக நடத்தும் போராட்டத்துக்குப் பிழையின்றி மேலும் சரியானபடி வழிகாட்டவும் பொருட்டு, எங்கெல்ஸ், மார்க்சின் ஆலோசனையைத் தவறாமல் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எங்கெல்ஸ், மார்க்சின் ஆலோசனையை எதிர்ப்பவர்கள் யாரும் போல்ஷிவிக்குகளிடையே இருக்கமாட்டார்கள் என்பது உறுதி. ஒரேயொரு சங்கடம் வேண்டுமானால் எழலாம்—சொல்லைக் குறித்து ஒருவேளை சங்கடம் எழலாம். ஜெர்மன் மொழியில் ''மக்கட்சமுதாயம்'' என்று பொருள்படும் இரு சொற்கள் உள்ளன. இவை இரண்டில் தனியொரு மக்கட்சமுதாயத்தை அல்லாமல் மக்கட்சமுதாயங்களது கூட்டமைப்பை, அவற்றின் முழுமையையும் குறிக்கும் சொல்லை எங்கெல்ஸ் உபயோகித்தார். ருஷ்யனில் இது போன்ற ஒரு சொல் இல்லை. ''கம்யூன்'' என்னும் பிரெஞ்சுச் சொல்லும் குறைபாடுகள் உடையதே என்றாலும், இதையே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கலாம்.

''கம்யூனனது அரசெனும் சொல்லின் சரியான பொருளில் அரசாய் இருக்கவில்லை''—தத்துவ வழியில் இது எங்கெல்ஸ் அளித்திடும் மிக முக்கிய நிர்ணயிப்பு. மேலே கூறப்பட்டுள்ளதற்குப் பிற்பாடு இந்த நிர்ணயிப்பு தெட்டத் தெளிவாய் விளங்கும் ஒன்று. கம்யூனனது அரசாய் இருப்பது முடிவுற்றுக் கொண்டிருந்தது, ஏனெனில் அது பெரும்பான்மை மக்களையல்ல, சிறுபான்மையினரை (சுரண்டலாளர்களை) மட்டுமே அடக்க வேண்டியிருந்தது. முதலாளித்துவ அரசுப் பொறியமைவை அது நொறுக்கிவிட்டது. தனிவகை வன்முறை சக்திக்குப் பதிலாய் மக்கள் தாமே செயலரங்குக்கு வந்து விட்டனர். இவை யாவும் அரசெனும் சொல்லின் சரியான பொருளிலிருந்து விலகிச் செல்வதைக் குறிப்பவை ஆகும். கம்யூன் உறுதியாய் நிலைபெற்றிருந்தால், அரசுக்குரிய எல்லாச் சாயல்களுமே தாமாகவே ''உலர்ந்து உதிர்ந்திருக்கும்''; அரசின் நிறுவனங்களைக் கம்யூன் ''ஒழிக்க'' வேண்டியிருந்திருக்காது — இந்நிறுவனங்கள் வேலையற்றனவாகி இயங்காது ஓய்ந்து போயிருந்திருக்கும்.

''அராஜகவாதிகள் 'மக்கள் அரசு' என்பதனை ...நம் முகத்திலே எறிந்து வருகிறார்கள்''. யாவற்றுக்கும் மேலாய், பக்கூனினையும் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள்மீது அவர் தொடுத்த தாக்குதல்களையும் மனதிற் கொண்டே எங்கெல்ஸ் இதைக் கூறுகிறார். ''சுதந்திர மக்கள் அரசைப்'' போலவே ''மக்கள் அரசும்'' அதே அளவுக்கு அபத்தமும், சோஷலிசத்திலிருந்து தடம் புரளுவதும் ஆகுமாதலால், இத்தாக்குதல்கள் நியாயமானவையே என்று எங்கெல்ஸ் ஒப்புக் கொள்கிறார். அராஜகவாதிகளுக்கு எதிரான ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளுடைய போராட்டத்தைச் சரியான பாதையிலே செலுத்தவும்,இந்தப் போராட்டத்தைக் கோட்பாட்டு அடிப்படையில் பிழையற்றதாக்கவும், ''அரசு'' பற்றிய சந்தர்ப்பவாதத் தப்பெண்ணங்களை அதனிடமிருந்து அகற்றவும் எங்கெல்ஸ் முயன்றார். துரதிர்ஷ்டவசமாய் எங்கெல்சின் கடிதம் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு மூலையிலே முடக்கப்பட்டு விட்டது. இந்தக் கடிதம் வெளியிடப்பட்ட பிற்பாடும் கூட காவுத்ஸ்கி, எந்தத் தவறுகள் குறித்து எங்கெல்ஸ்

எச்சரித்தாரோ அதே தவறுகளைத் தொடர்ந்து செய்துவந்தார்.

பெபெல் 1875 செப்டம்பர் 21ஆம் தேதியிட்ட கடிதத்தில் எங்கெல்சுக்குப் பதிலளித்தார். இந்தக் கடிதத்தில் வேறு பலவற்றுடன்கூட, அவர் நகல் வேலைத்திட்டம் பற்றி எங்கெல்ஸ் கூறிய அபிப்பிராயத்தைத் தாம் ''பூரணமாய் ஒத்துக் கொள்வதாகவும்'', விட்டுக்கொடுக்கும் மனோபாவத்திற்காக லீப்க்னெஹ்ட்டைத் தாம் கண்டித்ததாகவும் எழுதினர் (பெபெலின் நினைவுக் குறிப்புகள், ஜெர்மன் பதிப்பு, 2ஆம் தொகுதி, பக்கம் 334). ஆனால் நமது குறிக்கோள்கள் என்னும் பெபெலின் பிரசுரத்தை எடுத்துக் கொள்வோமானால், அரசு பற்றிய முற்றிலும் தவறான கருத்துக்களை அதில் காண்கிறோம்.

''அரசானது... வர்க்க ஆதிக்கத்தை அடிப்படையாய்க் கொண்ட நிலை நீக்கப்பட்டு மக்கள் அரசாய் மாற்றப்பட வேண்டும்'' (*Unsere Ziele*, ஜெர்மன் பதிப்பு, 1886, பக்கம் 14).

பெபெல் பிரசுரத்தின் ஒன்பதாவது (ஆம், ஒன்பதாவது!) பதிப்பில் இது அச்சிடப்பட்டது! இப்படி விடாப்பிடியாய்த் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வந்த அரசு பற்றிய சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளைப் பீடித்துக் கொண்டுவிட்டதில், முக்கியமாய் எங்கெல்சின் புரட்சிகர விளக்கங்கள் ஜாக்கிரதையாய் மூலையில் முடக்கப்பட்டுவிட்டதாலும், வாழ்க்கை நிலைமைகள் யாவும் அவர்களை நெடுங்காலத்துக்குப் புரட்சியிலிருந்து ''விலக்கிவைத்து'' இருந்ததாலும் இக்கருத்துக்கள் அவர்களைப் பீடித்துக் கொண்டுவிட்டதில் வியப்பில்லை.

### 4. எர்ஃபுர்ட் நகல் வேலைத்திட்டத்தின் விமர்சனம்

அரசு பற்றிய மார்க்சிய போதனைகளை ஆராய்கையில், எர்ஃபுர்ட் நகல் வேலைத்திட்டத்தின்[52] விமர்சனத்தை—எங்கெல்ஸ் 1891 ஜூன் 29ல் காவுத்ஸ்கிக்கு அனுப்பி வைத்த

விமர்சனம் பத்து ஆண்டுகளுக்குப் பிற்பாடுதான் *Neue Zeit* இல் வெளியிடப்பட்டது—கவனியாது விட முடியாது. ஏனெனில் அரசின் கட்டமைப்பு சம்பந்தமான பிரச்சினைகளில் சமூக-ஜனநாயகவாதிகளுடைய சந்தர்ப்பவாதக் கண்ணோட்டங்களைப் பற்றிதான் இந்த விமர்சனம் பிரதானமாய்ப் பரிசீலிக்கிறது.

இதற்கிடையில் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் எங்கெல்ஸ் அளிக்கும் அளவுகடந்த மதிப்புடைய ஒரு கருத்துரையை இங்கு நாம் குறிப்பிடுதல் வேண்டும். நவீன முதலாளித்துவத்தில் ஏற்படும் பல்வேறு மாறுதல்களையும் அவர் எவ்வளவு உன்னிப்பாகவும் கருத்தோடும் கவனித்து வந்தார் என்பதையும், இதன் காரணமாய் இன்றைய ஏகாதிபத்தியச் சகாப்தத்தில் நமது கடமைகளை ஓரளவுக்கு எப்படி அவரால் முன்னறிந்து கூற முடிந்தது என்பதையும் இது காட்டுகிறது. இதோ அந்தக் கருத்துரை: நகல் வேலைத் திட்டத்தில் முதலாளித்துவத்துக்குரிய தனி இயல்பாய்க் குறிப்பிட்டுத் ''திட்டமின்மை'' (Planlosigkeit) என்னும் சொல் உபயோகிக்கப்படுவதைச் சுட்டிக்காட்டி எங்கெல்ஸ் எழுதியதாவது:

> ''...கூட்டுப் பங்குக் கம்பெனிகளிலிருந்து நாம் முழுமுழுத் தொழில்களையே தம் பிடிக்குள் கொண்டு வந்து ஏகபோக ஆதிக்கம் பெறும் டிரஸ்டுகளுக்கு வந்து சேருகையில், தனியார் பொருளுற்பத்திக்கு மட்டுமின்றி, திட்டமின்மைக்கும்கூட முடிவு ஏற்பட்டுவிடுகிறது'' (*Neue Zeit*, தொகுதி 20, 1, 1901-02, பக்கம் 8).[53]

நவீன முதலாளித்துவத்தின், அதாவது ஏகாதிபத்தியத்தின் தத்துவார்த்த மதிப்பீட்டின் மிக முக்கிய சாராம்சம், அதாவது முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாகிவிடுகிறது என்பது இங்கு நமக்கு எடுத்துரைக்கப்படுகிறது. கடைசியில் குறிக்கப்படுவதை வலியுறுத்திக் கூற வேண்டும். ஏனெனில் ஏகபோக முதலாளித்துவம் அல்லது அரசு-ஏகபோக முதலாளித்துவமானது முதலாளித்துவமாய் இருக்கவில்லை, இப்பொழுது அதை ''அரசு சோஷலிசம்'' என்பதாய்

அழைக்கலாம் என்றும், இன்ன பலவாறுகவும் கருதும் தவறுன முதலாளித்துவ-சீர்திருத்தவாதக் கூற்று மிக சகஜமாகி விட்டது. முழுநிறைவாய்த் திட்டமிடுவதற்கு டிரஸ்டுகள் என்றுமே ஏற்பாடு செய்ததில்லே, இப்பொழுதும் செய்ய வில்லே, செய்யவும் முடியாது. ஆனுல் அவை எவ்வளவு தான் திட்டமிட்ட போதிலும், எவ்வளவுதான் மூலதன அதிபர்கள் தேசிய அளவிலும், ஏன் சர்வதேசிய அளவிலுங்கூட பொருளுற்பத்திப் பரிமாணத்தை முன்கூட்டியே கணக்கிட்டு கொண்ட போதிலும், எவ்வளவுதான் அவர்கள் இந்தப் பரிமாணத்தைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்து கொண்ட போதிலும், இன்னமும் நாம் இருப்பது முதலாளித்துவமே தான்— புதிய கட்டத்தை வந்தடைந்துவிட்ட முதலாளித் துவம் என்பது மெய்தான், ஆயினும் இன்னமும் அது சந்தேகத்துக்கு இடமின்றி முதலாளித்துவமேதான். இத்தகைய முதலாளித்துவம் சோஷலிசத்துக்கு ''அண்மையதாய் இருப் பதானது'' பாட்டாளி வர்க்கத்தின் மெய்யான பிரதிநிதி களுக்கு சோஷலிசப் புரட்சி அண்மையதும் எளியதும் நடை முறை சாத்தியமானதும் அவசர அவசியமானதும் ஆகி விட்டதை நிரூபிப்பதற்குரிய வாதமாய் அமைய வேண்டுமே ஒழிய, இந்தப் புரட்சி புறக்கணிக்கப்படுவதற்கும், முத லாளித்துவத்தைக் கவர்ச்சியுடையதாய்க் காட்டுவதற்கான முயற்சிக்கும்—எல்லா சீர்திருத்தவாதிகளும் இந்தப் பணி யில்தான் ஈடுபட்டிருக்கிறுர்கள்—இடந்தரும் வாதமாய் ஒரு போதும் ஆகிவிட முடியாது.

நிற்க, அரசு பற்றிய பிரச்சினேக்குத் திரும்பி வருவோம். எங்கெல்ஸ் தமது கடிதத்தில் விசேஷ முக்கியத்துவமுள்ள மூன்று மிக முக்கிய ஆலோசனேகளே அளிக்கிறுர். முதலாவது, குடியரசைப் பற்றியது; இரண்டாவது, தேசியப் பிரச்சினேக் கும் அரசின் கட்டமைப்புக்குமுள்ள தொடர்பைப் பற்றியது; மூன்ருவது, வட்டாரத் தன்னுட்சியைப் பற்றியது.

குடியரசைப் பொறுத்தவரை, எங்கெல்ஸ் இதை எர்ஃபுர்ட் வேலேத்திட்டம் பற்றிய தமது விமர்சனத்தின் மையக் கூருய்க் கொண்டார். எர்ஃபுர்ட் வேலேத்திட்டம் உலகின் எல்லா சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் எவ்வளவு முக்கியத்

துவமுடையதாகியது என்பதையும், இரண்டாவது அகிலம் அனைத்துக்குமே முன்மாதிரியாகியது என்பதையும் நினைவு கூர்வோமாயின், எங்கெல்ஸ் இரண்டாவது அகிலம் அனைத்தின் சந்தர்ப்பவாதத்தைத்தான் இதன் மூலம் விமர்சித்துக் கண்டித்தார் என்று கூறுவது மிகையாகாது.

> ''இந்நகலின் அரசியல் கோரிக்கைகளில் ஒரு பெரும் குறைபாடு உள்ளது'' என்று எங்கெல்ஸ் எழுதினர். ''உண்மையில் எது சொல்லப்பட வேண்டுமோ அது **சொல்லாமல் விடப்படுகிறது**'' (அழுத்தம் எங்கெல்சினுடையது).

ஜெர்மன் அரசியல் சட்டம் பழுத்த பிற்போக்குவாத 1850ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் அச்சுப் பிரதியே அன்றி வேறல்ல, வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் குறிப்பிட்டது போல ரைஹ்ஸ்டாக் ''வரம்பிலா முடியாட்சியை மூடி மறைப்பதற்கான அலங்காரத் திரையே'' ஆகும், சின்னஞ்சிறு குட்டி அரசுகளுக்கும் சின்னஞ்சிறு குட்டி ஜெர்மன் அரசுகளுடைய கூட்டாட்சிக்கும் சட்ட அங்கீகாரம் அளிக்கும் ஓர் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் ''உழைப்புக் கருவிகள் யாவற்றையும் பொதுச் சொத்தாய் மாற்ற'' விரும்புவது ''கண்கூடான அபத்தமே'' ஆகும் என்று பிற்பாடு எங்கெல்ஸ் தெளிவுபடுத்துகிருர்.

> ''ஆயினும் அதைப் பற்றி பேச முற்படுவது அபாயகரமானது'' என்று எங்கெல்ஸ் மேலும் எழுதினர்; ஏனெனில் ஜெர்மனியில் ஒரு குடியரசு வேண்டுமென்ற கோரிக்கையைப் பகிரங்கமாய் வேலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்வது முடியாத காரியம் என்பது எங்கெல்சுக்குத் தெரியும். அதேபோதில், ''எல்லோரும்'' திருப்தியுடன் ஏற்றுக் கொண்டுவிட்ட இந்த வெளிப்படையான காரணத்தை ஏற்றுக் கொள்வதோடு நின்றுவிட எங்கெல்ஸ் மறுத்தார். மேலும் தொடர்ந்து அவர் எழுதியதாவது: ''இருப்பினும், எப்படியேனும் ஒரு வழியில் இதனைச் செய்தாக வேண்டும். தற்போது இது எவ்வளவு

அவசியமானது என்பதைச் சமூக-ஜனநாயகப் பத்திரிகைகளின் ஒரு பெரும் பகுதியில் மேலோங்கி வரும் (einreissende) சந்தர்ப்பவாதம் தெளிவாய்க் காட்டுகிறது. சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம்[54] திரும்பவும் வந்து விடுமோ என்று அஞ்சியும், அந்தச் சட்டம் ஆட்சி புரிந்த காலத்தில் அவசரப்பட்டுக் கூறப்பட்ட பலவற்றையும் நினைவிற் கொண்டும் இவர்கள் எல்லாக் கட்சிக் கோரிக்கைகளையும் சமாதான வழியிலேயே செயல்படுத்திவிட தற்போது ஜெர்மனியிலுள்ள சட்டமுறை போதுமெனக் கட்சி கருத வேண்டுமென்று விரும்புகிருர்கள்...''

சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் மீண்டும் வந்துவிடுமோ என்று அஞ்சி ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் இவ்வாறு நடந்து கொண்டனர்—இந்த அடிப்படை உண்மையை எங்கெல்ஸ் முக்கியமாய் வலியுறுத்திஞர். இதனைச் சந்தர்ப்பவாதமே என்று வெளிப்படையாகவே விவரித்தார். ஜெர்மனியில் குடியரசும் இல்லை, சுதந்திரமும் இல்லையாதலால், ''சமாதான'' வழி பற்றிய கனவுகள் முற்றிலும் அபத்தமாகுமென்று கூறிஞர். எங்கெல்ஸ் தமக்குத் தளைகளிட்டுக் கொள்ளாதவாறு எச்சரிக்கையுடன் இதனைக் குறிப்பிட்டார். குடியரசு நாடுகளிலோ, மிகுந்த சுதந்திரம் நிலவும் நாடுகளிலோ சோஷலிசத்தை நோக்கி சமாதான வழியில் வளர்ச்சி காணலாமென ''நினைக்கச் சாத்தியமுண்டு'' (''நினைக்க'' மட்டும்தான்!) என்று ஒத்துக் கொண்டார். ஆனல் ஜெர்மனியைப் பொறுத்தவரை, அவர் திரும்பவும் ஒரு முறை கூறிஞர்:

''...அரசாங்கம் அனேகமாய் அனைத்து ஆட்சியதிகாரம் படைத்ததாகவும், ரைஹ்ஸ்டாகும் ஏனைய பிரதிநிதித்துவ உறுப்புக்களும் மெய்யான அதிகாரம் இல்லாதனவாகவும் இருக்கும் ஜெர்மனியில் இவ்விதம் பிரகடனம் செய்வது, அதுவும் இவ்வாறு செய்ய எந்த அவசியமும் இல்லாதபோது இதைச் செய்வது வரம்பிலா முடியாட்சியை மறைத்திடும் அலங்காரத் திரையை நீக்கித் தானே அதன் அம்மண நிலையை மறைக்கும் திரையாய்ச் செயல் படுவதாகிவிடும்.''

வெளியே தெரியாதபடி இந்த ஆலோசனையை மூலையிலே ஒதுக்கி வைத்துவிட்ட ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் அதிகாரபூர்வமான தலைவர்களில் மிகப் பெரும்பாலோர் வரம்பிலா முடியாட்சிக்குத் தாம் மூடுதிரையாய்ச் செயல்படுவோரே என்பதைத்தான் காட்டிக் கொண்டுவிட்டார்கள்.

''...கட்சி திசைதிருப்பிவிடப்படுவதற்கே இத்தகைய கொள்கை காலப்போக்கில் வகை செய்யும். பொதுப் படையான, கருத்தியலான அரசியல் பிரச்சினைகளை முன்னணிக்குக் கொண்டுவந்து வைக்கிறார்கள். இதன் மூலம், ஸ்தூலமான உடனடிப் பிரச்சினைகளை, முதலாவது பெரும் நிகழ்ச்சிகள், முதலாவது அரசியல் நெருக்கடி ஏற்பட்டதும் தாமாகவே நிகழ்ச்சி நிரலுக்கு வந்துவிடும் இப்பிரச்சினைகளை மூடி மறைத்துவிடுகிறார்கள். தீர்மானகரமான தருணத்தில் கட்சி திடுதிப்பென நிர்க்கதியாய் நிற்க வேண்டியதாகிவிடுகிறது, முக்கியமான பிரச்சினைகள் குறித்து, இப்பிரச்சினைகள் விவாதிக்கப் படாமலே இருந்துவிட்டதால், கட்சியினுள் தெளிவின்மையும் குழப்பமும் தலைதூக்கிவிடுகின்றன என்பதைத் தவிர விளைவு வேறு எப்படி இருக்க முடியும்?...

''தற்போதைய கண நேர நலன்களுக்காக வேண்டி பெரிய தலையாய கருத்துக்களை இப்படி மறப்பதானது, பிற்பாடு ஏற்படப் போகிற விளைவுகளைப் பற்றிக் கவலையின்றி கண நேர வெற்றிக்கான இந்தப் போராட்டமும் முயற்சியும், எதிர்கால இயக்கத்தை தற்கால இயக்கத்திற்காக இப்படித் தியாகம் புரிவதானது, 'நேர்மையான' காரணங்களுக்காகச் செய்யப்படுவதாய் இருக்கலாம்; இருப்பினும் இது சந்தர்ப்பவாதமே அன்றி வேறல்ல. 'நேர்மையான' சந்தர்ப்பவாதத்தைப் போல ஆபத்தானது எதுவுமில்லை எனலாம்...

''அறுதியிட்டு நிச்சயமாய்ச் சொல்லக் கூடியது என்னவெனில், நமது கட்சியும் தொழிலாளி வர்க்கமும் ஜனநாயகக் குடியரசின் வடிவிலேதான் அதிகாரத்துக்கு வர முடியும் என்பதே. மாபெரும் பிரெஞ்சுப்

புரட்சி ஏற்கனவே காட்டியுள்ளது போல, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய பிரத்தியேக வடிவமும் இதுவேதான்...''

மார்க்சின் நூல்களில் எல்லாம் இழையோடி நிற்கும் அடிப்படை கருத்தினை இங்கு எங்கெல்ஸ் மிகவும் எடுப்பான முறையில் திரும்பவும் கூறுகிறார். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு மிக அருகாமையில் இட்டுச்செல்வது ஜனநாயகக் குடியரசுதான் என்பதே இந்த அடிப்படை கருத்து. இத்தகைய குடியரசு சிறிதும் மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழித்துவிடுவதில்லை, ஆகவே திரளான மக்களை இருத்தும் ஒடுக்குமுறையையும் வர்க்கப் போராட்டத்தையும் இது ஒழித்துவிடுவதில்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் திரள்களின் அடிப்படை நலன்கள் பூர்த்தி செய்யப்படுவதற்குரிய சாத்தியப்பாடு தோன்றியதுமே தவிர்க்க முடியாத வகையில் முற்றிலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் மூலம், இம்மக்கள் திரள்களுக்குப் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்குவதன் மூலம் இந்தச் சாத்தியப்பாடு சித்தி பெறும்படியாய், வர்க்கப் போராட்டம் அந்த அளவுக்கு விரிந்து வளர்ந்து மலர்ச்சியுறவும் கடுமை பெறவும் ஜனநாயகக் குடியரசு வகை செய்கிறது. இவையுங்கூட இரண்டாவது அகிலம் அனைத்துக்கும் மார்க்சியத்தின் ''மறக்கப்பட்டுவிட்ட'' வாசகங்களாகி விட்டன. இவை மறக்கப்பட்டுவிட்டன என்பது 1917ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சியின் முதல் ஆறு மாதங்களில் மென்ஷிவிக் கட்சியினது வரலாற்றின் வாயிலாய்த் தெட்டத் தெளிவாய் நிரூபித்துக் காட்டப் பெற்றது.

மக்களது தேசிய இயைபு சம்பந்தமாகக் கூட்டாட்சிக் குடியரசு குறித்து எங்கெல்ஸ் எழுதியதாவது:

''தற்போதுள்ள ஜெர்மனியின் இடத்தில் உதித்தெழ வேண்டியது என்ன?'' (தற்போதுள்ள ஜெர்மனி பிற்போக்கான முடியாட்சி அரசியல் அமைப்புச் சட்டமுடையது; இதே அளவுக்குப் பிற்போக்கான முறையில் சின்னஞ்சிறு குட்டி அரசுகளாய்ப் பிளவுண்டிருக்கிறது; ''பிரஷ்யனியத்தின்'' தனி இயல்புகளை எல்

லாம் அனைத்து ஜெர்மனியிலும் கரைந்துவிடச் செய்வதற்குப் பதிலாய், இந்தப் பிளவு அவற்றை நீடித்து நிலைக்கச் செய்கிறது). ''என்னுடைய கருத்துப்படி, பிரிக்க முடியாத ஒருமித்த குடியரசை மட்டும்தான் பாட்டாளி வர்க்கம் பயன்படுத்திக் கொள்ள முடியும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் பிரம்மாண்டப் பரப்பில், கூட்டாட்சிக் குடியரசு மொத்தத்தில் இன்னும் அவசியம் தான். ஆயினும் இந்நாட்டின் கீழ்ப் பகுதியில் ஏற்கனவே அது தடையாக மாறிவருகிறது. இங்கிலாந்தில் அது ஒரு படி முன்னேற்றத்தைக் குறிப்பதாயிருக்கும். அங்கு இரு தீவுகளில் நான்கு தேசிய இனத்தவர்கள் வசிக்கின்றனர். தனியொரு நாடாளுமன்றம் இருப்பினும் வெவ்வேறான மூன்று சட்ட முறைகள் அடுத்தடுத்து இருந்து வருகின்றன. சின்னஞ்சிறு ஸ்விட்சர்லாந்தில் அது நீண்ட காலமாகவே தடையாய் இருந்து வருகிறது. ஐரோப்பிய அரசுகளின் அமைப்பில் ஸ்விட்சர்லாந்து முற்றிலும் செயலற்ற ஓர் உறுப்பாய் இருப்பதுடன் திருப்தியடைந்து விடுவதால்தான் இக்கூட்டாட்சி அமைப்பு சகித்துக் கொள்ளப்படுகிறது. ஜெர்மனிக்கு, ஸ்விட்சர்லாந்தின் பாணியிலான கூட்டாட்சி முறை மிகப் பெரிய பின்னடைவாய் இருக்கும். கூட்டரசு முற்றிலும் ஒன்றிணைந்த ஒருமை அரசிலிருந்து இரு வழிகளில் வேறுபடுகிறது. முதலாவதாக, கூட்டரசைச் சேர்ந்த தனி அரசு ஒவ்வொன்றும், மாநிலம் ஒவ்வொன்றும், அதற்குரிய தனி சிவில், கிரிமினல் சட்ட அமைப்பும் நீதிமன்றமும் பெற்றிருக்கிறது. இரண்டாவதாக, மக்கள் சபையுடன் கூடவே, பெரியதாயினும் சிறியதாயினும் ஒவ்வொரு மாநிலமும் தனியொன்றாக வாக்களிக்கும் ஒரு கூட்டரசு சபையும் இருக்கிறது.'' ஜெர்மனியில் கூட்டரசானது முற்றிலும் ஒன்றிணைந்த ஒருமை அரசுக்குரிய இடைக்கால வடிவமாகும். 1866, 1870 ஆம் ஆண்டுகளில்[55] ''மேலிருந்து நிகழ்ந்த புரட்சி'' திருப்பிவிடப்படக் கூடாது, ''அடியிலிருந்து எழும் இயக்கத்தால்'' மேலும் உறுதியூட்டப்பட வேண்டும்.''

அரசின் வடிவங்கள் குறித்து எங்கெல்ஸ் கருத்தின்றி இருந்துவிடவில்லை; மாருக, குறிப்பிட்ட ஒரு இடைக்கால வடிவம் எதிலிருந்து எதுவாக மாறிச் செல்கிறது என்பதை அதனதன் ஸ்தூலமான வரலாற்றுத் தனி இயல்புகளுக்கு ஏற்ப நிலைநாட்டும் பொருட்டு, அவர் இடைக்கால வடிவங்களை மிகவும் தீர்க்கமாய்ப் பகுத்தாராய முயன்ருர்.

பாட்டாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கப் புரட்சி இவற்றின் கண்ணேட்டத்திலிருந்து இப்பிரச்சினையை அணுகி, மார்க்சைப் போலவே எங்கெல்சும் ஜனநாயக மத்தியத்துவத்தை, பிரித்திடவொண்ணுதவாறு இணைந்து ஒன்றிய குடியரசை ஆதரித்து வாதாடினுர். கூட்டாட்சிக் குடியரசை அவர் விதிவிலக்காகவும் வளர்ச்சிக்கு இடையூருகவும் கருதினுர், அல்லது முடியரசிலிருந்து மத்தியத்துவக் குடியரசுக்கான வளர்ச்சியில் ஓர் இடைக்காலக் கட்டமாய், குறிப்பிட்ட சில தனி நிலைமைகளில் ஒரு ''முன்னேற்றப் படியாய்'' கருதினுர். இந்தத் தனி நிலைமைகளில் அவர் தேசிய இனப் பிரச்சினையை முதலிடத்துக்கு உரியதாய்க் குறிப்பிட்டார்.

சின்னஞ் சிறு அரசுகளின் பிற்போக்குத் தன்மையையும், குறிப்பிட்ட சில உதாரணங்களில் தேசிய இனப் பிரச்சினையால் இவற்றின் பிற்போக்குத் தன்மை மூடிமறைக்கப்படுவதையும் தயவு தாட்சண்யமின்றிக் கண்டித்து விமர்சனம் செய்த போதிலும், மார்க்சைப் போலவே எங்கெல்சும் தேசிய இனப் பிரச்சினையை ஒதுக்கித் தள்ளிவிடலாம் என்ற விருப்பத்துக்கு—டச்சு மார்க்சியவாதிகளும் போலந்து மார்க்சியவாதிகளும் ''அவர்களுடைய'' சின்னஞ்சிறு அரசுகளின் குறுகிய குட்டிமுதலாளித்துவ தேசியவாதத்தின்மீது அவர்களுக்குள்ள முற்றிலும் நியாயமான எதிர்ப்பினுல் தூண்டப் பெற்று அடிக்கடி இரையாகிவிடுகிருர்களே அந்த விருப்பத்துக்கு—ஒரு போதும் துளியளவும் இடமளித்ததில்லை.

பிரிட்டன் சம்பந்தமாகவுங்கூட—பூகோள நிலைமைகளும் பொது மொழியும் பல நூற்ருண்டுக் கால வரலாறும் இந்நாட்டின் தனித்தனிச் சிறு பிரிவுகளில் தேசிய இனப் பிரச்சினைக்கு ''முடிவுகட்டியிருக்கும்'' என்பதாய் நினைக்கத் தோன்றும் பிரிட்டன் சம்பந்தமாகவுங்கூட—தேசிய இனப்

பிரச்சினை கடந்த காலத்துக்குரியதாகிவிடவில்லை என்னும் கண்கூடான உண்மையைக் கணக்கில் எடுத்து, கூட்டாட்சிக் குடியரசு நிறுவப்படுவதானது ''முன்னேற்றப் படியாய்'' இருக்குமென்பதை எங்கெல்ஸ் அங்கீகரித்தார். அதேபோதில் கூட்டாட்சிக் குடியரசுக்குள்ள குறைபாடுகள் பற்றிய விமர்சனத்தை எங்கெல்ஸ் கைவிட்டுவிடுகிருர் என்பதற்கோ, ஒன்றிணைந்த மத்தியத்துவ ஜனநாயகக் குடியரசுக்கான உறுதி மிக்க வாக்குவாதத்தையும் போராட்டத்தையும் துறந்து விடுகிருர் என்பதற்கோ கிஞ்சித்தும் இங்கு அறிகுறி காண முடியாது.

ஆனல் ஜனநாயக மத்தியத்துவம் என்னும் தொடரை முதலாளித்துவ சித்தாந்தவாதிகளும், அராஜகவாதிகள் அடங்கலான குட்டிமுதலாளித்துவ சித்தாந்தவாதிகளும் பயன்படுத்தும் அதிகாரவர்க்க அர்த்தத்தில் எங்கெல்ஸ் இதனைப் பிரயோகிக்கவில்லை. மத்தியத்துவத்தைப் பற்றிய அவருடைய கருத்தோட்டம் அரசின் ஒற்றுமையைக் ''கம்யூன்களும்'' மாவட்டங்களும் தாமே விரும்பிப் பேணிப் பாதுகாப்பதற்கும், அதேபோதில் எல்லா விதமான அதிகார வர்க்க நடைமுறைகளும் மேலிருந்து செலுத்தப்படும் எல்லா விதமான ''நாட்டாண்மையும்'' அறவே ஒழிந்து போவதற்கும் ஒருங்கே வகை செய்யும் அவ்வளவு விரிவான வட்டாரத் தன்னுட்சிக்கு முழு இடமளித்தது. அரசு பற்றிய மார்க்சிய வேலைத்திட்டக் கருத்துக்களை மேலும் விரிவுபட விளக்கி, எங்கெல்ஸ் எழுதியதாவது:

> ''...ஆகவே நமக்கு வேண்டியது ஒன்றிணைந்த குடியரசு—ஆனல் தற்போதுள்ள பிரெஞ்சுக் குடியரசின் அர்த்தத்தில் அல்ல. தற்போதுள்ள பிரெஞ்சுக் குடியரசு 1798ல் நிறுவப்பட்ட முடிப் பேரரசிலிருந்து முடிமன்னர் மட்டும் நீக்கப்பட்ட அரசேயன்றி வேறல்ல. 1792 முதல் 1798 வரையில் ஒவ்வொரு பிரெஞ்சு மாவட்டமும் ஒவ்வொரு கம்யூனும் (Gemeinde) அமெரிக்க மாதிரியிலான முழுநிறைத் தன்னுட்சி பெற்றிருநதது—நமக்கும் இதுவேதான் வேண்டும். தன்னுட்சியை எப்படி

நிறுவ வேண்டும், அதிகாரவர்க்கம் இல்லாமலே எப்படி நிர்வகிக்க முடியும் என்பதை அமெரிக்காவும் முதல்வது பிரெஞ்சுக் குடியரசும் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளன, இன்றுங்கூட இதை ஆஸ்திரேலியாவும் கானடாவும் ஏனைய ஆங்கிலேயக் காலனிகளும் நமக்குத் தெளிவுபடுத்தி வருகின்றன. இந்தப் பாணியில் அமைந்த மாநில (பிராந்திய), கம்யூன் தன்னாட்சியானது, உதாரணமாய் ஸ்விட்சர்லாந்துக் கூட்டாட்சி முறையைக் காட்டிலும் பன்மடங்கு சுதந்திரமுடையது. ஸ்விட்சர்லாந்துக் கூட்டாட்சி முறையில் கான்டோனானது கூட்டரசு'' (அதாவது, கூட்டாட்சி அரசு அனைத்தும்) ''சம்பந்தப்பட்ட வரை மிகவும் சுயேச்சையானதுதான், ஆனால் மாவட்டம் (Bezirk), கம்யூன் இவை சம்பந்தமாகவுங்கூட சுயேச்சையானதாகவே இருக்கிறது. கான்டோன் அரசாங்கங்கள் மாவட்டப் போலீஸ் அதிகாரிகளையும் (Bezirksstatthalter) தலைவர்களையும் நியமிக்கின்றன. ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் இதனைக் காண முடியாது; வருங்காலத்தில் நாம் பிரஷ்ய லாண்டிரேட்டுடனும் ரிகிருன்க்ஸ்ரேட்டுடனும்'' (கமிஷனர்கள், மாவட்டப் போலீஸ் அதிகாரிகள், கவர்னர்கள் ஆகியோரும் மற்றும் பொதுவில் மேலிருந்து நியமிக்கப்படும் எல்லா அதிகாரிகளும்) ''கூடவே இதையும் தீர்மானமாய் ஒழித்துவிட வேண்டும்''. ஆகவே எங்கெல்ஸ் இந்த வேலைத் திட்டத்தில் தன்னாட்சி பற்றிய பிரிவைப் பின்வருமாறு திருத்திக் கூற வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறார்: ''மாநிலங்களுக்கும்'' (குபேர்னியாக்கள் அல்லது பிராந்தியங்களுக்கும்) ''மாவட்டங்களுக்கும் கம்யூன்களுக்கும் அனைத்து மக்கள் வாக்குரிமையின் அடிப்படையில் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமான முழுநிறைத் தன்னாட்சி; வட்டார, மாநில அதிகாரி எவரும் அரசால் நியமிக்கப்படுவது ஒழிக்கப்படுதல்.''

போலிப் புரட்சிகரப் போலி ஜனநாயகத்தின் எமது போலி சோஷலிஸ்டுப் பிரதிநிதிகள் எப்படி இந்த விவகாரத்

தில் (இதில் மட்டும்தானு—இல்லவே இல்லை) ஜனநாயகத்திலிருந்து அப்பட்டமாய்த் தடம் புரண்டு விலகி ஓடிவிட்டனர் என்பதை ஏற்கனவே நான் பிராவ்தாவில்[56] (இதழ் 68, மே 28, 1917)—கேரென்ஸ்கியையும் ஏனைய ''சோஷலிஸ்டு'' அமைச்சர்களையும் கொண்ட அரசாங்கம் இந்தப் பத்திரிகை வெளிவராது தடுத்து அடக்குமுறை செய்துவிட்டது—சுட்டிக் காட்டியிருக்கிறேன்.* ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தாருடன் ''கூட்டுச்'' சேர்ந்து கொண்டு விட்டவர்கள் இந்த விமர்சனத்துக்குச் செவி சாய்க்காது இருந்ததில் வியப்பில்லை.

வெகுவாய்ப் பரவியிருந்த தப்பெண்ணத்தை—முக்கியமாய்க் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளிடையே பரவியிருந்த தப்பெண்ணத்தை—கூட்டாட்சிக் குடியரசு மத்தியத்துவக் குடியரசைக் காட்டிலும் கட்டாயமாய் அதிக அளவு சுதந்திரம் அளிப்பதாகும் என்ற தப்பெண்ணத்தை எங்கெல்ஸ் உண்மைகளை ஆயுதமாய்க் கொண்டு, மிகத் துல்லியமான உதாரணத்தின் மூலம் பொய்யென நிரூபித்துக் காட்டுவதைக் கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியம். 1792-98 ஆம் ஆண்டுகளின் மத்தியத்துவ பிரெஞ்சுக் குடியரசு குறித்தும், ஸ்விட்சர்லாந்துக் கூட்டாட்சிக் குடியரசு குறித்தும் எங்கெல்ஸ் எடுத்துரைக்கும் உண்மைகள் இந்த எண்ணம் தவறானதென்பதை நிரூபிக்கின்றன. மெய்யான ஜனநாயக மத்தியத்துவம் கொண்ட குடியரசு கூட்டாட்சிக் குடியரசைக் காட்டிலும் அதிக அளவு சுதந்திரம் அளித்தது. வேறு விதமாய்க் கூறுமிடத்து, வரலாற்றிலேயே மிகவும் அதிகமாய் வட்டார, பிராந்திய சுதந்திரம் கிடைக்கச் செய்தது மத்தியத்துவக் குடியரசேயன்றி கூட்டாட்சிக் குடியரசல்ல.

இந்த உண்மைக்கும், மற்றும் கூட்டாட்சிக் குடியரசு, மத்தியத்துவக் குடியரசு, வட்டாரத் தன்னாட்சி ஆகிய இவை குறித்த பிரச்சினை முழுவதுக்கும், நமது கட்சியின் பிரசாரத்திலும் கிளர்ச்சியிலும் போதிய கவனம் இதுகாறும் செலுத்தப்பட்டதில்லை, தற்போதும் செலுத்தப்படவில்லை.

---

* வி.இ. லெனின், ''அடிப்படையான ஒரு பிரச்சினை''. —ப-ர்.

## 5. ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' என்னும் மார்க்ஸ் நூலுக்கு 1891ல் எழுதப்பெற்ற முன்னுரை

''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' என்னும் நூலின் மூன்ரும் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய முன்னுரையில் (இந்த முன்னுரை 1891 மார்ச் 18ஆம் தேதியிடப்பட்டது; முதலில் *Neue Zeit*இல் வெளிவந்தது), அரசு குறித்து அனுசரிக்க வேண்டிய போக்கு சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிச் சுவையான சில கருத்துரைகளை இடைக் குறிப்பாய்த் தருவதோடுகூட, கம்யூனின் படிப்பினைகள் பற்றிய தேர்ந்த தெளிவுடைய சுருக்கவுரையையும் அளிக்கிருர். இம்முன்னுரை எழுதப்பட்டதற்கும் கம்யூனுக்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளின் அனுபவம் அனைத்தாலும் செழுமை செய்யப்பட்ட உரை இது. ஜெர்மனியில் வெகுவாய்ப் பரவியிருந்த ''அரசின் பாற்பட்ட மூடநம்பிக்கையை'' நேரடியாய் எதிர்த்து இது எழுதப்பட்டதாகும். நாம் பரிசீலிக்கும் இந்தப் பிரச்சினை குறித்து மார்க்சியம் கூறும் இறுதி முடிவு என்பதாய் இந்தச் சுருக்கவுரையை முழு நியாயத்துடன் அழைக்கலாம்.

> பிரான்சில் ஒவ்வொரு புரட்சியிலிருந்தும் தொழிலாளர்கள் ஆயுதபாணிகளாய் வெளிவந்தனர் என்று எங்கெல்ஸ் குறிப்பிடுகிருர். ''ஆகவே தொழிலாளர்களை நிராயுத பாணிகள் ஆக்கு என்பதே அரசின் அதிகாரத்தில் அமர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தின் முதலாவது கட்டளையாய் இருந்தது. இவ்வாறு, தொழிலாளர்கள் வெற்றிபெற்ற ஒவ்வொரு புரட்சியையும் அடுத்து ஒரு புதிய போராட்டம் தொடங்கி, தொழிலாளர்களுடைய தோல்வியில் முடிவுற்றது.''[57]

முதலாளித்துவப் புரட்சிகளின் அனுபவம் பற்றிய இந்த சுருக்கவுரை இரத்தினச் சுருக்கமாய் இருப்பதோடு பொருள் வளம் மிக்கதாயும் உள்ளது. ஏனையவற்றுடன்கூட அரசு பற்றிய பிரச்சினையிலும் (ஒடுக்கப்பட்ட வர்க்கம் ஆயுதங்கள் பெற்றிருக்கிறதா?) சாரப்பொருள் இங்கு

மிகவும் சிறப்பாய்க் கிரகிக்கப்பட்டு விடுகிறது. இந்தச் சாரப்பொருளைத்தான் முதலாளித்துவச் சித்தாந்தத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட பேராசிரியர்களும், குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தட்டிக்கழித்து விடுகிறார்கள். 1917ஆம் ஆண்டில் ருஷ்யப் புரட்சியின்போது, முதலாளித்துவப் புரட்சிகளின் இந்த இரகசியத்தைப் போட்டு உடைத்த சிறப்பு (கவிஞக் பாணியிலான சிறப்புத்தான்) ''மார்க்சியவாதியாய் வேடம் பூண்ட மென்ஷிவிக்கான'' தெஸெரெத்தேலிக்கு உரியதாகிவிட்டது. ஜூன் 11ல் தெஸெரெத்தேலி நிகழ்த்திய ''வரலாற்று முக்கியத்துவமுள்ள'' சொற்பொழிவில், அவர் பெத்ரொகிராத் தொழிலாளர்களை முதலாளித்துவ வர்க்கத்தினர் நிராயுத பாணிகளாக்க உறுதி பூண்டிருந்தனர் என்னும் உண்மையைப் போட்டு உடைத்து விட்டார். இதை அவர் தமது சொந்த முடிவாகவும், பொதுவில் ''அரசுக்கு'' இன்றியமையாத ஒன்றாகவும் குறிப்பிட்டார்!

திருவாளர் தெஸெரெத்தேலியின் தலைமையில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களாலும் மென்ஷிவிக்குகளாலுமான கூட்டு எப்படித் துரோகம் புரிந்து புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு விரோதமாய் முதலாளித்துவ வர்க்கத்தாரிடம் ஓடிவிட்டது என்பதற்கு 1917ஆம் ஆண்டுப் புரட்சியின் வரலாற்று ஆய்வாளர் ஒவ்வொருவருக்கும் தெஸெரெத்தேலியின் ஜூன் 11ஆம் தேதிய வரலாற்று முக்கியத்துவமுள்ள சொற்பொழிவு துல்லியமான எடுத்துக்காட்டாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

இடைக்குறிப்பாய் எங்கெல்ஸ் அளிக்கும் மற்றொரு கருத்துரை மதத்தைப் பற்றியதாகும்—இதுவும் அரசு பற்றிய பிரச்சினையை ஒட்டியதுதான். ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் சீரழிந்து மேலும் மேலும் சந்தர்ப்பவாதிகளாகிய போது, ''மதம் தனி நபரின் விவகாரமென்று அறிவிக்கப்படுகிறது'' என்னும் புகழ்பெற்ற சூத்திரத்துக்கு அற்பத்தனமான முறையில் பொய்யான வியாக்கியானம் தரும் நிலைக்கு மேன்மேலும் சரிந்து சென்றது தெரிந்ததே. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிக்குங்கூட மதம் தனி நபரின்

விவகாரம் என்பதாய்ப் பொருள்படும்படி இந்தச் சூத்திரம் திரித்துக் கூறப்பட்டுவிட்டது!! பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர வேலைத்திட்டத்துக்கு இழைக்கப்பட்ட இந்த அப்பட்டமான துரோகத்தை எங்கெல்ஸ் வன்மையாய்க் கண்டித்தார். 1891ல் அவர் தமது கட்சியில் சந்தர்ப்பவாதத்தின் மிக பலவீனமான துவக்கம் மட்டுமே தலைதூக்கக் கண்டார். ஆகவே அவர் தமது கருத்தை மிகுந்த எச்சரிக்கையோடு எடுத்துரைத்தார்:

''அனேகமாய்த் தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே கம்யூனில் இருந்ததால், அது ஏற்ற முடிவுகள் தீர்மானகரமான பாட்டாளி வர்க்கத் தன்மை படைத்திருந்தன. முற்றிலும் கோழைத்தனம் காரணமாய்க் குடியரசுவாத முதலாளித்துவ வர்க்கம் முன்பு செய்யத் தவறிவிட்ட சீர்திருத்தங்கள், தொழிலாளி வர்க்கத்தின் சுதந்திரமான செயற்பாடுக்கு இன்றியமையாத அடித்தளத்தை அமைத்திடும் சீர்திருத்தங்கள் — அரசைப் பொறுத்த மட்டில் மதம் முற்றிலும் தனி நபரின் விவகாரமாகும் என்ற கோட்பாடு செயல்படுத்தப்படுவது போன்றவை—செயல்படுத்தப்பட கம்யூனின் தீர்மானங்கள் ஆணையிட்டன. அல்லது தொழிலாளி வர்க்கத்துக்கு நேரடியாய் நலம் பயப்பனவாயும், பழைய சமுதாய அமைப்பைப் பிளப்பனவாயும் இருந்த அரசாணைகளைக் கம்யூன் பிறப்பித்தது...''

வேண்டுமென்றேதான் எங்கெல்ஸ் ''அரசைப் பொறுத்த மட்டில்'' என்னும் சொற்களுக்கு அழுத்தமிட்டுக் காட்டினார்; கட்சியைப் பொறுத்த மட்டில் மதம் தனி நபரின் விவகாரம் என்பதாய்ப் பிரகடனம் செய்துவிட்ட ஜெர்மன் சந்தர்ப்பவாதத்தை நேரடியாய்ச் சாடும் பொருட்டுதான், எங்கெல்ஸ் இதைச் செய்தார். ஜெர்மன் சந்தர்ப்பவாதம் இவ்வாறு புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சியைச் சமயச் சார்பற்ற நிலைக்கு இடமளிக்கத் தயாராயிருக்கும், ஆனால் மக்களை மதிமயங்கச் செய்யும் மதமெனும் அபினியை

எதிர்த்துக் கட்சி நடத்த வேண்டிய போராட்டத்தைக் கை விட்டுவிடும் மிகக் கொச்சையான ''கட்டற்ற சிந்தனைக்குரிய'' குட்டிமுதலாளித்துவ அற்பவாதத்தின் இழிநிலைக்குச் சீரழியும்படிச் செய்து விட்டது.

ஜெர்மன் சமூக - ஜனநாயகவாதிகளின் வருங்கால வரலாற்று ஆசிரியர், 1914ல் இவர்கள் அவமானகரமாய்க் கையாலாகாதவர்களாய் இழிவுற்றதன் மூலக் காரணங்களை ஆராய்கையில், இப்பிரச்சினை குறித்து சுவையான தகவல்கள் நிறைய இருக்கக் காண்பார். இக்கட்சியின் சித்தாந்தத் தலைவர் காவுத்ஸ்கி எழுதிய கட்டுரைகளில் சந்தர்ப்பவாதத்துக்குக் கதவை விரியத் திறந்துவிடும் வகையில் அமைந்த மழுப்பலான உரைகள் முதலாய், 1913ல் „Los-von-Kirche-Bewegung" (''மதச் சபையை விட்டு விலகு'' என முழங்கிய இயக்கம்)[58] குறித்து இக்கட்சி கடைப்பிடித்த போக்கு வரையிலாய் மிகப் பலவும் இருக்கக் காண்பார்.

கம்யூனுக்குப் பிறகு இருபது ஆண்டுகள் கழிந்தபின், போராடும் பாட்டாளி வர்க்கத்துக்கு அதன் படிப்பினைகளை எங்கெல்ஸ் சுருக்கமாய் எடுத்துரைப்பதைக் கவனிப்போம்.

எங்கெல்ஸ் தலைமையான முக்கியத்துவம் அளித்த படிப்பினைகள் வருமாறு:

> ''...பழைய மத்தியத்துவ அரசாங்கத்தின் ஒடுக்கு முறை அதிகாரம்தான், சேனை, அரசியல் போலீஸ், அதிகாரவர்க்கம் — இது 1798ல் நெப்போலியனல் தோற்றுவிக்கப்பெற்று, அது முதலாய் ஒவ்வொரு புதிய அரசாங்கத்தாலும் தக்க ஆயுதமாய் மகிழ்ச்சியோடு ஏற்கப்பட்டு தனது எதிராளிகளுக்கு விரோதமாய்ப் பிரயோகிக்கப்பட்டது—இவற்றின் அதிகாரம் தான் முன்பு பாரிசில் வீழ்த்தப்பட்டது போலவே எங்கணுமே வீழ்த்தப்பட வேண்டியது.
>
> ''தொடக்கம் முதலாகவே கம்யூனனது, அதிகாரத்துக்கு வந்துவிட்ட தொழிலாளி வர்க்கம் பழைய அரசு இயந்திரத்தைக் கொண்டே தொடர்ந்து நிர்வகித்துச் செல்வது சாத்தியமல்ல என்பதையும், தற்போது தான்

வென்று கொண்ட மேலாதிக்கத்தைத் திரும்பவும் இழக்காது இருக்கும் பொருட்டு இந்தத் தொழிலாளி வர்க்கம் ஒரு புறத்தில் முன்பு தன்னையே எதிர்த்துப் பிர யோகிக்கப்பட்ட பழைய ஒடுக்குமுறை இயந்திரம் அனைத்தையும் ஒழித்துவிட்டு, மறு புறத்தில் தனது பிரதி நிதிகள், அதிகாரிகள் ஆகியோரிடமிருந்தே தன்னைத் தற் காத்துக் கொள்ளும் பொருட்டு இவர்கள் எல்லோரும் விதிவிலக்கின்றி எந்நேரத்திலும் திருப்பியழைக்கப் படக் கூடியவர்களே என்பதாய்ப் பிரகடனம் செய்ய வேண்டும் என்பதையும் அங்கீகரிப்பது இன்றியமையாத தாகி விட்டது....''

முடியரசில் மட்டுமின்றி, **ஜனநாயகக் குடியரசிலுங்கூட** அரசு அரசாகவே இருந்து வருகிறது என்பதை, அதாவது அதிகாரிகளை, ''சமுதாயத்தின் பணியாட்களை'', அரசின் உறுப்புக்களை சமுதாயத்தின் **எஜமானர்களாய்** மாற்றிவிடுவ தென்ற அதன் அடிப்படையான தனிப் பண்பினை இழந்து விடவில்லை என்பதை எங்கெல்ஸ் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார்.

''...அரசும் அரசின் உறுப்புக்களும் சமுதாயத்தின் பணியாட்கள் என்கிற நிலையிலிருந்து சமுதாயத்தின் எஜமானர்கள் என்கிற நிலைக்கு இவ்விதம் மாற்றப்படு வதற்கு எதிராய்—முந்திய எல்லா அரசுகளிலும் இம் மாற்றம் தவிர்க்க முடியாதது—கம்யூனது பிசகாத இரு வழிகளைக் கையாண்டது. முதற்கண், அது எல்லாப் பதவிகளுக்கும்—நிர்வாகம், நீதித் துறை, கல்வித் துறை ஆகிய எல்லாப் பதவிகளுக்கும்—அனைத்து மக்கள் வாக் குரிமையின் அடிப்படையிலான தேர்தல் மூலம் ஆட்களை அமர்த்தியதோடு, அவர்களை அதே வாக்காளர்களால் எந்நேரத்திலும் திருப்பியழைக்கப்படக் கூடியவர்களாக் கிற்று. இரண்டாவதாக, அது உயர் அதிகாரிகளாயினும் சரி, கீழ் அதிகாரிகளாயினும் சரி எல்லோருக்கும் பிற தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் அதே சம்பளங் கள்தான் கொடுத்தது. யாருக்கும் கம்யூன் அளித்த மிக

உயர்ந்த சம்பளம் 6,000 பிராங்குதான்.* பிரதிநிதித்துவ உறுப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குக் கம்யூனல் விதிக்கப்பட்ட மீறமுடியாத ஆணைகளை அன்னியில், இவ்வழியில் பதவி வேட்டைக்கும் தன்னல உயர்வு நாட்டத்துக்கும் சரியானபடி தடை எழுப்பப்பட்டது...''

இங்கே எங்கெல்ஸ் முரணற்ற ஜனநாயகம் ஒருபுறம் சோஷலிசமாய் மாற்றப்படுவதையும், மறுபுறம் சோஷலிசம் அவசியமெனக் கோருவதையும் குறிக்கும் சுவையான எல்லைக் கோட்டினை நெருங்கி வந்துவிடுகிறார். ஏனெனில் அரசை ஒழித்திட அரசு நிர்வாக அலுவல்களை தேச மக்களின் மிகப் பெரும் பகுதியோருடைய—நாளடைவில் ஒவ்வொரு தனியாளுடைய—தகுதிக்கும் ஆற்றலுக்கும் உட்பட்ட எளிய கண்காணிப்பு, கணக்கீடு வேலைகளாய் மாற்றுவது அவசியமாகும். பதவி வேட்டை அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமாயின், அரசு நிர்வாக அலுவல் துறையில் லாபம் தருவனவாய் இல்லாவிட்டாலும் ''மதிப்புக்குரியனவாகிய'' பதவிகள், மிக மிக சுதந்திரமான முதலாளித்துவ நாடுகளில் எல்லாம் இடையறாது நடைபெற்று வருவது போல, வங்கிகளில் அல்லது கூட்டுப்பங்குக் கம்பெனிகளில் கொழுத்த ஆதாயத்துக்குரிய பதவிகள் பெறுவதற்கான உந்து தளங்களாய்ப் பயன்பட முடியாதபடி செய்தாக வேண்டும்.

ஆனால் எங்கெல்ஸ் சில மார்க்சியவாதிகள் செய்யும் பிழையைச் செய்யவில்லை. அதாவது, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை குறித்து சில மார்க்சியவாதிகள் அது முதலாளித்துவத்தில் சாத்தியமற்றதாயும் சோஷலிசத்தில் தேவையில்லாததாயும் விடுவதாய் வாதாடுகிறார்களே, அது

* மதிப்பளவில் சுமார் 2,400 ரூபிள், அல்லது தற்போதுள்ள பரிவர்த்தனை விகிதத்தின்படி சுமார் 6,000 ரூபிள். அரசு அனைத்திலும் அதிகபட்ச சம்பளம் 6,000 ரூபிளே—இது போதுமான தொகை—என்பதற்குப் பதிலாய், உதாரணமாய் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு 9,000 ரூபிள் சம்பளம் அளிக்க வேண்டுமென சில போல்ஷிவிக்குகள் முன்மொழிவது மன்னிக்க முடியாத ஒன்றாகும்.

போன்ற பிழையை எங்கெல்ஸ் செய்யவில்லை. வெளித் தோற்றத்துக்குக் கெட்டிக்காரத்தனமாயினும் உண்மையில் முற்றிலும் தவறான இத்தகைய வாதத்தை அதிகாரிகளுக்கு மிதமான சம்பளம் அளித்திடுவது அடங்கலாய் எந்த ஜன நாயக ஏற்பாடு குறித்தும் கூறலாம்; ஏனெனில், முரணற்ற முழுநிறை ஜனநாயகம் முதலாளித்துவத்தில் சாத்திய மற்றது, சோஷலிசத்தில் எல்லா ஜனநாயகமும் உலர்ந்து உதிர்ந்து விடும்.

மேலும் ஒரு முடி உதிர்வதால் ஒருவன் வழுக்கையாகி விடுவானா என்ற நெடுநாளைய கேலியை ஒத்த குதர்க்கவாதமே ஆகும் இது.

ஜனநாயகத்தைக் கூடுமான உச்ச நிலைக்கு வளர்த்துச் செல்லுதல், இந்த வளர்ச்சிக்கு வேண்டிய வடிவங்களைக் காணுதல், நடைமுறையின் வாயிலாய் இவற்றைச் சோதித்துப் பார்த்தல் என்பன போன்ற இவை யாவும் சமூகப் புரட்சிக் குரிய போராட்டத்தில் அடங்கிய பணிகளில் ஒன்று. தனிப் பட்ட முறையில் எவ்வகையான ஜனநாயகமும் சோஷலிசத் தைக் கொண்டுவந்துவிட முடியாது. ஆனால் எதார்த்த வாழ் வில் ஜனநாயகம் ஒருபோதும் ''தனிப்பட்ட முறையில்'' மேற்கொள்ளப்படுவதில்லை; பிற பலவற்றுடன் ''சேர்ந்த முறையில்தான்'' அது மேற்கொள்ளப்படும். அப்பொழுது அது பொருளாதார வாழ்வின்மீதும் செல்வாக்குச் செலுத் தும், அதனுடைய மாற்றத்தைத் துரிதப்படுத்தும், அதே போல ஜனநாயகத்தின் மீதும் பொருளாதார வளர்ச்சியும் இதையொத்த பிறவும் செல்வாக்கு செலுத்தும். இதுதான் உயிருள்ள வரலாற்றின் இயக்கவியல்.

எங்கெல்ஸ் மேலும் கூறுகிறார்:

> ''...முந்திய அரசு அதிகாரம் இவ்வாறு தகர்க்கப் பட்டு (Sprengung) அதற்குப் பதிலாய் ஒரு புதிய, மெய் யாகவே ஜனநாயகமான அரசு அதிகாரம் நிறுவப் பட்டதை உள்நாட்டுப் போரின் மூன்றாம் பகுதி விளக்க மாய் விவரிக்கிறது. ஆனால் இதன் கூறுகள் சிலவற்றை இங்கே சுருக்கமாய் மீண்டும் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏனெனில் குறிப்பாக ஜெர்மனியில் அரசின்பாலுள்ள மூடநம்பிக்கை தத்துவவியலிலிருந்து பொதுவாய் முதலாளித்துவ வர்க்கத்தாரின் உணர்வுக்கும், பல தொழிலாளர்களின் உணர்வுக்குங்கூட பரவி வந்துவிட்டது. தத்துவவியல் கண்ணேட்டத்தின்படி அரசு என்பது ''கருத்தின் மெய்மையாக்கமாய்'', அல்லது தத்துவவியல் தொடர்களில் பெயர்க்கப்படுமாயின் ''இறையருள் ஆட்சியின் பூலோக உருவாய்'', அழியாத உண்மையும் நீதியும் சித்தி பெறும் அல்லது சித்தி பெற வேண்டிய அரங்கமாய்க் கொள்ளப்பட்டது. இயல்பாகவே இதிலிருந்து அரசிடமும் அரசுடன் சம்பந்தப்பட்ட யாவற்றிடமும் மூடபக்தி பிறக்கிறது. சமுதாயம் அனைத்துக்கும் பொதுவான விவகாரங்களும் நலன்களும் கடந்த காலத்தில் கவனித்துக் கொள்ளப்பட்டது போலவே, அதாவது அரசின் மூலமும் வசதியும் வருவாயும் மிக்க நிலையிலுள்ள அதன் அதிகாரிகள் மூலமுமே அன்றி வேறு எவ்வழியிலும் கவனித்துக் கொள்ளப்பட முடியாது என்பதாய் நினைக்கும்படி மக்கள் தம் பிள்ளைப் பிராயம் முதல் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டதால், இந்த மூடபக்தி மிகச் சுலபமாய் வேரூன்றி விடுகிறது. இந்நிலையில், பரம்பரை முடியரசின் மீதுள்ள நம்பிக்கையிலிருந்து விடுபட்டு ஜனநாயகக் குடியரசு வேண்டுமென முழக்கமிட முற்படுவோர் தாம் அளவிலாத் துணிச்சலுடன் முன்னேறி வந்துவிட்டதாய்க் கருதுகிறுர்கள். ஆனுல் உண்மையில் அரசானது ஒரு வர்க்கம் பிறிதொன்றை ஒடுக்குவதற்கான இயந்திரமேயன்றி வேறல்ல; முடியரசில் மட்டுமின்றி அதே அளவுக்கு ஜனநாயகக் குடியரசிலுங்கூட இதுதான் உண்மை. மிகச் சிறந்த நிலையிலும் அது, வர்க்க மேலாதிக்கத்துக்கான போராட்டத்தில் வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் மரபு வழியில் பெறும் ஒரு கேடே ஆகும். இந்தக் கேட்டின் படுமோசமான கூறுகளை வெற்றிகரப் பாட்டாளி வர்க்கம் முன்பு கம்யூனைது செய்தது

போலவே, எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாய்க் கழித்துக் கட்டிவிட வேண்டியிருக்கும். பிறகு புதிய, சுதந்திர சமூக நிலைமைகளிலே வளர்ந்து ஆளாகும் தலைமுறையினர் இந்த வேண்டாத பிண்ட மான அரசமைப்பு அனைத்தையுமே விட்டொழித்து விடும்படியான நிலையை வந்தடைவார்கள்.''

முடியரசை அகற்றி அதற்குப் பதிலாய்க் குடியரசை நிறுவுகையில் பொதுவில் அரசு குறித்த சோஷலிசக் கோட் பாடுகளை மறந்துவிடக் கூடாதென்று ஜெர்மானியர்களை எங்கெல்ஸ் எச்சரிக்கை செய்தார். இன்று அவருடைய எச் சரிக்கைகள் தெஸெரெத்தேலிகளுக்கும் செர்னேவ்களுக்கும் சாட்டையடி கொடுப்பதாய் விளங்குகின்றன! இந்தக் கனவான்கள் அரசின்பால் தமக்கு இருக்கும் மூடநம்பிக்கை யையும் மூடபக்தியையும் தமது ''கூட்டு அரசாங்கச்'' செயற்பாட்டின் மூலம் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

மேலும் இரு குறிப்புகள்: 1) முடியரசில் மட்டுமின்றி ''அதே அளவில்'' ஜனநாயகக் குடியரசிலும் அரசு ''ஒரு வர்க்கம் பிறிதொன்றை ஒடுக்குவதற்கான இயந்திரமாக வே'' இருக்கிறது என்று எங்கெல்ஸ் கூறியது, சில அராஜக வாதிகள் ''போதனை செய்வது'' போல ஒடுக்குமுறையின் வடிவம் எதுவாயினும் பாட்டாளி வர்க்கத்துக்கு ஒன்றேதான் என்பதாய்ப் பொருள்படவில்லை. வர்க்கப் போராட்டம், வர்க்க ஒடுக்குமுறை இவற்றின் வடிவம் அதிக விரிவும் சுதந்திரமும் கொண்டதாகவும் அதிக அளவுக்கு பகிரங்கமானதாகவும் இருப்பது, பாட்டாளி வர்க்கத்துக்குப் பொதுவில் வர்க்கங் களை ஒழித்திட அது நடத்தும் போராட்டத்தில் பெரிதும் உதவி புரிகிறது.

2) அரசெனும் வேண்டாத பிண்டம் அனைத்தையும் குப்பைக் குழியிலே எறியும் நிலையை ஒரு புதிய தலைமுறை யால்தான் வந்தடைய முடியும் என்பது ஏன்? இந்தக் கேள்வி ஜனநாயகத்தை விஞ்சும் பிரச்சினையுடன் பிணைந்ததாகும். இனி இப்பிரச்சினையைப் பரிசீலிப்போம்.

## 6. ஜனநாயகத்தை விஞ்சுவது குறித்து எங்கெல்ஸ்

''சமூக-ஜனநாயகவாதி'' என்னும் பதம் விஞ்ஞான வழியில் தவறுனதென்று நிலைநாட்டுகையில் எங்கெல்ஸ் இப்பொருள் குறித்து தமது கருத்துக்களைக் கூற நேர்ந்தது.

பல்வேறு பொருள் குறித்து, முக்கியமாய் ''சர்வதேசப்'' பிரச்சினைகள் குறித்து 1870-80ஆம் ஆண்டுகளில் தாம் எழுதிய கட்டுரைகளின் பதிப்பு ஒன்றுக்கு (Internationales aus dem "Volksstaat"[60])* எங்கெல்ஸ் முன்னுரை எழுதினர். இம்முன்னுரை 1894 ஜனவரி 3ஆம் தேதியிடப்பட்டது; அதாவது, அவருடைய மறைவுக்கு ஒன்றரை ஆண்டு முன்னதாய் எழுதப் பெற்றது. தமது எல்லாக் கட்டுரைகளிலும் ''சமூக-ஜனநாயகவாதி'' என்று சொல்லாமல் ''கம்யூனிஸ்டு'' என்னும் பதத்தையே உபயோகித்ததாகவும், அக்காலத்தில் பிரான்சில் புரூதோனியவாதிகளும் ஜெர்மனியில் லஸ்ஸாலியர்களும்[61] தங்களை சமூக-ஜனநாயகவாதிகள் என்பதாய் அழைத்துக் கொண்டதே இதற்குக் காரணம் என்றும் எங்கெல்ஸ் இந்த முன்னுரையில் எழுதினர்.

''...ஆகவே மார்க்சுக்கும் எனக்கும் எங்களுடைய தனிவகைக் கருத்தோட்டத்தைக் குறிக்க இது போன்ற வரையறையற்ற ஒரு பதத்தைக் கையாளுவது சிறிதும் பொருத்தமாய் இருக்கவில்லை'' என்று எங்கெல்ஸ் எழுதினர். ''இன்று நிலைமைகள் மாறிவிட்டன, பொதுவில் சோஷலிஸ்டாய் இருப்பதோடு அல்லாமல் முழுக்க முழுக்க கம்யூனிஸ்டாக உள்ள பொருளாதார வேலைத் திட்டத்தைக் கொண்ட ஒரு கட்சிக்கு, அரசு அனைத்தையும், மற்றும் இதன் விளைவாய் ஜனநாயகத்தையும் கூட விஞ்சுவதை இறுதி அரசியல் குறிக்கோளாய்க் கொண்ட ஒரு கட்சிக்கு இன்னமும் இப்பதம் (''சமூக-ஜனநாயகவாதி'') கருரானதாயில்லை (unpassend, பொருந்துவதா

* ''மக்கள் அரசில்'' வெளிவந்த சர்வதேசப் பிரச்சினைகள் குறித்து.—ப-ர்.

யில்லை) என்றாலுங்கூட, இன்று இதை ஏற்கத்தக்கதாய் (mag passieren) கொள்ளலாம். ஆனால் மெய்யான (அழுந் தம் எங்கெல்சினுடையது) அரசியல் கட்சிகளுடைய பெயர்கள் ஒருபோதும் முழு அளவுக்கும் பொருத்த மாய் இருப்பதில்லை. கட்சி வளர்ந்து செல்கிறது, ஆனால் பெயர் இருந்தபடியே இருக்கிறது.''

இயக்கவியல்வாதியான எங்கெல்ஸ், தமது இறுதி நாள் வரை இயக்கவியலை விட்டு இம்மியும் பிறழாதவராய் இருந் தார். மார்க்சிடமும் என்னிடமும் கட்சிக்கு அற்புதமான, விஞ்ஞான வழியில் துல்லியமான பெயர் இருந்தது; ஆனால் மெய்யான கட்சிதான், அதாவது வெகுஜனப் பாட்டாளி வர்க்கக் கட்சிதான் இருக்கவில்லை என்கிறார். ஆனால் இப் பொழுது (பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில்) மெய் யான கட்சி இருந்தது; ஆனால் அதன் பெயர்தான் விஞ்ஞான வழியில் பிழைபட அமைந்துவிட்டது. பரவாயில்லை, கட்சி வளர்ந்து செல்லும் வரை, விஞ்ஞான வழியில் அதன் பெயர் பிழைபட இருப்பதானது கட்சியிடமிருந்து மறைக்கப்படாத வரை, சரியான வழியில் கட்சி வளர்வதற்கு இப்பெயர் ஒரு தடங்கலாய் அமையாத வரை, இந்தப் பெயர் ''ஏற்கத் தக்கதே'' ஆகும்.

நகைச்சுவையாளர் ஒருவர் போல்ஷிவிக்குகளாகிய நமக்கு எங்கெல்சின் பாணியிலே ஆறுதல் கூற முன்வரலாம்: மெய் யான கட்சி ஒன்று நம்மிடம் இருக்கிறது; இது சிறப்பான வளர்ச்சி கண்டுவருகிறது; ஆகவே அர்த்தமில்லாத, எழிலற்ற ''போல்ஷிவிக்'' என்பது போன்ற பெயருங்கூட, 1903 பிரஸ் ஸெல்ஸ்-லண்டன் காங்கிரசில்[62] நாம் பெரும்பான்மை பெற் றோம் என்ற சந்தர்ப்பவச உண்மையைத் தவிர்த்து வேறு எதனையும் குறிக்காத இப்பெயருங்கூட ''ஏற்புடையதே ஆகு'' மென அவர் கூறலாம். குடியரசுவாதிகளும் ''புரட்சிகரக்'' குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் ஜூலையிலும் ஆகஸ்டிலும் எங்கள் கட்சிமீது கட்டவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறையானது ''போல்ஷிவிக்'' என்னும் பெயரை அனைவரும் மதித்துப் போற்றும் பெயராக்கியுள்ளதாலும்,

அதோடு இந்த அடக்குமுறையானது எங்கள் கட்சி அதன் மெய்யான வளர்ச்சியில் கண்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புடைத்த மகத்தான முன்னேற்றத்தைக் குறிப்பதாலும், இன்று நான் முன்பு ஏப்ரலில் எங்கள் கட்சியின் பெயரை மாற்ற வேண்டுமென்று கூறிய ஆலோசனையை வற்புறுத்தத் தயங்குவேன் என்றே நினைக்கிறேன். என் தோழர்களுக்கு ஒரு ''சமரச வழியை'', அதாவது எங்கள் கட்சியைக் கம்யூனிஸ்டுக் கட்சி என்று அழைத்து அதேபோதில் ''போல்ஷிவிக்குகள்'' என்னும் சொல்லையும் அடைப்புக் குறிகளுக்குள் இருத்திக் கொள்வோமென்று ஆலோசனை கூறலாமென நினைக்கிறேன்...

ஆனால் கட்சியின் பெயர் பற்றிய பிரச்சினை, அரசு குறித்துப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் போக்கு பற்றிய பிரச்சினையைவிட ஒப்பிடற்கரிய சொற்ப முக்கியத்துவமே வாய்ந்தது.

அரசு பற்றிய வழக்கமான வாக்குவாதங்களில் மீண்டும் மீண்டும் ஒரு தவறு இழைக்கப்படுகிறது. இந்தத் தவறு குறித்து எங்கெல்ஸ் எச்சரிக்கை செய்தார்; மேலே போகிற போக்கில் இதனை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். அரசின் ஒழிப்பு ஜனநாயகத்தின் ஒழிப்பையும் குறிப்பதாகும், அரசு உலர்ந்து உதிர்வது ஜனநாயகம் உலர்ந்து உதிர்வதையும் குறிப்பதாகும் என்பது மீண்டும் மறக்கப்பட்டுவிடுவதுதான் இந்தத் தவறு.

இவ்வாறு சொல்வது மேலெழுந்தவாரியாய்ப் பார்க்கையில் மிக விநோதமாகவும், புரிந்து கொள்ள முடியாததாகவும் தோன்றுகிறது. ஏன், சிறுபான்மையோர் பெரும்பான்மையோருக்குக் கீழ்ப்படியும் கோட்பாடு கடைப்பிடிக்கப்படாத ஒரு சமுதாய அமைப்பு உதிக்கப் போவதாய் எதிர்பார்க்கிறோம் என்கிற சந்தேகங்கூட சிலருக்கு நம்மீது எழலாம்—ஏனெனில், இந்தக் கோட்பாட்டை அங்கீகரிப்பது தானே ஜனநாயகம்.

இல்லை, ஜனநாயகமும், சிறுபான்மையோர் பெரும்பான்மையோருக்குக் கீழ்ப்படிதலும் ஒன்றல்ல. சிறுபான்மையோர் பெரும்பான்மையோருக்குக் கீழ்படிதலை அங்கீகரிக்கும்

அரசுதான் ஜனநாயகம் எனப்படுவது; அதாவது, ஒரு வர்க்கம் பிறிதொன்றின்மீது, மக்கள் தொகையில் ஒரு பகுதி பிறிதொன்றின்மீது, முறைப்படி பலாத்காரத்தைப் பிரயோகிப்பதற்கான ஒழுங்கமைப்பே ஜனநாயகம் எனப்படுவது.

அரசை ஒழிப்பதே, அதாவது ஒழுங்கமைந்த முறைப்படியான எல்லா பலாத்காரத்தையும், பொதுவில் மக்களுக்கு எதிராய்ப் பிரயோகிக்கப்படும் எல்லா பலாத்காரத்தையும் ஒழிப்பதே நமது இறுதி இலட்சியம். சிறுபான்மையோர் பெரும்பான்மையோருக்குக் கீழ்ப்படியும் கோட்பாடு அனுசரிக்கப்படாத ஒரு சமுதாய அமைப்பு உதிக்கப் போவதாய் நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நாம் சோஷலிசத்துக்காகப் பாடுபடுகையில், இது கம்யூனிசமாய் வளர்ச்சியுறும், ஆகவே பொதுவில் மக்களுக்கு எதிரான பலாத்காரத்தின் தேவையும், ஒரு மனிதர் பிறிதொருவருக்கும், மக்களின் தொகையில் ஒரு பகுதி பிறிதொன்றுக்கும் கீழ்ப்படியும் தேவையும் அறவே மறைந்து போய்விடும், ஏனெனில் பலாத்காரம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே மக்கள் சமுதாய வாழ்வின் சர்வ சாதாரண நெறிமுறைகளை அனுசரித்து நடக்கப் பழக்கப்பட்டுவிடுவார்கள் என்பதில் எங்களுக்கு ஐயப்பாட்டுக்கு இடமில்லை.

பழக்கத்தின் பாற்பட்ட இந்த அம்சத்தை வலியுறுத்தும் பொருட்டு எங்கெல்ஸ் ஒரு புதிய தலைமுறையினர் குறித்து, "புதிய, சுதந்திர சமுதாய நிலைமைகளில் வளர்ந்து ஆளாகும்" தலைமுறையினர் குறித்துப் பேசுகிறார். இந்தப் புதிய தலைமுறையினர் ஜனநாயக-குடியரசு அமைப்பும் அடங்கலாய் எல்லா வகைப்பட்டதுமான "இந்த வேண்டாத பிண்டமான அரசமைப்பு அனைத்தையுமே விட்டொழித்துவிடும்படியான நிலையை வந்தடைவார்கள்".

இதை விளக்க, அரசு உலர்ந்து உதிர்வதற்குரிய பொருளாதார அடிப்படையைப் பகுத்தாய்வது அவசியமாகும்.

அத்தியாயம் 5

# அரசு உலர்ந்து உதிர்வதற்குரிய பொருளாதார அடிப்படை

கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனம் (பிராக்கேவுக்கு எழுதிய கடிதம், 1875 மே 5, 1891இல் தான் *Neue Zeit*, மலர் 9, இதழ் 1ல் அச்சிடப்பட்டது; ருஷ்யனில் ஒரு தனிப் பதிப்பாய் வந்துள்ளது) என்ற தமது நூலில் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமாய் விளக்கிக் கூறுகிறார். சிறப்புமிக்க இந்நூலின் எதிர்வாதப் பகுதி லஸ்ஸாலியத்தை விமர்சிக்கிறது. இப்பகுதி இந்நூலின் கருப் பகுதியை—அதாவது கம்யூனிசத்தின் வளர்ச்சிக்கும் அரசு உலர்ந்து உதிர்வதற்கும் இடையிலுள்ள தொடர்பைப் பகுத்தாயும் பகுதியை—ஓரளவுக்குப் பின்னுக்குத் தள்ளுவதாய் உள்ளது.

## 1. பிரச்சினையை மார்க்ஸ் எடுத்துரைத்தல்

1875 மே 5ல் பிராக்கேவுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தையும் 1875 மார்ச் 28ல் பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய (மேலே நாம் ஆராய்ந்த) கடிதத்தையும் மேலெழுந்தவாரியாய் ஒப்பிட்டுப் பார்க்கையில், எங்கெல்சைக் காட்டிலும் அதிக அளவு மார்க்ஸ் ''அரசின் ஆதரவாளராய்'' இருந்ததாகவும், அரசெனும் பிரச்சினையில் இவ்விரு ஆசிரியர்களுக்கும் கணிச அளவு கருத்து வேறுபாடு இருந்ததாகவும் தோன்றக் கூடும்.

அரசு பற்றிய எல்லாப் பேச்சையும் அறவே விட்டொழித்து விடும்படி, ''அரசு'' என்னும் சொல்லையே வேலைத்திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு அதற்குப் பதில் ''மக்கட்சமுதாயம்'' என்னும் சொல்லை உபயோகிக்கும்படி பெபெலுக்கு எங்கெல்ஸ் ஆலோசனை கூறினார். அரசெனும் சொல்லின் சரியான பொருளில் கம்யூனது ஓர் அரசாய் இருக்கவில்லை என்பதாகவும் எங்கெல்ஸ் கூறினார். ஆனால் மார்க்ஸ்

''கம்யூனிச சமுதாயத்துக்குரிய வருங்கால அரசு'' என்பதாய்க் கூடப் பேசினர், அதாவது கம்யூனிசத்திலுங்கூட அரசு அவசியமே என்பதாய் அவர் ஏற்றுக் கொண்டதாய்த் தோன்றக் கூடும்.

இது போன்ற கருத்து அடிப்படையிலேயே தவருனது. மேலும் நெருங்கிச் சென்று பரிசீலித்தோமாயின் அரசு குறித்தும் அது உலர்ந்து உதிரும் நிகழ்ச்சி குறித்தும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் கருத்துக்களும் எந்த வேறுபாடுமின்றி முழுதொத்தவையே என்பதும், மேலே குறிப்பிடப்பட்ட மார்க்சின் தொடர் உலர்ந்து உதிர்ந்து கொண்டிருக்கும் நிலையிலுள்ள அரசைத்தான் குறிப்பதாகும் என்பதும் தெளிவாகின்றன.

''உலர்ந்து உதிரும்'' இந்த வருங்கால நிகழ்ச்சி நடைபெறும் தருணத்தை வரையறுத்துக் கூற முடியாது என்பது தெளிவு—இது நீண்டநெடும் நிகழ்ச்சிப்போக்காய் இருக்குமென்பது வெளிப்படையாதலால் இவ்வாறு வரையறுத்துக் கூறுவது மேலும் இயலாததாகிவிடுகிறது. மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இங்கு ஏதோ கருத்து வேறுபாடு இருப்பதாய்த் தோன்றுவதற்குக் காரணம், அவர்கள் வெவ்வேறு துறைகளைப் பரிசீலித்ததும், வெவ்வேறு குறிக்கோள்களைப் பின்பற்றியதும்தான். அரசு சம்பந்தமாய் நிலவிய தப்பெண்ணங்கள் (லஸ்ஸாலே இடத்தும் இவை பெருமளவு இருந்தன) எவ்வளவு அபத்தமானவை என்பதை பெபெலுக்குக் கண்கூடாகவும் எடுப்பாகவும் முழு உருவிலும் தெரியப்படுத்த எங்கெல்ஸ் முற்பட்டார். ஆனல் மார்க்ஸ் இந்தப் பிரச்சினையைப் போகிறபோக்கில் இடைநிகழ்வாகவே குறிப்பிட்டுச் சென்ருர். மார்க்ஸ் கருத்து செலுத்தியது வேருெரு துறை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய துறை.

வளர்ச்சித் தத்துவத்தை—அதன் முரணற்ற, முழுநிறைவான, தேர்ந்தாய்ந்த, சாரப்பொருள் வடிவில்—நவீன முதலாளித்துவத்தின் ஆய்வுக்காகக் கையாளுதலே மார்க்சின் தத்துவம் அனைத்தும். இயற்கையாகவே இந்தத் தத்துவத்தை முதலாளித்துவத்தின் வரப்போகும் வீழ்ச்சி, வருங்

காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சி ஆகிய இரண்டிலும் கையாளும் பிரச்சினை மார்க்சின்முன் எழுந்தது.

அப்படியானால், எந்த உண்மைகளை அடிப்படையாய்க் கொண்டு வருங்காலக் கம்யூனிசத்தின் வருங்கால வளர்ச்சி குறித்த பிரச்சினையைப் பரிசீலிப்பது?

கம்யூனிசமானது முதலாளித்துவத்திலிருந்து தோன்றுவதாகும், வரலாற்று வழியில் முதலாளித்துவத்திலிருந்து வளர்வதாகும், முதலாளித்துவம் பெற்றெடுத்த ஒரு சமுதாய சக்தியின் செயலால் விளைந்த பலனாகும் என்ற உண்மையை அடிப்படையாய்க் கொண்டுதான் இப்பிரச்சினையைப் பரிசீலிக்க முடியும். கற்பனைப் படைப்பை உருவாக்கும் முயற்சியினை, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சியினை மார்க்சிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய் ஒரு புதிய உயிர்வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன்றியது, திட்டவட்டமான இந்தத் திசையிலேதான் மாறுதலடைந்து வந்தது என்பது தெரிந்ததும், உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர் வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினையை எப்படி ஆராய்வாரோ அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிசத்தைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்தார்.

அரசுக்கும் சமுதாயத்துக்குமுள்ள உறவு பற்றிய பிரச்சினையில் கோத்தா வேலைத்திட்டம் செய்திடும் குளறுபடியை மார்க்ஸ் முதற்கண் அகற்றுகிறார். அவர் எழுதியதாவது:

> "...'இன்றைய சமுதாயம்' முதலாளித்துவச் சமுதாயம். நாகரிகமடைந்த எல்லா நாடுகளிலும் இச்சமுதாயம் இருந்து வருகிறது; அதிகமாகவோ குறைவாகவோ மத்தியக் காலக் கூறுகளின் கலப்படத்திலிருந்து விடுபட்டதாகவும், அந்தந்த நாட்டின் தனிப்பட்ட வரலாற்று வளர்ச்சியால் அதிகமாகவோ குறைவாகவோ பாதிக்கப்பட்டதாகவும், அதிகமாகவோ குறைவாகவோ வளர்ச்சியுற்றதாகவும் இருந்து வருகிறது. மறுபுறத்தில் 'இன்றைய அரசு' அந்தந்த நாட்டின் எல்லையைக் கடந்ததும் மாறிவிடுகிறது. இது ஸ்விட்சர்லாந்தில் இருப்ப

திலிருந்து பிரஷ்ய-ஜெர்மன் சாம்ராஜ்யத்தில் மாறுபட்டதாயும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதிலிருந்து இங்கிலாந்தில் மாறுபட்டதாயும் உள்ளது. ஆகவே 'இன்றைய அரசு' என்பது ஒரு கற்பனையே ஆகும்.

''இருப்பினும் நாகரிகமடைந்த பல்வேறு நாடுகளிலும் இருந்துவரும் பல்வேறு அரசுகளும் வடிவில் வெவ்வேறு வகைப்பட்டதாய் இருப்பினும், இவை யாவற்றுக்கும் பொதுவானது என்னவெனில், ஒன்று இன்னொன்றைக் காட்டிலும் அதிகமாகவோ குறைவாகவோ முதலாளித்துவ வழியில் வளர்ச்சி பெற்றிருக்கிறதே தவிர இவை நவீன முதலாளித்துவச் சமுதாயத்தின் அடிப்படையில் அமைந்தவையே. ஆதலால் இவை சில முக்கிய பொது இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இந்த அர்த்தத்தில் 'இன்றைய அரசு' என்பதாய், இவ்வரசின் தற்போதைய மூலவேரான முதலாளித்துவச் சமுதாயம் மடிந்து மறைந்துவிடும் அந்த வருங்கால அரசிலிருந்து வேறுபடுத்திப் பேசுவது சாத்தியமே.

''ஆகவே இக்கேள்வி எழுகிறது: கம்யூனிச சமுதாயத்தில் அரசில் ஏற்படப் போகும் மாறுதல் என்ன? வேறு விதமாய்க் கூறினுல், தற்போதுள்ள அரசின் பணிக்கு ஒப்பான எந்தச் சமுதாயப் பணிகள் அப்பொழுது எஞ்சியிருக்கும்? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான வழியில் மட்டுமே பதிலளிக்க முடியும். 'மக்கள்' என்னும் சொல்லை 'அரசு' என்னும் சொல்லுடன் ஆயிரம் வழியில் இணைப்பதன் மூலம் சாண் அளவுங்கூட இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வினை நெருங்கி வந்துவிட முடியாது.''[63]

''மக்கள் அரசு'' என்ற எல்லாப் பேச்சுகளையும் இவ்விதம் எள்ளி நகையாடியபின் மார்க்ஸ் பரிசீலனைக்குரிய கேள்வியை வகுத்திட்டு, இதற்கு விஞ்ஞான வழிப்பட்ட விடை காண விரும்புவோர் உறுதியாய் நிலைநாட்டப்பெற்ற விவரங்களை மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறுர்.

வளர்ச்சித் தத்துவம் அனைத்தாலும், மொத்தத்தில் விஞ்ஞானத்தாலும் மிகவும் துல்லியமாய் நிலைநாட்டப்பட்டிருக்கும் முதலாவது உண்மை என்னவெனில்—இந்த உண்மையைக் கற்பனாவாதிகள் உதாசீனம் செய்தனர், சோஷலிசப் புரட்சியைக் கண்டு மிரளும் இன்றைய சந்தர்ப்பவாதிகளும் இதை உதாசீனம் செய்து வருகிறார்கள்—முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்வதைக் குறிக்கும், வரலாற்று வழிப்பட்ட, ஒரு தனிக் கட்டம் அல்லது இடைக்காலம் நிச்சயம் இருக்க வேண்டும் என்பதே.

## 2. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லுதல்

மார்க்ஸ் மேலும் கூறியதாவது:

> ‘‘...முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது. இந்த இடைக்காலத்தில் அரசு **பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாகவே** அன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது...’’

தற்கால முதலாளித்துவ சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் ஆற்றும் பாத்திரத்தைப் பற்றிய பகுத்தாய்வின் அடிப்படையிலும், இந்த சமுதாயத்தின் வளர்ச்சி சம்பந்தமான விவரங்களின் அடிப்படையிலும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமுள்ள ஒன்றுக்கொன்று பகைமையான நலன்களிடையே இணக்கம் காண முடியாத நிலையின் அடிப்படையிலும் மார்க்ஸ் இம்முடிவை வந்தடைகிறார்.

இதன்முன் இப்பிரச்சினை பின்வருமாறு கூறப்பட்டது: பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையைப் பெறும் பொருட்டு முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி, அரசியல் அதிகாரம் வென்று தனது புரட்சிகரச் சர்வாதிகாரத்தை நிறுவியாக வேண்டும்.

இப்பொழுது இப்பிரச்சினை ஓரளவு வேறுவிதமாய்க் கூறப்படுகிறது: முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து—இச்சமுதாயம் கம்யூனிசத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறது—கம்யூனிச சமுதாயத்துக்கு மாறிச்செல்வது ''அரசியல் இடைக்காலக் கட்டம்'' ஒன்று இல்லாமல் முடியாத காரியம்; இந்த இடைக்காலக் கட்டத்தில் அரசானது பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாய் மட்டுமே இருக்க முடியும்.

அப்படியானல் இந்தச் சர்வாதிகாரம் ஜனநாயகத்திடம் கொண்டுள்ள உறவு என்ன?

''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது'', ''ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது'' என்று இரு கருத்தோட்டங்களையும் கம்யூனிஸ்டு அறிக்கை ஒருங்கே குறிப்பிடுவதுடன் நின்றுவிடுவதை நாம் ஏற்கனவே கண்டோம். முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்கையில், மேலே கூறப்பட்டவை யாவற்றின் அடிப்படையிலும் ஜனநாயகம் எப்படி மாற்றமடைகிறது என்பதை மேலும் துல்லியமாய் நிர்ணயிக்கலாம்.

முதலாளித்துவ சமுதாயத்தில், மிகவும் சாதகமான நிலைமைகளில் அது வளர்வதாய்க் கொள்வோமாயின், ஜனநாயகக் குடியரசில் ஓரளவு முழுமையான ஜனநாயகம் இருக்கக் காண்கிறோம். ஆனல் இந்த ஜனநாயகம் எப்பொழுதும் முதலாளித்துவச் சுரண்டலால் எழுப்பப்படும் குறுகலான வரம்புகளால் இறுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது நடைமுறையில் எப்பொழுதும் சிறுபான்மையோருக்கான ஜனநாயகமாகத்தான், சொத்துடைத்த வர்க்கங்களுக்கு மட்டுமேயான, செல்வந்தர்களுக்கு மட்டுமேயான ஜனநாயகமாகத்தான் இருக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் சுதந்திரமானது பண்டைக் கிரேக்கக் குடியரசுகளில் இருந்ததே ஏறத்தாழ அதேபோல அடிமையுடையாளர்களுக்கான சுதந்திரமாகத்தான் எப்பொழுதுமே இருந்து வருகிறது. முதலாளித்துவச் சுரண்டலின் நிலைமைகள் காரணமாய் தற்காலக் கூலி அடிமைகள் பட்டினியாலும் வறுமையாலும் நசுக்கப்பட்டு ''ஜனநாயகம் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'',

''அரசியல் குறித்துத் தொல்லைப்பட முடியாதபடி'' அவல நிலையில் இருத்தப்பட்டிருக்கிறார்கள். நிகழ்ச்சிகள் சாதாரண மாய், சமாதான வழியில் ஓடிக் கொண்டிருக்கையில் பெரும்பான்மையான மக்கள் பொது வாழ்விலும் அரசியல் வாழ்விலும் ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டுவிடுகிறார் கள்.

இப்படிச் சொல்வது முற்றிலும் சரியே என்பதை வேறு எதையும்விட ஜெர்மனி மிகவும் தெளிவாய் ஊர்ஜிதம் செய் கிறது எனலாம். எப்படியெனில், அரசியல் சட்ட நெறி அங்கே குறிப்பிடத்தக்க நீண்ட காலத்துக்கு—ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு (1871-1914)—தொடர்ந்து நிலைத் திருந்தது. இந்தக் காலத்தில் ''சட்ட நெறியைப் பயன் படுத்திக் கொள்வதில்'' சமூக-ஜனநாயகவாதிகள் ஏனைய நாடுகளைவிட அங்கே மிகவும் அதிகமாய் சாதனை பெற முடிந்தது. உலகில் வேறு எங்கும் முடிந்ததைவிட அதிகமான விகிதாசாரத்தில் தொழிலாளர்களை அவர்கள் அரசியல் கட்சியாய் ஒன்று திரட்டிக் கொள்ள முடிந்தது.

முதலாளித்துவ சமுதாயத்தில் இதுகாறும் காணப்பட் டிருக்கும் அரசியல் உணர்வு படைத்து ஊக்கமாய்ச் செயல் படும் கூலி அடிமைகளின் இந்த மிக உயர்ந்த விகிதாசாரம் என்ன தெரியுமா? ஒன்றரைக் கோடிக் கூலி உழைப்பாளர் களில் பத்து லட்சம் பேர் சமூக-ஜனநாயகக் கட்சியில் உறுப்பினர்கள்! ஒன்றரைக் கோடி பேரில் முப்பது லட்சம் பேர் தொழிற்சங்கங்களில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்!

மிகச் சொற்பமான சிறுபான்மையோருக்கு ஜனநாயகம், செல்வந்தர்களுக்கு ஜனநாயகம்—இதுதான் முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவும் ஜனநாயகம். முதலாளித்துவ ஜன நாயகத்தின் கட்டமைவை மேலும் நெருங்கிச் சென்று பார்த் தோமாயின், வாக்குரிமையின் ''அற்ப''—அற்பமானவை என்று சொல்லப்படுகிற—விவரங்களிலும் (குடியிருப்புத் தகுதி, பெண்களின் விலக்கம் முதலானவை), பிரதிநிதித்துவ உறுப்புக்களின் செயல்முறையிலும், கூட்ட உரிமைக்கு நடை முறையில் இருந்துவரும் தடங்கல்களிலும் (பொதுக் கட்டி டங்கள் ''ஒட்டாண்டிகளுக்கு'' உதவாதவை!), நாளேடுகளின்

முற்றிலும் முதலாளித்துவ முறையிலான ஏற்பாட்டிலும், இன்ன பிறவற்றிலும் எங்கும் ஜனநாயகத்துக்கு கட்டுக்கு மேல் கட்டு போடப்பட்டிருப்பதைத்தான் காண்கிறேம். ஏழைகளுக்கு இடப்பட்டுள்ள இந்தக் கட்டுகளும் விலக்குகளும் ஒதுக்கல்களும் தடங்கல்களும் அற்பசொற்பமாகவே தோன்றும்; முக்கியமாய் இல்லாமையை நேரில் அறிந்திராதோருக்கும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் அவற்றின் வெகுஜன வாழ்வில் என்றுமே நெருங்கிய தொடர்பு கொண்டிராதோருக்கும் (முதலாளித்துவ நூலாசிரியர்களிலும் அரசியல்வாதிகளிலும் பத்தில் ஒன்பது பேர், ஏன் நூற்றில் தொண்ணூற்று ஒன்பது பேர் என்றுகூடச் சொல்லலாம், இந்த ரகத்தவரே) இப்படித்தான் அற்பசொற்பமாகவே தோன்றும். ஆனல் ஒட்டுமொத்தத்தில் இந்தக் கட்டுகள் ஏழைகளை அரசியலிலிருந்து, ஜனநாயகத்தில் நேரடியாய் பங்கு கொள்வதிலிருந்து ஒதுக்கி வெளியே தள்ளிவிடுகின்றன.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் இந்தச் சாராம்சத்தை மார்க்ஸ் மிக நன்ருய் உணர்ந்திருந்தார். கம்யூனுடைய அனுபவத்தை ஆராய்கையில், ஒடுக்கப்பட்டவர்கள் ஒடுக்கும் வர்க்கத்தின் எந்தப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதிகளாய் அமர்ந்து தம்மை அடக்கியொடுக்க வேண்டுமென்று சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானிக்க அனுமதிக்கப்படுகிறுர்கள் என்று கூறினர்!

தவிர்க்க முடியாதவாறு குறுகலாகவும், ஏழைகளைத் திருட்டுத்தனமாய் ஒதுக்கித் தள்ளிவிடுவதாகவும், ஆகவே கபடமாகவும் முழுக்க முழுக்க பொய்க் கூற்ருகவும் இருக்கும் இந்த முதலாளித்துவ ஜனநாயகத்திலிருந்து முன்னேக்கிச் செல்வதற்குரிய வளர்ச்சி, மிதவாதப் பேராசிரியர்களும் குட்டிமுதலாளித்துவச் சந்தர்ப்பவாதிகளும் நம்மை நம்ப வைக்க விரும்புவது போல, எளிய முறையிலும் நேரடியாகவும் ஒழுங்காகவும் ''மேலும் மேலும் கூடுதலான ஜனநாயகத்தை'' நோக்கி நடைபெறுவதில்லை. இல்லை, முன்னேக்கிச் செல்கிற வளர்ச்சியானது, அதாவது கம்யூனிசத்துக்கான வளர்ச்சியானது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின்

வாயிலாகவே நடைபெறுகிறது, வேறு எவ்வழியிலும் அல்ல. ஏனெனில் முதலாளித்துவச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பை வேறு யாராலும் அல்லது வேறு எந்த வழியிலும் தகர்த்திட முடியாது.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது, அதாவது ஒடுக்குமுறையாளர்களை அடக்குவதற்காக ஒடுக்கப்பட்டவர்களுடைய முன்னணிப் படை ஆளும் வர்க்கமாய் அமையும் ஒழுங்கமைப்பானது ஜனநாயகத்தை விரிவாக்குவதோடு மட்டும் நின்றுவிடக் கூடியதல்ல. ஜனநாயகத்தை பிரம்மாண்டமான அளவில் விரிவாக்குவதுடன், பணமூட்டைகளுக்கான ஜனநாயகமாய் இராது முதன்முதலாய் ஏழைகளுக்கான ஜனநாயகமாய், மக்களுக்கான ஜனநாயகமாய் ஆக்குவதுடன் கூடவே ஒடுக்குமுறையாளர்களும் சுரண்டலாளர்களும் முதலாளிகளுமானோரின் சுதந்திரத்துக்குப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் வரிசையாகப் பல கட்டுகளை விதித்திடுகிறது. மனித குலத்தைக் கூலி அடிமை முறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு இவர்களை நாம் அடக்கியாக வேண்டும், இவர்களுடைய எதிர்ப்பை வன்முறை கொண்டு நசுக்கியாக வேண்டும். அடக்கியாளுதல் இருக்கும்வரை, பலாத்காரம் இருக்கும் வரை சுதந்திரத்துக்கோ ஜனநாயகத்துக்கோ இடமில்லை என்பது தெளிவு.

பெபெலுக்கு எழுதிய கடிதத்தில் எங்கெல்ஸ் இதனை மிகச் சிறப்பான முறையில் எடுத்துரைத்தார். ''பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு தேவைப்படுவது தனது எதிராளிகளை அடக்கி இருத்துவதற்காகவே அன்றி சுதந்திரத்தின் நலன்களுக்காக அல்ல; சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகியதும் அரசு அரசாய் இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது'' என்று இக்கடிதத்தில்[64] எங்கெல்ஸ் கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

மிகப் பெருவாரியான மக்களுக்கு ஜனநாயகம், சுரண்டலாளர்களையும் மக்களின் ஒடுக்குமுறையாளர்களையும் வன்முறை கொண்டு அடுக்குதல், அதாவது ஜனநாயகத்திலிருந்து விலக்கி ஒதுக்குதல்—முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லுகையில் இதுவே ஜனநாயகத்தில் ஏற்படும் மாறுதல்.

கம்யூனிச சமுதாயத்தில்தான் — முதலாளிகளுடைய எதிர்ப்பு அடியோடு நசுக்கப்பட்டு, முதலாளிகள் மறைந்து போய், வர்க்கங்கள் இல்லாமற் போய்விடும் (அதாவது, சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே சமுதாய உற்பத்திச் சாதனங்களுடன் அவர்களுக்குள்ள உறவு சம்பந்தமாய் எந்தப் பாகுபாடும் இல்லாமற் போய்விடும்) அப்பொழுது மட்டும் தான் "அரசு... இருப்பதற்கு முடிவு ஏற்படுகிறது", "சுதந்திரம் குறித்துப் பேசுவது சாத்தியமாகிறது". அப்பொழுது தான் மெய்யாகவே முழுநிறைவான ஜனநாயகம், விதிவிலக்கு எதுவுமில்லாத ஜனநாயகம் சாத்தியமாகிக் கைவரப் பெறுகிறது. அப்பொழுதுதான் ஜனநாயகம் உலர்ந்து உதிரத் தொடங்கும். முதலாளித்துவ அடிமை வாழ்விலிருந்தும் முதலாளித்துவச் சுரண்டலின் சகிக்கவொண்ணுத கொடுமைகளிலிருந்தும் மிருகத்தனத்திலிருந்தும் அபத்தங்களிலிருந்தும் இழுக்குகளிலிருந்தும் மக்கள் விடுபட்டு, பல நூறு ஆண்டுகளாய் அறிந்துள்ள ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் அறிச்சுவடி நீதிவிளக்கங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்துள்ள சமுதாய ஒட்டுறவின் சர்வசாதாரண விதிகளைப் பற்றியொழுகச் சிறிது சிறிதாய்ப் **பழகிக் கொள்வார்கள்**. பலாத்காரம் இல்லாமலே, பலவந்தம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே, பலவந்தத்துக்கான அரசு எனப்படும் **தனிவகை இயந்திரம் இல்லாமலே** அவர்கள் இவ்விதிகளைப் பற்றியொழுகப் பழகிக்கொள்வார்கள்.

"அரசு உலர்ந்து உதிர்கிறது" என்னும் தொடர் நன்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தொடர் இந் நிகழ்ச்சிப்போக்கின் படிப்படியாய் நடந்தேறும் தன்மை, தன்னியல்பாய்த் தானே நடந்தேறும் தன்மை ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாய் உள்ளது. பழக்கத்தால் மட்டுமே இது போன்ற விளைவு ஏற்பட முடியும், ஐயப்பாட்டுக்கு இடமின்றி நிச்சயம் ஏற்படவும் செய்யும். ஏனெனில் சுரண்டல் இல்லாத போது, ஆத்திரம் உண்டாக்கக்கூடியதும் கண்டனத்தையும் கலகத்தையும் எழச் செய்து அடக்க வேண்டியதற்கான தேவையைத் தோற்றுவிப்பதும் இல்லாதபோது, மக்கள்

எப்படித் தயக்கமின்றி சமுதாய ஒட்டுறவுக்கு அவசியமான விதிகளை பற்றியொழுகப் பழகிக் கொண்டுவிடுகிறார்கள் என்பதற்கு லட்சோப லட்சக் கணக்கான எடுத்துக்காட்டுகளை நம்மைச் சுற்றிலும் காண்கிறோம்.

இவ்வாறாக, முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்கும் ஜனநாயகம் வெட்டிக் குறுக்கப்பட்ட, அலங்கோலமான, பொய்யான ஜனநாயகம்; செல்வந்தர்களுக்கு மட்டுமேயான, சிறுபான்மையோருக்கான ஜனநாயகம். கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லும் காலத்துக்குரிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் முதன்முதலாய் மக்களுக்கான, பெரும்பான்மையோருக்கான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கிறது; அதனுடன் கூடவே சுரண்டலாளர்களான சிறுபான்மையோரைத் தேவையான அளவுக்கு அடக்கவும் செய்கிறது. மெய்யாகவே முழு நிறைவான ஜனநாயகத்தைத் தோற்றுவிக்க வல்லது கம்யூனிசம் ஒன்று மட்டுமே. எவ்வளவுக்கு எவ்வளவு இது முழு நிறைவானதாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு சீக்கிரமாய் அது தேவையற்றதாகி தானாகவே உலர்ந்து உதிர்கிறது.

வேறு விதமாய்க் கூறினால், முதலாளித்துவத்தில் அரசெனும் சொல்லின் முறையான அர்த்தத்தைக் குறிக்கும், அதாவது ஒரு வர்க்கம் பிறிதொன்றை, அதுவும் சிறுபான்மையோர் பெரும்பான்மையோரை அடக்குவதற்கான தனிவகைப் பொறியமைவான அரசு இருக்கிறது. சுரண்டப்படும் பெரும்பான்மையோரைச் சுரண்டும் சிறுபான்மையோர் முறையாக அடக்குவதென்னும் இத்தகைய செயல் வெற்றி பெற இயற்கையாகவே, அடக்கியொடுக்கும் பணியில் அளவு கடந்த மூர்க்கமும் மிருகத்தனமும் அவசியமாகி விடுகிறது; இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாகிவிடுகிறது. இந்த வெள்ளத்தில் நடந்துதான் மனிதகுலம் அடிமை முறை, பண்ணையடிமை அமைப்பு, கூலியுழைப்பு ஆகியவற்றின் வழியே சென்று கொண்டிருக்கிறது.

மேலும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்கையிலும் அடக்க வேண்டியது இன்னும் தேவையாகவே இருக்கிறது. ஆனால் இப்பொழுது அது சுரண்டப்பட்ட

பெரும்பான்மையோர் சுரண்டும் சிறுபான்மையோரை அடக்குவதாகிறது. அடக்குவதற்கான ஒரு தனிவகை இயந்திரம், ஒரு தனிவகைப் பொறியமைவு, ''அரசு'' இன்னமும் தேவையாகவே இருக்கிறது, ஆனால் இப்பொழுது அது மாறிச் செல்லும் கட்டத்துக்குரிய அரசாய் அமைகிறது. அரசென்னும் சொல்லின் சரியான பொருளில் இனி அது அரசாய் இல்லை. ஏனெனில் சிறுபான்மையோரான சுரண்டலாளர்களை நேற்றைய கூலி அடிமைகளான பெரும்பான்மையோர் அடக்குவது ஒப்பளவில் மிகச் சாதாரணமான, எளிதான, இயற்கையான பணி ஆகுமாதலால், அடிமைகள் அல்லது பண்ணையடிமைகள் அல்லது கூலி உழைப்பாளர்களின் எழுச்சிகளை அடக்குவதற்கு வேண்டியிருந்ததைப் போலல்லாது மிகச் சொற்ப அளவே இரத்தம் சிந்தும்படி இருக்கும், மனித குலத்துக்கு மிகச் சொற்ப சேதமே உண்டாகும். ஜனநாயகத்தை மிகவும் விரிவாக்கி மக்களில் மிகப் பிரம்மாண்டமான பெரும்பான்மையோருக்குக் கிட்டச் செய்வது இப்பணிக்கு ஒவ்வாததல்ல ஆதலால், அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவின் தேவை மறையத் தொடங்கிவிடும். இயல்பாகவே சுரண்டலாளர்களால் மிகச் சிக்கலான பொறியமைவு ஒன்று இல்லாமல் மக்களை அடக்க முடியவில்லை. ஆனால் மக்களால் மிக எளிய ''பொறியமைவு'' கொண்டே, சுரண்டலாளர்களை அடக்கிவிட முடியும்; பெருமளவுக்குப் ''பொறியமைவு'' இல்லாமலே, ஒரு தனிவகை இயந்திரம் இன்றியே, சாதாரண ஏற்பாடான ஆயுதமேந்திய மக்களின் ஒழுங்கமைப்பைக் கொண்டே (தொழிலாளர்கள், படையாட்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளைப் போன்ற ஒழுங்கமைப்பு என்று முன்னோடிச் சென்று வரப்போவதைக் குறிப்பிடலாம்), இப்பணியைச் செய்துவிடலாம்.

முடிவில், கம்யூனிசம் ஒன்று மட்டும்தான் அரசை அறவே தேவையற்றதாக்கும். ஏனெனில் கம்யூனிசத்தில் அடக்கப்பட வேண்டியவர்கள் யாரும் இல்லை — ஒரு வர்க்கம் என்ற அர்த்தத்தில், மக்களில் குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு எதிராய் முறையான போராட்டம் நடத்துவது என்ற அர்த்தத்தில் ''யாரும் இல்லை.'' நாங்கள் கற்பனாவாதிகளல்ல; தனி நபர்கள்

அடாச்செயல்கள் புரியக்கூடும், இது சாத்தியமே, தவிர்க்க முடியாததே என்பதையோ, இத்தகைய அடாச்செயல்களைத் தடுத்து நிறுத்துவது அவசியமே என்பதையோ நாங்கள் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆனால் முதலாவதாக, அடக்குவதற்கான ஒரு தனிவகைப் பொறியமைவு, ஒரு தனிவகை இயந்திரம் இதற்குத் தேவையில்லை; ஆயுதமேந்திய மக்கள் தாமே இதனைச் செய்துவிடுவார்கள் — நாகரிகமடைந்த மக்கள் திரள் எதுவும் நவீன சமுதாயத்தில் உடனே தலையிட்டு அடிதடிச் சண்டையை நிறுத்துவது போல, அல்லது பெண் ஒருத்தி தாக்கப்படுவதைத் தடுப்பது போல, அவர்கள் இதனைச் சுலபமாகவும் உடனடியாகவும் செய்து விடுவார்கள். இரண்டாவதாக, சமுதாய ஒட்டுறவுக்குரிய விதிகளை மீறுவதால் வரும் விளைவான இந்த அடாச்செயல்களின் அடிப்படை சமுதாயக் காரணம் மக்கள் உட்படுத்தப்பட்டுள்ள சுரண்டலும் அவர்களை வதைக்கும் இல்லாமையும் வறுமையுமேதான் என்று நமக்குத் தெரியும். இந்தப் பிரதான காரணம் நீக்கப்பட்டதும் அடாச்செயல்கள் தவிர்க்க முடியாதவாறு ''உலர்ந்து உதிரத்'' தொடங்கிவிடும். எவ்வளவு விரைவாய், எந்த வரிசையில் நடந்தேறும் என்பது தெரியாது, ஆனால் அவை உலர்ந்து உதிர்ந்துவிடும் என்பது நமக்குத் தெரியும். அவை உலர்ந்து உதிரும்போது அரசும் உலர்ந்து உதிரும்.

கற்பனுவாதப் படைப்புகளை எழுப்பாமல், மார்க்ஸ் இந்த வருங்காலத்தைப் பற்றி இப்பொழுது வரையறுத்துச் சொல்லக்கூடியதை, அதாவது கம்யூனிச சமுதாயத்தின் கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்கும் (படிகள், நிலைகள்) இடையிலுள்ள வேறுபாட்டை மேலும் பூரணமாய் வரையறுத்துச் சொன்னார்.

### 3. கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டம்

சோஷலிசத்தில் தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் ''குறைக்கப்படாத'' அல்லது ''முழுமையான பயன்'' கிடைக்குமென்று லஸ்ஸால் கூறிய கருத்து தவறென்பதை

நிரூபிக்க கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனத்தில் மார்க்ஸ் விவரமான பரிசீலனையில் இறங்குகிறார். சமுதாயத்தினுடைய சமூக உழைப்பு அனைத்திலுமிருந்து காப்பு நிதி ஒன்றைக் கழிக்க வேண்டுமென்பதை, பொருளுற்பத்தியை விரிவாக்குவதற்கும், இயந்திரங்களின் ''தேய்மானத்துக்கு'' மாற்றீடு செய்வதற்கும், இன்ன பிறவற்றுக்குமான நிதிகளைக் கழிக்க வேண்டுமென்பதை மார்க்ஸ் தெளிவுபடுத்துகிறார். பிறகு நுகர்வுச் சாதனங்களிலிருந்து நிர்வாகச் செலவுகளுக்கும், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், முதிய வயதினர் இல்லங்கள் முதலான பலவற்றுக்கும் வேண்டிய நிதியைக் கழிக்க வேண்டும்.

லஸ்ஸாலின் தெளிவற்ற, குழப்படியான, பொதுத் தொடருக்கு (''தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பின் முழுமையான பயன்'') பதிலாய், மார்க்ஸ் சோஷலிச சமுதாயம் அதன் விவகாரங்களை உண்மையில் எப்படி நிர்வகித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பது குறித்து நிதானித்து மதிப்பீடு செய்கிறார். முதலாளித்துவம் இல்லாது ஒழிந்து விடும் ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமைகளை மார்க்ஸ் ஸ்தூலமான முறையில் பகுத்தாராய முற்படுகிறார். அவர் கூறுவதாவது:

> ''இங்கு நாம் ஆராய வேண்டியிருப்பது (தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தைப் பகுத்தாராய்கையில்) தனது சொந்த அடித்தளங்களின் மீது வளர்ந்தெழுந்துள்ள ஒரு கம்யூனிச சமுதாயமல்ல; மாறாக, முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து வெளித்தோன்றுவதும், ஆகவே தான் உதித்த அந்தப் பழைய சமுதாயத்தினிடமிருந்து பெறப்பட்ட பிறவிக்குறிகள் ஒவ்வொரு வழியிலும்—பொருளாதார வழியிலும் தார்மிக வழியிலும் அறிவு வழியிலும்—இன்னமும் பதிந்திருப்பதுமான கம்யூனிச சமுதாயத்தையே இங்கு நாம் ஆராய்கிறோம்.''

இந்தக் கம்யூனிச சமுதாயத்தைத்தான், முதலாளித்துவத்திலிருந்து பிறந்து இப்பொழுதுதான் வெளியே வந்து

அந்தப் பழைய சமுதாயத்தின் பிறவிக்குறிகள் எல்லா வழியிலும் பதிந்திருக்கும் இந்த சமுதாயத்தைத்தான் மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிடுகிறுர்.

உற்பத்திச் சாதனங்கள் இப்பொழுது தனியாட்களது தனியுடைமையாய் இல்லை. உற்பத்திச் சாதனங்கள் சமுதாயம் அனைத்தின் உடைமையாகிவிட்டன. சமூகத்துக்குத் தேவையான வேலையில் ஒரு பகுதியைச் செய்திடும் சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரும் இவ்வளவு வேலையைச் செய்திருப்பதாய்க் கூறும் சான்றிதழ் ஒன்றைச் சமுதாயத்திடமிருந்து பெற்றுக் கொள்கிறுர். இச்சான்றிதழைக் கொண்டு இதற்கு இணையான அளவுக்கு அவர் நுகர்வுப் பண்டங்களின் பொதுக் களஞ்சியத்திலிருந்து பண்டங்கள் பெறுகிறுர். பொது நிதிக்குச் செல்லும் உழைப்பின் அளவு கழித்தெடுக்கப்பட்டபின், ஒவ்வொரு தொழிலாளியும் சமுதாயத்திற்குத் தான் அளித்ததற்குச் சமமான அளவில் அதனிடமிருந்து பெற்றுக் கொள்கிறுர்.

''சமத்துவம்'' அரசோச்சுவதாகவே தோன்றுகிறது.

ஆனல் இத்தகைய சமுதாய அமைப்பினை (வழக்கமாய் இது சோஷலிசம் என்று அழைக்கப்படுகிறது, மார்க்ஸ் இதனைக் கம்யூனிசத்தின் முதற் கட்டமெனக் குறிப்பிடுகிறுர்) கருத்தில் கொண்டு லஸ்ஸால் இது ''சமத்துவ வினியோகமாகும்'' என்றும், ''உழைப்பின் உற்பத்திப் பொருளில் சம பங்கு பெற எல்லோருக்கும் சம உரிமை அளிப்பதாகும்'' என்றும் கூறும் போது, லஸ்ஸால் தவறிழைக்கிறுர்; இந்தத் தவற்றை மார்க்ஸ் அம்பலம் செய்கிறுர்.

''சம உரிமை'' இங்கு இருக்கிறதுதான், ஆனல் இன்னமும் இது ''முதலாளித்துவ உரிமையேதான்'', ஒவ்வொரு உரிமையையும் போல சமத்துவமின்மையைக் கொண்டதேதான் என்று மார்க்ஸ் கூறுகிறுர். ஒவ்வொரு உரிமையும் உண்மையில் ஒரே மாதிரி இல்லாத, ஒருவருக்கொருவர் சமமாயில்லாத வெவ்வேருனோருக்கும் சம அளவீட்டைப் பயன்படுத்துகிறது. ஆகவே ''சம உரிமை'' என்பது உண்மையில் சமத்துவத்துக்குப்

பங்கம் செய்கிறது, அநீதியாகிவிடுகிறது. ஒவ்வொருவரும் ஏனையவர் எவரையும் போல அதே அளவு சமூக உழைப்பு புரிந்து, சமூக உற்பத்திப் பொருளில் (மேற்கூறியபடி கழித்தபின் எஞ்சுவதில்) சமப் பங்கு பெறுகிறார்.

ஆனால் எல்லோரும் ஒரே மாதிரி இருக்கவில்லை: ஒருவர் வலுவானவர், மற்றொருவர் பலவீனமானவர்; ஒருவர் கல்யாணமானவர், மற்றொருவர் ஆகாதவர்; ஒருவருக்கு அதிக குழந்தைகள், மற்றொருவருக்கு அவ்வளவு இல்லை... மார்க்ஸ் இதிலிருந்து எடுத்துரைக்கும் முடிவு வருமாறு:

> "...சமமான உழைப்பை அளித்து, ஆகவே சமுதாய நுகர்வு நிதியிலிருந்து சமமான பங்கு பெறுவதன் மூலம், உண்மையில் ஒருவர் பிறிதொருவரைவிட அதிகம் பெறவும், ஒருவர் பிறிதொருவரைவிடச் செல்வந்தராய் இருக்கவும், இன்ன பலவாறாகவும் நேர்கிறது. இந்தக் குறைபாடுகளைத் தவிர்க்க, உரிமை சமமாய் இருப்பதற்குப் பதில் சமமின்றி இருத்தல் வேண்டும்..."

ஆகவே கம்யூனிசத்தின் முதற் கட்டம் இன்னமும் நீதியும் சமத்துவமும் அளித்திட முடியாத நிலையிலேதான் இருக்கும்: செல்வத்தில் வேறுபாடுகள், நியாயமில்லா வேறுபாடுகள் இன்னமும் இருந்து கொண்டுதான் இருக்கும், ஆனால் மனிதனை மனிதன் சுரண்டுதல் முடியாததாகிவிடும், ஏனென்றால் உற்பத்திச் சாதனங்களை — ஆலைகளையும், இயந்திரங்களையும், நிலத்தையும், பிறவற்றையும்—கைப்பற்றி அவற்றைத் தனியுடைமையாக்கிக் கொள்வது முடியாததாகிவிடும். பொதுவில் "சமத்துவம்" குறித்தும் "நீதி" குறித்தும் லஸ்ஸால் கூறும் தெளிவற்ற குட்டிமுதலாளித்துவத் தொடர்களைத் தகர்த்திட்டு, மார்க்ஸ் கம்யூனிச சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையைத் தெளிவுபடுத்துகிறார். கம்யூனிச சமுதாயம் தனிநபர்களால் உற்பத்திச் சாதனங்கள் கைப்பற்றப்பட்டு விட்டதிலுள்ள "அநீதியை" மட்டும்தான் முதலில் ஒழிக்கும் படி நிர்ப்பந்திக்கப்படுகிறது என்பதையும், மற்றோர் அநீதியை, அதாவது நுகர்வுப் பண்டங்களை (தேவைகளுக்கு ஏற்ப அல்லாமல்) "ஆற்றிய உழைப்பின் அளவுக்கு ஏற்ப" வினியோ

கிப்பதிலுள்ள அநீதியை அதனுல் உடனடியாக அகற்ற முடிய வில்லை என்பதையும் மார்க்ஸ் காட்டுகிருர்.

முதலாளித்துவப் பேராசிரியர்களும் ''நமது'' துகானும் அடங்கலான கொச்சைவாதப் பொருளியலாளர்கள் ஓயாமல் சோஷலிஸ்டுகள்மீது குற்றம் சாட்டுகிருர்கள்; சோஷலிஸ்டுகள் மக்களிடையிலான சமத்துவமின்மையை மறந்துவிடுவதாகவும் இந்த சமத்துவமின்மையை அகற்றிவிடலாமெனக் ''கனவு காண்பதாகவும்'' கூறுகிருர்கள். இந்தக் குற்றச்சாட்டு முதலாளித்துவச் சித்தாந்தவாதிகளுடைய அளவுகடந்த அறியாமையைத்தான் காட்டுகிறது என்பது விளங்குகிறது.

சிறிதும் தவருது உன்னிப்புடன் மார்க்ஸ் மனிதர்களிடையிலான தவிர்க்கமுடியாத சமத்துவமின்மையைக் கணக்கில் எடுத்துக் கொள்வதுடன் நிற்காது, உற்பத்திச் சாதனங்களை சமுதாயம் அனைத்துக்குமுரிய பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும் (சகஜமாய் இது ''சோஷலிசம்'' என்றழைக்கப்படுகிறது) வினியோகத்திலுள்ள குறைபாடுகளும் ''முதலாளித்துவ உரிமையின்'' சமத்துவமின்மையும் அகற்றப்பட்டுவிடுவதில்லை என்பதையும், ''ஆற்றப்படும் உழைப்புக்கு ஏற்ப'' உற்பத்திப் பொருட்கள் பகிர்ந்து கொள்ளப்படும் வரை இவை தொடர்ந்து நிலவும் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்கிருர். மேலும் தொடர்ந்து மார்க்ஸ் கூறுவதாவது:

> ''...இந்தக் குறைபாடுகள் கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் தவிர்க்கமுடியாதவை, ஏனெனில் இச்சமுதாயம் நீடித்த பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் பிறந்து வெளிவந்திருக்கிறது. உரிமையானது ஒருபோதும் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பையும் இதனுல் நெறிப்படுத்தப்பட்ட அதன் கலாசார வளர்ச்சி நிலையையும் காட்டிலும் உயர்வானதாகிவிட முடியாது...''

ஆக, கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டத்தில் (சாதாரணமாய் இது சோஷலிசம் என்றழைக்கப்படுகிறது) ''முத

லாளித்துவ உரிமை'' அதன் முழு அளவிலும் ஒழிக்கப்பட்டு விடுவது இல்லை; பகுதி அளவுக்கே, இதுகாறும் சித்திபெற்றுள்ள பொருளாதாரப் புரட்சிக்கு ஏற்ற அளவுக்கே, அதாவது உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்த மட்டிலுமே ஒழிக்கப்படுகிறது. ''முதலாளித்துவ உரிமை'' இவற்றைத் தனி நபர்களுடைய தனிவுடைமையாய் அங்கீகரிக்கிறது. சோஷலிசம் இவற்றைப் பொதுவுடைமையாய் மாற்றுகிறது. அந்த அளவுக்கு — அந்த அளவுக்கு மட்டுமே — ''முதலாளித்துவ உரிமை'' மறைகிறது.

ஆனால் அதன் மற்ெருரு பகுதியைப் பொறுத்தவரை அது தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது; சமுதாய உறுப்பினர்களிடையே உற்பத்திப் பொருட்களின் வினியோகத்திலும் உழைப்பைப் பிரித்தளிப்பதிலும் ஒழுங்கியக்கியாய் (நிர்ணயிக்கும் காரணியாய்) தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. ''வேலை செய்யாதவன் உண்ணவும் வேண்டாம்'' என்னும் சோஷலிசக் கோட்பாடு ஏற்கெனவே சித்திபெற்றுவிட்டது; ''சம அளவிலான உழைப்புக்கு சம அளவிலான உற்பத்திப் பொருட்கள்'' என்னும் மற்ெருரு சோஷலிசக் கோட்பாடும் ஏற்கெனவே சித்திபெற்றுவிட்டது. ஆயினும் இது இன்னமும் கம்யூனிசமாகிவிடவில்லை; சமமல்லாதவர்களுக்கு, சமமில்லா (மெய்யாகவே சமமில்லா) உழைப்பு அளவுகளுக்கு ஊதியமாய்ச் சம அளவிலான உற்பத்திப் பொருட்களை அளிக்கும் ''முதலாளித்துவ உரிமை'' இன்னும் ஒழிக்கப்பட்டாகவில்லை.

இது ஒரு ''குறைபாடே'', ஆனால் கம்யூனிசத்தின் முதற் கட்டத்தில் இது தவிர்க்கமுடியாதது என்று மார்க்ஸ் கூறுகிருர். ஏனெனில் கற்பனுவாதத்தில் ஈடுபடாதிருக்க வேண்டுமாயின், முதலாளித்துவத்தை வீழ்த்தியதும் மக்கள் உரிமைத் தராதரம் எதுவும் பாராது சமுதாயத்துக்காக வேலை செய்ய உடனடியாய்க் கற்றுக் கொண்டுவிடுவார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. தவிரவும் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டதும் இத்தகைய ஒரு மாறுதல் ஏற்படுவதற்கு வேண்டிய பொருளாதார முன்னிபந்தனைகள் உடனடியாய்ப் படைக்கப் பட்டுவிடுவதில்லை.

''முதலாளித்துவ உரிமையின்'' தராதரத்தைத் தவிர இப்பொழுது வேறு தராதரம் இருக்கவில்லை. ஆகவே இந்த அளவுக்கு அரசுக்குரிய தேவை இன்னும் இருந்து வருகிறது; உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமையைப் பாதுகாப்பதுடன், உழைப்பிலும் உற்பத்திப் பொருட்களின் வினியோகத்திலும் சமத்துவத்தைப் பாதுகாக்கக்கூடிய அரசு தேவைப்படுகிறது.

முதலாளிகளும் வர்க்கங்களும் இனி இல்லையாதலால் அந்த அளவுக்கு அரசு உலர்ந்து உதிர்கிறது. ஆகவே எந்த வர்க்கமும் இனி அடக்கப்பட முடியாது.

ஆனல் அரசு இன்னும் அறவே உலர்ந்து உதிர்ந்துவிடவில்லை, ஏனெனில் உண்மையில் சமத்துவமின்மையைப் புனிதமாக்கிடும் ''முதலாளித்துவ உரிமையைப்'' பாதுகாக்க வேண்டியிருக்கிறது. அரசு அறவே உலர்ந்து உதிர முழு நிறைவான கம்யூனிசம் அவசியமாகும்.

### 4. கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டம்

மார்க்ஸ் தொடர்ந்து கூறுகிருர்:

> ''...கம்யூனிச சமுதாயத்தின் உயர் கட்டத்தில், தனிநபரை உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படுத்தி அடிமைத் தளையிடுவதும் அதனுடன்கூட மூளை உழைப்புக்கும் உடலுழைப்புக்கும் இடையிலான எதிர்நிலையும் மறைந்தபின், உழைப்பானது பிழைப்புக்கான சாதனமாய் மட்டுமின்றி வாழ்வின் முதற்பெரும் தேவையுமாகியபின், தனிநபருடைய சர்வாம்ச வளர்ச்சியோடுகூட உற்பத்தி சக்திகளும் அதிகரித்துவிட்டபின், பொதுச் சமுதாயச் செல்வத்தின் அருவிகள் எல்லாம் மேலும் அபரிமிதமாய்ப் பெருக்கெடுத்து ஓடுகையில்—அப்பொழுதுதான் முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு முழுமையாகக் கடக்கப்பட்டு, சமுதாயம் தன் பதாகைகளில் 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப' என்பதாய்ப் பொறித்துக் கொள்ளும்!''

''சுதந்திரம்'', ''அரசு'' இவ்விரு சொற்களையும் இணைத்து முடிபோடுவதிலுள்ள அபத்தத்தை எள்ளிநகையாடும் எங்கெல்சின் உரைகள் எவ்வளவு சரியானவை என்பதை இப்பொழுதுதான் நம்மால் முழு அளவுக்கு உணர முடிகிறது. அரசு இருக்கும்வரை சுதந்திரம் இல்லை. சுதந்திரம் வந்ததும் அரசு இல்லாமற் போய்விடும்.

அரசு பூரணமாய் உலர்ந்து உதிர்வதற்கு அடிப்படையாய் அமைவது கம்யூனிசத்தின் மிக உயர்ந்த வளர்ச்சிக் கட்டமாகும். இக்கட்டத்தில் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை மறைந்துவிடுகிறது; தற்காலச் சமுதாய சமத்துவமின்மைக்குத் தலைமையான ஆதாரங்களில் ஒன்று இவ்வாறு இக்கட்டத்தில் மறைந்துவிடுகிறது. உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாய் மாற்றுவதால் மட்டும், முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதால் மட்டும் உடனடியாக எவ்வகையிலும் இந்தத் தலைமையான ஆதாரத்தை அகற்றிவிட முடியாது.

முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதானது உற்பத்தி சக்திகள் பிரம்மாண்டமாய் வளர்ச்சியுறுவதைச் சாத்தியமாக்குகிறது. முதலாளித்துவம் ஏற்கெனவே எவ்வளவு நம்பமுடியாத அளவுக்கு இந்த வளர்ச்சியைத் தடுத்து இழுக்கிறதென்பதைக் காணும்போது, ஏற்கெனவே கை வரப்பெற்றுள்ள தொழில்நுட்ப நிலையின் அடிப்படையில் எவ்வளவு அதிக முன்னேற்றத்தை ஏற்படுத்தலாமென்பதைக் காணும்போது, முதலாளிகளுடைய உடைமைகளைப் பறிமுதல் செய்வதன் விளைவாய் மனிதச் சமுதாயத்தின் உற்பத்தி சக்திகள் தவிர்க்கமுடியாதவாறு பிரம்மாண்டமாய் வளர்ச்சியடையுமென நாம் திட நம்பிக்கையோடு கூற முடியும். ஆனால் இந்த வளர்ச்சி எவ்வளவு துரிதமாய் நடந்தேறும் என்று, உழைப்புப் பிரிவினையிலிருந்து முறித்துக் கொண்டு வருவதும், மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்குமுள்ள எதிர்நிலை ஒழிக்கப்படுவதும், உழைப்பானது ''வாழ்க்கையின் முதற் பெரும் தேவையாவதும்'' எவ்வளவு சடுதியில் நடைபெறும் என்று நாம் அறியோம், அறியவும் முடியாது.

ஆகவேதான் நாம் தவிர்க்க முடியாதபடி அரசு உலர்ந்து

உதிர்வது குறித்து மட்டும் பேசி, இந்த நிகழ்ச்சிப்போக்கு நீடித்து நடைபெறும் தன்மை கொண்டதாய் இருப்பதையும் கம்யூனிசத்தின் உயர் கட்டம் வளர்ச்சியுறுவதன் வேகத்தைச் சார்ந்ததாய் இருப்பதையும் வலியுறுத்திவிட்டு, அரசு உலர்ந்து உதிரத் தேவையான காலத்தையோ அதன் ஸ்தூலமான வடிவங்களையோ பற்றிய பிரச்சினைக்கு விடை கூறுது விட்டு வைக்க உரிமை பெற்றிருக்கிறோம். ஏனெனில் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க விவரப்பொருள் இல்லை.

''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப'' என்னும் விதியைச் சமுதாயம் அனுசரிக்கையில்தான், அதாவது மக்கள் தாமே மனமுவந்து தமது ஆற்றலுக்கு ஏற்ப வேலை செய்யும்படி சமுதாய ஒட்டுறவுக்கான அடிப்படை நியதிகளைப் பற்றியொழுக அந்த அளவுக்குப் பழகிக்கொண்டு விடும்போதும், அவர்களுடைய உழைப்பு அந்த அளவுக்குப் பொருளுற்பத்தி ஆற்றல் மிக்கதாகிவிடும் போதும்தான் அரசு பூரணமாய் உலர்ந்து உதிர முடியும். வேறொருவரைவிட நாம் அரை மணி நேரம் அதிகம் வேலை செய்யவில்லையா, வெறொருவரைவிட நாம் குறைவாய் சம்பளம் பெறவில்லையா என்று ஷைலாக்கின்[65] கல்நெஞ்சுடன் கணக்கிட்டுப் பார்க்கும்படி நிர்ப்பந்தம் செய்யும் ''முதலாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பு'' அப்பொழுது கடக்கப்பட்டுவிடும். அப்பொழுது சமுதாயம் உற்பத்திப் பொருட்களை வினியோகிக்கையில் அவரவரும் பெற வேண்டிய அளவை ஒழுங்கு செய்ய வேண்டிய தேவை இருக்காது; ஒவ்வொருவரும் ''தமது தேவைகளுக்கு ஏற்பத்'' தடங்கலின்றி சுதந்திரமாய் எடுத்துக் கொள்வார்.

முதலாளித்துவக் கண்ணோட்டத்திலிருந்து, இத்தகைய ஒரு சமுதாய அமைப்பு ''வெறும் ஆகாயக் கோட்டையே'' என்று அறிவிப்பதும், அந்தந்தக் குடிமகனின் உழைப்புமீது எந்தக் கண்காணிப்புமின்றி அவரவரும் சமுதாயத்திடமிருந்து வேண்டிய அளவு மிட்டாயும் கார்களும் பியானோக்களும் பிறவும் பெறும் உரிமையை ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்வதாய் வாக்களிப்பதாக சோஷலிஸ்டுகளை நையாண்டி

செய்வதும் சுலபமே. இன்றுங்கூட மிகப் பெருவாரியான முதலாளித்துவ ''விஞ்ஞானிகள்'' இவ்வாறு நையாண்டி செய்வதோடு நின்றுவிடுகிருர்கள். இதன் மூலம் தமது அறியாமையையும், தன்னலங் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாக்க முனேவோரே தாம் என்பதையும்தான் வெளிப் படுத்திக் கொள்கிருர்கள்.

அறியாமைதான்—ஏனென்ருல், கம்யூனிச வளர்ச்சியின் உயர் கட்டம் வருமென ''வாக்குறுதி தரும்'' எண்ணம் எந்த சோஷலிஸ்டுக்கும் தோன்றியதில்லை. இது வரவே செய்யுமென்று சோஷலிஸ்டு மூலவர்கள் முன்னறிந்து கூறியதைப் பொறுத்த வரை, அது உழைப்பின் தற்போதைய உற்பத்தித் திறனேயோ, பொமியலோவ்ஸ்கியின் கதைகளில் வரும் புர்சாக்கியைப்[66] போல ''வேடிக்கைக்காக வேண்டி'' பொதுச் செல்வங்களுக்குச் சேதம் விளேவிக்கக் கூடியவர்களும், முடியாததைக் கொடு என்று கோரக் கூடியவர்களுமான தற்போதுள்ள சராசரி மனிதர்களேயோ மனதிற் கொண்டு கூறப்பட்டதல்ல.

கம்யூனிசத்தின் ''உயர்'' கட்டம் வரும்வரை, உழைப்பின் அளவைமீதும் நுகர்வின் அளவைமீதும் சமுதாயமும் அரசும் மிகவும் கண்டிப்பான கண்காணிப்பு செய்ய வேண்டுமென்று சோஷலிஸ்டுகள் கோருகின்றனர். ஆனுல் இந்தக் கண்காணிப்பு முதலாளிகளுடைய உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதிலிருந்தும் முதலாளிகள்மீது தொழிலாளர்களுடைய கண்காணிப்பு நிறுவப்படுவதிலிருந்தும் ஆரம்பமாக வேண்டும், தவிரவும் இந்தக் கண்காணிப்பு அதிகாரவர்க்கத்தினராலான அரசால் அல்ல, ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான அரசால் நடத்தப்பட வேண்டும் என்கின்றனர்.

முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் (மற்றும் தெஸெரெத்தேலிகள், செர்னேவ்கள் முதலானேரை ஒத்த முதலாளித்துவ சித்தாந்தவாதிகளது பரிவாரத்தினரும்) தன்னலங் கருதி முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது எதில் காணக்கிடக்கிறது என்ருல், இன்றைய அரசியலின் ஜீவாதாரமான அவசர அவசியப் பிரச்சினேயை விட்டுவிட்டு, அதாவது முதலாளிகளுடைய உடைமைகளேப் பறிமுதல் செய்தல், குடிமக்கள் எல்

லோரையும் பிரம்மாண்டமான ஒரே ''கூட்டமைவின்''—அனைத்து அரசின்—தொழிலாளர்களாகவும் சிப்பந்திகளாகவும் மாற்றுதல், இந்தக் கூட்டமைவின் செயல் அனைத்தையும் மெய்யான ஜனநாயக அரசுக்கு, தொழிலாளர், படையாட்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் அரசுக்கு முற்றிலும் கீழ்ப்படியச் செய்தல் ஆகியவற்றை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாய் நெடுந்தொலைவிலுள்ள எதிர்காலத்தைப் பற்றிய வாக்குவாதத்தையும் பேச்சையும் மேற்கொள்கிறார்கள்.

புலமை வாய்ந்த பேராசிரியரும், அவரைத் தொடர்ந்து குட்டிமுதலாளித்துவ அற்பவாதியும், இவரையும் தொடர்ந்து தெஸெரெத்தேலிகளும் செர்னேவ்களும் போல்ஷிவிக்குகளின் அதீத கற்பனைகள் என்றும்,வாய்ச்சவடால் வாக்குறுதிகள் என்றும், சோஷலிசத்தைப் ''புகுத்துவது'' சாத்தியமல்ல என்றும் பேசுகையில், இவர்கள் கம்யூனிசத்தின் உயர் கட்டம் அல்லது படியை மனதிற் கொண்டிருக்கிறார்கள்.இதனைப் ''புகுத்துவதாய்'' யாரும் ஒருநாளும் வாக்குறுதி கூறவுமில்லை, நினைத்ததுங்கூட இல்லை; இது ''புகுத்தப் படக் கூடியது'' அல்ல.

இது நம்மை சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமுள்ள விஞ்ஞான வழியிலான வேறுபாடு குறித்த பிரச்சினைக்கு இட்டுச் செல்கிறது.''சமூக-ஜனநாயகவாதி'' என்னும் பெயர் சரியல்ல என்பது குறித்து மேலே குறிக்கப்பட்ட தமது வாதத்தில் எங்கெல்ஸ் இந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்டினர். கம்யூனிசத்தின் முதல் அல்லது கீழ்க் கட்டத்துக்கும் உயர் கட்டத்துக்குமுள்ள வேறுபாடு அரசியல் வழியில் காலப் போக்கில் மிகப் பெரியதாய் இருக்கும் எனலாம். ஆனல் இவ்வேறுபாட்டை இப்பொழுது முதலாளித்துவத்தில் இருக்கையில் கண்டறிய முற்படுவது நகைக்கத்தக்கதே ஆகும். தனிப்பட்ட அராஜகவாதிகள் மட்டும் வேண்டுமானல் (கிரப்போத்கின்களும் கிராவெயும் கார்னெலிசனும் அராஜகவாதத்தின் ஏனைய ''தாரகைகளும்'' சமூக-தேசியவெறியர்களாகவும், இன்னமும் கண்ய உணர்வையும் மனசாட்சியையும் விட்டுவிடாதுள்ள ஒரு சில அராஜகவாதிகளில் ஒருவரான கே குறிப்பிட்டது போல ''அராஜகவாத-அகழாளர்களாக

வும்'', ''பிளெஹானவின் பாணியில்'' மாற்றமடைந்திருப் பதிலிருந்து எதுவும் அறிந்து கொள்ளாதோர் அராஜகவாதி களிடையே இன்னமும் இருப்பார்களாயின்) இதற்குத் தலைமை முக்கியத்துவம் அளிக்கக்கூடும்.

ஆனால் சோஷலிசத்துக்கும் கம்யூனிசத்துக்குமுள்ள விஞ் ஞான வழியிலான வேறுபாடு தெட்டத் தெளிவானது. வழக்க மாய் சோஷலிசம் என்று அழைக்கப்படுவதை மார்க்ஸ் கம் யூனிச சமுதாயத்தின் ''முதல்'' அல்லது கீழ்க் கட்டம் என்று குறிப்பிட்டார். உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமை ஆகிவிடும் அளவுக்கு இக்கட்டத்துக்கும் ''கம்யூனிசம்'' என்னும் சொல் பொருந்துவதாகும், ஆனால் இது முழு நிறைக் கம்யூனிசம் அல்ல என்பதை நாம் மறக்காதிருக்க வேண்டும். மார்க்சின் விளக்கங்களுக்குள்ள மாபெரும் முக் கியத்துவம் என்னவெனில் இங்கும் அவர் பொருள்முதல்வாத இயக்கவியலை, வளர்ச்சித் தத்துவத்தை முரணின்றிக் கையாளுகிறார்; கம்யூனிசத்தை முதலாளித்துவத்தில் இருந்து வளர்ச்சியுறும் ஒன்றாகக் கருதுகிறார். பண்டிதப் புலமை சார்ந்த வழியில் ''கண்டுபிடிக்கப்பட்ட'', புனையப்பட்ட இலக்கணங்களுக்கும் சொற்களைப் பற்றிய பயனற்ற சண்டப் பிரசண்டங்களுக்கும் (எது சோஷலிசம்? எது கம்யூனிசம்?) பதிலாய், மார்க்ஸ் கம்யூனிசத்தின் பொருளாதார முதிர்ச்சி யினுடைய இரு கட்டங்கள் எனப்படத்தக்கவற்றின் பகுத் தாய்வை அளிக்கிறார்.

முதற் கட்டத்தில் அல்லது படியில் கம்யூனிசமானது பொருளாதார வழியில் இன்னமும் முழு அளவு முதிர்ச்சி யுற்றதாக, முதலாளித்துவத்தின் மரபுகள் அல்லது மிச்ச சொச்சங்களிலிருந்து முற்றிலும் விடுபட்டதாக இருக்க முடியாது. ஆகவே கம்யூனிசம் அதன் முதற் கட்டத்தில் ''முத லாளித்துவ உரிமையின் குறுகிய வரம்பை'' விட்டொழிக் காமல் வைத்துக் கொள்ளும் சுவாரஸ்யமான நிகழ்வு ஏற்படு கிறது. நுகர் பொருட்களின் வினியோகம் குறித்த இந்த முதலாளித்துவ உரிமைக்கு முதலாளித்துவ அரசு இருப்பது தவிர்க்க முடியாத முன்னிபந்தனையாகும், ஏனெனில் உரிமைக் குரிய தராதரங்கள் அனுசரிக்கப்படுமாறு உறுதிப்படுத்த

வல்ல இயந்திரம் இல்லையேல் உரிமை அர்த்தமற்றதாகிவிடும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், கம்யூனிசத்தில் சில காலத்துக்கு முதலாளித்துவ உரிமை மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்கம் இல்லாத முதலாளித்துவ அரசுங் கூட இருக்கும்!

இது முரணுரை போலத் தோன்றலாம், அல்லது மார்க்சியத்தின் அதியற்புத உள்ளடக்கச் சாரத்தை ஆய்ந்தறிய கிஞ்சித்தும் முயலாதோர் அடிக்கடி மார்க்சியத்தின்மீது குறை கூறுகிறார்களே அத்தகைய இயக்கவியல் புதிராகவுங் கூடத் தோன்றலாம்.

ஆனால் உண்மை என்னவெனில், இயற்கையிலும் சமுதாயத்திலும் பழைமையின் மிச்சசொச்சங்கள் புதுமையில் எஞ்சி நின்று வாழ்க்கையில் நம்மை ஒவ்வொரு தப்படியிலும் எதிர்நோக்குகின்றன. தான்தோன்றித்தனமாய்க் கம்யூனிசத்தில் ''முதலாளித்துவ'' உரிமையைக் கடுகளவும் மார்க்ஸ் புகுத்திவிடவில்லை. முதலாளித்துவத்தின் அடிவயிற்றிலிருந்து வெளித்தோன்றும் ஒரு சமுதாயத்தில் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் தவிர்க்கமுடியாததைத்தான் அவர் சுட்டிக்காட்டினார்.

தொழிலாளி வர்க்கத்துக்கு, தனது விடுதலைக்காக அது முதலாளித்துவத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், ஜனநாயகம் அளவு கடந்த முக்கியத்துவமுடையதாகும். ஆயினும் ஜனநாயகம் தாண்டிச் செல்லக்கூடாத ஓர் எல்லைக் கோடல்ல. பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்துக்கும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கும் செல்லும் பாதையில் அமைந்த கட்டங்களில் ஒன்றே அது.

ஜனநாயகம் சமத்துவத்தைக் குறிக்கிறது. சமத்துவம் என்றால் வர்க்கங்கள் ஒழிக்கப்படுதல் என்று பிழையற்ற முறையில் அர்த்தப்படுத்திக் கொள்வோமாயின், பாட்டாளி வர்க்கம் சமத்துவத்துக்காக நடத்தும் போராட்டத்தின் மாபெரும் முக்கியத்துவமும், ஒரு முழக்கம் என்ற முறையில் சமத்துவத்தின் மாபெரும் முக்கியத்துவமும் தெளிவாய் விளங்கும். ஆனால் ஜனநாயகம் பெயரளவிலான சமத்துவத்தையே குறிக்கிறது. சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்

களுக்கும் உற்பத்திச் சாதனங்களின் உடைமை சம்பந்தமாய் சமத்துவம் சாதிக்கப் பெற்றதும், அதாவது உழைப்புக்கும் சம்பளங்களுக்குமான சமத்துவம் சாதிக்கப் பெற்றதும், மேலும் தொடர்ந்து முன்னேறுவது எப்படி, பெயரளவிலான சமத்துவத்திலிருந்து நடைமுறை உண்மையான சமத்துவத் துக்கு, அதாவது ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய ஆற்றலுக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவை களுக்கு ஏற்ப'' என்னும் விதி செயல்படும் நிலைக்கு முன்னேறு வது எப்படி என்கிற பிரச்சினை தவிர்க்கமுடியாதபடி மனித குலத்தை எதிர்நோக்கும். எந்தக் கட்டங்களின் வாயிலாய், எந்த நடைமுறை நடவடிக்கைகளைக் கொண்டு மனிதகுலம் இந்தத் தலைமையான குறிக்கோளைச் சென்றடையும் என் பதை நாம் அறியோம், அறியவும் முடியாது. ஆனால் சோஷ லிசத்தை உயிரற்ற, இறுகிக்கெட்டியாகிய, என்றென்றுக்கு மாய் மாறாத ஒரே நிலையில் இருத்தப்பட்ட ஒன்றாய்க் கொள் ளும் சாதாரண முதலாளித்துவக் கருத்தோட்டம் நம்ப முடி யாத அளவுக்கு பொய்யானது என்பதையும், உண்மையில் சோஷலிசத்தில் மட்டும்தான் பொது வாழ்வு, தனியார் வாழ்வு இவற்றின் எல்லாத் துறைகளிலுமே மிக வேகமான, மெய்யான, உண்மையிலேயே பிரம்மாண்டத் திரளானோ ரைக் கொண்ட, முதலில் பெரும்பான்மையோரையும் பிறகு மக்கள் தொகை அனைவரையுமே கொண்ட, முன்னேற்றப் பேரியக்கம் தொடங்கும் என்பதையும் உணர்ந்து கொள்வது மிக முக்கியமாகும்.

ஜனநாயகம் என்பது அரசின் ஒரு வடிவமாகும், அரசு வகைகளில் ஒன்றாகும். எனவே ஒவ்வொரு அரசையும் போல ஜனநாயகமும் ஒரு புறத்தில் ஆட்களுக்கு எதிராய் ஒழுங்க மைந்த, முறையான வன்முறைப் பிரயோகத்தைக் குறிக் கிறது. ஆனால் அது மறுபுறத்தில் குடிமக்களின் சமத்துவம், அதாவது அரசின் கட்டமைப்பை நிர்ணயிப்பதிலும் அரசை நிர்வகிப்பதிலும் எல்லோருக்கும் சம உரிமை உண்டென் பது பெயரளவில் அங்கீகரிக்கப்படுவதையும் குறிக்கிறது. இதன் விளைவு என்னவெனில், ஜனநாயகம் அதன் வளர்ச்சி யில் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில், முதலாளித்துவத்தை எதிர்த்

துப் புரட்சிகரப் போராட்டம் நடத்தும் வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தை ஒன்றுதிரளச் செய்கிறது; முதலாளித்துவ அரசுப் பொறியமைவையும்—குடியரசு வடிவிலான முதலாளித்துவ அரசுப் பொறியமைவையும்கூட—நிரந்தரச் சேனையையும், போலீசையும், அதிகாரவர்க்கத்தையும் இந்தப் பாட்டாளி வர்க்கம் தகர்த்துத் தவிடுபொடியாக்கி புவிப் பரப்பிலிருந்தே துடைத்தெடுத்துவிட்டு, இவற்றுக்குப் பதிலாய் மேலும் ஜனநாயகமான ஓர் அரசுப் பொறியமைவை அமைக்கக் கூடியதாக்குகிறது. முன்னிலும் அதிக ஜனநாயகமுடைத்த அரசுப் பொறியமைவு என்றாலுங்கூட இதுவும் ஓர் அரசுப் பொறியமைவுதான். அனைத்து மக்களும் அடங்கிய காவலர் படையை நிறுவ முற்படும் ஆயுதமேந்திய தொழிலாளர்களின் வடிவில் அமைந்த அரசுப் பொறியமைவு இது.

இங்கு "அளவு பண்பாய் மாறுகிறது": ஜனநாயகம் இந்த அளவுக்கு அதிகரிப்பதானது முதலாளித்துவ சமுதாயத்தின் வரம்புகளைத் தாண்டிச் சென்று இச்சமுதாயத்தை சோஷலிச வழியில் திருத்தியமைப்பதன் துவக்கத்தைக் குறிக்கிறது. மெய்யாகவே எல்லோரும் அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்வார்களாயின் முதலாளித்துவத்தால் தன் பிடியை இருத்திக் கொள்ள முடியாது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிதான் மெய்யாகவே "எல்லோரும்" அரசு நிர்வாகத்தில் பங்கு கொள்ளும்படி வகை செய்யும் முன்னிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது. இந்த முன்னிபந்தனைகளில் சில வருமாறு: அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுதல், மிகவும் முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் ஏற்கனவே இது சாதிக்கப் பெற்றுவிட்டது; தபால் துறை, ரயில்வேக்கள், பெரிய ஆலைகள், பெருவீத வாணிபம், வங்கித் துறை, இன்ன பிறவற்றாலான சிக்கல்மிக்க, பிரம்மாண்டமான, சமூகமயமான இயந்திரத்தால் கோடானுகோடியான தொழிலாளர்கள் "பயிற்சியும் கட்டுப்பாடும்" உடையோராக்கப்படுதல்.

இந்தப் பொருளாதார முன்னிபந்தனைகள் இருக்குமாயின், முதலாளிகளும் அதிகாரவர்க்கத்தினரும் வீழ்த்தப்பட்ட

பின், இவர்களுக்குப் பதிலாய் உற்பத்தியையும் வினியோகத்தையும் கண்காணிப்பதிலும், உழைப்பையும் உற்பத்திப் பொருட்களேயும் பற்றிய கணக்குப் பதிவு வேலேயிலும் உடனடியாகவே, எடுத்தயெடுப்பிலே, ஆயுதமேந்திய தொழிலாளர்களேயும், ஆயுதமேந்திய மக்கள் அனேவரையுமே ஈடுபடுத்துவது முற்றிலும் சாத்தியமே. (கண்காணிப்பும் கணக்குப் பதிவுமான இந்தப் பிரச்சினேயைப் பொறியாளர்கள், விவசாய நிபுணர்கள் முதலான விஞ்ஞானப் பயிற்சி பெற்ற ஊழியர்களேப்பற்றிய பிரச்சினேயுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. இந்தக் கனவான்கள் இன்று முதலாளிகளுடைய விருப்பங்களுக்குப் பணிந்து வேலே செய்கிறுர்கள், நாளேக்கு ஆயுதமேந்திய தொழிலாளர்களுடைய விருப்பங்களுக்குப் பணிந்து இன்னுங்கூட திறம்பட வேலே செய்வார்கள்.)

கணக்கீடு, கண்காணிப்பு—கம்யூனிச சமுதாயத்தின் முதற் கட்டம் தடங்கலின்றி இயங்கவும் சரிவரச் செயற்படவும் பிரதானமாய்த் தேவைப்படுகிறவை இவையே. குடிமக்கள் எல்லோரும் அரசின் சம்பளச் சிப்பந்திகளாய் மாற்றப்பட்டுவிடுகிறுர்கள்; அரசு ஆயுதமேந்திய தொழிலாளர்களால் ஆனது. குடிமக்கள் எல்லோரும் அரசினுடைய நாடு தழுவிய ஒரேயொரு ''கூட்டமைவின்'' சிப்பந்திகளும் தொழிலாளர்களும் ஆகிவிடுகிறுர்கள். தேவைப்படுவது எல்லாம் இவர்கள் சமத்துவமாய் வேலே செய்ய வேண்டும், வேலேயில் தமக்கு உரிய பங்கைச் செய்து சமத்துவ சம்பளம் பெற வேண்டும் என்பதே. இதற்கு வேண்டிய கணக்கீடும் கண்காணிப்பும் முதலாளித்துவத்தால் வெகுவாய் எளிமைப்படுத்தப்பட்டு, எழுத்தறிவுடையவர் எவரும் செய்ய முடியும்படியான மேற்பார்வையிடல், பதிவு செய்தல், எண் கணிதத்தின் அடிப்படை விதிகளே அறிந்திருத்தல், தக்க ரசீதுகளே எழுதிக் கொடுத்தல் போன்ற மிக மிக எளிய வேலேகளாய்க் குறுகும்படிச் செய்யப்பட்டுவிட்டன.*

---

* அரசின் மிக முக்கிய பணிகள் தொழிலாளர்கள் தாமே செய்யத்தக்க கணக்கீடு, கண்காணிப்பு ஆகியவையாய்க் குறுகும்படிச் செய்யப்படுகையில், அரசானது ''அரசியல் வழி

மக்களில் பெரும்பான்மையோர் தாமே சுயேச்சையாக வும் எல்லாவிடத்தும் இத்தகைய கணக்குப் பதிவுகளைச் செய்யவும், (இப்பொழுது சிப்பந்திகளாய் மாற்றப்பட்டு விட்ட) முதலாளிகளையும் தமது முதலாளித்துவப் பழக்கங் களை விடாது வைத்துள்ள அறிவுத் துறைக் கனவான்களையும் இவ்விதம் கண்காணித்துக் கொள்ளவும் தொடங்குகையில், இந்தக் கண்காணிப்பு மெய்யாகவே சர்வவியாபகமானதாக வும் பொதுவானதாகவும் வெகுஜனத்தன்மையதாகவும் ஆகி விடும், இதிலிருந்து தப்ப வழி இருக்காது, ஏனெனில் ''போக் கிடம்'' எதுவும் இருக்காது.

சமுதாயம் முழுதும் சமமான உழைப்புக்குச் சமமான சமபளத்துடன் ஒரே அலுவலகமும், ஒரே ஆலையுமாகிவிடும்.

ஆனால் பாட்டாளி வர்க்கம் முதலாளிகளைத் தோற்கடித்த பிற்பாடும், சுரண்டலாளர்களை வீழ்த்திய பிற்பாடும் சமுதா யம் முழுவதுக்கும் விரிவடையச் செய்யும் இந்த ''ஆலைத் துறைக்'' கட்டுப்பாடு எவ்வகையிலும் நமது இலட்சியமோ, நமது இறுதிக் குறிக்கோளோ அல்ல. முதலாளித்துவச் சுரண்டலால் விளைந்த எல்லா இழுக்குகளையும் அசிங்கங்களை யும் களைந்து சமுதாயத்தைச் சுத்தம் செய்து தூய்மையாக்கு வதற்கும், மேலும் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கும் இது அவசியமான ஒரு படியே அன்றி வேறல்ல.

எத்தருணம் முதல் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர் களும்—அல்லது குறைந்தது மிகப் பெரும்பான்மையோர்— அரசைத் தாமே நிர்வகிக்கக் கற்றுக் கொள்கிறார்களோ, இந்தப் பணியை நேரில் தாமே மேற்கொள்கிறார்களோ, மிகச் சொற்ப தொகையினரே ஆன முதலாளித்துவச் சிறுபான் மையோரையும், தமது முதலாளித்துவப் பழக்கங்களை விட் டொழிக்க விரும்பாத கனவான்களையும், முதலாளித்துவத்

---

யிலான அரசாய்'' இருக்கும் நிலை முடிவுற்றுவிடும்; ''பொதுப் பணிகள் தமது அரசியல் தன்மையை இழந்து, வெறும் நிர்வாகப் பணிகளாகிவிடும்'' (பார்க்கவும்: மேலே, அத்தியாயம் 4, §2, அராஜகவாதிகளுடன் எங்கெல்சின் வாக்கு வாதம்).

தால் அறவே பாழ்படுத்தப்பட்டுவிட்ட தொழிலாளர்களையும் கண்காணிக்க ''ஏற்பாடு செய்கிறுர்களோ''—அத்தருணம் முதலாய் எவ்வகையான அரசாங்கத்துக்குமுள்ள தேவை அடியோடு மறையத் தொடங்கிவிடும். ஜனநாயகம் எவ்வளவுக்கு எவ்வளவு பூரணமானதாகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது தேவையற்றதாகும் தருணம் அருகாமையில் வந்துவிடுகிறது. ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான அரசு, ''அரசெனும் சொல்லின் சரியான பொருளில் அரசாயில்லாத'' இது, எவ்வளவுக்கு எவ்வளவு ஜனநாயகமுடைத்ததாய் ஆகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அரசின் ஒவ்வொரு வடிவமும் வேகமாய் உலர்ந்து உதிரத் தொடங்குகிறது.

ஏனென்றுல், எல்லோரும் சமூகப் பொருளுற்பத்தியை நிர்வகிக்கக் கற்றுக் கொண்டு சுயேச்சையாய்த் தாமே நடைமுறையில் நிர்வகிக்கும்போது, சுயேச்சையாய்த் தாமே கணக்குகள் பதிவு செய்து கொண்டு சோம்பேறிகளையும் செல்வச் சீமான்களது புதல்வர்களையும் மோசடிக்காரர்களையும் ஏனைய ''முதலாளித்துவ மரபுகளின் காவலர்களையும்'' கண்காணிப்புச் செய்யும்போது, இந்த வெகுஜன அளவிலான கணக்கீட்டிலிருந்தும் கண்காணிப்பிலிருந்தும் தப்புவது தவிர்க்கமுடியாத வகையில் அவ்வளவு கடினமாகிவிடுமாதலால், அவ்வளவு அரிதிலும் அரிதான விதிவிலக்காகிவிடுமாதலால், மற்றும் உடனுக்குடன் கடுந் தண்டனைக்கு உரியதாக்கப்படலாமாதலால் (ஏனெனில் ஆயுதமேந்திய தொழிலாளர்கள் காரிய வழிப்பட்டவர்களே அன்றி உணர்ச்சிப் பசப்பாளர்களான அறிவுத் துறையினரல்ல, யாரும் தம்மிடம் வாலாட்ட இடந்தர மாட்டார்கள்), சமூக வாழ்க்கையின் சாதாரண அடிப்படை விதிகளைப் பற்றியொழுக வேண்டிய **அவசியமானது** விரைவில் நிலையான ஒரு **பழக்கமாகிவிடும்.**

இனி கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டத்திலிருந்து அதன் உயர் கட்டத்துக்கு மாறிச் செல்லவும், அதனுடன் கூடவே அரசு பூரணமாய் உலர்ந்து உதிரவும் பாதை விரியத் திறக்கப்பட்டுவிடும்.

## அத்தியாயம் 6

# சந்தர்ப்பவாதிகள் மார்க்சியத்தைக் கொச்சையாக்குதல்

சமுதாயப் புரட்சியின்பால் அரசுக்கும், அரசின்பால் சமுதாயப் புரட்சிக்குமுள்ள போக்கு பற்றிய பிரச்சினையிலும், மற்றும் பொதுவில் புரட்சி என்னும் பிரச்சினையிலும் இரண்டாவது அகிலத்தின் (1889-1914) தலைமையான தத்துவவாதிகளும் நூலாசிரியர்களும் மிகச் சொற்ப கவனமே செலுத்தினர். ஆனால் சந்தர்ப்பவாதம் படிப்படியாய் வளர்ந்து 1914ல் இரண்டாவது அகிலம் தகர்ந்து விழுவதற்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிப்போக்கின் மிகவும் குறிப்பிடத்தக்க விவரம் என்னவெனில், இந்த ஆட்களின் நேர் எதிரே இப்பிரச்சினை எழுந்த போதுங்கூட இவர்கள் இதைத் தட்டிக் கழிக்க முயன்றனர் அல்லது கவனியாது ஒதுங்கினர்.

அரசுடன் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குள்ள போக்கு பற்றிய பிரச்சினையைத் தட்டிக் கழித்ததன் விளைவாய்—சந்தர்ப்பவாதத்துக்கு அனுகூலம் புரிந்து அதனை வளரவைத்த இந்தத் தட்டிக் கழித்தலின் விளைவாய்—மார்க்சியம் திரித்துப் புரட்டப்பட்டது என்றும், அறவே கொச்சையாக்கப் பட்டது என்றும் பொதுவில் கூறலாம்.

இந்த அவல நிகழ்ச்சிப்போக்கின் முக லட்சணத்தைச் சுருக்கமாகவேனும் குறிப்பிட்டுக் காட்டும் பொருட்டு, மார்க்சியத்தின் மிகப் பிரபல தத்துவவாதிகளான பிளெஹானவையும் காவுத்ஸ்கியையும் எடுத்துக் கொள்வோம்.

### 1. அராஜகவாதிகளுடன் பிளெஹானவின் வாக்குவாதம்

சோஷலிசத்தின்பால் அராஜகவாதத்துக்குள்ள போக்கு குறித்து **அராஜகவாதமும் சோஷலிசமும்** என்ற தலைப்பில் பிளெஹானவ் ஒரு தனிப் பிரசுரம் எழுதினார். 1894ல் இது ஜெர்மன் மொழியில் வெளியிடப்பட்டது.

இந்தப் பொருள் குறித்துப் பரிசீலிக்கையில் பிளெஹானவ் அராஜகவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் மிகவும் சூடான, அவசர அவசியமான, அரசியல் வழியில் இன்றியமையாத பிரச்சினையை, அதாவது அரசின்பால் புரட்சிக்குள்ள போக்கையும் பொதுவில் அரசு பற்றிய பிரச்சினையையும் அறவே தட்டிக் கழிப்பதில் வெற்றி கண்டுவிட்டார்! அவருடைய பிரசுரம் இரு வேறு பகுதிகளாய்ப் பிரிக்கப்படக் கூடியது: ஒரு பகுதி வரலாற்று வழியிலும் இலக்கிய வழியிலும் அமைந்தது, ஸ்டிர்னர், புரூதோன், மற்றும் பலருடைய கருத்துக்களின் வரலாறு பற்றிய வளமான விவரங்கள் அடங்கியது; மற்ருெரு பகுதி அற்பத்தனமானது, அராஜகவாதிக்கும் கொள்ளைக்காரனுக்கும் வேறுபாடு காண முடியாதென்ற பொருள் பற்றிய அலங்கோலமான விரிவுரை அடங்கியது.

ஆய்வுப் பொருள்களின் இணைப்பில் இது மிகவும் நூதனமானது; ருஷ்யாவில் புரட்சி தொடங்கும் தறுவாயிலும் புரட்சிக் காலத்தின் போதும் பிளெஹானவின் செயற்பாடுகள் அனைத்துக்கும் எடுப்பான எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. 1905க்கும் 1917க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் தாம் உண்மையில் பகுதியளவு வறட்டுச் சூத்திரவாதியாகவும் பகுதியளவு குட்டிமுதலாளித்துவ அற்பவாதியாகவும் இருந்து அரசியலில் முதலாளித்துவ வர்க்கத்துக்கு வால் பிடித்ததை வெளிப்படுத்திக் கொண்டுவிடுகிருர்.

அராஜகவாதிகளுடன் நடத்திய வாக்குவாதத்தில் மார்க்சும் எங்கெல்சும் அரசின்பால் புரட்சிக்குள்ள போக்கு குறித்து தமது கருத்துக்களை மிகவும் தீர்க்கமாய் விளக்கினர் என்பதை மேலே நாம் கண்ணுற்ருேம். மார்க்சினுடைய கோத்தா வேலைத்திட்டத்தின் விமர்சனத்துக்கு 1891ல் எங்கெல்ஸ் தீட்டிய முகவுரையில் ''நாம்'' (அதாவது எங்கெல்சும் மார்க்சும்) ''அந்தக் காலத்தில், (முதலாவது) அகிலத்தின் ஹேக் காங்கிரஸ்[67] முடிவுற்று இரண்டு ஆண்டுகள் ஆகுமுன்னரே, பக்கூனினையும் அவரது அராஜகவாதிகளையும் எதிர்த்து மிகக் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம்'' என்று எழுதினுர்.

பாரிஸ் கம்யூனே அராஜகவாதிகள் ''தமக்கே'' உரியதென உரிமை கொண்டாடி,தமது தத்துவத்துக்கு அது ஒரு நிரூபண மாய் அமைந்தது போலப் பேச முயற்சித்தனர். பாரிஸ் கம்யூனுடைய படிப்பினைகளையும், இந்தப் படிப்பினைகளைப் பற்றி மார்க்ஸ் அளித்த பகுத்தாய்வையும் புரிந்து கொள்ள அவர்கள் அறவே தவறிவிட்டனர். பழைய அரசுப் பொறி யமைவு தகர்க்கப்பட வேண்டியதுதானு? அதனிடத்தில் நிறுவப் பட வேண்டியது என்ன?—இந்த ஸ்தூலமான அரசியல் கேள்விகளுக்குரிய சரியான பதில்களுக்கு ஓரளவு அருகே வரத்தக்கதாய்க்கூட எதனையும் அராஜகவாதம் அளிக்க வில்லை.

ஆனுல் ''அராஜகவாதமும் சோஷலிசமும்'' என்பது குறித்துப் பேசப் புகுந்து,அதேபோதில் அரசு பற்றிய பிரச் சினையைத் தட்டிக்கழித்து, கம்யூனுக்கு முன்னதாகவும் அதற்குப் பிற்பாடும் மார்க்சியத்தின் வளர்ச்சி அனைத்தையும் உதாசினம் செய்வதானது, தவிர்க்க முடியாதபடி சந்தர்ப்பவா தத்தினுள் சரிந்து செல்வதையே குறிப்பிடுகிறது. ஏனெனில் சந்தர்ப்பவாதத்துக்கு யாவற்றையும்விட முக்கியமாய்த் தேவைப்படுவது என்னவென்ருல், மேலே குறிப்பிட்ட இரு கேள்விகளும் எழுப்பப்படாமல் விடப்படுவதுதான். சந்தர்ப்ப வாதத்துக்கு அதுவே ஒரு வெற்றியாகும்.

### 2. சந்தர்ப்பவாதிகளுடன் காவுத்ஸ்கியின் வாக்குவாதம்

காவுத்ஸ்கியின் நூல்களில் மிக அதிகமானவை சந்தே கத்துக்கு இடமின்றி, வேறு எந்த மொழியைக் காட்டிலும் ருஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. காவுத்ஸ்கி எழுதுவது ஜெர்மனியைக் காட்டிலும் ருஷ்யாவில்தான் அதி கமாய்ப் படிக்கப்படுகிறது என்று சில ஜெர்மன் சமூக-ஜன நாயகவாதிகள் தமாஷ் செய்வதற்குக் காரணம் இல்லாமல் இல்லை (இடைக் குறிப்பாய் நாம் இதைக் கூறலாம்: இந்தக் கேலி முதலில் இதைச் செய்தவர்கள் நினைப்பதைக் காட்டி லும் மிகவும் ஆழ்ந்த வரலாற்றுப் பொருளுடைத்ததாகும். ருஷ்யத் தொழிலாளர்கள் 1905ல் உலகின் சிறந்த சமூக-ஜன

நாயகவாத இலக்கியத்தின் சிறந்த நூல்கள் வேண்டுமென்று அசாதாரணமான அளவுக்கு அதிகமாகவும் முன்பின் காணு முறையிலும் கோரிக்கை எழுப்பியதன் மூலமும், ஏனைய நாடுகளில் கேட்டறியாக அதிக அளவில் இந்நூல்களின் மொழிபெயர்ப்புகளையும் பதிப்புகளையும் பெற்றுக் கொண்டதன் மூலமும், அதிக அளவு முன்னேறிய அண்டை நாடு ஒன்றின் அளவிலா அனுபவத்தை எங்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் இளம் நிலத்தில் விரைவாய்ப் பெயர்த்து நட்டனர் எனலாம்).

மார்க்சியத்தைப் பரப்புவதற்கு ஆற்றிய பணியுடன்கூட, சந்தர்ப்பவாதிகளுடன்—பெர்ன்ஷ்டைன் அவர்கள் தலைமையில் இருந்தார்—அவர் நடத்திய வாக்குவாதத்துக்காகவும் காவுத்ஸ்கி எங்கள் நாட்டில் குறிப்பாய்ப் பெயர் பெற்றவரானர். ஆனல் ஓர் உண்மை அனேகமாய்த் தெரியாமலே இருந்து வருகிறது. 1914-15ஆம் ஆண்டுகள் கண்ட மாபெரும் நெருக்கடியின்போது காவுத்ஸ்கி நம்பமுடியாத அவக்கேடுமிக்க குழப்பத்துக்கும் சமூக-தேசியவெறிக்கு ஆதரவளிக்கும் நிலைக்குமான சகதிக்குள் சரிந்தது எப்படி என்று பரிசீலிக்க முற்படுவோமாயின், இந்த உண்மையை உதாசீனம் செய்யலாகாது. இவ்வுண்மை வருமாறு: சந்தர்ப்பவாதத்தின் மிகவும் பிரபல பிரதிநிதிகளாய் பிரான்சிலும் (மில்லிரானும் ழொரேசும்) ஜெர்மனியிலும் (பெர்ன்ஷ்டைன்) இருந்தோரையும் எதிர்த்துக் கிளம்புவதற்குச் சற்று முன்பு காவுத்ஸ்கி மிகவும் கணிசமான ஊசலாட்ட நிலையை வெளிப்படுத்தி வந்தார். 1901-02ல் ஷ்டுட்கார்ட்டில் வெளியிடப்பட்டுப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கருத்துக்களை ஆதரித்து வந்த மார்க்சிய ஸார்யா,[68] காவுத்ஸ்கியுடன் வாக்குவாதத்தில் இறங்கி, 1900ல் பாரிசில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரசில்[69] அவர் முன் மொழிந்த தீர்மானம் ''வளைந்து கொடுப்பதாய்'' இருந்ததெனக் கூற வேண்டியிருந்தது. இந்தத் தீர்மானம் சந்தர்ப்பவாதிகளுடன் இணக்கம் காணுவதாய் இருந்தது; மழுப்பலான அரைமனதுத் தீர்மானமாயிருந்தது. ஜெர்மனியில் வெளியான காவுத்ஸ்கியின் கடிதங்களும், பெர்ன்ஷ்டைனை எதிர்த்து அவர் களம்

புகும்முன் அவரிடம் இருந்த தயக்கம் கொஞ்சமல்ல என் பதை வெளிப்படுத்துகின்றன.

ஆனுல் இதைக் காட்டிலும் அளவுகடந்த முக்கியத்துவ முள்ள உண்மை என்னவெனில், சந்தர்ப்பவாதிகளை எதிர்த்து அவர் நடத்திய இந்த வாக்குவாதத்திலும், பிரச்சினையை அவர் வகுத்தளிப்பதிலும், அதை அவர் ஆராயும் முறையி லும், அரசு பற்றிய பிரச்சினையில்தான் சந்தர்ப்பவாதத்தை நோக்கி முறையாய்த் தடம் புரண்டு செல்லும் அவருடைய திரிபை இப்பொழுது நாம், மார்க்சியத்துக்குக் காவுத்ஸ்கி இழைத்திருக்கும் மிக அண்மைக் கால துரோகத்தின் வர லாற்றைப் பரிசீலிக்கையில் பார்க்க முடிகிறது.

சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துக் காவுத்ஸ்கி முதலில் எழுதிய முக்கிய புத்தகமான பெர்ன்ஷ்டைனும் சமூக-ஜன நாயக வேலைத்திட்டமும் என்பதை எடுத்துக் கொள்வோம். காவுத்ஸ்கி மிகவும் விவரமாய் பெர்ன்ஷ்டைனுக்கு மறுப் புரைக்கிருர். ஆனுல் இதில் குறிப்பிடத்தக்க ஒன்று வருமாறு:

பெர்ன்ஷ்டைன், ஹெரஸ்திராத்திய புகழ் பெற்ற தமது சோஷலிசத்தின் முதற்கோள்களில் மார்க்சியம் ''பிளான் கியக்'' குற்றமிழைப்பதாய்க் குற்றம் சாட்டுகிருர் (இதன் பின் ருஷ்யாவில் சந்தர்ப்பவாதிகளும் மிதவாத முதலாளித் துவ வர்க்கத்தாரும் புரட்சிகர மார்க்சியவாதிகளையும் போல்ஷிவிக்குகளையும் எதிர்த்து ஆயிரக்கணக்கான முறை திருப்பித் திருப்பிக் கூறிவரும் குற்றச்சாட்டு இது). இச்சந் தர்ப்பத்தில் பெர்ன்ஷ்டைன் முக்கியமாய் மார்க்சின் பிரான் சில் உள்நாட்டுப் போரை எடுத்துரைத்து, ஏற்கெனவே நாம் கண்டதுபோல,வெற்றி சிறிதுமின்றி,கம்யூனின் படிப்பினைகள் பற்றிய மார்க்ஸ் கருத்துக்கள் புருதோனுடைய கருத்துக் களுடன் ஒத்திருப்பதாய்க் காட்ட முயற்சி செய்கிருர். கம் யூனிஸ்டு அறிக்கைக்கு 1872ல் மார்க்ஸ் எழுதிய முகவுரையில் வலியுறுத்தும் முடிவில், அதாவது ''தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே தயாராயிருக்கும் அரசுப் பொறியமைவை அப் படியே கைப்பற்றிக்கொண்டு அதனைத் தனது சொந்தக் காரி யங்களுக்காக உபயோகித்துக்கொள்ள முடியாது'' என்னும் முடிவில், பெர்ன்ஷ்டைன் தனிக் கவனம் செலுத்துகிருர்.

இந்த உரை பெர்ன்ஷ்டைனுக்கு ரொம்பப் ''பிடித்து விட்டது''—தமது புத்தகத்தில் மூன்று தடவைக்குக் குறையாமல் இதை எடுத்தாளுகிறுர்; படுமோசமாய்த் திரித்துப் புரட்டிச் சந்தர்ப்பவாத வழியில் இதற்கு வியாக்கியானம் கூறுகிறுர்.

அரசுப் பொறியமைவு அனைத்தையும் தொழிலாளி வர்க்கம் நொறுக்க வேண்டும், உடைக்க வேண்டும், தகர்த்திட வேண்டும் (Sprengung, வேட்டு வைத்து வெடித்தல்—எங்கெல்ஸ் உபயோகிக்கும் பதம்) என்பதே மார்க்ஸ் கூறிய கருத்தென்று மேலே நாம் கண்டோம். ஆனல் பெர்ன்ஷ்டைனுடைய அபிப்பிராயத்தில், அதிகாரத்தைக் கைப்பற்றுகையில் மட்டுமீறிய புரட்சி ஆர்வம் கொண்டுவிடுவதை எதிர்த்து இச்சொற்கள் மூலம் மார்க்ஸ் தொழிலாளி வர்க்கத்தை எச்சரிக்கை செய்தது போலத் தோன்றுகிறதாம்.

மார்க்சின் கருத்தை இதைக் காட்டிலும் படுமோசமாய், இதைக் காட்டிலும் கேடுகெட்டவாறு திரித்துப் புரட்டுவது கற்பனைக்கும் எட்டாதது. ஆகவே பெர்ன்ஷ்டைனியத்துக்கு மிகவும் விவரமாய் மறுப்புரை கூறும் தமது நூலில் காவுத்ஸ்கி இது குறித்து என்ன செய்தார்?

இந்த விவகாரம் குறித்து சந்தர்ப்பவாதமானது மார்க்சியத்தை அப்பட்டமாய்த் திரித்துப் புரட்டுவதை அவர் பகுத்தாராயாமலே ஒதுங்கிவிட்டார். மார்க்சின் உள்நாட்டுப் போருக்கு எங்கெல்சின் முகவுரையிலிருந்து மேற்கூறிய வாசகத்தை அவர் எடுத்துரைத்துவிட்டு, மார்க்சின் கருத்துப்படித் தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே தயாராயிருக்கும் அரசுப் பொறியமைவை அப்படியே எடுத்தாள முடியாது, ஆனல் பொதுவாய்ப் பேசுமிடத்து அது இதனை எடுத்தாள முடியும் என்று கூறினர்—அவ்வளவுதான். 1852 முதலாய் மார்க்ஸ் அரசுப் பொறியமைவை ''நொறுக்குவதையே'' பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பணியாய் வலியுறுத்தி வந்திருந்ததையும், மார்க்சின் மெய்யான கருத்துக்கு நேர் விரோதமான ஒன்றை பெர்ன்ஷ்டைன் மார்க்சுக்குக் கற்பித்ததையும் பற்றி காவுத்ஸ்கி ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

இதன் விளைவு என்னவெனில், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பணிகள் குறித்து மார்க்சியத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்குமுள்ள மிகவும் அடிப்படையான வேறுபாடு காவுத்ஸ்கியினல் மூடி மெழுகப்பட்டுவிட்டது!

''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப் பிரச்சினைக்கான தீர்வினை நாம் தயங்காது, நம்பிக்கையுடன் வருங்காலத்திடம் விட்டுவிடலாம்'' என்று சொல்லி பெர்ன்ஷ்டைனை ''எதிர்த்து'' காவுத்ஸ்கி எழுதினர் (பக்கம் 172, ஜெர்மன் பதிப்பு).

இது பெர்ன்ஷ்டைனுக்கு எதிரான மறுப்புரை அல்ல, சாராம்சத்தில் அவருக்கு விட்டுக்கொடுப்பதே ஆகும், சந்தர்ப்பவாதத்துக்குச் சரணடைவதே ஆகும். ஏனெனில் சந்தர்ப்பவாதிகள் தற்போது கேட்பதெல்லாம் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கடமைகளைப் பற்றிய எல்லா அடிப்படைப் பிரச்சினைகளையும் ''தயங்காது, நம்பிக்கையுடன் வருங்காலத்திடம் விட்டுவிட வேண்டும்'' என்பதுதான்.

பாட்டாளி வர்க்கம் அரசுப் பொறியமைவை நொறுக்க வேண்டுமென்று மார்க்சும் எங்கெல்சும் 1852 முதல் 1891 வரை, அதாவது நாற்பது ஆண்டுகளாய் அதற்குப் போதனை செய்து வந்தனர். ஆயினும் 1899ல் காவுத்ஸ்கி இந்த விவகாரத்தில் மார்க்சியத்துக்குச் சந்தர்ப்பவாதிகள் முற்றுகத் துரோகமிழைத்ததை எதிர்நோக்கியபோது, இந்தப் பொறியமைவை நொறுக்குவது அவசியமா என்ற பிரச்சினையை ஒதுக்கி விட்டுக் கபடமாய் அதற்குப் பதில் இந்தப் பொறியமைவை நொறுக்குவதற்கான ஸ்தூல வடிவங்கள் என்னவென்ற பிரச்சினையைக் கொண்டுவந்து நிறுத்தி, பிற்பாடு ஸ்தூல வடிவங்களை முன்கூட்டியே அறிய முடியாது என்கிற ''மறுக்கமுடியாத'' (மலடான) அற்பத்தனமான உண்மைக்குப் பின்னல் ஓடி ஒளிந்து கொள்ள முயன்றுர்!!

தொழிலாளி வர்க்கத்தைப் புரட்சிக்குப் பயிற்றுவிப்பதில் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குள்ள கடமை குறித்து மார்க்சும் காவுத்ஸ்கியும் அனுசரிக்கும் போக்குகளில் இருவருக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு உள்ளது.

காவுத்ஸ்கியின் அடுத்த, மேலும் முதிர்ச்சியுற்ற நூலை எடுத்துக் கொள்வோம். பெருமளவுக்கு இதுவும் சந்தர்ப்ப வாதத் தவறுகளுக்கு மறுப்புரையாய் அமைந்ததுதான். சமுதாயப் புரட்சி என்ற அவரது பிரசுரமே இந்நூல். இந்தப் பிரசுரத்தில் ஆசிரியர் ''பாட்டாளி வர்க்கப் புரட்சியும்'' ''பாட்டாளி வர்க்க ஆட்சியும்'' என்னும் பிரச்சினையைத் தமக்குத் தனி ஆய்வுப்பொருளாய்த் தேர்ந்தெடுத்துக் கொண்டார். மிகுந்த மதிப்புக்குரிய பலவற்றை அவர் அளித்தார். ஆனல் அரசு பற்றிய பிரச்சினையைத் தவிர்த்துக் கொண்டுவிடுகிருர். இந்தப் பிரசுரம் பூராவும் ஆசிரியர் அரசு அதிகாரம் வெல்வது குறித்துப் பேசுகிருர்—அதோடு நின்றுவிடுகிருர்; அதாவது சந்தர்ப்பவாதிகளுக்கு விட்டுக் கொடுக்கும் ஓர் உபாயத்தை — அரசுப் பொறியமைவை அழிக்காமலே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது சாத்தியமென்று ஒத்துக் கொள்ளும் வரை சந்தர்ப்பவாதத்துக்கு விட்டுக்கொடுக்கும் உபாயமே இது—தேர்ந்தெடுத்துக் கொள்கிருர். கம்யூனிஸ்டு அறிக்கை கூறும் வேலைத்திட்டத்தில் எது ''காலத்துக்கு ஒவ்வாதாகிவிட்டது'' என்று 1872ல் மார்க்ஸ் அறிவித்தாரோ அதையே 1902ல் காவுத்ஸ்கி உயிர்ப்பிக்கிருர்.

பிரசுரத்தில் ஒரு தனிப் பகுதி ''சமுதாயப் புரட்சியின் வடிவங்களும் ஆயுதங்களும்'' என்ற பொருள் பற்றியதாகும். இதில் காவுத்ஸ்கி வெகுஜன அரசியல் வேலைநிறுத்தம், உள்நாட்டுப் போர், ''பெரிய தற்கால அரசின் வலிமையினது கருவிகள், அதன் அதிகாரவர்க்கம், சேனை'' இவற்றையெல்லாம் பற்றிப் பேசுகிருர்; ஆனல் கம்யூன் ஏற்கெனவே தொழிலாளர்களுக்குப் போதித்திருந்ததைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அரசிடம் ''மூடபக்தி'' கூடாதென்று எங்கெல்ஸ் குறிப்பாய் ஜெர்மன் சோஷலிஸ்டுகளுக்கு விடுத்த எச்சரிக்கை காரணமின்றி விடுக்கப்பட்டதல்ல என்பது தெரிகிறது.

இந்த விவகாரங் குறித்து காவுத்ஸ்கி விரித்துரைப்பது வருமாறு: வெற்றிவாகை சூடிய பாட்டாளி வர்க்கம் ''ஜனநாயக வேலைத்திட்டத்தைச் செயல்படுத்தி நிறைவேற்றும்''

என்கிறுர், பிறகு இதன் பிரிவுகளே வரையறுத்துக் கூற முற்படுகிறுர். ஆனுல் முதலாளித்துவ ஜனநாயகத்துக்குப் பதிலாய்ப் பாட்டாளி வர்க்க ஜனநாயகம் நிறுவப்பட வேண்டியது குறித்து 1871ஆம் ஆண்டு அளித்திட்ட புதிய விவரப் பொருள் குறித்து அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லே. ''ஆடம்பரமாய் ஒலிக்கும்'' அடியிற் கண்டவற்றை ஒத்த மாமூல் வழக்குகளேக் கொண்டு காவுத்ஸ்கி இப்பிரச்சினேயைத் தட்டிக்கழிக்கிறுர்:

''இருப்பினும் தற்போதைய நிலேமைகளில் நாம் மேலாதிக்கம் பெறுவதற்கில்லே என்பது கூறுமலே விளங்குகிறது. புரட்சிக்கு நீண்டநெடிய, ஆழப்பாயும் போராட்டங்கள் முன்னிபந்தனேயாகும். இந்தப் போராட்டங்கள் நமது தற்போதைய அரசியல், சமுதாயக் கட்டமைப்பை மாற்றிவிடும்.''

சந்தேகமில்லே, ''கூறுமலே விளங்குவதுதான்'' இது, குதிரைகள் கொள் தின்கின்றன அல்லது வோல்கா ஆறு காஸ்பியன் கடலில் விழுகிறது என்பது எப்படியோ அது போல.ஆனுல் வருந்தத்தக்கது என்னவெனில்,''ஆழப்பாயும்'' போராட்டங்களேப் பற்றிய பொருளற்ற, படாடோபமான தொடரை உபயோகித்து, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினே,அதாவது முந்திய, பாட்டாளி வர்க்கமல்லாத பிற வர்க்கங்களின் புரட்சிகளேப் போலல்லாமல் அதனுடைய புரட்சியை அரசு சம்பந்தமாகவும், ஜனநாயகம் சம்பந்தமாகவும் ''ஆழ்ப் பாய்வதாய்ச்'' செய்வது எது என்கிற பிரச்சினே தவிர்க்கப் பட்டுவிடுவதுதான்.

இந்தப் பிரச்சினேயைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் காவுத்ஸ்கி சொல்லளவில் சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துக் கடும் போர்ப் பிரகடனம் செய்த போதிலும், ''புரட்சி என்னும் கருத்தின்'' முக்கியத்துவத்தை வலியுறுத்திய போதிலும் (புரட்சியின் ஸ்தூலப் படிப்பினேகளேத் தொழிலாளர்களுக்குப் போதிக்க ஒருவர் அஞ்சுகிறபோது இந்தக் ''கருத்தின்'' பயன் என்ன?), அல்லது ''யாவற்றுக்கும் முன்னுல் புரட்சிகர இலட்சிய ஆர்வம்'' என்பதாய்க் கூறிய போதி

லும், அல்லது தற்போது ஆங்கிலேயத் தொழிலாளர்கள் ''குட்டிமுதலாளித்துவப் பகுதியோரைவிட அதிகம் மேம்பட்டவர்களாய்'' இல்லை என்று அறிவித்த போதிலும், நடைமுறையில் சந்தர்ப்பவாதத்துக்கு இந்த அடிப்படையான விவகாரத்தில் விட்டுக் கொடுத்துவிடுகிறார்.

''சோஷலிச சமுதாயத்தில் தொழில் நிலையங்களின் மிகப் பல்வேறுபட்ட வடிவங்களும்—அதிகாரவர்க்க (??), தொழிற் சங்க, கூட்டுறவு, தனியார்... இப்படிப் பல்வேறுபட்ட வடிவங்களும்—ஒருங்கே இருக்க முடியும்'' என்று காவுத்ஸ்கி எழுதுகிறார். ''...உதாரணமாய், அதிகாரவர்க்க(??) ஒழுங்கமைப்பின்றி இருக்க முடியாத நிலையங்கள், ரயில்வேக்களைப் போன்ற நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஜனநாயக ஒழுங்கமைப்பு பின்வரும் வடிவத்தை மேற்கொள்ளலாம்: தொழிலாளர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள், இப்பிரதிநிதிகள் ஒரு வகைப் நாடாளுமன்றமாய் அமைகின்றனர்; இந்நாடாளுமன்றம் செயல்முறை விதிகளை நிலைநாட்டி, அதிகாரவர்க்க இயந்திரத்தின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுகிறது. பிற நிலையங்களின் நிர்வாகப் பொறுப்பு தொழிற் சங்கங்களுக்கு மாற்றப்படலாம். மற்றும் சில கூட்டுறவு நிலையங்களாகிவிடலாம்'' (பக்கங்கள் 148, 115 ருஷ்ய மொழிபெயர்ப்பு, 1903ல் ஜினீவாவில் வெளியிடப்பட்டது).

இந்த வாதம் தவறானது; கம்யூனுடைய படிப்பினைகளை உதாரணமாய்க் கொண்டு எழுபதாம் ஆண்டுகளில் மார்க்சும் எங்கெல்சும் அளித்த விளக்கங்களுடன் ஒப்பிடுகையில் இது பின்னேக்கிச் செல்கிறது.

இன்றியமையாததாய்க் கருதிக் கொள்ளப்படும் ''அதிகாரவர்க்க'' ஒழுங்கமைப்பைப் பொறுத்தவரை, ரயில்வேக்கும், பெருவீத இயந்திரத் தொழிலைச் சேர்ந்த எந்த ஆலை, எந்தத் தொழிற்கூடம், பெரிய கடை அல்லது பெருவீத முதலாளித்துவ விவசாய நிலையத்தைப் போன்ற வேறு எந்தத் தொழில் நிலையத்துக்கும் எவ்வித வித்தியசமும் இல்லை. இந்த எல்லா நிலையங்களின் தொழில்நுட்பம் கண்டிப்பான கட்டுப்பாட்டையும் அவரவருக்கும் ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்து முடிப்பதில் மிகக் கறாரான துல்லியத்தையும் அத்தியாவசியமாக்கிவிடுகிறது. ஏனெனில் இவை இல்லையேல்

நிலையம் அனைத்துமே செயல்படாது நின்று போய்விடலாம் அல்லது இயந்திரமோ உற்பத்திப் பொருளோ சேதமுற்று விடலாம். இந்த எல்லா நிலையங்களிலும் தொழிலாளர்கள் நிச்சயம் ''பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள், இப்பிரதிநிதிகள் ஒரு வகை நாடாளுமன்றமாய் அமைவார்கள்''.

ஆனால் விவகாரத்தின் மையக்கூறு என்னவெனில் இந்த ''ஒரு வகை நாடாளுமன்றம்'' முதலாளித்துவ நாடாளுமன்ற உறுப்பின் அர்த்தத்தில் ஒரு நாடாளுமன்றமாய் இருக்காது. இந்த ''ஒரு வகை நாடாளுமன்றம்'' காவுத்ஸ்கி கற்பனை செய்வது போல—காவுத்ஸ்கியின் சிந்தனை முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின் வரம்புகளுக்கு அப்பால் செல்லவில்லை—''செயல்முறை விதிகளை நிலைநாட்டி, அதிகாரவர்க்க இயந்திரத்தின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுவதோடு''நிற்காது என்பதுதான் இந்த விவகாரத்தின் மையக்கூறு. சோஷலிச சமுதாயத்தில், தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய இந்த ''ஒரு வகை நாடாளுமன்றம்'' ''செயல்முறை விதிகளை நிலைநாட்டும்'', ''இயந்திரத்தின்'' ''நிர்வாகத்தை மேற்பார்வையிடும்'' என்பது மெய்தான், ஆனால் இந்த இயந்திரம் ''அதிகாரவர்க்க'' இயந்திரமாய் இராது. தொழிலாளர்கள் அரசியல் அதிகாரம் வென்று கொண்ட பிறகு, அவர்கள் பழைய அதிகாரவார்க்க இயந்திரத்தை நொறுக்கிவிடுவார்கள், அடியோடு அதைத் தகர்த்துத் தரையோடு தரையாக்கிவிடுவார்கள்; அதனிடத்தில் ஒரு புதிய இயந்திரத்தை, அதே தொழிலாளர்களாலும் சிப்பந்திகளாலுமான இயந்திரத்தை நிறுவிக் கொள்வார்கள்; இந்தத் தொழிலாளர்களும் சிப்பந்திகளும் அதிகாரவர்க்கத்தினராய் மாறுவதைத் எதிர்த்துத் தடுக்க உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்நடவடிக்கைகளை மார்க்சும் எங்கெல்சும் விவரமாய் வரையறுத்தனர்: 1) தேர்தல் மட்டுமின்றி, எந்நேரத்திலும் திருப்பியழைக்கப்படுதலும் இருக்கும்; 2) சம்பளம் தொழிலாளியினுடையதைவிட அதிகமாய் இல்லாதிருத்தல்; 3) எல்லோராலுமான கண்காணிப்பும் மேற்பார்வையும் உடனடியாய் நிறுவப்படுதல்—இதன் விளைவாய், எல்லோரும் சிறிது

காலத்துக்கு ''அதிகாரவர்க்கத்தினராய்'' ஆகலாம், ஆகவே எவரும் ''அதிகாரவர்க்கத்தினர்''ஆக முடியாமற் போகும்.

''கம்யூனனது நாடாளுமன்ற உறுப்பாயிராது, செயலாற்றும் உறுப்பாய் இருக்கும், ஒருங்கே நிர்வாக உறுப்பாகவும் சட்டம் இயற்றும் உறுப்பாகவும் இருக்கும்''[70]—மார்க்சின் இச்சொற்கள் குறித்து காவுத்ஸ்கி சிந்தனை செய்து பார்க்கவே இல்லை.

முதலாளித்துவ நாடாளுமன்ற முறைக்கும் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்குமுள்ள வித்தியாசத்தை காவுத்ஸ்கி புரிந்து கொள்ளவே இல்லை. முதலாளித்துவ நாடாளுமன்ற முறை ஜனநாயகத்தை (மக்களுக்கானது அல்ல) அதிகாரவர்க்கத்துடன் (மக்களுக்கு எதிரானது) இணைத்திடுகிறது. பாட்டாளி வர்க்க ஜனநாயகம் அதிகார வர்க்கத்தை வேரளவுக்கு வெட்டிக் குறுக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கும்; இந்த நடவடிக்கைகளை அவற்றின் இறுதி முடிவு வரை செயல் படுத்திச் செல்லவும், அதிகாரவர்க்கத்தை முழுமையாய் ஒழித்திடவும், மக்களுக்கு முழுநிறை ஜனநாயத்தைச் செயல் படுத்தவும் கூடியதாய் இருக்கும்.

காவுத்ஸ்கி இங்கு அரசிடம் அந்தப் பழைய ''மூடபக்தியையும்'' அதிகாரவர்க்கத்தில் அதே ''மூடநம்பிக்கையையும் தான்'' வெளிப்படுத்துகிறார்.

இனி சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான காவுத்ஸ்கியின் நூல்களில் இறுதியானதும் சிறந்ததுமான **ஆட்சி அதிகாரம் பெறும் பாதை** என்னும் அவருடைய பிரசுரத்துக்கு வருவோம் (இது ருஷ்ய மொழியில் பெயர்க்கப்படவில்லை என்று நினைக்கிறேன், ஏனெனில் எங்கள் நாட்டில் பிற்போக்கு உச்ச நிலையில் இருந்த 1909ல் வெளியான நூல் இது). இந்தப் பிரசுரம் ஒரு பெரிய முன்னேற்றப் படியாகும். ஏனெனில் இது, பெர்ன்ஷ்டைனுக்கு எதிரான 1899ஆம் ஆண்டு பிரசுரத்தைப் போல, பொதுவில் புரட்சிகர வேலைத்திட்டம் குறித்துப் பரிசீலிக்கவில்லை; 1902ஆம் ஆண்டு பிரசுரமான **சமுதாயப் புரட்சியைப்** போல சமுதாயப் புரட்சி நடைபெறும் காலத்தைக் கருதாமலே சமுதாயப் புரட்சியின்

கடமைகள் குறித்தும் பரிசீலிக்கவில்லை; ''புரட்சிகளின் சகாப்தம்'' உதித்துக் கொண்டிருக்கிறது என்பதை அங்கீகரிக்கும்படி நம்மை வற்புறுத்தும் ஸ்தூல நிலைமைகளை இது பரிசீலிக்கிறது.

பொதுவில் வர்க்கப் பகைமைகள் முற்றித் தீவிரமடைந்திருப்பதையும், இத்துறையில் குறிப்பிடத்தக்க முக்கிய பங்காற்றும் ஏகாதிபத்தியத்தையும் ஆசிரியர் வெளிப்படையாகவே சுட்டிக்காட்டுகிறார். மேற்கு ஐரோப்பாவில் ''1789—1871ஆம் ஆண்டுகளின் புரட்சிக் கட்டத்துக்குப்'' பிற்பாடு, கிழக்கில் 1905ல் இதையொத்த ஒரு கட்டம் ஆரம்பமாயிற்று என்று கூறுகிறார். அச்சுறுத்தும் வேகத்தில் ஓர் உலக யுத்தம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ''இனி பாட்டாளி வர்க்கம் அகாலப் புரட்சி குறித்துப் பேச முடியாது''. ''நாம் புரட்சிகரக் கட்டத்தில் நுழைந்துவிட்டோம்''. ''புரட்சிகர சகாப்தம் தொடங்குகிறது''.

இந்த உரைகள் தெட்டத் தெளிவானவை. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு முன்னதாய் ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் எவ்வளவு நம்பிக்கை அளிப்போராய் விளங்கினர் என்பதையும், யுத்தம் ஆரம்பமானதும் இவர்கள் — காவுத்ஸ்கியும் அடங்கலாய்—எவ்வளவு கேவலமாய்ச் சீரழிந்துவிட்டனர் என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க காவுத்ஸ்கியின் இந்தப் பிரசுரம் ஓர் அளவுகோலாய்ப் பயன்பட வேண்டும். ''நாம் (அதாவது ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள்) மெய்யாகவே இருப்பதைக் காட்டிலும் அதிக அளவு 'மிதமாய்' இருப்பதாய் எளிதில் தோன்றும் அபாயமிக்கது தற்போதைய நிலைமை'' என்று பரிசீலனையிலுள்ள இந்தப் பிரசுரத்தில் காவுத்ஸ்கி எழுதினார். உண்மையில் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி அது தோன்றியதைக் காட்டிலும் கூடுதலாக மிதமானதென்பதும் சந்தர்ப்பவாதம் கொண்டதென்பதும் தெரியவந்தது!

ஆகவே, புரட்சிகளின் சகாப்தம் ஏற்கெனவே தொடங்கிவிட்டது என்று அவ்வளவு வெளிப்படையாய்க் காவுத்ஸ்கி பிரகடனம் செய்தபோதிலும், ''அரசியல் புரட்சி'' குறித்து ஆய்வதற்கென எழுதப்பட்டதாய் அவரே கூறிக் கொண்ட இந்தப் பிரசுரத்தில் திரும்பவும் அவர் அரசு பற்றிய பிரச்

சினையை அணுகாது அறவே தவிர்த்துக் கொண்டதானது மேலும் குறிப்பிடத்தக்க பண்பறிகுறியாய் விளங்குகிறது.

இப்பிரச்சினையில் இந்தத் தட்டிக்கழிப்புகளும் சொல்லாமல் விட்டவைகளும் மழுப்பல்களும் சேர்ந்து தவிர்க்க முடியாதபடி முழு அளவுக்கும் சந்தர்ப்பவாதத்திடம் ஓடி விடுவதில் முடிவுற்றன. இது குறித்து இனி நாம் பரிசீலித்தாக வேண்டும்.

ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகள் காவுத்ஸ்கியின் மூலம் இப்படி அறிவித்ததாய்த் தோன்றுகிறது; புரட்சிகரக் கருத்தோட்டங்களைப் பற்றியொழுகுகிறேன் *(1899)*, பாட்டாளி வர்க்கத்தின் சமுதாயப் புரட்சி தவிர்க்க முடியாததென்பதை யாவற்றுக்கும் முதலாய் ஏற்றுக்கொள்கிறேன் *(1902)*, புரட்சிகளின் புதிய சகாப்தம் பிறப்பதை ஒத்துக்கொள்கிறேன் *(1909)*. ஆயினும், 1852லேயே மார்க்ஸ் கூறியதற்கு மாறுய்ச் செல்கிறேன், ஏனெனில் அரசு குறித்துப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குள்ள கடமைகளைப் பற்றிய பிரச்சினை எழுப்பப்படுகிறது *(1912)*.

பெனெகக்குடன் காவுத்ஸ்கி நடத்திய வாக்குவாதத்தில் இந்த நேர்முகமான முறையில்தான் இப்பிரச்சினை போடப்பட்டது.

### 3. பெனெகக்குடன் காவுத்ஸ்கியின் வாக்குவாதம்

காவுத்ஸ்கியை எதிர்த்துப் பெனெகக் ''இடது தீவிரவாதப்''போக்கின் பிரதிநிதிகளில் ஒருவராய் வெளிவந்தார். இப்போக்கு ரோஸா லுக்சம்பர்க், கார்ல் ராதெக் முதலானோரையும் கொண்டதாய் இருந்தது. புரட்சிகரப் போர்த்தந்திரத்தை ஆதரித்துச் செயல்பட்ட இவர்கள், கோட்பாடற்ற முறையில் மார்க்சியத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் இடையே ஊசலாடிய ''மையவாத'' நிலைக்கு காவுத்ஸ்கி சென்றுகொண்டிருந்தார் என்ற உறுதியான ஒன்றுபட்ட முடிவுக்கு வந்தனர். இந்தக் கருத்து முற்றிலும் சரியானதென்பது யுத்தத்தால் நிரூபிக்கப்பட்டது. யுத்தத்தின்போது இந்த

''மையவாத'' (தவருக மார்க்சியமென அழைக்கப்பட்டது) போக்கு அல்லது ''காவுத்ஸ்கிவாதம்'' அருவருக்கத்தக்க அதன் முழு அலங்கோல வடிவில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டது.

''வெகுஜன நடவடிக்கையும் புரட்சியும்'' என்ற தலைப்பில் அரசு பற்றிய பிரச்சினையைக் குறிப்பிடும் ஒரு கட்டுரையில் (*Neue Zeit*, 1912, மலர் 30, இதழ் 2) பெனெகக், காவுத்ஸ்கியின் போக்கைச் ''செயலற்ற தீவிரவாதம்'' என்றும், ''செயலின்றி எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையின் தத்துவம்'' என்றும் சித்திரித்தார். ''புரட்சியின் வளர்ச்சிப் போக்கை காவுத்ஸ்கி பார்க்க மறுக்கிருர்'' என்று பெனெகக் எழுதிஞர் (பக்கம் 616). இவ்விவகாரத்தை இந்த வழியில் எடுத்துரைக்கையில், நாம் கருத்து செலுத்தும் பொருளை, அதாவது அரசு சம்பந்தமாய்ப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குள்ள கடமைகளின் பிரச்சினையை அணுகிஞர்.

''பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம், அரசு அதிகாரம் பெறுவதற்காக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நடைபெறும் போராட்டம் மட்டுமின்றி, அரசு அதிகாரத்தை எதிர்க்கும் போராட்டமும் ஆகும்...'' என்று அவர் எழுதிஞர். ''பாட்டாளி வர்க்க அதிகாரக் கருவிகளின் துணை கொண்டு அரசின் அதிகாரக் கருவிகளை அழித்திடுவதும் கலைப்பதும் தான் (Auflösung) இந்த பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உள்ளடக்கம் (பக்கம் 544)... இந்தப் போராட்டம் இதன் விளைவாய் அரசு அமைப்பு அடியோடு ஒழிக்கப்படுகிறபோது தான் ஓயும். ஆட்சி புரியும் சிறுபான்மையோரின் ஒழுங்கமைப்பை அழிப்பதன் மூலம் பெரும்பான்மையோரின் ஒழுங்கமைப்பு அப்பொழுது தனது மேம்பாட்டினை அனைவரும் அறிய நிரூபித்துக் காட்டிவிடும்'' (பக்கம் 548).

பெனெகக் தமது கருத்துக்களை வகுத்தளிக்கும் வடிவத்தில் பெரிய குறைகள் உள்ளன. இருப்பினும் இதன் பொருள் தெளிவாய் விளங்குகிறது. இதற்குக் காவுத்ஸ்கி எப்படி மறுப்பு உரைத்தார் என்பது கவனிக்கத்தக்கது.

''இதுகாறும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் அராஜகவாதிகளுக்கும் இருந்துள்ள முரண்பாடு என்னவென்ருல்,

முன்னவர்கள் அரசு அதிகாரம் வெல்ல விரும்பினர், ஆனல் பின்னவர்கள் அதை அழிக்க விரும்பினர். பெனெகக் இரண்டையும் செய்ய விரும்புகிருர்'' என்று அவர் எழுதினர் (பக்கம் 724).

பெனெகக்கின் விளக்கம் துல்லியமாகவும் ஸ்தூலமாகவும் இல்லே என்ருலும்—அவருடைய கட்டுரையின் பிற குறைபாடுகளேக் குறிப்பிட வேண்டியதில்லே, அவை நமது பரிசீலனேப் பொருளுடன் சம்பந்தப்பட்டவை அல்ல—பெனெகக் எழுப்பும் கோட்பாடு விவகாரத்தை காவுத்ஸ்கி சரியானபடி பற்றிக்கொண்டு பதிலுரைத்தார். கோட்பாடு குறித்த இந்த அடிப்படையான விவகாரத்தில் காவுத்ஸ்கி மார்க்சிய நிலேயை அறவே துறந்துவிட்டு முற்றிலும் சந்தர்ப்பவாதத்திடம் ஓடிவிடுகிருர். சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் அராஜகவாதிகளுக்குமுள்ள வேறுபாட்டுக்கு அவர் அளிக்கும் இலக்கணம் முழுக்க முழுக்க தவருனது; மார்க்சியத்தை அவர் அறவே கொச்சைப்படுத்தித் திரித்துப் புரட்டிவிடுகிருர்.

மார்க்சியவாதிகளுக்கும் அராஜகவாதிகளுக்குமுள்ள வேறுபாடு இதுதான்: (1) முன்னவர்கள் அரசை அடியோடு ஒழிப்பதை நோக்கமாய்க் கொண்டுள்ள அதேபோது சோஷலிசப் புரட்சியால் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட பிறகுதான், சோஷலிசம் நிலேநாட்டப்படுவதன் விளேவாய் மட்டுமே, இந்த நோக்கம் நிறைவேற முடியும், அரசு உலர்ந்து உதிர சோஷலிசம் வழி வகுக்கிறது என்பதை அங்கீகரிக்கிருர்கள். பின்னவர்கள் அரசை ஒழிப்பதற்குரிய நிலேமைகளேப் புரிந்து கொள்ளாமலே எடுத்தயெடுப்பிலே அரசை அடியோடு ஒழிக்க விரும்புகிருர்கள். (2) முன்னவர்கள், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரம் வென்று கொண்டதும் அது பழைய அரசுப் பொறியமைவை அடியோடு அழித்துவிட வேண்டுமென்பதையும், அதனிடத்தில் கம்யூன் வகைப்பட்ட ஆயுதமேந்திய தொழிலாளர்களது ஒழுங்கமைப்பாலான புதிய ஒன்றை நிறுவிக் கொள்வது அவசியமென்பதையும் அங்கீகரிக்கிருர்கள். பின்னவர்கள் அரசுப் பொறியமைவு அழிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்துகையில் அதனிடத்தில் பாட்டாளி வர்க்கம் நிறுவப் போவது என்ன, பாட்டாளி வர்க்கம் எப்படி தனது புரட்சிகர

அதிகாரத்தைப் பிரயோகிக்கப் போகிறது என்பது குறித்துத் தெளிவுடையோராயில்லை. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பதைக் கூட அராஜகவாதிகள் மறுக்கிறார்கள்; அதன் புரட்சிகரச் சர்வாதிகாரத்தை அவர்கள் நிராகரிக்கிறார்கள். (3) முன்னவர்கள் தற்போதுள்ள அரசைப் பயன்படுத்திப் புரட்சிக்காகப் பாட்டாளி வர்க்கத்துக்குப் பயிற்சி தர வேண்டுமென்று கோருகிறார்கள். அராஜகவாதிகள் இதனை நிராகரிக்கிறார்கள்.

இந்த வாக்குவாதத்தில் மார்க்சியத்தின் பிரதிநிதியாய் விளங்குகிறவர் பெனெகக்கே அன்றி காவுத்ஸ்கி அல்ல. ஏனெனில், பழைய அரசு இயந்திரம் புதிய கரங்களுக்கு மாறி வந்துவிடுகிறது என்கிற பொருளில் பாட்டாளி வர்க்கம் அப்படியே அரசு அதிகாரம் வென்று கொண்டுவிட முடியாது, மாறாக அது இந்த இயந்திரத்தை நொறுக்கிவிட்டு, தகர்த்துவிட்டு, அதனிடத்தில் புதிய ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் மார்க்ஸ் போதித்தார்.

காவுத்ஸ்கி மார்க்சியத்தைத் துறந்துவிட்டு சந்தர்ப்பவாத முகாமுக்கு ஓடிவிடுகிறார். எப்படியென்றால், அரசுப் பொறியமைவு அழிக்கப்பட வேண்டுமென்பது — சந்தர்ப்பவாதிகளுக்குச் சிறிதும் ஏற்புடையதாய் இல்லாத இது— அவருடைய வாதத்தில் இடம் பெறாமல் பூரணமாய் மறைந்துவிடுகிறது; ''வென்று கொள்வது'' என்பதற்கு வெறுமனே பெரும்பான்மை பெறுதல் என்பதாய் அர்த்தம் கூறலாமாகையால், இவ்வழியில் அவர் சந்தர்ப்பவாதிகளுக்கு ஒரு நுழைவிடம் விட்டுவைக்கிறார்.

மார்க்சியத்தைத் தாம் திரித்துப் புரட்டுவதை மூடி மறைக்கும் பொருட்டு, காவுத்ஸ்கி வறட்டுச் சூத்திரவாதியாய் நடந்து கொள்கிறார்: நேரே மார்க்சிடமிருந்தே ஒரு ''மேற்கோளை'' எடுத்துரைக்கிறார். 1850ல் மார்க்ஸ் ''அரசின் ஆட்சிக் கரங்களில் அதிகாரம் உறுதியாய் மத்தியத்துவமடைந்திருத்தல்'' அவசியம் என்று எழுதினார்[71]; ஆகவே காவுத்ஸ்கி வெற்றி முழக்கமிட்டுக் கேட்கிறார்: பெனெகக் ''மத்தியத்துவத்தை'' அழித்திடவா விரும்புகிறார்?

இது ஒரு தந்திரமே அன்றி வேறல்ல. மத்தியத்துவத்துக்கு எதிராய்க் கூட்டாட்சி முறை என்பது குறித்து மார்க்ஸியம், புரூதோனியம் இவை இரண்டின் கருத்தோட்டங்களும் ஒன்றேதான் என்று பேர்ன்ஷ்டைன் கூற முயன்றுரே அதையொத்த ஒரு தந்திரமே ஆகும்.

காவுத்ஸ்கி கூறும் ''மேற்கோள்'' இங்கு சிறிதும் பொருந்தாது. மத்தியத்துவம் பழைய அரசுப் பொறியமைவு, புதிய அரசுப் பொறியமைவு ஆகிய இரண்டிலுமே சாத்தியமானதுதான். தொழிலாளர்கள் தாமே மனமுவந்து தமது ஆயுதப் படைகளை ஒன்றுபடுத்திக் கொண்டார்களாயின் அது மத்தியத்துவம் தானே. ஆனால் இந்த மத்தியத்துவம் மத்தியத்துவ அரசு இயந்திரத்தை—நிரந்தர சேனை, போலீஸ், அதிகார வர்க்கம் ஆகியவற்றை—''அடியோடு அழிப்பதன்'' அடிப்படையில் அமைந்ததாய் இருக்கும். கம்யூன் குறித்து மார்க்சும் எங்கெல்சும் கூறிய வாதங்களை யாவரும் நன்கு அறிவர்; இவற்றைக் கவனியாது தட்டிக் கழித்துவிட்டு, இங்குள்ள பிரச்சினையுடன் சிறிதும் சம்பந்தப்படாத ஒரு மேற்கோளைப் பிய்த்தெடுத்துக் கூறுவதன் மூலம் காவுத்ஸ்கி ஏய்த்துப் பிழைக்கும் எத்தனாய் நடந்து கொள்கிறார்.

''...அவர் (பெனெகக்) அதிகாரிகளுடைய அரசுப் பணிகளை ஒழித்துவிட விரும்புகிறாரா, என்ன?'' என்று காவுத்ஸ்கி தொடர்ந்து எழுதுகிறார். ''ஆனால் அரசு நிர்வாகம் இருக்கட்டும், கட்சியிலும் தொழிற்சங்கங்களிலுங்கூட நம்மால் அதிகாரிகள் இல்லாதபடி செய்ய முடியாதே. நமது வேலைத்திட்டம் அரசு அதிகாரிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்று கோரவில்லை, அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றுதான் கூறுகிறது... இங்கு நாம் விவாதிப்பது 'வருங்கால அரசின்' நிர்வாக இயந்திரம் எவ்வடிவம் கொண்டதாய் இருக்கும் என்பதல்ல, நமது அரசியல் போராட்டம் அரசு அதிகாரத்தை, நாம் அதைப் பிடித்துக்கொள்ளும் முன்பே (அழுத்தம் காவுத்ஸ்கியினுடையது), ஒழித்து விடுகிறதா (சொல்லைப் பெயர்த்தால் கரைத்துவிடுகிறதா — auflöst) என்பதுதான். அதிகாரிகளோடு ஒழிக்கப்படக் கூடிய அமைச்சகம் எது?'' பிறகு கல்வி, நீதி, நிதி, இராணுவம் ஆகியவற்றின் அமைச்சகங்களின் பட்டியல் தரப்படுகிறது. ''இல்லை,

அரசாங்கத்துக்கு எதிரான நமது அரசியல் போராட்டத்தால் தற்போதுள்ள அமைச்சகங்களில் எதுவுமே நீக்கப்பட்டு விடாது... தவருய்ப் புரிந்து கொள்ளப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, திரும்பவும் கூறுகிறேன்: இங்கு நாம் விவாதிப்பது வெற்றி பெறும் சமூக-ஜனநாயகவாதிகள் 'வருங்கால அரசுக்கு' அளித்திடப் போகும் வடிவம் அல்ல, நமது எதிர்ப்பினுல் தற்போதுள்ள அரசு எப்படி மாற்றப்படுகிறது என்பதையே விவாதிக்கிருேம்'' (பக்கம் 725).

இது ஒரு தந்திரமே என்பது தெளிவு. பெனெகக் புரட்சி என்னும் பிரச்சினையை எழுப்பினர். அவருடைய கட்டுரையின் தலைப்பும் மேற்கண்ட வாசகங்களும் இதைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன. ''எதிர்ப்பு'' என்னும் பிரச்சினைக்குத் தாவிச் செல்வதன் மூலம், காவுத்ஸ்கி புரட்சிக் கண்ணேட்டத்துக்குப் பதிலாய்ச் சந்தர்ப்பவாதக் கண்ணேட்டத்தைக் கொண்டுவந்து புகுத்துகிருர். அவர் சொல்வதன் பொருள் இதுதான்: தற்போது நாம் எதிர்த்தரப்பாய் இருக்கிருேம்; ஆட்சி அதிகாரத்தைப் பிடித்த பிற்பாடு எப்படி இருப்போம், அதை அப்புறம் பார்க்கலாம். புரட்சி மறைந்தே விட்டது! சந்தர்ப்பவாதிகள் விரும்பியது இதுவேதான்.

பிரச்சினை எதிர்ப்பும் அல்ல, பொதுவில் அரசியல் போராட்டமும் அல்ல; புரட்சிதான் பிரச்சினை. புரட்சி என்பது பாட்டாளி வர்க்கம் ''நிர்வாக இயந்திரத்தை'', அரசு இயந்திரம் அனைத்தையுமே அழித்துவிட்டு, ஆயுதமேந்திய தொழிலாளர்களாலான ஒரு புதிய இயந்திரத்தை அதனிடத்தில் அமைப்பதில்தான் அடங்கியுள்ளது. காவுத்ஸ்கி ''அமைச்சகங்களிடம்'' ''மூடபக்தி'' கொண்டிருக்கிருர், இவற்றை நீக்கிவிட்டு, அனைத்து அதிகாரமுள்ள தொழிலாளர்கள், படையாட்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் கீழ் இயங்கும் நிபுணர் குழுக்களை இவற்றுக்குப் பதிலாய் அமைக்க முடியாதா?

''அமைச்சகங்கள்'' தொடர்ந்து இருக்குமா, அல்லது ''நிபுணர் குழுக்களோ'', வேறு ஏதோ அமைப்புகளோ நிறுவப்படுமா என்பதல்ல கேள்வி—இது எப்படி இருப்பினும் ஒன்றுதான். பழைய அரசுப் பொறியமைவு (முதலாளித்துவ

வர்க்கத்துடன் ஆயிரம் ஆயிரம் இழைகளால் பின்னிப் பிணைக் கப்பட்டதும் மாருத மாமூல்களிலும் மந்தத்திலும் ஊறி விட்டதுமான இந்தப் பொறியமைவு) தொடர்ந்து இருந்து வருமா, அல்லது அழிக்கப்பட்டு அதனிடத்தில் புதிய ஒன்று அமைக்கப்படுமா என்பதே கேள்வி. புதிய வர்க்கம் பழைய அரசுப் பொறியமைவின் துணை கொண்டு ஆணை செலுத்தி, ஆட்சி புரிவதில் அடங்குவதல்ல புரட்சி; இந்த வர்க்கம் இந்தப் பொறியமைவை நொறுக்கிவிட்டு, ஒரு புதிய பொறி யமைவின் துணை கொண்டு ஆணை செலுத்தி, ஆட்சி புரிவதில் தான் புரட்சி அடங்கியுள்ளது. மார்க்சியத்தின் இந்த அடிப் படைக் கருத்தை காவுத்ஸ்கி மூடி மெழுகிவிடுகிருர், அல்லது இதைப் புரிந்துகொள்ளத் தவறிவிடுகிருர்.

அதிகாரிகளைப் பற்றி அவர் எழுப்பும் கேள்வி, கம்யூனின் படிப்பினைகளையும் மார்க்சின் போதனைகளையும் அவர் புரிந்து கொள்ளவில்லை என்பதைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது. ''கட்சியும் தொழிற்சங்கங்களிலும்கூட நம்மால் அதிகாரி கள் இல்லாதபடிச் செய்ய முடியாதே...''

முதலாளித்துவத்தில், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சி யில் நம்மால் அதிகாரிகள் இல்லாதபடிச் செய்ய முடியாது தான். முதலாளித்துவத்தால் பாட்டாளி வர்க்கம் ஒடுக் கப்பட்டு இருக்கிறது, உழைப்பாளி மக்கள் அடிமைப்படுத் தப்பட்டு இருக்கிருர்கள். முதலாளித்துவத்தில் ஜனநாயகம் கூலி அடிமை முறையின் எல்லா நிலைமைகளாலும் மக்களு டைய வறுமையாலும் துன்பத்தாலும் கட்டுண்டு, இறுக்கப் பட்டு, குறுகலாக்கப்பட்டு, குலைக்கப்பட்டு இருக்கிறது. இக்காரணத்தினுல்தான், இது ஒன்றினுல்தான், நமது அரசி யல் நிறுவனங்கள், தொழிற்சங்கங்களின் நிர்வாகிகள் முத லாளித்துவ நிலைமைகளால் களங்கப்படுத்தப்படுகிருர்கள்— அல்லது இன்னும் துல்லியமாய்ச் சொல்வதெனில் களங்கமுறு வதற்கான போக்குடையோர் ஆக்கப்படுகிருர்கள்—அதிகார வர்க்கத்தினராய், அதாவது மக்களிடமிருந்து பிரிந்து மக் களுக்கு மேலானேராய், தனிச் சலுகை படைத்தோராய், மாறிவிடும் போக்குடையோராகின்றனர்.

அதிகாரவர்க்க அமைப்பின் சாராம்சம் இது. முதலாளிகளுடைய உடைமைகள் பறிமுதல் செய்யப்படுகிறவரை, முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்படுகிறவரை, பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும் கூட தவிர்க்கமுடியாதபடி ஓரளவுக்கு ''அதிகாரவர்க்க மயமாக்கப்படவே'' செய்வர்.

தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகிகள் சோஷலிசத்திலும் இருப்பார்களாதலால், காவுத்ஸ்கியின் கூற்றுப்படி அதிகாரிகளும் இருக்கவே செய்வர், அதிகாரவர்க்கமும் இருக்கவே செய்யும்! அவருடைய இந்தக் கூற்று முற்றிலும் தவருனது. மார்க்ஸ், கம்யூனுடைய உதாரணத்தைச் சுட்டிக்காட்டி, நிர்வாகிகள் ''அதிகாரவர்க்கத்தினராய்'' இருப்பது, ''அதிகாரிகளாய்'' இருப்பது சோஷலிசத்தில் முடிவுற்றுவிடும் என்பதைக் காட்டுகிருர்; அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்னும் கோட்பாட்டுடன்கூட, எந்த அளவுக்கு, எந்நேரத்திலும் திருப்பியழைக்கப்படலாமென்ற கோட்பாடும் புகுத்தப்படுகிறதோ, சம்பளங்கள் சராசரித் தொழிலாளியுடைய சம்பளத்தின் நிலைக்குக் குறைக்கப்படுகிறதோ, மற்றும் நாடாளுமன்ற உறுப்புக்களுக்குப் பதிலாய் ''ஒருங்கே நிர்வாக மன்றங்களாகவும் சட்ட மன்றங்களாகவும் இயங்கும் செயலாற்றும் உறுப்புக்கள்'' நிறுவப்படுகின்றனவோ அந்த அளவுக்கு ''அதிகாரவர்க்கத்தினருக்கும்'' ''அதிகாரிகளுக்கும்'' முடிவு ஏற்பட்டுவிடும்.[72]

உண்மை என்னவென்ருல், பெனெகக்குக்கு எதிரான காவுத்ஸ்கியின் வாதம் முழுதும், இன்னும் முக்கியமாய் நம் கட்சியிலும் தொழிற்சங்க நிறுவனங்களிலுங்கூட நம்மால் அதிகாரிகள் இல்லாதபடிச் செய்யமுடியாதே என காவுத்ஸ்கி கூறும் அதியற்புத வாதமும், பொதுவில் மார்க்சியத்தை எதிர்த்து பெர்ன்ஷ்டைன் கூறிய அந்தப் பழைய ''வாதங்களை'' அப்படியே திருப்பிக் கூறுவதே ஆகும். அவருடைய ஓடுகாலிப் புத்தகமான சோஷலிசத்தின் முதற்கோள்களில் பெர்ன்ஷ்டைன் ''புராதன'' ஜனநாயகத்தின் கருத்துக்களை எதிர்க்கிருர்; ''வறட்டுச் சூத்திர ஜனநாயகம்'' என்பதாய் அவர் குறிப்பிடும் உரிமைக் கட்டளைகள், சம்பளமில்லா அதி

காரிகள், அதிகாரமில்லா மத்தியப் பிரதிநிதித்துவ அமைப்பு கள் முதலானவற்றை எதிர்க்கிறுர். இந்தப் ''புராதன'' ஜனநாயகம் சரியானதல்ல என்று நிரூபிக்கும் பொருட்டு, அவர் வெப் தம்பதியர் தந்த விளக்கத்தை ஆதாரமாய்க் கொண்டு பிரிட்டிஷ் தொழிற் சங்கங்களுடைய அனுபவத் தைக் குறிப்பிடுகிறுர். ''பரிபூரண சுதந்திரத்தில்'' தொழிற் சங்கங்கள் எழுபது ஆண்டுக் காலம் வளர்ச்சியுற்றன என்று கூறுகிறுர் (பக்கம் 137, ஜெர்மன் பதிப்பு); புராதன ஜனநாய கம் உதவாது என்பதை இந்த வளர்ச்சி அவற்றுக்கு ஐயமற உணர்த்திற்று; ஆகவே அவை இதைக் கைவிட்டு, அதற்குப் பதிலாக சாதாரண ஜனநாயகத்தை, அதாவது நாடாளு மன்ற அமைப்பு அதிகாரவர்க்கத்துடன் இணைந்தமைந்ததை, ஏற்றன என்கிறுர்.

உண்மையில், தொழிற்சங்கங்கள் வளர்ந்தது ''பரிபூரண சுதந்திரத்தில்'' அல்ல, பரிபூரண முதலாளித்துவ அடிமை முறையிலேதான். இந்த நிலைமையில், நடப்பிலுள்ள கேட் டுக்கும், வன்முறைக்கும், பொய்மைக்கும், ''மேல்நிலை'' நிர்வாக விவகாரங்களிலிருந்து ஏழைகள் ஒதுக்கப்படுதலுக் கும் பல வழிகளிலும் அவை விட்டுக் கொடுப்பது ''இல்லாத படிச் செய்ய முடியாது'' என்பதைக் கூறத் தேவையில்லை. சோஷலிசத்தில் இந்தப் ''புராதன'' ஜனநாயகத்தின் இயல்பு கள் பலவும் தவிர்க்க முடியாதபடி புத்துயிர்பெற்றெழும். ஏனென்றுல், நாகரிக சமுதாயத்தின் வரலாற்றிலே முதன் முதலாய் மக்கள் தொகையில் மிகப் பெருந் திரளானேர் அப் பொழுது வாக்கெடுப்பிலும் தேர்தல்களிலும் மட்டுமின்றி, அரசின் அன்றுட நிர்வாகத்திலுங்கூட சுயேச்சையாய்ப் பங்கு பெறும் நிலைக்கு உயர்ந்துவிடுவார்கள். சோஷலிசத்தில் எல் லோரும் முறை வைத்துக் கொண்டு அரசாட்சி நடத்தி விரைவில் யாருமே அரசாளாத நிலைமை ஏற்படப் பழகிக் கொண்டுவிடுவார்கள்.

விமர்சன-பகுத்தாய்வு மேதையான மார்க்ஸ் கம்யூ னுடைய நடைமுறை நடவடிக்கைகளில், திரும்புமுனையைக் கண்ணுற்றுர். இந்தத் திரும்புமுனை சந்தர்ப்பவாதிகளை நடுங்கச் செய்கிறது. அவர்கள் தமது கோழைத்தனம் காரண

மாகவும், முதலாளித்துவ வர்க்கத்துடன் முடிவாகவும் முற்றாகவும் முறித்துக்கொள்ள விரும்பாததன் காரணமாகவும் இந்தத் திரும்புமுனையை அங்கீகரிக்க விரும்பவில்லை. அராஜகவாதிகள் அவர்கள் அவசரக்காரர்களாய் இருப்பதன் காரணமாகவோ, பெரிய சமுதாய மாறுதல்களுக்கான எல்லா நிலைமைகளையும் புரிந்து கொள்ளாததன் காரணமாகவோ இந்தத் திரும்பு முனையைப் பார்க்க விரும்பவில்லை. ''பழைய அரசுப் பொறியமைவை அழிப்பது குறித்து நாம் நினைக்கவே கூடாது, அமைச்சகங்களும் அதிகாரிகளும் இல்லாமல் இருக்கவும் முடியுமா?'' என்பதே சந்தர்ப்பவாதியின் வாதம். சந்தர்ப்பவாதி குட்டிமுதலாளித்துவ மனப்பான்மையில் ஊறிப்போனவன், புரட்சியிலும் புரட்சியின் ஆக்க ஆற்றலிலும் உள்ளுக்குள் நம்பிக்கையில்லாதவன், புரட்சி என்றதுமே நடுங்கிச் சாகிறவன் (நமது மென்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் போல).

''பழைய அரசுப் பொறியமைவை ஒழிப்பது பற்றி மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும், முந்தியப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் ஸ்தூலப் படிப்பினைகளை அலசி ஆராய்வதிலும், அழிக்கப்பட்டதன் இடத்தில் எதை வைப்பது, எப்படி வைப்பது என்று பகுத்தாய்வதிலும் பயனில்லை'' என்பதாய் அராஜகவாதி வாதாடுகிறான் (அராஜகவாதிகளில் சிறந்தவர்களையே கூறுகிறேன், கிரப்போத்கின்களைப் போன்றோரைப் பின்தொடர்ந்து முதலாளித்துவ வர்க்கத்துக்கு வால் பிடித்துச் செல்வோரை அல்ல). ஆகவே, அராஜகவாதியின் போர்த்தந்திரம் வெகுஜன இயக்கத்தின் நடைமுறை நிலைமைகளைக் கணக்கில் கொண்டு ஸ்தூலமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய அஞ்சாநெஞ்சம் கொண்ட புரட்சிகர முயற்சியின் போர்த்தந்திரமாய் இல்லாது, **விரக்தியின்** போர்த்தந்திரமாகி விடுகிறது.

இரு தவறுகளையும் தவிர்த்துக் கொள்ள மார்க்ஸ் போதனை செய்கிறார். பழைய அரசுப் பொறியமைவு அனைத்தையும் அழித்திட உன்னதத் துணிவோடு செயல்படும்படி அவர் போதனை செய்கிறார்; அதேபோது பிரச்சினையை ஸ்தூலமாய் வகுத்திட அவர் போதனை செய்கிறார்: கம்யூனது விரிவான

ஜனநாயகத்துக்கு வழி செய்யவும் அதிகாரவர்க்கத்தை வேரோடு வீழ்த்திடவும் இந்த நடவடிக்கைகளை எடுத்து ஒரு சில வாரங்களுக்குள் ஒரு புதிய, பாட்டாளி வர்க்க அரசுப் பொறியமைவை அமைக்கத் தொடங்க முடிந்தது. கம்யூனர்டு களிடமிருந்து நாம் புரட்சிகரத் துணிவைக் கற்றுக் கொள்ள வேண்டும்; அவர்களுடைய நடைமுறை நடவடிக்கைகளில் மெய்யாகவே அவசரமான, உடனடியாகவே சாத்தியமான நடவடிக்கைகளின் உருவரையை நாம் கண்டறிந்து கொள்ள வேண்டும்; பிறகு இந்தப் பாதையைப் பின்பற்றி நாம் அதிகார வர்க்கத்தை அடியோடு அழிப்பதில் வெற்றி பெறு வோம்.

அதிகாரவர்க்கம் இவ்வாறு அழிக்கப்படுவதன் சாத்தியப் பாடு பின்வரும் உண்மைகளால் உத்தரவாதம் செய்யப்படு கிறது: சோஷலிசம் வேலை நேரத்தைக் குறையச் செய்யும், புது வாழ்வை மலரச் செய்து மக்கள்திரளை உயர் நிலைக்கு உயர்த்தி விடும், விதிவிலக்கின்றி ஒவ்வொருவரும் ''அரசுப் பணிகளைச்'' செய்யக்கூடியவர்களாய் உயரும் படியான நிலைமைகளை மக்கள் தொகையில் பெரும்பான்மை யோருக்கு உண்டாக்கித் தரும். பொதுவில் அரசின் ஒவ் வொரு வடிவமும் அறவே உலர்ந்து உதிர்வதற்கு இவ்விதம் வழி வகுக்கப்படும்.

''...அரசு அதிகாரத்தை அழிப்பது இதன் குறிக்கோளாய் (வெகுஜன வேலைநிறுத்தத்தின் குறிக்கோளாய்) இருக்க முடி யாது'' என்று காவுத்ஸ்கி தொடர்ந்து எழுதுகிறார். ''அரசாங் கத்தைக் குறிப்பிட்ட பிரச்சினையில் இணங்கிவிடச் செய் வதே, அல்லது பாட்டாளி வர்க்கத்துக்குப் பகைமையாயுள்ள அரசாங்கத்தை நீக்கிவிட்டு பாட்டாளி வர்க்கத்தை இடை வழியில் சந்திக்க (entgegenkommende) விருப்பம் கொண்ட ஒன்றை அமர்த்துவதே அதன் குறிக்கோளாய் இருக்க முடி யும்... ஆனால் ஒருபோதும், எப்படிப்பட்ட நிலைமையிலும், அது'' (அதாவது, பகை அரசாங்கத்தின் மீதான பாட்டாளி வர்க்க வெற்றி) ''அரசு அதிகாரத்தின் அழிவுக்கு இட்டுச் செல்ல முடியாது; அரசு அதிகாரத்தின் வரம்புக்குள் சக்தி களின் பரஸ்பர நிலையிலே ஓரளவு பெயர்ச்சியை (Verschiebung) உண்டாக்குவது மட்டுமே இதன் விளைவாய் இருக்க முடியும்...

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதன் மூலமும் நாடாளுமன்றத்தை அரசாங்கத்தின் எஜமானனது நிலைக்கு உயரச் செய்வதன் மூலமும் அரசு அதிகாரம் வெல்வதே, கடந்த காலத்தைப் போல இப்பொழுதும் நமது அரசியல் போராட்டத்தின் குறிக்கோள்'' (பக்கங்கள் 726, 727, 732).

இது கலப்பற்ற படுமட்டமான சந்தர்ப்பவாதமே அன்றி வேறல்ல: சொல்லளவில் புரட்சி பேசி, செயலில் புரட்சியை நிராகரிப்பதே அன்றி வேரல்ல. ''பாட்டாளி வர்க்கத்தை இடைவழியில் சந்திக்க விருப்பம் கொண்ட... ஓர் அரசாங்கம்'' — காவுத்ஸ்கியின் சிந்தனைகள் இதற்குமேல் செல்ல முடியாதவை, ''ஆளும் வர்க்கமாய் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம்'' என்று கம்யூனிஸ்டு அறிக்கை பிரகடனம் செய்த 1847ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது குட்டி முதலாளித்துவச் சுழிசடை நிலையின் திசையில் பின்னோக்கி ஓடுவதே ஆகும்.

ஷெய்டெமன்கள், பிளெஹானவ்கள், வண்டர்வேல்டேகள்—''பாட்டாளி வர்க்கத்தை இடைவழியில் சந்திக்க விருப்பம் கொண்ட'' ஓர் அரசாங்கத்துக்காகப் போராட ஒத்துக் கொள்ளும் இவர்கள் எல்லோருடனும் காவுத்ஸ்கி தமது இதயங்கனிந்த ''ஐக்கியத்தை'' அடைந்தாக வேண்டும்.

ஆனால் நாங்கள் சோஷலிசத்தின் துரோகிகளான இவர்களிடமிருந்து முறித்துக் கொள்ளவே செய்வோம். ஆயுதமேந்திய பாட்டாளி வர்க்கம் தானே அரசாங்கமாகிவிடும் பொருட்டு நாம் பழைய அரசுப் பொறியமைவை அடியோடு அழிப்பதற்காகப் போராடவே செய்வோம். இவை ''இரண்டும் அறவே வேறானவை''.

''அரசு அதிகாரத்தின் வரம்புக்குள் சக்திகளின் பரஸ்பர நிலையிலே பெயர்ச்சியை உண்டாக்கவும்'', ''நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறவும்'', ''நாடாளுமன்றத்தை அரசாங்கத்தின் எஜமானனது நிலைக்கு உயரச் செய்யவும்'' பணி புரியச் சித்தமாயிருக்கும் லெகின்களும் டேவிட்களும், பிளெஹானவ்களும் பத்ரேசவ்களும் தெஸெரெத்தேலிகளும் செர்னேவ்களுமானோரின் இனிய சகவாசத்தில்

காவுத்ஸ்கி இன்பம் காணட்டும். யாவற்றையும் முதலாளித் துவ நாடாளுமன்றக் குடியரசின் வரம்புகளுக்குள்ளேயே இருத்திக் கொள்வதும், சந்தர்ப்பவாதிகளுக்கு முற்றிலும் ஏற்புடைத்ததுமான இந்த இலட்சியம் மிக்கச் சிறப்பனதே.

ஆனுல் நாங்கள் சந்தர்ப்பவாதிகளிடமிருந்து முறித்துக் கொள்வோம். வர்க்க உணர்வு கொண்ட பாட்டாளி வர்க்கம் அனைத்தும் எங்களுடன் சேர்ந்து போராடும்—''சக்திகளின் பரஸ்பர நிலையில் பெயர்ச்சியை உண்டாக்குவதற்காக'' அல்ல, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காக, முத லாளித்துவப் நாடாளுமன்ற முறையை அழிப்பதற்காக, கம்யூனை முன்மாதிரியாகக் கொண்ட ஜனநாயகக் குடியரசு அல்லது தொழிலாளர்கள், படையாட்களது பிரதிநிதிகளின் சோவியத்துகளுடைய குடியரசுக்காக, பாட்டாளி வர்க்கத் தின் புரட்சிகரச் சர்வாதிகாரத்துக்காகப் போராடும்.

* * *

சர்வதேச சோஷலிசத்தில் காவுத்ஸ்கிக்கு வலப்புறத்தில் ஜெர்மனியில் சோஷலிஸ்டு மாத இதழ்[73] (லெகின், டேவிட், கோல்ப், மற்றும் ஸ்டானிங், பிரான்டிங் ஆகிய ஸ்காண் டினேவியர்களும் அடங்கலான ஏனைய பலரும்); பிரான்சிலும் பெல்ஜியத்திலும் ழொரேசைப் பின்பற்றுவோரும்[74] வண் டர்வேல்டேயும்; இத்தாலியக் கட்சியின் டுராட்டியும் திரெ வெசும் பிற வலதுசாரிகளும்; பிரிட்டனில் ஃபேபியன்களும் ''சுயேச்சையாளர்களும்'' (''சுயேச்சைத் தொழிற் கட்சி''[75] எப்பொழுதுமே, உண்மையில், மிதவாதிகளைச் சார்ந்த தாகவே இருந்துள்ளது); இன்ன பிறரும் உள்ளனர். இந்தக் கனவான்கள் எல்லோரும் நாடாளுமன்ற வேலையிலும் இவர் களுடைய கட்சிப் பத்திரிகைகளிலும் பெரும் பங்கு, பல சந்தர்ப்பங்களில் முதன்மையான பங்கு, ஆற்றுகிறவர்கள்; இவர்கள் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை அறவே புறக்கணித்துவிட்டு, ஒளிவுமறைவற்ற சந்தர்ப்பவாதக்

கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள். இந்தக் கனவான்களின் கண்களில் பாட்டாளி வர்க்கச் ''சர்வாதிகாரம்'' ஜனநாயகத்துக்கு ''முரணானது''!! இவர்களுக்கும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கும் உண்மையில் அடிப்படை வேறுபாடு எதுவும் இல்லை.

இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், இரண்டாவது அகிலம், அதாவது அதன் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளில் மிகப் பெருவாரியான பிரிவு, முழுக்க முழுக்க சந்தர்ப்பவாதத்தில் மூழ்கிவிட்டது என்று முழு நியாயத்துடன் முடிவு செய்யலாம். கம்யூனின் அனுபவம் புறக்கணிக்கப்பட்டதோடு அல்லாமல், திரித்துப் புரட்டவும் பட்டிருக்கிறது. பழைய அரசுப் பொறியமைவை நொறுக்கி அதனிடத்தில் புதிய ஒன்றை அமைக்கத் தொழிலாளர்கள் செயல்பட வேண்டும், இவ்வழியில் அவர்கள் தமது அரசியல் ஆட்சியை சமுதாயத்தின் சோஷலிசப் புனரமைப்புக்குரிய அடித்தளமாக்கிக் கொள்ள வேண்டும், இதற்குரிய தருணம் அருகாமையில் வந்து கொண்டிருக்கிறது என்கிற கருத்தைத் தொழிலாளர்களுடைய மனதில் பதிய வைப்பதற்குப் பதிலாய், உண்மையில் இதற்கு நேர் விரோதமான ஒன்றைத் தான் இப்பிரதிநிதிகள் வெகுஜனங்களுக்குப் பிரசாரம் செய்து, சந்தர்ப்பவாதத்துக்கு ஆயிரக்கணக்கான நுழைவிடங்கள் விட்டுவைக்கும் விதத்தில் ''ஆட்சியதிகாரம் வெல்வதற்கான போராட்டத்தைச்'' சித்திரித்துள்ளனர்.

ஏகாதிபத்தியப் போட்டியின் விளைவாய் விரிந்து வளர்ந்து விட்ட இராணுவ இயந்திரத்தைக் கொண்ட அரசுகள் இராணுவ பூதங்களாகி, உலகை ஆள வேண்டியது பிரிட்டனா, ஜெர்மனியா—இந்த நிதி மூலதனமா அல்லது அதுவா—என்னும் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இப்பூதங்கள் இலட்சோப இலட்ச மக்களை அழித்தொழித்திடும் ஒரு நேரத்தில்,

அரசின்பால் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குள்ள போக்கு குறித்த பிரச்சினையைத் திரித்துப் புரட்டுவதும் மூடி மறைப்பதும் மிகப் பெரும் பாத்திரம் ஆற்ருது இருக்காது.*

---

* கையெழுத்துப் பிரதி பின்வருமாறு தொடர்கிறது:

''அத்தியாயம் 7

**1905, 1917ஆம் ஆண்டுகளின் ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம்**

இந்த அத்தியாயத்தின் தலைப்பு குறிப்பிடும் பொருள் மிகப் பெரிது, இதைப் பற்றி பல புத்தகங்கள் எழுத முடியும், எழுத வேண்டும். இந்தப் பிரசுரத்தில் இயற்கையாகவே நாம், அனுபவம் அளித்திடும் மிக முக்கிய படிப்பினைகளை, அரசு அதிகாரம் குறித்துப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்துக்குள்ள பணிகளுடன் நேரடியாய் சம்பந்தப்பட்ட படிப்பினைகளைப் பரிசீலிப்பதுடன் நிறுத்திக் கொள்வோம்.'' (கையெழுத்துப் பிரதி இதோடு நின்றுவிடுகிறது.—ப-ர்.)

## முதற் பதிப்புக்குப் பின்னுரை

*இந்தப் பிரசுரம் 1917 ஆகஸ்டு, செப்டம்பரில் எழுதப் பட்டது. ஏழாவதான அடுத்த அத்தியாயத்துக்கு—''1905, 1917ஆம் ஆண்டுகளின் ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம்''— ஏற்கெனவே திட்டம் வகுத்திருந்தேன். ஆனால் தலைப்பைத் தவிர்த்து இந்த அத்தியாயத்தில் ஒரு வரிகூட எழுத முடிய வில்லை, நேரம் கிடைக்கவில்லை. 1917 அக்டோபர் புரட்சி யின் தறுவாயிலான அரசியல் நெருக்கடி ''குறுக்கிட்டுவிட் டது''. இது போன்ற ''குறுக்கீடு'' வரவேற்கத்தக்கதே. ஆனால் பிரசுரத்தின் இரண்டாம் பாகத்தை (''1905, 1917 ஆம் ஆண்டுகளின் ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம்'') நெடுங் காலத்துக்கு ஒத்திப்போட வேண்டியதாகிவிடும் போலிருக் கிறது. ''புரட்சியின் அனுபவத்தை'' எழுதுவதைக் காட்டி லும் நேரில் வாழ்ந்து காண்பது மேலும் இனிதாகவும், பய னுள்ளதாகவும் இருக்கிறது.*

ஆசிரியர்

*பெத்ரொகிராத்*
*1917, நவம்பர் 30*

*1917, ஆகஸ்டு-செப்டம்பரில்*
*எழுதப்பட்டது*

*முதற் பதிப்புக்குப் பின்னுரை—*
*1917 நவம்பர் 30லும்*
*§3, அத்தியாயம் 2—1918*
*டிசம்பர் 17க்கு முன்பும்*
*எழுதப்பட்டவை*

*1918ல்* ழீஸ்ன் இ ஸ்ஞனியே
*பதிப்பகத்தால் தனிப்பிரசுரமாய்*
*பெத்ரொகிராதில் வெளியிடப்*
*பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 33,*
*பக்கங்கள் 1—120*

## பதிப்பாளர் குறிப்புகள்

1 ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் *1916 ஜனவரிக்கும் ஜூனுக்கும் இடையே ஸூரிச்சில் எழுதப்பட்டது.*

*முதலாளித்துவத்தின் வளர்ச்சியில் ஏற்பட்டிருந்த புதிய புலப்பாடுகளை முதல் உலகப் போர் ஆரம்பமாகும் முன்னரே லெனின் கவனித்திருந்தார். ஏகாதிபத்தியச் சகாப்தத்தின் இயல்புகளில் சிலவற்றை அவர் வெளிப்படுத்திக் காட்டிப் பகுத்தாய்ந்திருந்தார், முதலாளித்துவத்தைப் பற்றிய அண்மைக் காலத்திய வெளியீடுகளை உன்னிப்பாய்க் கவனித்தும் ஆய்ந்தறிந்தும் வந்தார்.*

*முதல் உலகப் போர் ஆரம்பமானதும் முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டத்தைப் பற்றிய தமது விரிவான ஆராய்ச்சியை அவர் தொடங்கியிருந்தார்.* ஏகாதிபத்தியம்—முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் *என்பதற்குத் தயாரிப்பு விவரப் பொருளாய் அமைந்த* ஏகாதிபத்தியத்தைப் பற்றிய குறிப்பு நோட்டுப் புத்தகங்கள் *சுமார் 50 போலியோ பாரங்களைக் கொண்டவை; 148 புத்தகங்களிலிருந்தும் (106 ஜெர்மன், 23 பிரெஞ்சு, 17 ஆங்கிலப் புத்தகங்களும் இரண்டு ருஷ்ய மொழிபெயர்ப்புகளும் அடங்கலாய்), 232 கட்டுரைகளிலிருந்தும் எடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டவை.*

ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் மிக அண்மையக் கட்டம் (பலரும் படிப்பதற்கான உருவரை) *என்ற தலைப்பில் 1917ஆம் ஆண்டின் நடுவில் இந்நூல் வெளியிடப்பட்டது. நூலின் முகவுரையையும் லெனினே எழுதியிருந்தார், இது 1917 ஏப்ரல் 26 என்று தேதிக் குறிப்பு தாங்கியிருந்தது.*

*பக்கம் 9*

2 *இந்தச் சமாதான உடன்படிக்கையில் சோவியத் ருஷ்யாவும் (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா,*

துருக்கி ஆகிய) நால்வர் கூட்டு அரசுகளும் பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் நகரில் 1918 மார்ச் 3ல் கையொப்பமிட்டன; மார்ச் 15ல் சோவியத்துகளது நான்காவது அனைத்து ருஷ்யச் சிறப்புக் காங்கிரசால் இது அங்கீகரிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. இதன் சமாதான வரையறைகள் ருஷ்யாவுக்கு அநியாயமாகப் பாதகமாயிருந்தன. இவை போலந்தையும் அனேகமாய்ப் பால்டிக் பகுதி அனைத்தையும் பெலோருஷ்யாவில் ஒரு பகுதியையும் ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரியின் மேலாண்மையின்கீழ் இருத்தின. உக்ரேனியா சோவியத் ருஷ்யாவிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஜெர்மனியின் சார்பு அரசாக மாற்றப்பட்டது. கார்ஸ், பத்தூம், அர்தகான் நகரங்கள் துருக்கியிடம் அளிக்கப்பட்டன. மேலும் கொள்ளைக்காரக் கோரிக்கைகள் அடங்கிய உடன்படிக்கையையும் நிதி ஒப்பந்தத்தையும் கூடுதலாக ஏற்கும்படி சோவியத் ருஷ்யாவின் மீது 1918 ஆகஸ்டில் ஜெர்மனி திணித்தது.

1918 நவம்பரில் ஜெர்மனியில் புரட்சி ஏற்பட்டு முடியாட்சி அகற்றப்பட்ட பின் 1918 நவம்பர் 13ல் அனைத்து ருஷ்ய மத்தியச் செயற் குழு அநியாயமான கொள்ளைக்கார பிரேஸ்த் உடன்படிக்கையை ரத்து செய்தது.

பக்கம் 15

3 **வெர்சேய் உடன்படிக்கை** — 1914-18ஆம் ஆண்டுகளது ஏகாதிபத்திய உலக யுத்தத்தை முடிவுறச் செய்த இந்த ஒப்பந்தம் வெர்சேய் நகரில் 1919 ஜூன் 28ல் ஒரு புறம் அமெரிக்க ஐக்கிய நாடு, கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றுலும் இவற்றின் நேச நாடுகளாலும், மறுபுறத்தில் ஜெர்மனியாலும் கையெழுத்திடப்பட்டது. யுத்தத்தில் வெற்றி பெற்ரேருக்குச் சாதகமாய் முதலாளித்துவ உலகு மறுபங்கீடு செய்யப்பட்டதை உறுதி செய்திடுவதும், சோவியத் ருஷ்யாவை மென்னியைப் பிடித்து நெரித்து ஒழித்திடுவதையும் உலகெங்கும் புரட்சி இயக்கத்தை நசுக்குவதையும் நோக்கியமைந்த உறவுகளது முறை ஒன்றை நாடுகளிடையிலே தோற்றுவிப்பதும்தான் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.

பக்கம் 15

4 **''வில்சனிசம்''** — 1913-21ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனதிபதியாகிய வூட்ரோ வில்சனின் பெயரிலிருந்து வந்தது. தமது பதவிக் காலத்தின் முதல் ஆண்டிலியே (வளர்வீத வருமான வரிச் சட்டம், டிரஸ்டு-

எதிர்ப்புச் சட்டம் போன்ற) பல சட்டங்களை இயற்றி இவை ''புதிய சுதந்திர'' சகாப்தத்தைக் குறிப்பன வாய் வாய்வீச்சடித்தார். ''ஜனநாயகம்'' என்றும் ''தேசங்களது கூட்டணி'' என்றும் வாய்வீச்சுக் கோஷங்களையும் சொற்களையும் கையாண்டு, வில்சனும் அவரைப் பின்பற்றியோரும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கொள்ளைக்கார ஏகாதிபத்திய அயல் துறைக் கொள்கையை மூடி மறைக்க முயன்றனர். சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்ட நாட்களிலிருந்தே சோவியத் ருஷ்யாவை எதிர்த்து அன்னியத் தலையீட்டைத் தூண்டியவர்களிலும் அதற்கு ஏற்பாடு செய்தவர்களிலும் ஒருவராக இருந்தவர் வில்சன். எல்லா நாடுகளின் மக்கள்மீதும் சோவியத் அரசாங்கத்தின் சமாதானக் கொள்கை செலுத்திய பரந்த செல்வாக்கை எதிர்ப்பதற்காக, அவர் பதினான்கு அம்ச ''சமாதானத் திட்டத்தை'' முன்வைத்தார்; அமெரிக்க ஆக்கிரமிப்புக் கொள்கையை மூடிமறைப்பதற்கான வாய்வீச்சாகவே இது அமைந்தது. அமெரிக்க, ஐரோப்பிய முதலாளித்துவப் பத்திரிகைகள் அவரை ஒரு சமாதானச் செம்மலாகச் சித்தரித்துப் புகழ்ந்தன. ஆனால் வில்சன், ''வில்சனிஸ்டுகள்'' ஆகியோரது குட்டிமுதலாளித்துவ வாய்வீச்சு எவ்வளவு கபடமானது என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டுள் அவர்கள் செயல்படுத்திய தொழிலாளர்-எதிர்ப்புக் கொள்கையினாலும், பிற நாடுகள் சம்பந்தமாய் அவர்கள் அனுசரித்த ஆக்கிரமிப்புக் கொள்கையினாலும் சீக்கிரமாகவே அம்பலமாயிற்று. பக்கம் 15

5 பாஸெல் அறிக்கை — இரண்டாவது அகிலத்தின் அறிக்கையான இது, *1912* நவம்பர் *24-25*ல் பாஸெல் நகரில் நடைபெற்ற சர்வதேச சிறப்பு சோஷலிஸ்டுக் காங்கிரசால் *1912* நவம்பர் *25*ல் ஏற்கப்பட்டது. உலக யுத்தம் மூண்டு வந்ததன் அபாயத்தை இவ்வறிக்கை எடுத்துரைத்து எல்லா நாடுகளின் மக்களையும் எச்சரித்தது; இந்த யுத்தத்தின் கொள்ளைக்கார நோக்கங்களைத் தெளிவுபடுத்தி எல்லா நாடுகளின் தொழிலாளர்களையும் சமாதானத்துக்காக வைராக்கியமாகப் போராடும்படியும் ''முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் வலிமைக்கு எதிராய்த் தொழிலாளி வர்க்கச் சர்வதேச ஒருமைப்பாட்டினைச் செயல்படச் செய்யும்படியும்'' இவ்வறிக்கை அறைகூவியது. ஏகாதிபத்திய யுத்தம் மூளுமாயின் யுத்தத்தின் விளைவாக எழும் பொருளாதார, அரசியல் நெருக்கடியை சோஷலிஸ்டுகள்

சோஷலிசப் புரட்சிப் போராட்டத்தை முன்கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்த வேண்டுமென்று கூறி 1907 ஆம் ஆண்டு ஷ்டுட்கார்ட் காங்கிரஸ் தீர்மானத்தில் லெனின் வகுத்தளித்திருந்த ஒரு பகுதியும் இந்த அறிக்கையில் சேர்ந்திருந்தது.

இந்த யுத்த-எதிர்ப்பு அறிக்கை ஏற்கப்படுவதற்கு ஆதரவாய் இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் வாக்களித்தார்கள், ஆனால் யுத்தம் ஆரம்பமானதும் இந்த அறிக்கையையும், யுத்தத்துக்கு எதிரான போராட்டம் குறித்து சர்வதேச சோஷலிஸ்டுக் காங்கிரசுகளது ஏனைய தீர்மானங்களையும் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, அவரவர்களது ஏகாதிபத்திய அரசாங்கங்களின் தரப்புக்கு ஓடிச் சென்றனர். பக்கம் 16

6 **இரண்டாவது அகிலம்** — சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேசச் சங்கமாக 1889ல் நிறுவப்பட்டது. ஏகாதிபத்திய சகாப்தம் தொடங்கிய போது சந்தர்ப்பவாதப் போக்குகள் இதில் மேலும் மேலும் தலைதூக்கின. 1914ல் உலகப் போர் மூண்ட போது இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் தம் நாடுகளின் முதலாளித்துவ அரசாங்கங்களை வெளிப்படையாகவே ஆதரிக்கத் தொடங்கினர். இரண்டாவது அகிலம் தகர்ந்து போயிற்று. சமூக-ஜனநாயகக் கட்சிகளின் புரட்சிகரப் பகுதியோர் மூன்றுவது அகிலத்தை அமைப்பதில் ஈடுபட்டார்கள்.

பக்கம் 16

7 பெர்ன் நகரில் 1919 பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற சோஷலிஸ்டுக் கட்சிகளின் மாநாட்டில் நிறுவப்பட்ட இரண்டாவது (பெர்ன்) அகிலத்தை லெனின் இங்கே குறிப்பிடுகிறார். முதல் உலகப் போர் வெடித்தவுடன் கலைந்து போன இரண்டாவது அகிலத்துக்குப் பதிலாக இது, மேற்கு ஐரோப்பிய சோஷலிஸ்டுக் கட்சிகளின் தலைவர்களால் நிறுவப்பட்டது. பெர்ன் அகிலம் சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தின் கருவியாகவே உண்மையில் செயல்பட்டு வந்தது. பக்கம் 17

8 **ஜெர்மனியின் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி** — 1917 ஏப்ரலில் கோதா துவக்கக் காங்கிரசில் அமைக்கப்பட்ட ஒரு மையவாதக் கட்சி. மையவாதச் சொல்வீச்சடித்து இதன் மறைவில் ''சுயேச்சையாளர்கள்'' சமூக-தேசிய வெறியர்களுடன் ''ஐக்கியம்'' வேண்டும் என்று போதித்

தார்கள், வர்க்கப் போராட்டத்தைக் கைவிட்டு விடும் நிலைக்குச் சரிந்தார்கள். 1922 வரை இக்கட்சி இருந்தது.

பக்கம் 18

9 மூன்ருவது அகிலம், கம்யூனிஸ்டு அகிலம் — பல நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஒன்றுபடுத்திய சர்வதேசப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க நிறுவனம். 1919லிருந்து 1943 வரை இது இருந்து வந்தது.

முதல் உலகப் போர் வெடித்ததும் இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் சோஷலிசத்துக்குப் புரிந்த துரோகத்தாலும், இதைத் தொடர்ந்து இரண்டாவது அகிலம் தகர்ந்து போனதாலும், தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுக்குப் பிற்பாடு மூன்ருவது அகிலத்தை நிறுவுவது வரலாற்று வழியில் அவசியமாகியது. இந்தக் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிறுவகத்தில் லெனின் தலைமைப் பங்காற்றினர்.

இதன் முதல் காங்கிரஸ் 1919 மார்ச் 2-6ல் மாஸ்கோவில் நடைபெற்றது. இக்காங்கிரஸ் உலகத் தொழிலாளர்களுக்கு விடுத்த அறிக்கையானது கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் குறிக்கப்படும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இலட்சியங்களின் நேர் வாரிசே கம்யூனிஸ்டு அகிலம் என்று கூறியது.

கம்யூனிஸ்டு அகிலம், எல்லா நாடுகளின் உழைப்பாளி மக்களுக்கிடையே பிணைப்புகளை மீட்டமைத்து வலுவாக்கியது; சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் செயல்பட்ட சந்தர்ப்பவாதம் அம்பலமாக்கப்படுவதற்கு உதவியது, அப்போது இளங் கட்சிகளாக இருந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் உறுதி பெறுவதற்கும் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஆதாரத் தந்திரமும் போர்த்தந்திரமும் வகுக்கப்படுவதற்கும் துணை புரிந்தது.

1943 மே மாதத்தில், ஏற்கெனவே கழிந்து சென்றுவிட்ட ஒரு கட்டத்தின் தேவைகளுக்கு ஏற்றதாயிருந்த நிறுவன வடிவம், தற்போது காலங்கடந்ததாகிவிட்டதைக் கண்டு கொண்ட கம்யூனிஸ்டு அகிலச் செயற் குழு கம்யூனிஸ்டு அகிலத்தைக் கலைப்பதெனத் தீர்மானம் நிறைவேற்றியது.

பக்கம் 19

10 மென்ஷிவிக்குகள் — ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் நிலவிய சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்தோர். மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்ற பெயரை அவர்

கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (1903) பெற்றனர். இந்தக் காங்கிரசின் இறுதியில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில்இவர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளிடமிருந்து சிறுபான்மை வாக்குகளையே பெற்றனர். லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று, போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர்.

மென்ஷிவிக்குகள், கட்சியின் புரட்சி வேலைத்திட்டத்தையும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி மக்களுக்கும் இடையிலான கூட்டணியையும் எதிர்த்தனர். மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாருடன் சமரசம் செய்து கொள்ளும் கொள்கையை அனுசரித்தனர்.

மென்ஷிவிக்குகள்1905-07ஆம்ஆண்டுப் புரட்சி தோல்வியுற்றபின் சட்டவிரோதமாக இயங்கி வந்த புரட்சிகரக் கட்சியை ஒழித்திட முயன்றனர். 1912 ஜனவரியில் நடந்த ரு.ச.ஜ.தொ. கட்சியின் ஆறுவது அனைத்து ருஷ்ய மாநாடு கட்சிக்கலைப்புவாதிகளாகிய மென்ஷிவிக்குகளைக் கட்சியிலிருந்து விலக்கியது.

1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாகி, அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் வெளிப்படையாகவே எதிர்ப்புரட்சிக் கட்சியாகி சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர். பக்கம் 19

11 சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் — ருஷ்யாவில் 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் பல்வேறு நரோதியக் குழுக்களும் வட்டங்களும் ஒன்றுகலந்ததின் விளைவாகத் தோன்றிய குட்டிமுதலாளித்துவக் கட்சி.

சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் பாட்டாளி வர்க்கத்தினருக்கும் விவசாயி மக்களுக்கும் இடையே உள்ள வர்க்க வேறுபாடுகளைக் காணத் தவறினர். விவசாயி மக்களிடையே உள்ள வர்க்கப் படித்தர வேற்றுமையையும் வர்க்க முரண்பாடுகளையும் மெருகிட்டு மறைத்தனர், புரட்சியில்

பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை நிராகரித்தனர். ஜார் எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் இவர்கள் தனியாள் பயங்கரவாதப் போர்த்தந்திரத்தைக் கையாண்டனர்.

முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது பெரும்பான்மை சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சமூக-தேசிய வெறி நிலையை மேற்கொண்டனர்.

*1917* பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களும் அவ்வரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை வகித்தனர் (கேரென்ஸ்கி, செர்னேவ், அவ்க்சேன்தியெவ்). நிலப்பிரபுக்களது நிலவுடைமையை ஒழிக்க வேண்டுமென்ற விவசாயிகளது கோரிக்கைக்கு ஆதரவளிப்பதை சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கைவிட்டு விட்டனர். இடைக்கால அரசாங்கத்திலிருந்த இவர்களது அமைச்சர்கள், நிலப்பிரபுக்களின் பண்ணைகளைக் கைப்பற்றி வந்த விவசாயிகளுக்கு எதிராகத் தண்டனைப் படைகளை அனுப்பி வைத்தார்கள்.

ருஷ்யாவில் வெளிநாட்டுத் தலையீட்டின் போதும் உள்நாட்டுப் போரின் போதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்; வெளிநாட்டு படையினர், எதிர்ப்புரட்சியாளர்கள் ஆகியோருக்கு வெளிப்படையாகவே ஆதரவளித்தனர்; எதிர்ப்புரட்சி சதிகளில் கலந்து கொண்டனர், சோவியத் அரசு, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களுக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தனர்.

பக்கம் *19*

12 **ஸ்பார்த்தகிஸ்டுகள்** — ஜெர்மன் இடதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது புரட்சிகர நிறுவனத்தின் உறுப்பினர்கள். ஏகாதிபத்திய உலகப் போரின் தொடக்கத்தில் கார்ல் லீப்க்னெஹ்ட், ரோசா லுக்சம்பர்க், பிரான்ஸ் மேரிங், கிலாரா ஸெத்கின், யூலியஸ் மார்ஹ்லேவ்ஸ்கி, எல். ஜோகிஷெஸ் (திஷ்கா), வில்ஹெல்ம் பீக் ஆகியவர்களின் தலைமையின்கீழ் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. அவர்கள் பொதுமக்களிடையில் புரட்சிப் பிரசாரம் நடத்தினர்கள்; வெகுஜன அளவில் போர் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும்

வேலை நிறுத்தங்களுக்கும் ஏற்பாடு செய்தனர்; உலகப் போரின் ஏகாதிபத்தியத் தன்மையையும் சந்தர்ப்பவாத சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களுடைய துரோகத்தையும் அம்பலப்படுத்தினார்கள். ஆயினும் இவர்கள் முக்கியமான தத்துவார்த்த, அரசியல் தவறுகளைச் செய்தார்கள்; தொழிலாளி வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சிக்குள்ள பாத்திரத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட்டார்கள், சந்தர்ப்பவாதிகளுடன் பிளவு ஏற்படுமென அஞ்சினார்கள், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே கூட்டணியின் அவசியத்தையும் தேசவிடுதலை இயக்கங்களின் முக்கியத்துவத்தையும் உணரத் தவறினர், பிரிந்து சென்று சுயேச்சை அரசுகளை அமைத்து கொள்வது வரையிலுமான சுயநிர்ணய உரிமை தேசங்களுக்கு உண்டென்பதை எதிர்த்தனர்.

1917 ஏப்ரலில் ஸ்பார்த்தகிஸ்டுகள் மையவாத ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியில் சேர்ந்தனர்; ஆனால் தமது நிறுவனச் சுதந்திரத்தை விட்டுவிடாமல் தம்மிடம் இருத்திக் கொண்டனர். 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடந்த புரட்சியின் போது இவர்கள் ஸ்பார்த்தகிஸ்டுக் கழகத்தை நிறுவினர். 1918 டிசம்பர் 14ல் தமது வேலைத்திட்டத்தை வெளியிட்டபின் ''சுயேச்சையாளர்களிடமிருந்து'' பிரிந்து சென்றனர். 1918 டிசம்பர் 30 லிருந்து 1919 ஜனவரி 1 வரை நடைபெற்ற துவக்கக் காங்கிரசில் இவர்கள் ஜெர்மன் கம்யூனிஸ்டு கட்சியை அமைத்தார்கள். பக்கம் 19

13 ''வெர்சேய்லர்கள்''—1871ஆம் ஆண்டின் பாரிஸ் கம்யூனின் கடும் பகைவர்கள்; பாரிஸ் கம்யூனின் வெற்றிக்குப் பிறகு வெர்சேய் நகரில் தியேர் என்பவரின் தலைமையில் அமைந்த பிரெஞ்சு எதிர்ப்புரட்சி முதலாளித்துவ அரசாங்கத்தின் ஆதரவாளர்கள். இவர்கள் பாரிஸ் கம்யூனை நசுக்கிக் கண்டும் கேட்டுமிராத கொடிய அடக்குமுறைக்குக் கம்யூனார்டுகளை உட்படுத்தி வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். அது முதலாய் ''வெர்சேய்லர்கள்'' என்ற சொல் வெறி கொண்ட கொடிய எதிர்ப்புரட்சியாளர்களைக் குறிக்கும் சொல்லாக மாறியது. பக்கம் 20

14 1898ஆம் ஆண்டு ஸ்பானிய-அமெரிக்கப் போர் — உலகை மறுபங்கீடு செய்து கொள்ளும் நோக்கத்துக்காக நடைபெற்ற முதலாவது ஏகாதிபத்திய போர்.

மத்திய அமெரிக்காவில் ஸ்பானியக் காலனிகளாய் இருந்த கியூபா, போர்டோ-ரீக்கோ மீதும், ஸ்பெயினுக்குச் சொந்தமாயிருந்த ஃபிலிபைன் தீவுகள் மீதும் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகாதிபத்தியவாதிகள் கண் வைத்தனர். இந்தப் போரில் ஸ்பெயின் தனது முக்கியமான காலனிகள் மிகப் பெரும்பாலானவற்றை இழந்தது. ஃபிலிபைன் தீவுகளும் போர்ட்டோ-ரீக்காவும் பிற தீவுகளும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கைக்கு மாறின; கியூபா சுயேச்சை நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது, ஆனால் உண்மையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரைக் காலனியாயிற்று.

ஆங்கிலோ-போயர் போர் *(1899 அக்டோபரிலிருந்து 1902 மே வரை)*—டிரான்ஸ்வால் குடியரசு, ஆரஞ்சு சுதந்திர அரசு ஆகிய இரு தென் ஆப்பிரிக்கக் குடியரசுகளுக்கு எதிராய்ப் பிரிட்டன் நடத்திய கொள்ளைக்காரப் போர். இதன் விளைவாய் இவ்விரு தென் ஆப்பிரிக்கக் குடியரசுகளும் சுதந்திரம் இழந்து பிரிட்டிஷ் காலனிகளாயின. பக்கம் 21

15 ஏகாதிபத்தியம் குறித்தும், யுத்தம் சம்பந்தமாய் சோஷலிஸ்டுகளுடைய போக்குக் குறித்தும் ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் ஹெம்னிட்ஸ் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இங்கு குறிப்பிடப்படுகிறது. 1912 செப்டம்பர் 20ல் ஏற்கப்பட்ட இந்தத் தீர்மானம் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கண்டனம் செய்தது, சமாதானத்துக்கான போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. பக்கம் 22

16 *Die Bank*—ஜெர்மன் நிதியதிபர்களது ஏடு, 1908லிருந்து 1948 வரை பெர்லினில் வெளியிடப்பட்டது. பக்கம் 43

17 கம்பெனித் தோற்றுவிப்புப் புரளிகள் 1870ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ஜெர்மனியில் கூட்டுப் பங்குக் கம்பெனிகள் அதிவேகமாகத் தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் நிகழ்ந்தன. இக்கம்பெனிகளின் தோற்றுவிப்பைத் தொடர்ந்து தாவரச் சொத்துகளிலும் பங்குச் சந்தையில் பங்குகளிலும் பிணையங்களிலும் வெறிகொண்ட ஊக வாணிபமும் மோசடி நடவடிக்கைகளும் நடைபெற்றன. முதலாளித்துவத் தொழிலதிபர்கள் இவற்றின் மூலம் பெருஞ் செல்வம் திரட்டினர். பக்கம் 61

18 இங்கே லெனின் கி.வ. பிளெஹானவைக் குறிப்பிடுகிறுர். பக்கம் 78

19 **புரோதுகோல்** — தொனேட்ஸ் பள்ளத்தாக்கின் கனி எரி பொருள் வாணிபத்துக்காகிய ருஷ்யச் சங்கத்தின் சுருக்கப் பெயர். இந்த சிண்டிக்கேட்டு 1906ல் நிறுவப்பட்டது. **புரோத்மெட்** என்பது 1901ல் நிறுவப்பெற்ற ருஷ்ய உலோக ஆலைப் பொருள்களது விற்பனைக்காகிய சங்கத்தின் சுருக்கப் பெயர். பக்கம் 84

20 **பிரெஞ்சுப் பனுமா** — பிரெஞ்சுப் பனுமாக் கால்வாய்க் கம்பெனி லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கிக் கொண்ட அரசுத் துறையினர், அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், செய்தியேடுகளின் பெரிய மோசடிகள் பிரான்சில் 1892-93ல் அம்பலமானதைத் தொடர்ந்து, பெரிய அளவிலான லஞ்ச ஊழலைக் குறிக்கும் தொடராய் வழக்குக்கு வந்தது. பக்கம் 92

21 **கட்சிக்கலைப்புவாதம்** — முதல் ருஷ்யப் புரட்சி (1905-07) தோல்வியடைந்த பிறகு ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் மென்ஷிவிக்குகளிடையே பரவிய கடைகோடியான வலதுசாரிச் சந்தர்ப்பவாதப் போக்கு.

கலைப்புவாதிகள் மார்க்சியக் கட்சியின் வேலைத்திட்டத்தையும் போர்த்தந்திரத்தையும் நிராகரித்தனர், பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்சியை ஒழித்துக் கட்டவும் சொந்தத்தில் தமக்கு ஒரு சீர்திருத்தவாதக் கட்சியை நிறுவி ஜாராட்சியில் நிலவிய நிலைமைகளுக்கு இணக்கமாய் அதைத் தகவமைக்கக் கொள்ளவும் முயன்றனர். பக்கம் 174

22 **ஃபேபியன் கழகம்** — ஆங்கிலேயச் சீர்திருத்தவாதக் கழகம், 1884ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. கி.மு. மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்த ரோமானியத் தளபதி ஃபேபியஸ் மாக்ஸிமஸ் என்பவரின் பெயரை இது தனக்குச் சூட்டிக் கொண்டது. ஹனிபாலுடன் நடந்த போரில் உறுதியுடன் போரிடாமல் தட்டிக் கழித்தவாறு எதிர்பார்த்துக் காத்திருக்கும் போர்த்தந்திரத்தை மேற்கொண்டமையால் ஃபேபியஸ் மாக்ஸிமஸ் ''குன்க்டேட்டர்'' (இழுத்தடிப்பவன்) என்ற புனைபெயரைப் பெற்ருர். ஃபேபியன்கள் பெரும்பாலும் முதலாளித்துவ அறிவுத்துறையினராவர்: விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள் (சிட்னி வெபும் பியட்ரீஸ் வெபும், ராம்சே மாக்டொனல்டு,

பர்னார்ட் ஷா முதலியோர்). பாட்டாளி மக்களின் வர்க்கப் போராட்டமும் சோஷலிசப் புரட்சியும் இன்றியமையாதவை என்பதை ஃபேபியன்கள் மறுத்தார்கள். சிறு சீர்திருத்தங்களின் வாயிலாகவும் சமுதாயத்தைப் படிப் படியாகப் புனரமைப்பதன் மூலமாகவுமே முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றனர். 1900ல் ஃபேபியன் கழகம் தொழிற் கட்சியுடன் இணைக்கப்பட்டது. பக்கம் 175

23 லெனின் இங்கே குறிப்பிடுவது பீகிங் (இறுதி) ஒப்பந்தக் குறிப்பு. 1899லிருந்து 1901 வரை நடந்து வந்த பாக்ஸர் எழுச்சி நசுக்கப்பட்ட பிறகு, பிரிட்டன், ஆஸ்டிரியா-ஹங்கேரி, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், ருஷ்யா, நெதர்லாந்து, ஸ்பெயின், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகள் ஒரு பக்கமும் சீனா மறு பக்கமும் 1901 செப்டம்பர் 7ல் இதில் கையொப்பமிட்டன. அந்நிய முதலாளிகள் சீனாவைச் சுரண்டுவதற்கும் சூறையாடுவதற்கும் இதன் மூலம் புதிய வாய்ப்புகளைப் பெற்றனர். பக்கம் 191

24 பாக்ஸர் எழுச்சி—1899-1901ல் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சீனாவில் நடைபெற்ற மக்கள் எழுச்சி. அதற்கு இ-ஹோ-துவான் கழகம் தலைமை தாங்கியது. இந்த எழுச்சி, ஜெர்மான் ஜெனரல் வால்டெர்ஸேயே தலைமையில்அமைந்த ஜெர்மன், ஜப்பானிய, பிரிட்டிஷ், அமெரிக்க, ருஷ்ய ஏகாதிபத்தியத் தண்டப் படைகளால் குரூரமாக நசுக்கப்பட்டது. பீகிங் (இறுதி) ஒப்பந்தக் குறிப்பில் கையெழுத்திடுமாறு சீனா நிர்பந்திக்கப்பட்டது (குறிப்பு 23ஐப் பார்க்கவும்); இதன் விளைவாக சீனா அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் அரைக் காலனியாக மாறியது. பக்கம் 193

25 ஃபஷோடா (கோடாக்) — கிழக்கு சூடானில் ஓர் ஊர். பிரிட்டிஷ், பிரெஞ்சுக் காலனிப் படைகளிடையே 1898 செப்டம்பரில் ஃபஷோடாவில் ஏற்பட்ட மோதலானது சர்வதேச உறவுகளில் கடும் நெருக்கடியை உண்டாக்கியது. சூடானில் ஆதிக்கம் பெறுவதற்காக பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தின் பிரதிபலிப்பாகிய இந்த மோதல் ஆப்பிரிக்காவின் பங்கீடு நிறைவு பெற்றதைக் குறிப்பிட்டது. பக்கம் 194

26 அரசும் புரட்சியும். அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும் —

முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அடக்குமுறையின் காரணமாய் லெனின் தலைமறைவாய் இருக்கையில் 1917 ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களில் இந்நூலை எழுதினார்.

அரசு பற்றி மார்க்சும் எங்கெல்சும் எழுதியவற்றை 1916ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலும் 1917 ஆரம்பத்திலும் சூரிச்சில் ஒரு நூலகத்தில் லெனின் விரிவுபட ஆராய்ந்தார். அரசு குறித்து மார்க்சியம் என்று தலைப்பிடப்பட்ட நீல அட்டை தாங்கிய குறிப்பேட்டில் பொடி எழுத்துக்களில் அவர் தமது குறிப்புகளை எழுதினார். மார்க்ஸ், எங்கெல்ஸ் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்களும், காவுத்ஸ்கி, பெனெகக், பெர்ன்ஷ்டைன் இவர்களது புத்தகங்களிலிருந்தும் கட்டுரைகளிலிருந்தும் சில வாசகங்களும், இவை பற்றிய லெனினுடைய விமர்சனக் கருத்துரைகளும் முடிவுகளும் பொது நிர்ணயிப்புகளும் அடங்கிய குறிப்புகளாகும் இவை.

இந்தக் குறிப்புகளில் சிலவற்றை லெனின் அரசும் புரட்சியும் என்ற தமது நூலுக்கு அடிப்படையாகப் பயன்படுத்திக் கொண்டார்.

லெனினுடைய திட்டத்தின்படி அரசும் புரட்சியும் ஏழு அத்தியாயங்கள் கொண்டதாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் ''1905, 1917ஆம் ஆண்டுகளின் ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம்'' என்னும் கடைசியான ஏழாவது அத்தியாயம் எழுதப்படவில்லை. இதற்குரிய விவரமான திட்டத்தையும் ''முடிவுரையின்'' திட்டத்தையும்தான் லெனின் நமக்கு விட்டுச் சென்றார். அரசும் புரட்சியும் 1918ல் வெளியிடப்பட்டது.

இரண்டாம் அத்தியாயத்தில் ''1852ல் இப்பிரச்சினையை மார்க்ஸ் எடுத்துரைத்தது'' என்ற தலைப்பில் லெனின் சேர்த்துக் கொண்ட புதிய பிரிவுடன் இரண்டாம் பதிப்பு 1919ல் வெளிவந்தது. பக்கம் 205

27 ஃபி. எங்கெல்ஸ், குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் (தமிழ் பதிப்பு, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம்).

இதே நூலிலிருந்து லெனின் திரும்பவும் பக்கம் 215, 219, 220, 221, 222, 225ல் மேற்கோள்கள் தருகிறார். பக்கம் 212

28 சமுதாயத்தின் புராதனக் குடி அல்லது குல வழியிலான ஒழுங்கமைப்பு—புராதனக் கம்யூன் அமைப்பு அல்லது

வரலாற்றின் முதலாவது சமூக-பொருளாதார அமைப்பு. குலக் கம்யூனது பொருளாதார, சமுதாயப் பிணைப்புகளால் இணைக்கப்பெற்ற இரத்த உறவினர்களது கூட்டமைப்பாகும்.

புராதனக் கம்யூன் அமைப்பில் உற்பத்தி உறவுகள், உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமையையும் எல்லாப் பொருள்களின் சரிசமத்துவ வினியோகத்தையும் அடிப்படையாய்க் கொண்டிருந்தன. இது அக்காலத்திய உற்பத்தி சக்திகளது தாழ்ந்த வளர்ச்சி நிலைக்கும் அவற்றின் தன்மைக்கும் பிரதானமாய்ப் பொருந்துவதாய் இருந்தது. பக்கம் 215

29 **பாரிஸ் கம்யூன்** — 1871ல் நடந்த புரட்சியின் விளைவாகப் பாரிஸ் நகரத் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசாங்கம். வரலாற்றில் இது முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாக விளங்கிற்று. மார்ச்சு 18 முதல் மே 28 வரை 73 நாட்களுக்குப் பாரிஸ் கம்யூன் நீடித்தது. பக்கம் 221

30 **போனப்பார்ட் ஆட்சி** (போனப்பார்ட் பேரரசர்கள் இருவரும் நடத்திய ஆட்சியைக் குறிக்கிறது)—எத்தரப்பையும் சேராதது போல் பாவனை செய்து கொண்டு, முதலாளிகள், தொழிலாளி வர்க்கத்தினர் ஆகியோரது கட்சிகளிடையே நடைபெறும் கடும் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயலும் ஓர் ஆட்சியாகும். உண்மையில் முதலாளிகளது நலன்களுக்கே பணி புரியும் இம்மாதிரியான ஓர் ஆட்சி மற்றெதையும்விட அதிகமாய் வாக்குறுதிகளைக் கொண்டும் அற்பக் கவளங்களைக் கொண்டும் தொழிலாளர்களை ஏமாற்றுகிறது. பக்கம் 222

31 **முப்பதாண்டுப் போர்** (1618-48) — முதலாவது பொது ஐரோப்பிய யுத்தம். ஐரோப்பிய அரசுகளது பல்வேறு கூட்டுகளுக்கும் இடையே முரண்பாடுகள் கடுமையாகியதால் இந்த யுத்தம் எழுந்தது. புரோட்டஸ்டென்டுகளுக்கும் கத்தோலிக்கர்களுக்குமான போராட்டத்தின் வடிவத்தில் இது வெளியாகியது. ஜெர்மனிதான் பிரதான போர் அரங்கும், இராணுவச் சூறையாடலுக்கும் கொள்ளைக்காரக் கோரிக்கைகளுக்குமான இலக்கும் ஆயிற்று. இந்த யுத்தம் வெஸ்ட்ஃபாலியா சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகியதுடன் முடிவுற்றது. ஜெர்மனி அரசியல் வழியில் சின்னபின்னமாய்த் துண்டாடப்பட்டிருந்ததை இந்த ஒப்பந்தம் சட்ட வடிவம் பெறச் செய்தது. பக்கம் 234

32 **கோத்தா வேலைத்திட்டம்** — *ஜெர்மனியின் சோஷலிஸ்டுத் தொழிலாளர் கட்சியின் கோத்தா காங்கிரஸ் 1875ல் ஏற்ற வேலைத்திட்டம். கோத்தா காங்கிரஸ் ஐசனூஹர்கள், லஸ்ஸாலியர்கள் (குறிப்பு 61ஐப் பார்க்கவும்) ஆகிய இரு ஜெர்மன் சோஷலிஸ்டுக் கட்சிகளையும் ஒன்றிணைத்தது. ஐசனூஹர்கள் ஔகுஸ்ட் பெபெல், வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் தலைமையில் இருந்தனர்; இவர்கள் சித்தாந்த வழியில் மார்க்ஸ், எங்கெல்சின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள். கோத்தா வேலைத்திட்டம் கதம்பத் தேர்வுவாதத்தால் களங்கப்பட்டிருந்தது. ஐசனூஹர்கள் பிரதான பிரச்சினைகளில் லஸ்ஸாலியர்களுக்கு விட்டுக் கொடுத்து லஸ்ஸாலிய நிர்ணயிப்புகளை ஏற்றுக் கொண்டுவிட்டதால் இந்த வேலைத்திட்டம் சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டிருந்தது. 1869ஆம் ஆண்டின் ஐசனூஹர் வேலைத்திட்டத்துடன் ஒப்பிடுகையில் கோத்தா வேலைத்திட்டம் வெகுவாய்ப் பின்னோக்கிச் சென்றுவிட்டதென்று மார்க்சும் எங்கெல்சும் கருதினர். மார்க்ஸ் அவருடைய* **கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்திலும்,** *எங்கெல்ஸ் 1875 மார்ச் 18-28ல் பெபெலுக்கு எழுதிய கடிதத்திலும் இந்த வேலைத்திட்டத்தைக் கடுமையாய் விமர்சனம் செய்து தாக்கினர்.*

*பக்கம் 235*

33 *லெனின் இங்கு குறிப்பிடுவது, ருஷ்யாவில் 1917 பிப்ரவரி 27ல் (மார்ச் 12) நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி. இப்புரட்சியின் விளைவாய் எதேச்சாதிகாரம் வீழ்த்தப்பட்டு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கம் நிறுவப்பட்டது.*

*பக்கம் 248*

34 **கறுப்பு நூற்றுவர்** — *புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீஸ் நிறுவிய முடியரசுவாதக் கும்பல்கள். இவர்கள் புரட்சியாளர்களைக் கொலை புரிந்தனர்; முற்போக்கான அறிவுத்துறையினரைத் தாக்கினர்; யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தினர்.*

*பக்கம் 248*

35 **அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி (காடேட்டுகள்)** — *ருஷ்ய மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. இக்கட்சி 1905ல் நிறுவப்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள், முதலாளித்துவ அறிவுத்துறையினர் ஆகியோர் இதில் சேர்ந்திருந்தனர். காடேட்டுகள் சட்டமுறை முடி*

யரசைக் கோருவதற்கு மேல் செல்லவில்லை. முதலாவது உலகப் போரின்போது இவர்கள், ஜார் அரசாங்கத்தின் நாடுபிடிக்கும் கொள்கையை ஆதரித்தார்கள். 1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது காடேட்டுகள் முடியரசைக் காப்பாற்ற முயன்றனர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தலைமைப் பதவிகள் வகித்த இவர்கள் மக்களுக்கு விரோதமான எதிர்ப்புரட்சிக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள்.
பக்கம் 248

36 *1917 மார்ச் 2 (15)ல் வெளியிடப்பட்ட அறிக்கையில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கம் அரசியல் நிர்ணயச் சபையைக் கூட்டுவதாக அறிவித்தது. அதற்கான தேர்தல்கள் 1917 செப்டம்பர் 17 (30)ல் நடைபெறுமெனக் குறிக்கப்பட்டது. ஆனால் இந்தத் தேர்தல்கள் நவம்பர் 12 (25) வரை ஒத்திப்போடப்பட்டன. சோவியத் அரசாங்கம் அரசியல் நிர்ணயச் சபையை 1918 ஜனவரி 5 (18)ல் பெத்ரொகிராதில் கூட்டியது. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்பு தயாரிக்கப்பட்ட பழைய வாக்காளர் பட்டியல்களைக் கொண்டே இச்சபைக்குத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. சமாதானம், நிலம், ஆட்சியதிகாரத்தை சோவியத்துகளுக்கு மாற்றுதல் ஆகியவை குறித்து சோவியத்துகளின் இரண்டாவது காங்கிரஸ் நிறைவேற்றிய சட்டங்களை இந்த அரசியல் நிர்ணயச் சபை அங்கீகரிக்க மறுத்த பின், அனைத்து ருஷ்யாவின் மத்தியச் செயற் குழு ஏற்ற தீர்மானத்தின்படி இது கலைக்கப்பட்டது. பக்கம் 248*

37 *Die Neue Zeit ('‘புதிய காலம்'’) — ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தத்துவார்த்த சஞ்சிகை. 1883லிருந்து 1923 வரை ஷ்டுட்கார்ட்டில் வெளிவந்து கொண்டிருந்தது. மார்க்ஸ், எங்கெல்சின் நூல்களில் பல இப்பத்திரிகையில்தான் முதன்முதல் வெளியாயின. எங்கெல்ஸ் இப்பத்திரிகைக்கு ஆலோசனைகள் கூறி உதவி வந்தார்; மார்க்சியத்திலிருந்து இது தடம் புரண்டு சென்றதைக் குறிப்பிட்டுப் பல முறை இதனைக் கண்டித்து விமர்சனமும் செய்தார். பெபெல், லீப்க்னெஹ்ட், லுக்சம்பர்க், மேரிங், ஸெத்கின், பிளெஹானவ், லஃபார்க் போன்ற 19ம் நூற்றுண்டின் இறுதியையும் 20ம் நூற்றுண்டின் துவக்கத்தையும் சேர்ந்த ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் முக்கியமான தலைவர்கள் இதற்கு எழுதினர். 1895ல் எங்கெல்ஸ் காலமான பிறகு, Die Neue Zeitஇல்*

சந்தர்ப்பவாதப் போக்குள்ள கட்டுரைகள் முறையாக வெளிவரத் தொடங்கியன (எடுத்துக்காட்டாக, திருத்தல் வாதிகள் மார்க்சியத்தின் மீது தாக்குதல் தொடுப்பதைக் குறிக்கும் பெர்ன்ஷ்டைன் எழுதிய **சோஷலிசத்தின் பிரச்சினைகள்** என்னும் கட்டுரைத் தொடர் இதில் வெளியிடப் பட்டது). முதலாவது உலகப் போரின் போது இந்த சஞ்சிகை மையவாத நிலையில் நின்று நடைமுறையில் சமூக-தேசியவெறியர்களை ஆதரித்தது. பக்கம் 252

38 இங்கே குறிப்பிடப்படுவது லண்டனில் 1870 செப்டம்பர் 6க்கும் 9க்கும் இடையில் கார்ல் மார்க்ஸ் எழுதிய **பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தம் குறித்து சர்வதேசத் தொழிலாளர் சங்கப் பொதுச் சபையின் இரண்டாவது அறிக்கை. ஐரோப்பாவிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுமுள்ள சர்வதேசத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு.**

பக்கம் 256

39 லு. குகல்மனுக்கு கா. மார்க்சின் 1871 ஏப்ரல் 12 கடிதம் (மார்க்ஸ், எங்கெல்ஸ், **கடிதத் திரட்டு**, ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ). பக்கம் 257

40 இங்கு குறிப்பிடப்படுகிறவை, போர்த்துகலில் முடியாட்சியைக் கவிழ்த்து 1910 அக்டோபர் 10ல் குடியரசைப் பிரகடனம் செய்த 1910ஆம் ஆண்டுப் போர்த்துகல் புரட்சியும், துருக்கியில் 1876ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தை மீட்டமைத்து நாடாளுமன்றத்தைக் கூட்டிய 1908ஆம் ஆண்டுத் துருக்கிப் புரட்சியும். பக்கம் 261

41 கா. மார்க்ஸ், **பிரான்சில் உள்நாட்டுப் போர்** (மார்க்ஸ், எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, மாஸ்கோ). லெனின் இதே நூலிலிருந்து பக்கங்கள் 269, 270, 278-279, 284-285லும் மேற்கோள்கள் தருகிறார்.

பக்கம் 265

42 **தியேலொ நரோதா**—("மக்கள் இலட்சியம்")—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் (குறிப்பு 11ஐப் பார்க்கவும்) நாளேடு. 1917 மார்ச்சிலிருந்து 1918 ஜூலை வரை பெத்ரொகிராதில் வெளிவந்தது. தேசப் பாதுகாப்பென்று சொல்லி இது சமரசவாத நிலையை ஏற்று, முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்தது.

பக்கம் 273

43 **ஜிராண்டுவாதிகள்**—*18ம் நூற்ருண்டின் இறுதியில் நடந்த பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சியின்போது முதலாளி வர்க்கத்தினரது அரசியல் கோஷ்டிகளில் ஒன்றின் உறுப்பினர்கள். ஜிராண்டுவாதிகள் மிதவாத முதலாளி வர்க்கத்தினரின் நலன்களை வெளியிட்டு புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையே ஊசலாடினர், முடியரசுடன் உடன்பாடு காண முயன்றனர். பக்கம் 284*

44 *ஃபி. எங்கெல்ஸ்,* **குடியிருப்புப் பிரச்சினை குறித்து** *(மார்க்ஸ், எங்கெல்ஸ்,* **நூல் திரட்டு,** *ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, மாஸ்கோ). பிற்பாடு பக்கங்கள் 288-289, 290-291ல் லெனின் இதே நூலிலிருந்து மேற்கோள்கள் தருகிருர். பக்கம் 287*

45 **பிளான்கிஸ்டுகள்** — *பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் தோன்றிய ஒரு போக்கின் ஆதரவாளர்கள்; தலைச்சிறந்த புரட்சியாளரும் பிரெஞ்சுக் கற்பனாவாதக் கம்யூனிசத்தின் முக்கியப் பிரதிநிதியுமான லுயீ ஒகுஸ்ட் பிளான்கி* [Blanqui] *(1805-1881) இந்தப் போக்கிற்குத் தலைமை தாங்கினர். ''கூலி அடிமை நிலையிலிருந்து மனித குலம் விடுதலை பெற பாட்டாளி வர்க்கப் போராட்டம் தேவையில்லை, சிறு பான்மை அறிவுத்துறையினரது சிறு கோஷ்டியின் சக்திகள் மூலம் இதைச் செய்துவிடலாம்'' (வி.இ. லெனின்) என்று பிளான்கிஸ்டுகள் நம்பினர். எழுச்சி வெற்றி பெற அவசியமான ஸ்தூல நிலைமைகளை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை; வெகு ஜனங்களுடன் தொடர்புகள் கொண்டிருக்க வேண்டுமென்பதை உதாசீனம் செய்தனர். புரட்சிகரக் கட்சியின் முயற்சிகளுக்குப் பதிலாய் இரகசியச் சதியாளர் கோஷ்டியின் செயல்களைக் கொண்டு புரட்சி நடத்திவிடலாமென்று நினைத்தனர். பக்கம் 290*

46 *கா. மார்க்ஸ்,* **அரசியலின்பால் அக்கறையின்மை** *(Der politische Indifferentismus) என்னும் கட்டுரையையும், ஃபி. எங்கெல்ஸ்* **அதிகாரம் குறித்து** *("On Authority") என்னும் கட்டுரையையும் இங்கு லெனின் குறிப்பிடுகிருர். பக்கம் 292*

47 *கா. மார்க்ஸ்,* **அரசியலின்பால் அக்கறையின்மை** *(மார்க்ஸ், எங்கெல்ஸ்,* **நூல் திரட்டு,** *ஜெர்மன் பதிப்பு, தொகுதி 18, பெர்லின்). பக்கம் 292*

48 ஃபி. எங்கெல்ஸ், அதிகாரம் குறித்து (மார்க்ஸ், எங்கெல்ஸ், நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, மாஸ்கோ). பக்கம் 294

49 ஃபி. எங்கெல்ஸ், அதிகாரம் குறித்து. பக்கம் 296

50 கா. மார்க்ஸ், கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம் (*Critique of the Gotha Programme*, ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ). பக்கம் 298

51 இங்கு குறிக்கப்படுவது கா. மார்க்சின் மெய்யறிவின் வறுமை என்னும் புத்தகம் (தமிழ் பதிப்பு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ). பக்கம் 299

52 ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் எர்ஃபுர்ட் வேலைத்திட்டம் 1891 அக்டோபரில் எர்ஃபுர்ட் நகரில் நடந்த காங்கிரசில் நிறைவேற்றப்பட்டது. கோத்தா வேலைத் திட்டத்தைவிட (குறிப்பு 32ஐப் பார்க்கவும்) இது ஓர் அடி முன்னுல் இருந்தது. முதலாளித்துவ உற்பத்தி முறை அழிந்து சோஷலிச உற்பத்தி முறை வருவது தவிர்க்க முடியாதது எனும் மார்க்சியத் தத்துவம் இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையாக இருந்தது. தொழிலாளி வர்க்கம் அரசியல் போராட்டத்தை நடத்துவதின் அவசியத்தை அது வலியுறுத்தியது, இந்தப் போராட்டத்தில் கட்சியின் தலைமைப் பாத்திரம் முதலியவற்றை எல்லாம் வரையறுத்தது. எனினும் அவ்வேலைத்திட்டத்தில் சந்தர்ப்பவாதத்திற்குச் சில மோசமான சலுகைகள் தரப்பட்டிருந்தன. 1891 சமூக-ஜனநாயகவாத நகல் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனத்திற்கு அளிக்கும் ஒரு பங்கு என்பதில் எங்கெல்ஸ் இந்நகலை விரிவாக விமர்சித்தார்.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் குறித்து இது தட்டிக் கழித்ததானது, இவ்வேலைத்திட்டத்தின் முதற் பெரும் குறைபாடு என்றும், சந்தர்ப்பவாதத்திற்கு அளிக்கப்பட்ட பேடித்தனமான சலுகை என்றும் லெனின் கருதினார். பக்கம் 302

53 ஃபி. எங்கெல்ஸ், 1891ஆம் ஆண்டின் சமூக-ஜனநாயக நகல் வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், (மார்க்ஸ், எங்கெல்ஸ், நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 3, மாஸ்கோ). பக்கங்கள் 305-306, 307-308, 309, 311-312லும் லெனின் இதே நூலிலிருந்து மேற்கோள் தருகிறார். பக்கம் 303

54 சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் (சோஷலிஸ்டுகளுக்கு எதிரான விசேஷச் சட்டம்) — ஜெர்மனியில் தொழிலாளி வர்க்க, சோஷலிஸ்டு இயக்கத்தை எதிர்ப்பதற்காக பிஸ்மார்க் அரசாங்கம் 1878ல் பிறப்பித்த சட்டம். இந்தச் சட்டத்தின்படி எல்லா சமூக-ஜனநாயகக் கட்சி நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களுடைய வெகுஜன நிறுவனங்களுக்கும் தொழிலாளி வர்க்கப் பத்திரிகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது; சோஷலிச நூல்களும் வெளியீடுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. 1,500க்கும் மேற்பட்ட சமூக-ஜனநாயகவாதிகள் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் இந்த அடக்குமுறை நடவடிக்கைகளால் சமூக-ஜனநாயகக் கட்சி தகர்ந்துவிடவில்லை. கட்சி தலைமறைவாகி அதன் வேலைகளைச் சட்டவிரோத நிலைமைகளில் திரும்பவும் தொடங்கியது. அதனுடையை மத்திய ஏடு வெளிநாடுகளிலிருந்து வெளியிடப்பட்டது. ஜெர்மனிக்குள் சமூக-ஜனநாயக நிறுவனங்களும் குழுக்களும் சட்டவிரோதமாய்ச் செயல்பட்டு வந்தன; தலைமறைவான மத்தியக் குழு இவற்றுக்குத் தலைமை தாங்கியது. அதே போது கட்சியானது மக்கள் பெருந்திரளினருடன் தனது தொடர்புகளை வலுப்பெறச் செய்து கொள்வதற்கான சட்ட பூர்வமான சாத்தியப்பாடுகளையும் நன்கு உபயோகித்துக் கொண்டது. கட்சியின் செல்வாக்கு இடையறாது ஓங்கி வந்தது. 1890ல் வளர்ந்து ஓங்கிவிட்ட தொழிலாளி வர்க்க இயக்கத்தின் நிர்ப்பந்தம் காரணமாக சோஷலிஸ்டு-எதிர்ப்புச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டியதாயிற்று. பக்கம் 306

55 1866ஆம் ஆண்டின் ஆஸ்திரிய-பிரஷ்ய யுத்தமும் 1870-71இன் பிரெஞ்சு-பிரஷ்ய யுத்தமும் இங்கு குறிக்கப்படுகின்றன; இவற்றின் முடிவில் ஜெர்மனியானது பிரஷ்ய இராணுவவாதிகளின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டது. பக்கம் 309

56 பிராவ்தா (''உண்மை'') — சட்டபூர்வமான போல்ஷிவிக் நாளேடு. இதன் முதல் இதழ் 1912 ஏப்ரல் 22ல் (மே 5) பீட்டர்ஸ்பர்கில் வெளிவந்தது. இதற்கு வேண்டிய நிதிகளைத் தொழிலாளர்கள் தம்மிடமிருந்து வசூலித்துத் தந்தனர். இதன் வினியோகம் 40,000 பிரதிகளாயின; சில இதழ்கள் 60,000 பிரதிகள் வரை வினியோகமாயின. தொழிலாளர்களது நாளேட்டை வெளியிடுவதானது பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையாகுமென்று லெனின் எடுத்துரைத்தார்.

கட்சியானது மக்கட் பெருந் திரளினருடன் இடையறுத தொடர்பு கொண்டிருப்பதற்குப் பிராவ்தா வகை செய்தது. தொழிலாளர்-நிருபர்களது பெரும் படை ஒன்று பிராவ்தா வுக்காக வேலை செய்தது. லெனின் இச்செய்தியேட்டுக்குத் தலைமை தாங்கி நெறியாண்மை புரிந்தார், அனேக மாய் நாள்தோறும் இதற்கு எழுதினார், இதன் ஆசிரியர் குழுவின் வேலைகளுக்கு வழிகாட்டினார், இதன் போர் குணம் படைத்த புரட்சி மனப்பாங்கு நிலைத்து இயங்கும்படிச் செய்தார்.

பிராவ்தா போலீசாரின் விடாப்பிடியான தாக்குதல் களுக்கு இலக்காகி வந்தது. இது 1914 ஜூலை 8ல் (21ல்) மூடப்பட்டது. 1917ஆம் ஆண்டு பிப்ரவரி முதலாளித் துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிற்பாடுதான் திரும்பவும் இது வெளிவரத் தொடங்கிற்று. முதலாளித்துவ இடைக் கால அரசாங்கம் அடக்குமுறையின் மூலம் இதை நசுக்க முயன்றது. இதனால் மீண்டும் மீண்டும் இது தனது பெயரை மாற்றிக் கொண்டு வெளிவர வேண்டியதாயிற்று. 1917 அக்டோபர் 27 (நவம்பர் 7) முதலாய் இது தனது பழைய பெயரில் திரும்பவும் வெளிவர ஆரம்பித்தது.

பக்கம் 313

57 ஃபி. எங்கெல்ஸ், கா. மார்க்சின் ''பிரான்சில் உள்நாட்டுப் போர்'' என்னும் நூலுக்கு முன்னுரை. (மார்க்ஸ், எங் கெல்ஸ், நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, மாஸ்கோ). எங்கெல்ஸ் எழுதிய இதே முன்னுரையிலிருந்து லெனின் திரும்பவும் பக்கங்கள் 316, 317-318, 319, 320-322ல் மேற்கோள்கள் தருகிறார். பக்கம் 314

58 முதல் உலகப் போருக்கு முன்பு ஜெர்மனியில் *Los-von-Kirche-Bewegung* (மதச் சபையை விட்டு வெளியேறுதல்) அல்லது *Kirchenaustrittsbewegung* (மதச் சபையிலிருந்து பிரிந்து விடும் இயக்கம்) பெரிய அளவுக்கு வளர்ந்துவிட்டது.

இந்தப் பிரச்சினை குறித்து ஜெர்மன் சமூக-ஜன நாயகக் கட்சியின் போக்கு பற்றிய விவாதங்கள் நடை பெற்றன. மதச் சபையிலிருந்து பிரிந்துவிடுவதற்கான இயக் கம் குறித்து கட்சி நடுநிலைமை வகிக்க வேண்டுமென்றும், தனது உறுப்பினர்கள் மதத்துக்கும் மதச்சபைக்கும் எதி ரான பிரசாரத்தில் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டுமென் றும் வற்புறுத்திய கோரேயைக் [Göhre] கண்டிப்ப தற்கு ஜெர்மன் சமூக-ஜனநாயகப் பிரபல தலைவர்கள் தவறிவிட்டனர். பக்கம் 317

59 சாத்தியமான சம்பளங்களே, *1917* பிற்பாதியில் வழக்கிலிருந்த ரூபிள் நோட்டின் பெறுமானத்தில் லெனின் குறிப்பிடுகிறார்.

முதல் உலகப் போரின்போது ருஷ்யாவில் ரூபிள் நோட்டு வெகுவாய் மதிப்புக் குறைந்திருந்தது.

பக்கம் *319*

60 *Der Volksstaat* (''மக்கள் அரசு'')—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் (ஐசனுஹர்கள்) மத்திய ஏடு. *1869-76*ல் லேப்சிகில் வெளிவந்தது. இதன் தலைமை ஆசிரியர் வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட். மார்க்சும் எங்கெல்சும் இதற்கு எழுதியவர்களாவர்.

பக்கம் *323*

61 **லஸ்ஸாலியர்கள்**—ஜெர்மன் குட்டிமுதலாளித்துவ சோஷலிஸ்டு ஃபெர்டிஞண்டு லஸ்ஸாலின் ஆதரவாளர்கள், ஜெர்மன் தொழிலாளர்களது பொதுச் சங்கத்தின் உறுப்பினர்கள். இச்சங்கம் *1863*ல் லேப்சிகில் கூட்டப்பட்ட தொழிலாளர் நிறுவனங்களது காங்கிரசில் நிறுவப்பெற்றது. இச்சங்கத்தின் முதலாவது தலைவரே லஸ்ஸால். அதன் வேலைத்திட்டத்தையும் அதன் போர்த்தந்திரத்தின் அடிப்படைக் கூறுகளையும் லஸ்ஸால் வகுத்திட்டார். சங்கத்தின் அரசியல் வேலைத்திட்டம் அனைத்து மக்கள் வாக்குரிமைக்காகப் போராடவும், அதன் பொருளாதார வேலைத்திட்டம் பிரஷ்ய அரசாங்கத்தின் மானிய உதவி பெற்ற தொழிலாளர் பொருளுற்பத்திக் கழகங்களுக்காகப் போராடவும் அறைகூவின. லஸ்ஸாலியர்கள் பிஸ்மார்க்கின் பேரரசுவாதக் கொள்கையை ஆதரித்தனர். மார்க்சும் எங்கெல்சும், லஸ்ஸாலியர்களது தத்துவம், போர்த்தந்திரம், நிறுவன ஒழுங்கமைப்புக் கோட்பாடுகள் ஆகியவை ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்காக அமைவதாய் வன்மையாகக் கண்டித்துத் திரும்பத் திரும்ப விமர்சித்து வந்தனர்.

பக்கம் *323*

62 **ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ்** இங்கு குறிக்கப்படுகிறது. இது *1903* ஜூலை *17*—ஆகஸ்டு *10*ல் (ஜூலை *30*—ஆகஸ்டு *23*) நடைபெற்றது. முதல் அமர்வுகள் பிரஸ்ஸெல்ஸில் நடைபெற்றன. பிற்பாடு போலீஸ் அடுக்குமுறை காரணமாய், காங்கிரஸ் லண்டனில் நடைபெற வேண்டியதாயிற்று. கட்சியின் மைய உறுப்புகளுக்கு நடைபெற்ற தேர்

தல்களில் லெனினது ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற்று போல்ஷிவிக்குகள் என்று அமைக்கப்படலாயினர்; சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மை இடங்கள் பெற்றதால் மென்ஷிவிக்குகள் என்றழைக்கப்படலாயினர். பக்கம் 324

63 கா. மார்க்ஸ், **கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம்** (மார்க்ஸ், எங்கெல்ஸ், **நூல் திரட்டு**, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 2, மாஸ்கோ). இதே நூலிலிருந்து லெனின் பக்கங்கள் 331, 340, 342, 343, 345லும் மேற்கோள் தருகிருர். பக்கம் 330

64 ஃபி. எங்கெல்ஸ், 1875 மார்ச் 18-28ல் அ. பெபெலுக்கு எழுதிய கடிதம் (மார்க்ஸ், எங்கெல்ஸ், கடிதத் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, மாஸ்கோ). பக்கம் 335

65 **ஷைலாக்**—ஷேக்ஸ்பியரின் **வெனிஸ் வணிகன்** நாடகத்தில் வரும் பாத்திரம். பேராசையும் பழிவெறியும் கொண்ட கடுவட்டிக்காரர். தன்னிடம் கடன் வாங்கியவரது உடலிலிருந்து, கடன் பத்திரத்தில் குறிக்கப்பட்டதன்படி ஒரு ராத்தல் சதை வேண்டுமெனக் கோரியவர்.
பக்கம் 347

66 **புர்சாக்கி**—பழைய ருஷ்யாவின் மதப் பாடசாலைகளது மாணவர்கள். **மதப் பாடசாலை வாழ்க்கைச் சித்திரங்கள்** என்னும் புத்தகத்தில் நி.கெ. பொமியாலோவ்ஸ்கி இம் மாணவர்களது முரட்டுப் பழக்கங்களை எடுத்துரைத்தார். புர்சா—ஜாரிஸ்டு ருஷ்யாவில் மதப் பாடசாலை மாணவர்களது விடுதி. பக்கம் 348

67 **முதலாவது அகிலம்** (சர்வதேசத் தொழிலாளர் சங்கம்)—1864ல் கார்ல் மார்க்ஸ் நிறுவிய முதலாவது பாட்டாளி வர்க்கச் சர்வதேச அமைப்பு. தொழிலாளர்களின் சர்வதேச நிறுவனத்துக்கும் பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிசத்திற்கான போராட்டத்துக்கும் முதலாவது அகிலம் அடித்தளம் இட்டது. இதைச் செய்ததன் மூலம் முதலாவது அகிலம் தனது பணியை நிறைவேற்றியது. நடைமுறையில் 1872ல் அதன் நடவடிக்கை முடிவடைந்தது. 1876ல் அதிகாரபூர்வமாக அது கலைக்கப்பட்டது.

முதலாவது அகிலத்தின் ஹேக் காங்கிரஸ் 1872 செப்டம்பர் 2—7ல் நடைபெற்றது.

எல்லா வகையான குட்டிமுதலாளித்துவக் குறுங்குழுவாதத்தையும் எதிர்த்து மார்க்சும் எங்கெல்சும் அவர்

களைப் பின்பற்றியோரும் பல ஆண்டுகளாய் நடத்தி வந்த போராட்டம் வெற்றிகரமாய் முடிவுற்றதை இந்தக் காங்கிரஸ் குறிப்பிட்டது. பக்கூனினும் குயில்யோமேயும் [Guillaume] ஏனைய அராஜகவாதத் தலைவர்களும் அகிலத்திலிருந்து விலக்கப்பட்டனர்.

ஹேக் காங்கிரசின் பணிகள் அனைத்தும் மார்க்ஸ், எங்கெல்சின் நேரடித் தலைமையில் நடைபெற்றன. இந்தக் காங்கிரசின் தீர்மானங்கள் குட்டிமுதலாளித்துவ அராஜகவாதக் கண்ணோட்டத்தின் மீது மார்க்சியம் வெற்றிவாகை சூடியதை அறிவித்தன. பல நாடுகளிலும் தொழிலாளி வர்க்கத்தின் சுயேச்சை அரசியல் கட்சிகள் உதயமாவதற்குப் இத்தீர்மானங்கள் பாதையைச் செப்பனிட்டன.

பக்கம் 358

68 ஸார்யா (''உதயம்'')—ஷ்டுட்கார்ட்டில் 1901-02ல் சட்டபூர்வமாக வெளியிடப்பட்ட மார்க்சிய விஞ்ஞான-அரசியல் சஞ்சிகை. இந்த சஞ்சிகை சர்வதேச, மற்றும் ருஷ்யத் திருத்தல்வாதத்தை விமர்சித்தும், மார்க்சியத்தின் தத்துவார்த்த அடிப்படைகளைப் பாதுகாத்தும் எழுதியது.

பக்கம் 360

69 இங்கு குறிப்பிடப்படுவது பாரிசில் 1900 செப்டம்பர் 23-27ல் நடைபெற்ற இரண்டாவது அகிலத்தின் ஐந்தாவது சர்வதேசக் காங்கிரஸ். வல்டேக்-ருசோ தலைமையிலான பிற்போக்கு அரசாங்கத்தில் மில்லிரான் பங்கு கொண்டதால் விவாதத்துக்கு வந்த ''அரசியல் ஆட்சியதிகாரம் போராடிப் பெறுவதும் முதலாளித்துவக் கட்சிகளுடன் கூட்டணிகளும்'' என்னும் அடிப்படை பிரச்சினை குறித்து பெரும்பான்மைப் பிரதிநிதிகள் கார்ல் காவுத்ஸ்கியின் தீர்மானத்துக்கு ஆதரவாய் வாக்களித்தனர். இத்தீர்மானம் கூறியதாவது: ''தனிப்பட்ட ஒரு சோஷலிஸ்டு முதலாளித்துவ அரசாங்கத்தில் பங்கு கொள்வது அரசியல் ஆட்சியதிகாரம் போராடிப் பெறுவதற்கு முறையான துவக்கமாய் அமையுமெனக் கொள்வதற்கில்லை; அவசர நிலைமையில் தற்காலிகமான, விதிவிலக்கான ஏற்பாட்டுக்கு மேல் இது அதிகமாகிவிட முடியாது''. சந்தர்ப்பவாதிகள் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் தாம் ஒத்துழைப்பதற்கு நியாயம் கூற அடிக்கடி இந்தத் தீர்மானத்தை ஆதாரமாய்க் குறிப்பிட்டு வந்தனர். பக்கம் 360

70 கா. மார்க்ஸ், பிரான்சில் உள்நாட்டுப் போர்.

பக்கம் 368

71 கா. மார்க்ஸ். ஃபி. எங்கெல்ஸ், கம்யூனிஸ்டுக் கழகத்திற்கு மத்திய குழுவின் அறிக்கை (மார்க்ஸ், எங்கெல்ஸ், நூல் திரட்டு, ஆங்கிலப் பதிப்பு, தொகுதி 1, மாஸ்கோ).
பக்கம் 373

72 கா. மார்க்ஸ், பிரான்சில் உள்நாட்டுப் போர்.
பக்கம் 377

73 சோஷலிஸ்டு மாத இதழ் (Sozialistische Monatshefte)—ஜெர்மன் சந்தர்ப்பவாதிகளுடைய தலைமையான சஞ்சிகை, சர்வதேசத் திருத்தல்வாதத்தின் வெளியீடு. பெர்லினில் 1897லிருந்து 1933 வரை வெளியிடப்பட்டு வந்தது. முதல் உலக ஏகாதிபத்தியப் போரின்போது (1914-18) இது சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டது.
பக்கம் 382

74 ழொரேசைப் பின்பற்றுவோர் (Jauresists)—பிரெஞ்சு சோஷலிஸ்டு ழான் ழொரேசின் ஆதரவாளர்கள். ழான் ழொரேஸ் பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தின் வலதுசாரி, சீர்திருத்தவாதப் பிரிவுக்குத் தலைமை தாங்கினர். ழொரேஸ்வாதிகள் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று கோரினர்கள், பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் என்று உபதேசித்தார்கள்.

பக்கம் 382

75 பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி (The Independent Labour Party)—இங்கிலாந்தில் வேலைநிறுத்தப் போராட்டமும் பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவக் கட்சிகளைச் சாராது சுயேச்சையாகச் செயல்பட வேண்டுமென்ற இயக்கமும் தீவிரமடைந்த போது, 1893ல் துவக்கப்பட்ட சீர்திருத்தவாதக் கட்சியாகும். முதலாளித்துவக் கட்சிகளைச் சாராத ஒரு சுதந்திரமான நிலை அதற்குள்ளது என்று அவர்கள் உரிமை கொண்டாட்டினர் என்ற போதிலும், உண்மையில் இது சோஷலிசத்திலிருந்துதான் ''சுயேச்சையானது'' என்றும், மிதவாதத்தையே பெரிதும் ''சார்ந்திருக்கிறது'' என்றும் லெனின் அதைப் பற்றி எழுதினர். முதலாவது உலகப் போரின் போது அது மையவாத நிலையை அனுசரித்தது, பிற்பாடு சமூக-தேசியவெறிக் கொள்கையை கடைப்பிடிக்கத் தொடங்கியது. பக்கம் 382

# பெயர்க் குறிப்பகராதி

அகாட் எ. [Agahd] — *ஜெர்மன் குட்டிமுதலாளித்துவப் பொருளியலாளர்.—81, 84, 179.*

அக்செல்ரோத் [Axelrod], பாவெல் பரீசவிச் *(1850-1928)—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டினார். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின்பால் பகைமையுடன் நடந்து கொண்டார், நாடுகடந்தபின் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் இராணுவத் தலையீடு அவசியமென்று பிரசாரம் செய்தார்.—174.*

அரிஸ்டஃபேன்ஸ் [Aristophanes] *(ஏறத்தாழ கி.மு. 446-385)—மாபெரும் கிரேக்க நகைச்சுவை நாடக ஆசிரியர்.—103.*

அவ்க்சேன்தியெவ் [Avksentyev], நிக்கலாய் திமீத்ரியெவிச் *(1878-1943)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர், அக்கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு விவசாயிகள் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்ய சோவியத்தின் செயற்குழுவின் தலைவரானார். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு பல எதிர்ப்புரட்சிக் கலகங்களுக்கு ஏற்பாடு செய்தார், பிறகு ருஷ்யாவிலிருந்து ஓடிவிட்டார்.—223, 272.*

ஆக்விஞல்டோ [Aguinaldo], எமிலியோ *(பிறப்பு: 1869)—ஃபிலிபைன் அரசியல்வாதி. ஸ்பானிய ஆதிக்கத்திற்கு*

எதிரான ஃபிலிபைன் மக்கள் எழுச்சியில் கலந்து கொண்டார். 1899ல் அமைக்கப்பட்ட ஃபிலிபைன் குடியரசின் தலைவராயினர். பிற்பாடு அவர் அமெரிக்க ஆதரவுக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.—178.

எங்கெல்ஸ் [Engels], ஃபிரீட்ரிஹ் (1820-1895) — விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர்களில் ஒருவர், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினரின் தலைவர், ஆசான், கார்ல் மார்க்சின் நண்பரும் போராட்டத் தோழரும்.—172, 183, 208-212, 215-238, 246, 250, 258, 287, 290-303, 306-328, 335, 346, 349, 355, 358, 363-367, 374.

எட்வார்டு, ஏழாவது [Edward VII] (1841-1910)—பிரிட்டனின் அரசர் (1901-10). —93.

எய்டல்ஸ் [Jeidels], ஓட்டோ — ஜெர்மன் பொருளியலாளர்.—44, 45, 66, 69, 71, 72, 107, 111.

எஷ்வேகெ [Eschwege], லுத்விக்—ஜெர்மன் குட்டிமுதலாளித்துவப் பொருளியலாளர்.—90, 93, 179.

ஓவன்ஸ் [Owens], மைக்கள் ஜாசஃப் (1859-1923) — அமெரிக்காவில் பாட்டில் தயாரிப்புப் பொறியைக் கண்டுபிடித்தவர், பிற்பாடு இத்துறையைச் சேர்ந்த முதலாளி.—159.

ஃபோகல்ஷ்டைன் [Vogelstein], தியதோர்—ஜெர்மன் பொருளியலாளர்.—118.

ஃபோல்கர் [Völker] — ஜெர்மன் அரசாங்க அதிகாரி, பிற்பாடு ஜெர்மன் எஃகு உற்பத்தித் தொழிலின் நிர்வாகி.—93.

கர்னேகி [Carnegie], ஏன்றியூ (1835-1919)—அமெரிக்கக் கோடீசுவர்; 1848ல் ஸ்காட்லந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர். 1908ல் அவர் மார்கன் ஸ்டீல் டிரஸ்டுடன் தமது தொழில் நிலையங்களை இணைத்துக் கொண்டார்.—169.

கல்ச்சாக் [Kolchak], அலெக்சாந்தர் வசிலியெவிச் (1873-1920)—ஜார் காலத்தியக் கடற்படைத் தலைவர், முடியரசுவாதி; 1918-19ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர், ஆன்டான்டின் கையாள்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு அமெரிக்க ஐக்கிய நாடு, ஆன்டான்ட் இவற்றின் உதவி கொண்டு ருஷ்யாவின் தலைமை அதிபதியாகத் தம்மைப் பிரகடனம் செய்து கொண்டு, உரால், சைபீரியா, தொலைக் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் முதலாளித்துவ வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் சர்வாதிகாரத்திற்குத் தலைமை தாங்கினார். செஞ்சேனையின் தாக்குதல்களும் புரட்சிகர கொரில்லா இயக்கத்தின் வளர்ச்சியும் கல்ச் சாக் ஆட்சிக்கு முடிவு கட்டின.—*19*.

கார்னெலிசன் [Cornelissen], ஹ்ரிஸ்டியன் — டச்சு அராஜக வாதி, பி. கிரப்போத்கினின் ஆதரவாளர்; மார்க்சியத்தை எதிர்த்தார்.—*350*.

கால்வெர் [Calwer], ரீஹார்டு *(1868-1927)* — பிரபல ஜெர் மன் பொருளியலாளர், ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சீர்திருத்தவாத, திருத்தல்வாதப் பிரிவினரில் ஒருவர்.—*151*.

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854-1938)*—ஜெர்மன் சமூக-ஜன நாயக இயக்கம், இரண்டாவது அகிலம் இவற்றின் தலைவர் களில் ஒருவர். ஆரம்பத்தில் மார்க்சியவாதி, பிற்பாடு மார்க்சியத்தை விட்டு துறந்த ஓடுகாலி. தொழிலாளர் இயக்கத்திலுள்ள சந்தர்ப்பவாதத்தின் மிகவும் அபாய கரமான, தீய வகைப்பட்டதாகிய மையவாதத்தின் (காவுத்ஸ்கிவாதத்தின்) சித்தாந்தி.—*10, 17, 21, 42, 144, 151, 154, 172, 178, 183, 188, 196, 202, 208, 213, 215, 221, 235, 238, 245, 254, 267, 271, 301, 302, 317, 357-382*.

கிரப்போத்கின் [Kropotkin], பியோத்தர் அலெக்சேயெவிச் *(1842-1921)* — அராஜகவாதத்தின் தலைவர்களிலும் தத்துவாசிரியர்களிலும் ஒருவர், ருஷ்யப் பிரபு. வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஆகிய பிரச்சினைகளில் மார்க்ஸ் தத்துவத்தை எதிர்த்துப் பேசினார். உலக ஏகாதிபத்தியப் போரின் போது தேசியவெறியினராக இருந்தார். *1917*ல் வெளிநாடுகளிலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பி வந்த பிறகு அராஜகவாத நிலையைத் தொடர்ந்து மேற்கொண்டார்.—*350, 379*.

கிராவ் [Grave], ழான் *(1854-1939)*—பிரெஞ்சுக் குட்டிமுத லாளித்துவ சோஷலிஸ்டு, அராஜகவாதத்தின் தத்து வாசிரியர்களில் ஒருவர்.—*350*.

இவின்னர் [Gwinner], அர்த்தூர் *(1856-1931)*—ஜெர்மன் பெரு நிதியதிபர். 1894லிருந்து 1919 வரை ஜெர்மன் வங்கியின் தலைவராக இருந்தார்.—*113*.

குகல்மன் [Kugelmann], லுத்விக் *(1830-1902)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, கார்ல் மார்க்சின் நண்பர்; 1848-49ஆம் ஆண்டுகளின் ஜெர்மன் புரட்சியில் பங்கு கொண்டார், முதலாவது அகிலத்தின் உறுப்பினராக இருந்தார்.—*258, 259*.

குருப் [Krupp]—ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் முதன்மையான படைக்கல உற்பத்தியாளர்களும், இராணுவ-உலோகத் தொழில் அதிபர்களுமாகிய வம்சத்தினர். முதலாவது, இரண்டாவது உலகப் போர்களுக்கு ஏற்பாடு செய்வதில் இந்த டிரஸ்டின் அதிபர்கள் பெரும் பங்கு ஆற்றினர்.—*104, 187*.

குனேவ் [Cunow], ஹென்ரிஹ் *(1862-1936)*—ஜெர்மன் வலதுசாரி சமூக-ஜனநாயகவாதி, வரலாற்றாசிரியர், சமூகவியலாளர், மானிடவியல் அறிஞர். ஆரம்பத்தில் மார்க்சியவாதிகளை ஆதரித்தார், பிறகு மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவதில் ஈடுபட்டார்.—*148*.

கெட்டு [Guesde], ழூல் *(1845-1922)*—பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கம், இரண்டாவது அகிலம் இவற்றின் மூலவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போர் தொடங்கிய போது சமூக-தேசியவெறி நிலையை மேற்கொண்டு பிரான்சின் முதலாளித்துவ அரசாங்கத்தில் பங்கு கொண்டார்.—*208*.

கே அ. யூ. [Ghe] *(1879-1919)*—ருஷ்ய அராஜகவாதி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியின் ஆதரவாளராக இருந்தார்.—*350*.

கேரென்ஸ்கி [Kerensky], அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881-1970)*—ருஷ்யாவில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். உலக ஏகாதிபத்தியப் போரின் போது தீவிரமான சமூக-தேசியவெறியினராக இருந்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நீதி, இராணுவ, மற்றும் கடற்படை அமைச்சராகவும் பிற்பாடு அமைச்சர்-அதிபராகவும் உச்சப் படைத் தலைவராகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்

குப்பின் சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடினர், *1918ல் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—222, 312.*

கேஸ்ட்னர் [Kestner], ஃபிரீட்ஸ் — *ஜெர்மன் பொருளியலாளர்.—40,41.*

கோம்பர்ஸ் [Gompers], சமுவேல் *(1850-1924)—அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தின் பிரமுகர். அமெரிக்கத் தொழில் சம்மேளனத்தின்* [American Federation of Labour] *நிறுவகர்களில் ஒருவர். முதலாளிகளுடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தை எதிர்த்தார். முதலாவது உலகப் போரின் போது சமூக-தேசியவெறியினராக இருந்தார்.—17.*

கோல்ப் [Kolb], வில்ஹெல்ம் *(1870-1918)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, கடைகோடியான சந்தர்ப்பவாதி, திருத்தல்வாதி.—382.*

சார்டொரியஸ் ஃபன் வால்டர்ஸ்ஹாவுசன் [Sartorius von Waltershausen], ஔகுஸ்ட் *(பிறப்பு: 1852) —ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்; உலகப் பொருளாதாரம், அரசியல் பிரச்சினை குறித்துப் பல நூல்கள் எழுதியவர்.—162.*

சான்-சிமோன் [Saint-Simon], அன்ரீ குளோட் *(1760-1825) —மாபெரும் பிரெஞ்சுக் கற்பனாவாத சோஷலிஸ்டு.— 205, 206.*

சீமன்ஸ் [Siemens], கியோர்கு *(1839-1901)—மிகப் பெரிய ஜெர்மன் தொழில் துறை, நிதித் துறை அதிபர்களில் ஒருவர். 1870ல் ஜெர்மன் வங்கியான* Deutsche Bank*ஐ நிறுவி அதன் இயக்குநராக இருந்தார். பிரஷ்யப் பிரதிநிதி மன்றம், ரைஹ்ஸ்டாக் ஆகியவற்றின் உறுப்பினர்.—77.*

சிர்ஷ்கி [Tschierschky], ஸிக்ஃப்ரிடு *(பிறப்பு: 1872)—ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்.—92, 57.*

சூடேகும் [Südekum], அல்பேர்ட் *(1871-1944)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி. உலக ஏகாதிபத்தியப் போரின் போது தீவிரமான சமூக-தேசியவெறியராக இருந்தார்.—126.*

செம்பா [Sembat], மார்சேல் *(1862-1922)* — பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர், பத்திரிகையாளர். 1914 ஆகஸ்டிலிருந்து 1917 செப்டம்பர் வரை பிரான்சின் ஏகாதிபத்தியத் ''தேசியப் பாதுகாப்பு அரசாங்கத்தில்'' பொது மராமத்து அமைச்சர்.—270, 274.

செர்னேவ் [Chernov], விக்தர் மிஹாய்லவிச் *(1876-1952)*— ருஷ்யாவில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். 1917 மே—ஆகஸ்டில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நிலத்துறை அமைச்சராக இருந்தார். நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக் கொண்ட விவசாயிகள் மீது கொடிய அடக்குமுறையை ஏவிவிட்டவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத்து-எதிர்ப்புக் கலகங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர். 1920ல் ருஷ்யாவை விட்டு ஓடி வெளியிலிருந்து சோவியத் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.—208, 223, 272, 273, 322, 349, 381.

செஹெயீத்ஸே [Chkheidze], நிக்கலாய் செமியோனவிச் *(1864-1926)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917ல் தொழிலாளர், படையாட்கள் பிரதிநிதிகளது பெத்ரொகிராது சோவியத்தின் தலைவராகவும், சோவியத்துகளின் (முதலாவது காங்கிரஸ்) மத்தியச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தார், முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்துக்கு முனைப்புடன் ஆதரவளித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ஜார்ஜியாவில் எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கமாய் அமைந்த அரசியல் நிர்ணயச் சபையின் தலைவர். வெள்ளைப்படைகள் தோற்கடிக்கப்பட்ட பின் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்.—174.

செஹென்கெலி [Chkhenkeli], அக்காக்கி இவானவிச் *(1874-1959)*—சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு டிரான்ஸ்-காக்கஸசில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் தலைவர். 1918-21ல் ஜார்ஜியாவின் எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கத்தில் வெளித்துறை அமைச்சர். வெள்ளைப் படைகள் தோற்கடிக்கப்பட்ட பின் ருஷ்யாவிலிருந்து ஓடிவிட்டார்.—174.

சேம்பர்லின் [Chamberlain], ஜாசஃப் *(1836-1914)*—ஆங்கிலேய அரசறிஞர், அரசியல் தலைவர்; காலனிக் கைப்பற்றல் கொள்கையைப் பின்பற்றியவர்; ஆங்கிலே-போயர் போரை *(1899-1902)* தூண்டிய முக்கியஸ்தர்களில் ஒருவர்.—*125*.

டிஸ்ரேலி [Disraeli], பெஞ்சமின் (ஏர்ல் ஆஃப் பீக்கன்ஸ்ஃபில்டு) *(1804-1881)*—ஆங்கிலேயப் பிற்போக்கு அரசறிஞர், கான்ஸர்வேட்டிவ் கட்சியின் தலைவர், வளர்ந்து வந்த ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினரின் சித்தாந்திகளில் ஒருவர்.—*124*.

டுராட்டி [Turati], ஃபிலிப்போ *(1857-1932)*—இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் சீர்திருத்தவாதத் தலைவர். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் *(1892)* ஒருவர். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே ஒத்துழைப்புக்கான கொள்கையைக் கடைப்பிடித்தார். முதலாவது உலகப் போரின் போது மையவாத நிலையை அனுசரித்தார்.—*382*.

டூரிங் [Dühring], ஒய்கென் *(1833-1921)*—ஜெர்மன் தத்துவஞானி, பொருளியலாளர். தத்துவஞானம், அரசியல் பொருளாதாரம், சோஷலிசம் ஆகியவற்றைப் பற்றிய அவரது குழப்படிக் கருத்துக்களை எங்கெல்ஸ் தமது **டூரிங்குக்கு மறுப்பு. ஒய்கென் டூரிங் அவர்கள் விஞ்ஞானத்தில் நிகழ்த்திய புரட்சி (1877-1878)** எனும் நூலில் விமர்சனம் செய்தார்.—*228, 233, 291*.

டெஷனெல் [Deschanel], போள் *(1855-1922)* — பிரெஞ்சு அரசறிஞர், பொதுத்துறை எழுத்தாளர்.—*104*.

டேவிட் [David], எடுவார்டு *(1863-1930)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் வலதுசாரிப் பிரிவுக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்.—*126, 208, 270, 381*.

ட்ரியோ [Driault], ஜீ. எடுவார்டு — பிரெஞ்சு முதலாளித்துவ வரலாற்றுசிரியர்.—*138*.

தவீதவ் எல். எஃப். [Davydov] —பீட்டர்ஸ்பர்கில் (லெனின்கிராது) கருவூலக் கடன் வழங்கு துறையின் நெறியாளர்களில் ஒருவர். வங்கித் துறையாளர்.—*94*.

தாமா [Thomas], அல்பேர்ட் *(1878-1932)* — பிரெஞ்சு அரசியலாளர், சமூக-சீர்திருத்தவாதி. *1910*லிருந்து நாடா

ளுமன்றத்தில் சமூக-ஜனநாயகக் கட்சியின் பிரிவுக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்.—*17.*

திரெவெஸ் [Treves], கிளாவுடீயொ *(1868-1933)*—இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர்.—*383.*

துகான்-பரனேவ்ஸ்கி [Tugan-Baranovsky], மிஹயீல் இவானவிச் *(1865-1919)*—ருஷ்ய முதலாளித்துவப் பொருளியலாளர். *1905-07*ஆம் ஆண்டுகளின் புரட்சியின் போது காடேட்டுக் கட்சிக்காரர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு உக்ரேனியாவில் எதிர்ப்புரட்சியின் முக்கியப் பிரமுகர்.—*343.*

தெனிக்கின் [Denikin], அன்தோன் இவானவிச் *(1872-1947)*—ஜார் காலத்திய ஜெனரல்; உள்நாட்டுப் போரின் போது வெள்ளைப் படை இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர், ருஷ்யாவின் தென் பகுதியில் சோவியத் ஆட்சிக்கு எதிரான துருப்புக்களுக்குத் தலைமை தாங்கினர். அவரது படைகள் சோவியத் படைகளால் தோற்கடிக்கப்பட்ட பிறகு வெளிநாடுகளுக்கு ஓடியவர்.—*19.*

தெஸெரெத்தேலி [Tsereteli], இராக்லி கியோர்கியெவிச் *(1882-1959)*—ருஷ்யாவின் மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரொகிராது சோவியத்தின் செயற்குழு உறுப்பினர், சோவியத்துகளின் (முதலாவது காங்கிரஸ்) மத்தியச் செயற்குழு உறுப்பினர். *1917* மே மாதத்தில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்தார். போல்ஷிவிக்குகளுக்கு எதிரான கொடிய அடக்குமுறையைத் தூண்டியோரில் ஒருவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ஜார்ஜியாவில் எதிர்ப்புரட்சி மென்ஷிவிக் அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர். வெள்ளைப் படையினர் தோற்கடிக்கப்பட்டதும் ருஷ்யாவிலிருந்து ஓடிவிட்டார்.—*208, 223, 272, 315, 322, 348, 381.*

நஹிம்சோன் [Nakhimson] (ஸ்பெக்தாத்தர்), மிரோன் இஸாக்கவிச் *(பிறப்பு: 1880)*—ருஷ்யப் பொருளியலாளர், பொதுத்துறை எழுத்தாளர், மென்ஷிவிக்.—*181, 183, 188.*

நெப்போலியன், முதலாவது (போனப்பார்ட்) [Napoleon I (Bonaparte)] *(1769-1821)*—தலைச்சிறந்த பிரெஞ்சுப்

படைத்தலைவர், பிரெஞ்சுக் குடியரசின் முதலாவது கான்சல் *(1799-1804)*, பிரான்சின் பேரரசர் *(1804-14, மற்றும் 1915).—244.*

**நெப்போலியன், மூன்றுவது (லுயீ நெப்போலியன்)** [Napoleon III (Louis Napoleon)] *(1808-1873)*—பிரான்சின் பேரரசர் *(1852-70)*, முதலாவது நெப்போலியனின் மருமகன். 1848ஆம் ஆண்டின் பிரெஞ்சுப் புரட்சி தோல்வியுற்றபின் பிரெஞ்சுக் குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், 1851 டிசம்பர் 1 இரவில் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தினர்.—*243, 244.*

**நெய்மார்க்** [Neymarck], **அல்ஃப்பிரேட்** — பிரெஞ்சு முதலாளித்துவப் பொருளியலாளர், புள்ளிவிவர அறிஞர். —*95, 96, 179.*

**நோஸ்கே** [Noske], **குஸ்டவ்** *(1868-1946)* — ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். 1919-20ல் இராணுவ அமைச்சராக இருந்தார்; பெர்லின் தொழிலாளர்களைப் பழிவாங்குவதற்கான வன்முறைக்கும், கார்ல் லீப்க்னெஹ்ட், ரோசா லுக்சம்பர்க் இருவரின் படுகொலைக்கும் ஏற்பாடு செய்தவர்.—*19.*

**பக்கூனின்** [Bakunin], **மிஹயீல் அலெக்சாந்தரவிச்** *(1814-1876)*—ருஷ்யாவில் நரோதிசம், அராஜகவாதம் ஆகியவற்றின் சித்தாந்திகளில் ஒருவர். 1848-49ஆம் ஆண்டுகளின் ஜெர்மன் புரட்சியில் பங்கு கொண்டார். முதலாவது அகிலத்தின் உறுப்பினராக மார்க்சியத்தின் கடும் பகைவராக நடந்து கொண்டார். மார்க்சும் எங்கெல்சும் பக்கூனினை எதிர்த்து உறுதியுடன் போராடினர்கள், பக்கூனின்வாதம் குட்டிமுதலாளித்துவ தன்மை கொண்ட குறுங்குழுவாதம் என்று அதை அம்பலப்படுத்தினர்கள். 1872ல் பக்கூனின் பிளவு நடவடிக்கைகளுக்காக முதலாவது அகிலத்திலிருந்து விலக்கப்பட்டார்.—*282, 301, 358.*

**பத்ரேசவ்** [Potresov] **(ஸ்தரவேர்), அலெக்சாந்தர் நிக்கலாயெவிச்** *(1869-1934)* — ருஷ்யாவில் மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். பிற்போக்கு தலைவிரித்தாடிய ஆண்டுகளில் கட்சிக் கலைப்புவாதத்தின் சித்தாந்தி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ருஷ்யாவிலிருந்து

*வெளியேறினர், சோவியத் ருஷ்யாவை எதிர்த்து வேலை செய்தார்.—126, 174, 208, 381.*

**பல்ச்சின்ஸ்கி** [Palchinsky], **பியோத்தர் இயக்கிமெவிச்** *(1875-1929)—பொறியாளர், நிதி அதிபர்களுடன் நெருங்கிய பிணைப்பு கொண்டவர்; ''புரோதுகல்'' சிண்டிக்கேட்டைத் துவக்கியவர். 1917 பிப்ரவரிப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உதவி அமைச்சராக இருந்தார்; தொழில் துறை முதலாளிகளின் நாசவேலைக்கு ஊக்கமளித்தார்.—223.*

**பிராக்கே** [Bracke], **வில்ஹெல்ம்** *(1842-1880) — ஜெர்மன் சோஷலிஸ்டு, ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நிறுவகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர்.—298, 327.*

**பிரான்டிங்** [Branting], **கார்ல் யால்மார்** *(1860-1925) —ஸ்வீடன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர், இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர், சந்தர்ப்பவாதி.—270, 382.*

**பிரெஷ்கோ-பிரெஷ்கோவ்ஸ்கயா** [Breshko-Breshkovskaya], **யெக்கத்தெரீனு கான்ஸ்தன்தீனவ்னு** *(1844-1934)—ருஷ்யாவில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் நிறுவகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர், அக்கட்சியின் கடைகோடியான வலதுசாரிப் பிரிவைச் சேர்ந்தவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆதரித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராடினர்.—208.*

**பிளெஹானவ்** [Plekhanov], **கியோர்கி வலென்தினவிச்** *(1856-1918)—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைச்சிறந்த பிரதிநிதி, ருஷ்யாவில் முதன் முதலாய் மார்க்சியத்தைப் பரப்பியவர்.*

*ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு (1903) இணக்கவாத நிலையை அனுசரித்தார், பிற்பாடு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். முதலாவது உலகப் போரின் போது (1914-18) சமூக-தேசியவெறியராக இருந்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் வெளிநாடுகளிலிருந்து ருஷ்யாவுக்குத் திரும்பினர், முதலாளித்துவ*

*இடைக்கால அரசாங்கத்திற்கு ஆதரவு காட்டினர், அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் பால் எதிர்மறைப் போக்கை அனுசரித்தார்.—208, 256, 260, 271, 275, 281, 350, 357, 358, 381.*

**பிஸ்மார்க்** [Bismark], **ஓட்டோ எடுவார்டு லியப்போல்டு** *(1815-1898)—பிரஷ்ய, ஜெர்மன் அரசறிஞர், அரசுறவாளர். 1871-1890ஆம் ஆண்டுகளில் ஜெர்மன் பேரரசின் சான்ஸலர்.—222.*

**புஹாரின்** [Bukharin], **நிக்கலாய் இவானவிச்** *(1888-1938)—ருஷ்யப் பொதுத்துறை எழுத்தாளர், பொருளியலாளர்; 1906லிருந்து ரு.ச.ஜ.தொ. கட்சியின் உறுப்பினர். அரசு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், தேசங்களின் சுயநிர்ணய உரிமை ஆகிய பிரச்சினைகளிலும் பிற பிரச்சினைகளிலும் லெனினியத்திற்கு எதிரான நிலையில் நின்றார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு பல பிரச்சினைகளில் கட்சியின் லெனினியக் கொள்கையை எதிர்த்தார். 1937ல் கட்சிக்குப் பகைமையான நடவடிக்கைகளுக்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். —68.*

**புருதோன்** [Proudhon], **பியேர் ழொசேஃப்** *(1809-1865)—பிரெஞ்சுப் பொதுத்துறை எழுத்தாளர், பொருளியலாளர், சமூகவியலாளர்; குட்டிமுதலாளித்துவச் சித்தாந்தி, அராஜகவாதத்தின் மூலவர்களில் ஒருவர்.—280, 281, 299, 323, 358, 361.*

**பெபெல்** [Bebel], **ஔகுஸ்ட்** *(1840-1913) — ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் சிறந்த பிரதிநிதிகளில் ஒருவர், முதலாவது அகிலத்தின் உறுப்பினர். 1869ல் இவரும் வி. லீப்க்னெஹ்டும் ஜெர்மன் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை (ஐசனஹர்கள்) நிறுவினர்கள்.—298, 302, 327, 328, 335.*

**பெய்ஷ்** [Paish], **ஜார்ஜ்** *(1867-1957) — ஆங்கிலேய முதலாளித்துவப் பொருளியலாளர், புள்ளிவிவர அறிஞர், அமைதிவாதி. உலகப் பொருளாதாரம், அரசியல் ஆகிய பிரச்சினைகள் குறித்துப் பல நூல்களை எழுதினர்.—106.*

**பெர்** [Beer], **மாக்ஸ்** *(1864-1943)—ஜெர்மன் சமூக-ஜன நாயகக் கட்சியின் இடதுசாரிப் பிரிவைச் சேர்ந்தவர், சோஷலிசத்தின் வரலாற்ருசிரியர்.—124.*

**பேர்ன்ஷ்டைன்** [Bernstein], **எடுவார்டு** *(1850-1932)—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றிலிருந்த கடைகோடியான சந்தர்ப்ப வாதப் பிரிவின் தலைவர்; திருத்தல்வாதம், சீர்திருத்த வாதம் ஆகியவற்றின் தத்துவாசிரியர்.—17, 267, 280, 281, 283, 362, 368, 377.*

**பெனெகக்** [Pannekoek], **ஆன்டனி** *(1873-1960)—டச்சு சமூக-ஜனநாயகவாதி. உலக ஏகாதிபத்தியப் போரின் போது சர்வதேசியவாதியாக இருந்தார். 1918-21ல் ஹாலந்துக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர், கம்யூ னிஸ்டு அகிலத்தின் வேலைகளில் பங்கு கொண்டார். அதீத-இடதுசாரி, குறுங்குழுவாத நிலையில் நின்ருர்.—370, 371, 373, 375, 377.*

**பேரார்** [Bérard], **விக்தோர்** *(1864-1931)—பிரெஞ்சுக் குட்டிமுதலாளித்துவப் பொருளியலாளர், பொதுத்துறை எழுத்தாளர், மொழியியலாளர்.—179.*

**பொமியலோவ்ஸ்கி** [Pomyalovsky], **நிக்கலாய் கெராசிமவிச்** *(1835-1863)—ருஷ்ய எழுத்தாளர், ஜனநாயகவாதி.—348.*

**பௌவர்** [Bauer], **ஓட்டோ** *(1882-1938)—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளின் வலதுசாரிப் பிரிவு, இரண் டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். 1818-19ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரிய முதலாளித்துவக் குடியரசின் வெளித்துறை அமைச்சராக இருந்தார். ஆஸ்திரியத் தொழிலாளி வர்க்கத்தினரின் புரட்சிகர நட வடிக்கைகளை அடக்குவதில் தீவிரமாகப் பங்காற்றினர்.—17.*

**மாக்டொனல்ட்** [MacDonald], **ஜேம்ஸ் ராம்சே** *(1866-1937)—ஆங்கிலேய அரசியலாளர்; சுயேச்சைத் தொழிற் கட்சி, தொழிற்கட்சி ஆகியவற்றின் நிறுவகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். பழுத்த சந்தர்ப்பவாதக் கொள் கையைக் கடைப்பிடித்தார். உலக ஏகாதிபத்தியப் போரின் தொடக்கத்தில் அமைதிவாத நிலையை மேற்*

கொண்டார், பிறகு ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தை வெளிப்படையாக ஆதரிக்கத் தொடங்கினர். *1918-20ல் சோவியத் ருஷ்யாவின் மீதான தலையீட்டை எதிர்த்து பிரிட்டிஷ் தொழிலாளர்கள் போராடுவதைத் தடுக்க முயன்றார்.—17.*

**மான்டிஸ்கியே** [Montesquieu], **ஷார்ல் லுயி** *(1689-1755)* —பிரபல பிரெஞ்சு முதலாளித்துவச் சமூகவியலாளர், பொருளியலாளர், எழுத்தாளர். *18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாளித்துவ அறிவொளி இயக்கத்தின் பிரதிநிதி, அரசியல் அமைப்புச்சட்டத்துக்கு உட்பட்ட முடியாட்சியின் தத்துவாசிரியர்.—284.*

**மாரிஸ்** [Morris], **ஹென்ரி கேய்** *(பிறப்பு: 1868)* — அமெரிக்க வரலாற்றாசிரியர், வரலாறு, பொருளாதாரம் குறித்துப் பல நூல்கள் எழுதினர்.—*122.*

**மார்கன்** [Morgan], **ஜான் பிர்பான்ட்** *(1867-1943)* — அமெரிக்கக் கோடீசுவரர், அமெரிக்க ஐக்கிய நாட்டில் *19*ஆம் நூற்றாண்டின் நடுவில் நிறுவப்பட்ட மிகப் பெரிய வங்கிக் கம்பெனியின் தலைவர். அமெரிக்க ஐக்கிய நாட்டு ஏகாதிபத்தியக் கொள்கையை நிர்ணயிக்கும் மிகவும் பிற்போக்கான, ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட நிதி மூலதனத்தின் வட்டாரங்களுக்கு மார்கன் வங்கிக் கம்பெனி தலைமை தாங்குகிறது.—*63.*

**மார்க்ஸ்** [Marx], **கார்ல்** *(1818-1883)* — விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர், மாமேதையான சிந்தனையாளர், அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவரும் ஆசானும்.—*27, 29, 58, 172, 206, 208-215, 224, 228, 232-263, 266-275, 279-287, 291-292, 298, 299, 308, 310, 327, 328, 334, 339-345, 350, 351, 360-380.*

**மார்த்தவ் எல்.** [Martov] **(ஸெதர்பாவும்), யூரி ஓசிப்பவிச்** *(1873-1923)* — ருஷ்யாவில் மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி புரட்சிக்குப்பின் சர்வதேசியவாத மென்ஷிவிக்குகளின் குழுவுக்குத் தலைமை தாங்கினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியதிகாரத்தின் வெளிப்படையான பகைவர்களின் முகாமில் சேர்ந்தார். *1920*ல் ருஷ்யாவை விட்டு வெளியேறினர்.—*174, 202.*

**மாஸ்லவ்** [Maslov], **பியோத்தர் பாவ்லவிச்** *(1867-1946)—ருஷ்யப் பொருளியலாளர், சமூக-ஜனநாயகவாதி, நிலத்துறைப் பிரச்சினை குறித்துப் பல நூல்கள் எழுதினுர்; அந்த நூல்களில் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைத் திருத்தம் செய்ய முயன்ருர். 1903லிருந்து 1917 வரை—மென்ஷிவிக். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு அரசியலிலிருந்து விலகி, கல்விபோதனைப் பணியிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார்.—126, 174.*

**மில்லிரான்** [Millerand], **அலெக்சாந்தர் எத்தியேன்** *(1859-1943)— பிரெஞ்சு அரசியல்வாதி. 1890ம் ஆண்டுகளில் சோஷலிஸ்டுகளுடன் சேர்ந்து பிரெஞ்சு சோஷலிஸ்டு இயக்கத்தில் சந்தர்ப்பவாதப் போக்கிற்குத் தலைமை தாங்கினுர். 1899ல் பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கத்தில் உறுப்பினராகி, பாரிஸ் கம்யூனின் கொலைபாதகரான ஜெனரல் கலிஃபேயுடன் ஒத்துழைத்தார்.—17, 360.*

**மிஹைலோவ்ஸ்கி** [Mikhailovsky], **நிக்கலாய் கான்ஸ்தன்தீனவிச்** *(1842-1904)— ருஷ்யாவில் மிதவாத நரோதியத்தின் செல்வாக்குள்ள தத்துவாசிரியர், பொதுத்துறை எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், நேர்காட்சிவாதத் தத்துவஞானி.—217.*

**மேரிங்** [Mehring], **ஃபிரான்ஸ்** *(1846-1919) — ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் தலைச்சிறந்தவர், ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் இடதுசாரிப் பிரிவின் தலைவர்களிலும் தத்துவாசிரியர்களிலும் ஒருவர். சர்வதேசியவாதத்தை முரணின்றி ஆதரித்தார், ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிசப் புரட்சியை வரவேற்று ஆதரித்தார். புரட்சிகர ''ஸ்பார்ட்டகஸ் கழகம்'' என்பதின் தலைவர்களில் ஒருவர், ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியை நிறுவுவதில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்.—252.*

**ராக்ஃபெல்லர்** [Rockefeller], **ஜான் டேவிசன்** *(1839-1937)—அமெரிக்க ஐக்கிய நாட்டில் நிதியதிபர்களது வம்சம் ஒன்றின் மூலவர். 1870ல் இவர் ''ஸ்டான்டர்டு ஆயில்'' என்ற பெரிய எண்ணெய் டிரஸ்டை நிறுவினுர். ராக்ஃபெல்லர் குடும்பத்தினர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்துறை, வெளித்துறைக் கொள்கையை நிர்ணயிப்ப*

தில் முக்கியப் பங்கெடுத்துக் கொண்டார்கள்.—*63, 112, 114.*

ராதெக் [Radek], கார்ல் *(1885-1939)* — இருபதாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் கலீஷியாவிலும் போலந்திலும் ஜெர்மனியிலும் சமூக-ஜனநாயக இயக்கத்தில் பங்கு கொண்டார். உலக ஏகாதிபத்தியப் போரின் போது சர்வதேசியவாத நிலையை ஏற்ருர் என்ருலும் மையவாதத்தை நோக்கி ஊசலாடினுர். தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய பிரச்சினையில் தவருன நிலையை மேற்கொண்டார். *1917*ல் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். *1918*ல் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை விவாதிக்கப்பட்ட போது ''இடதுசாரிக் கம்யூஸ்டாக'' இருந்தார். *1923*லிருந்து திரோத்ஸ்கி எதிர்த்தரப்பில் ஊக்கத்துடன் பங்கெடுத்தார், அதன் விளைவாக போல்ஷிவிக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—*370.*

ரீசர் [Risser], யாக்கப் *(1853-1932)*—ஜெர்மன் பொருளியலாளர், வங்கித் துறையில் செயலாற்றினுர்.—*50, 52, 54, 62, 75, 194, 200, 203.*

ருசானவ் [Rusanov], நிக்கலாய் செர்கேயெவிச் *(பிறப்பு: 1859)*—ருஷ்யப் பொதுத்துறை எழுத்தாளர், ''நரோத்னயா வோல்யா'' நிறுவனத்தின் உறுப்பினர், பிற்பாடு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியில் சேர்ந்து கொண்டார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு ருஷ்யாவிலிருந்து வெளியேறினுர்.—*273.*

ருபனேவிச் [Rubanovich], இலியா அதோல்ஃபவிச் *(1860-1920)*—ருஷ்யாவில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியின் பகைவராக இருந்தார்.—*208.*

ரெனேடேல் [Renaudel], பியேர் *(1871-1935)* — பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர்.—*208, 270.*

ரோட்ஸ் [Rhodes], ஸேசில் ஜான் *(1853-1902)* — ஆங்கிலேயப் பிற்போக்குவாத அரசறிஞர், அரசியலாளர். பிரிட்டிஷ் காலனியாதிக்கக் கொள்கையைக் கடைப்பிடித்து ஏகாதிபத்திய விஸ்தரிப்பு அவசியமென்று பிரசாரம் செய்

தார். தென்னுப்பிரிக்காவில் பெரும் பரப்பைப் பிரிட்டனுக்குக் கைப்பற்றிக் கொடுத்தார், இவர் பெயரில் இப் பரப்பு ரோடீஷியா என்று அழைக்கப்பட்டது. —*133-136.*

ரோத்ஷீல்டு [Rothschild] — மேற்கு ஐரோப்பாவின் பெரிய நிதியதிபர்களது வம்சத்தைச் சேர்ந்தவர்.—*112.*

லன்ஸ்பர்க் [Lansburgh], அல்ஃபிரேட் *(1872-1940)*— ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்.—*92, 163, 179, 184, 185, 187,*

லஸ்ஸால் [Lassalle], ஃபெர்டினண்டு *(1825-1864)* — ஜெர்மன் குட்டிமுதலாளித்துவ சோஷலிஸ்டு, ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதத்தின் ஒரு வகையாகிய லஸ்ஸாலியத்தின் மூலவர்.—*323, 328, 340, 341.*

லிங்கன் [Lincoln], ஆப்ரஹாம் *(1809-1865)*—தலைச்சிறந்த அமெரிக்க அரசறிஞர், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதி *(1861-65)*. அமெரிக்க உள்நாட்டுப் போரின் போது, மக்கள் பெருந்திரளினரின் செல்வாக்கில் பல முதலாளித்துவ-ஜனநாயகச் சீர்திருத்தங்களை நிறைவேற்றினர். புரட்சிகர முறைகளில் போர் நடத்தப்படுவதற்கு இந்தச் சீர்திருத்தங்கள் வழி கோலின. *1865* ஏப்ரலில் அடிமை உடைமையாளர்களது கையாள் லிங்கனைக் கொலை புரிந்தான்.—*178.*

லிசிஸ் (லெத்தாயர்) [Lysis (Letailleur)], யூஜன்—பிரெஞ்சு முதலாளித்துவப் பொருளியலாளர், நிதித்துறை, அரசியல் பிரச்சினை குறித்துப் பல நூல்களை எழுதினர். —*86, 87.*

லீஃப்மன் [Liefman], ரொபெர்ட் *(1874-1941)*—ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர், பேராசிரியர். பொருளாதாரம், சமூகவியல் குறித்துப் பல நூல்களை எழுதினர்.—*44, 45, 49, 72, 75, 118.*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], வில்ஹெல்ம் *(1826-1900)*— ஜெர்மன், சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர், ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் நிறுவகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். முதலாவது அகிலத்தின் நடவடிக்கைகளிலும் இரண்

டாவது அகிலத்தை நிறுவுவதிலும் பெரும் பங்கு கொண்டார்.—*305*.

லுக்சம்பர்க் [Luxemburg], ரோசா *(1871-1919)*—சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் உன்னத தலைவர்களில் ஒருவர்; இரண்டாவது அகிலத்தின் இடதுசாரியினது தலைவர்களிலும், போலந்து சமூக-ஜனநாயக இயக்கத்தின் நிறுவகர்களிலும் ஒருவர். *1897* முதலாய் ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தில் முனைப்புடன் செயலாற்றியவர். உலக ஏகாதிபத்தியப் போரின் போது சர்வதேசியவாத நிலைமை ஏற்ருர், பிற்பாடு ஸ்பார்ட்டகஸ் குழுவென்றும், இதற்கும் பிற்பாடு ஸ்பார்ட்டகஸ் கழகமென்றும் பெயரிடப்பட்ட சர்வதேசியக் கோஷ்டி ஒன்றை அமைத்திடுவதில் தலைமையானேரில் ஒருவராகப் பங்காற்றினர். *1918* நவம்பரில் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சிக்குப் பிறகு ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி நிறுவகக் காங்கிரசில் தலைமையான பங்கெடுத்துக் கொண்டார். *1919* ஜனவரியில் கைது செய்யப்பட்டு, ஷெய்டெமன் அரசாங்கத்தின் உத்தரவு பேரில் கொலை செய்யப்பட்டார்.—*370*.

லெகின் [Legien], கார்ல் *(1861-1920)* — ஜெர்மன் வலதுசாரிச் சமூக-ஜனநாயகவாதி, ஜெர்மன் தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவர், திருத்தல்வாதி.—*208, 270, 274, 381*.

லெவி [Levy], ஹெர்மன் *(பிறப்பு: 1881)* — ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர், பேராசிரியர். நிதி மூலதனம் குறித்துப் பல நூல்களை எழுதினர்.—*29*.

லெனின் (உலியானவ்) [Lenin (Ulyanov)], விளதீமிர் இலியீச் *(1870-1924)*—*20*.

வண்டர்வேல்டே [Vandervelde], எமில் *(1866-1938)* — பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் தலைவர், இரண்டாவது அகிலத்தின் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோவின் சேர்மன்; கடைகோடியான சந்தர்ப்பவாத நிலையை மேற்கொண்டார்.—*208, 270, 274, 381, 382*.

வில்ஹெல்ம் [Wilhelm], இரண்டாவது (ஹோஹன்ஸோலர்ன்) *(1859-1941)*—ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் மன்னர் *(1888-1918)*.—*93*.

வெய்டமையர் [Weydemeyer], இயோசிஃப் *(1818-1866)*— ஜெர்மன், அமெரிக்கத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கியத் தலைவருள் ஒருவர், மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் நண்பரும் போராட்டத் தோழருமாய் இருந்தவர். கம்யூனிஸ்டுக் கழகத்தின் உறுப்பினராக இருந்தார், *1848-49*ஆம் ஆண்டுகளின் ஜெர்மன் புரட்சியில் பங்காற்றினர். அப்புரட்சி தோல்வியுற்றபின் அமெரிக்க ஐக்கிய நாட்டில் குடியேறி உள்நாட்டுப் போரில் வடப் பிரிவினருடன் சேர்ந்து போராடினர்.—*252.*

ஜொரேஸ் [Jaurès], ழான் *(1859-1914)* — பிரெஞ்சு, சர்வ தேச சோஷலிச இயக்கத்தின் செல்வாக்குள்ள பிரமுகர், வரலாற்ருசிரியர். சந்தர்ப்பவாதப் போக்குள்ள பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியை நிறுவினர். ஜனநாயகம், மக்களுக்கான சுதந்திரங்கள், சமாதானம் ஆகியவற்றை ஆதரித்துப் போராடினர், ஏகாதிபத்திய அடிமை முறையையும் நாடுபிடிக்கும் போர்களையும் எதிர்த்தார். சமாதானத்திற்காகவும் நெருங்கி வந்த போரின் அபாயத்துக்கு எதிராகவும் அவர் நடத்திய போராட்டம் ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்தினரின் பகைமையைக் கிளப்பியது. உலக ஏகாதிபத்தியப் போருக்குச் சற்று முன்பு பிற்போக்குவாதிகளின் கையாள் ஒருவனல் ஜொரேஸ் படுகொலை செய்யப்பட்டார்.—*360, 382.*

ஜிஃபென் [Giffen], ராபர்ட் *(1837-1910)* — ஆங்கிலேயப் பொருளியலாளர், புள்ளிவிவர அறிஞர்; பல புள்ளி விவர வெளியீடுகளில் பங்காற்றினர்.—*161.*

ஷில்டர் [Schilder], ஸிக்முண்டு *(மறைவு: 1932)* —ஜெர்மன் பொருளியலாளர்.—*104, 132, 162.*

ஷூல்ட்ஸெ-கேவெர்னிட்ஸ் [Schulze-Gaevernitz], கெர்ஹார்ட் *(1864-1943)*—ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்; முதலாளித்துவ சமுதாயத்தில் சமூக அமைதியை நிறுவுதல் சாத்தியமெனத் தமது நூல்களில் நிரூபிக்க முயன்ருர்.—*48, 53, 61, 63, 72, 75, 137, 162, 168, 205.*

ஷெய்டெமன் [Scheidemann], ஃபிலிப் *(1865-1939)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் கடைகோடியான வலது சாரிச் சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்.

*1918 நவம்பர் ஜெர்மன் புரட்சியின் போது ஸ்பார்ட்டகஸ் கழகத்தினருக்கு எதிரான கொடிய அடக்குமுறையைத் தூண்டியவர். 1919ல் அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினர், 1918-20ல் தொழிலாளர் இயக்கத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதற்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர்.—19, 208, 270, 274, 381.*

**ஷ்டாவஸ்** [Stauss], **எமில் கியோர்கு** *(பிறப்பு: 1877) — ஜெர்மன் நிதியதிபர், வங்கியர்.—113.*

**ஷ்டிர்னர்** [Stirner], **மாக்ஸ்** *(1806-1856) — ஜெர்மன் தத்துவஞானி; முதலாளித்துவத் தனிநபர்வாதம், அராஜகவாதம் ஆகியவற்றின் சித்தாந்திகளில் ஒருவர்.—358.*

**ஸுப்பன்** [Supan], **அலெக்சாந்தர்** *(1847-1920)—ஜெர்மன் பூகோள அறிஞர்.—121, 126-127.*

**ஸென்ஸினவ்** [Zenzinov], **விளதீமிர் மிஹாய்லவிச்** *(பிறப்பு: 1881)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர், அக்கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர். 1917ல் பெத்ரொகிராது சோவியத்தின் செயற்குழு உறுப்பினராக இருந்தார், முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டணியை ஆதரித்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு நாடுகடந்தார்.—273.*

**ஸ்கோபெலெவ்** [Skobelev], **மிஹயீல் இவானவிச்** *(1885-1939) — ருஷ்யச் சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக்; உலக ஏகாதிபத்தியப் போரின் போது மையவாத நிலையை அனுசரித்தார். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார்.—174, 223, 272.*

**ஸ்டானிங்** [Stauning], **தார்வல்டு ஒளகுஸ்ட மாரினஸ்** *(1873-1942)—டேனிஷ் அரசறிஞர், டேனிஷ் சமூக-ஜனநாயக இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் வலதுசாரித் தலைவர்களில் ஒருவர்; பொதுத்துறை எழுத்தாளர். உலக ஏகாதிபத்தியப் போரின் போது சமூக-தேசியவெறி நிலையை அனுசரித்தார். 1916-20ல் டென்மார்கின் முதலாளித்துவ அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார்.—270, 282.*

**ஸ்துரூவே** [Struve], **பியோத்தர் பெர்ங்கார்தவிச்** *(1870-1944) — ருஷ்ய முதலாளித்துவப் பொருளியலாளர்,*

*பொதுத்துறை எழுத்தாளர். 1905ல் காடேட்டுக் கட்சி நிறுவப் பெற்ற போது அதன் மத்தியக் குழுவின் உறுப்பினராக இருந்தார். முதலாவது உலகப் போர் தொடங்கியதும் ஆக்கிரமிப்பு வாய்ந்த ருஷ்ய ஏகாதிபத்தியத்தின் ஒரு சித்தாந்தி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியின் கடும் பகைவர், விராங்கெல் தலைமையிலான எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் உறுப்பினர், உள்நாட்டுப் போருக்குப் பிற்பாடு வெள்ளைப் படையினர் கூடவே ருஷ்யாவிலிருந்து ஓடிவிட்டார்.—260.*

**ஸ்தேட்** [Stead], **வில்லியம் தாமஸ்** *(1849-1912) — ஆங்கிலேயப் பத்திரிகையாளர்.—125.*

**ஸ்பெக்தாத்தர்**—*பார்க்கவும்: நஹிம்சோன்.*

**ஸ்பென்சர்** [Spencer], **ஹெர்பர்ட்** *(1820-1903) — ஆங்கிலேயத் தத்துவஞானி, உளவியலாளர், சமூகவியலாளர்.—217.*

**ஹாப்ஸன்** [Hobson], **ஜான் ஆட்கின்சன்** *(1858-1940) — ஆங்கிலேயப் பொருளியலாளர், முதலாளித்துவச் சீர்திருத்தவாதம், அமைதிவாதம் ஆகியவற்றின் பிரதிநிதி, ஏகாதிபத்தியத்துக்காகப் பரிந்து பேசியவர்.—9, 18, 21, 124, 147, 159, 160, 164, 167, 170, 175, 179, 189.*

**ஹாவ்மையர்** [Havemeyer], **ஜான் கிரேய்கு** *(1833-1922)— அமெரிக்கத் தொழிலதிபர், மாபெரும் சர்க்கரை டிரஸ்டின் முதலாளி, ரயில்வே கம்பெனியிலும் பிற கம்பெனிகளிலும் பங்காற்றினர்.—85.*

**ஹியூப்னர்** [Hübner], **ஓட்டோ** *(1818-1877) — ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர், புள்ளிவிவர அறிஞர்.—127.*

**ஹியூயிஸ்மன்ஸ்** [Huysmans], **கமில்** *(1871-1968)—பெல்ஜியத் தொழிலாளர் இயக்கத்தின் மூதாளர்களில் ஒருவர்; 1904-19ல் சர்வதேச சோஷலிஸ்டு பியூரோ, இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் செயலாளர், மையவாத நிலையை அனுசரித்தவர். பெல்ஜிய அரசாங்கத்தில் பல தடவை பதவி வகித்தார். கடைசி ஆண்டுகளில் சோஷலிஸ்டுக் கட்சிகள் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டு கட்சியுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்றும் தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமையை நிறுவ வேண்டுமென்றும் அறைகூவினர்.—202.*

**ஹில்** [Hill], **டேவிட் ஜெய்ன்** *(1850-1932)* — *அமெரிக்க வரலாற்ருசிரியர், அரசுறவுத் துறையாளர்.—193.*

**ஹில்ஃபெர்டிங்** [Hilferding], **ருடொல்ஃப்** *(1877-1941)—ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர். உலக ஏகாதிபத்தியப் போரின் போது சமூக-ஏகாதிபத்தியவாதிகளுடன் ஒற்றுமை வேண்டுமென்று ஆதரித்துப் பேசினுர்.— 18, 22, 26, 73, 84, 85, 89, 135, 158, 181, 195.*

**ஹில்டிபிரான்ட்** [Hildebrand], **கொர்ஹர்ட்** — *ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, பொருளியலாளர், பொதுத்துறை எழுத்தாளர். 1912ல் சந்தர்ப்பவாதத்திற்காகக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.—167.*

**ஹெகல்** [Hegel], **கியோர்கு வில்ஹெல்ம் ஃபிரீட்ரிஹ** *(1770-1831)—மாபெரும் ஜெர்மன் கருத்துமுதல்வாதத் தத்துவஞானி. கருத்துமுதல்வாத இயக்கவியலை மிக விரிவான, ஆழமான முறையில் அவர் செப்பம் செய்தார். இது தத்துவஞானத்துக்கு ஹெகல் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொண்டாகும். இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் தத்துவார்த்த தோற்றுவாய்களில் ஒன்ருய் ஹெகலின் இயக்கவியல் பயன்பட்டது.—212.*

**ஹெய்மன்** [Heymann], **கான்ஸ் கிடெயோன்** — *ஜெர்மன் முதலாளித்துவப் பொருளியலாளர்.—27, 76.*

**ஹெண்டர்சன்** [Henderson], **ஆர்த்தர்** *(1863-1935)—ஆங்கிலேயத் தொழிற்கட்சி, தொழிற்சங்க இயக்கம் ஆகியவற்றின் தலைவர்களின் ஒருவர். 1908-10லும் 1914-17லும் தொழிற்கட்சி நாடாளுமன்றப் பிரிவின் சேர்மன். உலக ஏகாதிபத்தியப் போரின் போது சமூக-தேசியவெறியினராக இருந்தார்.—270.*

**ஹைண்ட்மன்** [Hyndman], **ஹென்ரி மாயர்ஸ்** *(1842-1921)—ஆங்கிலேய சோஷலிஸ்டு, சீர்திருத்தவாதி.—17, 208.*

**ஹைனிக்** [Heinig], **கூர்த்** *(1886-1956)—ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதி, பொருளியலாளர், பொதுத்துறை எழுத்தாளர்.—110.*

# பொருட் குறிப்பகராதி

அடிமைமுறையும் அடிமையுடைமையாளர் சமுதாயமும்—131, 221, 227, 266, 332, 338.

அதிகார வர்க்கமும் [bureaucracy] அதிகரா வர்க்கத்தினரும்—227, 290, 311, 366-368, 374, 375-378, 380.

''அதீத-ஏகாதிபத்தியம்'' [ultra-imperialism]—காவுத்ஸ்கி தத்துவமும் அதைப் பற்றிய விமர்சனமும்—148-154, 188-196.

அமெரிக்கா—101-102, 109-110, 121, 153-156, 162,

அமெரிக்க ஐக்கிய நாடு—13, 15, 24-25, 34-37, 39, 96, 109-117, 128-129, 152-157, 162, 183, 198, 201, 218-219, 222, 251, 260, 272, 309, 330.

அமைதிவாதமும் [pacifism] அமைதிவாதிகளும்—15, 18, 21.

அயர்லாந்தும் அயர்லாந்துப் பிரச்சினையும்—53.

அரசியல் பொருளாதாரம் [political economy]—28-31, 97-99, 118-120.

அரசு—207-383;

—அடிமையுடைமை அரசு—131, 221, 227, 267, 332, 338;

—பிரபுத்துவ அரசு—221, 227, 267, 338;
—முதலாளித்துவ அரசு—161-164, 200, 207-208;

*213-216, 221-223, 226-236, 242-252, 255, 257-269, 272, 273-301, 308-318, 320-323, 328-330, 332-335, 336-338, 353, 375-378, 379-383.*

அரசு சொத்துடைமை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் காலத்தில்—*237, 282-283, 340-345, 350.*

அராஜகவாதமும் [anarchism] அராஜகவாதிகளும், அவர்களுக்கு எதிரான போராட்டம்—*228, 275, 281, 286, 291-298, 349, 371-373, 379.*

அனைத்து மக்கள் வாக்குரிமை—*224, 271.*

ஆக்கிரமிப்பு [agression], ஏகாதிபத்திய—*190-196, 220.*

ஆசியா—*101, 121, 152-153, 155-156, 176.*

ஆப்பிரிக்கா—*101, 121, 152, 176, 194, 199.*

ஆயுதபாணியாக்குதல், பாட்டாளி வர்க்கத்தினரை—*314, 354, 371-373, 375.*

ஆயுதமேந்திய அயல்நாட்டுத் தலையீடும்[military intervention] உள்நாட்டுப் போரும், சோவியத் ருஷ்யாவில்—*19.*

ஆர்ஜென்டீனு—*136-137, 185.*

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகம்—*17.*

ஆஸ்திரியா, ஆஸ்திரியா-ஹங்கேரி—*96, 104, 111, 112, 117, 170,*

இடைக்கால அரசாங்கம், ருஷ்யாவில் *(1917)—222, 248, 272-273, 312-313.*

இத்தாலி—*96-170, 240.*

இந்தியா—*117, 176, 191.*

இந்தோசீனு—*191.*

இந்தோநேஷியா—*176.*

இயக்கவியல் பொருள்முதல்வாதம் [dialectical materialism] —*246, 350.*

இயற்கைச் செல்வாதாரங்களும் மூலப்பொருள்களும் [natural resources and raw materials]—*131-135, 198.*

இரண்டாவது அகிலம்—*16-20, 208, 245, 304-314, 357-383.*

இராணுவக் கூட்டுகள் [military blocs] — ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான இராணுவக் கூட்டுகள்—*192-196.*

உரிமை [right]—*341-345, 347, 350.*

உலகச் சந்தை—*106, 125. 159, 172-173.*

உலகப் பொருளாதாரம்—*13-15, 51-54, 95-97, 105-121, 127-139, 151-158, 160-162, 182-184, 193-195.*

உலகின் பங்கீடும் மறுபங்கீடும்—*13-16, 106-140, 142, 146, 148, 154, 173-175, 193-194, 199, 219-220.*

உள்நாட்டுப் போர் [civil war]—*19.*

உற்பத்தி உறவுகள் [production relations]—*203-205, 225, 226, 237-238, 336, 345-347.*

உற்பத்தி சக்திகள் [productive forces]—*157-158, 237, 345-347.*

எகிப்து—*134, 180, 182, 188.*

எண்ணெயும் [oil] எண்ணெய் உற்பத்தித் தொழிலும்:
—முதலாளித்துவ நாடுகளில்—*35, 40, 111-114, 131, 204;*
—ஜாரிஸ்டு ருஷ்யாவில்—*84, 111.*

எர்ஃபுர்ட் வேலைத்திட்டம், ஜெர்மன் சமூக-ஜனநாயக வாதிகளுடைய—*302-313.*

ஏகபோக முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி [basic economic law of the monopolistic capitalism] (அடித்தளக் கோட்பாடுகள்)—*29-30, 97-99, 130, 131-135, 140-143.*

ஏகபோக விலைகள்—*33, 40. 159, 183.*

ஏகபோகம் [monopoly]—முதலாளித்துவ ஏகபோகம்—*23,*

*140-143, 159-160, 167, 173, 182, 188, 194, 198-206, 207, 252, 277, 303-304;*

—மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில்—*24-30, 32-34, 36-40, 42-46, 51-66, 77-80, 85-94, 96, 105-118, 159-161, 166-174, 182-190, 196-199.*

ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வான பொருளாதார, அரசியல் வளர்ச்சி விதி [law of uneven economic and political development of capitalism in the imperialist epoch]—*98-99, 139, 151-157, 192, 199-201.*

ஏகாதிபத்திய (நாடுபிடிக்கும்) போர்கள்—*16, 122-124, 207-208.*

ஏகாதிபத்தியப் போர் (1914-18)—*14-16, 207-208, 220, 383-384.*

ஏகாதிபத்தியம் [imperialism]—*9-11, 12-16, 17-20, 22-75, 77, 85, 86, 87-92, 94, 97-206, 207, 219, 252, 278, 303-305, 383;*
—ருஷ்யாவில்—*81-84, 127, 129-130, 135, 157, 193.*

ஏற்றுமதி [export]—மூலதன ஏற்றுமதி—*19, 83-84, 97-106, 135, 142, 160-161, 183-188, 199.*

ஐரோப்பா—*30, 101-102, 153, 155, 219-261.*

ஒப்பந்தங்கள் [treaties]—சர்வதேச ஒப்பந்தங்கள்—*104.*
ஃபிலிபைன் தீவுகள்—*178, 196.*

கடன்கள் [loans]—முதலாளித்துவ நாடுகளின் கடன்கள்—*52, 86, 96, 101-104, 160-162, 184-187, 193-195.*

கடுவட்டியும் [usury]கடுவட்டி மூலதனமும்—*86-88, 160-163.*

கட்சி—பாட்டாளி வர்க்கக் கட்சி பற்றிய போதனை—*241.*
கணக்கு வைப்பும் கண்காணிப்பும் [accounting and control], சோஷலிச சமுதாயத்தில்—*348, 354-355.*

கம்யூனிசம்—*336, 337-356, 372.*

''கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை'', மார்க்ஸ், எங்கெல்ஸ்—*236, 244, 257, 381.*

கலாசாரம் [culture]—*268.*

காடேட்டுகள் *(அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி)—248.*

காப்புச் சுங்க வரி விதிப்பும் [protectionism] காப்புச் சுங்க வரிக் கொள்கையும்—*26-30, 98, 184, 197.*

கார்டெல்கள், டிரஸ்டுகள், சிண்டிக்கேட்டுகள்—*28, 32-37, 39-44, 57, 63, 70, 85, 96-97, 106, 109-118, 125, 133-134, 140, 149, 154-155, 159, 173, 179, 182-183, 188, 191, 197-198, 219, 222, 303.*

காலனிகளும், வெவ்வேறு நாடுகளிலான காலனிப் பிரச்சினையும்—*96, 101, 104, 112, 123-132, 134, 136-137, 145-146, 151-154, 156, 183, 191, 193.*

காலனிப் போர்கள்—*123, 126-127, 130.*

காவுத்ஸ்கியும் காவுத்ஸ்கிவாதமும், அதற்கு எதிரான போராட்டம்—*17-18, 21, 118-119, 133, 144-158, 178-184, 188-197, 208, 211, 214-215, 221, 238, 245-246, 254, 259, 267, 281, 301, 359-381.*

கானடா—*101, 111, 312.*

குடியரசு—*(முதலாளித்துவ) ஜனநாயகக் குடியரசு—222, 231, 272-274, 307-309, 310-312, 318, 319-322, 332-334.*

குடியேற்றம் [immigration], *முதலாளித்துவ நாடுகளில்—170-171.*

குட்டிமுதலாளித்துவக் கட்சிகள்:
—மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும்—*251;*
—ருஷ்யாவில்—*222, 248-249, 312.*

குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர்—*34, 247, 269.*

கூட்டணி—பாட்டாளி வர்க்கத்தினருக்கும் விவசாயி மக்களுக்கும் இடையிலான கூட்டணி—*262.*

கூட்டாட்சி [federation] *(அரசு வடிவம்)—306-313.*

கூட்டுப்பங்கு நிறுவனங்கள் [joint-stock companies]—*35, 47, 48-59, 63-66, 75-80, 82-85, 88-89, 109-111, 113-118, 157.*

கூலி [wages], *முதலாளித்துவத்தின்கீழ்—98, 170.*

கொரியா—*196.*

சந்தர்ப்பவாதம் [opportunism]—*167, 172-174, 201-202, 207-209, 210, 224, 226-235, 238-240, 241, 253-256, 267-268, 279-283, 290-297, 357-383.*

சமத்துவம் [equality] — *341, 350, 352-355.*

சமூக-தேசியவெறியும் [social-chauvinism] அதற்கு எதிரான போராட்டமும்—*10, 174-208, 220.*

சர்வாதிகாரம் [dictatorship]:
—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் (தத்துவம்)—*226-256, 263-270, 272-276, 282-301, 309, 317-322, 327-356, 362-364, 367-368, 372-373, 375, 377-381;*
—முதலாளித்துவ சர்வாதிகாரம்—*255, 263.*

சித்தாந்தம் [ideology]—*135, 174, 175, 315.*

சில்லி—*185, 187.*

சீர்திருத்தவாதமும் [reformism], அதற்கு எதிரான போராட்டமும்—*16-20, 133, 178, 254, 303-304.*

சீனு—*127, 154, 165-166, 167, 191, 193.*

சுங்க வரிகள் [tariffs]—*29, 98, 183.*

சுயநிர்ணய உரிமை [right of self-determination]—தேசங்களது சுயநிர்ணய உரிமை (போல்ஷிவிக்கு வேலைத் திட்டக் கோட்பாடு)—*319.*

சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி (ஜெர்மனி)—*18.*

சுரண்டல் [exploitation]—*168, 173, 199-200, 221, 332.*

சுவிட்ஸர்லாந்து—*96, 111, 162, 185, 251, 272, 309.*

சேர்பியா—*104.*

சேனே—*216-218, 246.*

சோவியத்துகள், ருஷ்யாவில் 1917ல், அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குமுன்பு—*222, 272.*

சோஷலிசச் சொத்துடைமை [socialist property]—*226-227, 268.*

சோஷலிசத்தின் பொருளாயத, பொருள் உற்பத்தி அடித்தளம் [basis]—*276-278, 341.*

சோஷலிசம்—*267-269, 319, 325-326, 340-346, 349-356, 377-379;*
—கற்பனாவாத சோஷலிசம்—*286, 331;*
—குட்டிமுதலாளித்துவ சோஷலிசம்—*239-240.*

சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அவர்களுக்கு எதிரான போராட்டமும்—*214, 223, 249, 273, 315, 379.*

தடையில்லா வாணிபம் [free trade], முதலாளித்துவத்தில்—*28-30, 98, 133, 183, 198.*

தணிக்கை [censorship]—*10, 12.*

தத்துவஞானம் [philosophy]—*234.*

தபால், தந்திப் போக்குவரத்து—*59, 277.*

திருத்தல்வாதமும் [revisionism] அதற்கு எதிரான போராட்டமும்—*226-235, 237-238, 245-247, 252-256, 258-259, 267-268, 279-283, 285, 291-298, 357-383.*

துருக்கி—*111, 128, 185, 260.*

துருக்கிஸ்தானம்—*135.*

தென்னமெரிக்கா—*105, 154.*

தென்னாப்பிரிக்கா—*176.*

தேசிய இன, தேசிய இன-காலனிப் பிரச்சினை—*15, 97-102, 120-139, 140, 146, 152-158, 173, 176-178, 195-197, 199-201, 207-209, 310.*

தேசிய விடுதலை இயக்கமும் புரட்சியும்—*176-178, 193.*

தொழிலாளர் இயக்கத்தில் வலதுசாரிச் சந்தர்ப்பவாதமும் அதற்கு எதிரான போராட்டமும்—*20, 169-174.*

தொழிலாளர் இயக்கம்—சர்வதேசத் தொழிலாளர் இயக்கம்—*16-20, 167, 174, 240, 255-258.*

தொழிலாளர் கண்காணிப்பு [control], உற்பத்தியிலும் வினியோகத்திலும்—*348.*

தொழிலாளர் பிரபுக்குலத்தினர் [labour aristocracy]—*19-20, 167, 169, 172-174, 201, 242.*

தொழிலாளி வர்க்கமும் தொழிலாளர் இயக்கமும்:
—பிரான்சில்—*256, 284-287, 314;*

—பிரிட்டனில்—*171-172.*

தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவத்திலிருந்து சோஷலி சத்திற்கு மாற்றம் நடந்தேறும் காலத்தில்—*241, 276-277.*

தொழில்துறை [industry]—*23-26, 36-38, 42-43, 69, 97, 106-108, 159-160;*
—மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும்—*23, 25, 27-29, 33-38, 42-44, 86-87, 98, 108-110, 113, 116-118, 134, 152, 155, 157-158;*
—ருஷ்யாவில்—*84, 135, 152, 157.*

தொழிற்சங்கங்களும் தொழிற்சங்க இயக்கமும், முதலாளித் துவத்தில்—*376-378.*

தொழிற்சங்கங்களும் தொழிற்சங்கவாதமும் [trade unionism]—*378.*

நகரமும் கிராமப்புறமும்:
—முதலாளித்துவத்தில்—*59;*
—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கான மாற்றம் நடந்தேறும் காலத்தில்—*288-289.*

நாடாளுமன்றவாதம் [parliamentarism]—*269-274, 367-368, 381-382.*

நிதி மூலதனமும் நிதி ஆதிக்கக் கும்பலும் [finance capital and financial oligarchy]— *13-15, 63-97, 103-106, 113-115, 122, 129-138, 140-158, 163, 173-175, 177, 179-195, 197-201, 244.*

நிலப் [agrarian] பிரச்சினை, மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில்—*168.*

நீக்ரோக்களும் நீக்ரோப் பிரச்சினையும்—*168.*

பக்கூனினியமும் [Bakuninism] பக்கூனினியர்களும் — *282, 301, 358.*

பங்குமாற்றுச் சந்தை [Stock-Exchange]—*60-62, 221-223.*

பத்திரிகைகள் [press]:
—மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் (முதலாளித்துவ)—*75, 334;*

—ருஷ்யாவில்—*10,12.*

பரிமாற்றம் [exchange]—*75, 98, 129.*

பாட்டாளி வர்க்கம் [proletariat]:
—முதலாளித்துவத்தில்—*226, 237-242, 245, 257-259, 269, 308, 322, 331-333, 375;*
—ருஷ்யாவில்—*359-360.*

பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் [hegemony] —*240-242.*

பாதுகாப்புவாதம் [defencism]—*220, 247.*

பாரசீகம் (ஈரான்)—*128.*

பாரிஸ் கம்யூன் (1871)—*229, 252, 256-287, 295, 297-301, 314, 316-319, 322, 368, 372-374, 376, 377-380.*

பால்கன் தீபகற்பமும் பால்கன் பிரச்சினையும்—*111.*

பாஸெல் காங்கிரஸ், இரண்டாவது அகிலத்தின்—*16, 22.*

''பிராவ்தா''—*312.*

பிரான்ஸ்—*15, 54, 58, 85-87, 96, 100-101, 104, 105, 117-118, 123-124, 128-129, 146, 157, 162, 171, 185, 189, 191, 222, 243, 250, 272.*

பிரிட்டன்—*15, 53, 96-105, 116-117, 123-130, 134, 137, 146, 152-153, 157-158, 161, 168-170, 172-173, 180, 183-185, 191, 198, 200-202, 251, 259, 272, 309, 310.*

பிரெஞ்சு முதலாளித்துவப் புரட்சி:
—*1789-94*ல்—*250;*
—*1848*ல்—*237, 242-251.*

பிரேசில்—*105, 185.*

பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் சமாதான ஒப்பந்தம் (1918)—*15.*

பிளாங்கியும் [Blanqui] பிளாங்கியர்களும்—*290.*

பின்லாந்தும் பின்லாந்துப் பிரச்சினையும்—*19.*

புரட்சி—*16, 209, 214-215, 218, 231-236, 263, 295;*
—ஐரோப்பாவில் *(1848-49)—236, 242-246;*
—சோஷலிச (பாட்டாளி வர்க்க) புரட்சி—*209;*
—மக்கள் புரட்சி—*262;*
—ருஷ்யாவில் *(1905-07)* முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி—*261.*

புரட்சி அனுபவம்—*209, 265-268, 274-275.*

புரட்சி இயக்கம்:
—கிழக்கில்—*176;*
—சர்வதேசப் புரட்சி இயக்கம்—*243-246;*
—மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க, ஆப்பிரிக்க, நாடுகளில்—*251, 256-257, 285, 286.*

புரட்சி நிலைமையும் [revolutionary situation] புரட்சிகர நெருக்கடியும்—*16.*

புரட்சிகர சகாப்தங்கள்—*369.*

பெர்ன்ஷ்டைன் [Bernstein], பெர்ன்ஷ்டைனியமும் அதற்கு எதிரான போராட்டமும்—*267, 280-283, 360-363, 374, 377.*

பெல்ஜியம்—*96, 106, 117, 124, 125, 128, 146, 162, 185.*

பொதுக் கல்வி [public education]—*353.*

பொது நெருக்கடி [general crisis]—முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி—*16.*

பொருளாதாரமும் அரசியலும்—*319.*

பொருள் உற்பத்தி [production]—*203-206.*

போக்குவரத்து [transport], முதலாளித்துவத்தில்—*14, 39, 90-92, 116, 153-158.*

போராட்ட வடிவங்கள்—சட்டத்துக்குட்பட்டவை [legal], சட்டத்துக்குப் புறம்பானவை [illegal]—*12-13.*

போராட்டம்—புதுமைக்கும் பழமைக்கும் இடையிலான போராட்டம்—*351.*

போர்ச்சுகல்—*124, 137, 185, 260-261.*

மக்கள் தொகையும் சமுதாய வளர்ச்சியில் அதன் பங்கும்—14, 127-129, 153, 191.

மாதர் பிரச்சினையும் மாதர் இயக்கமும்—333.

மார்க்ஸிய இயக்கவியல் வழிமுறை—270, 310, 319, 329, 349, 351, 353.

மார்க்ஸியம்—210-215, 228, 235-237, 238-243, 246-247, 249, 252-256, 274, 328, 351, 357-359.

மார்க்ஸ், எங்கெல்ஸ்:
—அரசு குறித்து—210-238, 241-252, 257-267, 268-272, 284-287, 290-302, 304, 308-310, 316, 318-320, 327-356, 371-373, 379;
—இயக்கவியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுத் துறைப் பொருள்முதல்வாதமும் [dialectical and historical materialism] குறித்து—328, 350;
—சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் குறித்தும் சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிரான போராட்டம் குறித்தும்—171-173, 228, 230-235, 238, 270-272, 291-317, 327, 329-330, 340-342, 358;
—சோஷலிசம் குறித்தும் கம்யூனிசம் குறித்தும்—318-320, 329-356;
—தத்துவஞான வரலாறு குறித்து—211, 232-234;
—தேசிய இன பிரச்சினை குறித்தும் தேசிய இன-காலனிப் பிரச்சினை குறித்தும்—310, 319;
—பாட்டாளி வர்க்கக் கட்சி குறித்து—307-308, 324-325;
—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் குறித்து—226-245, 252-256, 262-269, 285-291, 308, 331-332, 336, 382;
—புரட்சி குறித்து—228-229, 232-237, 243-244, 249, 256-286, 294-297, 314, 362;
—பொருளாதாரத் தத்துவம் குறித்து—29-30, 58, 183, 286-290, 303, 328, 343-346;
—வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும் குறித்து—213-216, 217-219, 220-221, 225, 226, 235-237, 239, 242, 250, 252-256, 263, 290-294, 314, 317, 331-332;
—விவசாயிப் பிரச்சினை குறித்து—285.

மிகை லாபம் [super-profit] (ஏகபோக லாபம்)—19, 98, 164, 168, 171-174, 199-201.

மிதவாதமும் [liberalism]—*334*.

மின்விசை [electricity] —*23, 114-115*.

முடியரசு [monarchy]—*222, 244, 271, 321-322*.

முதலாளி வர்க்கம்—*120, 201*;
—ருஷ்யாவில்—*222, 247*.

முதலாளித்துவ சமுதாயம் [capitalist society]—*327-230, 332, 337*.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் காலம்—*240-242, 254-256, 260-268, 288-290, 331-340*.

முதலாளித்துவப் போட்டி [competition]—*25, 29-30, 38-40, 43, 62, 98, 104, 110-112, 116, 123-125, 130, 135, 140, 159, 177, 182-183, 188*.

முதலாளித்துவம் [capitalism]—*9-206, 226, 267-269, 276, 303-305, 329-330, 346, 353*;
—ருஷ்யாவில்—*81-84, 103, 130*.

முரண் நிலை [antithesis]:
—நகரத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலான முரண் நிலையும் சோஷலிசத்தில் அது மறைந்தொழிதலும்—*228*;
—மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையிலான முரண் நிலையும் சோஷலிசத்தில் அது மறைந்தொழிதலும்—*346*.

மூலதனம் [capital]—*24, 47-61, 97-106, 160, 197-199, 251-252*;
—ஏகாதிபத்திய சகாப்தத்தில் அரசு-ஏகபோக மூலதனம்—*39, 60, 92-94, 114-115, 199, 207, 252, 278, 303-304*.

மென்ஷிவிஸமும் மென்ஷிவிக்குகளும், மென்ஷிவிக்குகளுக்கு எதிரான போராட்டம்—*19, 21, 208, 379*.

யுத்தம் (யுத்தங்களைப் பற்றிய தத்துவம்)—*12-13, 158, 207-209, 220*.

ருமேனியா—*96, 112, 114, 186*.

ரோம் [Rome], அரசு—*131.*

வங்கிகள்—*24, 46-73, 81-96, 104-107, 112-114, 135, 141, 198, 200, 219, 222.*

வரலாறு (உலக)—*251-252.*

வரலாற்று அனுபவம்—*245-247, 249-251, 256-259, 263, 274-276, 283-285.*

வர்க்கங்களும் [classes] வர்க்கப் போராட்டமும்—*119, 212-216, 217-219, 225, 227, 236-237, 239-241, 249, 252-256, 263, 321, 323-352;*
—முதலாளித்துவச் சமுதாயத்தில்—*119, 235-238, 321-323;*
—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் காலத்தில்—*61, 64, 114, 115-133, 137, 144, 148-151, 188-194, 232-233, 247, 278-284, 301-316.*

வர்க்கப் பாகுபாடு [class differentiation]—முதலாளித்துவத்தில் விவசாயி மக்களுக்கிடையிலான வர்க்கப் பாகுபாடு—*269.*

வறுமையுறல் [pauperisation] —முதலாளித்துவத்தில் உழைப்பாளி மக்கள் வறுமையுறல்—*58-60, 91, 98, 332.*

வன்முறை [coercion]—புரட்சிகர வன்முறை—*232-236, 295, 299.*

விஞ்ஞான முன்னுணர்வு [scientific prevision—*304, 328, 348.*

விவசாயி மக்கள்—*241, 269;*
—சோஷலிசப் புரட்சிக் காலத்திலும் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் காலத்திலும் ஏழை விவசாயிகள்—*261;*
—முதலாளித்துவத்தில் ஏழை விவசாயிகள் (அரைப் பாட்டாளி வர்க்கத்தினர்)—*261.*

வெர்சேய் [Versailles] சமாதான உடன்படிக்கை (1919)—*15.*

வேலே நாள் [working day] —*380.*

ஜப்பான்—*98, 104, 128, 129, 154, 156, 192, 194.*

ஜனநாயகச் சுதந்திரங்கள் [democratic liberties]—*335.*

ஜனநாயகம்:
—பாட்டாளி வர்க்க ஜனநாயகம்—*227-230, 235-237, 253-255, 264-278, 317-326, 332-340, 366-368, 377-380;*
—முதலாளித்துவ ஜனநாயகம் *(அரசு வடிவம்)—220-223, 227-230, 250, 255, 264-267, 268-273, 306-309, 321-323, 332-334, 336, 351-353, 366-368, 375.*

ஜெர்மனி—*15, 33, 47-60, 65-67, 80-85, 87-117, 123, 129, 153-158, 163, 170, 183-186, 192, 196, 200, 234, 251, 308, 310, 333.*

ஜெர்மன் சமூக-ஜனநாயகம்—*167, 175, 208, 231, 235, 298-310, 317, 328-330, 333, 358-370.*

ஸ்காட்லந்து—*168.*

ஸ்பானிஷ்-அமெரிக்கப் போர் *(1898)—21, 138, 178.*

ஸ்பெயின்—*96, 117, 137.*

ஸ்வீடன்—*96.*

ஹாலந்து—*96, 105, 111, 112, 128, 162.*

## வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து „Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
6, Nallathambi Chetty Street, Madras-2

ஷோ-ரூம்
6/30, Mount Road, Madras-600002

கிளைகள்
80, West Tower St., Madurai-1
87/89, Oppanakara St., Coimbatore-1
Singarathope, Tiruchirapalli-8
Cherry Road, Salem-1